1 கொரிந்தியர்

டேவிட் ரோப்பர்

அறிமுகம் : 1கொரிந்தியர்

1. பிரச்சனைக்கு தேவனிடத்திலிருந்து தீர்வு தேவைப்பட்ட சபை (1கொரிந்தியர் 1:1-17)
2. தேவ ஞானம் தேவைப்பட்ட சபை

   (1கொரிந்தியர் 1:18 2:16)

3. பிரசங்கியார்கள் மீது அளவுகடந்த விசுவாசத்தைக் கொண்டிருக்கும் ஒரு சபைக்கு தேவைப்படும் அறிவுரை (1கொரிந்தியர் 3:1-23)
4. ஊழியம் செய்யும் இருதயம் படைத்தோர் தேவையுடைய ஒரு சபை (1கொரிந்தியர் 4:1-21)
5. பேரிய அறுவை சிகிச்சைத் தேவைப்படும் ஒரு சபை (1கொரிந்தியர் 5:1-13)
6. தன் தகுதிக்கேற்காத நடத்தையை நிறுத்த வேண்டிய சபை (1கொரிந்தியர் 6:1-20)
7. திருமணத்தைக் குறித்த தேவனுடைய போதனை தேவைப்பட்ட சபை (1கொரிந்தியர் 7:1-40)
8. கிறிஸ்தவ சுயாதீனம் குறித்த பாடங்கள் தேவைப்படும் சபை (1கொரிந்தியர் 8:1-13 10:14-11:1)
9. இழந்து போகப்பட்டுள்ளவர்களை அடைதலில் ஒரு உதாரணம் தேவைப்பட்ட ஒரு சபை (1கொரிந்தியர் 9:1-27)
10. மாதிரியில் இரட்சிப்பைப் பற்றிய ஒரு நினைவுகூருதல் தேவைப்பட்ட ஒரு சபை (1கொரிந்தியர் 10:1-14)
11. கலாச்சாரத்தை மதித்தல் தேவைப்பட்ட ஒரு சபை (1கொரிந்தியர் 11:1-16)
12. இரண்டு இராப்போஜனங்களுக்கு இடையில் வித்தியாசப்படுத்துதல் தேவைப்பட்ட ஒரு சபை (1கொரிந்தியர் 11:17-34)
13. ஆவிக்குரிய வரங்கள் பற்றிய உண்மைகள் தேவைப்பட்ட ஒரு சபை (1கொரிந்தியர் 12:1-13:13)
14. சபைகூடுதலில் ஒழுங்குமுறை தேவைப்பட்ட ஒரு சபை (1கொரிந்தியர் 14:1-40)
15. உயிர்த்தெழுதல் பற்றிய உறுதிப்பாடு தேவைப்பட்ட ஒரு சபை (1கொரிந்தியர் 15:1-58)
16. புறம்பே கண்ணோக்குதல் அவசியமாக இருந்த ஒரு சபை (1கொரிந்தியர் 16:1-24)

கொரிந்து சபையிலிருந்த முதன்மையான பிரச்சனைகள்

1. பிரிவினைகள் வரும்போது (1கொரிந்தியர் 1:10-12)
2. இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்ட அவர் (1கொரிந்தியர் 2:1, 2)
3. சபையைக் கட்டுதல் (1கொரிந்தியர் 3:9-17 19-22)
4. சபை-பரிசுத்தவான்களின் அமைப்பு (மன்னிக்கப்பட்ட பாவிகள்!) (1கொரிந்தியர் 6:9-11)
5. புருஷனுக்கும் மனைவிக்கும் இடையேயான பிரச்சனைகள் (1கொரிந்தியர் 7:1-16)
6. சோதனையைப் பற்றிய சத்தியம் (1கொரிந்தியர் 10:13)
7. தேவன் மற்றும் விக்கிரக ஆராதனை (1கொரிந்தியர் 10:14-22)
8. கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசு நிலைநாட்டுதல்: “இது என்னுடைய சரீரமாயிருக்கிறது” (1கொரிந்தியர் 11:23-26 காண்க லூக்கா 22:19)
9. கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசு நிலைநாட்டுதல்: “இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது” (1கொரிந்தியர் 11:23-26 காண்க மத்தேயு 26:27, 28 லூக்கா 22:20)
10. சபைகூடுகையில் பெண்கள் பேசுதல் பற்றிய விஷயம் என்ன? (1கொரிந்தியர் 14:34, 35)
11. (அந்நிய) மொழிகளில் பேசுதல் பற்றிய விஷயம் என்ன? (1கொரிந்தியர் 14)
12. கொடுத்தலுக்கு தேவடைய முழுநிறைவான முன்மாதிரி (1கொரிந்தியர் 16:1,2)
13. இன்றைய நாட்களின் சபைக்குத் தேவனுடைய அறிவுறுத்தல்கள் (1கொரிந்தியர் 16:1-24)

அறிமுகம்:

1 கொரிந்தியர்

குழப்பத்திலிருந்த சபைக்கு இந்த கொரிந்தியர் முதல் நிருபம் எழுதப்பட்டது. கொரிந்து பட்டணத்திலிருந்த உள்ளூர் சபை பிரிவினைகளாலும் ஒழுக்கக் குறைவுகளாலும் பாதிக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த அங்கத்தினர்கள் விவாகம், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை புசித்தல் மற்றும் ஆவிக்குரிய வரங்கள் ஆகியவை குறித்த கேள்விகளுக்குப் பதில் கண்டறிய அக்கறையுள்ளவர்களாயிருந்தனர். மேலும் அவர்கள் உயிர்த்தெழுதலைக் குறித்த கள்ள உபதேசத்தினால் அமைதி குலைந்து காணப்பட்டனர். இருந்தபோதிலும் பவுல் அவர்களை "கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபைக்கு" என்றழைத்து எழுதுகிறார். பிரச்சனைக்குரிய அங்கத்தினர்கள் அவர்களுக்குள் இருந்த போதிலும், அவர்கள் கிறிஸ்துவின் சபையாரே. அவர்களின் பிரச்சனைகளுக்கு தேவன் கொடுத்த தீர்விலிருந்து இன்றைய உள்ளூர் சபைகளை குழப்பிக் கொண்டிருக்கும் பிரச்சனைகளை கையாள கிறிஸ்தவர்கள் கற்றுக் கொள்ளக் கூடும்.

சபைக்கு அறிவுறுத்தப்படும் தேவனுடைய போதனைகளைப் புரிந்து கொள்ள ஒருவர் முதலில் அந்தப் புத்தகத்தின் பின்னணியைப் புரிந்து கொள்வது அவசியம்.

ஆசிரியர்

இந்தப் புத்தகத்தை பவுல் எழுதினதாகக் கருதப்படுகிறது. உண்மையில் தங்களை வேத நிபுணர்களாக கருதிக் கொண்டிருக்கும் மார்க்க சுதந்தரவாளிகள்[1] முதல் ஏறத்தாழ உலகளவில் பவுல் எழுதியதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள (ரோமர், கலாத்தியர் உட்பட்ட) நான்கு புத்தகங்களில் ஒன்று மற்றும் இரண்டு கொரிந்தியர் புத்தகங்களும் அடக்கம்.

பவுல் தன்னை "தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன்'' என்று அடையாளப்படுத்துகிறார். நடபடிகள் 9:1-19ல் பவுலின் அழைப்பு முதன் முறையாக விவரிக்கப்படுகிறது, "பவுலும் அடிக்கடி புதிய ஏற்பாட்டில் சுட்டிக்காட்டுகிறார்.''[2] அவர் தன்னை அடிக்கடி அப்போஸ்தலன் (அப்போஸ்தலர்)[3] - (கட்டளை கொடுத்து) "அனுப் பப்பட்டவன்[4] என்னும் பொருள்படும் வார்த்தையை பேசியிருக்கிறார்." குறிப்பாக பவுல் புறஜாதிகளுக்கு[5] அப்போஸ்தலன். 2 கொரிந்தியரில் இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்ட ஆதி (பிரதான) பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு தான் சமமானவர் என்று குறிப்பிடுகிறார்.[6]

மற்ற சபைகளுக்கு சொன்னது போல் உடன் ஊழியர்களையும் சேர்த்துக் கொண்டு வாழ்த்துச் *சொல்வது* போலவே, நிருபத்தின் முகவுரையில் சொஸ்தெனேயையும் சேர்த்துக் கொள்கிறார். இந்த சொஸ்தெனே, நடபடிகள் 18:17ல் குறிப்பிடப்பட்டுள்ள நபராக இருக்கலாம். தனது நிருபத்தில் குறிப்பிடும் இந்த நபர்கள் உடன் ஆசிரியர்கள் என்ற ரீதியில் எழுதவில்லை: மாறாக,

தனது சிந்தனைகளில் பங்கு கொண்டு தான் எழுதும் செய்திகளை ஆதரிக்கும் நபர்களாகக் குறிப்பிடுகிறார்:

நிருபத்தைப் பெற்றவர்கள்

அத்தேனே பட்டணத்திலிருந்து மேற்கே ஐம்பதாவது மைலில் இருந்த கொரிந்து பட்டணத்து சபைக்கு இந்த நிருபம் எழுதப்பட்டது.

கொரிந்து பட்டணம்

கொரிந்து ரோம சாம்ராஜ்யத்திலிருந்த அகாயா நாட்டுத் தலைநகர். "இந்த பட்டணம் தென் பகுதியின் முக்கியமான பகுதியான கிரேக்க நாட்டையும், பெலோபென்னஸ்[7] பகுதியையும் இணைக்கும், நான்கு மைல் அளவுள்ள, மிக முக்கியமான தகுதியைப் பெற்றிருந்தது." எப்படி அத்தேனே பட்டணம் கற்பதில் பேர் பெற்றது என்று அறியப்பட்டது போலவே, கொரிந்து பட்டணம் வியாபாரத்தில் பேர் பெற்றது என்று அறியப்பட்டது.

> அதன் அமைப்பானது இராணுவம் மற்றும் வியாபாரத்திற்கு ஏற்ற இடத்தில் அமைந்திருந்தது. கொரிந்து, இத்தாலி மற்றும் ஆசியாவிற்கு இடையிலான நிலப்பரப்பையும் ... அதேபோல் 1.5 மைல் வடக்கில் இருந்த லீச்சாயியமூக்கும் மற்றும் 5.1 மைல் கிழக்கேயிருந்த சென்சேரி துறைமுகங்களுக்கு இடையே நடந்த போக்குவரத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருந்தது.
>
> ... முதலாம் நூற்றாண்டில், கிரேக்க நாட்டின் தென் பகுதியில் வியாபார விஷயத்தில் முன்னோடிப் பட்டணமாக கொரிந்து சிறந்து விளங்கியது ... அது இருபெரும் நிலப்பரப்பின் சந்திப்பில் இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை ஓட்டப் பந்தய விளையாட்டுப்போட்டிக்கு ஊக்கமளித்தது. அவை இஸ்துமேயன் விளையாட்டுக்கள் என்று அழைக்கப்பட்டது. அவை ஒலிம்பிக் போட்டிகளுக்கு அடுத்த இரண்டாவது போட்டியாக அது கருதப்பட்டது.[8]

கிரேக்க நகரமாகிய கொரிந்து பட்டணம் கி.மு. 146ல் ரோமர்களால் அழிக்கப்பட்டது. கி.மு. 44ல் ஜூலியஸ் சீஸர் அதைத்திரும்ப உருவாக்கி ரோம காலனியாகக் கட்டினார். அதை "ரோமக் கலாச்சாரம், மதம், மொழி, அரசியல், போன்றவற்றை வளர்ப்பதற்காகவும், மற்றும் ரோமப்படையிலிருந்து ஓய்வு பெறுவோருக்கு நிலம் வழங்கவும் இந்த ரோமக் குடியிருப்புகள் உருவாக்கப்பட்டன."[9] அந்தப் பட்டணம் திரும்பவும், உருவாக்கப்பட்டபோது, ஓய்வு பெற்ற ரோம இராணுவ வீரர்கள் மறுகுடியிருப்பிற்கு மட்டுமல்லாது, மறுகுடியிருப்பிற்கு ரோமாபுரியிலிருந்து யூதர்களால் விடுதலையாக்கப்பட்ட அடிமைகள் ரோம சாம்ராஜ்யமெங்குமிருந்து வந்த அகதிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

பழைய கொரிந்து பட்டணம் ஒழுக்கமற்ற தன்மைக்கு பெயர் பெற்றது: பூர்வாங்கத் தகவல்படி, "கொரிந்து பட்டண வாசியாவது" என்பது "வேசித்தனம் செய்ய" என்றும், ஒரு "கொரிந்துபட்டண பெண்" என்றால் "விபச்சாரி" என்றும் அர்த்தம் கொண்டது என்றும் கூறுவர்.[10] ஆசிரியர்கள் குறிப்பிடுகிற இந்த

கொடிய பட்டணம், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அழிவுண்டு மறுபடியும் கட்டப்பட்டிருந்தது. பவுல் பிரசங்கித்த இந்தப் பட்டணத்தில் மேலே குறிப்பிட்ட குறைகள் காணப்படவில்லை என்று நியாயப்படுத்தமுடியாது. "ஆகிலும் வழக்கத்துக்கு மாறாக புதிதாகக் கட்டப்பட்ட கொரிந்து பட்டணத்து மக்கள் ஒழுக்கரீதியான நேர்மைக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தனர் (காண்க 1 கொரிந்தியர் 6:12)."[11]

கொரிந்துவிலிருந்த சபை

கொரிந்து பட்டணத்து சபை பவுலின் இரண்டாவது சுவிசேஷப் பயணத்தின் போது ஸ்தாபிக்கப்பட்டது. லூக்காவை பிலிப்பியிலும் (நடபடிகள் 17:1),[12] *சீலாவையும் தீமோத்தேயுவையும் பெரோயாவிலும் (நடபடிகள் 17:13, 14) விட்டு வந்த பவுல், தனியாக அந்தேனே பட்டணத்துக்குப் போனார். அத்தேனேயில் பிரசங்கித்துவிட்டு (நடபடிகள் 17:16-33), பின்னர் கொரிந்து பட்டணத்துக்குப் போனார் (நடபடிகள் 18:1). அங்கே அவர் யூதராகிய ஆக்கில்லா பிரிஸ்கில்லார் உடன் தங்கி கூடாரம் பண்ணும் தொழிலைச் செய்து தனக்கான வருமானத்தை ஈட்டிக் கொண்டே, சுவிசேஷத்தையும் பரப்பினார் (18:2-4). மக்கதோனியாவிலிருந்து சீலாவும், தீமோத்தேயுவும் வந்தபொழுது, பவுல் தனது கூடாரம் பண்ணும் தொழிலை விட்டுவிட்டு, பிரசங்கிக்கவும் போதிக்கவும் அதிக நேரம், செலவு பண்ணினார் (நடபடிகள் 18:5), மக்கதோனியாவிலிருந்த சபைகளிலிருந்து இவருக்கான உதவிகளைப் பெற்றுக் கொண்டார் (காண்க 2 கொரிந்தியர் 11:9; பிலிப்பியர் 4:15, 16). பவுலின் பிரசங்கம் மிகவும் வல் லமையுள்ளதாய் இருந்ததின் விளைவாக ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு மனமாற்றம் அடைந்தார். கொரிந்துவில் "அநேகரும் மனமாற்றமடைந்தனர் மற்றும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்" (நடபடிகள் 18:8).*

இருந்தும், பவுல் பயத்தோடே அங்கே தங்கியிருந்தார். "அல்லாமலும் நான் பலவீனத்தோடும், பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்" என்று பின்னாளில் எழுதினார் (1 கொரிந்தியர் 2:3). தீங்கு செய்யும்படி ஒருவனும் அவர் மேல் கைபோடுவதில்லை என்றும், "இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு" என்றும் கர்த்தர் அவருக்கு உறுதியளித்தார் (நடபடிகள் 18:9, 10). பவுலின் இருதயத்தில் உறுதிகொண்டு, யூதர்களின் எதிர்ப்பைத்தாண்டி, கொரிந்துபட்டணத்தில் தங்கி ஒரு வருஷம் ஆறுமாதம் தொடர்ந்து ஊழியம் செய்தார் (நடபடிகள் 18:1, 11, 18). அதற்குப் பிறகு எபேசு வழியாக சீரியாவிலுள்ள அந்தியோகியாவுக்குத் திரும்பி வந்தார். அங்கு பிரிஸ்கில்லாள் மற்றும் ஆக்கில்லாவிடம் தான் மீண்டும் வருவதாக உறுதியளித்து, அவர்களை விட்டுப் பிரிந்தார் (நடபடிகள் 18:18-21). தொடர்ந்து செசரியாவுக்குப்போய், அங்கே தனது இரண்டாவது சுவிசேஷப் பயணத்தைநிறைவு செய்தார் (நடபடிகள் 18:22).

பவுலின் காலம்

பவுல் கொரிந்து பட்டணத்தில் ஊழியம் செய்த காலம், "அகாயா நாட்டுக்கு கல்லியோன் அதிபதியாயிருந்த காலத்தை வைத்து கணக்கிடலாம்"

(நடபடிகள் 18:12). சமய சார்பற்ற பதிவேடுகளின்படி, கி.பி. 50, 51ல் கல்லியோன் அதிபதியாக்கப்பட்டான்.[13] எனவே கி.பி. 50-52[14] ஆண்டில் பவுல் கொரிந்து பட்டணத்தில் ஊழியம் செய்தார்.

பவுல் தனது மூன்றாவது ஊழியப் பயணத்தின் பெரும் பகுதியை எபேசு பட்டணத்தில் செய்தார், தமது இரண்டாவது ஊழிய பயணத்தின் நிறைவு நேரத்தில், எபேசு பட்டிணத்தாருக்கு உறுதியளித்த விதமாக (நடபடிகள் 18:21) எபேசுவில் பவுல் செய்த ஊழியத்தைக் குறித்து குறிப்பிடுமுன், நடபடிகள் அப்பொல்லோவின் செயல்பாடுகளை விவரித்து கூறுகிறது. "அலெக்ஸாந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும், சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமான" அவன் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டு "யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து இயேசுக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்'' போதகம் பண்ணிக் கொண்டு வந்தான் (நடபடிகள் 18:24, 25). எபேசு பட்டணத்து ஜெப ஆலயத்தில் அப்பொல்லோ பேசினார், "ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிகத்திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்'' (நடபடிகள் 18:26). எபேசு பட்டணத்துச் சகோதரர்களின் (நடபடிகள் 18:27, 28) ஆசீர்வாதத்துடன் அங்கிருந்து அப்பொல்லோ அகாயாவுக்கு குறிப்பாக கொரிந்து பட்டணத்திற்கு போனான், கொரிந்து பட்டணத்தில் அவன் செய்த ஊழியம் 1 கொரிந்தியர் 1:12; 3:6; 4:6ல் குறிப்பிடப்பட்டுள்ளது. பவுல் கொரிந்தியருக்கு முதலாம் நிருபம் எழுதிய காலத்தில் அவன் கொரிந்து பட்டணத்தில் இருக்கவில்லை (16:12 காண்க).

பவுல் எபேசு பட்டணத்தில் தங்கியிருந்த மூன்றாண்டுகளின் இறுதியில் (நடபடிகள் 20:31), கொரிந்து சபையாருக்கு நிருபத்தை எழுதினார் (1 கொரிந்தியர் 16:8). எபேசுவில் தனது ஊழியத்துக்குப் பின்பு அவர் எருசலேமிலிருந்த பரிசுத்தவான்களுக்கு தர்மப் பணத்தைச்சேகரித்துக் கொண்டிருந்தார் (1 கொரிந்தியர் 16:1, 2). பவுல் 2 கொரிந்தியரிலும் (அதிகாரம் 8; 9) ரோமர் நிருபத்திலும் (15:25-28) இந்த உபகாரத்தைக் குறித்துப் பேசியிருக்கிறார், மேலும் பேலிக்ஸ் முன்பாக நின்று கொண்டிருந்தபோது (நடபடிகள் 24:17ல்) இதைச் சுட்டிக் காட்டுகிறார்.

ஆக, கி.பி. 50லிருந்து 52 வரை கொரிந்து பட்டணத்தில் இருந்த பிறகு, எபேசு பட்டணத்தில் மூன்றாண்டுகளின் பெரும்பகுதியை ஊழியத்திற்கென செலவிட்ட பிறகு மூன்றாம் சுவிசேஷப் பயணத்தின் போது, எபேசு பட்டணத்திலிருந்து பவுல், கி.பி. 55ல்[15] கொரிந்தியர் முதலாம் நிருபத்தை எழுதினார்.

பவுல் இதற்கு முன்பாகவும் கொரிந்து சகோதரர்களுக்கு ஒரு நிருபத்தை எழுதியிருந்தார் (1 கொரிந்தியர் 5:9). 1 கொரிந்தியர் நிருபத்தை எழுதிய சில மாதங்களில் 2 கொரிந்தியர் நிருபத்தையும் எழுதினார். 1, 2 கொரிந்தியருக்கு இடையிலேயும் ஒரு நிருபத்தை எழுதியிருக்க வாய்ப்பிருக்கிறது அந்த இடைப்பட்ட நிருபத்தின் விளைவாக அவர்கள் தேவனுக்குக்கேற்றத் துக்கமடைந்தனர் என்று கூறப்படுகிறது (2 கொரிந்தியர் 7:8).[16] ஆக மொத்தத்தில், பாதுகாத்து வைக்கப்பட்ட 1, 2 கொரிந்தியர் என்ற புத்தகங்களையும் சேர்த்து, கொரிந்து சபையாருக்கு பவுல் நான்கு நிருபங்களை எழுதியிருக்கலாம்.[17]

நிகழ்ச்சி

பவுல் ஏன், என்ன, எப்பொழுது எழுதினார்?

வரலாற்றுச் சூழல்கள்

கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம் மூன்று விஷயங்களின் அடிப்படையில் எழுதப்பட்டது: (1) குலோவியாளின் வீட்டார் கொரிந்து பட்டணத்திலிருந்து பவுலிடத்தில் நேரில் வந்தோ அல்லது எழுதியோ சபையிலிருந்த பிரிவினைகள் பற்றி அறிவித்திருந்தனர் (1 கொரிந்தியர் 1:11). (2) கொரிந்துவிலிருந்து வந்த மூன்று மனுஷர்களாகிய - ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயுக்கு ஆகியோர் (16:17) - சபையார் பவுலிடம் அநேகக் காரியங்களைக்குறித்து கருத்தைக் கேட்கும்படி கொடுத்தனுப்பிய கடிதத்தை கொண்டு வந்தது (7:1). (3) எருசலேம் சபையிலிருந்த ஏழைக் கிறிஸ்தவர்களுக்காக சேர்க்கப்படும் தருமக் காரியங்களில் சபையார் தங்கள் பங்களிப்பைச் செய்யவும், பவுல் அவர்களைச் சந்திப்பதாக திட்டமிட்டிருப்பதை அவர்களுக்குத் தெரியப்பண்ணும்படி விரும்பினார் என்பதுமே (4:18-21; 16:1-9).

மனோரீதியான பிரச்னைகளுக்குத் தீர்வு

முதலாம் கொரிந்தியர் நிருபம் எழுதும்போது அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் கொரிந்து பட்டணத்து சபைக்குமிடையே இருந்த உறவுமுறை என்ன? பவுல் அந்த காலத்தில் அந்தச் சபையைக் குறித்து கொண்டிருந்த கருத்து எப்படிப்பட்டது? மற்றும் அவர்கள் அவரைக் குறித்து எப்படி உணர்ந்தார்கள்?

2 கொரிந்தியர் நிருபத்தை எழுதியபோது, பவுலின் அதிகாரத்தைக் குறித்து கேள்விகளை எழுப்பியும், தங்களால் முடிந்தளவு அவரை மட்டுப் படுத்தியும் பேசுகிற எதிர்ப்பாளர்களை கடுமையாகக் கடிந்து கொண்டு எழுதினார். ஆயினும் 1 கொரிந்தியர் புத்தகத்தை எழுதிய வார்த்தைகளில் எவ்வித பகையும் காணப்படவில்லை. அந்தக் கிறிஸ்தவர்களை பகைவர்களாகக் கருதாமல், சுவிசேஷத்திற்குள் தன்னை அவர்களின் தகப்பனாகவும், அவர்களைத் "தனக்குப் பிரியமான பிள்ளைகள்" என்ற கருத்தில் எண்ணத்தில் எழுதினார். அவர்களை "வெட்கப்படுத்தும்படி" எழுதாமல், அவர்களுக்குப் புத்திசொல்லும்படியாகவும் "அறிவைஉணர்த்தும்படியும்" எழுதினார் (4:14-16). ஒரு நல்ல தகப்பனாக சில வழிகளில் புகழவும், மற்ற விஷயங்களில் தான் அவர்களைப் புகழ இயலவில்லை என்றும் கண்டார் (11:2, 17, 22). பவுல் அன்பு காட்டுபவராகவும் (16:24) "சகோதரரே" என்றும் (1:10) "பிரியமுள்ளவர்களே" என்றும் (10:14) "பிரியமுள்ள சகோதரே" என்றும் (15:58) குறிப்பிட்டு எழுதினாலும் சபையிலிருந்த ஒழுக்கக் குறைவானவைகளையும் உபதேச பிரச்சனைகளையும் சரி செய்யும் முயற்சியில் நிருபத்தின் பெரும் பகுதியில் கூறியிருந்தார். இருப்பினும், கிறிஸ்தவத்தின் பிரதான உபதேசக் கோட்பாடுகளை கொரிந்து சபையினர் தொடர்ந்து கைக்கொள்வதை பவுல் புரிந்து கொண்டிருந்தார் (11:2; 15:1, 2).

ஒருவருக்கு ஒருவர் விரோதமாக இறுமாப்பாய் இருப்பது வெளிப்படையான ஒரு முக்கிய பிரச்சனையாக இருந்தது. அடிப்படை பிரச்சனையாகிய இறுமாப்பு மற்றவர்களையும் தொற்றிக் கொள்ளச் செய்ததைக் கண்கூடாகக் காணமுடிந்தது (உதாரணமாக, 4:6, 7; 5:2; 8:1, 2; 13:4 ஆகிய வசனங்களைக் காண்க).

கொரிந்தியர்களின் உயர்வான சமுதாய நிலை (தவறாக வழிநடத்தப் பட்டதால்) அவர்களின் ஞானம், ஐசுவரியம் (4:7, 8ஐக் காண்க), பொறுமை மார்க்க ரீதியான அறிவும், ஆவிக்குரிய வரங்களும் கூட இறுமாப்படைய காரணமாக இருந்தது. இந்த இறுமாப்பே பவுலை நோக்கி நியாயந்தீர்க்கும் எண்ணப்போக்கில் வெளிப்பட்டிருக்கலாம் (4:3-5) பவுலின் அதிகாரத்துவத்தை அவமதிக்கும்விதத்தில் (4:18-21). "தங்கள் சொந்த வழியிலேயே செல்ல" தீர்மானித்த சபையாரில் வெளிப்பட்டிருக்கலாம். இவர்களின் இந்த மனப்போக்கை கண்டித்துப் பேசிய பவுல், பிற சபைகளுக்குப் பெரும்பாலும் பொருந்தும் என்பதைச் சுட்டிக் காட்டினார் (4:17; 7:17; 14:33; 16:1, 2 ஐக் காண்க). பவுல் தனது போதகத்தை சபையார் பின்பற்ற வேண்டுமென வெளிப்படையாக எதிர்பார்த்தார்.

நோக்கமும் மையக்கருத்தும்

1 கொரிந்தியர் புத்தகத்தின் முக்கிய நோக்கங்களாவன (1) சபையார் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்தல், (2) உள்ளூர் சபையிலிருந்த பிரச்சனைகளை சரிசெய்தல், மற்றும் (3) எருசலேமிலிருந்த ஏழைபரிசுத்தவான்களுக்கு உதவும் பொருட்டு அங்கத்தினர்கள் கொடுக்கத்தக்கதாக அவர்களை ஆயத்தப்படுத்துதல். 1 கொரிந்தியர் புத்தகத்தின் மையக்கருத்து "குழப்பமடைந்த சபைக்கு தேவனுடைய தீர்வு என்று அடையாளப்படுத்தலாம்."

பொருளடக்கம்

ஒன்று கொரிந்தியர் புத்தகம் பவுல் விவாதித்த தலைப்புகளையும் பிரச்சனைகளையும் கொண்டு தொகுக்கப்பட்டது. இவை கிடைக்கப்பட்ட தகவல்கள் மற்றும் வகைகளைப் பொறுத்து கிரமமாக எழுதப்பட்டது. அவைகளை பின்வரும் விரிவான ஐந்து பாகங்களாகப் பகுக்கலாம்:

(1) கொரிந்துவில் இருந்த அஞ்ஞானச்சூழல்களோடு தொடர்பு கொண்டிருந்த பிரச்சனைகள்:சாதுரியமான பேச்சுகளால் உயர்வாகத் தங்களை மதிப்பீடு செய்து கொண்ட மனப்பான்மை, ஞானம், ஒழுக்கமின்மை அவர்களுக்குள் பிரிவினைகளை ஏற்படுத்தியது (1:10-6:20).

(2) கிறிஸ்தவத்துக்கும் அஞ்ஞான விக்கிரக வணக்கத்துக்கும் உள்ள தொடர்பு குறித்த கொரிந்தியரின் கேள்விகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள்: விவாகத்தைக் குறித்த சில கேள்விகளும், வேறு சில விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை புசிக்கின்ற விஷயத்தில் கிறிஸ்தவர்களின் எதிர்ச் செயல் குறித்த கெள்விகளும் (7:1-11:1).

(3) கிறிஸ்தவர்களின் வெளிப்படையான ஆராதித்தல் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள்: ஸ்திரீகள் தங்கள் தலைகளில் முக்காடிட்டுக் கொள்வதையும், கர்த்தருடைய பந்தியில் சரியான முறையில் பங்கு பெறுவதையும் குறித்து விளக்கம் (11:2-34). ஆவிக்குரிய வரங்களைக் குறித்துக் கேட்கப்பட்ட கேள்விக்கான பதிலும் கொடுக்கப்பட்டது (12:1-14:40).

(4) கிறிஸ்தவ உபதேசக் கோட்பாடு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் - குறிப்பாக உயிர்த்தெழுதலைக் குறித்த போதனை (15:1-58).

(5) கிறிஸ்தவ நடைமுறைச் செயல் பற்றிய ஒரு கேள்வி - எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கு சேர்க்கப்படும் தருமப் பணம் (16:1-9).

குறிப்புகள்

[1]“மார்க்க சுதந்திரவாளிகள்” என்போர் தாங்கள் அதிகமாய்க் கற்றறிந்த நிபுணர்கள் என்று கருதிக் கொண்டவர்கள். திருமறை ஏவப்பட்டு எழுதப்பட்டதை சந்தேகிக்கும் இவர்கள், கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை, கன்னிகையினிடத்தில் பிறப்பு, அற்புதங்களின் மெய்மை, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் போன்ற அநேக அடிப்படைக் கோட்பாடுகளைக் குறித்து கேள்வி எழுப்பும் கூட்டம். S. J. ஹேஃபமன் என்பவர் “பவுல்தான் 1 கொரிந்தியர் புத்தகத்தின் ஆசிரியர் என்பதில் ஒருபோதும் வாக்குவாதம் ஏற்பட்டதில்லை என்பதுதான் உண்மை” என்று எழுதி, பவுல்தான் எழுதினார் என்பதற்கான ஆதாரங்கள் 90-ம் ஆண்டுகளிலிருந்து இரண்டாம் நூற்றாண்டின் பத்தாம் ஆண்டுவரை அறியப்பட்டிருந்தது. (S. J. Hafemann, “Corinthians, Letters to the,” in *Dictionary of Paul and His Letters,* ed. Gerald F. Hawthorne and Ralph P. Martin [Downers Grove, Ill.: InterVarsity Press, 1993], 175.) [2]*நடபடிகள் 22:6-21; 26:1-18 ஐக் காண்க.* [3]*ரோமர் 1:1; 2 கொரிந்தியர் 1:1; கலாத்தியர் 1:1; எபேசியர் 1:1; கொலோசெயர் 1:1; 1 தீமோத்தேயு 1:1; 2 தீமோத்தேயு 1:1; தீத்து 1:1. 2 கொரிந்தியர் புத்தகத்தை எழுதியதில் அப்போஸ்தலத் தகுதியை வாதிட்டு நிரூபிப்பதே பவுலின் நோக்கமாயிருந்தது.* [4]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., “Apostle, Apostleship,” in *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 30. *வழக்கமாக புதிய ஏற்பாட்டில் “அப்போஸ்தலன்” எனும் பதம் இயேசுவால் நேரடியாகத் தெரிந்து கொள்ளப்பட்ட பன்னிரண்டு பிரதான அப்போஸ்தலர்களையே குறிக்கும். இதில் யூதாஸ் இறந்த பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தேயு மற்றும் பவுல் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள்; ஆகிலும், ஒரு ஊழியத்தினிமித்தம் அனுப்பப்பட்ட சராசரி கிறிஸ்தவர்களையும் குறிப்பிடுகிற ஒரு பரந்த பொருளையுடைய வார்த்தை இது. நடபடிகள் 14:4, 14; ரோமர் 16:7ஐக் காண்க. பிலிப்பியர் 2:25ல் அப்போஸ்தலர் எனும் பதம் “ஸ்தானாபதி” என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.* [5]*நடபடிகள் 26:17, 18; கலாத்தியர் 2:7-9, காண்க.* [6]*2 கொரிந்தியர் 11:5; 12:12 ஐக் காண்க.* [7]James Hastings, “Corinth,” in *Dictionary of the Bible,* rev. and ed. Frederick C. Grant and H. H. Rowley (New York: Charles Scribner's Sons, 1963), 176. *“பெலோபொன்னஸ்” என்பது கிரேக்கத்தின் தென் கோடியில் உள்ள மலைப்பாங்கான பகுதியுடன் இணையும் பெரும் நிலப் பகுதியில் கொரிந்து பட்டணம் அமைந்துள்ளது.* [8]Hafemann, 172. [9]Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary (Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 16. [10]D. A. Carson, Douglas J. Moo, and Leon Morris, *An Introduction to the New Testament* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1992), 263.

[11]Ibid. [12]At this point in Luke's account, the narrative switches from first person (“we”; 16:11, 13, 16) to third person (“they”). [13]Scott Nash, “Gallio,” in *Eerdmans Dictionary of the Bible,* ed. David Noel Freedman (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 2000), 481. [14]F. F. Bruce, *Paul - Apostle of the Heart Set Free* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 475. *இதின் நாள் வரிசைக் குறிப்பு அட்டவணையில் இந்தத் தேதிதான் கொடுக்கப்பட்டிருக்கிறது.* [15]Oster, 15. *ஒஸ்டர். 1 கொரிந்தியர் நிருபம் கி.பி. 54ல் எழுதப்பட்டதாகத் தேதிகள் கொடுக்கப்பட்டது* (H. Wayne House, *Chronological and Background Charts of the New Testament* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1981], 16) *கி.பி. 57 ஐக் குறிப்பிடுகிறது* (D. Edmond Hiebert, *An Introduction to the Pauline Epistles* [Chicago: Moody Press, 1954], 113). [16]*சிலர் 2 கொரிந்தியர் 7:8 வசனம், 1 கொரிந்தியர் நிருபத்தைக் குறிப்பதாக நம்புகின்றனர்; இன்றைய பெரும்பாலான வேத வல்லுனர்கள் இன்று இல்லாத வேறொரு நிருபத்தைக் குறிப்பதாக நம்புகின்றனர்; சில வேளைகளில்*

இந்த காணமற்போன நிருபம் "கண்ணீர் நிருபம்" அல்லது "கடினமான நிருபம்" என்று குறிப்பிடப்படுகிறது. [17]*நான்கு நிருபங்கள் "*A *கொரிந்தியர்" என்றும் (1 கொரிந்தியர் 5:9ல் பேசப்படும் நிருபம்); "*B *கொரிந்தியர்" (1 கொரிந்தியர்); "*C *கொரிந்தியர்" (2 கொரிந்தியர் 7:8 ஐக் குறிப்பிடுகிற நிருபம்; வசனங்கள் 9-12; 2:3, 4 காண்க); மற்றும் "*D *கொரிந்தியர்" (2 கொரிந்தியர்). (இதே போன்ற முறைப்படுத்துதல்* Carson, Moo, *மற்றும்* Morris, *265-72ல் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.)*

1

பிரச்சனைக்கு தேவனிடத்திலிருந்து தீர்வு தேவைப்பட்ட சபை

(1 கொரிந்தியர் 1:1–17)

1 கொரிந்தியர் புத்தகத்தை படிக்கும்போது, கொரிந்து பட்டணத்தில் இருந்த சபைக்கும் இன்று உள்ள கர்த்தருடைய உள்ளூர் சபைகளுக்கும் இடையே ஒற்றுமைகளை நாம் காணுகிறோமா? முதலாவதாக, "நாம் ஆராதிக்கும் எனது உள்ளூர் சபையில் கொரிந்துவிலிருந்த சபையைப் போன்று பிரச்சனை எதுவுமில்லை! அந்த ஜனங்களுக்கு எல்லாவிதமான பிரச்சனைகளும் இருந்தன; ஆனால் நான் அருமையான ஒரு உள்ளூர் சபையில் அங்கத்துவம் பெற்றிருக்கிறேன்!" என்றே சொல்ல விரும்புவோம்.

கொரிந்து சபையில் பிரச்சனைகள் இருந்தது என்னவோ உண்மைதான். அந்த உள்ளூர் சபையிலிருந்த ஐக்கியமின்மை அதை பிளவுபடுத்திக் கொண்டிருந்தது வெளிப்படையான ஒழுக்கமின்மையை அந்த சபை சகித்துக் கொண்டிருந்தது. அங்கத்தினர்கள் ஒருவருக்கு எதிராக ஒருவர் வழக்குத் தொடுத்தனர். இந்தக் கிறிஸ்தவர்கள் விவாகம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் வித்தியாசப்பட்டிருந்தனர், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றை புசிக்கிற விஷயத்தில் அவர்கள் ஒத்துப்போகவில்லை, ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்துவதில் சச்சரவுகள் ஏற்பட்டன, மேலும் சில சகோதரர்கள் உயிர்த்தெழுதலைக் குறித்த தவறான உபதேசங்களை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

இருப்பினும் கொரிந்துவிலிருந்த சபை, இன்றுள்ள அநேக உள்ளூர் சபைகளிலிருந்து உண்மையில் வித்தியாசப்பட்டிருக்கவில்லை. சபையிலே சண்டை சச்சரவுகள் இருக்கிறதா? சகோதரர்கள் ஒருவருக்கொருவர் வழக்குத் தொடுத்துக் கொண்டுள்ளனரா? யாராகிலும் ஒழுக்கமற்ற நடத்தையுடையவர்களாயிருக்கிறார்களா? விவாக காரியங்கள் குறித்த கேள்விகளுக்கு அங்கத்தினர்கள் ஒத்துப்போகாத தன்மையுள்ளவராயிருக்கிறார்களா? சில உபதேசங்களைக் குறித்தோ அல்லது நடைமுறை பழக்கங்களை குறித்தோ பிரச்சனைகள் எழுகின்றனவா? சபையில் சிலர் ஒரு பொய்யான உபதேசத்தை போதித்து மற்றும்/அல்லது விசுவாசித்து வருகிறார்களா? நாம் எண்ணிக் கொண்டிருக்கிற பலமான விசுவாசம் மிகுந்த சபைகளில் கூட, இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் ஒருவேளை ஆச்சரியப்படத்தக்க வகையில் இல்லை என வலியுறுத்தப்படுவதைக் காணக்கூடும்.

கொரிந்து சபையிலிருந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண உதவும் நோக்கில், தேவனுடைய போதனைகளை சகோரர்களுக்கு கொடுக்கும் பொருட்டு பவுல் எழுதினார். கொரிந்துப் பட்டணத்துக்கு கொடுக்கப்பட்ட இந்தப் போதனைகள் "குழப்பம் உள்ள சபைக்கு தேவனுடைய தீர்வு" மற்றும் பவுல் கொரிந்து பட்டணத்து சகோதரர்களுக்குச் சொன்னவைகள் "இன்று குழப்பமுள்ள எந்த சபைக்கும் தேவையான தேவனுடைய தீர்வு" என்று நினைக்கப்படலாம்.

இயல்பு நிர்ணயம்

பவுல் அந்த உள்ளூர் சபையின் நிலைமையை மிகவும் துல்லியமாக நிர்ணயம் பண்ணத் துவங்கினார். தனது நோயின் இயல்பை சரியான முறையில் நிர்ணயம் பண்ணாமல் போனால் ஒருவர் தனது நோயிலிருந்து சுகம் பெறக் கூடும் என்று எதிர்பார்க்க இயலாதது போலவே ஒரு உள்ளூர் சபையின் ஆவிக்குரிய ஆரோக்கியத்தின் இயல்பை துல்லியமாக நிர்ணயம் பண்ணாத பட்சத்தில் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய வழியை நாம் எதிர் பார்க்க இயலாது.

கொரிந்து பட்டணத்துச் சபையின் ஆரம்பிக்கப்பட்ட இயல்பின் நிர்ணயம் அச்சபையின் ஆஸ்தி மற்றும் கடன் (பற்று) பொறுப்புக்களைக் குறித்த மதிப்பீட்டு அறிக்கையை உள்ளடக்கியது (1:1-17).

ஆஸ்திகளை அறிந்துணருதல்

சபையின் வளர்ச்சிக்காக அதன் பிரச்சனைகளைத் தீர்க்க விரும்பும் எவரும் ஆரம்பத்திலேயே அதன் ஆஸ்திகளை அறிந்துணர்வர். ஒரு சபை எப்படி ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது என்பதை ஒருவர் கண்டறியமுடியாத அளவுக்கு எந்த சபையும் பிரச்சனைகளில் மூழ்கிவிடாது.

கொரிந்துவிலிருந்து சபை செழிப்பான ஆசீர்வாதங்களைக் கொண்டிருந்தது. சபைக்கு இருந்த மூன்று ஆசீர்வாதங்களை பவுல் குறிப்பிடுகின்றார். அவர்கள் கொண்டிருந்த பிற ஆசீர்வாதங்களையும் நாம் அடையாளங் காணமுடியும்.

<u>தேவனோடு அவர்களுக்கிருந்த உறவுமுறை (1:2).</u> கர்த்தருடன் சிறப்பான உறவுமுறையைக் கொண்டிருந்த ஜனங்களால் கொரிந்து பட்டணத்து சபை அமைந்திருந்தது. அவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்டமுறையில் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், அல்லது கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக தேவனுடைய ஊழியத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள். கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற ஒவ்வொருவரோடும்கூட அவர்களும் பரிசுத்தவான்களானவர்கள்![1] அவர்கள் தேவனுடைய சபையார்கள் (1:2).

<u>ஆவிக்குரிய வரங்கள் (1:4-7).</u> சபையார் அநேக ஆவிக்குரிய வரங்களை தேவனிடத்திலிருந்து ஈவாகப் பெற்றவர்கள். புத்தகத்தின் பின்பகுதியில் பவுல் விவாதிப்பவைகளைக் கொண்டு (அதிகாரம் 12-14), இந்த வரங்கள் பரிசுத்த ஆவியின் அற்புதவரங்கள் என்பதையும், இளம் சபைக்கு வழி நடத்தும்படியாய்க் கொடுக்கப்பட்டவைகள் என்பதையும் நாம் தீர்மானமாகச் சொல்லலாம். தேவனுடைய கிருபையினால் கொடுக்கப்பட்ட இந்த ஆவிக்குரிய வரங்களைக் குறித்து பவுல் உறுதியாக குறிப்பிடுகின்றார் (1:4). அவர்,

> *கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்பட்டபடியே, நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும்*

மற்றெல்லாவற்றிலும் சம்பூர்ணமுள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறபடியால் அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக்குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன், ... அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய் (1:5-7அ).

உறுதியளிக்கப்பட்ட நம்பிக்கை (1:7ஆ-9). கர்த்தர் கிறிஸ்தவர்களை "முடிவு பரியந்தம்" ஸ்திரப்படுத்துவார் என்று உறுதியான நம்பிக்கையை சபை பெற்றிருந்தது. இங்கே குறிப்பிடப்படுகிற "முடிவு பரியந்தம்" என்பது "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுகிற" "இயேசு கிறிஸ்துவின் நாள்" (1:7ஆ, 8) - இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், உலகத்தின் முடிவும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுமான நாள். இந்த உறுதியை அவர்கள் எங்கிருந்து பெற்றிருந்தனர்? "தேவன் உண்மையுள்ளவர்" என்கிற நிச்சயத்திலிருந்து (1:9)!

இந்த நன்மைகள் கொரிந்து பட்டணத்து சபை அற்புதமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்த கருத்தைக் குறிப்பிடுகிறது! கூடுதலாக, இவ்வசனத்தில் குறிப்பிடப்படாத ஆவிக்குரிய அனுகூலங்களும் அவர்களுக்கு இருந்தன.

திறமைமிகு ஊழியர்கள். சபை ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது ஏனெனில் அங்கே வல்லமையான ஊழியர்கள் ஊழியப் பணியாற்றினர். அது (சபை) அப்போஸ்தலனாகிய பவுலினால் துவங்கப்பட்டது (நடபடிகள் 18). அவர்களைப் பவுல் தனது பிரியமான பிள்ளைகள் என்றும் சுவிசேஷத்தினால் அவர்களைப் பெற்றதாகவும் குறிப்பிட்டார் (1 கொரிந்தியர் 4:14, 15). பின்னர் சாதுரியவானாகிய அப்பொல்லோ கொரிந்து சபையில் ஊழியம் செய்திருந்தார் (நடபடிகள் 18:24).

பிற சொத்துக்கள். பவுல் குறிப்பிடாத கூடுதல் ஆஸ்தியையும் சபை கொண்டிருந்தது. உதாரணமாக கொரிந்து பட்டணத்திலிருந்த சபை மன நிறைவைத்தரும் வகையில் பெரிதாக இருந்திருக்க வேண்டும் (நடபடிகள் 18:8). இந்த புதிய மார்க்கத்தைக் குறித்து யூதர்கள் மிரளுகிற அளவுக்கு பெரிதாக இருந்திருக்கிறது (18:12-17). மேலும், பட்டணத்து விசாரணைக்காரர்களாகிய தலைவர்களில் சிலர் அங்கம் வகித்திருந்ததைச் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு சபை இருந்தது (ரோமர் 16:23) இதில் "ஏராஸ்து எனும் பட்டணத்து உக்கிராணக்காரனும்" (ரோமர் 16:23) மற்றும் சபையை நடத்த தேவையான மிகப்பெரிய வீட்டை உடையவனாகிய, காயு (ரோமர் 16:23; 1 கொரிந்தியர் 1:14). பவுலினால் ஞானஸ்நானம் பெற்றவனும் ஜெப ஆலயத்தலைவனுமாகிய கிறிஸ்புவும் அங்கு இருந்தான் (நடபடிகள் 18:8). மாம்சத்தின்படி ஞானிகள் அநேகர் இல்லை, வல்லவர்கள் அநேகர் இல்லை, பிரபுக்கள் அநேகர் இல்லை என்று கூறியதன் மூலம் (1 கொரிந்தியர் 1:26), அவர்களில் யாரோ *சிலர்* ஞானிகளாக, வல்லவர்களாக, பிரபுக்களாக இருந்துள்ளனர் என்பதை பவுல் குறிப்பாக உணர்த்துகிறார்.

பவுல் சபையின் பெரிய பிரசங்கியார்களையோ, எண்ணிக்கையையோ அதன் பிரதான அங்கத்தினர்களையோ குறிப்பிடாதது ஏன்? ஏனெனில் கொரிந்துவிலிருந்து அங்கத்தினர்கள் ஏற்கனவே தங்களின் பிரசங்கியார்களைக் குறித்தும் அங்கத்துவத்தைக் குறித்தும் உயர்வாக எண்ணிக் கொண்டிருந்தனர்.

யார் சிறந்த பிரசங்கியார் என்பதில் மாறுபட்ட கருத்தை உடையவர்களாகவும் (1:12, 13) மற்றும் இறுமாப்புடையவர்களாகவும் (4:6, 18; 13:4 ஐக் காண்க). ஆதலால்தான் பவுல் கொரிந்து பட்டணத்தின் பிரசங்கியார்களின் கடமையை மட்டுப்படுத்தி (3:6) அங்கத்தினர்களிலும் *அநேகர்* வல்லவர்களாகவோ பிரபுக்களாகவோ இருந்ததில்லை என்பதை வலியுறுத்தினார். அவர்களுடைய எண்ணிக்கையோ, அங்கத்தினர்களுக்கு இருக்கும் செல்வாக்குகளையோ அல்லது பிரசங்கியார்களையோ சார்ந்திராமல் அவர்களுடைய வாழ்வில் ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்தவராகிய கிறிஸ்துவை மட்டும் தனது வாசகர்கள் சார்ந்திருக்கும்படி விரும்பினார்.

இப்போழுதிருக்கிற சபையைப்பற்றி என்ன? அதின் சொத்துக்கள் (ஆஸ்திகள்) யாவை? கொரிந்து சபையார்களைப் போலவே இன்றைய கிறிஸ்தவர்களும் அநேக வழிகளில் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். அவர்களைப் போலவே நாமும் அழைக்கப்பட்டவர்கள் ... பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் ... நாம் தேவனுடைய சபையாக உருவாக்கப்பட்டவர்கள், அப்போஸ்தலர்களுக்கு ஏவப்பட்ட வசனங்களைக் கேட்டு நாம் கீழ்ப்படிந்தவர்கள். நாம் எண்ணியடங்கா வரங்களைப் பெற்றவர்கள் - அற்புத வரங்களாயிராவிட்டாலும் - அவை தேவனால் கொடுக்கப்பட்ட வரங்களே. நமது உள்ளூர் பிரச்சனைகளைத் தீர்க்க அறைகூவல் விடுகிற நாம், நமது அனைத்து ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த ஆஸ்திகள் சிறப்பான உள்ளூர் சபைகளைக் கட்டியெழுப்ப ஏதுவான அஸ்திபாரமாகும்.

எப்படியிருப்பினும், கொரிந்துயர்களைப் போல நமது மிகவும் விலையேறப்பட்ட ஆஸ்தி, நமது எண்ணிக்கையிலோ காணிக்கையிலோ, பிரசங்கியார்களிலோ அல்லது மூப்பர்களிலோ இல்லை என்பதையும், ஆனால் கிறிஸ்துவினிடத்திலிருந்து வருகிற ஆசீர்வாதங்களில்தான் இருக்கிறது என்பதையும் மனதில் வைக்க வேண்டும். இவைகளையே நாம் சார்ந்திருக்கவும் வேண்டும் - உலகப் பிரகாரமான ஞானத்திலோ, சாதுரியத்திலோ, எண்ணிக்கையிலோ அல்லது செல்வாக்கிலோ அல்ல.

பற்றுப் பொறுப்புக்களை உணருதல்

கொரிந்து பட்டணத்து சபை அநேக சொத்துக்களால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் கட்ட வேண்டிய கடன் பொறுப்புக்களும் அவர்களுக்கு இருந்தது. இந்த நிருபத்தின் மீதமுள்ள பெரும் பகுதியை கொரிந்துவிலிருந்த பிரச்சனைகளையும் அவற்றைத் தீர்க்க வேண்டிய நிவாரணங்களையும் குறித்து எழுதி நிரப்புகிறார். தன் தலையை மணலுக்குள் புதைத்து கொண்டு எதுவும் சரியாக இல்லாவிட்டாலும் எல்லாம் சரியாக இருக்கிறது என்பது போல அவர் நடித்துக் கொண்டிருக்கவில்லை. சபையின் பிரச்சனையை அடையாளங் கண்டு பேசப்படுதல் வேண்டும் என்று அவர் நம்பினார். இருப்பினும், இன்று ஒரு உள்ளூர் சபை வெற்றி கொள்ள வேண்டுமானால், அதின் அங்கத்தினர்கள் செலுத்த வேண்டிய கடன் பொறுப்புக்களை உணர்ந்து - சபையிலுள்ள பிரச்சனைகளைக் கண்டு ஏதாவது செய்ய வேண்டும் என்கிற மனதையுடையவர்களாக இருக்க வேண்டும்.

பவுல் அவர்கள் “பிரிவினைகளில்லாமல்” ஒருவருக்கொருவர் ஒத்துப்போகும் தன்மையுடைவர்களாயிருக்க வேண்டும் என்று சொல்லி துவங்குகிறார்

(சீக்கீஸ்மா; வசனம் 10). "ஏனெனில், என் சகோதரரே, வாக்குவாதங்கள் உண்டென்று உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது ... உங்களில் (ஒரு) சிலர்; நான் 'பவுலைச் சேர்ந்தவனென்றும்,' நான் 'கேபாவைச் சேர்ந்தவனென்றும்' நான் 'கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும்' சொல்லுகிறபடியால்'' (வசனங்கள் 11, 12), இப்படிச் சொல்லுகிறேன்.[2] பவுல் பிரிவினையாகிய பிரச்சனையிலிருந்து துவங்குகிறார், ஏனெனில் சபை எதிர்நோக்கிக் கொண்டிருந்த மற்ற பிரச்சனைகளோடு அது சம்பந்தப்பட்டிருந்தது. உதாரணமாக, ஒருவருக்கெதிராக ஒருவர் வழக்காடும்படி போன காரியம் சகோதரருக்குள் ஒற்றுமைக் குறைவை வெளிப்படுத்தியது. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை சிலர் புசித்தபோது, அது மற்றவர்களுக்கு இடறலை உண்டாக்கியது, அல்லது கர்த்தருடைய பந்தியைக் குறித்த சண்டை அல்லது அற்புத வரங்களைப் பயன்படுத்திய விதம் ஆகியவைகளெல்லாம் அவர்களுக்குள் இருந்த பிரச்சனைகளாகிய வாக்குவாதங்களையும் ஐக்கியமின்மையையும் தாமாகவே பிரதிபலித்தது.

நிவாரணம்

பவுல் அவர்களின் பிரச்சனைகளை மட்டும் அடையாளப்படுத்திக் காண்பிக்க வில்லை, அவர்களின் ஐக்கியமின்மையையும் அதற்கான நிவாரணத்தையும் கூட முன் மொழிந்தார். நிவாரணமாக அவர் கொடுத்த ஆலோசனைகள் அநேக காரியங்களை உள்ளடக்கியிருந்தது.

1. *ஒன்றுபடும்படி முழுமையான ஐக்கியத்தை நிறைவேற்ற பிரயாசப்படுங்கள்.* பவுல் பின்வரும் வார்த்தைகளால் வெளிப்படுத்துகிறார். "நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையுமுள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, ..." (வசனம் 10). இங்கு பவுல் வேறுபட்ட மூன்று காரியங்களைக் குறித்து பேசவில்லை, மாறாக ஒரே கருத்தை மூன்று விதமாகக் குறிப்பிடுகிறார். அதன் மையக் கருத்து எந்த அடிப்டையிலும் கொரிந்தியர்கள் பிரிவுகளைக் கொண்டிருப்பதை பவுல் விரும்பவில்லை. சூழ்நிலைகேற்ப ஒத்துப்போகாத நிலைமை சபையில் உருவாக இடமுண்டு என்றபோதிலும், நாம் நமது கருத்துக்களின் அணுகுமுறையை வித்தியாசமான கண்ணோட்டத்தில் காண சுதந்திரம் பெற்றிருக்கிறோம். ஆதலால் பவுல் சபை முழுமையான ஐக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். நமக்குள் எப்படிப்பட்ட ஒத்துப் போகாத காரியங்கள் இருந்தபோதிலும், வெளிப்படையான சண்டைகளையோ பிரிவினைகளையோ நாம் உண்டாக்கிவிடக் கூடாது. இங்கே முன் வைக்கப்பட்டுள்ள ஐக்கியத்தின் முழு சபையிலிருக்கிற எல்லாவிதமான பிரிவினைகளையும் பாவமுள்ளதாக்குகிறது.

2. *ஒற்றுமைப்பட மனுஷர்களையல்ல, கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும்.* வசனங்கள் 11, 12ல் பிரச்சனையை பவுல் அலசி ஆராய்கிறார். சபை அங்கத்தினர்களுக்குள் "சண்டைகள்'' ஏற்பட்டன. சிலர் பவுலைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தனர்; சிலர் அப்பொல்லோவையும்; சிலர் கேபாவையும் அல்லது பேதுருவையும் சிலர் கிறிஸ்துவையும் பின்பற்றினர்.[3] இங்கே "கிறிஸ்துவின்" பெயர் மற்ற பெயர்களைப் போல மற்றொரு பிரசங்கியார்களை மேலும் பயன்படுத்துவதுபோல் தோன்றுகிறது. சிலர், மற்ற கிறிஸ்தவர்களைக்

காட்டிலும் கிறிஸ்து கொஞ்சம் நல்ல பிரசங்கியார் அவ்வளவுதான் என்பதுபோல் பேசினதாகக் காணுகிறது. அவர்கள் அவரையும், பவுல், பேதுரு, அப்பொல்லோ[4] போன்றவர்களைப் போல் ஒருவராகத் தெரிந்து கொண்டிருந்தனர். சபையார்கள் கிறிஸ்துவுக்கு பதிலாக பிரசங்கியார்களைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தனர். யார் சிறந்த பிரசங்கியார் என்று அவர்கள் வாக்குவாதம் பண்ணி தாங்கள் அதிகமாய் விரும்புகிற பிரசங்கியாரோடு தங்களை வரிசைபடுத்திக் கொண்டனர் என்று கூறலாம்.

அநேகமாக, உண்மையில் இந்த கிரேக்க சமுதாய மக்களின் சொல்லாட்சி மற்றும் சாமர்த்தியமான கவர்ச்சிகரமான பேச்சுத்திறமை இந்த பிரச்சனை மோசமடைய முக்கிய காரணமாக அமைந்திருக்கலாம். எனவே, கொரிந்துவில் இருந்த கிரேக்கர்கள், பேச்சாளர்களின் திறமையை விமர்சிப்பவர்களாகவும், மேலும் இவர்களைவிட திறமையான சொல் திறமை மிகுந்தவர்களை வேறு இடங்களில் இருந்து கொண்டுவரவும் வாய்ப்பிருந்தது.

அடுத்து மூன்று அதிகாரங்களும் அவர்களின் எண்ணத்துக்கு பவுலின் நிவாரணமாக பெரும் பகுதியில் இடம் பெறுகிறது. இந்த வசனங்களில் வலியுறுத்தப்படும் செய்திகள் முக்கியத்துவம் வாய்ந்தவை; கிறிஸ்தவர் மனுஷர்களை பின்பற்றுகிறவனாயிராமல், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாயிருக்க வேண்டும் என்பதே.

3. *ஐக்கியத்தை அடைய, கிறிஸ்துவுடன் இணைந்திருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்,* இந்தக் கருத்தை வசனம் 13ல் கேட்கப்படும் நயமிகு கேள்வி சுட்டிக் காட்டுகிறது. "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?" இதற்குத் தெளிவான பதில் "இல்லை" என்பதே. ஆதலால் கிறிஸ்துவின் சரீரமாக இருந்த கொரிந்து பட்டணத்துச் சபை, பிளவு பட்டிருக்கக் கூடாது. "பவுல் உங்களுக்காக சிலுவையில் அறையப்படவில்லை, அறையப்பட்டாரா?" மீண்டும் இதற்கு பதில் "இல்லை" என்பதுதான், பவுலோ, அப்பொல்லோவோ, கேபாவோ நமக்காக சிலுவையில் அறையப்படவில்லை. நாம் நமக்காக சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து என்ற ஒருவரையே பின்பற்ற வேண்டும். "பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பண்ணப்பட்டீர்கள்?" மீண்டும் சரியான பதில் "இல்லை" என்பதுதான். நாம் யாருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றோமோ அவரையே நாம் பற்றிக் கொண்டு இருக்க வேண்டும். அந்த நாமம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம்தான்.

4. *ஐக்கியப்பட்டிருக்க, "பேச்சுத்திறனை" வலியுறுத்தாமல், கிறிஸ்துவின் சிலுவையை பிரசங்கிப்பதை வலியுறுத்த வேண்டும்.* பிரிவினைகளைக் குறித்து பேசுகிற இந்த வசனங்களுக்கிடையே வசனம் 17 மாற்றுக்கருத்தாக பிரச்சனைகளுக்கான நிவாரணத்தை அளிக்கிறது: மனுஷனுடைய ஞானத்தாலோ சாதுரிய பேச்சினாலோ இரட்சிப்பு இல்லை கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் என்பதைப் பிரசங்கிப்பது என்பதுதான் இதன் குறிக்கோள் கருத்து (வசனம் 18). ஒரு உள்ளூர் சபையின் பிரதான கடமை கிறிஸ்துவுடன் இணைந்திருப்பது, "இயேசு கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையுமே பிரங்கிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்" (2:2). அப்பொழுது சண்டைகள்மறைந்து ஐக்கியம் மேற்கொள்ளும்.

கொரிந்து பட்டணத்தில் இருந்ததுபோலவே சில உள்ளூர் சபைகளிலும்

ஐக்கியமின்மை பிரச்சனைகள் இருக்கலாம். உண்மையில் அப்படியில்லாதிருந்தால் ஆச்சரியமே. சண்டை சச்சரவுகளினாலே ஏறத்தாழ ஒவ்வொரு உள்ளூர் சபைகளிலும் அவ்வப்போது பிரச்சனைகள் ஏற்படலாம். அப்பொழுது பவுலின் அறிவுரை நமக்கு உதவிகரமாக இருக்கக்கூடும்: (1) எச்சரிக்கையடைந்து முழு ஐக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். (2) மனிதனையல்ல, கிறிஸ்துவை பின்பற்றுங்கள். (3) சபையின் தலையாய கடமை கிறிஸ்துவில் இணைந்திருத்தல் என்பதை நினைவில் கொள்ளுங்கள். (4) சாதுரியமான பேச்சினாலே அல்ல, கிறிஸ்துவின் சிலுவையைப் பிரசங்கிப்பதை வலியுறுத்துங்கள்.

முடிவுரை

நாம் கொரிந்துவிலிருந்த சபையைக்குறித்து பேசினோம் - அதற்கு இருக்கும் ஆசீர்வாதங்களையும் ஐக்கியமின்மையால் வரும் பிரச்சனைகளையும் பேசினோம். இன்று நாம் அங்கம் வகித்திருக்கும் உள்ளூர் சபையின் நிலை என்ன? நீங்கள் ஊழியமும் தொழுகையும் செய்து கொண்டிருக்கும் பிராந்திய சபையைப் (உள்ளூர் சபையைப்) பற்றி எனக்குத் தெரியாது, என்றாலும், அதைக்குறித்து மூன்று உண்மைகளை அறிவேன்: (1) அது உண்மையில் கர்த்தருடைய சபையானதால் பரிபூரணமாய் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. (2) விழுந்து போகும் தன்மையையுடைய மனுஷர்களை அது கொண்டிருப்பதால் - எவ்வித சந்தேகமுமின்றி பிரச்சனைகள் இருக்கவே செய்யும். (3) உயிரோடிருப்போரோ மரித்தோரோ, யாரிடத்திலும் நம்பிக்கை வைக்காமல் முழுமையாய் கிறிஸ்துவிடம் மட்டும் வைக்க வேண்டுமென்று அதன் அங்கத்தினர்கள் தீர்மானித்தால், பிரச்சனைகள் தீர்க்கப்படும். சபையின் வெற்றிக்குத் தேவையான வேறு படிகள் அவசியமாக இருந்தாலும், நமது கவனத்தை முதலில் கிறிஸ்துவின் பக்கமும், சிலுவையின் செய்தியின் பக்கமும் திருப்பாத பட்சத்தில் அவைகள் உபயோகமற்றதாகிவிடும்.

குறிப்புகள்

[1]ஒன்று கொரிந்தியர் 1:2 அநேக இறையியல் கருத்துக்களைக் கொடுக்கிறது: பரிசுத்தமாக்கப்படுதல், அழைக்கப்படுதல் (1 கொரிந்தியர் 1:9-யும் காண்க), ஐக்கியம், மற்றும் தொழுது கொள்ளுதல் ("கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற" என்று குறிப்பிடப்படுகிறது). [2]சிலர் பவுலைச் சேர்ந்தவர்களென்றும் சிலர் அப்பொல் லோவைச் சேர்ந்தவர்களென்றும் சொல்லக் காரணம், அவர்கள் இருவருமே கொரிந்துவில் பிரசங்கித்தார்கள் என்பதால் தான் என்பது தெளிவாகக் காணப்படுகிறது. பேதுருவைச் சேர்ந்தவர்களாக மற்றவர்கள் சொன்னது ஏன் என்று தெளிவாகத் தெரியவில்லை. பேதுருவும் ஒரு வேளை அங்கே பிரசங்கித்திருக்கலாம்; எப்படியாயினும், எருசலேமில் - பேதுருவைத் தனிப்பட்ட முறையில் அறிந்தவர்கள் - கொரிந்துவுக்கு குடிபெயர்ந்து வந்தபோது யூதர்களுக்கான அந்த அப்போஸ்தலனுடன் தங்களுக்கு இன்னமும் கடமை இருப்பதாக உணர்ந்திருக்கலாம். இந்தப் பிரச்சனையைக் குறித்து பவுல் அதிகாரம் 3ல் இன்னும் அதிகமாய் விவரிக்கிறார். [3]சகோதரர்களுக்குள் "சண்டைகளும்" "எதிர்ப்புகளும்" யூதர்களுக்குள் இருந்த வித்தியாசப்பட்ட பிரிவுகளுக்குச் சமமாகவோ அல்லது இன்று காணப்படுகிற கிறிஸ்தவத்துக்குள் இருக்கும் பிரிவு (நாமகரணக்) கூட்டங்களுக்குச் சமமாகவோ 1:12ல் குறிப்பிடப்படவில்லை. மேற்படி வசனத்தில் குறிப்பிடப்படும்

பிரிவுகள் வித்தியாசப்பட்ட உபதேசங்களைப் பிரசங்கித்தார்கள் என்றோ, தனித்தனியான தொழுகைகளைச் செய்ததாகவோ எவ்விதக் குறிப்பையும் நாம் காண்பதில்லை. [4]*"நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன்" எனும் பதத்தைக் குறித்து விளக்கவுரையாளர்கள் மாறுபடுகின்றனர். கிறிஸ்தவன் தன்னை "நான் கிறிஸ்துவை சேர்ந்தவன்" என்று குறிப்பிடுவது எப்போதாவது தவறானதாக இருந்ததா என்று சந்தேகிக்கின்றனர், அப்படிச் சொன்னவர்கள் முதல் மூன்று கூட்ட மக்களிடம் முரண்படுகின்றனர்.* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 53; James Burton Coffman, *Commentary on 1 and 2 Corinthians* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977], 14-15.)

வேறு சிலர் "கிறிஸ்துவின் கட்சி" என்று கூறுவதும் தவறு என நம்புகின்றனர். மேரியன் சோர்ட்ஸ் "தன்னை கிறிஸ்துவைச் சேர்ந்தவன்" என்று ஒருவர் அடையாளப் படுத்திக் கொள்வது சாதரணமாக பவுலின் அனுமதியோடுதான் ஆனால் கொரிந்தியரின் சூழ்நிலையில் குறிப்பிடுவதும் அவசியமில்லாத புகழ்ச்சி" (Marion L. Soards, *1 Corinthians,* New International Biblical Commentary [Peabody, Mass.: Hendrikson Publishers, 1999], 33). *அனைத்துக் கிறிஸ்தவர்களும் "நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்"; ஆனால் கொரிந்துவிலிருந்தவர்கள், இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தி குறிப்பிடப்பட்ட மற்ற பிரசங்கியார்களின் சமத்துக்கு கிறிஸ்துவை மட்டுப்படுத்தி, அவர் சிறப்பானவர், ஞானமிக்கவர், மற்றெல்லா பிரசங்கியார்களிலும் சாதுரியமான பிரசங்கி என்றெல்லாம் அவர்கள் சொன்னாலும் - அந்தக் கூட்டம் தவறானதே.*

2

தேவ ஞானம் தேவைப்பட்ட சபை

(1 கொரிந்தியர் 1:18–2:16)

கொரிந்து சபைக்கு ஞானம் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருந்தது; அதின் அங்கத்தினர்கள், கிரேக்கர்களைப் போலவே,[1] ஞானத்தை உயர்வாக மதித்தனர். கிரேக்க நாட்டில் "தத்துவம்" என்பது - "ஞானத்தை நேசித்தல்" எனும் பொருள் கொண்டது - அதன் மூலப்பதம் ஒரு ஒழுக்கம் என்பதாகக் கருதப்பட்டது. கொரிந்தியர்கள் ஞானத்துக்கு கொடுத்த மதிப்பு 1 கொரிந்தியர்கள் 1:18-2:16ல், பிரதிபலிக்கிறது, இங்கே "ஞானம்" "ஞானி" போன்ற பதங்கள் 30 வசனங்களில் இருபது முறையும்,[2] "பைத்தியம்" எனும் "ஞானத்துக்கு" எதிரான பதம் ஆறு முறையும் (ஆங்கிலத்தில்) காணப்படுகிறது. பவுல் கொரிந்தியர்களின் இருதயத்துக்கு அடுத்தவைகளை பேசுகிறார். கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார் என்பதை அவர் அறிந்திருந்தார் (1:22ஆ). இன்றைய ஜனங்களும் ஏறத்தாழ கிரேக்கர்களைப் போலத்தான் இருக்கின்றனர். நாமும் ஞானத்தைத் தேடுகிறோம்; அல்லது குறைந்த பட்சம் நாம் புத்திமான்களாக சிறந்த கல்விமான்களாக இருக்க விரும்பிகிறோம். யாரும் தன்னை பைத்தியக்காரன் என்றோ மதியீனன் என்றோ எண்ணுவதை விரும்புவதில்லை.

எப்படியாயினும், பவுல் ஞானத்திலே மயங்கவில்லை - குறைந்த பட்சம் கிரேக்கர் தேடிய அந்த ஞானத்தில் அல்லது நம்மிலே அநேகரும் அக்கரை காட்டுகிற அந்த ஞானத்திலே அவர் மயங்கவில்லை. அவர் "உலகத்தின் ஞானத்தைக்" குறித்துப் பேசினார் (1:20ஆ) அதை மற்றுமொரு ஞானத்தோடு முரண்படுத்தி - "இந்த யுகத்தின் ஞானத்தையல்ல" - காட்டுகிறார் (2:6). முதலாவதை மறுத்து இரண்டாவதை பரிந்துரைத்தார்.

இந்த இரண்டு ஞானத்திற்கும் உள்ள வேற்றுமைகளை நாம் கவனிக்கும் பொழுது எப்படிப்பட்ட ஞானி நாம் என்பதையும், எந்த விதமான ஞானத்தை பெற்றிருக்கிறோம் என்பதையும் நமக்குள் கேட்கவேண்டும்.

உலக ஞானம் (1:18-2:5)

வசனம் 18 கொரிந்து பட்டணத்திலிருந்த பிரிவினையாகிய பிரச்சனைக்கு முதன்மை நிவாரணத்தைக் காட்டுகிறது: இரட்சிப்பு மனித ஞானத்தால் உண்டாகாமல், "பைத்தியமாய்த்" தோன்றுகிற சிலுவையைப் பற்றிய உபதேசத்திலே காணுகிறது! பிறகு பவுல் உலக ஞானத்தைக் குறித்து பரிசீலிக்கிறார் (1:19, 20).

உலக ஞானம் பிரிவினைக்கு கொண்டு சொல்லக் கூடும்

ஜனங்கள் உலக ஞானத்தை மதிப்பிடுகின்றனர், ஆனால் பவுலோ அதை மறுத்தார். ஏன்? ஏனெனில் அது கொரிந்து பட்டணத்திலிருந்த சபையை

பிளவுபடுத்தியது. அதின் அங்கத்தினர்கள் மனுஷர்களைப் பின்பற்றினார்கள் - பவுல், அல்லது அப்பொல்லோ அல்லது பேதுருவை. அவர்கள் பிரசங்கத்தைக் காட்டிலும் பிரசங்கியாருக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். ஒவ்வொருவரும் ஒரு மனிதனை தெரிவு செய்து பின்பற்ற காரணம் அந்தந்த மனிதன் ஞானமிக்கவரைப் போலவும், சிறப்பாக பேசக்கூடியவராகவும் காணப்பட்டிருக்கலாம். அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் பின்வருமாறு வாக்குவாதம் பண்ணியிருக்கலாம்: "எனது அறிவுரையாளர் உன்னுடைவரைக் காட்டிலும் புத்திசாலி"; "எனது பிரசங்கியார் உன்னுடையவரைக் காட்டிலும் சாதுரியான பேச்சாளர்." "உலக ஞானம்" முக்கியமற்றது என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்; உண்மையில், அது சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள ஒரு தடைக்கல்.

ஞானத்தை நன்கு அறிந்து கொள்ள பவுல் கொரிந்தியர்களை எப்படி வழிநடந்தினார்? கிரேக்கர் ஞானத்தை மதிப்பிடுவதற்கும், தேவன் ஞானத்தை வெளிப்படுத்துவதற்கு மிடையேயுள்ள வித்தியாசத்தை அவர் முன்னிறுத்தினார். அவர் தமது பிரசங்கம் "வல்லமையான பேச்சிலே" சார்ந்து வரவில்லை என்பதை ஏற்கனவே அவர் சுட்டிக் காட்டினார் (1:17; "சாதுரிய ஞானம்"; NRSV[3]). எனவே ஜனங்கள் தனிப்பட்ட முறையில் அவரைப் பின்பற்றக் கூடாது. பவுல் தொடர்ந்து, சுவிசேஷ அனுபவம் பழைய ஏற்பாட்டின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்கிறது என்று கூறினார்: "புத்திசாலிகளுடைய புத்தியை" அவமாக்குவேன் என்று தேவன் சொன்னார் (1:19).[4]

சிலுவையைப் பற்றிய உபதேசத்தால்
உலக ஞானத்தை தேவன் அழித்தார்

வசனம் 19ல் குறிப்பிடுகிறபடி, "ஞானிகளுடைய ஞானத்தை தேவன் எப்படி" அழிக்கிறார்? பிரசிங்கிக்கப்பட்ட செய்தியின் பைத்தியக்காரத் தன்மையினாலே, பாவிகளை இரட்சிப்பதின் மூலம் "ஞானிகளின் ஞானத்தை" தேவன் அழிக்கிறார் என்று 1:21-25ல் பவுல் விளக்குகிறார் (1:21; "பைத்தியமாய் தோன்றும் பிரசங்கத்தினால்"; KJV) வசனம் 21ல் பிரசங்கத்தின் உட்கருத்து செயலை மட்டும் குறிப்பிடாமல் - பிரசங்கிக்கப்பட்ட செய்தி - வலியுறுத்தப்படுகிறது.

அதன் உட்கருத்து முதல் நூற்றாண்டில் கேட்டவர்களுக்கு பைத்தியமாகத் தோன்றியது போலவே, இன்றும் பரியாசக்காரர்களுக்கு அது பைத்தியமாகவே காணப்படுகிறது. "சிலுவையைப் பற்றிய உபதேசம் *கெட்டுப்போகிறவர்களுக்குப்* பைத்தியமாயிருக்கிறது" என்று பவுல் சொன்னார் (1:18; எனது வலியுறுத்தல்). தொடர்ந்து அவர், "யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் *யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்*" (1:22, 23; வலியுறுத்துதல் என்னுடையது). சிலுவையைப் பற்றிய கருத்தைக் கேட்டு யூதர்கள் இடறினார்கள், ஏனெனில் சிலுவையில் அறையப்பட்ட மேசியாவை அவர்களால் கற்பனை பண்ணமுடியவில்லை. குற்றவாளியாய்த் தீர்க்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரை மையப்படுத்தி பிரசங்கிப்பதை புறஜாதிகள் பைத்தியமாகக் கருதினர்.

யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் சிலுவையைப் பற்றிய உபதேசம்

பைத்தியமாய்த் தோன்றினாலும், விசுவாசித்தவர்களுக்கு அது இரட்சிக்கும் செய்தியாக இருந்தது. சுவிசேஷ செய்தி தேவனுடைய மகத்துவத்தை விளக்கப்படுத்துகிறது: ஞானிகளிலேயே முதன்மையானவர்கள் கூட செய்யமுடியாத[5] சாதனையை அவருடைய "பைத்தியமாய்த்"[6] தோன்றுகிற காரியம் செயல்படுத்துகிறது.

தேவனுடைய ஞானத்தின் விளைவுகள்

"பைத்தியமாய்த்" தோன்றும் செய்திதான் முக்கியமான விளைவுகளைக் கொண்டிருக்கிறது. சிலுவையைக் குறித்த மனிதர்களின் இந்த யூகம் தான் தன்னுள் யார் இரட்சிக்கப்படுவார்கள் என்பதையும், நமது மேட்டிமைக்கான மூலக் காரணியை அப்புறப்படுத்தி, எப்படிப் பிரசங்கிக்கிறோம், எதை நாம் விசுவாசிக்கிறோம் என்பதையும் தீர்மானிக்கிறது.

> எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை. வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, "மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக" அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார் (1:26-31)[7].

''பைத்தியமாய்த் தோன்றுகிற'' தேவனுடைய செய்தி இரட்சிக்கப்படுவோருக்கு ஏற்புடையதாக இருந்தது. இரட்சிப்பு கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் வருகிறது எனும் கருத்து, உலகத்தின் பார்வையில் ஞானியாக, மகான்களாகக் காணப்படுவோரால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

பைத்தியமாய்த் தோன்றுகிற செய்தி மனித மேட்டிமைக்கான எந்த காரணத்தையும் அப்புறப்படுத்துகிறது. தேவன் இரட்சிப்பை "பைத்தியமாய்த் தோன்றுகிறவைகள்," "பலவீனமாய்த் தோன்றுபவைகள்," "கீழானவைகள்," "பரிகசிக்கப்பட்டவைகள்," "இல்லாதவைகள்" மூலம் கொடுக்கும்படி தெரிந்து கொள்கிறார்.[8] இந்தக் காரணத்தால், "மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டக்" கூடாது (1:29). "நான் மிகவும் புத்திசாலி, தேவனை எப்படிப் பிரியப்படுத்த முடியும் என்று என்னால் கண்டுபிடிக்க முடிந்தது" என யாரும் உரிமை கோர முடியாது. தனக்கென *நம்பிக்கைக்குரிய* காரணம் ஏதும் இருப்பின் அது கிறிஸ்துவின் மரணம் மட்டுமே என்று ஒவ்வொருவரும் அறிக்கையிட வேண்டும்: "(தேவனால்) இதை செயல் படுத்துவதன் மூலம் நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறீர்கள்," ... அவரே நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார் (1:30). நமக்குள் எந்த நல்ல காரியமும்

இருப்பதுபோல் நாம் மேன்மை பாராட்ட முடியாது; அப்படி மேன்மை பாராட்ட வேண்டுமானால் தேவன் நமக்கு செய்திருக்கிறவைகளுக்காகவே மேன்மை பாராட்ட வேண்டும் (1:31).[9]

அன்றியும், "பைத்தியமாய்த் தோன்றுகிற" செய்தி நாம் எப்படி பிரசங்கிக்க வேண்டும் என்பதையும் செயலாக்குகிறது (2:1-5). பவுலின் பிரசங்கம் அவரது சாதுரியத்தையோ ஞானத்தையோ சார்ந்திருக்க வில்லை. மாறாக கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்த செய்தியின்மேலேயே சார்ந்திருந்தது.[10]

அப்போஸ்தலர்களின் பிரசங்கம் சிலுவையின் செய்தியை ஆதாரமாக கொண்டிருப்பதைக் காணும்போது, அவருடைய நம்பிக்கை நமக்கு நல்லுணர்வை ஏற்படுத்துகிறது. அவர் எருசலேமில் யூதமத பிரசித்தி பெற்ற ஆசான் கமாலியேலின் பாதத்தில் கற்றவர் (நடபடிகள் 22:3); அவர் போதகர் ரபீகளுக்கான பயிற்சி பெற்றவர். கூடுதலாக அவர் கிரேக்க புலவர்கள் மற்றும் தத்துவ ஞானிகளோடு நன்கு பழக்கமுடையவராக இருந்ததால், கிரேக்கக் கல்வியும் அவர் கற்றிருக்க வேண்டும் (நடபடிகள் 17:28; தீத்து 1:12). பெஸ்துவும் பவுலை "அதிகம் கற்றவர்" என்று சொல்லுகிறான் (நடபடிகள் 26:24). எனவே பவுல் தனது பிரசங்கத்தை தன்னுடைய கல்வி கற்று சாதித்தவைகளின் அடிப்படையாகக் கொண்டு செய்திருக்கலாம், ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

சிலுவையைப் பற்றிய உபதேசம் உண்மையானது பைத்தியமாய்த் தோன்றுகிற நமது விசுவாசத்தின் அடிப்படைக்கு ஏற்புடையதாயிருக்கிறது. பவுல் கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் மட்டுமே பிரசங்கிக்கும்படியாய்த் தீர்மானித்தார், அதினால் கொரிந்தியர்களின் விசுவாசம் "மனிதர்கள் மீது சார்ந்ததாயிராமல் தேவனுடைய பெலனைச் சார்ந்ததாயிருக்கும்" (2:5).

பரத்திலிருந்து வரும் ஞானம் (2:6-16)

2ம் அதிகாரத்தின் மீதிப் பகுதியை வித்தியாசப்பட்ட வகையான ஞானத்தை, பரத்திலிருந்து வருகிற ஞானத்தைக் குறித்து விளக்கமளிக்கும்படி பவுல் பயன்படுத்தினார் (2:6-16).

இந்த பரத்திற்குரிய ஞானத்தின் தன்மைகள் என்ன?

முதலாவதாக, அது இப்பிரபஞ்சத்தின் ஞானமுமல்ல, இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானமுமல்ல (2:6). இப்பிரபஞ்சத்தின் பிரபுக்கள் பரத்திற்குரிய ஞானத்தை அன்றும் மதிப்பிட்டுப் பார்க்கவில்லை, இன்றும் மதிப்பிட்டுப் பார்க்கவில்லை. அது நம்மைக் கவலைப்படுத்தத் தேவையில்லை, ஏனெனில் "அவர்களும் அவர்களின் நம்பிக்கைகளும் கடந்து போகின்றவை."

இரண்டாவதாக, அது உலகத்தோற்றத்துக்கு முன்னே மறைத்துவைக்கப்பட்டு இரகசியமாக இருந்ததுமான நித்திய ஞானம், ஆனால் இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது (2:7). அது இரகசியமாக இருந்தது, ஆனால் இப்போது, அது குறித்து பேசப்படுவதால், இனியும் அது இரகசியமாக வைக்கப்பட்டிருக்கவில்லை; அது வெளிப்படுத்தப்பட்டு விட்டது (கொலோசெயர் 1:26 ஐக் காண்க).

மூன்றாவதாக, இந்த ஞானம் இயேசு கிறிஸ்துவின் நாட்களில் அவருடைய எதிரிகளால் புரிந்து கொள்ளப்படவில்லை (2:8). அவர்கள் இந்த பரலோக ஞானத்தைப் புரிந்துகொண்டிருந்திருப்பார்களானால் "மகிமையின் கர்த்தரை

அவர்கள் சிலுவையில் அறைந்திருக்கமாட்டார்கள்."

நான்காவதாக, இந்த ஞானம் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டபடியே, ஆவியினாலே இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (2:9-11). பவுல் இங்கே ஏசாயா கூறின தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காட்டுகிறார்: "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (2:9).[11] இந்தத் தீர்க்கதரிசனத்தை தேவன் தமது பரிசுத்தவான்களுக்கு பரலோகத்திலே ஆயத்தப்படுத்தி வைத்துள்ளவைகளுக்கு ஒப்பிடாமல், கிறிஸ்துவுக்குள் வெளிப்படுத்தப்பட்ட பரத்துக்குரிய ஞானத்தை அவர் ஒப்பிடுகிறார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், பரிபூரணத் தெய்வீகத்திட்டம் கிறிஸ்துவின் வருகை மற்றும் அவரது சிலுவை மரணம் ஆகியவை "உலகத் தோற்றத்துக்கு முன்னே தேவன் தமது மகிமைக்காக ஏற்படுத்தியவை," அவை மறைக்கப்பட்டிருந்தது. ஆதி காலங்களில் வாழ்ந்த மக்கள் இந்த இரகசியத்தை தாங்களாக தங்கள் கண்களையோ காதுகளையோ பயன்படுத்திக் கண்டுபிடிக்க இயலவில்லை. அவர்களின் இருதயங்களிலோ மனதிலோ தோன்றாதபடியால், அவர்களால் முன்னறிவிக்கவும் முடியவில்லை. எப்படியாயினும் இப்பொழுது, அந்த மறைக்கப்பட்ட "இரகசியம்" தேவனுடைய ஆழங்களை அறிந்திருக்கிற ஆவியானவர் மூலமாய் ஜனங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது (2:10, 11).

ஐந்தாவதாக, இந்த ஞானம் உலகத்தினாலல்ல, தேவ ஆவியினால் அருளப்பட்டு அறிந்து கொண்ட அப்போஸ்தலர்களால் பெற்று கொடுக்கப்பட்டது (2:12, 13). பவுல் குறிப்பிடுகிற "நாங்கள்" எனும் பதம், "நாங்களோ, தேவனால் அருளப்பட்ட, ஆவியையே பெறுகிறோம்" என்று குறிப்பிட்டதன்மூலம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் என்று சுட்டிக்காட்டாமல், அப்போஸ்தலர்களுக்கும், ஏவப்பட்ட தனிமனிதர்களுக்கும் குறிப்பாய் பேசப்பட்டது.[12] இதிலே வலியுறுத்தப்படும் கருத்து என்னவெனில் தேவனிடத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டவை - "உலகத்தின் ஆவியினால் வரவில்லை" (2:12) தேவனிடத்திலிருந்து வந்த ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டது.

ஆறாவதாக, அது ஜென்மசுபாவமுள்ள மனுஷனாலே பெற்றுக்கொடுக்கப்பட்ட ஞானமல்ல (2:14-16). "ஜென்ம சுபாவமுள்ள மனுஷன்" (2:14) என்பதை "ஆவிக்குரியவன்" என்பதோடு வித்தியாசப்படுத்துகிறார் (2:15). பரிசுத்த ஆவியை பெற்ற அப்போஸ்தலர்களுடன் இந்த விளக்கம் சம்பந்தப்படுத்தப்பட வேண்டும் (2:12).

"ஜென்ம சுபாவமுள்ள மனுஷனோ" தேவனுடைய "ஆவிக்குரியவைகளை" ஏற்றுக் கொள்ளமாட்டான்; அவைகள் அவனுக்குப் "பைத்தியமாய்த் தோன்றும்" (2:14), என்று பவுல் சொன்னபோது, ஏற்கனவே சொன்னதையே ஏறத்தாழ மீண்டும் சொல்கிறார்: சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கிறது (1:18). உலக ஞானத்தை சார்ந்திருப்பவர்கள் பரிசுத்த ஆவியினிடத்திலிருந்து, கிறிஸ்துவும் அவர் சிலுவையிலறையப்பட்டதையும் குறித்த செய்தியை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.[13]

அதற்கு மாறாக, "ஆவிக்குரியவன்" - தேவன் தாமே தமது வசனங்களை அருளிச் செய்த பவுலையும் மற்றவர்களையும் அர்த்தப்படுத்துகிறது - அவர்கள்

கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டிருந்ததால் கர்த்தருடைய சிந்தையை, அறிந்திருக்கிறார்கள் (2:16ஆ). ஆவியினால் ஏவப்பட்ட இந்த ஆவிக்குரியவர்கள், எல்லாவற்றையும் (ஆராய்ந்து) "நிதானிக்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள்."[14] அதாவது, எல்லா விஷயங்களையும் குறித்து தீர்ப்புச் செய்யவும், தேவனுடைய சிந்தையை நிதானிக்கவும், பொய்க்கும் உண்மைக்குமுள்ள வித்தியாசத்தை பகுத்துப் பார்க்கவும் திறமை பெற்றிருக்கிறார்கள். ஆவியில்லாதவர்கள் யாராலும் அவர்கள் "ஆராய்ந்து" அறியப்படவோ நியாயந்தீர்க்கப்படவோ முடியாது. "கிறிஸ்துவின் சிந்தையில்லாதவர்கள்" இவர்களுடைய வெளிப்பாட்டைக்குறித்து கேள்வி கேட்கவோ குற்றப்படுத்தவோ எந்த அதிகாரமும் கிடையாது.

அன்றும் இன்றும் சபைக்கான பாடங்கள்

இந்த வார்த்தைகளிலிருந்து கொரிந்து பட்டணத்துச்சபை கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது என்ன? உலக ஞானத்தை அடிப்படையாகக்கொண்டு பிரசங்கியார்களை மதிப்பிடக்கூடாது என்பதையும் அவர்கள் பரத்திலிருந்து வருகிற ஞானத்தையே சார்ந்திருக்கவும் பவுல் விரும்பினார் - இதுவே அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்ட ஏவப்பட்ட செய்தி. இந்த செய்தி கொடுப்பவரின் சாதுரியத்தையோ ஞானத்தையோ அடிப்படையாக வைப்பதைக் காட்டிலும், பைத்தியமாகத்தோன்றினாலும் அந்தச் செய்தியின்மேல் தங்களின்முக்கியத்துவத்தை வைத்தால் வித்தியாசப்பட்ட பிரசங்கியார் மீது வைக்கும் பற்றுறுதியான அவர்களுடைய பிரச்சனை தீர்க்கப்படும், ஆகவே அவர்கள் ஐக்கியமாயிருக்கக்கூடும்.

செய்திசார்ந்த வசனப்பகுதியை நாம் எப்படி நமக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்? கொரிந்தியருக்கு எழுதப்பட்ட செய்தி இன்றைக்கு, விசேஷமாக ஒரு சபை போராட்டங்களைச் சந்திக்கும் போது, முக்கியதேவைப்படும் ஒன்று.

சபையாராகிய, நாம் 1 கொரிந்தியர் 1, 2-ன் பாடங்களை பிரச்சனைகளைத் தீர்ப்பது எப்படி என்று அறிந்து நமக்கு அதை நடைமுறைப்படுத்திக் கொள்ளலாம். சபை முன்னோடிகள் ஒரு சிக்கலான பிரச்சனைக்கு தீர்வு காண விழையும்போது, அவர்கள் உட்கார்ந்து, சூழ்நிலையைப் பற்றி விவாதித்து, தங்களுக்கு கிடைத்த ஒட்டுமொத்த ஞானத்தையும் பயன்படுத்தி என்ன செய்ய வேண்டும் என்ற முடிவை எடுக்கக்கூடும். பிரச்சனையை சரிசெய்ய என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்கு ஆலோசனை பெற பிரசித்தி பெற்ற ஆசிரியர்கள் எழுதின புத்தகங்களைக்கூட படிப்பார்கள்.

சபை முன்னோடிகள் ஒருவருக்கொருவர் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதும், அல்லது மற்ற மனிதர்கள் எழுதின புத்தகங்களைப் படித்து அதன் அறிவுரைகளை அப்படியே செயல்படுத்த முற்படுவது தங்கள் முன்னுரிமைகள் அல்ல என்பதை புரிந்துகொண்டு, தங்களுடைய சூழ்நிலைக்கு கர்த்தருடைய சித்தத்தைஅறிய வேத வசனத்தைதேட வேண்டிய அவசியத்தை புரிந்து கொள்ளுகிறவரைக்கும், மேற்குறித்த அணுகுமுறைகள் தவறானவைகள்அல்ல. நாம் எச்சரிக்கையாக இல்லாவிடில், தேவனுடைய பரலோக ஞானத்தைச் சார்ந்திராமல் மனித ஞானத்தையே சபைசார்ந்திருப்பதை காண்போம். தேவனுடைய வசனமாகிய திருமறையே சபைப்பிரச்சனைக்குத் தீர்வை கொடுக்கும் நிவாரணத்தைக் கொண்டுள்ள பிரதான புத்தகம்! சபை முன்னோடிகள் தேவனுடைய வசனங்களை குறிப்பிடாமல்

பிரச்சனையைத்தீர்க்க முடிந்தால்கூட, அவர்கள் செய்தது தேவனுடைய சித்தத்திற்கு முரணானவைகளாக இருந்தால் அவர்கள் சாதித்தது எதுவுமில்லை.

தனிப்பட்டவர்களாகிய நாம் ஒவ்வொருவரும், கொரிந்து பட்டணத்துக்கு எழுதப்பட்ட வசனங்களை நமக்குப்பயன்படுத்தி நமது சுய சாதுரியத்தையோ, அறிவுக்கூர்மையையோ, அல்லது கல்வி அறிவையோ நம்பாமல், சிலுவையைக் குறித்துச் சொல்லப்படும் தேவனுடைய செய்தியை மட்டும் விசுவாசிக்கும்படி தீர்மானிப்போம் - அது பைத்தியமாய்த் தோன்றினாலும் கைக்கொள்வோம். இன்று தேவ ஞானத்தை பரிசுத்த ஆவியால் ஏவப்பட்ட மனுஷர்கள் எழுதின அவருடைய வசனங்களில் காணலாம். நாம் தேவனைப்பிரியப்படுத்தவும் நமது தனிப்பட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், தேவனுடைய வசனமாகிய திருமறையை படிக்கவும், கற்கவும், கீழ்ப்படியவும் வேண்டும்.

குறிப்புகள்

[1]ரோமர்களும் ஞானத்தை மதிப்பிட்டார்கள். ரோம உலகம் கிரேக்க கலாச்சாரத்தினாலே மேற்கொள்ளப்பட்டிருந்தது. பழைய ஏற்பாடு குறிப்பாக நீதி மொழிகள் புத்தகத்தில் ஞானத்தை புகழ்ந்திருந்தபடியால், சபையிலிருந்த யூதர்களும் ஞானத்தைகுறித்த உயர்வான மதிப்பீட்டைக் கொண்டிருந்தனர். [2]இரண்டுமுறை (2:7 மற்றும் 2:8ல்) "ஞானம்" பதம் எழுத்துக்கள் வலப்பக்கம்சாய்வு நிலையில் உள்ளதன் மூலம் அது மூலப்பிரதியில் இடம்பெறவில்லை என்பதை குறிப்பிடுகிறது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் விட்டுவிடுவோமானால், "ஞானம்" "ஞானி" எனும் பதம் முப்பது வசனங்களில் பதினெட்டு முறைகாணப்படுகிறது. [3]நேரடிப்பொருளில் இந்தப்பதம் "ஞானமானபேச்சு" என்றுபொருள்படுகிறது. (Alfred Marshall, trans., *The Interlinear NASB-NIV Parallel New Testament in Greek and English* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1993], 482). [4]ஏசாயா 29:14-ஐ பவுல் சுட்டிக்காட்டுகிறார். [5]பவுல் "தேவனுடைய பைத்தியம்" மற்றும் "தேவனுடைய பலவீனம்" என்று குறிப்பிடும்போது (1:25), அவர் நேர் எதிர் பொருளில் பேசுகிறார். தேவனுடைய வழிகளை இந்த உலகம் "பைத்தியமாகவும்" "பலவீனமுள்ளதாகவும்" பார்க்கலாம், இருந்தாலும் அவைகள் மிகப்பெரிய ஞானவான்களின் ஞானத்தைக்காட்டிலும் மிகப்பெரிய பலவான்களின்பலத்தைக் காட்டிலும் அதிக ஞானத்தையும் பலத்தையும் உடையது. [6]தேவன், தமது சித்தத்தை நிறைவேற்ற ஒருபோதும் மனிதனுடைய ஞானத்தைச் சார்ந்திருக்கவில்லை. சுகப்படுத்தவும் விடுதலையாக்கவும் தாம் ஒருவரே பொறுப்பு எனக் காட்டும்படி அடிக்கடி அவர் "பைத்தியமாய்த் தோன்றுபவைகளைத் தெரிந்துகொண்டார்." நாகமானை சுகப்படுத்த "பைத்தியமாய்த்" தோன்றும் முறையைக் கையாண்டார் (2 இராஜாக்கள் 5:1-14), எரிகோ பட்டணத்து மதிலை விழப் பண்ணவும் (யோசுவா 6:1-21) கொள்ளிவாய்ச் சர்ப்பத்தால் கடியுண்ட இஸ்ரவேலர்களைக் குணப்படுத்தவும் அப்படியே செய்தார் (எண்ணாகமம் 21:4-9). [7]இந்தப்பட்டியலில் "ஐசுவரியவான்கள்" எனும்பதம் விடப்பட்டிருப்பது ஆர்வத்தைத்தூண்டுகிறது. "உங்களில் ஐசுவரியவான்கள்" அநேகரில்லை என்று பவுல் சொல்லவில்லை. அந்த உள்ளூர் சபையில் பெரும்பாலானோர் ஐசுவரியவான்களாக இருக்கவில்லை என்று அறியும் போது (சிலர்ஏழைகளாக இருந்துள்ளனர் என்பதும் தெளிவு, 1 கொரிந்தியர் 11:21 ஐக் காண்க), ஒருவேளைபவுல் மேற்சொன்ன வாக்கியத்தை விட்டு விட்டபடியால் ஒருவேளை கொரிந்துபட்டணத்தார் அனைவரும் செல்வச்செழிப்புகளை அனுபவித்திருக்கலாம்.

அப்படியிருந்திருக்குமேயானால் அதுவே அவர்களை இறுமாப்படையச் செய்திருக்கும் ஒரு காரணியாக இருக்கலாம். [8]NASB *மொழியாக்கத்தின்படி, "இல்லாதவைகள்" ஏற்கனவேகுறிப்பிட்ட மூன்று பிரிவுகளுக்கு எதிரான பதமாயிருந்து அவைகளை விளக்கிச்சொல்வதாகும்; "பைத்தியமாய்த் தோன்றுகிறவைகள்," "பலவீனமானவைகள்," "இழிவானவைகள்" ஆகியவைகள்தான் "இல்லாதவைகள்."* [9]*பவுல் எரேமியா 9:24-ஐ மேற்கோள்காட்டிப்பேசுகிறார்.* [10]*கிறிஸ்துவையும் அவர் சிலுவையில்அறையப்பட்டதையும் பிரசங்கிப்பது என்பது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைக் குறித்து பிரசங்கிப்பது (1 கொரிந்தியர் 15:1-5); கிறிஸ்துவின் மரணத்திற்கு தொடர்பாக ஜனங்கள் என்ன பொறுப்பேற்க வேண்டும் என்பதைச் சொல்லுவதும் அதற்குள்ளான காரியம்தான். கிறிஸ்துவைச் சம்பந்தப்படுத்திக் காட்டும் எந்தத் திருமறைத் தலைப்பும் - உதாரணமாக, சபை - எனும் தலைப்பு "கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் பிரசங்கிக்க பொருத்தமானதாகும்."*

[11]*ஏசாயா 64:4-ன் மேற்கோள் குறிப்பு இது, ஆனாலும் மெக்கார்வே "இது வினைச் சொல்லுக்கான மேற்கோள் அல்ல விளக்கமளிக்கக் கூடிய மேற்கோள் எனகுறிப்பிட்டார்"* (J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* [Cincinnati, Ohio: Standard Publishing Foundation, n.d], 60). [12]*இந்தக்கோணம்* W. Harold Mare, "1 Corinthians," in Frank E. Gaebelein, ed., *The Expositor's Bible Commentary,* vol. 10, *Romans-Galatians* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 201. *ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் "பரிசுத்த ஆவி போதிக்கும் வார்த்தைகளைப்" பேசினார்கள் (2:12, 13), (பழைய ஏற்பாட்டு புதிய ஏற்பாட்டு) வசனங்கள் பேசப்பட்டு ஏவப்பட்டவைகள். அதாவது வார்த்தைகளால் - மனதில் தோன்றும் எண்ணங்களால் அல்ல - வசனங்கள் ஏவப்பட்டன.* [13]*இந்த வசனப்பகுதி "கிறிஸ்தவர்கள் அல்லாதோர்" பரிசுத்த ஆவியினால் "ஒளி பெறாதவரைக்கும்" சுவிசேஷச் செய்தியை புரிந்து கொள்ள இயலாது எனப் போதிப்பதாக சிலர் உறுதிபடுத்தி குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர்.* [14]*2:14, 15ல், "ஆராய்ந்து பார்த்தல்" எனும் வினைச் சொல் மூன்று முறைக் காணப் படுகிறது, அனேகிரினோ எனும் பதத்திற்கு கிரினோ எனும் வார்த்தையிலிருந்து வருகிற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது; வழக்கமாக "தீர்ப்புச் செய்தல்" என்று இது மொழியாக்கம் செய்யப்படுகிறது. பிற மொழி பெயர்ப்புகளில், இந்த வசனப் பகுதி, சுவிசேஷம் பரிசுத்த ஆவியினால் அருளப்படாவிட்டால், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கு புரிந்து கொள்ள முடியாது என்று இந்தப் பகுதியை தவறாக பயன்படுத்துகின்றனர். "பகுத்துப் பார்த்தல்," "நிதானத்தல்," "தீர்ப்புச்சொல்லல்," "நியாயந்தீர்த்தல்" என்றெல்லாம் கூறுகிறது. (கிங் ஜேம்ஸ் வெர்ஸன்; புதிய கிங் ஜேம்ஸ் வெர்ஸன்); "பகுத்தாய்வுசெய்யப்பட்டது," "ஆராய்தல்" அல்லது "கூர்ந்துஆராய்தல்" (புதிய திருப்புதல் ஸ்டாண்டர்ட் வெர்ஸன்); "பகுத்தாய்வு," "நியாயந்த்தீர்த்தல் மற்றும் நியாயத்தீர்ப்புக்குட்பட்ட"* (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., "Judge," in *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 336).

3

பிரசங்கியார்கள் மீது அளவுகடந்த விசுவாசத்தைக் கொண்டிருக்கும் ஒரு சபைக்கு தேவைப்படும் அறிவுரை

(1 கொரிந்தியர் 3:1-23)

ஒரு வேளை கொரிந்து சபையிலிருந்த பிரச்சனைக்கு முக்கியமான காரணம் பிரசங்கியார்களிடம் சபையார் கொண்ட அதிகப்படியான விசுவாசமே சபை அங்கத்தினர்கள் கிறிஸ்துவுக்குப் பதிலாக பிரசங்கியாரை பின்பற்றினார்கள் (1:12, 13), அவர்கள் "நான் பவுலைச் சேர்ந்தவன்" என்றும்; "நான் அப்பொல் லோவைச் சேர்ந்தவன்" என்றும்; "நான் கேபாவைச் சேர்ந்தவன்" என்றும் சொல்லிக் கொண்டார்கள். அவர்கள் மற்ற பிரசங்கியார்களைக் காட்டிலும் சிலரை உயர்வாக மதிப்பிட்டார்கள், அதற்கு அடிப்படையாக ஒவ்வொரு பிரசங்கியாருடைய பேச்சு வல்லமையை அல்லது சாதுரிய ஞானத்தை எடுத்துக் கொண்டார்கள். 1 கொரிந்தியர் 3ம் அதிகாரத்தில் பவுல் நேரடியாகவே இந்தப் பிரச்சனையை எதிர் கொள்கிறார்.அந்தச் சூழ்நிலையை பவுல் எப்படி கையாண்டார், மற்றும் அதே மாதிரியான பிரச்சனைக்கு இன்று நாம் எப்படி நிவாரணத்தை மேற் கொள்வது?

அப்பொழுது இருந்த பிரச்சனை

அதிகாரம் 3 ன்ஆரம்பத்தில், பிரச்சனைக்கான காரணத்தை பவுல் சுட்டிக் காட்டுகிறார் (3:1-4).

பிரச்சனைக்கான அடிப்படைக் காரணிகள்: ஆன்மீக வளர்ச்சியின்மை

கொரிந்தியர்களிடம், பிரங்கியார்களை மையமாக வைத்து பிரிவினைகளைக் கொண்டிருக்கக் காரணம் ஆன்மீக வளர்ச்சியின்மையே என்று பவுல் சொன்னார். அவர்கள் ஆன்மீக விஷயத்தில் குழந்தைகளாயிருந்தனர். பெரியவர்களுக்கான போஜனத்தைக் கொடுக்க இயலாத அளவுக்கு அவர்கள் வளர்ச்சியில்லாமல் இருந்தபடியால், பாலையே தொடர்ந்து கொடுக்க வேண்டிய நிர்பந்தத்தில் அவர் இருந்தார்.

பவுல் இங்கே பேசும் உருவகத்தை நாம் புரிந்து கொள்கிறோம். இரண்டு பிள்ளைகள் ஒருவருக்கொருவர் யாருடைய தகப்பன்

பலமானவர் அல்லது தைரியமானவர், அல்லது மிகவும் முக்கியமானவர் என்று அர்த்தமற்ற அமளி பண்ணிக் கொண்டிருப்பதை நாம் கற்பனை செய்து பார்ப்போம்: "என்னுடைய அப்பா உன்னுடைய அப்பாவைக் காட்டிலும் பெரியவர்!"; எனது அப்பா உன்னுடைய அப்பாவைக் காட்டிலும் பலமானவர்!"; "இல்லை, அவர் அப்படியில்லை!"; "ஆமாம் அவர் அப்படித்தான்!" இதே போல் தான் இந்த பெரியவர்களும் தங்கள் தங்கள் பிரசங்கியார்களைக் குறித்து அர்த்தமற்ற அமளி பண்ணிக்கொண்டிருந்தனர்: "பவுல் புத்திசாலி"; "இல்லை, அப்பொல்லோதான்"; "பேதுரு சிறந்த பேச்சாளர்"; "இல்லை, அவரல்ல!" ஆமாம், அவர்தான்; "அவர்தான்!" இப்படியாகத்தான் பிரசங்கியார்கள் மீது மித மிஞ்சிய விசுவாசத்தை நம்பிக்கையை கொண்டிருப்பதாக பவுல் கண்ணுற்றார்.

பவுல் அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியின்மையை அவர்கள் ஆவிக்குரியவர்களாயிராமல், மாம்சத்துக்குரியவர்களாயிருந்து *மனுஷ மார்க்கமாய் நடக்கிறார்கள் என்றும் "மாம்சம்," "மனுஷர்களாய் மட்டும்" போன்ற பதங்களால் விளக்கமளிக்கிறார்* (3:1, 3). ஒரு ஆவிக்குரிய மனுஷன் ஆவிக்குரிய காரியங்களில் அக்கரை காட்டும்போது பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு தேவனுக்குப் பிரியமான வாழ்வை வாழ்கிறான். மாம்சத்துக்குரிய மனுஷன் ஆவிக்குரிய காரியங்களில் அக்கரை காட்டாமல் அக்கரையில்லாமல் மாம்ச ஆசைகளை மட்டும் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவனாக இருப்பான். அப்படிப்பட்ட இச்சைகளுக்கு தன்னை அவன் உட்படுத்திக் கொள்வதால், அவனது ஜீவியமே பாவ நடத்தைக் குரியவைகளாயிருக்கிறது. "மனுஷீகத்தை மட்டும்" கொண்டவர்கள் பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப் படாமல், பூமிக்குரிய காரியங்களில் கவனம் செலுத்தினவர்களாக வாழ்வார்கள். குறிப்பிட்ட பிரசங்கியார்களைப் பின்பற்றுவது ஆவிக்குரிய வளர்ச்சியின்மையை நிரூபிக்கிறதும், "பொறாமை, சண்டைகள்" ஆகியவை "மாம்சத்துக்குரியவர்களாகவும்" "ஜென்ம சுபாவத்துக்குரியவர்களாகவும்" இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது என்று பவுல் கூறினார் (2:14).

பிரச்சனைக்கான தீர்வு (1):
பிரசங்கியாரின் பணியை புரிந்து கொள்ளுதல்

அடுத்து பிரசங்கியார்களிடம் மித மிஞ்சிய நம்பிக்கையை விசுவாசத்தை கொண்டிருப்பவர்களுக்கு பவுல் தீர்வை முன்வைக்கிறார். தாங்கள் தெய்வமாக எண்ணிக் கொண்டிருக்கும் பிரசங்கியார்களின் பணியைக் குறித்த உண்மையை புரிந்து கொள்ளுதலை தனது வாசகர்கள் பெற பவுல் அவர்களுக்கு உதவுகிறார். அவர் அவர்களை தேவனுக்கு "உடன் வேலையாட்கள்" என்றுஅழைக்கிறார் (3:9), மற்றும் பிரசங்கியார்கள் என்ன செய்கிறர்களென்றும், மற்றும் எப்படிச் செய்கிறார்கள் என்றும் அவர் 3:5-17 விளக்குகிறார். பிரசங்கியார்கள் "ஊழியக்காரர்கள்" மட்டுமே (3:5); அவர்கள் எஜமானர்களல்ல. ஜனங்களை விசுவாசிக்கச் செய்யும்படி அவர்கள் கர்த்தருக்கு ஊழியஞ் செய்கிறார்கள்.

சபையை இரண்டு வழிகளில் பவுல் படம் பிடித்துக் காட்டுகிறார். ஒவ்வொன்றிலும் பிரசங்கியார்களின் பங்கு குறித்து பேசினார்.

முதலாவதாக, சபையை பண்ணையாகவும் சபை பணியாளர்களை வேலையாட்களாகவும் பவுல் குறிப்பிட்டார் (3:5-9), "நான் நட்டேன்" "அப்பொல்லோ நீர்ப் பாய்ச்சினான்" (3:6). என்று பவுல் சொன்னார், சிலர் ஒரு

வகையான வேலையையும், மற்றவர்கள் வேறுவகையான வேலைகளையும் செய்கிறார்கள். பிரசங்கியார்கள் அல்லது சில சுவிசேஷகர்கள் ஊழியத்தை துவக்குகிறதாகிய நடுகிறவைகளிலே திறமைசாலிகளாயிருக்கலாம்,[1] மற்றவர்கள் நீர் பாய்ச்சுவதிலே சிறப்பானவர்களாயிருக்கலாம், அல்லது ஏற்கனவே இருக்கிற சபைகளை கட்டியெழுப்பக் கூடியவர்களாயிருக்கலாம். எப்படியிருப்பினும் "தேவனே விளையச் செய்கிறார்" என்று பவுல் குறிப்பிட்டார். ஆதலால் வேலையாட்களால் ஒன்றுமில்லை நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை. "நடுகிறவனாலும் ஒன்றுமில்லை விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்" (3:7)! தேவன் மட்டுமே மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்.

மனுஷர்களைப் பின்பற்றுவோருக்கு இது என்ன பொருளைக் கொடுக்கிறது? தேவன் மாத்திரமே துதிகளுக்குப் பாத்திரமாயிருக்கிற படியால், அவர்களின் நாயகர்களொல்லாம் முக்கியத்துவமில்லாதவர்கள் என ஒப்புக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறார்கள். வேலையாட்கள் அனைவரும் சமமானவர்கள். ஒவ்வொருவரும் தங்களுக்குரிய பிரதி பலனை அடைவார்கள் (3:8), ஆனால் உண்டாகும் மகிமையனைத்தும் தேவனுக்கு மட்டுமே உரியது. எனவே தான் தனது வாசகர்களுக்கு எதை விளக்கப் படுத்த முயற்சிக்கிறாரோ அதை உறுதிபடுத்தும்படி: "நாங்கள் [பவுலும், அப்பொல்லோவும் மற்ற பிரசங்கியார்களும்] தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், மாளிகையுமாயிருக்கிறீர்கள்" (3:9). என்றார்: இப்படியாக கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்களை "தேவனுடைய பண்ணை" என்று விளக்கமளித்தார்; அடுத்ததாக, அவர்கள் "தேவனுடைய மாளிகையாக இருக்கிறார்கள்" என்ற கருத்தை விரிவாக தெளிவாக பேசுகிறார்.

இரண்டாவதாக, பவுல் சபையை உயர்வாக மதிப்பிடக் கூடிய மாளிகையாக படம் பிடித்துக் காட்டுகிறார் (3:9-17). சபை மாளிகையாக இருக்குமேயானால் (3:9), பவுல் மற்றும் அப்பொல்லோ போன்றவர்களெல்லாம் வேலையாட்கள்[2]. பவுல் "ஒரு புத்தியுள்ள சிற்ப ஆசாரியைப் போல" அஸ்திபாரமிட்டார், மற்றவர்கள் அதன் மேல் கட்டினார்கள்.

கட்டுகிறவர்கள் எதன் மேல் என்னவிதமாய் கட்டுகிறார்கள் என்று பார்க்கக் கடவர்கள் என்ற பவுலின் சித்தரிப்பு எச்சரிக்கிறது (3:10). அஸ்திபாரம் இயேசுகிறிஸ்து (3:11).[3] சபையைக் கட்டிடம் போல் கட்டியெழுப்ப பயன்படுத்தப் படும் பொருட்கள் சபையின் அங்கத்தினர்கள்.[4] ஆறுவகை பொருட்கள் ("பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கற்கள்"), மற்ற மூன்று ("மரம், புல், வைக்கோல்") பற்றி குறிப்பிடுகிறார். சாதாரணமானவைகள். இவைகள் அனைத்தும் அக்கினியினால் பரிசோதிக்கப்படும் (3:12, 13). விலையேறப் பெற்றவைகள் அக்கினியால் பாதிக்கப்படாது, மற்றவைகளோ வெந்து போகும் என்று பவுல் அர்த்தப்படுத்தினார்.

3:13ல் குறிப்பிடப்படுகிற அக்கினியை நியாயத்தீர்ப்பு நாளுக்கோ நரக அக்கினிக்கோ ஒப்பிடக் கூடாது.[5] மாறாக, முதல் நூற்றாண்டில் பொதுவாக இருந்த பயங்கரமான சோதனைகளைக் குறித்து பவுல் பேசுகிறார். சில வேலைகளில் உபத்திரவங்கள் கிறிஸ்தவர்களைப் பலப்படுத்தியது; மற்ற வேளைகளில் அது சகோதரர்களை விழப் பண்ணியது. வித்தியாசத்தை ஏற்படுத்துவது எது? கிறிஸ்தவர்கள் எதினால் உருவாக்கப் பட்டிருக்கிறார்கள் -

பொன், வெள்ளி, விலையேறப்பட்டக்கல் போன்றவற்றின் தாங்கும் தன்மையா? அல்லது மரம், புல், வைக்கோல் போன்ற பலவீனமான தன்மையா?

ஒரு நபர் கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தும் பொருட்களின் அக்கினி பரிசோதனைக்குப் பின்பு மீதமுள்ளதைப் பொருத்து அவனவனுடைய வேலைக்கான கூலியைப் பெறுவான் (3:14). அவர் கட்டின கட்டிடம் அழிந்து போனால் - அவனுடைய வேலைப்பாடு நஷ்டப்பட்டால் - அவன் நஷ்டமடைவான், ஆகிலும் அவன் இரட்சிக்கப்படுவான் (3:15). 3:14, 15ல் பேசப்படும் "கூலி" "நஷ்டம்" என்பவை இந்த வாழ்க்கைக்குரியவைகளைப் பற்றிப் பேசுகிறது. தான் மத மாற்றிய மக்கள் சோதனையிலும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்தால் அந்தப் பிரசங்கியார் மிகவும் அதிகமான திருப்தியை உணருவார். அவர் போதித்த ஜனங்கள் மறுபடியும் உலகத்துக்கே திரும்புவதையும் தனது கடின உழைப்பு பிரயோஜனமற்றுப் போனதையும் கண்ணுறும்போது அவர் மிகப் பெரிய நஷ்டமடைவார். ஆனால் தான் செய்த வேலை தோல்வியடைந்தாலும், தமது சுய இரட்சிப்பை இம்மையிலும் மறுமையிலும் இழந்துவிடமாட்டார். நம்முடைய விசுவாசம் நாம் போதித்து ஞானஸ்நானப் படுத்திய மக்களின் நேர்மையில் இல்லை.

பிரசங்கியாருக்கு ஏற்படும் பிரதிபலன் அல்லது அவர் மனமாற்றி மக்களால் வரும் நஷ்டம் ஆகிய வார்த்தைகளை பவுல் பின்வருமாறு வலியுறுத்துகிறார்: "அவனவன் தான் இந்த விதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக் கடவன்" (3:10)! முதலாவதாக, நாம் ஞானமுள்ளவர்களாய்க் கட்டுவோமானால், பவுலைப் போல நாமும் "புத்தியுள்ள [திறமைமிகுந்த] சிற்பாசாரிகளாய் [கட்டிடம் கட்டுவோராய்]" காணப்படுவோம். இரண்டாவதாக, நமது பிரயாசங்கள் ஒன்றுமில்லாமற் போய், நஷ்டத்தைக் காணாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போம். தேவன் நமக்குக் கொடுத்துள்ள நல்லபுத்தியை பயன்படுத்தி அவரது பணியை சிறப்பாய் செய்வோமாக.

பவுலும் மற்ற பிரசங்கியார்களும் கட்டியெழுப்ப பிரயாசப்படும் கட்டிடத்தின் தன்மையையும் அடையாளப்படுத்தினார்: தேவனுடைய ஆலயம் (3:16). கட்டப்பட்டதை - தேவனுடைய ஆலயத்தை - ஒருவர் கெடுத்தால் தேவன் அவரை கெடுப்பார் (3:17). "தேவனுடைய ஆலயமே" சபை (எபேசியர் 2:21, 22 - ஐக் காண்க).[6] பவுல் சபையில் பிரிவினைகளை ஏற்படுத்துகிறவர்கள் சபையை அழிக்கிறார்கள், அதற்கு பதிலாக தேவன் அவர்களை அழிப்பார்.

இந்தக் கணக்கீடு கொரிந்துவிலிருந்த பிரசங்கியார்களிடம் சபையார் கொண்டிருந்த அதிகப்படியான விசுவாசமாகிய பிரச்சனையைத் தீர்க்க எவ்வகையில் உதவியாயிருக்கும்? முதல் உருவகமாகப் பயன்படுத்தப்பட்ட சபையை பண்ணைக்கு ஒப்பிட்டது போலவே, பிரசங்கியார்களை முக்கியப்படுத்திப் பார்க்காமல், விளையச் செய்கிற கர்த்தரை முக்கியப் படுத்த சொல்லப் பட்டது போலவே - இங்கே சபையை ஒரு மாளிகையாகவும் - பிரசங்கியாரை மையப்படுத்திப் பார்க்காமல் கட்டப்பட்ட கட்டிடமாகிய (சபையை) மையப்படுத்தி அதன் மீது ஒளி வீசும்படி இந்த ஒப்பீடும் கூறப்பட்டது: அதாவது சபையைக் குறித்தும் அதன் ஒவ்வொரு தனி அங்கத்தினர்களையும் கட்டிடமாக கூறப்பட்டது. தேவன் வாசம் பண்ணும் ஆலயம் சபைதானே ஒழிய, பிரசங்கியார்களல்ல! எனவே சபை அங்கத்தினர்கள் தான் பிரசங்கியார்களுக்கு அளிக்கப் போகிற கூலியையோ அல்லது நஷ்டத்தையோ தீர்மானிக்கிறார்கள்

எனவே, *கொரிந்து சபையார் மாளிகை கட்டுவதற்கு காரணமாயிருந்த பிரசங்கியார்களைக் காட்டிலும் அதிகமாக, கட்டிடமாக (மாளிகையாக) சபையாக,* தேவனுடைய ஆலயமாக மதிக்கப் படுகிறார்கள்.

பிரச்சனைக்கானத் தீர்வு (2):
ஞானத்தைப் பற்றிய சரியான விளக்கம்

அடுத்து, பவுல் தனது நிருபத்தில் அடிக்கடி குறிப்பிடுகிற - உலகத்துக்குரிய ஞானம் தேவனுக்கு முன்பாக "பைத்தியமாய்" இருக்கிறது என்பதை மறுபடியும் போதிக்கிறார் (3:18-20).

மனிதனுடைய ஞானம் தேவனுக்கு பைத்தியமாய்த் தோன்றுகிறது, மற்றும் தேவனுடைய ஞானமே மனிதனுக்கு பைத்தியமாய் இருக்கிறது.[7] ஆதலால் ஒருவர் உண்மையிலேயே (தேவனுடைய பார்வையில்) ஞானியானால் (மனிதனுடைய பார்வையில்) அவர் பைத்தியமாய்க் காணப்படத் தான் வேண்டும், பைத்தியமாய் தோன்றுகிற சிலுவையைப் பற்றிய உபதேசத்தைஅவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார் (1 கொரிந்தியர் 1:21).

இந்த கருத்து பிரசங்கியார்களிடம் கொண்டுள்ள மித மிஞ்சிய சபையார் விசுவாசத்திற்கு இரண்டாவது ஆலோசனையாகச் சொல்லப்படுகிறது. கொரிந்தியர்கள் உண்மையான ஞானத்தை புரிந்து கொள்வார்களாகில், பிரசங்கியார்களின் சாதுரியத்தையும் ஞானத்தையும் அளவீடுகளாகக்கொண்டு ஒப்பிடுவதை விட்டு விடுவார்கள். இந்த அளவீடு கிரேக்க - ரோம உலகில் ஏற்றுக் கொள்ளப் பட்டது; ஆனால் கிறிஸ்தவர்கள் பவுலையும், அப்பொல்லோவையும், கேபாவையும், மற்றவர்களையும் தேவனுடைய செய்தியாளர்கள் என்று மட்டும் அறிய வேண்டியவர்களாயிருந்தனர்.

பிரச்சனைக்கான நிவாரணம் (3):
கிறிஸ்தவர்களுக்கு உண்டாயிருந்த உடமைகளைக் குறித்த பாராட்டு

பிரச்னைக்கான மூன்றாவது நிவாரணம் 3:21-23ல் காணப்படுகிறது. பிரசங்கியார்களை சபையார் பின்பற்றி நடப்பதைக் குறித்த பிரசங்கத்தின் நிறைவாக பவுல், சொல்லுகிறதாவது, "இப்படியிருக்க ஒருவனும் மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே" (3:21). என்று கூறி தனது கருத்தை முடிவுக்கு கொண்டு வருகிறார், கிறிஸ்தவர்கள் ஏன் மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டக் கூடாது? "ஏனெனில் எல்லாம் உங்களுடையதே" - பவுலும் அப்பொல்லோவும், கேபாவும் கூட இதிலே சில திறமையான பிரசங்கியார்கள் தன்னைப் பின்பற்றி வருபவர்களை பிரித்து கொண்டு சென்றது, அநேகமாக எல்லா சபையின் பெரிய பிளவுகள் ஏற்படக் காரணமாக இருந்தது. உட்பட்டவர்கள் எனும் பொருளில் கூறுகிறார் (3:22). அந்த சகோதரர்கள் "நான் பவுலை அல்லது அப்பொல்லோவை அல்லது கேபாவைச் சேர்ந்தவனென்று சொன்னதன் விளைவாக இப்படிச் சொல்லப் பட்டது. அதற்கு மறுமொழியாக பவுல், "நீங்கள் பவுலையோ, அப்பொல்லோவையோ, கேபாவையோச் சேர்ந்தவர்களல்ல. மாறாக அவர்கள் உங்களுடையவர்கள்!"[8] மனுஷரைக் குறித்து நீங்கள் மேன்மை பாராட்டும் போது, நீங்கள் உங்களுடைய சொந்த உரிமைகளை உண்மையில்விட்டுக் கொடுக்கிறீர்கள், உங்கள் உடமைகளையே நீங்கள் பாராட்டுகிறீர்கள்.

கொரிந்து சபையார் "எல்லாம் அவர்களுடையது" என்று புரிந்து கொள்ள வேண்டியவர்களாயிருந்தனர் (3:21) என்பது தேவன் சபையின் அனுகூலத்துக்காக எதையும், எல்லாவற்றையும் பயன்படுத்தக் கூடும் என்ற பொருளில் கூறப்பட்டது.[9] எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

அப்படி என்றால் பிரசங்கியார்களைப் பின்பற்றுவதன் கருத்து என்ன? கொரிந்தியர்கள் தனிப்பட்ட பிரசங்கியார்களை பின்பற்ற வேண்டிய அவசியமில்லை ஏனெனில் பிரசங்கியார்கள் தேவனுடைய பார்வையின் கீழ் இருப்பதால், அவர்கள் சார்பாக அவரே எல்லாவற்றையும் செயல்படுத்துகிறார். இதனிமித்தம் எந்த பிரசங்கியார் சாதனை புரிந்தாலும் மகிழ்ச்சி தெரிவிக்க வேண்டுமேயல்லாது தனக்கு பிடித்தமான பிரசங்கியாரை மட்டும் செய்யும் செயலுக்காக சந்தோஷப் படலாகாது, அவர்கள் பவுலை விரும்பினாலும், அப்பொல்லோவின் ஊழியத்தாலும் அவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறார்கள். எல்லா பிரசங்கியார்களும் அனைவருக்கும் உடையவர்களானபடியால், அவர்கள் எந்த தனிப்பட்ட பிரசங்கியாரையும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை!

இன்றைய பிரச்சனை

பிரசங்கியாரிடம் கொண்டுள்ள மிகையான நம்பிக்கை விசுவாசம் இன்றும் பிரச்சனைக்குறியதா? சில திறமையான பிரசங்கியார்கள் தன்னைப் பின்பற்றி வருபவர்களை பிரித்து கொண்டு சென்றது, அநேகமாக எல்லா சபையின் பெரிய பிளவுகள் ஏற்படக் காரணமாக இருந்தது.

நிலைத்திருக்கும் பிரச்சனை

பிரிவு (நாமகரணக்) சபைகளும், உபதேச முறைகளும் பெரிய அளவில் எழும்ப தனிப் பட்டவர்களின் செல்வாக்கே காரணமாயிருந்துள்ளன. ஜனங்கள் மார்டின் லூத்தரைப் பின்பற்றி லுத்தரன் கூட்டமாக மாறினர், அல்லது ஜான் கால்வினை பின்பற்றி கால்வின் பிரிவுகளாயினர். இன்றைய மார்க்க உலகிலும் பிரசித்தி பெற்ற பிரசங்கியார்களினால் ஜனங்கள் அவரைச் சேர்ந்த கூட்டங்களாக போய்க் கொண்டுள்ளனர். கர்த்தருடைய சபையும் இந்த பிரச்சனையிலிருந்து தப்பவில்லை. கிறிஸ்தவர்களில் சிலர் ஒருவரைப் பின்பற்றவும், சிலர் மற்றொருவரை பின்பற்றியும் சென்று பிரிவினையை ஏற்படுத்தும் மனோபாவத்தை எப்பொழுதும் உடையவர்களாக இருக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட எண்ணங்களால் உள்ளூர் சபைகள் இரண்டு துண்டுகளாக பிளக்கப் பட்டுள்ளன. உதாரணமாக, பிரசங்கியார் பணியிலிருந்து விலகிப் போகும்படி மூப்பர்கள் தீர்மானிக்கிறார்கள், எனவே அவர் தனது ஊழிய பணியை ராஜினாமா செய்யச் சொல்லுகிறார்கள். அவர் அமைதியாக போக மறுத்தால், அவரைப் பின் பற்றிப்போவோர் அவருடைய காரியத்துக்காக ஒன்று சேர்ந்து கொள்வர். இதன் விளைவாக சபையானது பிளவுபடும்! கிறிஸ்தவர்களின் எந்தச் சண்டையிலும் ஜெயிப்பது சாத்தான் மட்டுமே!

இன்றுள்ள நிவாரணம்

மிகையான நம்பிக்கை/விசுவாசம் பிரசங்கியார்களிடம் கொண்டிப்பதால் பிரிவினைப் பிரச்சனை இன்றைக்கும் இருக்கிறது. அதைக் குறித்து என்ன செய்யலாம்? 1 கொரிந்தியர் 3ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பிரசங்கத்தில்

இருந்து தொடங்கலாம்.

1. ஆவிக்குரியவர்களாய் இருக்க வேண்டியவர்கள் மாமிச எண்ணமுள்ளவர்களாகி, பிரசங்கியார் மீது மிகுந்த நம்பிக்கை/விசுவாசம் கொண்டிருப்பது வளர்ச்சியின்மையின் அறிகுறி. நாம் வளர்ந்து ஆவிக்குரிய முதிர்வை எட்ட முயற்சிக்க வேண்டும்.

2. சபையின் வளர்ச்சியை பிரசங்கியார் உறுவாக்குவதில்லை; தேவனே விளையச் செய்கிறார் மற்றும் மகிமை அவருக்கே! பிரசங்கியார் திராட்சைத் தோட்டத்து வேலையாளாயும், மாளிகையாகிய தேவனுடைய ஆலயத்தைக் கட்டுபவர்களாயும் மற்றும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பவராகவும் இருக்கின்றார். அவர் நடுகிறார், நீர் பாய்ச்சுகிறார், கட்டுகிறார், மற்றும் பிரசங்கிக்கிறார்; பிறகு அறுவடை வருகிறது. பிரசங்கியார் பணியில் நாம் மகிழ்ந்து களி கூரலாம், அவரது திறமையை கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்துங்கள், தேவனுக்கே மகிமையை ஏறெடுங்கள்.

3. நமக்குப் பிரியமான பிரசங்கியாரைவிட மற்ற பிரசங்கியார்கள் அதிகமாக கவனிக்கப்படும்போது, "பொறாமையும் பேதங்களும்" (3:3) காட்டாமல், ஒவ்வொரு பிரசங்கியாரின் ஊழியத்திற்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாய் இருப்போம். ஒரு கருத்தில் அவர்கள் எல்லாருமே நமக்குரியவர்களே. எந்த ஒரு பிரசங்கியாராலும், எந்த ஒரு நல்ல காரியமும் அடையப்பட்டால், அது நமக்கு பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறது, மற்றும் நாம் அதற்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்!

முடிவுரை

பிரசங்கியாருக்கு மித மிஞ்சிய விசுவாசத்தை/நம்பிக்கையை காட்டுகிற பிரச்சனைக்கு, நாம் யாரை பின்பற்றுகிறோம் என்பதை நினைவுபடுத்திக் கொள்வதையும் உள்ளடக்குகிறது. நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள்! தேவ செய்தியாளர்கள் கிறிஸ்துவை அறிந்து கொள்ளச் செய்யும் செய்தியை தேவனுக்கு நாம் அறியும்போது, நாம் அருகில் சமீபிக்கிறோம், எனவே அவர்களுக்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவினிடத்தில் கொண்டிருக்கும் கவனத்தை பிரசங்கியார்கள் தங்கள் பக்கம் திருப்ப அனுமதிக்கக் கூடாது. அப்படிச் செய்வோமானால், மனக் கவலையும், பிரிவினையும் ஆபத்துக்களுமே நமக்காக காத்திருக்கும். பவுலையோ, அப்பொல்லோவையோ கேபாவையோ அல்லது வேறு எந்த மனுஷரையுமோ நாம் பின்பற்றாமல் - கிறிஸ்துவை நாம் பின்பற்றுவோம்!

குறிப்புகள்

[1]பவுலின் ஊழியம் மற்றும் நன்கொடை. (ரோமர் 15:21 காணவும்.) [2]மாளிகையை "கட்டும் வேலையாட்கள்" எனும் சொல்லானது இந்த வசனப்பகுதியில் பவுல், அப்பொல்லோ மற்றும் சபையைக் கட்ட உதவும் எந்த கிறிஸ்தவனையும் உட்படுத்திப் பேசப்படுகிற பிரசங்கியார்களையும் போதகர்களையும் குறிக்கும். [3]மத்தேயு 16:13-19ஐ ஒப்பிடுவோமாகில், கிறிஸ்துவிலுள்ள தனது விசுவாசத்தை பேதுரு செய்த அறிக்கையே சபையின் அஸ்திபாரம் என்று சொல்லப் படுகிறது. "கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும்," பவுல் பிரசங்கித்ததின் மூலம் கொரிந்துவில்

அஸ்திபாரமிட்டார். இந்த அஸ்திபாரம் கிறிஸ்துவையும் சபையையும் குறித்த எல்லா சரியான உபதேசக் கோட்பாடுகளை உள்ளடக்கியது. [4]*கட்டிடம்கட்ட தேவைப்படும் பலவிதமான பொருள்கள் வித்தியாசமான வகைகளான சபை அங்கத்தினர்களைக் குறித்த விளக்கமாகும்.* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 98; James Burton Coffman, *Commentary on 1 and 2 Corinthians* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977], 47-48.) *சிலர் இந்தப் பொருட்களைக் குறித்து முரண்பாடான கருத்துக்களைச் சொல்லி, உபதேசங்களிலும் கிறிஸ்தவர்கள் ஜாக்கிரதையாக கட்ட வேண்டிய அவசியத்தை எளிமையான பொருளில் விளக்கமளிப்பர்.* [5]*"நாளானது" எனும் பதம் (3:13), இரண்டாம் வருகையின் நாளைக் குறிப்பதாக பெரும்பாலான திருமறை விளக்கவுரையாளர்கள் நம்புகிறார்கள் - அதாவது, கிறிஸ்து மறுபடியும் வருகிற நாள், நியாயத் தீர்ப்பின் நாள்* (Leon Morris, *The First Epistle of Paul to the Corinthians,* The Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973], 68). *எப்படியிருப்பினும், 3:14, 15ல் சொல்லப்பட்டுள்ள "கூலி" "நஷ்டம்" ஆகிய வார்த்தைகளைப் பற்றி சொல்லப்பட்டுள்ள விளக்கமே அவற்றைப் புரிந்துகொள்ள போதுமானது. மேலும், "அக்கினி" யானது பரீட்சைக்கு அல்லது சோதனைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 பேதுரு 1:7ல்). "நாள்" என்பது "நியாயத்தீர்ப்பு நாளையும்," குறிப்பதாக இருந்தால், "கூலி," "நஷ்டம்" ஆகிய வார்த்தைகள் விளக்கம் அளிக்கப்பட முடியாதவைகளாகவோ அல்லது பரலோகத்தில் அளிக்கப்படும் பிரதிபலன்களில் வித்தியாசங்கள் காணப்படுவது போலாகும்.* [6]*3:16, 17ல் சொல்லப்பட்டுள்ள "தேவாலயம்" எனும் பதம், கிறிஸ்தவர்களின் மாம்சப் பிரகாரமான சரீரத்தை குறிப்பதாக பெதுவான விளக்கம் அளிக்கப்பட்டு வந்தாலும், பிரதானமாக அதைக் குறிப்பதில்லை.* [7]*தனது கருத்தை நிரூபிக்க பவுல் இரண்டு பழைய ஏற்பாட்டு வசனப் பகுதிகளை மேற்கோளிட்டு காட்டுகிறார். வசனம் 19ல் யோபு 5:12, 13 லிருந்தும்; வசனம் 20ல் சங்கீதம் 94:11 லிருந்தும் எடுத்துக் காட்டுகிறார்.* [8]William Barclay, *The Letters to the Corinthians,* The Daily Study Bible, 2d. ed. (Edinburgh: St. Andrews Press, 1954; reprint, Philadelphia: Westminster Press, 1956), 39. [9]*எல்லாமும் "தேவ நோக்கங்களுக்கென்றும் அவருடைய மீட்கப்பட்ட மக்களுடன் சம்பந்தப்பட்ட திட்டங்கள் என்றும் ... எல்லாம் விசுவாசிகளின் பிரயோஜனத்திற்காக, எல்லாம் அவர்களுடையது என்ற வகையில் நோக்கப்பட வேண்டும்"* (W. Harold Mare, "1 Corinthians," in Frank E. Gaebelein, ed., *The Expositor's Bible Commentary*, vol. 10, *Romans-Galatians* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976], 209) *ரோமர்* 8:38, 39 *ஐ ஒப்பிடவும்.*

4

ஊழியம் செய்யும் இருதயம் படைத்தோர் தேவையுடைய ஒரு சபை

(1 கொரிந்தியர் 4:1–21)

1 கொரிந்தியர் 4-ம் அதிகாரத்தில் விவாதிக்கும் பவுல், "எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்று ... எண்ணிக் கொள்ளக் கடவன்" என்று சொல்லி ஆரம்பித்தார். உள்ளூர் சபைகளில் பிரச்சனைகள் எழும்போது, ஏறத்தாழ எப்பொழுதுமே சபையில் உள்ள மக்கள் தங்களையே முதல் நபராகவும் இராஜ்யத்திலே முதன்மையானவர் எனும் அங்கீகாரத்தைப் பெற முற்படுவதாலும் தான். மன வெறுப்புகளுக்கு இடையே உண்டாகும் உட்பூசல்களை, வித்தியாசப்பட்ட உபதேசக் கோட்பாடுகள் என்று முன் வைத்தாலும், இந்த வித்தியாசங்களின் பின்னணியில் முக்கியத்துவம் பெற வேண்டும் என்ற ஆசையே ஏறத்தாழ எப்பொழுதும் காரணமாக இருக்கிறது.

உதாரணமாக, பிரசங்கியாராகிய என்னுடைய நண்பரும் நானும் ஒரு முறை பிளவுபட்ட ஒரு சிறிய சபையை ஒற்றுமைப்படுத்தும் பொருட்டு, இரண்டு மனுஷர்களை ஒப்புரவாக்க, உட்கார்ந்து பேசி முயற்சித்துக் கொண்டிருந்தோம். இந்த இரண்டு மனுஷர்களும், சபையிலே எதிரெதிரே எதிர்ப்புத் தெரிவிக்கும் இரண்டு கூட்டத்துக்கு முன்னோடிகள். பிரச்சனை என்ன? வேதாகம வகுப்புகளில் குறிப்பிட்ட ஒரு குழந்தைகளின் பாடலைப் பாடலாமா, கூடாதா என்பதுதான். இந்த வழக்கு நிந்திக்கப்படத் தக்கதாக காணப்பட்டது. ஆயினும், அந்த இரண்டு நபர்களின் உண்மையான பிரச்சனை அந்தக் குழந்தைகளின் பாடல்கள் அல்ல. மாறாக "இங்கு அதிகாரம் கொண்டிருப்பவர் யார்?" என்பது தான் - இன்னொரு வார்த்தையில் சொன்னால், "இந்த சபை குழுமத்திற்கு யார் தலைவன் என்பது தான்."

இதே பிரச்சனையை தம்முடைய சீஷர்களில் யார் முதன்மையானவன் எனும் போட்டி இருப்பதை இயேசு எதிர் கொண்டார். யாக்கோபும், யோவானும் இராஜ்யத்திலே முதன்மையான இடத்தைத் தேடினார்கள், அது மற்ற சீஷர்களுக்குள் விரக்தியை ஏற்படுத்தியது. (அவர்களுக்கும் "முதன்மை ஸ்தானம்" வேண்டும் என கேட்டார்கள்.) இயேசு,

> *. . . உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்*

கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும் அநேகரை மீட்கும் "பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்றார் (10:43-45).

கொரிந்துவிலிருந்த சபை பிரிவினையுள்ளதாயிருந்தது, அதின் அங்கத்தினர்கள் மனுஷர்களை பின்பற்றுவோராக இருந்தனர். ஆயினும் அவர்களுடைய பிரச்சனைக்கான அடிப்படை கருத்து வேறுபாடுகளே அல்ல, அதன் பின்னணியில் மேட்டிமையும் இறுமாப்பும்[1] இருந்தது - அவர்களின் இறுமாப்பை 1 கொரிந்தியரில், இந்த அதிகாரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள மூன்றுமுறை உட்பட, ஆறுமுறை பயன்படுத்தப் பட்டுள்ளது (4:6, 18, 19; 5:2; 8:1; 13:4 யும் காண்க).

அவர்களின் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது? பிரசங்கியார்களின் கடமையை புரிந்து கொள்வதில் குறைபாடுள்ளவர்களல்ல. (அதிகாரம் 3ல் விளக்கப்பட்டபடி), ஆனால் முறையான எண்ணங்களிலே அவர்கள் குறையுள்ளவர்களாயிருந்தனர். அவர்கள் எஜமானர்களாயிருப்பதை விட ஊழியர்களாயிருக்க வழி தேடியிருக்க வேண்டும். இந்தத் தேவையை புரிந்து கொண்ட பவுல், 1 கொரிந்தியர் 4ல் ஊழியக்காரனுக்கு இருக்க வேண்டிய இருதயத்தைக் குறித்து விளக்கமளிக்கிறார். இன்றைய உள்ளூர் சபைகள் தங்களது பிரச்சனைகளைத் தீர்க்க விரும்பினால், அவர்கள் எப்படி ஊழியக்காரர்களாயிருப்பது என்பதை ஜாக்கிரதையாக பரிசீலித்தால் நன்கு செயல்படலாம்.

ஒரு ஊழியக்காரனுடைய இருதயம் எப்படியிருக்க வேண்டும்? அதிகாரம் 4ல் ஒரு ஊழியக்காரனின் கடமை, ஆத்துமா மற்றும் குறிக்கோள்களை முன் வைக்கிறார்.

உக்கிராணத்துவம்:
ஊழியக்காரனின் கடமை

அதிகாரம் 4ல் ஒரு ஊழியக்காரனின் கடமை - பூமியிலே அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பு - உக்கிராணத்துவம் என்று நாம் காண்கிறோம் (4:1-5).

பவுல் தன்னையும் அப்பொல்லோவையும் "கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள்" என்று விளக்கமளித்தார். மேலும் தொடர்ந்து, "தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரர்" என்றும் குறிப்பிட்டார் (4:1).

ஒரு உக்கிராணக்காரனின் பொறுப்பு

உக்கிராணக்காரன் என்பதன் பொருள் என்ன?

(1) ஒரு உக்கிராணக்காரன் என்பவன் மற்றவர்களுக்குரிய சிலவற்றின் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டவனாக இருக்கிறான். அவனது பொறுப்பில் வைத்திருப்பவைகளெல்லாம் உண்மையில் அவனுடையதல்ல. பவுலும் மற்றவர்களும் தேவனுடைய இரகசியங்களான (மஸ்டேரியன்) - ஜனங்களின் ஆத்துமாக்களை இரட்சிக்கும் தேவனுடைய திட்டத்தை செயல்படுத்தும் உக்கிராணத்துவத்தைப் பெற்றவர்கள். பவுல் பயன்படுத்தும் இரகசியங்கள் எனும் பதம் மொழிபெயர்க்கப்பட்டபடி (வசனம் 1), மனிதனை இரட்சிக்க

கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதைக் குறிக்கிறது. இது யுகங்களினூடே தேவனுடைய பெரிதான திட்டம், "காலம் நிறைவேறின போது நிறைவேறியது."[2] அவரால் ஏவப்பட்ட பேச்சாளர்கள் இந்தத் திட்டத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் பொறுப்பைப் பெற்றிருந்தார்கள்.

(2) தனக்கு கொடுக்கப் பட்டது அதன் உரிமையாளருக்கு பிரயோஜனத்தைக் கொடுக்கத்தக்க வகையில் ஒரு உக்கிராணக்காரன் அதை பயன்படுத்த வேண்டும். அவர் தனக்காக வேலை செய்வதில்லை, தனது எஜமானனுக்காக வேலை செய்கிறார். பவுலும் அப்பொல்லோவும் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருவதற்காக, தேவவசனத்தை அறிவிக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

(3) ஒரு உக்கிராணக்காரன் நம்பிக்கைக்குப் பாத்திரனாக இருக்க வேண்டும் (4:2). அதாவது, தன்னை நம்பி ஒப்படைக்க பட்டவைகள் தன்னுடைய எஜமானனுக்கு நன்மை பயப்பவைகளாக இருக்க பயன்படுத்த வேண்டியதை எதிர்பார்க்கிறது. உக்கிராணக்காரனின் வேலைகளில் அளவீடு உக்கிராணக்காரனின் சொந்தப் பிரயாசங்கள், சுய நன்மைகளுக்காக அல்ல, அவனுடைய வேலையின் நன்மைகள் அவனுடைய எஜமானனுக்கே போய்ச் சேர்கிறது.

(4) ஒரு உக்கிராணக்காரன் அவனுடைய உண்மைத்தன்மையை கணக்கொப்புவிக்க கேட்கப் படுவான்.

ஒரு உக்கிராணக்காரனின் மதிப்பீடு

உக்கிராணக்காரன் நம்பிக்கைக்கு பாத்திரவானா இல்லையா என்று யார் தீர்மானிக்க வேண்டும்? பவுல் பின்வரும் கருத்துக்களைக் குறிப்பிடுகிறார்:

மற்றவர்கள் நம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரவான்களா என்ற தகுதியை நியாயந்தீர்க்கமாட்டார்கள். பவுல், "ஆகிலும் நான் உங்களாலேயாவது, மனுஷருடைய நியாய நாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்பக் காரியமாயிருக்கிறது" என்றார் (4:3அ). மற்றவர்களின் தீர்ப்பு பவுலுக்கு எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்த வில்லை. எப்படியாயினும், இந்த வார்த்தைகளை பவுல் கூட்டிச் சொல்வதால், கொரிந்து சபையில் இருந்த சிலர் நியாயந்தீர்த்து, அவரை நம்பிக்கைக்குப் பாத்திரமானவரல்ல என்று குற்றப் படுத்துமளவுக்கு எதிரிகளும் குறை சொல்பவர்களும் இருந்துள்ளனர் என்று நம்மை நம்ப வைக்கிறது. இதற்கு பவுலின் மறு மொழி, அவர்கள் என்னைக் குறித்து என்ன நினைக்கிறார்கள், என்ன சொல்லுகிறார்கள் என்பது "எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை; அவர்கள் எனக்கு நியாயாதிபதிகளல்ல," என்கிறார்.

நமது நம்பிக்கைக்கு பாத்திரவான்களின் தகுதியைக் குறித்து நம்முடைய சுயத்தீர்ப்பும் சரியானதல்ல. "நானும்" என்று ஆரம்பித்து "என்னைக் குறித்துத் தீர்ப்பு சொல்லுகிறதில்லை," என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; அதினாலே நான் நீதிமானாகிறதில்லை என்றார் அவர் (4:3ஆ, 4அ). நல் மனசாட்சியை உடையவராக ஒருவர் இருப்பது நல்லதுதான், ஆனால் அது தேவனை மாத்திரமே பிரியப்படுத்துவதற்கான உத்திரவாதமல்ல.

ஏதோ ஒரு நாளில் கணக்கொப்புவிக்கும்படி தேவன் நம்மை அழைப்பார் என்பது தான் முக்கியமான விஷயம் (4:4, 5). நமது உக்கிராணத்துவத்தைக் குறித்து உண்மையான தீர்ப்பு செய்வது மற்றவர்களோ, நமக்கு நாமோ அல்ல,

ஆனால் தேவன் தான். அவரே முழுமையான அதிகாரம் பெற்ற நியாயாதிபதி- அவருக்கே நாம் நமது உக்கிராணத்துவத்துக்காக கணக்கு ஒப்புவிக்க வேணடும். கர்த்தர் மறுபடியும் வரும் பொழுது அவர் நியாயத்தீர்ப்பு செய்வார். அவருக்கு முன்பாக எதுவும் மறைந்திருக்க மாட்டாது. நமது எண்ணங்களையெல்லாம் அவர் அறிந்திருக்கிற படியால், மனுஷருடைய இருதயங்களையும் அவர் நியாயம் விசாரிப்பார்.

தேவனுடைய ஊழியக்காரர்களாக, நம்மை நாம் உக்கிராணக்காரர்களாகப் பார்க்க வேண்டுமே யொழிய, நம்முடைய கட்டுப் பாட்டில் இருப்பவை எல்லாவற்றிற்கும், நாமே எஜமானர்களல்ல: நம்முடைய நேரம், தாலந்துகள், நம்முடைய பணம் ஆகிய அனைத்துக்கும் உக்கிராணக்காரர்கள் மட்டுமே. தமது மகிமைக் கென்று தேவன் நம்மிடம் ஒப்படைத்துள்ளவைகளையெல்லாம் நாம் பயன்படுத்தும்படி தேடுவது தான் பலனளிக்கும். ஒரு உக்கிராணக்காரனாக உங்களுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட கடமையில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிருக்கிறீர்களா?

தாழ்மை: ஊழியனின் ஆத்துமா

ஊழியக்காரனின் ஆத்துமா - அவர் ஊழியம் செய்ய தனது கடமையை நிறைவேற்ற உதவும் ஆவி - தாழ்மையானது (4:6-21).

பவுல் தன்னையும் அப்பொல்லோவையும் உதாரணமாகப் பயன்படுத்துகிறார். அவருடைய வாக்குமூலங்கள் அவருக்கும், மற்ற ஒவ்வொருவருக்கும் பயன்படுத்தப் பட்டது. பவுல் "எழுதப்பட்டதற்கு மிஞ்சி [அல்லது அப்பால்] எண்ண வேண்டாம்" என்று கொரிந்தியர்களை எச்சரித்தார் (4:6). "எழுதப்பட்டது" என்பது வழக்கமாக பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டதை மட்டும் பொதுவாகக் குறிப்பிடாமல், தனது நிருபத்தில் எழுதப்பட்ட வசனங்களை குறிப்பாக சுட்டிக்காட்டி அவர்களுடைய கவனத்தை அதற்குத் திருப்புகிறார்.

கொரிந்தியர்கள் பழைய ஏற்பாடு போதிக்கும் ஞானத்யையும், தேவனுடைய ஊழியர்களையும், பெருமைகளையும் புரிந்து கொண்டிருப்பார்களேயானால் அவர்கள் பிரிந்திருக்க மாட்டார்கள் என்பதே இதன் கருத்து. எதிர்பார்க்கும் பிரதிபலனாக அவர்கள் தங்களில் ஒருவருக் கொருவர் எதிராக கொண்டிருக்கும் இறுமாப்பை விட்டு விடுவார்கள். மற்றவர்களை மட்டம் தட்டி, தங்களுடைய பிரியமான பிரசங்கியார்களைக் குறித்தும், தங்களைக் குறித்தும் பெருமையாய் பேசுவதை களைந்து போடுவார்கள்.

வசனங்கள் 7 முதல் 21 வரை கொரிந்து பட்டணத்து பிரச்சனைகளுக்கான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்வது போல் காணப்படுகிறது. இந்த வசனப் பகுதி, கொரிந்துவிலிருந்தவர்கள் மற்றவர்களைக் குறித்து பெருமை பாராட்டுவதோடல்லாமல் அவர்களில் தனிப்பட்ட ஒவ்வொருவரும் அவரவருடைய ஆவிக்குரிய சாதனைகளை மேட்டிமையாய் பேசிக் கொண்டிருந்ததாக யோசனையாகச் சொல்லுகிறது. பவுல் மூன்று புத்திமதிகளை எடுத்துக் கூறி அவர்கள் தங்களிலுள்ள உயர்வு மனப்பான்மையை விட்டு, தாழ்மைப்படும்படி ஊக்கமளிக்கிறார்.

"தேவனை நீ சார்ந்திருப்பதை ஏற்றுக்கொள்" (காண்க 4:7). அவர்கள் கொண்டுள்ள அனைத்துமே தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது

என்பதை நினைவுபடுத்துகிறார். அவர்களின் நற்குணமோ, பெலமோ ஞானமோ எதையும் அவர்களுக்கு கொடுக்கவில்லையாதலால் அவர்கள் பெருமை பாராட்டுவதற்கான முகாந்திரம் எதுவுமில்லை.

"அப்போஸ்தலர்களின் தியாகத்தை பாராட்டுங்கள்" (4:8-13-ஐக் காண்க). தாழ்மையை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக (அவர்கள்) கொரிந்தியர்களில் சிலர் இறுமாப்பையே வெளிப்படுத்தினர். (4:18, 19 ஐயும் காண்க.) பவுல் அவர்கள் தங்களை "நிறைந்தவர்களாக" அவர்களுடைய மேட்டிமைக்கு பழிச் செல்லாக மறு மொழி அளிக்கிறார்.[3] "இராஜாக்களைப் போல" "ஐசுவரியம்" படைத்தவர்களாக தங்களை எண்ணிக்கொண்டார்கள். அவர்களின் சுயபார்வையில், அப்போஸ்தலர்களில்லாமலேயே இந்த நிலையை அடைந்தார்கள் விருப்பக் கூற்றானது அவர்கள் ("எங்களையல்லாமல்" ஆளுகிறீர்கள்; 4:8). பவுலின் வாக்கியக் கூற்றானது அவர்கள் அப்படியொரு நிலையை உண்மையில் அடைந்திருந்தார்கள் - ஆனால் அவர்கள் அப்படி இருப்பதாக பவுல் நம்பவில்லை என்று மறைமுகமாகக் கூறினார்.

பிறகு, அதற்கு முரண்பாடாக, பவுல் அப்போஸ்தலரின் சூழ்நிலையை விளக்கப் படுத்துகிறார்: "மரணத்துக்கு குறிக்கப்பட்டவர்கள்" (4:9). அவர்கள் "பைத்தியக்காரர்," கொரிந்தியர் "புத்திசாலிகள்"; "பலவீனர்," அவர்கள் "பலவான்கள்"; "கனவீனர்," அவர்கள் "கனவான்கள்" (4:10). மேலும் அப்போஸ்தலர்கள் "பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், ... நிர்வாணிகளும், ... குட்டுண்டவர்களும், ... தங்க இடமில்லாதவர்களுமாய்" இருந்தார்கள் (4:11). தங்கள் சொந்த கைகளினால் வேலை செய்து பாடுபட்டார்கள். வையப்பட்டார்கள், துன்பப் பட்டார்கள், தூஷிக்கப் பட்டார்கள், இவர்கள் திரும்பி அவர்களுக்கு நன்மையே செய்தார்கள் (4:12, 13). மெய்யாகவே, கொரிந்தியர்கள் தங்களை "இராஜாக்களாக" எண்ணிக்கொண்டார்கள்; பவுலும் மற்றவர்களும் "உலகத்தின்குப்பையைப் போலவும்" "எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவும்" இருந்தனர் (4:13).

வசனம் 14ல் தொடர்ந்து, சகோதரர்களை வெட்கப்படுத்தும்படி இதைச் சொல்லாமல், புத்தியாகச் சொல்வதாகக் குறிப்பிடுகிறார். பவுலும் மற்றவர்களும் பாடுபடும் அளவுக்கு நல்லவர்களில்லை என்றால், அவர்கள் "கழிவு" களாகத் தங்களைக் கண்டால் கொரிந்தியர்களும் அப்படிப் பட்டவர்களே என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டியவர்கள். ஆதலால், அவர்கள் தங்களைப் பற்றி மேட்டிமையான கண்ணோட்டத்தில் பார்ப்பது சரியல்ல. பவுலைப் போல், அவர்கள் தாழ்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

"உங்களுடைய பெலத்தை புரிந்து கொள்ளுங்கள்" (4:18-21 ஐக் காண்க). இந்த அதிகாரத்தின் நிறைவில், பவுல் மீண்டும் அவர்களுடைய இறுமாப்பை முன்னிறுத்தி, பேச்சிலே பெரிய வாய்களையுடையவர்களாயிருப்பது போல தங்களுடைய உரிமைகளில் இல்லை என்பதைச் சொல்லுகிறார். அவர்களில் சிலருடைய இறுமாப்பைக் குறித்து நேரடியாகவே அவர் பேசுகிறார். அவர்கள் "பேச்சைப் பேச முடியும்" ஆனால் "நடக்கையை நடக்க முடியவில்லை." அவர்கள் தங்களுடைய மேட்டிமை பாராட்டுதலை நிரூபிக்கும்படி சவால் விடுகிறார். "நான் வரும் போது யார் பலவான்" என்று அறிந்து கொள்வேன் என்று குறிப்பிட்டார். "என்ன வேடிக்கை! அவர்களுக்கு உள்ள வரங்கள் என்னவாக இருந்தாலும் சரி, பவுலுடன் அவர்கள் போட்டி போடமுடியவில்லை." ஒரு அப்போஸ்தலனுடன்

போட்டியிட சவால் விடுதல் அவர்களைத் தாழ்மைப்படுத்தியிருக்க வேண்டும்.

இறுதியாக, பவுல், அவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளா விட்டால், அவர்களிடத்திலே அவர் "பிரம்போடு தான்" வரவேண்டும் என்றார். அப்படிச் செய்ய விரும்பவில்லை; அவர்களிடத்தில் சாந்தமுள்ள ஆவியோடு வரவே அவர் விரும்புகிறார் (4:21).[4]

பணிவிடைக்காரர்கள் பெரிய ஆட்களாகத் தங்களை காட்டிக் கொள்ளத் தேடமாட்டார்கள்; மாறாக, அவர்களுக்கு தாழ்மையான (அடக்க) சுபாவம் இருக்கும். அப்படியொரு சுபாவத்தை நாம் எப்படி அடைவது? கொரிந்தியர்களுக்கு பவுல் சொன்னவைகளை நாமும் பின்பற்றி நமக்குள்ளதெல்லாம் தேவனிடத்திலிருந்தே நமக்கு வருகிறது என்று உணர வேண்டும். அப்போஸ்தலர்களின் தியாகத்தை நாம் பாராட்டி, "ஒப்பிட்டுப் பார்ப்போமாகில்" கிறிஸ்துவுக்கு நாம் செய்திருப்பது கொஞ்சமே, பெருமை பாரட்ட எதுவுமில்லை என்பதை நாமே காணக் கூடும். நமது சொந்த பெலன் மற்றும் திறமையின் அளவீட்டை நாம் உணர வேண்டியவர்கள். அதன் பிறகே நாம் தாழ்மையுள்ளவர்களாகி, ஒரு ஊழியக்காரனாக இருக்க வேண்டிய முறைப்படி இருப்போம்.

கிறிஸ்துவைப் பின்பற்றுதல்: ஒரு ஊழியக்காரனின் குறிக்கோள்

ஒரு ஊழியக்காரனின் குறிக்கோள் - இந்த வாழ்க்கையில் அவனுக்கு இருக்க வேண்டிய நோக்கமும் - வாழ்ந்து காட்டி அதினால் மற்றவர்களைப் பார்த்து, "என்னைப் பின்பற்றுங்கள்" என்று சொல்ல முடியும் என்பது அதிகாரம் 4-ன் ஆலோசனை. பவுல் எழுதுகிறார்,

> உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தி யாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் உங்களுக்கு அநேகர் இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன். ஆகையால் என்னைப் பின்பற்றுகிறவராகுங்களென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும் கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப் படுத்துவான் (4:14-17).

பவுல் கொரிந்தியர்களிடம் வைத்துள்ள அன்பினாலும், ஆவிக்குரிய பிள்ளைகள் என்ற அடிப்படையில் இப்படி வேண்டிக் கொள்கிறார் (4:14, 15). பிறகு அவர்களுடைய ஆவிக்குரிய தகப்பனாக, அவர், "என்னைப் பின் பற்றுகிறவராகுங்கள்" (4:16), என்று பூமிக்குரியத் தகப்பன் தனது வழிகாட்டலை பின்பற்றச் சொல்வது போல் சொல்கிறார் மேலும் தீமோத்தேயுவை அவர்களிடத்தில் அனுப்பி கொரிந்தியர்களுக்கு "கிறிஸ்துவுக்குள்ளான தனது நடக்கைகளை" ஞாபகப் படுத்தவும், அவர் "எங்கும் எந்தச் சபையிலும் போதித்து

வருகிற பிரகாரம்" (4:17), அவரை எதிலே பின்பற்றுவது என்பதை அறிந்து கொள்ளவும் சொல்லுகிறார்.

பவுல் தன்னைப் பின்பற்றும்படி சொன்னதால், அவர் தன்னை பூரணப் பட்டவர் என்று சொல்லவில்லை. பின்னதாக, 11:1ல், அவர் கிறிஸ்துவை பின்பற்றுவதால் மற்றவர்களும் பின்பற்றும்படி சிபாரிசு பண்ண முடிந்தது என்பதை தனது வாசகர்கள் அறிந்து கொள்ளச் செய்தார்.

ஒவ்வொரு ஊழியக்காரனுடைய குறிக்கோளும் வாழ்ந்து காட்டி அவனோ அவளோ மற்றவர்களைப் பார்த்து, "என்னைப் பின்பற்றுங்கள்" என்று சொல்ல முடியும்படி இருக்க வேண்டும். சில பிரசங்கியார்களும் பிரசங்கிக்கும் மாணவர்களும் ஒவ்வொருவரும் தங்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பதாக புகார் பண்ணுகிறார்கள். பவுல் இப்படிப்பட்ட புகார் ஒன்று செய்திருப்பார் என்று நான் சந்தேகிக்கிறேன். ஜனங்கள் அவருடைய வாழ்க்கையைக் குறித்த அனைத்து விஷயங்களையும் அறிந்து கொண்டு அவரைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதால் அவர் சந்தோஷம் தான் அடைந்திருக்க வேண்டும். நாம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி வாழ்ந்து இயன்றவரை சிறப்பாக வாழ்வோமானால், மற்றவர்கள் நம்மை கவனித்துப் பார்த்து நம்மை புரிந்து கொள்வதில் நாம் சந்தோஷமடைய வேண்டும். பின்பு நாமும் பவுலைப் போல, "என்னைப் பின்பற்றுங்கள்" என்று சொல்ல முடியும்.

முடிவுரை

உள்ளூர் சபைகளில் பிரச்சனைகள் இருக்கும் போது, அவர்கள் சுய நலமிகளாய் மாற முற்படுகின்றனர். சுய நலம் என்கிற வலையிலிருந்து வெளியே வர ஒரு வழி ஊழியம் செய்தல். மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்யும்படி சகோதரர்கள் கவனம் செலுத்துகையில், பொருள் ரீதியாகவோ ஆவிக்குரிய முறையிலோ உதவ முற்படும் போது, வெறுப்படையச் செய்யும் அநேக பிரச்சனைகள் ஓய்ந்து போகும்.

ஊழியஞ் செய்யும்படி சபை கவனம் செலுத்துகையில், ஒவ்வொரு அங்கத்தினரும் ஊழியக்காரனாக மாற, சவால் எடுத்துக் கொள்ள வேண்டும் - எஜமானனாக அல்ல, முதலாளியாகவும் அல்ல, ஒரு ஊழியக்காரனாக. ஒவ்வொரு அங்கத்தினரும் ஊழியம் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்து, ஊழியக்காரனுக்குரிய இருதயத்தை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவன் தன்னை தேவனுடைய உக்கிராணக்காரனாக நினைத்து, தாழ்மையான ஆவியுடனே ஊழியம் செய்து வாழ்ந்து காட்டினால், அப்பொழுது அவர் மற்றவர்களைப் பார்த்து, "என்னை பின்பற்றுகிறவராகுங்கள்" என்று சொல்லலாம்.

குறிப்புகள்

[1]"இருமாப்பு" எனும் பதம் புதிய அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் பைபிளில் "arrogance" என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ளது (1 கொரிந்தியர் 4:6ல் உதாரணமாக) வினைச் சொல்லின் வடிவமானது (ஃபுசியோ) பயன்படுத்தப் பட்டுள்ளது, இது "puffed up" என்று கிங் ஜேம்ஸ் வெர்ஸன் திருமறையில் கூறப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் ஏழு முறை மட்டும் இது காணப்படுகிறது. [2]Millard J. Berquist, *Studies in First Corinthi-*

ans (Nashville: Convention Press, 1960), 31. [3]*"இந்த நேரத்தில் [வசனம் 7] பவுலின் குற்றச் சாட்டுகள் கடித்துகுதறுவதற்கு ஒப்பான பழிச்சொற்களாக மற்றுமொரு உருவக (வஞ்சகப் புகழ்ச்சியாக)" மொழியில் சாடினார்.* (Carl Holladay, *The First Letter of Paul to the Corinthians,* The Living Word Commentary [Austin, Tex.: Sweet Publishing Co., 1979; reprint, Abilene, Tex.: A.C.U. Press, 1984], 62.) [4]*4:19-21ல் பவுல் அவர்களை மிரட்டுவது அவர் அவர்களுடைய விசுவாசத்தில் தகப்பன் என்பதை நிச்சயிக்கும் படியாக சொல்லப் பட்டது (4:14, 15). அவர்கள் கர்த்தருக்குள் தன்னுடைய பிள்ளைகளானதால், அவர்கள் அவரைப் போல் இருக்கும்படி எதிர்பார்த்தார். அதற்கு மாறாக, சிலர் "இறுமாப்புள்ளவர்களாய் மாறினார்கள்" (4:16); இதற்கு மேலும் அவருடைய போதனையைக் கேட்க அவர்கள் விரும்ப வில்லை. தங்களுடைய தகப்பனுடைய சொல் கேளாமல் புறக்கணிக்கும் கீழ்ப் படிதலில்லாத பிள்ளைகளைப் போன்றிருந்தார்கள். அவர்கள் மாறவில்லையெனில், அவர்களை தண்டிக்க வேண்டியது தான் என்று குறிப்பாய் உணர்த்துகிறார் (4:21)!* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 120-24.)

5

பெரிய அறுவை சிகிச்சைத் தேவைப்படும் ஒரு சபை

(1 கொரிந்தியர் 5:1-13)

பவுல் தேவனுடைய போதனைகளை கொரிந்துப் பட்டணத்து சபைக்கு கொடுத்ததைப் பயன்படுத்தி, சபையில் உள்ள பிரச்சனைகளை எப்படித் தீர்வு காண்பது என்பதைக் குறித்து விவாதிக் கொண்டு வருகிறோம். சில வேளைகளில் சபையிலுள்ள பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அதிகமான போதனையும் அதிகமான புள்ளி விவரத் தகவல்களும் தேவைப் படலாம்; விவாகத்தைக் குறித்த கேள்விக்கு பதில் அளிக்க அதுதான் தேவைப்பட்டது (அதிகாரம் 7). வேறு சூழ்நிலைகளில் கள்ள உபதேசத்தை கடிந்து கொள்ளுதல் தேவைப்படும், உயிர்த்தெழுதலைக் குறித்து பவுல் எதிர் கொண்ட பிரச்சனை அப்படிப்பட்டது (அதிகாரம் 15). அடிக்கடி சிறந்த மனநிலை தேவைப்படும்; மனுஷர்களைப் பின்பற்றி உலக ஞானத்தை மதிப்பிடும் சபை அங்கத்தினர்களின் பிரச்சனைகளுக்கு பவுலின் சிபாரிசு அது தான் (அதிகாரங்கள் 1-4). சபை பிரச்சனைகளைத் தீர்க்க எப்பொழுதுமே தேவைப்படுவது அன்பை வலியுறுத்துவது தான். பவுல் இந்த பெரிய கருத்தை அதிகாரம் 13ல் விளக்கப்படுத்துகிறார்.

சில நேரங்களில் சபையின் பிரச்னைகளை சரி செய்ய கண்டிப்புடன் கூடிய நடவடிக்கைத் தேவைப்படுகிறது. இது தான் 5:1-13ல் காணப்படும் பிரச்சனை பற்றியதாக உள்ளது.

கொரிந்துவிலிருந்த சபை பிரச்சனை மிகுந்த ஒரு சபையாக இருந்தது, மற்றும் அதிகாரம் 5ல் பவுல் அப்படிப்பட்ட பிரச்சனைகளில் ஒன்றை முன் வைத்துப் பேசுகிறார். ஒரு சகோதரன் பாலியல் ரீதியான குற்றமுடையவனாய் வெளிப்படையாகக் காணப்பட்டான்- அஞ்ஞானிகளைக் கூட குற்றப்படுத்தக் கூடாத அளவுக்கு ஒழுக்கக் கேடுகள் மலிந்திருந்தன![1]

இந்த சூழ்நிலையைக் குறித்து என்ன செய்யக் கூடும்? சபை இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை, ஆனால் அவர்கள் கேட்டிருக்க வேண்டிய கேள்வி அது. ஆயினும் பவுல் அதற்கு பதில் கொடுத்தார். கொரிந்துவிலிருந்த சரீரத்தைப் பாதுகாக்க வேண்டும், எனவே, அந்தச் சரீரத்திலிருந்த ஒரு அங்கத்தை வெட்டியெடுக்க வேண்டியதாயிருந்தது. கொரிந்துவிலிருந்த வெளிப்படையானதும் ஒழுக்ககேடானதுமான பிரச்சனைக்குத் தீர்வு (பதில்) "அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப் போடுங்கள்" (5:13) என்றார்.

புதிய ஏற்பாட்டில் 1 கொரிந்தியர் 5-ம் அதிகாரம் தான் சபையின் ஒழுங்குபடுத்தும் சிட்சையை விவாதிக்கும் அதிகாரமாகும். சம்பந்தப் பாடத்தைக் குறித்து தேவன் என்ன சொல்லுகிறார் என்பதை நாம் அறிய வேண்டும். நாம்

அறிந்து கொள்வது மட்டுமல்ல, அவைகளைக் கைக்கொள்ளவும் வேண்டும். சில உள்ளூர் சபைகள் தங்களுடைய பிரச்சனைகளை சரி செய்துகொள்ள என்ன செய்ய வேண்டுமெனில், ஒரு மாத்திரையை விழுங்குவதோ, ஒரு ஊசியைப் போட்டுக் கொள்வதோ, அல்லது மருத்துவமனையில் சேர்ந்து சில நாட்கள் ஓய்வெடுப்பது போன்றதோ அல்ல, பெரிய அறுவைச் சிகிச்சை செய்து - சரீரத்திலிருக்கிற மற்ற அங்கத்தினர்களையும் கெடுத்துக் கொண்டிருக்கிற அந்தப் "பொல்லாதவனை நடுவிலிருந்து" விலக்கிப் போட வேண்டும். ஐக்கியத்திலிருந்து விலக்குதல் என்பது குறித்து வசனம் போதிக்கும் பாடத்தை பரிசீலிப்போம். (மேலும் காண்க 2 தெசலோனிக்கேயர் 3:6; 1 தீமோத்தேயு 6:5; KJV.)

பாதிப்பை ஏற்படுத்தும் தீமையானவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ளுதல்

ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டிய நபரிடமிருந்து அவரது நடத்தையைக் குறித்து நமக்கு என்ன தெரியும் அவர் உச்சக்கட்ட பாவத்தை செய்த குற்றமுடையவராக இருந்தார். ஒரு மனிதன் தன் "தகப்பனாருடைய மனைவியை" வைத்துக் கொண்டிருந்தான் (5:1). இன்னொரு வார்த்தையில் சொன்னால், தன்னுடைய ஒன்றுவிட்ட தாயாருடன் வாழ்ந்து, பாலியல் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பவனின் பாவம் மோசேயின் பிரமாணத்தில் கூடத் தெளிவாக கண்டனம் பண்ணப்பட்ட பாவமாயிருந்தது (லேவியராகமம் 18:8). கொரிந்து போன்ற அக்கிரமம் நிறைந்த பட்டணத்தில்கூட, இந்த பாவம் - சட்டத்தால் தடை விதிக்கப்பட்ட இந்த பாவம் - பொதுவானதல்ல, அருவருப்பானது.[2] எப்படியிருப்பினும் சபையில் சகித்துக் கொள்ளக் கூடாத பாவம் இது மட்டுமே என்ற முடிவுக்கு நாம் வந்துவிடக் கூடாது. இதே அதிகாரத்தில் பவுல், சகோதரர்கள் ஐக்கியத்திலிருந்து விலகிக்கொள்ள வேண்டிய மற்றவைகளைப் பற்றியும் குறிப்பிட்டார் (5:11). இந்த வசனப் பகுதி மட்டுமே இந்தப் பாடத்தைக் குறித்து பேசும் தேவனுடைய ஒரே வசனமல்ல. மற்ற வசனங்களிலும் கூடுதலான பாவங்களைப் பற்றிப் பேசுகின்றன, அவை நாம் ஐக்கியத்தில் சகித்துக் கொள்ளக் கூடாதவைகள். அவைகள், 2 தெசலோனிக்கேயர் 3:6, 14, 15ல், ஒழுங்கற்றுத் திரிகிறவர்களிடத்திலிருந்தும், புதிய ஏற்பாட்டின் உபதேசங்களின்படி வாழ மறுக்கிறவர்களிடத்திலிருந்தும் சகோதரர்கள் ஐக்கியத்தை விலக்கிக் கொள்ளும்படி சகோதரர்களுக்குச் சொல்லப்பட்டது. தொடர்ந்து, மத்தேயு 18:15-17ல் பாவஞ் செய்து மனந்திரும்பாதவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ளச் சொல்லுகிறது. ஆகையால் வெளிப்படையாய் ஒருவரால் நடப்பிக்கப்படும் எந்த வகையான பாவமும் மனந்திரும்பாமல் போனால் அப்படிப்பட்ட சபை அங்கத்தினரிடமிருந்து சபை தனது ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள அதுவே காரணமாகும்.

கள்ளப் போதனைகளைப் பற்றி என்ன? கள்ளப் போதனை செய்வோரிடமிருந்து நாம் ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டுமா? கொரிந்து சபையிலிருந்த சில சகோதரர்கள் உயிர்த்தெழுதல் உண்டு என்பதை விசுவாசிக்க வில்லை, இருந்தும் பவுல் சபைக்கு எழுதி அவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கி கொள்ளச் சொல்லவில்லை என்பது ஆர்வத்தைத் தூண்டும் செய்தியாக உள்ளது. கள்ளப் போதகர்களைக் குறித்து தொடர்ந்து சபை எச்சரிக்கப்பட

வேண்டும் என்பது திருமறையின் போதனை.[3] கள்ளப் போதகர்களைக் குறித்துக் கொண்டு,[4] அவர்கள் எதிர்க்கப் படவும்,[5] வாய்கள் அடைக்கப் படவும்,[6] அவர்களுக்கு வாழ்த்துக்கள் சொல்லாமலும்[7] இருக்க வேண்டும். ஒரு மனிதன் கள்ளப் போதகன் என்று அறியப்பட்டிருந்தால், அவனுக்கு உதவி செய்யவோ, அவனை அழைப்பித்து சபையில் பேச வைக்கவோ கூடாது. ஒரு கள்ளப் போதகர் சபையிலே சண்டையை உண்டு பண்ணி பிரிவினைகளை ஏற்படுத்தக் கூடியவனாயிருந்தால், அவன் பாவத்தைச் செய்தவன்[8] ஆதலால் சபை நடவடிக்கைக்கு அவன் கட்டுப் பட்டவன். எப்படியாயினும், ஒரு நபர் திருமறை போதிக்கும் சில கருத்துக்களைக் குறித்து தவறான கண்ணோட்டத்தில் இருந்தால் சபை அவனிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று திருமறை எந்தக் குறிப்பையும் கொடுப்பதில்லை.

ஐக்கியத்தை விலக்கிக் கொள்வதில் சரியான மனப்பாங்கு

அடுத்த வசனப் பகுதி ஐக்கியத்திலிருந்து விலக்கப்படுகிற நபரைக் குறித்து சபை எப்படிப்பட்ட மனப்பாங்கு உள்ளதாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. கொரிந்து சபையிலிருந்த அங்கத்தினர்கள் முரண்பட்ட மனப்பாங்கைத் தங்களுக்குள் கொண்டிருந்தனர், ஆகிலும் அவர்கள் முறையாய் கொண்டிருக்க வேண்டிய மனப்பாங்கு அவர்களிடம் இல்லை. “துக்கப்படுவதற்குப் பதிலாக” அவர்கள் இறுமாப்புடையவர்களாயிருந்தனர் (5:2). அவர்கள் ஒரு வேளை மேன்மை பாராட்டக் கூடியவர்களாயிருந்தனர் (5:6), அது அவர்களுடைய திறந்த மனம் அல்லது “சகிப்புத் தன்மையினால்” இருந்திருக்கலாம். ஒருவேளை பாவிகளுக்கு இரக்கம் காட்டக் கூடியவர்களாய் அவர்களிடம் அன்பு பாராட்டும் தன்மையைக் குறித்து அப்படிச் செய்திருக்கலாம். மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் கட்டுப் பாடுகள் தங்களை உட்படுத்தாது எனும் ரீதியில், இறுமாப்போடு கூட, மிகுந்த அன்பு காட்டுவோராய், ஒழுக்கக் காரியங்களில் அதிக சுதந்திரம் பெற்றவர்களாயிருக்கத் தீர்மானித்து செயல் பட்டிருக்கலாம். அவர்களுடைய இறுமாப்பு தவறானது. ஒரு சகோதரன் பாவத்திற்குட்படும் போது சபை துக்கப்பட வேண்டும். நாம் “ஒருவருக்கொருவர் அங்கங்களாயிருக்கிறோம்” (எபேசியர் 4:25); ஒரு அங்கத்தினருடைய பாவம் எல்லா அங்கத்தினர்களையும் பாடுபடச் செய்யும்.

நாம் ஐக்கியத்திலிருந்து விலகிக் கொள்ளும்போது, நம்முடைய மனப்பாங்கு மிகவும் முக்கியமானதாய் இருக்கிறது. நாம் அன்பின் மனப்பாங்கைக் கொண்டிருக்கவேண்டும்! அன்பும் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையும் ஒன்றுக்கொன்று எதிரானவையல்ல. கர்த்தர் தாம் அன்புகூருபவர்களைச் சிட்சிக்கிறார் (எபிரெயர் 12:6). சிட்சித்தல் என்பது அன்பின் வெளிப்படுத்துதலாக இருக்கிறது.

ஐக்கியத்திலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட ஒரு சகோதரன் மறுபடியும் திரும்பிவரும் போது நம்முடைய மனப்பாங்கு எப்படியிருக்க வேண்டும்? இதற்கான பதில் 2 கொரிந்தியர் 2:5-8ல்[9] காணப்படுகிறது. கொரிந்துவிலே ஒரு சகோதரன் நடவடிக்கைக்கு உட்பட்டு நீக்கப் பட்டான், ஆகிலும் அதன் விளைவாக அவன் மனந்திரும்பினான் என்று தெரிகிறது. அவன் துக்கத்தில்

மூழ்கிப் போய் விடாதபடிக்கு, அவர்கள் அவனிடத்தில் கொண்டுள்ள அன்பை மறுபடியும் உறுதிப் படுத்தும்படி அறிவுறுத்தப் பட்டனர். பாவத்திலிருந்த ஒரு சகோதரன் திரும்பவும் கர்த்தரிடத்தில் வரும் போது, நாம் அவனை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் - கெட்டுப் போன குமாரன் தன்னுடைய தகப்பனிடத்தில் வந்த போது அவர் அவனை ஏற்றுக் கொண்டு சந்தோஷப் பட்டது போல நாமும் ஏற்றுக் கொள்ள வேண்டும் (லூக்கா 15:11-24).

ஐக்கியத்திலிருந்து விலக்க செயல்படும் முறை

ஒருவரிடத்திலிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டிய வேளையில் செய்ய வேண்டிய சில செயல்களை தேவன் குறிப்பிட்டிருக்கிறார். பாவத்தில் சென்று கொண்டுள்ள ஒரு சகோதரனை ஐக்கியத்திலிருந்து விலக்குவது முதல் படியல்ல என்பதை மனதில் வைக்கவேண்டும். மற்ற வசனங்கள் குறிப்பிடுகையில். அந்த சகோதரனிடத்தில் போய் அவரை மறுபடியும் கொண்டு வர முயற்சிக்கும் படி போதிக்கிறது (கலாத்தியர் 6:1; யாக்கோபு 5:19, 20).

மத்தேயு 18:15-17 ஐக்கியத்திலிருந்து விலக்குவதற்கு முன்பாக மூன்று படிகளை முறைப் படுத்துகிறது: (1) பாவம் செய்த சகோதரனிடத்தில் ஒரு கிறிஸ்தவன் தனித்துப் போய் பேச வேண்டும். இந்த சந்திப்பின் நோக்கம் அவனுடைய மனந்திரும்புதலைத் தேடித்தான். அவன் மனந்திரும்பி விட்டால், அவன் மன்னிக்கப்பட வேண்டும்; அப்பொழுது மேற் கொண்டு எதுவும் செய்யாமல் அத்துடன் நின்று விடும், ஏனெனில் "உங்கள் சகோதரனை நீங்கள் ஆதாயப்படுத்திக்கொண்டீர்கள்." (2) ஒருவர் தனித்து சந்தித்த பின்பும் அவன் மனந்திரும்பாமல் போனால், அடுத்த சந்திப்பிற்கு அவருடன் மேலும் ஒருவரோ இரண்டுபேரோ செல்ல வேண்டும். மறுபடியும், இந்தச் சந்திப்பின் முதல் நோக்கம் அந்த சகோதரனை மனந்திரும்பச் செய்வதே; சம்பந்தப் பிரச்சனையின் சரியான நிலையை உறுதிப் படுத்தவே இந்தச் சந்திப்பு. அவன் மனந்திரும்பி விட்டால், அவன் மன்னிக்கப் பட வேண்டும். அவர்களுக்கும் அவன் "செவி கொடுக்க மறுப்பானேயாகில்," மூன்றாவது படி அவசியமாகிறது. (3) "சபைக்குத் தெரியப்படுத்தவேண்டும்." இப்பொழுதும் பாவம் செய்த சகோதரனை மனந்திரும்பச் செய்வதே இதன் நோக்கம். அவன் சபைக்கு செவி சாய்க்கும் பட்சத்தில், கண்டனம் பண்ணப்பட்ட மனிதன் தன் ஆத்துமாவை இரட்சித்துக் கொள்வான். அவன் சபைக்கும் செவி கொடாமல் போனால் -தனிப்பட்டவரின் அல்லது ஒட்டு மொத்த மக்களின் சப்தமாகிய எச்சரிக்கை மற்றும் ஊக்கமளிக்கும் சபையின் முழு சப்தத்துக்கும் செவி கொடாத போது - அந்த சகோதரனை ஐக்கியத்திலிருந்து நீக்கித் தான் ஆக வேண்டும்.[10] கிறிஸ்தவர்கள் அவனோடு கலந்திருக்கக் கூடாது. மற்ற எல்லா முயற்சிகளும் பயனளிக்காத போது, ஐக்கியத்திலிருந்து அந்த சகோதரனை நீக்குவது தான் கடைசிப்படி.

நாம் அந்த நடவடிக்கை எடுக்கும் போது, செயல்கள் ஆழமனதிலிருந்து வருகிற சுபாவம் என்பதைக் கவனிக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் நம்மோடிருந்து, அவர்களின் தீர்ப்புப்படி நாம் செயல் படுகிறோம் (1 கொரிந்தியர் 5:3, 4), முழு சபையும் முன் நிற்கிறது (5:4). மூப்பர்களாலோ பிரசங்கியார் (களாலோ) இது செய்யப்படுவதில்லை, முழு சபையும் செயல் படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவின் வல்லமை அல்லது அதிகாரத்தின் பேரில் இது நடப்பிக்கப் படுகிறது (5:4). இது எல்லாருக்கும் முன்பாக செய்யப் படுவது: "அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்

கொடுக்க வேண்டும்" (5:5). சபை வெளிப்படையாக அறிவித்து ஐக்கியத்திலிருந்து நீக்கப்பட்டவர் சபையில் உள்ளவர்களுடன் ஒருவராக எண்ணப்பட மாட்டார் என்று சொல்ல வேண்டும். சாத்தான் அவனுடைய வாழ்க்கையில் அதிகாரம் செலுத்துகிறான்; அவனை ஐக்கியத்திலிருந்து நீக்குவதன் மூலம், அந்த அதிகாரத்தை சபை புரிந்து கொண்டிருக்கிறது.[11]

ஒரு அங்கத்தினரிடத்திலிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள சபை சரியான முறையில் செயல் பட வேண்டும்! மற்றெல்லாவற்றோடே, சங்கதிகளெல்லாம் உறுதிப் படுத்தப்பட வேண்டும். எந்த ஒரு பாகுபாட்டிற்கும் இடமளிக்கக் கூடாது. (உதாரணமாக, சபையின் முன்னோடிகளின் குடும்பத்தாரை மற்றவர்களைக் காட்டிலும் தயை காட்டி நடத்தக் கூடாது.) பாவம் செய்த அங்கத்தினர் மற்ற சபை அங்கத்தினர்களால் தனிப்பட்ட முறையில் சந்திக்கப் பட வேண்டும். சபையின் அங்கத்தினர் முழுவதும் இதில் ஈடுபடுத்தப்பட வேண்டும், மற்றும் அந்த சபை அங்கத்தினருக்கும் சபைக்கும் இடையே (எந்த வித பழி வாங்கும் செயலுக்கும் சிறு துக்கத்துக்கும் இடங் கொடாமல்) அன்பே முழுமையான செயல் வடிவம் கொண்டிருக்க வேண்டும். பாவஞ் செய்த அங்கத்தினரின் மனந்திரும்புதலையே தேட வேண்டும்.

சில வேளைகளில் சபையின் ஒழுங்கு நடவடிக்கையை செயல் படுத்தும் போது தீர்வுக்குப் பதிலாக அதுவே பிரச்சனைகளாக மாறிவிடும். ஏறத்தாழ எப்பொழுதுமே, திருமறையின் வழி காட்டலைத் தவிர்த்து, செயல் பாட்டில் மட்டும் கவனம் செலுத்துவதே தவறு நடக்க ஏதுவாகிறது.

ஐக்கியத்தை விலக்கிக் கொள்வதற்கான காரணங்கள்

ஐக்கியத்தை விலக்கிக் கொள்வதற்கான சரியான காரணங்களையும் தேவன் கொடுத்திருக்கிறார். மனந்திரும்பாத பாவியிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள குறைந்த பட்சம் இரண்டு காரணங்கள் உண்டு.

முதலாவதாக, சரியான ஒழுங்கு நடவடிக்கை தனிப்பட்டவரின் இரட்சிப்பாகிய - நல்லதுக்காகத் தான் (5:5). "அப்படிப்பட்டவனுடைய மாம்சத்தின் அழிவுக்காக" என்பது அவனுடைய வாழ்க்கையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிற பாவ இச்சைகளின் அழிவுக்காக.[12] "அவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுவின்" நாளிலே இரட்சிக்கப்படும்படி என்பது பரலோகத்திலே அவனுடைய ஆத்துமா முழுமையாக இரட்சிக்கப்படுவதைக் குறிக்கிறது.

இரண்டாவதாக, ஐக்கியத்திலிருந்து விலக்கிக் கொள்வது சபைக்கு நல்லது (5:6-8). "கொஞ்சம் புளித்தமா பிசைந்த முழுவதையும் புளிப்பாக்கும்" (5:6). குற்றஞ் சுமத்தப்பட்ட சகோதரனின் பாவம் முழு உள்ளூர் சபையையும் பாதிக்கக் கூடும். கண்டித்து உணர்த்தப் படாத எந்தப் பாவமும் சபையிலே மோசமான பாதிப்பை ஏற்படுத்தும். கள்ளப் போதகனை தொடர்ந்து அனுமதிப்பதன் மூலம் பிரிவினையும் தொடர்வதோடு, ஒரு உள்ளூர் சபையை அழித்து விடும். பாவஞ் செய்கிறவரின் முன் மாதிரியை மற்றவர்கள் பின் பற்றுவார்கள் - அல்லது அங்கத்தினர்கள் "அவன் அதைச் செய்தால், நான் இதைச் செய்யக் கூடும்" என்று சொல்லுவார்கள்.

ஒரு உள்ளூர் சபையிலே நடக்கும் வெளிப்படையான பாவம் சகித்துக் கொள்ளப்படும்போது, பாவத்தை மன்னித்து விட்டுவிடுகிறோம் என்று மற்ற மக்கள் நினைத்துக் கொள்ள வழி வகுக்கும். அப்பொழுது

சபை பரியாசத்துக்குள்ளாகி, சமுதாயத்தின் ஏளனத்துக்கு வழி வகுக்கும். கிறிஸ்தவர்களால்லாதவர்கள், "அவர்கள் அப்படிப்பட்ட நடத்தையை ஏற்றுக் கொள்வார்களானால் ஒருபோதும் நான் அந்த சபையில் அங்கம் வகிக்க மாட்டேன்" என்று சொல்லக் கூடும். இதை விட மோசமாக, சிலர் "அப்படிப் பட்டசெயல்களை அவர்கள் அனுமதிப்பார்களேயாகில், நானும் அங்கே அங்கம் வகிக்க விரும்புகிறேன்-அப்பொழுது நான் விரும்புகிறபடியெல்லாம் வாழ்ந்து கொண்டே சுத்த மனச் சாட்சியுள்ளவனாவேன்" என்று நினைக்கக் கூடும்.

நாம் புதிதாய்ப் பிசைந்தமாவாய் இருக்கும் படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப் போட்டு "பழைய புளித்த மாவோடே அல்ல, பொல்லாப்பு, துர்க்குணம் என்னும் புளித்த மாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்" (5:7, 8). நாம் ஆசரிக்கும் "பண்டிகை" என்பது கர்த்தருடைய பண்டிகையை குறிப்பிடலாம். அப்படியிருக்குமானால், குற்றஞ்சாட்டப்பட்ட அங்கத்தினன் ஐக்கியத்திலிருந்து விலக்கப்படும்போது, நாம் கர்த்தருடைய பந்தியை "உண்மை மற்றும் சத்தியம்" (துப்புரவு) ஆகியவற்றுடன் ஆசரிப்போம் என்று பவுல் கூறினார். பொல்லாப்பு, துர்க்குணம் ஆகியவற்றை நம் மத்தியிலிருந்து அகற்றும் போது மட்டுமே இது சாத்தியமாகும்.

சபையின் ஒழுங்கு நடவடிக்கை உண்மையில் சபையின் வளர்ச்சியை உற்சாகப் படுத்தும். அடக்கமற்ற இரண்டு அங்கத்தினர்கள் (அனனியா, சப்பீராள்) மீது தேவனே ஒழுங்கு நடவடிக்கை எடுத்த போது. "சபையாரெல்லாருக்கும் இவைகளை கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று"; "திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிக அதிகமாய்ச் சேர்க்கப் பட்டார்கள்" (நடபடிகள் 5:11, 14). வெளியிலிருப்போர், மனங் குத்தப் பட்டவர்களாய், ஒழுங்கு நடவடிக்கையை மிகவும் சிந்தையாய் எடுக்கும் ஒரு உள்ளூர் சபையைக் கண்ணுறும் போது, சபையின் மீது ஒரு ஈர்ப்புத் தன்மையைப் பெற்றுக் கொள்ளலாம். கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய விரும்பும் மக்கள் உள்ளூர் சபை அவரினிமித்தம் அர்ப்பணிப்பை வினயமாக எடுத்துக் கொள்வதால் அதிலே அங்கம் வகிக்க விரும்பக் கூடும்.

ஐக்கியத்தை விலக்குவதால் ஏற்படும் விளைவுகள்

ஐக்கியத்திலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டபின் விலக்கப் பட்டவர் எப்படி நடத்தப்பட வேண்டும்? அடிப்படையில் நாம் அவரோடே "கலந்து இருக்கக் கூடாது" (5:9); நாம் "அவருடன் நட்பு கொண்டிருக்கக் கூடாது" (KJV). 5:10-13ல், கொரிந்தியர்களின் தப்பான எண்ணங்களை பவுல் தெளிவாக்குகிறார். ஏற்கனவே எழுதிய நிருபத்தில் தீமையானவர்களோடே கலந்திருக்க வேண்டாம் என்று சொல்லியிருந்தார். அவர்கள் இவ்வுலகத்தில் தீமை செய்பவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாது என்று அவர்கள் நினைத்தது போல் தெரிகிறது. பவுல் அவர்களிடம் அப்படி முற்றிலும் கலவாமலிருக்க இயலாது என்று குறிப்பிடுகிறார் (5:10). நம்மைச் சுற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை நியாயந்தீர்ப்பதோ, கண்டனம் பண்ணுவதோ முறையல்ல; தேவனே அவர்களின் நியாயாதிபதி (5:12, 13). இங்கு பவுல் போதிக்கும் போதனையை, "அவிசுவாசியோடே பிணைந்திருக்கக் கூடாது" என்றும் (2 கொரிந்தியர் 6:14), "ஆகாத சம்பாஷனை நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்" என்ற எச்சரிக்கையையும் (1 கொரிந்தியர்

15:33) கொடுக்கிறதான வசனங்கள் தகுதிப்படுத்துகின்றன.

எப்படியிருப்பினும், 5:9ல்[13] குறிப்பிடப்படுகிற நிருபத்தில் உலகத்திலிருக்கிற மற்றவர்களைப் பற்றி பவுல் பேசவில்லை; சபையிலிருப் பவர்களைக் குறிப்பிட்டு பேசுகிறார். இதன் அடிப்படையில் சபை தீர்ப்பு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஐக்கியத்திலிருந்து விலக்கப் பட்ட கிறிஸ்தவனிடத்தில் நாம் ஐக்கியம் கொள்வதற்கு கொடுக்கப்பட்ட சில வரையறைகள் கிறிஸ்தவர்களல்லாதவர்களிடம் கொண்டிருக்கும் ஐக்கியத்திற்குப் பொருந்தாது. வசனம் 11ல் நாம் ஐக்கியம் வைக்கக் கூடாத அளவீடுகளைக் காணுகிறோம்: கொரிந்து சபையார்கள் இப்படிப்பட்டவனோடே புசிக்கவும் கூடாது. முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த நெருங்கிய ஐக்கியம் அதற்கான வரை முறைகள் அந்தந்த வசனப் பகுதியைக் கொண்டு புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஒன்றாக அமர்ந்து புசிப்பது அவர்களுடைய பழக்கம். அப்படிப்பட்ட ஐக்கியத்திலிருந்து விலக்குதல் முறையான விளைவை ஏற்படுத்த, இன்று நாம் ஒருவருக்கொருவர் நெருக்கமான ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும். சபை அங்கத்தினர்கள் ஒன்றாக அமர்ந்து புசியாதிருந்தால் அது எப்படிப் பட்ட வித்தியாசத்தை ஏற்படுத்தப் போகிறது. புசிக்கிற ஐக்கியம் ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. இந்த சமத்துவ ஒருவரையொருவர் சார்ந்த உணவு உண்ணும் பழக்கம், ஒரு சரீரத்தின் அவயவங்களாக உண்டு மகிழ்கிறோம், இதை பாவஞ் செய்ததினிமித்தம் விலக்கப் பட்டவருடன் பகிர்ந்து கொள்ளக் கூடாது.[14]

ஐக்கியத்தை விலக்கிக் கொண்ட பிறகு, விலக்கப்பட்ட சகோதரனுக்கும் சபையில் இருக்கும் மற்ற அங்கத்தினர்களுக்குமிடையேயான உறவுமுறை வித்தியாசப்படுகிறது. ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவனுக்கு அதற்கு முன்பாக சக கிறிஸ்தவர்களுடன் நெருக்கமான நட்பு இருந்தது; அவர்கள் ஒன்றாக அமர்ந்து புசித்தவர்கள். ஆனால் இப்பொழுதோ, அவர்களுடைய அன்பின் விருந்திலே அவனுக்கு வரவேற்பு இருக்காது.

பாவமுள்ள சகோதரனுடன் கிறிஸ்தவர்கள் கலந்து இருக்கக் கூடாது என்று பவுல் சொல்லுகிற அதே வேளையில், நாம் அவனை (ஐக்கியத்திலிருந்து நீக்கப்பட்டவனை), "சத்துருவாக எண்ணாமல்" "சகோதரனாக எண்ணி" அவனுக்குப் புத்தி சொல்ல வேண்டும் (2 தெசலோனிக்கேயர் 3:14, 15). ஐக்கியத்திலிருந்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட அந்த சகோதரனுடன் "கலந்திருக்கக் கூடாதென்ற" பவுலின் போதனைக்குக் கீழ்ப்படிந்து "அவனைச் சகோதரனாக எண்ணி" புத்தி சொல்ல வேண்டுமானால், அதற்கான மன உறுதி தேவை. சில அளவிடப்பட்ட காரியங்களில் மட்டுமே நாம் அவனுடன் நட்பு கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக, நாம் அவனுடைய வீட்டிற்கு போய் சந்திக்கலாம், சகோதரன் என்ற வகையில் அவனுக்கு புத்தி சொல்வதற்காக மட்டுமே.

முடிவுரை

சில நேரங்களில் ஒரு சபையிலுள்ள பிரச்சனைகளுக்கு கொரிந்து சபைக்கு கொடுக்கப்பட்ட போதனைகளையே செயல்படுத்தலாம்: ஒழுங்கற்றுத் திரிகிற சபை அங்கத்தினரிடமிருந்து ஐக்கியத்தை நீக்கிக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட சபைகளுக்குக் கொடுக்கப்படுகிற சிறப்பான ஆலோசனை

"செயல்படுத்துங்கள்" என்பதுதான்.

வைத்தியரிடம் போகிற ஒரு நபரின் உதாரணத்தைக் காண்போம். அங்கு அவன் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்று கண்டு பிடிக்கப்படுகிறது. "உனக்கு புற்று நோய் தாக்கியுள்ளது" என்று அவனுக்குச் சொல்லப் படுகிறது. "நாங்கள் உனது புற்று நோயை அகற்றிவிட முடியும், ஆனால் அது செலவுள்ளது, கூடுதல் நேரமாகும், வலியையும் கொடுக்கும். ஆயினும், நான் உன் மீது அதிக அக்கரையுள்ளவனானபடியால், இப்படியொரு கடும் சோதனைக்கு உன்னை உட்படுத்த விரும்பவில்லை - எனவே, அறுவைச் சிகிச்சைக்குப் பதிலாக, ஒரு நாளைக்கு ஒரு ஆஸ்பிரின் மாத்திரையும், படுக்கையிலே நிறைய ஓய்வு எடுக்கவும் ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்" என்று சொல்லுகிறார். அந்த நோயாளி என்ன சொல்லுவான்? அவன் நிச்சயமாக மறுப்பு தெரிவித்து: ஆஸ்பிரின் பற்றியும் படுக்கையில் ஓய்வையும் பற்றி என்னிடம் பேச வேண்டாம்! எனக்கு அறுவைச் சிகிச்சை தான் தேவை! என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, எல்லா வலிகளையும் பொறுத்துக் கொள்ளவும், பணச் செலவுகளையும் நான் செய்வேன், என்று சொல்லுகிறான்.

அதே போல, சபையில் ஒழுங்கு நடவடிக்கையை செயல்படுத்துவது கடினமான, நேரத்தை எடுக்கும் மற்றும் வலியுள்ளது. ஆகிலும், விளைவாக சபையின் முழு உயிரையும் அது பாதுகாக்கும். வலிமிகுந்த அறுவைச் சிகிச்சையாக இருப்பினும், - முழு சரீரத்தையும் அழிந்து போக விடுவதற்குப் பதிலாக - ஒரு அங்கத்தினரை இழப்பது நலம்!

குறிப்புகள்

[1]*வசனம் 1ல் கொரிந்தியர்களை வெட்கப்படுத்தும்படி, மிகைப்படுத்தி பேசுவதாக சிலர் கருதுகின்றனர்.* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 126.) [2]*"பெற்றோர் - பிள்ளைகளின் சட்டத்துக்குப் புறம்பான உறவு ரோம உலக முழுவதிலும் அருவருப்பாகக் கருதப் பட்டது ... (அ)து எல்லா கலாச்சாரங்களும் ஏற்றுக் கொள்ளும் சில குற்றங்களில் ஒன்று, பயங்கரமானது"* (Craig S. Keener, *The IVP Bible Background Commentary—New Testament* [Downers Grove, Ill.: InterVarsity Press, 1993], 461-62). *இந்தப் பயங்கரமான பாவம் கிரேக்கர் மத்தியில் எப்படி உணரப் பட்டது என்பதற்கு சோஃ போக்கல்ஸ் எழுதிய ஓஎடிபஸ் குறித்த பழங்கதை ஒரு சாட்சியமாய்க் காணுகிறது, அவன் தனக்கே தெரியாமல் தன் தகப்பனாரைக் கொன்று போட்டு தன் தாயை மண முடிக்கிறான். வருடங்கள் பல கடந்து, உண்மை தெரிய வந்த போது, தன் கண்களைத் தானே குருடாக்கிக் கொண்டு, பின்னதாக கொல்லப்பட்டான், அவன் தாயும் தற்கொலை செய்துகொண்டு செத்தாள். கொரிந்துவில் நடந்தவை ஓஎடிபஸ் கதையின் ஒரு பகுதியோ அதே போன்றதோ அல்ல.* [3]*மத்தேயு 7:15; 2 பேதுரு 2:1; 1 யோவான் 4:1-ஐக் காண்க.* [4]*ரோமர் 16:17, உதாரணமாக, சொல்லுகிறது, "நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்துக்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்."* [5]*2 தீமோத்தேயு 2:24-26ஐக் காண்க. பவுல் தொடர்ந்து கள்ளப் போதகர்களையும், கள்ளப் போதகங்களையும் தொடர்ந்து எதிர்த்தார், நடபடிகள் 15-ம் அதிகாரத்திலும் மற்ற எல்லா நிருபங்களிலும் அவருடைய இந்த எதிர்ப்பை நாம் காணலாம்.* [6]*"[மூப்பர்கள்] எதிர்பேசுகிறவர்களை கண்டனம்*

பண்ணவும் வல்லவனாயிருக்கும்படி, ... அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்க வேண்டும், அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள்" (தீத்து 1:9ஆ-11). சபை முன்னோடிகள் முதலாவது கள்ளப் போதகர்களின் வாயை அடக்கி, அவர்களுடைய உபதேசத்தைக் கண்டனம் பண்ணவும், இரண்டாவதாக, சபையிலே அவர்கள் போதிக்க அனுமதியாமலும் இருக்கவேண்டும். கள்ளப்போதகர்கள் தொடர்ந்து தனிப்பட்டமுறையில் போதித்து, அதன் விளைவாக சபை பிரிந்தால் அவர்கள் சபையின் சீர்திருத்த நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள். [7]2 யோவான் 7-11. [8]அப்படிப்பட்ட போதகர் சண்டைகளையும் பிரிவினைகளையும் உண்டாக்குகிற பாவத்துக்கு உட்பட்டவர் (கலாத்தியர் 5:20); வசன ரீதியற்ற நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்காக அல்ல, மேலே சொன்ன அப்படிப்பட்ட பாவத்துக்காக, உள்ளூர் சபை அவரிடத்திலிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டும். [9]2 கொரிந்தியர் 2:5-8ல் பவுலின் போதனை இந்தக் கதைக்கு முடிவுரையாகக் காணப்படுகிறது. [10]யூதர்களிடம் ஒரு மனந்திரும்பாத சகோதரனைப் பற்றி பேசும் போது, இயேசு "அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக" என்றார். யூதர்கள் அப்படிப்பட்டவர்களுடன் கலந்திருக்கவில்லை.

[11]ஒரு உள்ளூர் சபை ஐக்கியத்திலிருந்து விலக்குதல் நடவடிக்கையை எடுக்கும் போது, தன்னுடைய சொந்த அங்கத்தினர் மேலே மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியும். ஒரு உள்ளூர் சபை மற்றொரு உள்ளூர் சபையின் ஐக்கியத்திலிருந்து தன்னை விலக்கிக் கொள்வதாகவோ அல்லது மற்றொரு சபையைச் சேர்ந்த அங்கத்தினரை தங்களுடைய சபை ஐக்கியத்திலிருந்து விலக்கி வைப்பதாகவோ சொல்வதற்கு புதிய ஏற்பாடு எந்த ஒரு உதாரணத்தையும் கொடுப்பதில்லை. [12]குற்றஞ் சுமத்தப் பட்டவரின் சரீரத்தைக் கொன்று அழித்துப் போடுவதை இது குறிப்பிடுவதில்லை. பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்கள் குறிப்பிட்ட சில பாவங்களுக்கு உச்சக்கட்டத் தண்டனை வழங்கும்படி கோரப் பட்டனர், ஆனால் ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய - சபைக்கு - புதிய ஏற்பாடு ஒருபோதும் மரண தண்டனை அளிக்கும்படி அதிகாரமளிக்க வில்லை. அந்தச் சிறப்புரிமையெல்லாம் உலகப் பிரகாரமான ஆட்சியாளர்களின் அதிகாரத்துக்கு விடப்பட்டுவிட்டது (ரோமர் 13:1-4). மனந்திரும்பாத பாவிகளை தேவனே தண்டிப்பார். [13]வசனம் 9 "... நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன்" என்கிறது. [14]சபையைச்சாராத காரணங்களுக்காக கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் மற்ற சபை அங்கத்தினர்களுடன் கொள்ளும் நிகழ்ச்சி - உதாரணமாக, ஒரே இடத்தில் ஒரு வியாபாரத்தை செய்யவோ அல்லது பணிபுரியவோ செய்யும் போது - ஐக்கியத்தை விலக்கி வைத்தலினால் பாதிக்கப்படாது.

6

தன் தகுதிக்கேற்காத நடத்தையை நிறுத்த வேண்டிய சபை

(1 கொரிந்தியர் 6:1-20)

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவத்தில் பணியாற்றும் ஒரு அதிகாரி "தகுதிக்கேற்காத ஒரு செயலை" செய்திருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டால், அந்த அதிகாரி அவருடைய அல்லது அந்த பெண்மணியினுடைய பதவி அந்தஸ்துக்கேற்காத தவறைச் செய்ததாக குற்றஞ்சாட்டப் படுவார். அப்படிப் பட்ட "தகுதிக்கேற்காத" நடத்தை ஒரு இராணுவ வீரரின் சீருடைக்கும், அந்தஸ்துக்கும், நாட்டிற்கும் காட்டுகிற மரியாதைக் குறைவாகக் காணப்படுகிறது.

அனைத்து கிறிஸ்தவர்களும் தேவனுடைய இராணுவத்தில் போர் வீரர்களே, நாம் கிறிஸ்தவர்களான போது கர்த்தர் நிமித்தம் போராடும்படி நம்மை ஒப்புக் கொடுத்தோம். இராணுவ வீரர்களாக, ஒரு குறிப்பிட்ட ஒழுக்க ரீதியான வாழ்வை வாழ நாம் எதிர்பார்க்கப் படுகிறோம். அப்படிச் செய்ய நாம் தவறும் பட்சத்தில், நாம் கிறிஸ்தவனின் தகுதிக்கேற்காத செயலை செய்த குற்றத்துக்கு ஆளாவோம்.

கொரிந்துவிலிருந்த பிரச்சனைகளில் ஒன்று அங்கிருந்த அங்கத்தினர்கள் கிறிஸ்தவனின் தகுதிக்கேற்காத செயல்களில் ஈடுபடுவோராய் இருந்தனர். அதிகாரம் 6ல் பாவ நடத்தைகளில் மூழ்கிப் போகும் போக்கை கண்டித்து எழுதுகிறார். கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு ஏற்காத செயல்களில் பங்கு கொள்ளாதபடி அவர்களை அவர் எச்சரித்தார்.[1]

சகோதரனுக்கு விரோதமாக சட்டத்தை நாடுதல்

பவுல் பின்வருமாறு துவங்குகிறார்.

> *உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதிக்காரனிடத்தில் போகத் துணிகிறதென்ன? பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப் படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா? தேவ தூதர்களையும் நியாயந் தீர்ப்போமென்று அறியீர்களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக் கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ளக்கூடாதிருக்கிறது*

எப்படி? இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்புச் செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக்கொள்ளுங்கள், உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன். சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத் தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா? சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான், அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் அப்படிச் செய்கிறான்.

நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை ஏன் நஷ்டத்தைப்பொறுத்துக் கொள்வதில்லை? நீங்களே அநியாயஞ் செய்கிறீர்கள், நஷ்டப்படுத்துகிறீர்கள்; சகோதரருக்கும் அப்படிச் செய்கிறீர்களே (6:1-8).

“சகோதரனுக்கு விரோதமாய் வழக்காடப் போவது” - ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளாக அவமரியாதையைக் காட்டுகிறது என்கிறார் பவுல். “நீங்களும் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவரானதால், அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்:சகோதரனுக்கு விரோதமாய் வழக்காடும்படி அநீதிக்காரனிடத்தில்[2] போகாதிருங்கள். அப்படிப் போவது வெட்கக் கேடான செயல்” (6:5).

ஒரு சகோதரன் மற்றொருவனுக்கு எதிராக வழக்காடும்படி ஏன் போகக் கூடாது? பவுல் குறிப்பான காரணங்களைக் கொடுத்தார்.

சபைக்கு அது வெட்கத்தை உண்டு பண்ணும் செயல். பவுல் சபைக்கு வெட்கத்தை உண்டுபண்ணும் செயலாகக் குறிப்பிட்டு, சகோதரனுக்கு விரோதமாய் வழக்காட போவதைக் “வெட்கமானது” என்று காட்டுகிறார் (6:5, 6). கிறிஸ்தவர்களுக்கிடையேயான வழக்காடுதல், புறம்பே இருப்பவர்களுக்கு பரியாசம் பண்ண ஒரு காரணமாகி விடும்.

சபை அங்கத்தினர்கள் தீர்ப்புச் சொல்லத் தகுதியானவர்கள். சபை அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் எதிராக வழக்காடப் போகக் கூடாது, ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளாகவே தீர்த்துக் கொள்ளும் திறமை வாய்ந்தவர்கள் என்று பவுல் குறிப்பிட்டார். சகோதரர்கள் தங்களுக்குள் தாங்களே சரி செய்து கொள்ள, அவிசுவாசிகளை நாடுவதைக் காட்டிலும் வேற்றுமைகளைச் சரி செய்ய ஏதுவான ஒருவரை தங்களுக்குள்ளாகவே ஒருவரை நியமித்து செய்ய வேண்டும் (6:1). பரிசுத்தவான்கள் இப்படிப் பட்டக் காரியங்களை தீர்ப்பு செய்ய வல்லவர்களாயிருக்கின்றனர். ஒரு நாளிலே, பரிசுத்தவான்கள் உலகத்தையும் தேவ தூதர்களையும் நியாயந் தீர்ப்பார்கள் (6:2, 3). இப்படிப்பட்ட நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட காரியங்களுடன் ஒப்பிடும் போது இம்மைக்குரிய பொருள் ரீதியான கேள்விகள் அற்பமானவைகள்.[3]

அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் சட்ட ரீதியான வழக்குகளைத் தொடுப்பதன் மூலம் சபைக்கு வெட்கத்தை உண்டு பண்ணுவதால், நாம் வழக்காடு மன்றத்துக்கு போவதை விடுத்து, நமக்குச் சேர வேண்டிய பணத்தை இழப்பதே மேல். நாம் அப்படிப் பட்டவர்களோடு ஒத்துப் போக இயலவில்லை என்று வெளியில் சொல்லித்திரியக் கூடாது (6:7); கிறிஸ்தவர்களாகிய நாம், அன்பானவர்கள் என்று அறியப் பட வேண்டும் (யோவான் 13:35).

வசனம் 8 மற்றொரு ஆலோசனையைச் சேர்க்கிறது. வழக்கு தொடுக்க காரணமாயிருந்தது என்னவெனில், சபையிலிருந்த யாரோ ஒருவர் மற்றொருவரை ஏமாற்றியோ அல்லது ஏமாற்ற முயற்சியோ பண்ணியிருக்கலாம், இது நிச்சயமாக தவறானது. "பொருளாசைக்காரர்" (6:10) என்று பவுல் பேசுவதற்கு இதுவே அடிப்படையாக இருந்திருக்கலாம். பொருளாசைக்காரர் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பது இல்லை என்றார்.

பவுலின் போதனையை இந்தப் பகுதியில் எப்படிப் பயன்படுத்துவது? இதோ மனதில் கொள்ள வேண்டிய மூன்று நடைமுறை உண்மைகள்:

முதலாவதாக, கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் வழக்காடப் போவதைத் தவிர்க்க வேண்டும். ஒரு சகோதரனுக்கு எதிரான காரியம் எதுவுமிருந்தால், சபையிலிருக்கும் ஒருவரைக் கொண்டு நாம் சரி செய்து கொள்ள வேண்டும் என்ற பவுலின் அறிவுரையை நாம் வினயமாக எடுத்துக் கொள்ள வேண்டும். சபை அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துப் போகாதபோது, நிச்சயமாக நீதியுள்ள தீர்ப்பைக் கொடுக்கக் கூடிய ஒருவர் சபையில் இருப்பார்.

இரண்டாவதாக, கிறிஸ்தவர்கள் "யாரையும் மோசம் போக்காமலும் யாருக்கும் தீங்கு செய்யாமலும்" (வசனம் 8) வழக்காடுமளவுக்கு போகாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நம்முடைய சகோதரர்களோடு வைத்துக் கொள்ளும் விவகாரங்களில் எப்பொழுதும் சரியானவைகளைச் செய்து நேர்மையாக செயல் பட வேண்டும்.

மூன்றாவதாக, வியாபாரத்தில் ஏற்படும் பண நஷ்டத்தைக் காட்டிலும், சில விஷயங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய சகோதரர்களோடு நமக்கு இருக்கும் பந்தங்கள் பணத்தைக் காட்டிலும் மிகவும் முக்கியமானது. அதோடு, சபையின், கிறிஸ்துவின் சரீரத்தின் நற்பெயர் அதி முக்கியமானது. தங்களுடைய "உரிமைகளை" குறிப்பாய் உணர்த்துபவர்கள் - தங்களுக்கு வரவேண்டிய பணத்தை மட்டுமே கேட்பதாக நினைத்து - கர்த்தருடைய சபையின் நற்பெயரைக் கெடுப்பவர்கள் தங்கள் கோணல் புத்தியின் மதிப்பை விளங்கப் பண்ணுகிறார்கள்.

நாம் மனதில் வைக்க வேண்டிய முக்கியமான சத்தியம் என்னவெனில் ஒரு சகோதரனுக்கு விரோதமாக வழக்காடுதல் அல்லது ஒரு சகோதரனை வஞ்சித்தல் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு முறையற்றவை. அப்படிப்பட்ட நடத்தை கிறிஸ்தவனின் தகுதிக்கு ஏற்காத நடத்தையாகும்.

அநீதியான நடத்தையில் நிலைத்திருத்தல்

அடுத்ததாக பவுல் அநீதி எனும் பிரச்சனையின் பல்வேறு வடிவங்களில் பேசுகிறார் (6:9-11). இதன் விளைவாக பவுல், "அஞ்ஞானிகளின் குண நலன்களாகிய அநீதியில் தொடர்ந்து நிலைத்திருப்பது, நீங்கள் யார்என்பதற்கே அவமரியாதையாகும் - கிறிஸ்தவர்கள் பாவிகளாயிருந்து, கழுவப்பட்டவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், நீதிமான்களாக்கப்பட்டவர்கள். தேவனுடைய இரட்சிக்கும் கிருபையை நீங்கள் அறிந்திருக்கிறபடியாலும், முந்தின நடக்கைக்குரியவர்களாய் நீங்கள் இல்லாமலிருப்பதாலும், புதிய ஜனக் கூட்டமாய் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். மாற்றம் பெற்ற உங்கள் நிலைமை உங்களுடைய மாற்றம் பெற்ற நடத்தையில் பிரதிபலிக்கட்டும்" என்கிறார்.

"அநியாயக்காரர் பரலோகத்திற்குப் போக மாட்டார்கள்!"

தனது நிருபத்தின் இந்தப் பகுதியில் பவுல் "அநியாயக்காரர்" (adikos[4]) "தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பது இல்லை," என்று துவங்குகிறார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், அவர்கள் பரலோகத்துக்குப் போகமாட்டார்கள் என்கிறார். இந்த எச்சரிக்கையை அவர் ஏன் இந்த இடத்தில் புகுத்தினார்? இதற்கு அநேக காரணங்கள் அவருக்கு இருந்திருக்கலாம்: (1) இப்பொழுது தான் கொரிந்தியர்கள் ஒருவருக்கொருவர் "அநியாயஞ்செய்யக் கூடியவர்களாயும் நஷ்டப்படுத்தக் கூடியவர்களாயும்" இருந்தனர் என்று குறிப்பிட்டிருந்தார் (6:8). (2) ஆரம்பத்தில் வெளிப்படையான ஒழுங்கற்ற பாவத்தைக் கடிந்து கொண்டு அந்த பாவத்தில் குற்றப்பட்டிருந்த சகோதரனைவிட்டு விலகும்படியும் அவர்கள் தெரிந்தும் அப்படிப்பட்ட பாவங்களை அனுமதித்துக் கொண்டிருப்பதையும் குறித்து அவர்களை கண்டித்திருந்தார் (அதிகாரம் 5). (3) தொடர்ந்து அவர் வேசித்தனப் பாவத்தினிமித்தம் அவர்களை எச்சரிக்கிறார். (4) இந்த வசனங்களில் சொல்லப் பட்டுள்ள பாவங்களை செய்கிற குற்றத்திற்குள்ளாகி, பாவ வாழ்க்கைக்கே திரும்பிப் போகிற சோதனைக்குட் படலாம். இந்த எல்லா காரணங்களுக்காகவும், அநியாய நடத்தைகளினிமித்தம் வரும் விளைவுகளையும் குறித்த எச்சரிக்கை அவர்களுக்குத் தேவைப்படுகிறது.

"குறிப்பான பாவங்களைச் சுட்டிக் காட்டட்டும்!"

அடுத்ததாக, அக்கிரமக்காரர்களை பரலோகத்துக்குப் புறம்பே தள்ளி வைக்கக்கூடிய பாவங்களை அல்லது அவர்களை நரகத்திற்கு அனுப்பக்கூடிய பாவங்களைப் பட்டியலிட்டார். அவர் "வேசி மார்க்கத்தாரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுய புணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை" என்று எழுதினார் (6:9, 10). இந்த உண்மை அப்படிப்பட்ட நடத்தைகளை கிறிஸ்தவர்கள் தவிப்பதற்கு ஒரு வலிமையான தூண்டு விசையாகும்!

பிறகு அவர், "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்" என்று சொன்னார் (6:11). இப்படிப்பட்டவர்கள் இரட்சிக்கப்படக் கூடுமா? விபச்சாரக்காரரும், திருடரும், வெறியரும், சுய புணர்ச்சிக்காரரும் பரலோகத்துக்குப் போக முடியுமா? நமக்கு பாவிகளிலேயே மிகவும் மோசமான பாவியை இரட்சிக்க தேவனுடைய கிருபை போதியளவுக்கு பெரிதாக இருக்குமா இருக்காதா என்றோ, அல்லது கிறிஸ்துவின் சிந்தப்பட்ட இரத்தம் அப்படிப்பட்ட பாவங்களை சுத்திகரிக்கும் வல்லமை பெற்றதா இல்லையா என்றும் எப்போதாவது கேள்வி எழும்பியிருக்குமானால், மேலே குறிப்பிட்ட வசனப் பகுதி அந்த கேள்விகளுக்கெல்லாம் நிறைவான பதிலைக் கொண்டுள்ளது. பதில் "ஆம்!" என்பது தான். மிகக் கொடூரமான பாவியும் கூட இரட்சிக்கப்படக் கூடும்.

"தேவன் உங்களைக் 'கழுவி' 'பரிசுத்தமாக்கி,' நீதிமான்களாக்கியிருக்கிறார்!"

கொரிந்தியர்கள் இரட்சிக்கப்பட்டது போலவே பாவிகள்

இன்றைக்கும் இரட்சிக்கப்பட முடியும். பவுல், "உங்களில் சிலர் இப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள்; பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" என்று சொன்னார் (6:11). பாவிகளிலேயே மிகவும் மோசமான பாவிகள் கூட கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப் பட்டு இரட்சிக்கப்பட்டவர்களாயிருக்க முடியும்! கொரிந்து பட்டணத்திலிருந்த சபையார் பாவமன்னிப்பிற்கென்று கிறிஸ்துவுக்குள்ளாக, விசுவாசித்து மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றபோது, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலே கழுவப்பட்டார்கள் (நடபடிகள் 18:8; 22:16; எபேசியர் 5:26). அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டு அல்லது தேவனுடைய ஊழியத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டபோது, அவர்கள் பரிசுத்தமானார்கள். அதே நேரத்தில் நீதிமான்களாக்கப் பட்டார்கள் அல்லது தேவனோடு சரி செய்து கொண்டார்கள்.

அவர்கள் முன்பு எப்படியிருந்தார்கள் என்பதை ஏன் பவுல் நினைப் பூட்டினார்? பரலோகத்திற்குள் சேரவிடாதபடிக்கு தடுக்கும் அக்கிரம செயல்களைத் தவிர்த்து விடும்படியான தூண்டுதலைக் கொடுக்க அவர் விரும்பியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. மேலும், ஒரு கிறிஸ்தவனுக்கு ஏற்காத நடத்தையை தவிர்க்க வேண்டி அவர்களுடைய முந்தின நடக்கைக்குரியவைகளை நினைப் பூட்டியிருக்கலாம். அவர் "உங்களில் சிலர் அப்படிப்பட்டவர்*களாயிருந்தீர்கள்*" - என்று கடந்த காலத்தில் குறிப்பிடுவதால் இனியும் அப்படிப் பட்டவர்களாயிருக்க வில்லை என்பதை தெளிவுபடுத்துகிறார். கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப் பட்டவர்களாய் நீதியுள்ளவர்களாய் வாழும்படி உற்சாகமளிக்கிறார்.

இந்த சகோதரர்கள் யாராக இருந்தார்கள், இப்பொழுது யாராக இருக்கிறார்கள் என்பதை சிந்தித்து நீதியுள்ள வாழ்க்கையை வாழும்படி ஊக்கமளிக்கப்படுகிறார்கள். அதே போல், ஒரு காலத்தில் நாம் யாராக இருந்தோம் என்ற பழைய நினைவுகளும், இப்பொழுது நாம் என்னவாக இருக்கிறோம் என்கிற மாறுபட்ட சிந்தனைகளும், பாவம் செய்வதை தவிர்க்கவும் நீதியைச் செய்யவும் நமக்கு தூண்டுகோலாக இருக்கக் கூடும்.

வேசித்தனம் செய்தல்

1 கொரிந்தியர் 6:12-20ல், பவுல் கிறிஸ்தவர்கள் தவிர்க்கவேண்டிய ஒரு அக்கிரமச் செயலைக் குறித்து இன்னும் சொல்ல வேண்டியிருந்தது.

"வேசித்தனம் செய்வது, ஒழுக்கக் கேடான குற்றம்," அது "நீங்கள் யாருடையவர்களோ அவருடைய நாமத்தை - கர்த்தருடைய நாமத்தை - அவமதிப்பதாகும். உங்கள் சரீரம் அவருக்குச் சொந்தமானது என்று பவுல் போதித்தார்.

வசனங்கள் 9, 10ல் பவுல் பட்டியலிடும் பாவங்களில், அவர் ஒரு பாவத்தை மட்டும் - வேசித்தனம் அல்லது ஒழுக்கக்கேடு - ஒருமுகப்படுத்தி அந்த அதிகாரத்தின் பின் பகுதி முழுவதும் எழுதுகிறார். ஏன்? ஏனெனில் பாலியல் ஒழுக்கக் கேடுதான் கொரிந்துவில் மிகப் பெரிய பிரச்சனையாக இருந்திருக்கலாம். ஒரு தனி மனிதனின் வெளிப்படையான ஒழுங்கீனச் செயலும், சபை அதை அனுமதிப்பது போல நடந்து கொண்டதும் இதற்கு ஆதாரமாக இருக்கிறது

(அதிகாரம் 5). சபை அங்கத்தினர்கள் ஒரு காலத்தில் குற்றவாளிகளாயிருந்த அனைத்துப் பாவங்களையும் விட்டு விலக வேண்டியவர்கள்; ஆனால், குறிப்பாக, இங்கே பவுல் சகோதரர்களிடம், "வேசித்தனத்துக்கு விலகியோடுங்கள்" என்று புத்தி சொன்னார் (6:18).

ஆட்சேபனைக்கு பதில்கள்

பவுல் கொரிந்தியர்களை, "வேசித்தனத்துக்கு விலகியோடுங்கள்" என்று சொல்வதற்கு முன்பு, தன்னுடைய கருத்தின் நோக்கத்திற்கு எதிர்ப்பு வரக் கூடும் என்ற எதிர் பார்ப்பில் அப்படிக் குறிப்பிட்டார். அவர் மூன்று கருத்துக்களைத் தெரியப்படுத்தி. அவைகளுக்குப் பதில் விளக்கத்தையும் கொடுக்கிறார். இவைகள் பவுலுடைய சொந்தக் கருத்துக்களல்ல; வேசித்தனம் பண்ண தங்களுக்கு "உரிமை" இருப்பது போல சிலர் எண்ணங் கொண்டிருந்ததால் அவர்களின் கருத்தையே பவுல் குறிப்பிடுகிறார். அவைகள் மேற்கோளாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டியது.[5] பவுல் வேசித்தனம் செய்வோரின் குரலாக அல்லது தங்களை நியாயப்படுத்திக் கொள்வோரினிமித்தமாக, பவுல் அவர்களைக் கடிந்து கொண்டு அவர்களின் எண்ணங்களை வெளியிடுகிறார்.[6]

முதலாவதாக, வேசித்தனம் செய்வது தங்களுடைய உரிமை என்று நம்பினவர்கள், "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு" என்று கூறிக்கொண்டிருந்தனர் (6:12அ). அடிப்படையில், "நான் விரும்பினால் வேசித்தனம் பண்ண என்னால் முடியும்," என்று குறிப்பிடுகின்றனர்.[7] பவுலின் பதில்: "எல்லாம் தகுதியாயிராது. இந்தப் பாவச் செயல்கள் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப் பட்டாலும் கூட எல்லாம் தகுதியாயிராது."

இரண்டாவதாக, அவரின் உரிமை கோரிக்கையை மறுபடியும் குறிப்பிட்டு: "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு" என்று கூறிக்கொண்டிருந்தனர் (6:12ஆ) என்றார். பிறகு பதிலளித்து, "சிலவற்றை அனுபவிக்க எனக்கு அதிகாரம் இருந்த போதும், நான் எதற்கும் அடிமைப்பட மாட்டேன்'' என்று சொல்லுகிறார். உண்மையில், பாவம் பாவியை அடிமையாக்குகிறது. வேசித்தனக் குற்றத்தைச் செய்கிறவனை நிச்சயமாக அது அடிமையாக்குகிறது.

மூன்றாவதாக, ஒழுக்கக் கேடானவர்கள் பின் வருவதை குறிப்பால் உணர்த்துகின்றனர் என்பதைக் குறிப்பிடுகிறார், "போஜனத்துக்கு வயிறும் வயிற்றுக்கு போஜனமும் ஏற்கும்" (6:13). இந்த வாக்குமூலம் ஒரு வேளை குறிப்பிட்ட சில உணவுகளைப் புசிப்பது குறித்துப் பேசினாலும் (அதிகாரம் 8-10), "தேவன் எங்களுக்கு இந்த உடம்புகளை கொடுத்திருக்கிறார், எனவே நாங்கள் விரும்புகிறபடியெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்றெல்லாம் அவர்கள் வாதிடுவது வழக்கமாக இருந்துள்ளது போல் தோன்றுகிறது. "பாலியல் இன்ப ஆசைக்கு அவைகளைப் பயன்படுத்துவது தவறில்லை" என்று கூறியிருக்கலாம். இதற்கு விளக்கம் அளிக்கும் பவுல், தேவன் ஒரு நாளில் போஜனத்தையும் சரீரத்தையும் அழிப்பார்; சரீரம் கர்த்தருக்கு சொந்தமானது மற்றும் சரீரமானது தேவனால் உயிர்ப்பிக்கப்படும் (6:13ஆ, 14) என்றார்.

வேசித்தனத்தை தவிர்க்க வேண்டியதன் காரணம்

நாம் கர்த்தருக்குரியவர்களானதால், நாம் விரும்புகிறபடியெல்லாம்

நம்முடைய சரீரத்தைப் பயன்படுத்த நாம் அனுமதிக்கப் படவில்லை என்று பவுல் அறிவுறுத்துகிறார். நிச்சயமாக நாம் அவைகளை ஒழுக்கமற்ற காரியங்களுக்கு பயன்படுத்தக் கூடாது (6:15-20). ஒரு கிறிஸ்தவன் ஒரு வேசியோடு பாலுறவு கொள்வது தவறு ஏனெனில் அவன் கிறிஸ்துவுக்கு சொந்தமானவன். கிறிஸ்துவின் சரீரத்துடன் வேசியின் சரீரத்தில் பங்கு கொள்வது, நிச்சயமாக கிறிஸ்தவனுக்கேற்காத நடத்தையாகும்!

பவுல் தன்னுடைய வாசகர்களிடம் இது குறித்து மூன்று கேள்விகளைக் கேட்டு விவாதிக்கிறார்: (1) கர்த்தருடைய அவயவங்களைக் கொண்ட சரீரத்தை வேசியின் அவயவங்களாக்கலாமா (6:15)? இல்லை! உண்மையில் ஒரு விபச்சாரியுடன் ஒரு கிறிஸ்தவன் வேசித்தனம் பண்ணும் போது, அவனும் விபச்சாரத்துக்கு பங்குள்ள குற்றவாளியாகிறான், அவன் கிறிஸ்துவுடன் தன்னை ஆவிக்குரிய ஐக்கியத்தில் இணைத்துக் கொண்ட பிறகு, விபச்சாரியுடன் தன் சரீரத்தை இணைப்பதால் அப்படியாகிறான் (6:16, 17). (2) நமது சுய சரீரத்துக்கு விரோதமாய் பாவஞ் செய்யலாமா? இல்லை. நமது சரீரங்கள் கர்த்தருக்குரியவைகளானதால், வேசித்தனம் செய்வது அவருக்கும் நம்முடைய சொந்த சரீரத்துக்கும் விரோதமான பாவம் (6:18). (3) தேவன் வாசம்பண்ணுகிற இடமான தேவனுடைய ஆலயத்தை, பாவத்துக்குரியதாக்கலாமா? இல்லை! நம்முடைய சரீரம் கர்த்தருக்குரியதானதால், அவைகளில் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகிறார் (6:19).[8] நிச்சயமாக, அப்படியானால் நாம் "ஒழுக்க கேடானவைகளுக்கு விலகி ஓட வேண்டும்."

இந்த நினைவில்கொள்ளும் வார்த்தைகளோடு பவுல் இந்த அதிகாரத்தை நிறைவு செய்கிறார்: கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே: "ஆகையால் உங்கள் சரீரத்தினாலே . . . தேவனை மகிமைப்படுத்துங்கள்."[9] நம்மை மீட்கும்படி கிறிஸ்து கொடுத்த கிரயம் அவருடைய சொந்த இரத்தம், நமது பாவங்களுக்காக அதை அவர் சிந்தினார் (1 பேதுரு 1:18, 19). இதன் விளைவாக, நமது சரீரங்களினாலே தேவனை மகிமைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்வோமானால், நம்முடைய நடத்தை கிறிஸ்தவனுக் கேற்றதாக இருக்கும். அதற்கு முரணாக, ஆவியானவர் வாசம் பண்ணுகிற சரீரத்தைத் தவறாகப் பயன்படுத்தி வேசித்தனத்தில் ஈடுபடுவோமாகில், நாம் கிறிஸ்தவனுக்கேற்காத நடத்தைகளையுடையவர்களென்று குற்றப்படுத்தப் பட்டவர்களே.

முடிவுரை

கொரிந்து சபையைப் போலவே இன்றைய சபைகள் ஒழுங்கீனச் சூழலில் இருந்து கொண்டுள்ளன. பிரசித்தி பெற்ற கேளிக்கை நிகழ்ச்சிகளெல்லாம் ஒழுங்கற்ற செயல்களை உற்சாகப் படுத்துகின்றன. ஜனங்கள் பொதுவாகவே வேசித்தனம் பண்ண எதிர்பார்க்கப்படுகின்றனர். தூய்மையைக் காத்து வாழ்வது நகைப்புக்குரிய பரியாசமாய்த் தோணுகிறது. இப்படிப் பட்ட ஒழுங்கீனச் சூழ்நிலையில், தனிநபர்த் தூய்மையின் அவசியத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் இருக்க வேண்டும் என்பதை சபை வலியுறுத்த வேண்டும். கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் *அவர்கள் என்னவாக* - தேவனுடைய குடும்பமாக - இருக்கிறார்கள் என்பதால்; *அவர்கள் யாராக இருக்கிறார்கள்* - பாவியாக இருந்து கழுவப்பட்டவர்கள், நீதிமான்களாக்கப்பட்டவர்கள் என்பதால்; *அவர்கள் யாருடையவர்களாயிருக்கிறார்கள்* - கிறிஸ்துவுக்

குரியவர்களாயிருக்கிறார்கள் என்பதால்; தவறான நடத்தைகளைத் தவிர்க்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

ஒழுக்கமுள்ள ஜீவியத்தை வலியுறுத்துவதால், அதிகாரம் 5ல் சம்பந்தப் பட்ட கொரிந்துப் பட்டணத்து சபையின் பிரச்சனையை இன்றைய சபை தவிர்க்க முடியும். அப்பொழுது அங்கத்தினர்களின் ஒழுங்கற்ற நடத்தைகளுக்காக அவிசுவாசிகள் சபையை குற்றப்படுத்திப் பேச வாய்ப்பிருக்காது. சபை எந்த அளவுக்கு தனது விசுவாசத்தைக் குறித்து வினயமுள்ளதாக இருக்கிறதோ, எந்த அளவுக்கு தனது தூய்மைக்காக வினயமாயிருக்கிறதோ, அந்த அளவுக்கு புறம்பேயிருந்து ஆவிக்குரிய உதவியைத் தேடிக் கொண்டுள்ளவர்களை கவர்ந்திழுக்கும் திறமையைப் பெறும்.

குறிப்புகள்

[1]*இதைப் போன்றதொரு கருத்து* Marion L. Soards, *1 Corinthians,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrikson Publishers, 1999), *132ல் வழங்கப் பட்டுள்ளது.* [2]*6:1ல் குறிப்பிடப்பட்டுள்ள அநீதிக்காரன் என்பது அவிசுவாசிகளைக் குறிக்கும் - கிறிஸ்தவர்களுக்கு முரணாக, நீதிமான்களாக்கப்படாதவர்கள். பவுல் இங்கே சமுதாயச் சட்ட நீதிமன்றங்களைக் குறிப்பிடுகிறார்.* [3]*பவுல் 6:4, 6ல் "இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகளை," தீர்ப்பு செய்ய அவிசுவாசிகளுக்கு முன்பாக - "சபையில் சம்பந்தமில்லாதவர்களுக்கு முன்பாக" - அஞ்ஞானிகளுக்கு முன்பாக என்கிறார். எப்படியாயினும், இந்த வாக்கியம் கேள்வியாக இராமல் சொற்றொடராக இருந்திருக்க வேண்டும், பவுல் சபையில் செல்வாக்கில்லாத அங்கத்தினர்களை குறிப்பிட்டிருக்க வேண்டும், வாக்கியமோ கேள்வியோ குற்றச்சாட்டாக கேட்கப்பட்டிருக்கலாம்.* [4]*6:1ல் பயன்படுத்தப் பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தை "அநீதிமான்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது ("அநீதிகாரன்";* KJV*).* [5]*மேற்கோள் குறிப்புகள் எல்லாம் ஆங்கிலத்தில்* NRSV *மற்றும் இதர மொழிபெயர்ப்புகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [6]*எதிர்ப்பாளர்கள் பவுலின் சொந்த வார்த்தைகளையே அவருக்கு விரோதமாய் பயன்படுத்தியிருக்கலாம், வேறொரு வசனப் பகுதியில் பவுல் "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு," "வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்," போன்ற வாக்கியங்களைப் போதித்திருக்கலாம். அப்படியிருந்திருக்குமானால், அந்த வசனப் பகுதியிலிருந்து பவுலின் வார்த்தைகளை அவர்கள் சந்தர்ப்ப பொருளுக்கு வெளியே பயன்படுத்தியிருக்கலாம்.* [7]*அவர்கள் "எல்லாவற்றுக்கும் அதிகாரமுண்டு" என்ற வாக்கியத்தில் சுதந்திரமான நம்பிக்கை கொண்டிருந்திருக்கலாம். எப்படியாயினும், அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு அவர்களுடைய சுதந்திரம் பாவ செயல்களைச் செய்ய அங்கீகாரம் கொடுத்தது என நம்பினர்.* (Soards, 131.) [8]*"பவுல் முன்பு சபை பரிசுத்த ஆவி வாசம் பண்ணும் ஆலயம் என்பதை குறிப்பிட்டு உறுதிப் படுத்தினார் [3:16, 17] என்பதையே இங்கு தனிப்பட்ட ஒவ்வொரு சபை விசுவாசிக்கும் பொருந்தும்"* (Coffman, 92-93). [9]*சோர்ட்ஸ், 6:19, 20ல் குறிப்பிடப்பட்டுள்ள "சரீரம்" இன்னமும் சபையைக் குறிக்கக் கூடியதாயிருக்கிறது என்று நம்பினார், இந்த வசனங்களில் சொல்லப்படும் பிரதி பெயர்ச்சொற்களெல்லாம் பன்மையில் சொல்லப்பட்டுள்ளது.* (Soards, 133-34.) *பன்மை பெயர்ச் சொற்கள் எல்லாம் வலியுறுத்துவதற்காக பவுல் ஏற்கனவே கொரிந்து சபை ஒவ்வொரு தனி அங்கத்தினர்களைக் குறித்து சொன்னது உண்மையாயிருக்கிறது.*

7

திருமணத்தைக் குறித்த தேவனுடைய போதனை தேவைப்பட்ட சபை

(1 கொரிந்தியர் 7:1-40)

கொரிந்து சபையார் குழப்பமான கேள்விகளைக் கேட்டு பவுலுக்கு எழுதியிருந்தனர். "நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக் குறித்து ..." (7:1) என்று பவுல் குறிப்பிட்டார்; இதே போன்ற பதங்களை நிருபத்தின் மற்ற கேள்விகளுக்கும் பதில் கொடுக்கும் முன்னுரையாக பயன்படுத்துகிறார்.[1]

அதிகாரம் 7ல் வசனப் பகுதியில் குறிப்பாக எழுதப்படாத இக் கேள்விகளுக்கு பதிலளிக்கத் துவங்குகிறார். கொரிந்து சகோதரர்கள் "அப்பொழுதிருந்த துன்பத்தின்" வெளிச்சத்திலே பிரச்சனைகளைச் சந்தித்தார்கள் (7:26).[2] ஒரு கிறிஸ்தவன் விவாகம் (திருமணம்) பண்ணவேண்டுமா கூடாதா என்பதற்கு பவுலின் வழிநடத்துதல் அவர்களுக்குத் தேவைப்பட்டது. அவர்களில் ஒருவர் கிறிஸ்தவராக இருந்து, மற்றவர் கிறிஸ்தவரல்லாதிருந்தால் அந்தத் தம்பதி என்ன செய்ய வேண்டும் என்பதிலே அவர்களுக்குக் குழப்பமிருந்தது.

"பொதுவாக கிறிஸ்தவர்களுக்கு திருமணத்தைக் குறித்த விவரம் என்ன?" (7:1-11)

"ஒழுங்கீனத்தைத் தவிர்க்க, திருமணம் செய்" (7:1-9)

திருமணம் ஒழுங்கீனத்தை தவிர்க்க முடியும் எனும் கருத்தை பவுல் முதலாவதாக வைக்கிறார் (7:1-9). அப்போஸ்தலன் ஒரு பொதுவான வழிகாட்டலை முன் நிறுத்துகிறார்: "ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது" (7:1). ஒரு மனிதன் பெண்ணிடம் நெருக்கமான உறவு வைத்துக் கொள்ளாமலிருந்தால் அவன் நல்லதை செய்வான்; இன்னொரு வார்த்தையில் சொன்னால், திருமணம் செய்யாமலிருப்பது ஒரு மனிதனின் நல்ல கருத்து.[3] எப்படியாயினும், வேசித்தனம் இராதபடிக்கு "அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவளாயிருக்க வேண்டும்." என்று பவுல் கூடுதலாகக் குறிப்பிட்டார் (7:2). எனவே, திருமணம் செய்ய வேண்டிய காரணங்களில் ஒன்று, ஒழுங்கீனத்தை தவிர்ப்பதற்காக.[4]

மேலும் புருஷன்,மனைவி இருவருமே தங்களின் துணைக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டும் என்றும் பவுல் சொன்னார் (7:3). அதாவது ஒவ்வொருவரும் தனது துணையின் பாலுணர்வு ஆசைகளை திருப்தி

செய்தலைத் தேட வேண்டும். அவனோ அவளோ தன் சொந்த சரீரத்துக்கு அதிகாரியல்ல என்பதையும், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஒப்புக் கொண்டு, பக்தி சம்பந்தப்பட்ட காரியங்களுக்காக சில காலம் பிரிந்திருந்தாலொழிய, தனது துணையின் பாலுணர்வு உரிமையை புறக்கணிக்கக் கூடாது (7:4, 5).

கொரிந்துவிலிருந்த சில அங்கத்தினர்கள், தங்களைச் சுற்றிலுமிருந்தவர்களின் மூர்க்கத் தனமான பாலுணர்வு ஒழுங்கீனங்களால் மனப்பாதிப்படைந்து, கிறிஸ்தவர்கள் திருமணம் பண்ணினாலும் பாலுணர்வுக் காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது என்று தீர்மானித்திருந்தனர்.[5] இந்தக் காரியத்துக்காக தேவன் கொடுத்த நிவாரணம், "ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாதபடியால் சாத்தான் உங்களைத் தூண்டி விடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்" (7:5).

பவுல் தொடர்ந்து,

> விவாகமில்லாதவர்களையும் கைம் பெண்களையும் குறித்து நான் சொல்லுகிறது என்னவென்றால், அவர்கள் என்னைப் போல் இருந்து விட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும் ஆகிலும் அவர்கள் விரத்தராயிருக்கக் கூடாதிருந்தால் விவாகம்பண்ணக்கடவர்கள்; வேகிறதைப்பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நல்லது (7:8, 9).

என்று சொன்னார். கொரிந்தியர்கள் விவாகம் பண்ணாமலிருப்பது நலமென்றாலும், அவர்கள் விவாகம் பண்ணினாலும் தவறல்ல. இந்த வழி காட்டல்கள் "விவாகமில்லாதவர்களுக்கும்" "விதவைகளுக்கும்" சொல்லுகிறார் (7:8). திருமணம் செய்யாமலேயே வாழ்கிற வரம் எல்லோருக்கும் இருப்பதில்லை (7:7). ஆதலால், விரத்தராய் (பரிசுத்தமுள்ளவராய்) இருக்கக் கூடாதென்றால், "விவாகம் பண்ணக்கடவர்கள்; வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்" (7:9).[6]

"நீங்கள் விவாகம் பண்ணிக் கொண்டிருந்தால், விவாகம் பண்ணினவர்களாகவே தரித்திருங்கள். விவாகரத்து செய்யாதிருங்கள்" (7:10, 11)

பிறகு கிறிஸ்தவத் தம்பதிக்கு தான் கொடுத்தக் கட்டளை தன்னுடையதல்ல கர்த்தருடையது என்று போதித்தார் (7:10).[7] ஒரு வேளை ஒரு மனைவி தன் கணவனை விட்டுப் பிரிந்து போனால், அவள் "விவாகமில்லாதிருக்கக்கடவள் அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்" (7:11). பவுல் இயேசு கிறிஸ்துவின் போதனையை அப்படியே பிரதிபலித்து, இங்கே பேசுகிறார். புருஷனும் மனைவியும் விவாகரத்து (தள்ளி விடுதலை) செய்வது தேவனுடைய உத்தேசமல்ல என்று இயேசு கூறியிருந்தார் (மத்தேயு 19:4-6).

"தம்பதிகளில் ஒருவர் விசுவாசமுள்ளவராயிருந்து மற்றவர் விசுவாசமில்லாதிருந்தால் திருமண பந்தம் முறியலாமா?" (7:12-24)

மனைவியானவள் தனது புருஷனை விட்டுப் போகக் கூடாதென்றும் புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடக் கூடாதென்றும், சொன்ன பிறகு பவுல் ஒரு விசேஷித்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்: அவிசுவாசியான ஒருவருடன்

ஒரு கிறிஸ்தவன் விவாகம் செய்திருப்பது பற்றி என்ன?

கிறிஸ்தவன் கிறிஸ்தவரல்லாதவருடன் தொடர்ந்து வாழும்படி எதிர் பார்க்கப்படுகிறானா? எஸ்றாவும், நெகேமியாவும் - யூதர்கள் தங்களின் அந்நிய ஜாதியான மனைவிகளை தள்ளிவிடச் சொல்லி - அவர்களுடைய அவிசுவாசமுள்ள துணையிடமிருந்து விலகும்படி எதிர்பார்க்கப் பட்டதைக் குறித்து கொரிந்தியர்கள் ஆச்சரியப்பட்டிருக்கலாம் (எஸ்றா 10:10-12; நெகேமியா 13:23-30).

"நீங்கள் கிறிஸ்தவராயிருப்பின் அவிசுவாசமுள்ள துணையுடன் திருமண பந்தத்திலேயே நிலைத்திருங்கள்" (7:12-16)

பவுல் கேட்கப் பட்ட கேள்விக்கு பதில் அளித்து ஒரு சாராம்ஸமாக, "உங்கள் அவிசுவாசமுள்ள துணையை விவாகரத்துச் செய்ய வேண்டாம்*" (7:12, 13)[8] என்றார். ஏன்? ஒரு வகையில், அவிசுவாசியுடனான விசுவாசியின் விவாகம் அவிசுவாசியை பரிசுத்தமாக்குகிறது (7:14).[9] மேற்கொண்டு, அவிசுவாசமுள்ள துணையுடன் ஒரு கிறிஸ்தவன் திருமண பந்தத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தால், அவர் (அவிசுவாசமுள்ள) அவனையோ அவளையோ கிறிஸ்துவிடம் வழி நடத்த ஏதுவாகலாம் (7:16).*

எப்படியிருப்பினும், இந்த கருத்துடன் கூட்டி: "உங்கள் அவிசுவாசமுள்ள வாழ்க்கைத் துணை உங்களை விட்டு பிரிவதென்று முடிவு செய்தால்," அவனையோ அவளையோ உங்களோடு தொடர்ந்து வாழும்படி வலியுறுத்த வேண்டாம். கிறிஸ்தவன் "இப்படிப்பட்ட விஷயத்தில் அடிமைப்பட்டவனல்ல" என்று பவுல் சொன்னார் (7:15). விவாகம் செய்து கொள்ள விருப்பமில்லாதவருடன் விவாகம் செய்யும்படி யாரையும் வற்புறுத்த தேவன் எதிர் பார்ப்பதில்லை.[10] கார்ல் ஹொல்லாடே தெளிவான நிவாரணத்தை இந்தப் பிரச்சனைக்கு முன்பாக வைக்கிறார்:

> *சில விளக்கவுரையாளர்கள் இதை, "பிரிந்து போனவள் இனியும் கணவனுக்குக் கட்டுப் பட்டவள் அல்ல, எனவே அவள் மறுமணம் செய்ய விடுதலை பெற்றிருக்கிறாள்" எனும் அர்த்தத்தில் எடுத்துக் கொண்டாலும், இது அவ்வளவு சுலபமானதல்ல. முதலாவதாக, இந்த வசனப்பகுதி "அவள் கட்டுப்பட்டவளல்ல" என்று பேசுகிறது. இரண்டாவதாக, ஆரம்பத்தில் அவர் இதை சரி என்று ஒப்புக் கொள்ளாவிட்டாலும், இப்பொழுது ஒப்புக் கொண்டிருக்கிறார் (ஒப்பீடுக 7:11). இங்கே குறிப்பிடப்படும் பொருள் என்னவெனில், விசுவாசமுள்ள துணை பிரயோஜனமற்ற உறவுமுறையைக் காப்பதற்குக் கட்டுப்பட்டவரல்ல என்பதுதான். காரணம்: தேவன் நம்மை சமாதானத்திற்கென்று அழைத்திருக்கிறார். மனுஷர்கள் தொடர்ச்சியான குழப்பத்தில் வாழ்வதை அவர் விரும்புவதில்லை; இராஜ்யத்துக்குள்ளோ, புறம்போ, அல்லது அதனிமித்தமாகவோ அப்படி வாழ அவர் விரும்புவதில்லை.[11]*

"நீங்கள் கிறிஸ்தவராயிருந்தால், அவிசுவாசமுள்ள உங்கள் துணையுடன் வாழ்ந்து, இந்த உதாரணங்களை [விளக்கங்களை] பிரதி பலியுங்கள்" (7:17-24)

யாருமே தனிமையாவதை விரும்பாத பவுல், ஒவ்வொருவரும்

கிறிஸ்தவனாக அழைக்கப்பட்ட நிலமையிலேயே தரித்திருக்க வேண்டும் என்று சொன்னார். ஒருவர் அழைக்கப்பட்ட நிலையிலேயே தரித்திருப்பதற்கு அவர் இரண்டு உதாரணங்களை அவர் கொடுக்கிறார் (7:17-24). ஒரு யூதன் (அல்லது விருத்தசேதனம் பெற்றவன்), யூதனாகவே நிலைத்திருக்கட்டும், ஒரு புறஜாதி (விருத்தசேதனம் செய்யப்படாதவன்) யூதனாக மாற வேண்டுவதில்லை. ஒரு அடிமையானவனுக்குச் சொல்லும் போது, "அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்; நீங்கள் சுதந்திரவாளியாக விடுபட விரும்பினால், அப்படிச் செய்யுங்கள்" (7:21).[12] ஒவ்வொரு உதாரணத்துக்குப் பிறகும், கிறிஸ்தவன் தான் அழைக்கப் பட்ட நிலைமையிலேயே தரித்திருக்கக் கடவன் என்று பவுல் குறிப்பிட்டார் (7:21, 24).

"மணமாகாதவர்களைக் குறித்து என்ன?" (7:25-38)

"சூழ்நிலைக் கண்ணோட்டத்தில் தனிமையாய் இருப்பதே நலம்" (7:25-31)

பவுல் இன்னொரு கேள்விக்கு பதிலளிக்கத் துவங்குகிறார்: "தனிமையில் இருப்பவர்கள் விவாகம் பண்ண முயற்சிக்கலாமா?"

> அன்றியும் கன்னிகைகளைக் குறித்து, கர்த்தரால் எனக்கு கட்டளை இல்லை. ஆகிலும் நான் உண்மையுள்ளவனாயிருக்கிறதற்குக் கர்த்தரால் இரக்கம் பெற்று, என் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துகிறேன். அதென்னவெனில், இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம் விவாகம் பண்ணாமலிருப்பது மனுஷனுக்கு நலமாயிருக்கு மென்று எண்ணுகிறேன். நீ மனைவியோடே கட்டப் பட்டிருந்தால், அவிழ்க்கப்பட வகை தேடாதே; நீ மனைவி இல்லாதவனாயிருந்தால் மனைவியைத் தேடாதே. நீ விவாகம் பண்ணினாலும் பாவமல்ல; கன்னிகை விவாகம் பண்ணினாலும் பாவமல்ல. ஆகிலும் அப்படிப் பட்டவர்கள் சரீரத்திலே உபத்திரவப்படுவார்கள்; அதற்கு நீங்கள் தப்பவேண்டுமென்றிருக்கிறேன். மேலும், சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், இனிவரும் காலம் குறுகினதான படியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவகளில்லாதவர்கள்போலவும், அழுகிறவர்கள் அழாதவர்கள் போலவும், சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள் போலவும் ... (7:25-31).

தனிமையிலிருப்பவர்களுக்கு அவர் சூழ்நிலை இருப்பதைப் பார்க்கும் போது தனிமையாகவே இருப்பது நல்லது என்று சொன்னார்; ஆனால் அவர்கள் விவாகம் பண்ணினாலும் பாவம் செய்வதில்லை என்பதைக்கூறி அவர்களைத் திடப்படுத்தினார். வசனம் 26, இது அவர்களுக்கு ஏன் முக்கியமானது என்பதைக் குறிப்பிடுகிறது; "நாம் கடினமான காலத்தினூடே போய்க் கொண்டிருக்கிறோம்" (CEV); அதாவது அவர்கள் இக்கட்டில் இருந்தார்கள் (NIV). பவுலின் அறிவுரை வரும் "உபத்திரவத்துக்கு அவர்கள் தப்ப வேண்டும்" என்பதே (7:28). பாடுகள் (KJV) "இந்த உபத்திரவங்கள்" இனி வரும் காலங்களில் கொடிதாயிருக்கும் என்பது, குழந்தைகளைப் பெற்றெடுப்பது, "வளர்ப்பது மற்ற குடும்பக்

கடமைகள், பொறுப்புகள்,"[13] *அடுத்த வசனத்தில் கண்டுள்ளபடி.*

"சம்பந்தப் பட்டவைகளிலிருந்து விடுதலை" (7:32-38)

உபத்திரவ நேரங்களில் ஒரு கிறிஸ்தவன் தனித்திருந்தால் கஷ்டங்களும் பாடுகளும் அவனைக் குறித்து மட்டுமே சிந்திக்க வைக்கும். அவன் விவாகம் பண்ணி குடும்பத்தோடு இருந்தால், தன் முழுக்குடும்பத்துக்கும் அக்கரை காட்ட வேண்டியிருக்கும். தனிமையிலிருக்கும் போது தனக்காக மட்டுமே சிரமத்தை மேற் கொள்ளுவதைக் காட்டிலும் ஒருவன், தனக்கென ஒரு குடும்பமாகி அதன் வாழ்வாதாரம் முழுவதும் தன்னையே சார்ந்திருப்பதை அறிந்து ஒருகிறிஸ்தவன் கிறிஸ்துவுக்காக தைரியமாக எழுந்து நிற்பது, மற்றும் தன் உயிரையே அபாயத்திற்குள்ளாக்குவது போன்ற சிரமத்தை எடுத்துக் கொள்வது அவனுக்கு மிகவும் கடினமானதாக இருக்கும்.

இந்த உபதேசங்களெல்லாம் கிறிஸ்தவர்களின் "சுய பிரயோஜனத்துக்காகவே" (7:35அ). பவுல் அவர்களுக்கு "கடினமான நேரத்தைக் கொடுக்க வேண்டும்" என்பதற்காக முயற்சிக்கவில்லை. அவர்களுடைய வாழ்க்கையில் உபயோகமான ஒரு வழியைப் பரிந்துரையாக சொல்லுகிறார் (7:35ஆ).

அதிகாரம் முழுக்க, அதே கருத்து சொல்லப் படுவதை நாம் காண்கிறோம்: "கூடுமானால் விவாகம் பண்ணாதிருந்தால் நலமாயிருக்கும்."

> *7:1 - "ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது" (அதாவது விவாகம் பண்ணாமலிருப்பது).*
>
> *7:7 - "எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன்" (பவுல் தனித்திருந்தார்). "... அவர்கள் என்னைப் போல இருந்து விட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும்."*
>
> *7:26, 27 - "... விவாகமில்லாதிருப்பது மனுஷனுக்கு நலமாயிருக்கு மென்று எண்ணுகிறேன் ... மனைவியைத் தேடாதே."*
>
> *7:32, 33 - "நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன் ... விவாகம் பண்ணாதவன் கர்த்தருக்குரியவைகளுக்காக கவலைப்படுகிறான். விவாகம் பண்ணினவன் ... உலகத்திற்குரியவைகளுக்காக கவலைப்படுகிறான்."*
>
> *7:38ஆ - விவாகம் பண்ணிக் "கொடாமலிருக்கிறவனும் அதிக நன்மை செய்கிறான்."*
>
> *7:40 - விதவையானவள் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக் கொள்ள விடுதலையாயிருக்கிறாள். "ஆகிலும் என்னுடைய அபிப்பிராயத்தின்படி, அவள் அப்படியே இருந்து விட்டால் பாக்கியவதியாயிருப்பாள்."*

கிறிஸ்தவன் திருமணம் செய்யாமலிருப்பது தான் நலமென்று பவுல் எப்போதுமே எண்ணிக்கொண்டிருக்கவில்லை. விவாகத்தின் உயர்வை கிறிஸ்துவையும் சபையையும் ஒப்பிட்டு கணவன் மனைவி உறவை அவர் தெளிவாக்குவதிலிருந்தே சிறந்த மதிப்பைக் கொடுத்தார் என்று அறிவோம் (எபேசியர் 5:23-31). வேறு உண்மைகளும் பவுல் விவாக விஷயத்தை ஒப்புக் கொள்வதைக் காட்டுகின்றன.[14]

(1) கொரிந்தியர்களுக்கு அவர் குறிப்பிட்டிருப்பது விதி விலக்கான சூழ்நிலைகள் (7:26). விவாகத்தை தாழ்ச்சியாகப் பார்ப்பதை விட, "இப்பொழுதிருக்கிற உபத்திரவத்தினிமித்தம்" கிறிஸ்தவன் விவாகமில்லாமல் தனிமையாய் இருப்பது நலமென்கிறார் பவுல். மற்ற நேரங்களிலே இதுவே உண்மையல்ல.

(2) விவாகம் செய்வது பாவமல்ல. பவுல் மீண்டும் மீண்டும் கிறிஸ்தவன் விவாகம் பண்ணினாலும் பாவமல்ல என்பதைப் பேசுகிறார்:

> *7:9 - "விரத்தரராயிருக்கக் கூடாதிருந்தால் அவர்கள் விவாகம் பண்ணக் கடவர்கள்."*
>
> *7:28 - "நீ விவாகம் பண்ணினாலும் பாவமல்ல."*
>
> *7:36 - "அவன் தன் மனதின்படி செய்யக் கடவன்; அது பாவமல்ல, விவாகம் பண்ணட்டும்."*
>
> *7:38அ - "அவளை (தனது கன்னிகையான புத்திரியை) விவாகம் பண்ணிக் கொடுக்கிறவனும் நன்மை செய்கிறான்."*

(3) "கூடுமானால் விவாகம் செய்யாமலிருங்கள்" என்று பவுல் குறிப்பிடுவது, தனது சொந்தக் கருத்தைச் சொல்லுகிறார், அது கர்த்தரிடமிருந்து வந்த வார்த்தையல்ல. தனது சொந்தக் *கருத்தைச்* சொல்லுவதாக வலியுறுத்தி, கொரிந்தியர்கள் விவாகம் பண்ணாதிருப்பது நலம் என்று வலியுறுத்தினார். மேலும் அவர்கள் பரலோகத்துக்குப் போக என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் சிந்தியாமல், அவர்களின் வாழ்க்கையை சிறப்பாக்க தனது கருத்தை அவர்களுக்கு விளக்கப் படுத்தினார். பின் வசனங்கள் இந்த வலியுறுத்தல்களை ஆதாரமாக்கி காட்டுகின்றன:

> *7:6, 7 - "இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், யோசனையாகச் சொல்லுகிறேன், எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன்."*
>
> *7:25 - "என் அபிப்பிராயத்தைத் தெரியப் படுத்துகிறேன்."*
>
> *7:32, 35 - "நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன்"; "இதை நான் உங்களைக் கண்ணியில் அகப்படுத்த வேண்டுமென்று சொல்ல வில்லை."*
>
> *7:40 - "என்னுடைய அபிப்பிராயத்தின்படி அவள் அப்படியே இருந்து விட்டால் பாக்கியவதியாய் இருப்பாள்."*

இந்த சூழ்நிலைகளில் பவுலின் அறிவுரைகள் ஒரு முக்கியமான உண்மையை விளக்கப் படுத்துகிறது. சில விஷயங்கள், பாவம் என்கிற ரீதியில், தவறு இல்லாமல் இருக்கலாம்; சில காரியங்களைச் செய்ய வேண்டாமென மற்றவர்களுக்கு சொல்வதில் நல்ல காரணங்கள் இருக்கலாம் அல்லது செய்ய வேண்டாம் எனச் சொல்வதை மற்றவர்கள் பின்பற்றாத படி செய்யலாம்.

"விதவைகளைப் பற்றி என்ன?" (7:39, 40)

அடுத்ததாக, பவுல் விதவைகள் மறுமணம் செய்யலாமா கூடாதா என்கிற நான்காவது கேள்விக்கு பதிலளிக்கிறார். அவர் முதலாவதாக விதி

முறைகளைக் குறிப்பிடுகிறார்: "மனைவியானவள் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்" (7:39அ; ரோமர் 7:2 யும் காண்க). விவாகம் வாழ் நாள் காலத்துக்குரியது! "தன் புருஷன் மரித்த பின் தனக்கு இஷ்டமான எவனையாகிலும் விவாகம் பண்ணிக் கொள்ள விடுதலையாயிருக்கிறாள்" (7:39 ஆ). திருமணக் கட்டுக்களை மரணம் முறிக்கிறது. விதவைப் பெண்களும் மனைவியை இழந்த ஆண்களும் மறுமணம் செய்ய விடுதலைப் பெற்றிருக்கிறார்கள். இருப்பினும், தகுதிப்படுத்தும் இந்த வார்த்தைகளையும் பவுல் சேர்த்துக் கொள்கிறார்: "கர்த்தருக்குள்ளானவர்களை" (7:39இ). கிறிஸ்தவ விதவையோ மனைவியை இழந்தவரோ "கர்த்தருக் குள்ளானவர்களை" விவாகம் செய்ய வேண்டும் - அதாவது அவளோ அவனோ கிறிஸ்தவரை மட்டுமே விவாகம் பண்ண வேண்டும். புதிய இண்டர் நேஷனல் மொழிபெயர்ப்பாளர்கள், "அவள் தனக்கு இஷ்டமான யாரை வேண்டுமானாலும் விவாகம் பண்ண விடுதலை பெற்றிருக்கிறாள், ஆகிலும் அவன் கர்த்தருக்குரியவனாயிருக்க வேண்டும்" என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

இருந்தபோதிலும், இப்போதிருக்கிற உபத்திரவத்தின் காலத்தினால், கிறிஸ்தவ விதவை தனிமையில் இருந்து கொள்வது அவளுக்கு நல்லது; பவுலுடைய அபிப்பிராயத்தில், அவள் தனித்து இருப்பது அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் (7:40). அவர் தன்னுடைய அபிப்பிராயத்தை வலியுறுத்தி, "என்னிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டென்று எண்ணுகிறேன்" என்றார். "என்னிடத்திலும் ... ஆவி உண்டென்று . . . எண்ணுகிறேன்" எனும் வார்த்தைகளை சொல்ல நயத்திற்காக பவுல் பயன்படுத்தியிருக்கலாம். ஆவியானவர் அவரிடத்தில் இருப்பதை அவர் நன்றாகவே அறிந்திருந்தார். ஆகிலும், தனக்குள்ள உறவு முறையை இன்னும் சற்று கூடுதல் தன்னடக்கத்துடன் மற்றவர்கள் அவரது செய்தியை இன்னும் மதிப்புடன் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அப்படிச் சொன்னார். அவரது வாசகர்கள் தமது அபிப்பிராயத்தை ஒரு சட்டமாக ஏற்றுக்கொள்ள அவர் விரும்பவில்லை; மாறாக தனது ஆலோசனைகளை வினயமாக அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர் விரும்பினார்.

முடிவுரை: இன்றைய சபைக்குத் தேவையான செய்தி

இந்த செய்திகளின் உபதேசங்களை இன்றைய உலகத்தில் நாம் எப்படி பயன்படுத்த இயலும்?

பவுல் சொன்னவைகளில் பெரும்பாலான செய்தி நேரடியாக நமக்குப் பொருந்தக் கூடியவைகளாயுள்ளன. அன்று போலவே இன்றும், வேசித்தனம் இல்லாதபடிக்கு நாம் விவாகம் பண்ணவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் . . . தேவனுடைய விவாகச் சம்பந்தப்பட்ட திட்டப்படி, ஒருவருக்கொருவர் பாலுறவில் திருப்திபடுத்த வேண்டும் . . . விவாகத்தின் கட்டு வாழ்நாள் முழுவதும் இருக்கவேண்டும் என்பது தேவனுடைய எண்ணம் . . . கிறிஸ்தவனின் வாழ்க்கைத் துணை அவிசுவாசியாயிருக்கிறார் என்பதற்காக தள்ளி விடுதலை தேவன் அனுமதிப்பது இல்லை . . . ஒரு கிறிஸ்தவன் விவாகக் கட்டுக்களால் வாழ்நாள் முழுவதும் கட்டப்பட்டவன், ஆகிலும் தனது துணையின் மரணத்துக்குப் பிறகு மறுமணம் செய்ய விடுதலையாயிருக்கிறார் - "கர்த்தருக்குள்ளானவர்களை மட்டும்" . . . இறுதியாக, சில சூழ்நிலைகள்

கிறிஸ்தவன் விவாகம் பண்ணாமல் தனிமையாயிருப்பதை நலமாக்குகின்றன. வெளிப்புற சூழ்நிலைகள் எவ்விதத்திலும் கிறிஸ்தவன் விவாகம் செய்வதை தவறாக்காது.

இன்னும் விரிவான பயன்பாட்டையும் நாம் காணலாம். இன்று அநேக குடும்பங்களில் பிரச்சனைகள் இருக்கிறபடியால், விவாகத்தைக் குறித்தும், குடும்பத்தைக் குறித்தும் நாம் போதிக்க வேண்டிய அவசியத்தை இந்த அதிகாரம் ஆலோசனையாகச் சொல்லுகிறது. விவாகரத்து என்பது இன்று சபையிலும் கூட அன்றாட பொது நிகழ்ச்சியாக இருக்கிறது. பிரிவு ஏற்படாத குடும்பங்களைக் காக்க நமக்கிருக்கும் ஒரே நம்பிக்கை குடும்பம் எனும் தலைப்பில் நாம் போதிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அதோடு கூட, விவாகத்தைக் குறித்தும், விவாகரத்தைக் குறித்தும், உலகத்தில் இன்று அநேகம் பேர் தங்கள் குடும்பங்களில் பிரச்சனைகளை அனுபவிக்கிறார்கள், அவர்கள் சபையின் மீது பற்று வைக்கத்தக்கதாக, சபை அவர்களது பிரச்சனைகளை தீர்க்க உதவுவதால், குடும்பத்தைக் குறித்தும் நாம் போதிக்க வேண்டும்.

குறிப்புகள்

[1]கொரிந்தியர்கள் எழுதின கேள்விகளுக்குப் பதில் கொடுக்கும் படியாக, "எழுதின காரியங்களைக் குறித்து" என்று ஆரம்பிக்கிறார் (7:1; 7:25; 8:1; 12:1). 16:1-லும் இதைப் பயன்படுத்துகிறார், இதினால் அவர்கள் காணிக்கையைக் குறித்து கேட்டிருக்கிறார்கள் என்று ஆலோசிக்க வைக்கிறது. [2]இப்போது உண்டாயிருக்கிற துன்பம் என்னவென்று நமக்குத் தெரியாது (7:26). அந்தப் பகுதியில் மிகவும் கொடிய உபத்திரவம் சபைக்கு வரவிருந்ததாக சிலர் நம்புகிறார்கள். [3]"ஸ்திரீயைத் தொடாமலிருப்பது" என்பது நேரடி மொழிபெயர்ப்பு. புதிய இண்டர் நேஷனல் மொழிபெயர்ப்பில் இந்தக் கருத்து எடுத்துக் கொள்ளப்பட்ட விதமானது: "மனிதன் விவாகம் செய்யாமலிருப்பது அவனுக்கு நல்லது." "விபச்சார வேசித்தனங்களைச் செய்யாமலிருப்பது நல்லது" என்ற கருத்தோடு பவுல் விட்டிருப்பாரானால், அதைத் தடுத்திருக்க மாட்டார்; ஏனெனில் ஏற்கனவே வலிமையான வார்த்தைகளால்: "வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்" என்று சொல்லியிருந்தார் (6:18). [4]சிலர் நம்பிக் கொண்டிருக்கிறபடி விவாகம் பண்ணி பாலுறவு கொண்டு பிள்ளைகளை பெற்றெடுப்பது மட்டுமே விவாகத்தின் நோக்கம் என்பது உண்மையல்ல. [5]"ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள்" (7:5), என்று பவுல் சொன்னார். அநேகமாக சிலர் தங்களுடைய துணைவருடன் பாலுறவு கொள்வதை தவிர்த்துக் கொண்டு வந்திருக்கலாம். இது அநேகமாக அஞ்ஞான ஆசாரங்களான பரிசுத்த விரத காலம் போன்ற சமய மரபுக்களின் பழக்கமாக இருந்திருக்கலாம். (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 159.) [6]"உணர்ச்சியுடன்" என்பது வலபக்கச் சாய்மான அச்செழுத்துக்களால் குறிப்பிடுகிறது. மூலப் பாஷையில் "வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்" எனும் எளிய வார்த்தைகளில் கூறப் படுகிறது. எப்படியாயினும் அநேக விளக்கவுரையாளர்களும், மொழிபெயர்ப்பாளர்களும் "உணர்ச்சி மிகுதியால் வேகிறதாக" ஒப்புக் கொள்கிறார்கள். [7]பவுல் தனது உபதேசம் "கர்த்தரிடத்திலிருந்து வந்ததாகக் குறிப்பிடும் போது, இயேசு பேசிய உண்மையான வார்த்தைகளைப் பேசியிருக்கலாம்." இந்த பூமியிலே இயேசு இருந்த போது, விவாகத்தைக் குறித்தும் விவாகரத்தைக் குறித்தும் தெளிவான உபதேசத்தைக் கொடுத்தார். பவுல் தனது உபதேசம்

தன்னிடமிருந்து வந்ததாகக் குறிப்பிடும் போது, அல்லது தனது கருத்துக்கள் தன்னுடையது எனக் கூறும்போது அவரது வாசகர்கள் தங்கள் வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொள்ள அறிவுறுத்தினார் அல்லது ஆலோசனை கொடுத்தார். தனது அபிப்பிராயத்தை தேவனுடைய கட்டளைக்கு ஒப்பாகச் (சமமாகக்) கூறவில்லை. [8]*இது பவுலின் கட்டளை, கர்த்தர் தமது போதனையில் கலப்படத் திருமணங்களைப் போதிக்க வில்லை (மத்தேயு 5 மற்றும் 19).* [9]*கொரிந்து கிறிஸ்தவர்களில் சிலர் ஒரு வேளை ஒரு கிறிஸ்தவன் அஞ்ஞான மதத்தைச் சேர்ந்த ஒருவரை விவாகம் பண்ணினால், அந்த நபருடைய அஞ்ஞான மதம் விவாகத்தைக் களங்கப்படுத்தி பரிசுத்தக் குலச்சலை ஏற்படுத்தக் கூடும் என்று நினைத்தனர். ஒரு அஞ்ஞானியாலும் அவரது மதத்தாலும் கெடுக்கப்படுவதைக் காட்டிலும், ஒரு கிறிஸ்தவனின் துணையால் ஒரு விவாகம் பரிசுத்தமாக்கப்படுகிறது என்று பவுல் உறுதிப்படுத்தினார்.* [10]*அவிசுவாசமுள்ள தனது வாழ்க்கைத் துணை பிரிந்து போன பிறகு - அவர் மறுமணம் செய்ய உரிமை பெற்றவரா? இந்த கேள்விக்கு இருபுறமும் விவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. எப்படியிருப்பினும் கிறிஸ்து விவாகரத்துக்கும் மறுமணம் செய்வதற்கும் ஒரே ஒரு காரணத்தை மட்டுமே முன் வைக்கிறார்: விபச்சாரம். இந்த வசனத்தில் விபச்சாரம் குறித்து தான் பேசுகிறது என்று நன்கு யூகிக்க முடியும். ஒரு கிறிஸ்தவரின் துணையாகிய அவனோ அவளோ விபச்சாரத்தையன்றி வேறே காரணத்துக்காக பிரிந்து போய் மறுமணம் செய்து கொள்வார்களானால், அவனோ அல்லது அவளோ விபச்சாரம் செய்கிறவர்கள் ஆகிறார்கள். இதனால் அந்தக் கிறிஸ்தவர் மறுமணம் செய்து கொள்வதற்கு விடப்படுகிறார்.* David Lipscomb, *A Commentary on the New Testament Epistles,* vol. 2, *First Corinthians*, ed. J. W. Shepherd (Nashville: Gospel Advocate Co., 1935; reprint, 1960), 102*ல் உயர்த்திபிடிக்கப்பட்டிருக்கிறது.*

[11]Carl Holladay, *The First Letter of Paul to the Corinthians,* The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1979; reprint, Abilene, Tex.: A.C.U. Press, 1984), 96. [12]*அடிமைத்தனம் குறித்த பவுலின் கருத்து ஆர்வத்தைத் தூண்டக் கூடியதாயுள்ளது. அடிமைகள் எப்பொழுதும் அடிமைகளாகத்தான் இருக்க வேண்டும், அதிகாரத்தை எதிர்த்துப் போராடக் கூடாது. அதைக் குறித்து அவர்கள் "கவலைப் படவும் கூடாது": அவர்கள் அடிமைகளானதால், மனந்தளர்ந்து போகவோ அல்லது கிளர்ச்சி பண்ணக் கூடியவர்களாகவோ மாறிவிடக் கூடாது. கிறிஸ்துவுக்குள்ளாக அவர்கள் விடுதலை பெற்றிருக்கிறார்கள், கிறிஸ்துவுக்குள் விடுதலையாக்கப் பட்டவர்கள் அடிமைகளாயிருக்கிறார்கள் (7:22). எப்படியிருப்பினும், பவுல் விருத்தசேதனமோ விருத்தசேதனமில்லாமையோ "ஒன்றுமில்லை" என்று சொல்லுவது போல் (7:19), அடிமைத்தனத்தைக் குறித்து சொல்லுவதில்லை. அடிமைத்தனம் என்பது "ஏதோ ஒன்று" - இயன்ற வரை தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று (7:23); மனுஷன் சுயாதீனனாய் இருப்பது நலம் (7:21). எனவே அடிமையாயிருப்பது தீமையானது என்பது போல் கருதினார்.* [13]Raymond C. Kelcy, *First Corinthians,* The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1967), 34. [14]*1 தீமோத்தேயு 4:1-3யும் காண்க. சத்தியத்தை விட்டு விலகும் காலத்தில் மனிதர்கள் "விவாகம் பண்ணாமலிருக்கும்படி" கட்டளையிடுவார்கள் என்று பவுல் சொன்னார். எபிரேயர் 13:4ல் அதை எழுதினார் விவாகம் கனப்படுத்தப்பட வேண்டியது என்று சொன்னார்.*

8

கிறிஸ்தவ சுயாதீனம் குறித்த பாடங்கள் தேவைப்படும் சபை

(1 கொரிந்தியர் 8:1–13; 10:14–11:1)

1 கொரிந்தியர் 8ல் அந்த சபையாரால் கேட்கப்பட்ட மற்றொரு பொதுவான கேள்விக்கு பவுலின் பதில் உரை: "விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசிக்கிற விஷயத்தைப் பற்றி என்ன?"[1] சற்று இடைவெளிக்குப் பிறகு அவர் 10:14ல், 9:1-10:13 ஆகிய வசனங்களைக் கடந்து இதே போன்ற பிரச்சனைகளை எப்படி சரி செய்வது குறித்தும் விக்கிரகாராதனை எப்படிப்பட்ட அழிவைக் கொண்டுவரும் என்பது பற்றிய உதாரணத்துடனும் தொடர்கிறார்.

விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவை பற்றிய பாடம் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்திருக்க வேண்டும். பட்டணம் முழுவதும் விக்கிரகங்கள் ஊடுருவியிருந்தன. அது வெறும் தொழுகைக்கான வழியாக இல்லாமல்; வாழ்க்கைக்கான வழியாக இருந்தது. அந்த சமுதாயத்திலே கிறிஸ்தவர்கள் எப்படி வாழ வேண்டியவர்களாயிருந்தனர்? உதாரணமாக, ஒரு விக்கிரக கோயிலுக்கு அவர்கள் போய், ஒரு ஐக்கிய விருந்துக்காக தங்களுடைய நண்பர்களை சந்தித்து, விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளை புசிக்கலாமா? விக்கிரகமானது ஒன்றுமில்லை என்று அறிந்திருந்தும் கிறிஸ்தவர்கள் விக்கிரக கோவில்களில் பலி செலுத்தப்பட்ட மாம்ச விருந்துகளில் பங்குபெறுவது தவறாக கருதப் பட்டதா? சந்தைகளிலுள்ள கடைகளிலே வாங்கப்படும் மாமிசம் விக்கிரகங்களுக்கு பலியிடப்பட்டவையா என்று கேட்டு வாங்க வேண்டுமா? ஒரு அவிசுவாசி கிறிஸ்தவனுக்கு உணவு பரிமாறும் போது உணவில் வைக்கப்படும் மாமிசத்தை, அந்த கிறிஸ்தவன் புசிக்கலாமா?

பவுல் இந்த கோள்விகளுக்கெல்லாம் பதில் அளிக்கும் அதே வேளையில், கிறிஸ்தவ சுயாதீனத்தை முறையாக பயன்படுத்துவதும், தவறாகப் பயன் படுத்துவதும் பற்றிய போதனையையும் போதித்தார்.

கிறிஸ்தவர்கள் சுயாதீனம் கொடுக்கப் பட்டிருக்கிறார்கள் (8:1-6)

கிறிஸ்தவர்கள் சிலகாரியங்களைச் செய்ய உண்மையிலேயே சுயாதீனம் பெற்றிருப்பது போன்றவற்றை, மற்ற கிறிஸ்தவர்கள் அதைத் தவறாக நினைத்தாலும் கூட, மறைமுகமாக பவுல் குறிப்பிடுகிறார். அவர்,

> *விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக் குறித்த விஷயத்தில், நம்மெல்லாருக்கும் அறிவுஉண்டென்று நமக்குத் தெரியுமே. அறிவு*

இறுமாப்பை உண்டாக்கும். அன்போ பக்தி விருத்தியை உண்டாக்கும் ...[2]

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை புசிக்கிற விஷயத்தைப் பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை என்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம். வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப் படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு. அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம் (8:1-6).

பவுல் பழைய ஏற்பாடு போதிக்கும் ஒரே தெய்வ வழிபாட்டைக் குறித்து பேசுகையில் (காண்க உபாகமம் 6:4), பொய்யான தேவர்கள் அல்லது "தேவர்கள் எனப்படுவோர்" இருப்பதாக பவுல் ஒப்புக் கொண்டுவிட்டார். "விக்கிரகமானது ஒன்றுமில்லை" என்று அவர் சொல்லுவதன் பொருள் உண்மையில் அப்படி ஒன்றும் இருப்பது இல்லை என்பது தான்; அவைகளுக்கு உயிரும் இல்லை பெலனும் இல்லை.

விக்கிரகமானது ஒன்றுமில்லை என்பதால், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகள் விக்கிரகங்களால் தீட்டுப்படுவதில்லை. ஒரு துண்டு மாமிசத்தை ஒரு கல்லின் மேல் வைப்பதால் அந்தக்கல் (அல்லது பாறை) ஆவிக்குரிய ரீதியில் மாமிசத்தை தீட்டுப்படுத்திவிடுமா? விக்கிரகம் கல்லைக் காட்டிலும் அதிகம் அல்ல. ஒரு மாமிசத்துண்டை விக்கிரகத்துக்கு சம்பந்தப் படுத்தி முன் வைப்பதால் தீமையானதாகி விடாது. வசனம் 8ல் பவுல், "போஜனமானது நம்மைத் தேவனுக்கு உகந்தவர்களாக்க மாட்டாது" என்று விளக்கமளித்தார். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட (உணவை) போஜனத்தைக் குறித்த எந்தப் பிரமாணமும் கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தாது (1 கொரிந்தியர் 10:19, 25; மாற்கு 7:19; ரோமர் 14:14 ஒப்பிடவும்). ஆதலால், இந்த சகோதரர்கள் எதை வேண்டுமானாலும் (அவைகள் ஒரு விக்கிரகத்திற்கு படைக்கப் பட்டதாயிருந்தாலும்) சிலர் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளா விட்டாலும், புசிக்க சுயாதீனம் பெற்றிருந்தார்கள்.

கிறிஸ்தவ சுயாதீனம் தவறாக பயன்படுத்தப்படலாகாது (8:7-13; 10:14-29)

கிறிஸ்தவர்கள் தங்கள் சுயாதீனத்தை தவறாகப் பயன்படுத்தும் எண்ணமுடையவர்களாயிருந்ததால், பவுல் இந்த நிருபத்தின் இந்தப் பகுதியை எழுதுவதில் முதன்மையான கவனம் செலுத்தி எழுதினார். கிறிஸ்தவ சுயாதீனம் தவறாகப் பயன்படுத்தப்படக்கூடுவதற்கான மூன்று வழிகளை அவர் விளக்கப்படுத்துகிறார்.

முதலாவதாக, "உங்கள் சுயாதீனத்தை ஒரு சகோதரனின் இடறுதலுக்கு ஏதுவாக பயன்படுத்தும்போது, அது தவறாக பயன்படுத்துவதாக இருக்கிறது" (8:9-13) என்று அவர் கூறினார்.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை புசிப்பது உண்மையில் தவறு

இல்லை என்று விளக்கப்படுத்திய பிறகு, ஆகிலும் எல்லாரும் இந்த விஷயத்தை அறிந்து கொண்டிருப்பதில்லை என்று பவுல் தொடர்ந்து சொல்லுகிறார். சபை குழுமத்திலுள்ளவர்களில் சிலர் கிறிஸ்தவராவதற்கு முன்பு, விக்கிரகங்களை வணங்குவதில் பழகியிருந்தனர். அவர்கள் அவர்களுடைய மரம் மற்றும் கற்களால் உருவாக்கப்பட்ட சிலைகளுக்கு ஏதோ பெலன் இருப்பதாக அவர்கள் நினைத்திருந்தனர். அவர்கள் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்திருந்தாலும், அவர்களின் கடந்தகால அஞ்ஞான பழக்க வழக்கங்கள் இன்னமும் அவர்களின் மனச்சாட்சியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. ஒரு விக்கிரகத்துக்கு பலிசெலுத்தும் போது, அந்த விக்கிரகத்தின் பிரசன்னத்தால் அந்த மாமிசம் ஆவிக்குரிய ரீதியில் பாதிப்படைகிறது என்று அவர்கள் நினைத்தார்கள். இதன் விளைவாக, அவர்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளை புசிக்கிறபோது. அவர்கள் ஏதோ தவறு செய்தது போலவும், அதினால் அவர்களுடைய மனச்சாட்சியில் தீட்டுப் பட்டது போலவும் நம்புகின்றனர்.[3]

தன்னைப் போன்று மற்றவர்களையும் கருதிக் கொண்டுள்ள ஒரு கிறிஸ்தவன் தன்னைக் காட்டிலும் அதிக (வேத) அறிவைப் பெற்ற மற்றொரு கிறிஸ்தவன் "ஒரு விக்கிரக கோவிலில்," ஒரு விக்கிரகத்துக்கு படைக்கப்பட்ட மாமிச உணவை புசித்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு காட்சியை பவுல் எண்ணிப் பார்க்கிறார். விக்கிரகங்களுக்கு கனத்தைக் கொடுக்கும்படியாக கட்டப்பட்ட கோவில்களில் ஐக்கியவிருந்து அறைகளுக்குச் சமமானவைகளாக கட்டப்பட்டிருந்தன; இந்த இடங்களில் கூடிவரும் ஜனங்கள் விழாக்கால விசேஷங்களில் உணவருந்தும் இடமாகப் பயன்படுத்துவர். ஒருவேளை கிறிஸ்தவர்களும் இந்த இடங்களில் உணவு உண்ணும்படி அழைக்கப்பட்டிருந்தார்கள். அங்கே பரிமாறப்படும் உணவுகள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாமிச உணவுகளாக இருக்கும். அறிவார்ந்த கிறிஸ்தவன் தான் புசிக்கிற உணவு விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவையென்ற உணர்வே இல்லாமல் அந்த உணவை மிகவும் சுவைத்து (அனுபவித்து) புசிக்கிறான். இதைக் கண்ணுறும் குறைவான அறிவு பெற்ற ("பலவீனமுள்ள"; 8:11) கிறிஸ்தவன் அதைக் கண்ணுற்று தனக்குள், "அவர் புசிப்பாரேயானால், நானும் புசிப்பேன்" என்று எண்ணிக் கொள்கிறான். பிறகு அவன் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாமிச உணவுகளில் கொஞ்சத்தைப் புசிக்கிறான் - அவன் புசிக்கும் போது, அவனுடைய மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்துகிறது: "நீ விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்ட மாமிசத்தைப் புசித்துக் கொண்டுள்ளாய்; நீ தவறு செய்து விட்டாய்" என்று சொல்லுகிறது. ஆதலால் அவன் பாவஞ் செய்கிறான்,[4] என்ற உணர்வால் "கெட்டுப் போகிறான்" (8:11; காண்க ரோமர் 14:15, 23).[5]

இந்தப் பாவத்தை பொருத்தமட்டில் யாருடைய தவறாக இருக்க முடியும்? வேத அறிவைப் பெற்ற சகோதரனுடைய தவறு என்பதாக பவுல் சொன்னார்: "பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப்போகலாமா? அவனுக்காக கிறிஸ்து மரித்தாரே. இப்படிச் சகோதரருக்கு விரோதமாய் பாவஞ் செய்து, பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியை புண்படுத்துகிறதினாலே, நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய் பாவஞ்செய்கிறீர்கள்" (8:11, 12).

இந்தக் காட்சியில், வேத அறிவைப் பெற்ற சகோதரன் என்ன செய்திருக்க வேண்டும்? தனது செயல்கள் ஒரு சகோதரனை பாவஞ் செய்ய வைக்கிறது என்பதையும், விக்கிரகங்ளுக்குப் படைக்கப் பட்டவைகளைப் புசிக்க தான்

சுயாதீனம் பெற்றிருந்தாலும், அவற்றைச் சாப்பிடாமல் விலகியிருந்திருக்க வேண்டும். வசனம் 13ல் தன்னையே உதாரணமாகப் பயன்படுத்தி: "ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாமிசம் புசியாதிருப்பேன்." [6]

பவுலின் போதனையை நமக்கு எப்படிப் பயன்படுத்துவது? கிறிஸ்தவர்கள் அநேக செயல்களைத் தவறானதாக நினைத்தனர். உதாரணமாக, ஆராதனையைக் குறித்து எண்ணற்ற கேள்விகள் எழுந்துள்ளன. ஸ்திரீகள் ஆராதனையில் கூடிவரும் போது முக்காடிட்டுக் கொள்வது அவசியமா? கர்த்தருடைய பந்தியில் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களை (சிறிய கப் களை) பயன்படுத்துவது தவறா? இப்படி எவ்விதக் கேள்வி எழுப்பப் பட்டாலும் - சம்பந்தப்பட்ட பிரச்சனையில் ஒருவர் சரியானவராகவே இருந்தாலும், அது குறித்து சரியான அறிவைக் கொண்டிருந்தாலும் - தனது செயல்பாடுகள் மற்ற கிறிஸ்தவர்களை பாவம் செய்ய வைத்து விடுமோ என்று பரிசீலிக்க வேண்டும். அப்படியிருக்குமாயின், அப்படிப்பட்ட செயலைச் செய்யாமல் விலகியிருக்க வேண்டும். வசனம் அவர் அதைச் செய்ய அனுமதித்தாலும் கூட அவர் விலகியிருப்பது நலம்.

பவுல் இங்கே ஒரு சகோதரனை இடறலடையச் செய்வது குறித்து - அதாவது பாவஞ் செய்யப் பண்ணுவது குறித்து பேசுகிறார் என்பதை நாம் உணரவேண்டும் (8:11) - அவரை "மனவருத்தப் படுத்துவதல்ல." யாராவது அவருக்கு விருப்பமில்லாத செயலைச் செய்து அவரை மனவருத்தம் அடையச் செய்கிற காரியத்தை அப்போஸ்தலன் சிந்திக்கவில்லை. மற்றவர்கள் தவறு செய்வதாக நினைக்கும் சகோதரர்கள் தங்களுடைய செயல்களால் பாவஞ் செய்கிறவர்கள் தங்களுடைய எண்ணங்களை சபையின்மேல் சாற்றிவிடக் கூடாது. எப்படியாயினும், இந்த விதியின் தகுதியாம்சம் விதியை வெறுமையாக்குவதில்லை. அதிகமான அறிவைப் பெற்ற கிறிஸ்தவன் மற்றவர்களைப் பாவம் செய்யப் பண்ணுகிற அளவுக்கு தங்கள் சுயாதீனத்தை தவறுதலாகப் பயன்படுத்தக் கூடாது.

இரண்டாவதாக, "தவறான காரியங்களில் பங்குபெறுவதன் மூலம் உங்கள் சுயாதீனத்தை தவறுதலாக பயன்படுத்தக்கூடும்" என்று பவுல் சொன்னார் (10:20-22). கிறிஸ்தவ சுயாதீனத்தைக் குறித்து தொடர்ந்து பவுல் பேசுகிறார், முதல் பார்வையில் பவுல் தாமே முரண்படுவதாக காணப்படுகிறார். விக்கிரக கோயில்களில் விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளைப் புசிப்பது தவறல்ல என்று ஏற்கனவே சொல்லியிருந்தார்; ஆனால் இங்கே "அப்படிப்பட்ட கோயில்களில் இருப்பதே தவறு" என்று சுட்டிக் காட்டுகிறார். "நீங்கள் அங்கே இருந்தால், நீங்களும் விக்கிரக ஆராதனையில் ஐக்கியம் கொள்ளுகிற அஞ்ஞானிகளில் ஒருவராக உங்களைக் காட்டும்."

இது முரண்பாடானதா? இல்லை, அதிகாரம் 8ல், பவுல் *விக்கிரக கோயில் வளாகத்தில் உள்ள விருந்து அறைகளில் அவர்களோடு அமர்ந்து புசிப்பதைக் குறித்துப் பேசினார்.* இந்த உணவு, மார்க்க ரீதியான எந்த கூடிவருதலுக்கும் சம்பந்தமில்லாதது. அதிகாரம் 10ல் *விக்கிரகம் வைக்கப்பட்டுள்ள அறையில் அவைகளுக்கு முன்பாக படைக்கப் பட்டதால் புனிதமான போஜனமானக் கருதி அங்கேயே புசிக்கிற உணவைக் குறித்து பேசுகிறார்.*[7] இந்தக் கண்ணோட்டத்தை மூன்று உண்மைகள் உறுதிப்படுத்துகின்றன: (1) "விக்கிரகாராதனைக்கு விலகியோடுங்கள்" என்று சொல்லி இந்தப் பத்தியை பவுல் ஆரம்பிக்கிறார்

(10:14) - அதாவது "விக்கிரக ஆராதனையை தவிருங்கள்" என்று கூறுகிறார். (2) அவர்களின் விக்கிரக விருந்துண்ணலை பவுல், கிறிஸ்தவர்கள் பங்கு பெறும் கர்த்தருடைய பந்திக்கும் யூதர்கள் பங்கு பெற்ற பலிகளை புசிப்பதற்கும் ஒப்பிடுகிறார் (10:16-18). ஒன்றுக் கொன்று இணையான இந்த ஒப்பிடுதல், அஞ்ஞானிகளின் மத சம்பந்தப்பட்ட விருந்தைப் பற்றி பவுல் கூறிக் கொண்டிருந்தார் என்று காட்டுகின்றன. (3) "பேய்களுடைய பந்திக்கும்" "கர்த்தருடைய பந்திக்குமுள்ள" வேறுபாட்டையும் பவுல் குறிப்பிடுகிறார் (10:21). மீண்டுமாக, "பேய்களுடைய பந்தி" என்பது மதசம்பந்தப்பட்ட விருந்தில் நெருக்கமாக பங்கு பெறுவதைக் குறிப்பிடுகிறது.

ஆகையால், ''விக்கிரகமோ,'' ''விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளோ" ஒன்றுமில்லை என்பதால், ஒரு விக்கிரகத்துக்குப் படைக்கப் பட்ட மாமிச போஜனத்தைப் புசிப்பது தவறு இல்லை (10:19), அஞ்ஞான மதரீதியான போஜனத்தில் அல்லது விருந்தில் விக்கிரகங்களுக்கு படைப்பதற்குச் சமமாக பங்கு பெறுவது பாவம். விக்கிரகமானது ஒன்றுமில்லை என்று அறிந்தும் பெருமையாயிருந்த கொரிந்தியர்கள் ஒருவேளை, "விக்கிரங்கள் மூலம் செயல்படுவதாக நினைக்கப் பட்ட தேவர்கள் உண்மையில் இல்லை, அஞ்ஞானிகள் மதத்தின் பக்தியாய் அவைகளுக்கு இடும் பலிகள் அர்த்தமற்றவை. ஆகையால், நான் விரும்பினால் அப்படிப்பட்ட மதம் சார்ந்த சேவைகளில் நானும் ஒரு அங்கமாக இருக்க விரும்புகிறேன்," என்று வாதிட்டிருக்கலாம். எந்த வகை சேவைகளில் பங்கு பெற்றாலும், அதைக் குறித்து அவர்கள் வாதிடுவதை பவுல் வன்மையாகக் கண்டித்து, அது அவர்கள் பிசாசுகளுடன் கொள்ளும் ஐக்கியம் என சுட்டிக் காண்பிக்கிறார் (10:21)! தேவன் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறார், தம்முடைய மக்கள் தம்மை மட்டுமே தொழுது கொள்ள வேண்டும் என அவர் விரும்புகிறார் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாய் இருந்தார்கள் (10:22).[8]

நாமும் கூட, நமது கிறிஸ்தவ சுயாதீனம் என்பது தெளிவற்ற ரீதியில் பயன்படுத்தி நமக்குப் பிரியமான வகையில் செயல் படுத்துகிற சுயாதீனமல்ல என்பதை மனதில் கொள்ள வேண்டும். இன்று மதசார்பு செயல்பாடுகளை தாம் அங்கீகரிக்காத வகையில் பயன்படுத்திக் கொள்வதற்காக தேவன் நமக்கு சுயாதீனத்தைக் கொடுக்கவில்லை.[9]

மூன்றாவதாக, உங்கள் அயலானை இடறலடையச் செய்கிற வகையில் உங்கள் சுயாதீனத்தை பயன்படுத்துவது தவறாகப் பயன்படுத்தலாகும் என்று அவர் குறிப்பிடுகிறார் (10:23-29அ).

பவுல் தனது உபதேசங்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கும் சிலருக்கு பதில் கொடுக்கிறார். அறிவார்ந்த ஒருவர், "விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளை புசிப்பதால், மற்றவர்களுக்கு எப்படிப்பட்ட பாதிப்புக்களை ஏற்படுத்தினாலும், எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு; எனவே விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை நாம் புசிக்கலாம்" என்று சொல்லக்கூடும். பவுல் அவர்களுக்குப் பதிலளித்து, "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் எனக்குத் தகுதியாயிராது, எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்தி விருத்தியை உண்டாக்காது" என்று சொன்னார் (10:23). ஒரு செயலைச் செய்வதற்கு அதிகாரம் இருந்தாலும், கிறிஸ்தவர்கள் மற்றவர்களை இடறலடையச்

செய்யாமல் அவர்களையும் விருத்தியடையச் செய்பவர்களாயிருக்க வேண்டும் என்று அவர் சொன்னார். நாம் நமது அயலார்களுக்கு நல்லதையே நினைக்க வேண்டும் (10:24).

தேவன் கொடுத்த - இந்த கட்டளையை குறிப்பிட்ட இரண்டு சூழ்நிலைகளுக்குப் பவுல் பயன்படுத்தினார். அவர், "கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசியுங்கள்; மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் எதையும் விசாரிக்க வேண்டியதில்லை'' இதினால் ஒருவருடைய மனச்சாட்சியும் இடறலடையாது என்று கிறிஸ்தவர்களிடம் கூறினார் (10:25 ஐக் காண்க). இப்படிப்பட்ட சுயாதீனம் அவர்களுக்கு ஏன் அனுமதிக்கப் பட்டது? ஏனெனில் காணப்படும் அனைத்தும் தேவனிடத்திலிருந்து வந்தவை (10:26).

அடுத்ததாக, பவுல், "நீங்கள் அவிசுவாசமுள்ள உங்கள் அயலானுடைய வீட்டில் விருந்துண்ணும்போது, எதையும் விசாரியாமல் உங்கள் முன் வைக்கப் படுகிற எதையும் புசியுங்கள். ஆகிலும் உங்களுக்கு விருந்தளிப்பவனோ அல்லது விருந்துண்கிற வேறு யாராகிலுமோ 'இது விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டது' என்று அறிவித்தால், புசியாதிருங்கள்'' (10:27, 28அ). இந்த உபதேசம் ஏன் முக்கியமானது? "உங்களுக்கு அறிவித்தவனிமித்தமும் மனச்சாட்சியினிமித்தமாகவும்; . . . உங்களுடைய சொந்த மனச்சாட்சியினிமித்தமல்ல, பிறனுடைய மனச்சாட்சியினிமித்தமாகவுமே'' (10:28ஆ, 29அ).

பவுல் இங்கே குறிப்பிடுகிற நபர் ஒரு பெலவீனமான சகோதரன் மீது காட்டும் கரிசனத்தால் அல்ல, ஒரு அவிசுவாசியைக் குறித்து தான். அவர், "நீங்கள் விக்கிரகத்திற்கு படைக்கப்பட்ட மாமிசம் புசிப்பதால் அவனுடைய மனச்சாட்சி பெலவீனப்படுமேயாகில், புசியாதிருங்கள்'' என்று கிறிஸ்தவர்களுக்குச் சொல்லுகிறார். பந்தியிருக்கும் அவிசுவாசி கிறிஸ்தவனிடத்தில் புசிக்கிற அந்த மாமிசம் எங்கிருந்து வந்தது என்று விளக்கமளிப்பதின் மூலம் அப்படிப்பட்ட ஒரு மாமிசத்தை கிறிஸ்தவன் புசிக்கக்கண்டதால் அவனது மனச்சாட்சி பெலவீனப்படுவதை (பாதிக்கப்படுவதை) காட்டுகிறது. ஆதலால், அந்த விருந்தில் புசிக்கப் போகிற மாமிசம் விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவை என்று கூறியதால், கிறிஸ்தவன் அதைப் புசிக்கக் கூடாது.

கிறிஸ்தவ சுயாதீனத்தை பயன்படுத்தி அப்படிப்பட்ட மாமிசத்தை தாங்கள் புசிப்பதால் மற்ற கிறிஸ்தவர்களின் பிரதிபலிப்பு பெலவீனப்படும் என்பதைக் குறித்து கிறிஸ்தவர்கள் சிந்திப்பதோடு. அவிசுவாசிகள் எப்படி பிரதிபலிப்பார்கள் என்பதையும் பரிசீலிக்க வேண்டும். நமக்கு அதிகாரம் இருக்கிறது என்பதற்காகவே ஏதோ ஒன்றைச் செய்வதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்வது - சபையில் இருப்பவர்களும் உலகத்தில் இருப்பவர்களும் எப்படியாயினாலும் பரவாயில்லை எனும் எண்ணம் - நமது கிறிஸ்தவ சுதந்திரத்தை சுயாதீனத்தை தவறாகப் பயன்படுத்துவதுதான்.

கிறிஸ்தவ சுயாதீனம் குறிப்பிட்ட சில கோட்பாடுகளால் ஆளப்படுகிறது (10:29ஆ-11:1)

பவுல் கிறிஸ்தவ சுயாதீனத்தைக் குறித்த தனது விவாதத்தை (10:29-11:1ல்) நிறைவு செய்கிறார். இந்த வசனப் பகுதியில் (6:12யும் அல்லது 10:23யும் ஒப்பிடுக), தன்னுடைய உபதேசங்களை ஆட்சேபிக்கிற

ஜனங்கள் இருக்கக் கூடும் என்று குறிப்பிடுகிறார். அறிவு பெற்ற அவர்கள் - விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை புசிப்பதற்கு தேவன் தடை விதிக்க வில்லை என்று அறிந்தவர்கள் - மேலே தான் எழுதியிருப்பதை ஆட்சேபிப்பதாக பவுல் யூகம் பண்ணுகிறார். "அது அநியாயம்!" என்று கிறிஸ்தவர்கள் பதிலளிக்கக் கூடும். "என் சுயாதீனம் மற்றொருவனுடைய மனச் சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்பட வேண்டுவதென்ன? மேலும் நான் அதை ஸ்தோத்திரிப்புடனே அநுபவித்தால், ஸ்தோத்திரித்து அனுபவிக்கிற பொருளைக் குறித்து நான் தூஷிக்கப்படுவானேன்?" (10:29ஆ, 30).

அப்படிப்பட்ட மக்களின் கெட்ட மனப்பாங்காக நாம் அவர்களை கடிந்து கொள்ள சாயக்கூடும். கிறிஸ்தவர்கள் தங்கள் சுயாதீனத்தை உபயோகிப்பதை ஆள்வதற்காக பவுல் இரண்டு கோட்பாடுகளை முன் வைப்பதின் மூலம் பதிலளிக்கிறார். இந்தக் கோட்பாடுகள் ஒரு கிறிஸ்தவனின் அனைத்து செயல் பாடுகளுக்கும் ஒரு வழிகாட்டவேண்டும்.

"எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்"

புசித்தாலும் குடித்தாலும் அல்லது வேறு எதைச் செய்தாலும், அவைகள் தேவனை மகிமைப்படுத்தும் வகையிலேயே நடந்துகொள்ளுகிறார்கள் என்பதை கொரிந்து சகோதரர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். சுய நன்மைகளையும், சொந்த சுயாதீனத்தையும், தனது வயிறையும், தனது உணவை (போஜனத்தை) யும் அல்லது புசிப்பதற்கான தனது (உரிமை) அதிகாரத்தையுமே எண்ணிக் கொண்டிருப்பவன் தேவனுடைய மகிமையைக் குறித்துச் சிந்திப்பதில்லை என்பது தெளிவாய்க் காணப்படுகிறது (காண்க 10:31).

"யாருக்கும் எந்த இடறலையும் ஏற்படுத்தாதிருங்கள்"

அவர்கள் யாருக்கும் எந்த இடறலையும் - அவிசுவாசமுள்ள யூதர்களுக்கோ அல்லது கிரேக்கர்களுக்கோ, அல்லது சபையிலுள்ள யாருக்காகிலுமோ ஏன் இடறலை ஏற்படுத்தக் கூடாது? பவுல் மாதிரியை பின்பற்றி மற்றவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி நடந்து கொள்வதன் மூலம் அவர்களும் இரட்சிக்கப் படக்கூடும் (10:32, 33; 11:1).

கிறிஸ்தவர்களாகிய நமக்கு சுயாதீனம் கொடுக்கப் பட்டுள்ளது; ஆகிலும் மேலே குறிப்பிட்ட இரண்டு பெரிய அக்கரைகளுக்கு அப்பால் நமது சுயாதீனத்தை பயன்படுத்திவிடக் கூடாது. தீர்மானிக்கும் போது நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி, நான் இப்பொழுது செய்யப் போகிற காரியம் தேவனுக்கு மகிமையளிக்குமா? மற்றும் மற்ற கிறிஸ்தவர்களுக்கும் அவிசுவாசிகளும் எனது செயல் பிரயோஜனமானதாக அல்லது பலனுள்ளதாக இருக்குமா?

முடிவுரை

அநேக உள்ளூர் சபைகளில், வித்தியாசப்பட்ட பிரச்சனைகளில் அங்கத்தினர்கள் ஒத்துப்போகாத சூழல் அவ்வப்பொழுது ஏற்படலாம். கிறிஸ்தவர்களாகிய நாம், எதை வேண்டுமானாலும் விசுவாசிக்க சுயாதீனம் அளிக்கப்படவில்லை. அல்லது எந்தச் சுழ்நிலையிலும் எதை வேண்டுமானாலும் செயல் படுத்திக் கொள்ள இயலாது, ஆனால் ஒவ்வொரு

கிறிஸ்தவனுக்கும் தேவன் போதிய அளவு சுயாதீனத்தைக் கொடுத்து அவரவர் தன் கண்ணோட்டத்தைப் பற்றிக் கொள்ளவும் அனுமதிக்கிறார். நமது கிறிஸ்தவ சுயாதீனத்தை காத்துப் பற்றிக் கொள்ளவும், மற்றவர்கள் நமது கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாத போதும் அவர்களுக்கு மதிப்புக் கொடுக்கவும் வேண்டும்.

அதே வேளையில், வேதவசனங்களால் ஆதரிக்கக் கூடியதால் சில காரியங்களைச் செய்து அதனால் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் பாவஞ் செய்யவோ அல்லது நமது நண்பர்கள் இரட்சிக்கப் படவோ தடையான காரியங்களைச் செய்யாதபடிக்கு நம்முடைய சுயாதீனத்தை துஷ்பிரயோகம் செய்யாத படிக்கும் நம்மை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக நாம் இந்த இரண்டு பெரிய கோட்பாடுகளால் எல்லாவற்றிலும் வழி நடத்தப்பட வேண்டும். நாம் எதைச் செய்தாலும் அது தேவனை மகிமைப்படுத்தக் கூடியதாயிருக்க வேண்டும். மற்றும் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்க வேண்டும். இந்த வழிகாட்டு கோடுகளால், நாம் நடத்தப்படுவோமாகில் நாம் பவுலையும் பின்பற்றுவோம் கிறிஸ்துவையும் பின்பற்றுகிறவர்களாவோம்.

குறிப்புகள்

[1]ஒரு விக்கிரக கோவிலில் அனுசரித்த விக்கிரக - ஆராதனையைக் குறித்த பிரச்சனை எழும்பிற்று. விக்கிரக ஆராதனை செய்கிற ஒருவர் அந்த கோவிலுக்குப் போய் சம்பந்தப்பட்ட கடவுளுக்கு மிருகபலி செலுத்துவார். பலிபீடத்தின் மீது பலிசெலுத்தப்பட்ட மிருகத்தின் ஒரு சிறுபகுதி தகனிக்கப்பட்ட பின்பு, மாமிசம் ஆசாரியனுக்கும் பலியிட்டவருக்கும் பிரித்துக் கொடுக்கப்படும். ஏதாவது மீந்திருந்தால் அதைக் கொண்டு வந்து சந்தைகளில் விலைபேசி விற்கப்படும். (Darrell Conley, *1 Corinthians,* The Living Way [Shreveport, La.: Lambert Book House, 1975], 55.) [2]எல்லாருக்கும் அறிவுண்டு என்று பவுல் சொன்னார் - அந்த அறிவு தேவன் ஒருவரே, விக்கிரகமானது ஒன்றுமில்லை என்பது தான். பின்னர் எல்லாருக்கும் இந்த அறிவு இல்லை என்று சொன்னார் (8:7). பவுல் எல்லா கொரிந்து கிறிஸ்தவர்களும் கர்த்தராகிய தேவனை விசுவாசித்தார்கள். கொள்கையளவில் அவர் ஒருவரே தேவன் என்று ஏற்றுக் கொண்டிருந்தனர், இருந்தும் இந்த ஒரு தெய்வ வழிபாட்டு முறைகளை எல்லாரும் புரிந்து கொண்டிருக்கவில்லை என்று பவுல் சொல்லுவதை புரிந்து கொண்டிருப்போமாகில், மேற் சொன்ன இரண்டு வாக்கியங்களையும் ஒப்புரவாக்கிப் பார்க்க முடியும். 8:1-3ல், இந்த அறிவு எவ்வளவு முக்கியமோ அதற்குமேல் அன்பு முக்கியமானது என்று அவர் குறிப்பிடுகிறார். சிலர் தங்களுடைய அறிவினிமித்தம் இறுமாப்புடையவர்களாயிருந்து அன்பிலே குறைவுள்ளவர்களாயிருந்தனர். [3]Raymond C. Kelcy, *First Corinthians,* The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1967), 250. [4]ரோமர் 14:23 தனது மனச்சாட்சிக்கு விரோதமாய் ஒருவன் எதைச் செய்தாலும், அவன் பாவஞ் செய்கிறான் என்கிறது. [5]விக்கிரக கோயில்களில் (வளாகத்தில்) புசிப்பதை தன்னில்தானே தவறு என்று பவுல் சொல்லவில்லை; அச்செயல் மற்றொரு சகோதரனை பாவஞ் செய்யப் பண்ணுமானால் அதுவே தவறு என்றார். அதிகாரம் 11ல் வித்தியாசப் பட்ட சூழ்நிலையை பவுல் பேசுகிறார் - அஞ்ஞான மத பண்டிகை விருந்துகளில் ஒரு கிறிஸ்தவன் பங்கேற்பதைக் குறித்து பவுல் பேசுகிறார். மேலே குறிப்பிடப் பட்டதற்கு ஒப்பான ஒரு கண்ணோட்டத்தை ரிச்சர்டு ஓஸ்டர் குறிப்பிட்டார். (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co.,

1995], 199.) *மற்ற விளக்கவுரையாளர்கள், பவுல் விக்கிரகக் கோயில்களில் கிறிஸ்தவன் பந்தியிருப்பதை ஏற்றுக் கொண்டிருப்பாரா என்பதில் ஒத்துக் கொள்வதில்லை.* (James Burton Coffman, *Commentary on 1 and 2 Corinthians* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977], 126.) [6]*பவுல் தொடர்ந்துத் தன்னையே மாதிரியாக வைத்து அதிகாரம் 9ல் இந்தக் கருத்தை விளக்கப் படுத்துகிறார்.* [7]*"விக்கிரகாராதனைச் சூழ்நிலைகளில் கிறிஸ்தவர்கள் பங்கு பெறும் மத சம்பந்தப்பட்ட" விருந்துகளும் உட்படுத்தப் பட்ட சம்பவங்கள் இவை* (Oster, 241-42). [8]*ஏற்கனவே பவுல் இந்த நிருபத்தில் கேள்வி கேட்டு பதில் கொடுத்தது போலவே வசனம் 22-லும் பயன்படுத்துகிறார். "நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா?" இதன் கருத்து என்னவெனில், கொரிந்தியர்கள் அஞ்ஞான மதத் தொழுகையில் பங்கேற்று, கர்த்தருக்கு எரிச்சலை கொடுப்பார்கள். "அவரைக் காட்டிலும் அவர்கள் பலவான்கள் அல்லாததால்," அவர்கள் இப்படி அவரை கோபப்படுத்துவார்களானால் அவருடைய தண்டனையை அவர்கள் தாங்க முடியாது.* [9]*சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணும் நோக்கத்தோடு அப்படிப்பட்ட மத பண்டிகைகளிலே கலந்து கொள்ளக்கூடும், அல்லது பங்கேற்பவராக இராமல் கவனிப்பாளராகக் கலந்து கொள்ளக் கூடும்.*

9

இழந்து போகப்பட்டுள்ளவர்களை அடைதலில் ஒரு உதாரணம் தேவைப்பட்ட ஒரு சபை

(1 கொரிந்தியர் 9:1-27)

1964ல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அதிபராவதற்கு குடியரசுக் கட்சியின் சார்பில், பார்ரி கோல்டு வாட்டர் அவர்கள் வேட்பாளராக முன்மொழியப்பட்டபோது, அவர் "விடுதலையின் பாதுகாப்பில் தீவிரவாதம் என்பது குற்றமல்ல . . . (மற்றும்) நீதியின் தேடுதலில் மிதவாதம் என்பது நெறிமுறையானதும் அல்ல என்று கூறினார்."[1] வாக்காளர்கள் இணங்க வைக்கப் படவில்லை. அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு அணுக்கருப் போரைத் தொடங்குவாரோ என்று பலர் அச்சம் கொண்டனர். இதன் விளைவாக அவர் லின்டன் ஜான்ஸன் அவர்களிடம் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

தீவிரவாதம் என்பது நெறிமுறையாக இருக்கும் காலங்கள் உள்ளனவா? 1 கொரிந்தியர் 8:13ல் பவுல், "ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்" என்று எழுதினார். அவைகள் இன்றைய நாட்களில் பலருக்குத் தீவிரவாதியின் வார்த்தைகளாக ஒலிக்கின்றன!

கர்த்தருக்கு ஊழியம் செய்யும் பகுதிகளில், அவருக்காகத் தீவிரமாகச் செல்லும் பவுலின் உதாரணத்தை மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்று பவுல் விரும்பினார் (1 கொரிந்தியர் 10:33; 11:1; காண்க 4:16). விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவைக் குறித்து, கொரிந்தியர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் முதலில் கூறினார் (அதிகாரம் 8). பின்பு அவர், சபையில் பிரச்சனைகள் எழும்போது அவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு, ஒரு உதாரணத்தை - தமது சொந்த உதாரணத்தை - அவர்களுக்கு அளிக்கச் சென்றார் (அதிகாரம் 9).[2] பவுல் மற்றவர்களை இரட்சிப்பதற்கும் தம்மைத் தாமே இரட்சிப்பதற்கும், தீவிரவாத செயல்களை மேற்கொள்ள மனவிருப்பமாக இருந்தார் என்பதை அவரது உதாரணம் செயல்விளக்கப் படுத்துகிறது. இந்த உதாரணம், இதையே செய்யும்படி நமக்கு அறைகூவல் விடுக்கிறது.

பவுலின் உதாரணம்

பவுல் தம்மையும் மற்றவர்களையும் இரட்சிப்பதற்கு எவ்வளவு தூரம் செல்லுவார்? முதலாவது, அவர் மற்றவர்களை இரட்சிப்பதற்கு என்ன செய்ய மனவிருப்பம் கொண்டிருந்தார் என்பதைக் கவனிப்போமாக (9:1-18).

மற்றவர்களை இரட்சிக்கப் பவுல் என்ன செய்தார்

இவ்வசனப் பகுதியில் பவுல், மற்றவர்களை இரட்சிப்பிற்குக் கொண்டுவரத் தாம் எந்த அளவுக்குச் செல்ல மனவிருப்பம் கொண்டிருந்தார் என்பதை விவரித்தார். அடிப்படையில் அவர், தமது ஊழியத்தில் தம்மை அதிகம் செயல்விளைவுள்ளதாக்கும் என்றால், தமது உரிமைகளை விட்டுக் கொடுக்க மனவிருப்பம் கொண்டிருந்தார்.

<u>தாம் யாராக இருந்தார் என்பதைப் பற்றிய ஒரு நினைவூட்டுதல்</u> (9:1, 2). பவுல் தமது உரிமைகளைச் சரணடையச் செய்ய மனவிருப்பம் கொண்டிருந்ததைக் கிறிஸ்தவர்கள் மதித்தலை நிச்சயப்படுத்திக்கொள்ள விரும்பினார், எனவே அவர் தாம் உரிமைகளைக் கொண்டிருந்தது ஏன் என்பதை விளக்கப் படுத்தினார். அவர் கர்த்தரைக் கண்டிருந்ததால்,[3] தாம் ஒரு அப்போஸ்தலராக இருந்தார்[4] என்பதை வலியுறுத்தினார் மற்றும் அவர்கள் தொடர்ந்து இன்னும் கிறிஸ்தவர்களாக இருந்தனர் என்பது தமது அப்போஸ்தலத்துவத்தை நிரூபித்தது என்றும் அவர் கூறினார் (9:1). அவர்களைப் போலவே அவரும் சுயாதீனராக இருந்தார் என்பதை சுட்டிக்காட்டினார் (9:1), உண்மையில் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் சுயாதீனத்தை மகிழ்வுடன் அனுபவித்தனர் என்றால் அவர் ஒரு அப்போஸ்தலர் என்ற வகையில் தாம் விரும்பியவற்றைச் செய்வதற்கு எவ்வளவு அதிகம் சுயாதீனம் உள்ளவர் என்று உரிமைகோர இயலும்![5]

<u>அவர் செய்திருந்தவை என்ன என்பதைப் பற்றிய ஒரு நினைவூட்டுதல்.</u> பவுல் யாராக இருந்தார் என்பதைக் கொரிந்தியர்களுக்கு நினைவூட்டியபின்பு, அவர்கள் மத்தியில் தாம் செய்திருந்தவற்றைப் பற்றி அவர்களின் மனதிற்கு அழைப்பு விடுத்தார். பவுல் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, எண்ணற்ற உரிமைகளை விட்டுக்கொடுத்திருந்தார்.

(1) உண்பதற்கும் குடிப்பதற்குமான உரிமை (9:3, 4). விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றைப் புசிக்கக் கிறிஸ்தவர்கள் உரிமைகொண்டிருந்தாலும், அவர்கள் தங்களது பலவீனமான சகோதரர்கள் நிமித்தம் அதை விட்டுக்கொடுக்க மனவிருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் முன்னதாக வலியுறுத்தி இருந்தார் (8:7-12). ஏற்கனவே அவர் மாம்சம் புசிப்பதற்கான தமது உரிமையை விட்டுக்கொடுக்கத் தமது மனவிருப்பத்தை வெளிப்படுத்தி இருந்தார் (8:13).[6]

(2) திருமணமாகி இருப்பதற்கான உரிமை (9:5). பேதுரு (கேபாஸ்),[7] மற்ற சில அப்போஸ்தலர்கள் மற்றும் இயேசுவின் சகோதரர்கள் ஆகியோரைப் போன்றே, பவுலும் திருமணமாகி இருப்பதற்கான உரிமையைக் கொண்டிருந்தார்.[8] இருப்பினும் அவர் அந்த உரிமையைப் பயன்படுத்தாதிருப்பதைத் தேர்ந்துகொண்டிருந்தார் (அதிகாரம் 7).

(3) ஊதியம் பெற்றுக்கொள்வதற்கான உரிமை (9:6-18). மேலும் பவுல், தாம் பிரசங்கித்த சபையினால் உதவி அளிக்கப்படும் உரிமையைத் தாம் கொண்டிருந்ததாகவும் உறுதிப்படுத்தினார். உண்மையில் இதுவே இந்தப் பகுதியின்

முதன்மைத் தலைப்பாக உள்ளது. இது ஏன் என்று நாம் வியப்படையலாம். ஒருவேளை பவுல், கொரிந்து சபையில் தமது பிரயாசங்களின்போது, அவர்களிடம் இருந்து நிதிகளை ஏற்றுக்கொள்ளாததற்காக விமர்சிக்கப் பட்டிருக்கலாம். உண்மையான அப்போஸ்தலர்கள் ஊதியத்தை ஏற்றுக்கொண்டனர், எனவே பவுல் தமது பிரசங்கித்தலுக்கு ஊதியம் பெற்றுக்கொள்ள மறுத்தார் என்பது, அவர் உண்மையான அப்போஸ்தலராக இருக்கவில்லை என்று அர்த்தப்படுத்தி இருக்க வேண்டும் என்று சிலர் நினைத்திருக்கலாம்.[9]

பவுல், தாம் ஊதியம் அளிக்கப்படும் உரிமையைக் கொண்டிருந்ததாகப் பலமாக விவாதித்தார். அவர் ஒரு அப்போஸ்தலராக இருந்தபடியால், மற்ற அப்போஸ்தலர்கள் செய்தது போன்றே, ஊதியம் பெற்றுக்கொள்ளத் தகுதியானவராகவே இருந்தார் (9:3-6). தங்கள் வேலையில் இருந்து பயன் பெற்ற மக்கள் பற்றிய சாதாரண உதாரணங்களைப் பயன்படுத்தியதன் மூலம் அவர்களின் பொது அறிவிற்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்: போர்வீரர்கள், விவசாயிகள் மற்றும் மந்தை மேய்ப்பவர்கள் (9:7, 8அ). பின்பு அவர், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர் தமது பிரசங்கித்தலில் இருந்து தமது வாழ்க்கைக்கு தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை, மோசேயின் நியாயப்பிரமாணம் ஆதரித்தது என்று காண்பித்தார். போரடிக்கும் மாடு தானியத்தை உண்ணாதபடிக்கு அதன் வாயைக் கட்டக்கூடாது என்று நியாயப்பிரமாணம் போதித்தது,[10] மற்றும் அந்த அறிவுறுத்துதல்கள் உண்மையில், கிறிஸ்தவ யுகத்தில் தேவனுடைய மக்களின் பயனுக்காகவே எழுதப்பட்டிருந்தன என்று பவுல் கூறினார் (9:8ஆ-10அ). மீண்டும் அவர் பின்வரும் ஒப்புவமையில் இருந்து விவாதித்தார்: விதைக்கிற விவசாயிகள் பயிரை அறுவடை செய்தலை எதிர்பார்ப்பது போன்றே, ஆவிக்குரிய விதைகளை விதைத்துள்ள பிரசங்கியார்கள் தங்கள் ஊழியத்தில் இருந்து பொருள் ஆதாயங்களை அறுவடை செய்ய வேண்டும் (9:10ஆ, 11). அடுத்ததாக அவர், ஆசாரியர்களும் லேவியர்களும் தேவாலயத்தில் நிகழ்த்திய ஊழியங்களில் இருந்து பயன் அடைவது அவர்களின் உரிமையாக இருந்தது என்று காண்பிக்க, நியாயப்பிரமாணத்திடம் திரும்பினார் (9:13). இந்தப் பாடக்கருத்தின்மீது அவர் கூறியுள்ள யாவற்றையும் பின்வரும் முடிவு வாக்கியத்தில் அவர் தொகுத்துரைத்தார்: "அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (9:14). அந்தக் கூற்று இந்தப் பிரச்சனையை என்றென்றைக்குமாகத் தீர்த்து வைக்கிறது. பிரசங்கிப்பவர்கள் ஊதியம் பெறும் உரிமையைக் கொண்டுள்ளனர்.[11]

பவுல் ஊதியம் பெற்றுக்கொள்ளும் உரிமையைக் கொண்டிருந்தாலும், அந்த உரிமையை அவர் அனுகூலப்படுத்திக் கொள்ளாதிருந்தார். அவர், "மற்றவர்கள் உங்களிடத்திலே [உங்களால் ஊதியம் அளிக்கப்படும் உரிமையென்ற] இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும்படுகிறோம்" என்று கூறினார் (9:12அ; மேலும் காண்க 9:15). ஏன் அவர் இதைச் செய்யவில்லை? (1) ஏனென்றால் அவர் ஊதியம் பெற்றுக்கொள்ளுதல் என்ற விஷயம் சிலருக்கு இடர்ப்பாடாக இருக்கலாம் (9:12ஆ) மற்றும் (2) ஏனென்றால் பிரசங்கித்தலுக்குப் பவுல் மற்ற

நோக்கங்களைக் கொண்டிருந்தார் (9:15-18, 22).

அவர் ஏன் இதைச் செய்தார் என்பது பற்றிய ஒரு நினைவூட்டுதல். பவுல் பணத்திற்காகப் பிரசங்கிக்கவில்லை, ஆனால் அதைச் செய்ய வேண்டியிருந்ததால் அவர் அவ்வாறு பிரசங்கித்தார்; அவர் "கட்டாயத்தின்கீழ்" இருந்தார். அவர் "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" என்று கூறினார் (9:16). பிரசங்கிக்கும்படி அவரைத் தேவன் அழைத்திருந்தார், எனவே அவர் பிரசங்கிக்க வேண்டியிருந்தது! ஒரு சபைக்குழுமத்திடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுதலுக்கு மாறாக, அவர் தமது உக்கிராணத்துவத்தை நிறைவேற்றுதல் என்பதே அவரது பலனாக இருந்தது.[12]

மற்றும் பவுல், பிரசங்கித்தலுக்கான தமது நோக்கத்தை 9:19-23ல் விளக்கப்படுத்தினார்.[13] மக்களை இரட்சித்தல் என்பதே அவர் தமது உரிமைகளை விட்டுக்கொடுத்ததற்கான காரணமாக இருந்தது. அந்தக் கருத்தை அவர் இவ்வசனப் பகுதியில் திரும்பத் திரும்ப ஏற்படுத்தினார்: ஐந்து வசனங்களில் ஆறுமுறைகள் அவர், சிலரை ஆதாயப்படுத்துதல் அல்லது இரட்சித்துக் கொள்ளுதல் என்பதைப் பற்றிப் பேசினார். பவுலின் மன ஈர்ப்பு பற்றிய மிகவும் தீவிரவாதமான கூற்று 9:22ல் உள்ளது: "எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்." பவுல் தமது உரிமைகளை விட்டுக்கொடுக்க மனவிருப்பமாக இருந்தார். அவ்வாறு செய்தலின் மூலம் அவர் சிலரை இரட்சிப்பிற்குள் கொண்டுவர முடியும்!

பவுல் தம்மை இரட்சித்துக்கொள்ள என்ன செய்தார்

பவுல், தாம் இரட்சிக்கப்பட்டு இருத்தலை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மிகவும் முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டார் (9:24-27). இவ்வசனப் பகுதியில் விளையாட்டு உருவக உவமைகள் இரண்டை அப்போஸ்தலர் பயன்படுத்தினார்: ஓட்டப்பந்தயம் மற்றும் மல்யுத்தம். இந்த விளையாட்டுகளில் மேன்மையடைந்தவர்கள் கடினமாக உழைக்க வேண்டியிருந்ததை அவர் சுட்டிக் காண்பித்தார்; அவர்கள் பெருமளவில் சுயகட்டுப்பாட்டைச் செயல்படுத்தி தங்கள் குறிக்கோள்களில் கவனமான நோக்கத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தேர்ந்த ஒரு விளையாட்டு வீரரைப் போல பவுல் தமது குறிக்கோளின்மீது கவனம் குவித்ததாகக் கூறினார். அவர் "இலக்கின்றி" ஓடவில்லை, ஆனால் வெற்றி பெறும்படியாகவே ஓடினார்! அவர் "காற்றில் அடிக்கிற" ஒருவரைப் போன்றல்ல, ஆனால் தமது இலக்கைத் தாக்கும் வகையில் மல்யுத்தம் பண்ணினார். அவர் சுயகட்டுப்பாட்டையும் செயல்படுத்தினார். உண்மையில் அவர் தமது சரீரத்தைத் தமக்கு அடிமையாக்கும்படி அதை ஒழுங்குக்கு உட்படுத்தியதாக - நேர்ப்பொருளில் அவர் தமது சரீரத்துடன் "போராடினார்" அல்லது அதை "அடித்தார்" - என்று கூறினார். அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் மூலமாக மற்றவர்களை இரட்சிப்பிற்குக் கொண்டுவந்த பின்பு அவர் இழந்துபோகப் பட்டிராதபடி அல்லது "தகுதியற்றுப்போய்விடாதபடி" இவற்றைச் செய்தார்.

இந்த விவரிப்பானது, ஒரு விளையாட்டு வீரர் பல ஆண்டுகள் பயிற்சிக்குப் பின்பு ஒலிம்பிக் விளையாட்டுகளில் போட்டியிட்டு வெற்றி பெறுதலை நாம் நினைக்கும்படி செய்கிறது. பவுல், தாம் நித்தியத்திற்கும் இரட்சிக்கப் பட்டிருத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி, கடினமாக உழைக்கவும் தியாகம் செய்யவும் மனவிருப்பமாக இருந்ததாகக் கூறினார்.

நமது பதில்செயல்

பவுல் தம்மையும் மற்றவர்களையும் இரட்சித்துக் கொள்வதற்கு மாபெரும் தூரங்கள் சென்றார் என்பதைக் கண்டிருக்கிறோம். மற்றவர்களையும் நம்மையும் இரட்சித்துக் கொள்வதற்கு நாம் எவ்வளவு தூரம் செல்ல மனவிருப்பமாக இருக்கிறோம்?

மற்றவர்களை இரட்சிப்பதற்கு நீங்கள் எவ்வளவு தூரம் செல்வீர்கள்?

மற்றவர்களை இரட்சிப்பதற்கு நாம், 9:22ஆ வசனப் பகுதியில் - "சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" என்ற - பவுலின் உதாரணத்தைப் பின்பற்ற மனவிருப்பமாக இருக்க வேண்டும். பல கிறிஸ்தவர்கள் தங்கள் தியாகம் நிறைந்த வாழ்வினால், மற்றவர்கள் இரட்சிக்கப்பட நற்செய்தியைப் பரப்புவதற்கான தங்கள் தீர்மானத்தைச் செயல்விளக்கப் படுத்தியுள்ளனர். தூரத்தில் உள்ள நாடுகளில் இருக்கும் மக்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதற்காக, சில ஆண்களும் பெண்களும் தங்கள் சொந்த நாடுகளில், தங்கள் சொந்தக் குடும்பங்களுக்கு அண்மையில் இருக்கும் வசதியான வாழ்வை விட்டுக்கொடுத்துள்ளனர். மற்றவர்கள், புதிய அல்லது போராடும் சபைக்குழுமங்களுக்கு உதவுவதற்காக, தங்கள் சொந்த செலவில், ஒவ்வொரு ஞாயிறு அன்றும் பல மைல்கள் பிரயாணம் செய்வதற்கு, தங்கள் உள்ளூர் சபைக்குழுமங்களில் ஆராதிக்கும் சந்தோஷத்தைத் தியாகம் செய்துள்ளனர். சிலர், இழந்துபோகப்பட்டுள்ளவர்கள் இருக்கும் அந்நிய நாடுகளில் முகாம் இடுவதற்காகச் செல்கின்றனர் அல்லது வீட்டு வேதாகமப் படிப்புகளில் மற்றவர்களுக்குப் போதிப்பதற்காகத் தங்கள் குடும்பங்களுடன் ஓய்வாக இருக்கும் மாலை நேரங்களைத் தியாகம் செய்துள்ளனர்.

இப்படிப்பட்ட மக்கள், தீவிரவாதிகளாக அல்லது மட்டுமீறிய உணர்வெழுச்சி கொண்டவர்களாகக் கண்ணோக்கப் படலாம் - ஆனால் அவர்கள் பவுலின் தீவிரவாத உதாரணத்தைப் பின்பற்றுகின்றனர் என்று நாம் கூறலாம். சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்ற மாபெரும் சிலாக்கியத்திற்காக, ஒன்றிரண்டு உரிமைகளைத் துறந்து விடுதல் என்பது ஒரு சிறிய விலையாகவே உள்ளது.

உங்களை இரட்சித்துக்கொள்ள நீங்கள் எவ்வளவு தூரம் செல்வீர்கள்?

நம்மை இரட்சித்துக் கொள்வதற்கு நாம், 9:24-27ல் பவுலின் உதாரணத்தைப் பின்பற்ற மனவிருப்பமாக இருக்க வேண்டும்: ஒரு கிறிஸ்தவராக இருத்தலில் கடினமாக உழைத்தல், கிறிஸ்தவ ஓட்டத்தை ஊக்கத்துடன் ஓடுதல், அதில் வெற்றிபெறும் மனவிருப்பத்துடன் ஓடுதல்; கிறிஸ்தவ யுத்தத்தைத் தீவிரமாகப் போராடுதல், நமது எதிராளியான பிசாசின்மீது முழுக்கவனத்துடன் இலக்கு வைத்தல். நாம் வழுக்கி விழாதபடிக்கு அல்லது விழுந்து போகாதபடிக்கு, நமது சரீரங்களை அடக்கி, பாவம்நிறைந்த விருப்பங்களைத் தொடர்ந்து எதிர்த்து நிற்க வேண்டும். ஒரு ஒலிம்பிக் ஓட்டப் பந்தய வீரர், வெற்றிபெறலாம் என்ற நம்பிக்கையுடன் போட்டியில் பங்கேற்பது போன்று, நாம் நமது நித்திய இரட்சிப்பைக் குறித்துத் தீவிரமாக இருக்கிறோமா? நாம் நமது இரட்சிப்பைப் பற்றித் தீவிரமாக இருந்தால், ஆவிக்குரிய வகையில் பலமாக வளருவதற்கு நாம் முயற்சியை மேற்கொள்வோம் மற்றும் - வேதாகமப் படிப்பு மற்றும் ஜெபம் ஆகியவற்றில் - பயிற்சிக்குத் தேவையான நேரத்தைச் செலவிடுவோம்.

இந்த விஷயங்கள் யாவற்றையும் செய்கிற எவரொருவரும் மட்டுமீறிய உணர்ச்சி ஆர்வம் கொண்டவர் என்று நினைக்கப்படலாம். இருப்பினும் இப்படிப்பட்ட விஷயங்களைச் செய்யத் தவறுகிற எந்தக் கிறிஸ்தவரும் - ஒரு ஓட்டப்பந்தய வீரர் தமது விளையாட்டைத் தீவிரமாக நினைத்துச் செயல்படுவது போல, தமது சொந்த இரட்சிப்பைப் பற்றித் தீவிரமாக இராத எந்தக் கிறிஸ்தவரும் - தமது ஆத்துமாவை இழந்துபோகும் அபாயத்தில் இருக்கிறார்! மாற்று செயல்கள் இரண்டில் ஒன்றை நாம் தேர்ந்தெடுத்தாக வேண்டும்: நமது நித்திய இரட்சிப்பைப் பற்றித் தீவிரமாக இருத்தல் அல்லது (நித்திய இரட்சிப்பை) இழந்து போகுதல்!

முடிவுரை

தீவிரவாதம் என்பது ஒரு நெறிமுறையாக மற்றும் குற்றம் இல்லை என்பதாக இருக்கும் வேளை எப்போதாவது உள்ளதா என்று கேட்டு நாம் இந்தப் பாடத்தைத் தொடங்கினோம். பின்பு நாம், பவுலின் வார்த்தைகள், பலர் அவரைத் தீவிரவாதி என்று வகைப்படுத்தக் காரணமாயின என்பதைச் செயல்விளக்கப் படுத்தினோம். அவர் தம்மையும் பிறரையும் இரட்சித்துக் கொள்வதற்கு வெகுதூரங்கள் சென்றார்.

மேலும் பவுல், தம்மைப்போன்றே மற்ற கிறிஸ்தவர்களும் இருக்க வேண்டும் என்று விரும்பினார்! ஆகையால் நாம், “மற்றவர்களை இரட்சிப்பதற்கு மற்றும் நம்மை இரட்சித்துக் கொள்வதற்கு, நாம் எவ்வளவு தூரம் - எந்த மிகையளவு தூரம் - செல்லுவோம்?” என்று கேட்டோம்.

இப்போது நாம், “தீவிரவாதம் ஒரு நெறிமுறையாக இருப்பது எப்போது?” என்ற கேள்விக்குப் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறோம். “நமது ஆத்துமாக்கள் இடர்ப்பாட்டில் இருக்கும்போது” என்பதே பதிலாக உள்ளது. நமது நடத்தையானது யாரேனும் ஒருவருடைய ஆத்துமாவின் நித்திய அடைவிடம் பற்றிய விஷயத்தின்மீது செயல்விளைவு ஏற்படுத்தும்போது, தீவிரவாத நடத்தையானது நியாயப்படுத்தப் படுகிறது - அது தேவையாகவும்கூட உள்ளது.

குறிப்புகள்

[1]Gary Donaldson, ed., *Modern America: A Documentary History of the Nation Since 1945* (New York: M. E. Sharpe, 2007), 151. [2]“கொரிந்தியர் விசுவாசிகள் மத்தியில் இருந்த இந்த, அறிவைத் தவறாகப் பயன்படுத்தியவர்களுக்கு அவர்களின் பலவீனமான சகோதரர்களுக்குப் பணிவிணக்கம் காட்டும்படிப் பவுல் அறிவுறுத்தியபின்பு, பவுல் தமது சொந்த வாழ்வில் இருந்து மற்றவர்களுக்கு, இந்த வேறுபாட்டின் கொள்கையைச் செயல்விளக்கப்படுத்துதல் அவசியமாயிருக்கும் என்று உணர்ந்தறிந்தார்” (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 203). [3]இந்த அதிகாரத்தின் தொடக்கத்தில் உள்ள கேள்விகள், சொல்லாடல் கலைக் கேள்விகளாக உள்ளன; இவைகள் நேர்மறையாகப் பதில் அளிக்கப்பட வேண்டும் என்பதை யூகித்தவைகளாக இருக்கின்றன. [4]அப்போஸ்தலராக இருக்க வேண்டும் என்றால், ஒருவர் உயிர்த்தெழுந்த கர்த்தரைத் தரிசித்து இருக்க வேண்டும்; தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் கிறிஸ்து பவுலுக்குத் தரிசனமாகி இந்தத் தகுதியை நிறைவுசெய்தார்

(நடபடிகள் 9:3-5, 27; காண்க 1:21, 22; 2:32; 26:16-18; 1 கொரிந்தியர் 15:8). [5]*பவுல் ஒரு அப்போஸ்தலராக இருந்தார் என்ற அவரது கூற்றும், தம்மை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு ஒரு "தற்காப்புவாதத்தை" ஏற்படுத்தும் அவரது பேச்சும் (9:3), கொரிந்து சபையில் இருந்தவர்களில் சிலர் பவுலின் அப்போஸ்தலத்துவம் மற்றும்/அல்லது அதிகாரத்துவம் பற்றிக் கேள்வி எழுப்பினர் என்று கருத்துத் தெரிவிக்கிறது (மேலும் காண்க - 1 கொரிந்தியர் 4:3-16). இருப்பினும் 1 கொரிந்தியர் 9ல் பவுல் தமது அப்போஸ்தலத்துவத்தைத் தற்காத்துக் கொள்ளுதல் என்பது அல்ல, ஆனால் கொரிந்தியர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கும் வகையில் தாம் விட்டுக்கொடுத்தவை என்ன என்பதை வலியுறுத்துதலே முதன்மை அக்கறையாக இருந்தது.* [6]*பவுல் தாம் "புசிக்கவும் குடிக்கவும்" உரிமை கொண்டிருந்தார் என்ற அவரது உரிமை கோருதலானது, அவர் வலியுறுத்தச் செல்ல இருந்தவற்றைப் பற்றிக்கூறும் வேறுபட்ட வழியாக இருக்கும் இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது: அவர் வாழ்வின் தேவைகளைக் கொண்டிருக்கக் கூடும்படிக்கு உதவி அளிக்கப்படும் உரிமை கொண்டிருந்தார் - எனவே அவர் "புசித்து குடிக்கலாம்."* (Oster, 206.) [7]"To take along a believing wife" *என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க சொற்றொடர், "மனைவியாகிய ஒரு சகோதரி"யை உடன் அழைத்துச் செல்லுதல் என்று அர்த்தப்படுகிறது. (இது தமிழ் வேதாகமத்தில், "மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக்கொண்டுதிரிய" என்று சரியாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.) "சகோதரி" என்பது சக கிறிஸ்தவப் பெண் ஒருத்தியைக் குறிப்பிடுவதற்கு உருவக நடையில் பயன்படுத்தப் பட்டுள்ளது; ஆகையால், "விசுவாசம் உள்ள ஒரு மனைவி" என்பதே மூலமொழியின் அர்த்தத்தை மிகச்சரியாகப் பிரதிபலிக்கிறது.* (Ibid., 208.) [8]*பேதுரு திருமணம் செய்துகொண்டிருந்தார். அவர்தாம் முதல் போப் என்று சிலர் நம்புகின்றனர், இருப்பினும் ரோமன் கத்தோலிக்க சபையின் குருக்கள் (மற்றும் ஆயர்கள் மற்றும் போப்புகள் ஆகியோர்) திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப் படுவதில்லை. அதுபோன்றே சுவிசேஷப் புத்தகங்களும், பேதுரு ஒரு மனைவியைக் கொண்டிருந்தார் என்று போதிக்கின்றன, ஏனெனில் அவருக்கு ஒரு மாமியார் இருந்ததாக அவைகள் உரைக்கின்றன (மாற்கு 1:29-31).* [9]*அப்போதும் இப்போதும் சில விஷயங்கள் அதன் விலைக்குத் தகுதியானதாக இருந்தது என்று சில மக்கள் நினைத்தனர். ஒருவேளை அவர்கள், பவுல் இலவசமாகப் பிரசங்கித்ததால், அவரது பிரசங்கித்தல், எதற்கும் தகுதியற்றதாக இருந்தது மற்றும் அவர்தாமே, ஒரு பிரசங்கியார், போதகர் அல்லது நடத்துதுனர் என்ற வகையில் கொஞ்சம் மதிப்பையே கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்து இருக்கலாம்.* [10]*உபாகமம் 25:4.*

[11]*இதே சத்தியம் மத்தேயு 10:10 மற்றும் லூக்கா 10:8 ஆகிய வசனங்களில் போதிக்கப் பட்டுள்ளது.* [12]*பிரசங்கித்தலுக்கு ஊதியம் பெற்றுக்கொள்ளாது இருத்தல் என்ற பவுலின் கொள்கையானது, அந்த வேளையில் அவர் ஊழியம் செய்துகொண்டிருந்த சபைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது என்பது உறுதி. அவர் ஊழியப்பணிகளைச் செய்யச் சென்று கொண்டிருந்த பிற சபைகளிடத்தில் அவர் உதவி பெற்றிருந்தார் (உதாரணமாக, காண்க - பிலிப்பியர் 4:15-17). அவர் கொரிந்து நகரில் பிரசங்கித்தபோதுகூட, அவர் மற்ற சபைகளிடத்தில் இருந்து உதவி பெற்றார் (2 கொரிந்தியர் 11:7-9). மேலும் பவுல், தாம் எபேசுவில் ஊழியம் செய்கையில் தம்மைதாமே கவனித்துக்கொண்டிருந்ததையும் எபேசியர்களுக்கு நினைவூட்டினார் (நடபடிகள் 18:1-5; 20:33-35).* [13]*20 மற்றும் 21 ஆகிய வசனங்களில் மூன்று பிரிவினர் குறிப்பிடப் பட்டுள்ளனர்: "யூதர்கள்," "நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள்" மற்றும் "பிரமாணம் இல்லாது இருந்தவர்கள்." "பிரமாணம் இல்லாது இருந்தவர்கள்" என்பது புறஜாதியாரைக் குறித்தது என்பது தெளிவு. "யூதர்கள்" என்பவர்கள் "பிரமாணத்தின் கீழ் இருந்தவர்களில்" இருந்து எவ்வாறு*

வித்தியாசப் படுத்தப் பட்டனர் என்பது பற்றி விளக்கவுரையாளர்கள் நிச்சயமான கருத்து எதையும் கொண்டிருப்பதில்லை. அனேகமாக, "யூதர்கள்" என்பது இனத்தினால் யூதர்களாக இருந்தவர்களை (அவர்களின் மத்தியில் மோசேயின் பிரமாணத்தை அல்லது ரபீத்துவப் பாரம்பரியங்களைக் கவனமாகக் கடைப்பிடிக்காமல் பலர் இருந்திருப்பார்கள்) அர்த்தப்படுத்தும் வேளையில், "நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள்" என்பது யூதமார்க்கத்தில் இருந்து பிரமாணத்தையும் பாரம்பரியங்களையும் கவனமாகக் கடைப்பிடித்தவர்களை அர்த்தப்படுத்தியது என்று கூறலாம். (Oster, 221.)

10

மாதிரியில் இரட்சிப்பைப் பற்றிய ஒரு நினைவுகூருதல் தேவைப்பட்ட ஒரு சபை

(1 கொரிந்தியர் 10:1–14)

1 கொரிந்தியர் 8-10, அதிகாரங்களில் பவுல், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்ணுதல் பற்றிய ஒரு கேள்விக்குப் பதில் அளிப்பதில் ஒரு நீண்ட பகுதியை உள்ளடக்கினார் (8:1). அந்தக் கேள்விக்கு நேரடியாகப் பதில் அளித்த பின்பு அவர், மற்றவர்கள் இரட்சிக்கப் பட்டிருத்தலை உறுதிப்படுத்திக் கொள்வதன் அவசியத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்யும் உதாரணமாக தம்மையே பயன்படுத்தினார். மற்றவர்கள் இடறுதலுக்குக் காரணமாகும் என்றால் அவர் அப்படிப்பட்ட உணவை முற்றிலுமாகத் தவிர்ப்பார் (8:13). அடுத்ததாக, அவர் அனேகமாக விக்கிரக ஆராதனையுடன் எவ்வகையிலும் தொடர்பு கொண்டிருத்தலின் அபாயங்களைக் காண்பிப்பதற்காக, வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களின் உதாரணத்தைக் கொடுத்தார் (10:1-14).

இவ்வசனப் பகுதி ஒரு பரந்த நடைமுறைப் பயன்பாட்டையும் கொண்டிருக்க முடியும். பவுல், இஸ்ரவேல் மக்களின் அனுபவத்தை கொரிந்தியர்களின் அனுபவத்துடன் - மற்றும், எனவே கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது சொந்த அனுபவத்துடன் - ஒப்பிடும் ஒரு விளக்கவுரைப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தார். இஸ்ரவேல் மக்களின் விடுதலை மற்றும் [வனாந்தரத்தில்] அலைந்துதிரிதல் ஆகியவை, நமது இரட்சிப்பிற்கு ஒரு மாதிரியை அல்லது பிரதிநிதித்துவத்தை அளிக்கின்றன. மாதிரியை எதிர்மாதிரியுடன் - அவர்களின் இரட்சிப்பை நமது இரட்சிப்புடன் - ஒப்பிடுதலினால் நாம், சில முக்கியமான பாடங்களைக் கற்றறிய முடியும். இவ்விரு இரட்சிப்புக்களும் எவ்வாறு ஒன்றுபோல் உள்ளன?

இரண்டு இரட்சிப்புகளும் ஒரு ஞானஸ்நானத்துடன் தொடங்குகின்றன

இஸ்ரவேல் மக்களின் இரட்சிப்பு

அடிமைத்தனை. இஸ்ரவேல் மக்களின் இரட்சிப்பின் வரலாறு அடிமைத்தனையின் வரலாறாக உள்ளது. இஸ்ரவேல் மக்களைத் தேவன் விடுவிக்கத் தீர்மானிக்கும் வரையிலும், அவர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தனர். பின்பு தேவன் அவர்களின் விடுதலையாளராக மோசேயை

அனுப்பினார், மற்றும் மோசேயின் மூலமாகத் தேவன், எகிப்தின்மீது பத்து வாதைகளை வரச்செய்து, தேவனுடைய மக்கள் கிளம்பிச் செல்வதற்குப் பார்வோன் அனுமதிக்கக் காரணமானார்.

இரத்தம். முதல் பிறந்த பிள்ளைகளின் மரணம் என்ற பத்தாவது வாதையின் போது, இஸ்ரவேல் மக்கள், பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைத் தெளித்ததினால் அந்த வாதையின் செயல்விளைவுகளில் இருந்து தப்புவிக்கப் பட்டனர். பின்பு பார்வோன், இஸ்ரவேல் மக்கள் தேசத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லுமாறு கூறினார்.

இருப்பினும், அவர்கள் வெகு தொலைவிற்குச் செல்லும் முன்பே, பார்வோன் தமது மனதை மாற்றிக்கொண்டு, அவர்களைத் திரும்பக் கொண்டுவருவதற்குத் தமது இரதங்களை அனுப்பினார். இஸ்ரவேல் மக்கள் உலர்ந்த தரையின் மூலமாக செங்கடலைக் கடந்து செல்லக்கூடும்படிக்கு, செங்கடலின் தண்ணீரை இரண்டாகப் பிரித்ததன் மூலம் தேவன் இன்னொரு அற்புதத்தை நிகழ்த்தினார். அவர்களைப் பின்தொடர்ந்து செல்ல எகிப்தியர்கள் முயற்சி செய்தபோது, கடல் திரும்ப ஒன்றுகூடி அவர்களை மூழ்கடித்தது. செங்கடலின் கிழக்குக் கரையில் இஸ்ரவேல் மக்கள் நின்றபோது தான் அவர்கள் கடைசியாகத் தங்கள் அடிமைத்தளையில் இருந்து விடுவிக்கப் பட்டனர்.

ஞானஸ்நானம். இஸ்ரவேல் மக்களின் விடுதலைப் பயணம் ஒரு ஞானஸ்நானத்துடன் தொடங்கியது என்று வசனப்பகுதி குறிப்பிடுகிறது; எகிப்திய அடிமைத்தளையில் இருந்து மீட்கப் பட்டவர்கள் “எல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்” (10:1ஆ, 2). ஆகையால் இஸ்ரவேல் மக்களின் மீட்பின் வரலாறு, அடிமைத்தளை, இரத்தம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றைப் பற்றியதாக உள்ளது. அவர்கள் கடைசியாக ஞானஸ்நானம் பெற்றபோது - அவர்களின் இருபுறத்திலும் கடலும் அவர்களுக்கு மேலாக மேகமும் சூழ்ந்திருக்க முழுக்காட்டப்பட்டபோது - மட்டுமே, அவர்கள் பார்வோனின் அடிமைத்தளையில் இருந்து மீட்கப்பட்டனர்.

நமது இரட்சிப்பு

கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்ற வேளையை அவர்களுக்கு நினைவூட்டுவதற்காகப் பவுல், இஸ்ரவேல் மக்களின் மீட்பைப் பற்றி இந்த வார்த்தைகளில் விவரித்தார் என்பதில் சந்தேகம் இல்லை. நமது பயணமும் ஞானஸ்நானத்துடன் தொடங்குகிறது.

அடிமைத்தளை. இஸ்ரவேல் மக்களைப் போன்று நாம் - பாவம் மற்றும் சாத்தான் ஆகியவற்றிற்குள் - அடிமைத்தளையில் இருந்தோம் (யோவான் 8:34; ரோமர் 6:17, 18). இதன் விளைவாக, நாம் நமது பாவங்களில் மரித்து கிறிஸ்துவினிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டு, நம்பிக்கையும் தேவனும் இல்லாதவர்களாக இருந்தோம் (எபேசியர் 2:1, 12).

இரத்தம். மற்றொரு ஒற்றுமையில், நம்மை விடுவிப்பதற்கு இரத்தம் சிந்தப்பட்டது - அது “உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியின்” இரத்தமாகும் (யோவான் 1:29). சிலுவையில் கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் மூலமாக, “அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே

இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபேசியர் 1:7).

ஞானஸ்நானம். மீண்டும் ஒருமுறை நாம், இஸ்ரவேல் மக்களைப் போன்றவர்களாக இருக்கிறோம்; ஏனெனில் நாம், தண்ணீருக்குள் கடந்து சென்ற வரையிலும் - நாம் தண்ணீருக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட, முழுக்காட்டப்பட்ட வேளை வரையிலும் - பாவத்தின் அடிமைத்தளையில் இருந்து தப்பிக்கவில்லை. அந்த வேளையில், நாம் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக் கொண்டோம் (நடபடிகள் 2:38), நமது பாவங்கள் கழுவப்பட்டன (நடபடிகள் 22:16), மற்றும் நாம் இரட்சிக்கப் பட்டோம் (மாற்கு 16:16; 1 பேதுரு 3:21). இஸ்ரவேல் மக்களைப் போல் நாம், "மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பெற" வில்லை; அதற்குப் பதிலாக நாம், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம் (ரோமர் 6:3). அவர் நம்மை விடுவிப்பவராக, நமது மீட்பராக மற்றும் நமது கர்த்தராக இருக்கிறார்.

நமது இரட்சிப்பு, அடிமைத்தளையில் இருந்து இஸ்ரவேல் மக்களின் இரட்சிப்புக்கு இணையானதாக உள்ளது; நம்மை விடுவிப்பதற்கு இரத்தம் சிந்தப்பட்டது; பின்பு நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம். நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது, பாவத்தின் அடிமைத்தளையில் இருந்து விடுவிக்கப்பட்டோம்.

இரண்டு இரட்சிப்புகளும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒரு நாட்டை நிறைவாகக் கொண்டிருந்தன

இஸ்ரவேல் மக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாடு

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்பு, அவர்கள் வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகளைச் செலவிட்ட பின்பு, நிறைவாக அவர்கள், தங்களுக்குத் தேவன் வாக்களித்திருந்த நாடாகிய கானானுக்குள் பிரவேசிப்பதற்கு, யோர்தான் நதியைக் கடந்து சென்றனர்.

நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாடு

இஸ்ரவேல் மக்களைப் போன்று, நமது பயணமும் பரலோகம் என்ற "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டில்" நிறைவடைகிறது.[1] பரலோகத்திற்குள் நமது பிரவேசத்தை, கானானுக்குள் இஸ்ரவேல் மக்களின் பிரவேசத்துடன் (அல்லது கிறிஸ்தவர்கள் மரணத்தில் யோர்தானைக் கடத்தலுடன்) புதிய ஏற்பாடு குறிப்பாக ஒப்பிடாவிட்டாலும், நாம் பாடுகிற சில பாடல்கள் இந்த இரு நிகழ்ச்சிகளையும் ஒன்றிணைக்கின்றன.

கானானுக்குள் இஸ்ரவேல் மக்களின் பிரவேசமும் பரலோகத்திற்குள் நமது பிரவேசமும் பல வழிகளில் ஒப்பிடப் படுபவைகளாக உள்ளன. (1) இவை இரண்டுமே, தேவனுடைய மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகின்றன (காண்க - யோவான் 14:1-3). (2) இவை இரண்டுமே அவற்றில் பிரவேசிப்பவர்களுக்கு இளைப்பாறுதலை உள்ளடக்கி இருக்கின்றன (காண்க மத்தேயு 11:28-30; வெளிப்படுத்தின விசேஷம் 14:13; ஒப்பிடுக எபிரெயர்

4:9-11). (3) இவை இரண்டுமே, வளம் மிகுந்த நாட்டில் வாழ்வதை உள்ளடக்கி இருக்கின்றன (காண்க - யாத்திராகமம் 3:8; எண்ணாகமம் 13:27; ஒப்பிடுக வெளிப்படுத்தின விசேஷம் 22:1, 2). நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள அந்த நாட்டின் அழகும் ஆசீர்வாதங்களும் அதை நோக்கி நம்மை இழுக்கும் ஒரு காந்தம் போன்று இருக்க வேண்டும்.

இரண்டு இரட்சிப்புகளும் வனாந்தர வாசத்தின் காலத்தில் உண்மைத்தன்மையை உள்ளடக்குகின்றன

இஸ்ரவேல் மக்கள் நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தில் இருந்தனர். இந்த வனாந்தர வாசத்தின் காலத்தைப் பவுல், சபையில் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் செலவிடும் காலத்துடன் - அது எவ்வளவு நீண்ட காலமாக இருந்தாலும் அதனுடன் - ஒப்பிட்டார். ஒரு வேளை அவர், அவர்களின் வனாந்தர வாசம் சோதித்தலை உள்ளடக்கி இருந்தது போன்றே நமது காலமும் அதை உள்ளடக்கி இருக்கிறது என்பதை மறைமுகமாகக் குறிப்பிட விருப்பநோக்கம் கொண்டிருக்கலாம். கிறிஸ்தவ வாழ்வு என்பது சோதனையின் காலமாக உள்ளது.

வனாந்தரத்தில் தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டிருத்தல்

இஸ்ரவேல் மக்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதங்கள். இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் செலவிட்ட காலத்தின்போது, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். அவர்கள் தாக்கப்பட்டபோது தேவன் அவர்களைக் காப்பாற்றினார் மற்றும் அவர்களின் பயணம் முழுவதிலும் அவர்களுக்கு வழிகாட்டுதலை அளித்தார். 10:3, 4ல் பவுல், அவர்களுக்குத் தேவன் உணவும் தண்ணீரும் கொடுத்தார் என்று குறிப்பாகக் கூறினார்: "எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள்.[2] எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே." [3] இஸ்ரவேல் மக்கள் பசியாக இருந்தபோது, அவர்களுக்குத் தேவன் எவ்வாறு மன்னாவையும் காடைகளையும் அளித்தார் (யாத்திராகமம் 16) மற்றும் அவர்கள் தாகமாக இருந்தபோது, அவர்களுக்கு கன்மலையில் இருந்து தண்ணீரை எவ்வாறு அளித்தார் (யாத்திராகமம் 17; எண்ணாகமம் 20) என்பவற்றைப் பற்றிய வரலாறுகளைப் பழைய ஏற்பாடு கூறுகிறது. "அந்தக் கன்மலை கிறிஸ்துவே" என்ற பவுலின் கூற்றானது, வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள் ஆசீர்வதிக்கப் பட்டதன் வழிமுறையாக - தேவனுடைய குமாரனாகிய, தேவத்துவத்தில் இரண்டாம் நபரான - கிறிஸ்து இருந்தார் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.

நமது ஆசீர்வாதங்கள். வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டதுபோல்; நாம் நம்முடைய கிறிஸ்தவ வாழ்வில் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம். அவர்கள் "ஒரே ஞான போஜனத்தைப் புசித்தனர்" மற்றும் "ஒரே ஞானபானத்தைப் பருகினர்" என்பது "நம்முடையவற்றைப் போன்ற ஒன்றையே" என்று அர்த்தப்படலாம். தேவன் நம்மை ஆசீர்வதிப்பது போன்றே - ஒரே வகையான ஆவிக்குரிய போஷணையைக் கொண்டு - அவர்களையும்

ஆசீர்வதித்தார்.

இன்றைய நாட்களில் ஆவிக்குரிய உணவினால் ஆசீர்வதிக்கப் பட்டிருத்தல் பற்றி நாம் நினைக்கும்போது, கிறிஸ்து "ஜீவ அப்பமாக" இருக்கிறார் (யோவான் 6:35) மற்றும் அவர் நமக்கு "ஜீவ தண்ணீரை" தருகிறார் (யோவான் 4:10) என்பவற்றை நாம் நினைவுகூருகிறோம். இத்துடன் கூடுதலாக நாம் ஆவிக்குரிய வகையில் வளரும்படி "வசனம் என்ற பாலை" பெற வழிகொண்டவர்களாக இருக்கிறோம் (1 பேதுரு 2:2).[4] கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் மேலும் பிற ஆசீர்வாதங்களையும் பெறுகிறோம்.

இஸ்ரவேல் மக்கள் கீழ்ப்படியாதிருந்தனர்

இருப்பினும், வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள் இருந்த காலத்தின் போது அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டிருந்தனர். இஸ்ரவேல் மக்களில் பெரும்பான்மையானவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கவில்லை என்பதே பிரச்சனையாக இருந்தது. பவுல், "அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்'' என்று கூறினார் (10:5). இவ்வசனத்தில் "அதிகமானபேர்களிடத்தில்'' என்ற வார்த்தை, பவுல் கூறியிருந்ததற்கு நேர்மாறானதாக உள்ளது. இஸ்ரவேல் மக்கள் "எல்லாரும்" என்பதைப் பற்றி அவர் ஐந்து முறைகள் பேசியிருந்தார்: அவர்கள் "எல்லாரும்" மேகத்தின் கீழாக இருந்தனர், செங்கடலக் கடந்தனர், ஞானஸ்நானம் பெற்றிருந்தனர். ஆவிக்குரிய உணவை உண்டிருந்தனர் மற்றும் ஆவிக்குரிய பானத்தைப் பருகியிருந்தனர். இருப்பினும் அவர்களில் "அதிகமானபேர்கள்" தேவனைப் பிரியப்படுத்தத் தவறியிருந்தனர். என்ன ஒரு கீழான கூற்று! இஸ்ரவேல் மக்களினத்தில் ஏறக்குறைய எல்லாரும் பாவம் செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படாமல் இருந்ததன் மூலம் தண்டிக்கப் பட்டிருந்தனர்.

''அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது" (10:6).[5] பாவங்களின் அதே வகைகளினால் நாமும் குற்றப்பட்டிருக்க முடியும் என்று பவுல் கூறினார்! ஆகையால் நாம் அவற்றைப் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! இஸ்ரவேல் மக்கள் செய்திருந்ததும் ஆனால் நாம் செய்யாது இருக்க வேண்டியதுமான நான்கு "பொல்லாத விஷயங்கள்" பற்றிப் பவுல் குறிப்பாகப் பேசினார்.

(1) *விக்கிரக ஆராதனை:* "அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள்" (10:7). மோசே மலையின்மீது தேவனிடத்தில் இருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக் கொண்டிருக்கையில், இஸ்ரவேல் மக்கள் ஒரு பொன் கன்றுக்குட்டியைச் செய்து அதை ஆராதித்தனர். (காண்க - யாத்திராகமம் 32.) இதன் விளைவாக, லேவியர்களால் பலர் கொல்லப்பட்டனர் மற்றும் பிறர் ஒரு வாதையினால் இறந்தனர்.

(2) *ஒழுக்கவீனம்:* ''அது போல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக" (10:8). மோவாபியப் பெண்களுடன் இஸ்ரவேல் மக்கள் வேசித்தனம் செய்த நிகழ்ச்சி பற்றி நாம் எண்ணாகமம் 25ல்

வாசிக்கிறோம். அதன் விளைவு என்னவாக இருந்தது? ஆயிரக்கணக்கானவர்கள் இறந்தனர்![6]

(3) *கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்தல்:* "அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக" (10:9). பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்த குறிப்பான சந்தர்ப்பம் எண்ணாகமம் 21:5ல் காணப்படுகிறது: "ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்." என்ன நடந்தது? "அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள்" (எண்ணாகமம் 21:6).

(4) *முறுமுறுத்தல்:* "அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்" (10:10). கோரா, தாத்தான் மற்றும் அபிராம் ஆகியோர், மோசே மற்றும் ஆரோன் ஆகியோரின் நடத்துவத்துவத்திற்கு எதிராகக் கலகம் ஒன்றை வழிநடத்திய நிகழ்ச்சியைப் பவுல் குறிப்பிட்டிருக்கலாம், இந்தக் கலகத்தின் விளைவாக, அவர்களும் கலகத்தில் பங்கேற்ற மற்றவர்களும் தேவனுடைய செயல்களினால் கொல்லப்பட்டனர். கலகத்தை நடத்தியவர்கள் குடும்பங்களைப் பூமியானது விழுங்கிற்று, கலகம் செய்த மற்ற லேவியர்களை வானத்தில் இருந்து வந்த அக்கினி பட்சித்தது மற்றும் அவர்களைப் பின்பற்றிய 14,000க்கும் மேற்பட்டவர்களை ஒரு வாதை அழித்தது (எண்ணாகமம் 16).

இஸ்ரவேல் மக்கள் செய்தது போல கிறிஸ்தவர்கள் கீழ்ப்படியாமல் இருக்கக் கூடாது

இஸ்ரவேல் மக்கள் செய்த பாவங்களின் அதே வகையினால் கொரிந்தியர்கள் குற்றப்பட்டிருக்க முடிந்திருந்தது, அதேபோன்று நாமும் இருக்கக்கூடும்.

(1) நாம் *விக்கிரக ஆராதனையினால்* குற்றப்பட்டிருக்க முடியுமா? நாம் எப்போதாவது தேவனைக் காட்டிலும் முன்னிடத்தில் பணத்தை அல்லது விளையாட்டுகளை அல்லது இன்பங்களை வைக்கிறோமா? தேவனையும் அவரது ஊழியத்தையும் காட்டிலும் முன்னிடத்தில் வேறு எதையாவது நாம் வைக்கும் போதெல்லாம், அதை நாம் நமது விக்கிரகம் ஆக்குகிறோம்.

(2) நாம் - வேசித்தனம் அல்லது விபசாரம் என்ற - *ஒழுக்கவீனத்தினால்* குற்றப்பட்டிருக்க முடியுமா? நாம் மாம்சத்தை உடையவர்களாக உண்டாக்கப் பட்டிருப்பதால், மனிதர்கள் எப்போதும் ஆளாகியிருந்திருக்கக் கூடிய அதே சோதனைகளுக்கு நாமும் ஆளாகியிருக்கிறோம், மற்றும் நாம் மக்கள் ஒழுக்கவீனமாக நடந்துகொள்ளும்படி தொடர்ந்து சோதிக்கப்படும் ஒரு உலகத்தில் வாழ்கிறோம். ஒழுக்கவீனத்தில் ஈடுபடும்படி கிறிஸ்தவர்கள் சோதிக்கப்பட முடியுமா? ஜிம்மி ஆலென் அவர்களின் விளக்கம் திரும்பக்கூறப்படத் தகுதியானதாக உள்ளது: "பாலுறவுரீதியாகத் தாம் சோதிக்கப்பட இயலாது என்று கூறும் நபர், தமது உணர்வுகள் எழுப்பப்பட்டிராத அளவுக்கு மிகவும் இளையவராக இருக்கிறார், என்ன நடக்கிறது என்று தாம் அறியாத அளவுக்கு ஒன்றும் அறியாதவராக இருக்கிறார், ஏற்கனவே கீழ்ப்படுத்தி இருக்கும் அளவுக்கு

அவர்கள் முதியவர்களாக இருக்கின்றனர், சாதாரணமானவர்களாக அவர்கள் இருப்பதில்லை அல்லது அவர்கள் பொய்கூறுகின்றனர்."[7]

(3) நாம் *கர்த்தரைப் பரீட்சை பார்க்கும்* குற்றப்பட்டிருக்க முடியுமா? நமது நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றில் குறைவினால் அவரது பொறுமையை நாம் சோதிக்கும்போதெல்லாம், நாம் அவரைப் பரீட்சை பார்க்கிறோம்; கீழ்ப்படியாமைக்குத் தண்டனை தர அவர் உண்மையில் தமது அச்சுறுத்தல்களைச் செயல்படுத்துவார் என்பதை விசுவாசியாதவர்கள் போல நாம் செயல்படுகிறோம்.

(4) நாம் தேவனுக்கு விரோரதமாக *முறுமுறுத்தல்* அல்லது முறையிடுதலினால் குற்றப்பட்டிருக்க முடியுமா? நமது முறையிடுதல்கள் பற்றி, நமக்கு அவர் செய்துள்ளவற்றிற்கு நமது நன்றி உணர்வில் குறைபாடு மற்றும் நமக்கும் அவரது ஊழியத்திற்கும் மிகச்சிறந்தவற்றையே அவர் செய்வார் என்பதில் நம்பிக்கைக் குறைபாடு ஆகியவற்றிற்குச் சாட்சியம் தருவதாகக் காணப்படும் நமது நிலையான நழுவுதல் பற்றி தேவன் என்ன நினைக்கிறார்?

ஆம், இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள், இஸ்ரவேல் மக்களில் அதிகமானவர்களின் அழிவிற்குக் காரணமாயிருந்த அதே பாவங்களினால் குற்றப்பட்டிருக்க முடியும். மற்ற ஏராளமான பாவங்களினாலும் நாம் குற்றப்பட்டிருக்க முடியும். இஸ்ரவேல் மக்களைப் போன்றே கிறிஸ்தவர்கள் பாவத்தில் தொடர்ந்து நின்றால், விளைவு என்னவாக இருக்கும்? இஸ்ரவேல் மக்களின் பாவங்களும் அவர்களின் பாவத்திற்காகத் தேவன் கொடுத்த தண்டனைகளும் நமக்கு உதாரணங்களாக உள்ளன மற்றும் "நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (10:11) என்று பவுல் கூறினார். இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் விழுந்தது போன்றே, இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் ஒப்புவமையான வனாந்தரத்தில் விழக்கூடும்; அவர்கள் பாவத்தில் நிலைநிற்கக் கூடும், அதன் விளைவாகத் தங்கள் ஆத்துமாக்களை இழந்து போகக் கூடும். இங்கு பவுல், விசுவாச விலக்கத்தின் சாத்தியக்கூறு பற்றி - கிறிஸ்தவர்கள் புறம்பே விழுந்துபோய் நித்தியத்திற்கும் இழந்துபோகப்படக்கூடும் என்ற உண்மை நிலை பற்றி - போதித்தார். ஆகையால் நாம் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள நாட்டிற்குள் நாம் பிரவேசிப்பதைத் தடைசெய்யும் பாவங்களைத் தவிர்க்கக் கடவோம்.

முடிவுரை

12 மற்றும் 13 ஆகிய வசனங்களில் இந்தப் பாடத்திற்கான முடிவைப் பவுல் தாமே அளித்தார். அவர் ஒரு எச்சரிக்கையையும் வாக்குறுதியையும் கொடுத்தார்.

முதலாவது, 12ம் வசனத்தில் நாம் எச்சரிக்கையைக் காண்கிறோம்: "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்." கொரிந்தியர்கள், மட்டுமீறிய நம்பிக்கை என்ற அபாயத்தில் இருந்தனர். அவர்கள் தங்களின் நித்திய இரட்சிப்பு நிச்சயமானது என்று நினைத்தனர்; ஆகையால் அவர்கள் தாங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டிய அளவுக்கு இராதிருந்தனர். மட்டுமீறிய நம்பிக்கையுடன் ஒரு விளையாட்டுக்குழு விளையாடச் செல்லும்போது, அந்தக் குழு ஜாக்கிரதை

இன்றி இருப்பதற்கும் தோல்வி அடைவதற்கும் சாத்தியக்கூறு உள்ளது. அபாயமான தொழில்களில் ஈடுபடும் மக்கள் எப்போதுமே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; அவர்கள் தங்களால் தவறு செய்ய முடியாது என்று நினைக்கும்போது, அவர்கள் தங்களையோ அல்லது பிறரையோ காயப்படுத்திக் கொள்வதற்கும் மரணத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் மாபெரும் அபாயத்தில் உள்ளனர். ஆகையால் நாம், பவுல் அறிவுறுத்துதலை எடுத்துக் கொள்வோமாக. நாம் புறம்பே விழுந்து போய்விடாமலும் நமது ஆத்துமாக்களை நித்தியத்திற்கும் இழந்து போய்விடாமலும் இருக்கும்படி, தொடர்ந்து எச்சரிக்கையாகவும் வைராக்கியமாகவும் இருப்போமாக.

இந்தப் பகுதியைப் பவுல், ஒரு வாக்குறுதியுடன் முடித்தார்: "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (10:13). நாம், பாவம் செய்யாதபடி எச்சரிக்கையாக இருப்பது அவசியம் என்றிருக்கும் வேளையில், பாவம் செய்தல் தவிர்க்க இயலாததாக உள்ளது என்பதையும் நாம் உணர்ந்தறிய வேண்டும். நாம் தனிப்பட்ட அல்லது சகிக்க இயலாத வகையில் சோதிக்கப்பட மாட்டோம், ஆனால் மனித குலத்திற்குப் பொதுவானவைகளாக உள்ள வழிகளிலேயே சோதிக்கப்படுவோம் என்று தேவன் நமக்கு உறுதி அளித்திருக்கிறார். எதிர்த்து நிற்கும் நமது திறனுக்கு மேலான வகையில் நாம் சோதிக்கப்படுவதை அவர் அனுமதிக்க மாட்டார், ஆனால் சோதனையின் ஒவ்வொரு வழியிலும் நாம் தப்பிக்கொள்ளும்படியான போக்கை அவர் அளிப்பார். சோதனையை எதிர்த்து நிற்குதலுக்கான மற்றும் விழுந்து போகாது இருப்பதற்கான நமது திறனுக்கு நாம், முதலாவது மற்றும் முற்றிலும் முதலாவதாக, தேவனையும் அவரது அளிப்புகளையும் சார்ந்திருக்க வேண்டும். அவர் உண்மையுள்ளவராக இருப்பதால் நாம் அவர்மீது நம்பிக்கை வைக்க முடியும். இருப்பினும் அது நம்மைச் சார்ந்ததாகவும் உள்ளது. தப்பிக்கொள்ளும்படியான போக்கைத் தேவன் ஏற்படுத்துகிறார், ஆனால் நாம் அதை நமக்கு பயனுள்ளதாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்; நாம் தப்பிக்கொள்ளுதலைச் செய்ய வேண்டும்.[8] தேவனுடைய வாக்குத்தத்தங்கள் தரப்பட்ட நிலையில் நாம் பாவம் செய்வதைத் தவிர்க்க முடியும். நாம் பாவம் செய்தால், அது தேவனுடைய தவறு அல்ல; நாம் நம்மைத்தான் குற்றப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

குறிப்புகள்

[1]நாம் மரித்து நியாயத்தீர்ப்புக்குப் பின்பு பரலோகம் சென்றாலும் அல்லது நாம் உயிரோடு இருக்கையிலேயே கிறிஸ்து திரும்பி வந்து நாம் "மறுரூபமாக்கப்பட்டு" (1 கொரிந்தியர் 15:51) அடுத்ததாக நியாயத்தீர்ப்பை அனுபவித்து பின்பு பரலோகத்திற்குச் சென்றாலும், இந்தக் கூற்று உண்மையானதாகவே உள்ளது. [2]உணவு மற்றும் பானம் ஆகியவற்றின் ஆதாரமூலம் ஆவிக்குரியதாக இருந்தது என்ற கருத்தில் அவைகள் "ஆவிக்குரியவைகளாக" இருந்தன; அவைகள் இயற்கையான வழிமுறைகளில் பெற்றுக்கொள்ளப் பட்டவையாக இருந்தன என்பதற்கு மாறாக அவைகள் தேவனால்

தரப்பட்டவையாக இருந்தன. [3]*"அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலை" என்பதைப் பற்றிப் பேசியதில் பவுல், இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் இருந்த அவர்களின் ஆண்டுகளின்போது, கிறிஸ்து அவர்களுடன் கூட இருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பித்தார். மேலும் தேவன் "இஸ்ரவேல் மக்களின் கன்மலை" என்ற வகையில் குறிப்பிடப் பட்டுள்ளார் (காண்க உபாகமம் 32:4, 15, 18; ஏசாயா 17:10; 26:4).* (David Lipscomb, *A Commentary on the New Testament Epistles*, vol. 2, *First Corinthians*, ed J. W. Shepherd [Nashville: Gospel Advocate Co., 1935; reprint; 1960], 146.) [4]*இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் அளித்த "ஆவிக்குரிய உணவு" மற்றும் "ஆவிக்குரிய பானம்" ஆகியவற்றை, கிறிஸ்தவ யுகத்தில் கர்த்தருடைய பந்திக்கு ஒப்புவமை என்ற வகையில் பல விளக்கவுரையாளர்கள் காணுகின்றனர்.* Jimmy Allen, *Survey of First Corinthians,* 3d ed. (Searcy, Ark.: By the Author, 1989), 118 *என்ற புத்தகத்தில் முன்வைக்கப்பட்ட கருத்தாக உள்ளது.* [5]*"தேவன் தராமல் வைத்திருந்தவற்றை இஸ்ரவேல் மக்கள் இச்சித்தனர் மற்றும் அவர் அளித்தவற்றைப் பற்றி முறுமுறுத்தனர் (எண்ணாகமம் 11:4, 33, 34)"* (J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* [Cincinnati, Ohio: Standard Publishing Foundation, n.d.], 100). [6]*பவுல் "ஒரே நாளில் 24,000 பேர் விழுந்துபோனார்கள்" என்று கூறினார். இருப்பினும் எண்ணாகமம் 25:9ம் வசனம், "அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்துநாலாயிரம்பேர்" என்று கூறுகிறது. எண்ணாகமம் 25ல் பதிவுசெய்யப்பட்ட நிகழ்ச்சியைப் பவுல் குறிப்பிடவில்லை, ஆனால் யாத்திராகமம் 32:25ல் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சியை அவர் குறிப்பிட்டார் என்று கிளேஸன்* L. *ஆர்ச்சர் அவர்கள் மனநிறைவடைந்தார், மற்றும் அந்த வேளையில் கொல்லப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையைப் பவுல் நமக்குத் தகவல் அளித்தார்: 23,000.* (Gleason L. Archer, *Encyclopedia of Bible Difficulties* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1982], 401.) [7]Allen, 120. [8]George W. DeHoff, *Sermons on First Corinthians* (Murfreesboro, Tenn.: Christian Press, 1947), 84.

11

கலாச்சாரத்தை மதித்தல் தேவைப்பட்ட ஒரு சபை

(1 கொரிந்தியர் 11:1–16)

1 கொரிந்தியர் நிருபத்தில் உள்ள அதிகம் கடினமான ஒரு வசனப்பகுதி 11:1-16ல் காணப்படுகிறது.[1] இவ்வசனப்பகுதியில் உள்ள சில விபரங்கள் - எடுத்துக்காட்டாக, ஒரு பெண் "தூதர்களினிமித்தம்"[2] தனது தலையில் முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும் என்று பவுல் கூறியபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்பது போன்ற விபரங்கள் - புரிந்துகொள்ளக் கடினமானவையாக உள்ளன என்றாலும், முதன்மைச் சிந்தனை பற்றிக்கொள்ளப்பட முடியும்: ஜெபம் செய்யப் படுகையிலோ அல்லது தீர்க்கதரிசனம் கூறப்படுகையிலோ, பெண்கள் தங்கள் தலையில் முக்காடு இட்டுக் கொள்ள வேண்டும்; இதற்கு நேர்மாறாக ஆண்கள், முக்காடு இடப்படாத தலையுடன் ஜெபிக்க வேண்டும் அல்லது தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும் (11:4, 5). ஆகையால் இவ்வசனப் பகுதி அர்த்தப் படுத்துவது என்ன என்பதைப் புரிந்துகொள்ளுதல் மிகவும் கடினமாக இருப்பதில்லை; இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு இவ்வசனப் பகுதியின் நடைமுறைப் பயன்பாடுதான் கடினமானதாக உள்ளது. குறிப்பாக கிறிஸ்தவர்கள், ஆராதனை ஊழியங்களில் கலந்துகொள்ளும் பெண்கள், ஆண்களுக்குத் தங்கள் கீழ்ப்படிதலைக் காண்பித்தல் என்ற வகையில் தங்கள் தலையில் முக்காடு இட்டுக் கொள்ள வேண்டும் என்று போதிக்கிறதா இல்லையா என்பதில் கருத்து வேறுபடுகின்றனர். சபைகூடுகையில் பெண்கள் தங்கள் தலையை எதைக் கொண்டாவது மூடிக்கொண்டிருக்க வேண்டும் என்ற நம்பிக்கையைச் சிலர் பலமாகப் பற்றிக்கொண்டுள்ளனர்.[3] மற்றவர்கள், இன்றைய நாட்களில் ஒரு பெண் ஆராதிக்கும்போது தனது தலையை மூடிக்கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தை மறுத்துள்ளனர்.

இதில் யார் சரியாக இருக்கிறார்? பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ளுதல் பற்றிய பவுலின் முதல் நூற்றாண்டு அறிவுறுத்துதல்களை நாம், இருபத்தியோராம் நூற்றாண்டின் கிறிஸ்தவ சகோதரிகளுக்கு நேரடியாக நடைமுறைப் படுத்த வேண்டுமா? இந்த விஷயத்தை நாம் ஒரு விரிவான சந்தர்ப்பப் பொருளில் படித்து, கிறிஸ்துவுக்கும் கலாச்சாரத்துக்கும் இடையில் உள்ள உறவின் வெளிச்சத்தில் இதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தாக வேண்டும். மூன்று பொதுவான கேள்விகளைக் கேட்டு அவற்றிற்குப் பதில் அளிப்பதன் மூலம் இதை நாம் செய்வோம்.

கலாச்சாரம் என்றால் என்ன?

கிறிஸ்துவுக்கும் கலாச்சாரத்திற்கும் இடையில் உள்ள உறவைப்

புரிந்துகொள்வதற்கு நாம், "கலாச்சாரம்" என்பது ஒரு வாழ்வின் வழியை அர்த்தப்படுத்துகிறது என்பதை அறிவது அவசியமாக உள்ளது, இந்த வழியானது மக்களின் மாதிரியாக உள்ள - அவர்கள் சிந்திக்கும் வகை, அவர்கள் ஒருவர் பிறருடன் உறவுபடும் வகை மற்றும் அவர்கள் செய்கிற விஷயங்கள் போன்ற - ஒவ்வொரு விஷயத்தையும் உள்ளடக்குகிறது.

உதாரணமாக, நகரத்தில் வாழ்பவர்களின் கலாச்சாரம் கிராமத்தில் வாழ்பவர்களின் கலாச்சாரத்தில் இருந்து முற்றிலும் நேர்மாறானதாக உள்ளது. உலகத்தின் பல்வேறு பாகங்களில் உள்ள மக்கள் பல்வேறு வகையான சமூக உறவுகளை அனுபவிக்கின்றனர்; குடும்பமும் சமூகமும் கட்டியெழுப்பப் பட்டுள்ள மற்றும் மதிக்கப்படக்கூடிய வழிகள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. ஆப்பிரிக்கா, ஐரோப்பா, இந்தியா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றில் வாழும் மக்கள் வெவ்வேறு வழிகளில் சிந்திக்கின்றனர்; அவர்களின் உலகக் கண்ணோட்டங்களும் மதிப்பீட்டு முறைமைகளும் ஒன்றுபோல் இருப்பதில்லை. காலங்கள் தோறும் நிலவியுள்ள கலாச்சாரங்கள் யாவற்றிற்கும் முற்றிலுமாக இந்தக் கூற்றுகள் உண்மையானவைகளாக உள்ளன: ஒவ்வொரு கலாச்சாரமும் மற்றவற்றில் இருந்து வேறுபடுகிறது.

கிறிஸ்துவுக்கும் கலாச்சாரத்துக்கும் இடையிலான உறவுமுறை என்ன?

இப்போது நிலவும் ஆயிரக்கணக்கான கலாச்சாரங்களுடன் - உலகம் முழுவதிலும் மாறுபட்ட வாழ்வின் வழிகளைக் கொண்டுள்ள பல்வேறு மக்களுடன் - கிறிஸ்து எவ்வாறு உறவுபடுகிறார்?

முதலாவது, கிறிஸ்துவின் பலியினுடைய பயன்கள் ஒவ்வொரு கலாச்சாரத்தின் மக்களுக்கும் விரிவாக்கப் பட்டுள்ளது. எல்லாருக்காகவும் கிறிஸ்து மரித்தார் என்று புதிய ஏற்பாடு கூறுகிறபோது (ரோமர் 5:18; 2 கொரிந்தியர் 5:14), எந்தக் கலாச்சாரமும் தேவனுடைய வழிக்கு மிகவும் அந்நியமானதாக இருப்பதில்லை என்றே அது அறிவிக்கிறது. எல்லா மக்களும் தேவனால் அன்புகூரப்படுகின்றனர் மற்றும் எல்லாரும் இரட்சிக்கப்படும்படி அவரால் அழைக்கப்படுகின்றனர் (வெளிப்படுத்தின விசேஷம் 22:17). கொரிந்து நகரில் யூதர்களும் கிரேக்கர்களும், செல்வர்களும் ஏழைகளும், கனமுள்ளவர்களும் கனமற்றவர்களும் ஆகிய யாவருமே கிறிஸ்து மற்றும் அவரது மக்களுடனான ஐக்கியக்கிற்குள் வரவேற்கப்பட்டிருந்தனர்.

இரண்டாவது, எந்தக் கலாச்சாரமும் தேவனுடைய இராஜ்யத்துடன் சமானப்படுத்தப்பட முடியாது. இயேசு, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று அறிவித்தார் (யோவான் 18:36). ஒவ்வொரு கலாச்சாரத்தின் மக்களும் பாவம் நிறைந்தவர்களாக உள்ளனர் (ரோமர் 3:23); குற்றம், பொல்லாங்கு செய்தல், சுயநலம் மற்றும் ஒழுக்கவீனம் ஆகியவற்றினால் மனிதகுலம் வாதைப்படுகிறது. பேதுரு, "மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (நடபடிகள் 2:40; RSV). அந்தக் காலத்தில் இருந்து இந்தக் காலம் வரையிலும் ஒவ்வொரு தலைமுறையும் "பொல்லாத சந்ததியாகவே" இருந்துள்ளது.

மூன்றாவது, ஒவ்வொரு கலாச்சாரமும் தேவனுடைய தர அளவைகளைக்

கொண்டு மதிப்பிடப் படவேண்டும். எந்தக் கலாச்சாரமும் தேவனுடைய இராஜ்யத்திற்குச் சமமானதாக இருப்பதில்லை என்பதால், கலாச்சார நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் தேவனுடைய அங்கீகாரத்தைக் கொண்டுள்ளது என்று நாம் யூகிக்க முடியாது. கொரிந்து நகரில் விக்கிரக ஆராதனை, ஒழுக்கவீனம் ஆகியவை வழக்கத்தில் இருந்தன, ஆனால் அவைகள் தேவனைப் பிரியப்படுத்தவில்லை. சில கலாச்சாரங்கள் மனித பலிகளை வழக்கமாக அளித்து வந்துள்ளன மற்றும் பிற கலாச்சாரங்கள், உயிருள்ள விதவைகளை, அவர்களின் மரித்த கணவருடைய உடலுடன் எரித்துள்ளன அல்லது புதைத்துள்ளன. குறிப்பிட்ட சில சமூகங்கள், பலதாரத் திருமணம் அல்லது ஆண் ஓரினச்சேர்க்கை என்பதைப் பொதுவாக நடைமுறைப் படுத்தியுள்ளன, மற்றும் பல சமூகங்கள் வேசித்தனத்தை - திருமணமாகாத துணைவர்களிடையே பாலுறவை - வாழ்வின் சாதாரண பாகம் என்ற வகையில் ஏற்றுக்கொண்டுள்ளன. உலகத்தின் சில பாகங்களில், வழக்கமாக தேவையற்ற சிறுபிள்ளைகளை பூதங்களால் அழிக்கப்பட்டு மரிக்கும்படி விடப்பட்டிருந்தனர். இப்படிப்பட்ட பழக்கங்கள் வெவ்வேறு கலாச்சாரங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன என்ற உண்மையானது, அவற்றை தேவன் எப்போதாவது அங்கீகரித்தார் என்று அர்த்தப்படுத்துவது இல்லை.

இதற்கு மறுபறத்தில், எந்தக் கலாச்சாரத்திலும் உள்ள சில அம்சங்கள் தேவனால் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. உதாரணமாக, பொல்லாங்கு செய்பவர்களைத் தண்டிக்கவும் நன்மை செய்பவர்களுக்குப் பலன் அளிக்கவும் தேவன் அரசாங்கங்களுக்கு அனுமதி அளித்துள்ளார் (ரோமர் 13:1-7). கண்ணியமாக இருப்பதையும் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நல்ல நடக்கைகளைப் பயன்படுத்துவதையும் அவர் நிச்சயமாகவே அங்கீகரிப்பார் (காண்க 1 பேதுரு 3:8; KJV). குடும்பங்களும் சமூகங்களும் தங்களுக்குச் சொந்தமானவர்களைத் தாங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதை நாம் அறிகிறோம் (1 தீமோத்தேயு 5:8).

கலாச்சார நடைமுறைகளைப் பற்றி தேவன் என்ன நினைக்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிவது எவ்வாறு? கிறிஸ்துவுக்குள் விசுவாசம் கொண்டுள்ளவர்களுக்கு, அந்தக் கேள்விக்கு ஒரே ஒரு பதில்தான் உள்ளது: தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தில் காணப்படும் தர அளவைகளுடன் கலாச்சார நடைமுறைகளை ஒப்பிடுவதன் மூலமாகவே அவற்றை நாம் மதிப்பிட முடியும். மனித பலி, விக்கிரக ஆராதனை அல்லது வேசித்தனம் - அல்லது கண்ணியம், தயவு, பரோபகாரம் - பற்றி தேவன் என்ன நினைக்கிறார் என்று நாம் அறிய விரும்பினால், நாம் அவரது வசனத்தைக் கலந்து ஆலோசிக்க முடியும். வேதாகமம் போதிப்பது என்ன என்பதைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, பெரும்பான்மையான கலாச்சாரங்களில், தேவன் அங்கீகரிக்கும் பழக்க வழக்கங்களும் அவர் அங்கீகரியாத நடைமுறைகளும் இருப்பதை நாம் உணர்ந்தறிய முடியும்.

கடைசி நியாயத்தீர்ப்பில் மக்கள், ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் அல்ல, ஆனால் தனிநபர்கள் என்ற வகையிலேயே நியாயந்தீர்க்கப் படுவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 20:12-15; 2 கொரிந்தியர் 5:10). மிகவும் மோசமான சூழ்நிலைகளிலும்கூட, விசுவாசம் நிறைந்த பரிசுத்தவான்கள், நித்தியத்திற்கும் இரட்சிக்கப் பட்டிருக்கும்படியான

வாழ்வை வாழக்கூடும். இதற்கு எதிரிடையாக, மிகவும் சிறப்பான கலாச்சாரத்தில் கூட (இவற்றில் *எதுவும்* தேவனுடைய இராஜ்யத்திற்குச் சமமானதாக இருப்பதில்லை) பலர் - சொல்லப்போனால் பெரும்பான்மையானவர்கள் (மத்தேயு 7:13,14) - இழந்து போகப் படுவார்கள்.

கொரிந்தியர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளக்கூடிய கொள்கைகள் என்ன?

கிறிஸ்துவுக்கும் கொரிந்தியர்களின் கலாச்சாரத்திற்கும் இடையிலான உறவை நாம் ஆராய்கையில், எல்லாக் காலங்களுக்கும் மற்றும் எல்லா இடங்களுக்குமான சில கொள்கைகளை நாம் கற்றறிய முடியும்.

கலாச்சாரப் பிறழ்வுகளைப் புறக்கணியுங்கள்

கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் கலாச்சாரத்தின் பிறழ்வுகளைப் புறக்கணிக்க வேண்டியிருந்தனர். கொரிந்து நகரில் இருந்த மக்கள் மனித ஞானத்தை நேசித்தனர், ஆனால் அங்கு இருந்த கிறிஸ்தவர்கள் ஞானத்தைப் பற்றிய உயர்த்தப்பட்ட தங்களின் கண்ணோக்கைப் புறக்கணிக்க வேண்டியிருந்தனர். கொரிந்து நகரில் இருந்த பலர் ஒழுக்கவீனம் மற்றும் விக்கிரக ஆராதனை ஆகியவற்றினால் குற்றப்பட்டிருந்தனர், ஆனால் அந்த நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் இவ்வகையான வாழ்வு நடைகளைத் துறக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டனர் (1 கொரிந்தியர் 6:18; 10:14).

அவ்வாறே, புதிய ஏற்பாட்டின்படியான மற்ற கிறிஸ்தவர்களும் தங்கள் கலாச்சாரங்களின் பாவம் நிறைந்த அம்சங்களைப் புறக்கணிக்கும்படி சீர்பொருத்தமான வகையில் அழைக்கப்பட்டனர். கிறிஸ்தவர்கள் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாதிருக்கும்படியும் மறுரூபமாகும்படியும் வேண்டிக் கேட்டுக்கொள்ளப்பட்டனர் (ரோமர் 12:1, 2). சகோதரர்கள் "உலகத்தால் கறைபடாதபடிக்கு" தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று யாக்கோபு கூறினார் (யாக்கோபு 1:27; காண்க 1 யோவான் 2:15-17). இயேசு, தம்மைப் பின்பற்றுபவர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும், அவர்கள் "உலகத்தாராக" இருக்கக் கூடாது என்று கூறினார் (யோவான் 17:15, 16). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள் உலகத்தைப் பற்றிய பாவம் நிறைந்த ஒவ்வொன்றையும் எதிர்த்து நிற்க வேண்டும் மற்றும் தங்களைச் சுற்றிலும் உள்ளவர்களில் இருந்து வேறுபட்டு இருக்க வேண்டும். முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் உலகத்தைச் சீர்திருத்தும்படியல்ல, ஆனால் உலகத்தைப் புறக்கணிக்கும்படியே அழைக்கப்பட்டிருந்தனர். அதுபோன்றே ஒவ்வொரு காலத்திலும் உள்ள கிறிஸ்தவர்கள், உலகத்தை மாற்றும்படி எதிர்பார்க்கப்படாமல், உலகத்தில் காணப்படும் பாவத்தை விட்டு விலகி இருத்தலில் கவனம் குவிக்கும்படியே கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

கலாச்சாரச் செயல்முறைகளைத் தழுவிக்கொள்ளுங்கள்

கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள், சட்டங்களும் பழக்க வழக்கங்களும் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்கு வழிநடத்தும் வகையில், *தங்கள் கலாச்சாரச் செயல்முறைகளைத் தழுவிக்கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர்.* பவுல்

தம்மைத் தாமே ஒரு உதாரணமாகப் பயன்படுத்தினார். அவர் "எல்லாருக்கும் எல்லாமும்" ஆனார் (1 கொரிந்தியர் 9:22). அவர் யூதர்களின் வாழ்வுநடையின்படி வாழுதல் அனுகூலமாக இருந்தபோது, அவ்வாறே செய்தார், மற்றும் அவர் புறஜாதியாரின் கலாச்சாரத்தைத் தழுவிக்கொள்ளுதல் கிறிஸ்துவுக்குள் ஆத்துமாக்களை வழிநடத்தத் தமக்கு உதவும்போது, அதையே செய்தார்.

பவுலின் கொள்கையை இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் எந்த கலாச்சாரத்திலும் நடைமுறைப் படுத்த முடிவது எவ்வாறு? நாம் உலகத்தின் பாவம் நிறைந்த வழிகளைத் தழுவிக்கொள்ள முடியாது என்பது தெளிவு; நாம் பாவத்தின் ஒவ்வொரு வகையையும் புறக்கணிக்க வேண்டும். இருப்பினும், இழந்துபோகப்பட்டுள்ளவர்களை அடைவதற்கு முயற்சி செய்ய, கிடைக்கும் ஆதாரமூலங்கள் யாவற்றையும் பயன்படுத்த முடியும். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு பவுலுக்குக் கிடைத்திருந்தது என்றால், அவர் அதன் அனுகூலத்தை பயன்படுத்தியிருக்க மாட்டாரா? பவுலைப் போன்றே "எப்படியாகிலும் சிலரை இரட்சிப்பதற்கு" நாம் "எல்லாருக்கும் எல்லாமும்" ஆவதை நாடவேண்டும். செயல்விளைவில் பவுல், "நான் யூதருக்கு யூதனைப் போலானேன்; கிரேக்கருக்கு கிரேக்கனைப் போலானேன்" என்று கூறினார். இன்றைய நாட்களில் அவர் பிரசங்கிப்பார் என்றால், அவர் "இந்தியாவில் நான் இந்தியக் கிறிஸ்தவர்களுக்குப் பொருத்தமான வகையில் நடந்து கொண்டு பிரசங்கிக்கிறேன்; ஆப்பிரிக்காவில் நாம் ஆப்பிரிக்க சகோதரர்களால் ஏற்றுக்கொள்ளப் படும்வகையில் உடுத்தி தேவனை ஆராதிக்கிறேன்" என்று கூறுவார் அல்லவா? நாம் எங்கிருந்தாலும், அங்குள்ள மக்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதில் அதிகம் செயல் விளைவுள்ளவர்களாக இருக்கும்படிக்கு, உள்ளூர் பழக்கவழக்கங்களைத் தழுவிக்கொள்ள வேண்டும்.

கலாச்சார ஒழுகலாறுகளைக் கடைப்பிடியுங்கள்

கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் உள்ளூர் ஒழுகலாறுகளைக் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருந்தனர். அதாவது அவர்கள், தேவனுடைய நிபந்தனைகளுக்கு கொரிந்தியக் கலாச்சாரப் பழக்க வழக்கங்கள் நேரெதிராக இராதவரையில் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர். அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தால், மற்றவர்களை ஆளுகை செய்த சட்டங்களில் இருந்து தாங்கள் விடுவிக்கப் பட்டிருந்ததாகவோ அல்லது சமூகத்தில் உள்ள எழுதப் படாத விதிகளைக் கடைப்பிடிப்பது அவசியம் இல்லை என்பதாகவோ நினைக்கக் கூடாதிருந்தது.

ஒரு பெண் ஆராதிக்கும்போது அவள் தனது தலைக்கு முக்காடு இட்டுக் கொள்ள வேண்டும் என்பது கொரிந்து நகரில் பழக்கமாக இருந்தது என்பது உறுதி.[4] அவ்வாறு செய்யத் தவறுதல் என்பது அவள் தனது கணவருக்கு அவமரியாதை காண்பித்தலாக இருந்தது. கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள், "இப்போது நாம் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம்; நாம் கிறிஸ்துவுக்குள் சுயாதீனர்களாக இருக்கிறோம். ஆகையால் நாம், புறதெய்வ வணக்கத்தவரான நமது அயலகத்தாரின் பழக்க வழக்கங்களினால் கட்டுப்படுத்தப் பட்டிருப்பதில்லை, மற்றும் ஜெபிக்கும்போதோ அல்லது தீர்க்க தரிசனம் உரைக்கும்போதோ, நமது பெண்கள் தங்கள் தலைக்கு முக்காடு இட்டுக்கொள்ளத் தேவையில்லை" என்று

வாதம் செய்திருக்கக் கூடும். ஒருவேளை அவர்கள், ஆண்களும் பெண்களும் கிறிஸ்துவுக்குள் சமமானவர்களாக இருப்பதால் (காண்க கலாத்தியர் 3:28), கிறிஸ்தவப் பெண்கள் தங்கள் மீது சமூகம் வைத்த கட்டுப்பாடுகளில் இருந்து விடுவிக்கப் பட்டிருந்தனர் என்றுகூட நினைத்திருக்கலாம்.

கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது கொரிந்தியர்களை அவர்களின் கலாச்சாரரீதியான எதிர்பார்ப்புகளில் இருந்து விடுவிக்கவில்லை என்பதைக் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் உணர்ந்து அறிய வேண்டும் என்று பவுல் விரும்பினார்; ஆண்களுக்குக் கீழ்ப்படிதலைக் காண்பிக்கப் பெண்கள் உள்ளூர் பழக்க வழக்கத்தைப் பின்பற்ற வேண்டியிருந்தனர். பெண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இடாமல் ஜெபித்தல் அல்லது தீர்க்கதரிசனம் கூறுதல் கூடாது என்று அவர்களுக்கு அவர் கூறினார். ஒரு பெண் அவ்வாறு செய்தல் அவளது "தலையாகிய" அவளது கணவரைக் கனவீனப் படுத்துதலாக இருக்கும் (11:5); அது அவள் இனியும் தனது கணவருக்குக் கீழ்ப்பட்டவள் அல்ல என்று அவள் அறிவித்தலுக்குச் சமமானதாக இருக்கும். கீழ்ப்படிதலின் கொள்கை - ஆணுக்குப் பெண்ணும், கிறிஸ்துவுக்கு ஆணும் மற்றும் தேவனுக்குக் கிறிஸ்துவும் கீழ்ப்படிந்திருத்தல் (11:3) - ஒரு நித்திய கொள்கையாக உள்ளது. தலைகளில் முக்காடுகள் இடுதல் என்பது கொரிந்து சமூகத்தில் அந்தக் கொள்கையைப் பிரதிபலித்த காரணத்தினால், அவற்றை அணிதலின் பழக்கத்தைக் கிறிஸ்தவப் பெண்கள் புறக்கணிக்கக் கூடாதிருந்தது.[5] பெண்கள் ஆண்களைக் காட்டிலும் குறைவான முக்கியத்துவம் உடையவர்கள் என்று பவுல் கூறவில்லை. அதே போன்று, ஆணோ அல்லது பெண்ணோ மற்றவரைச் சாராதவராக இருப்பதும் இல்லை. உண்மையில் ஒவ்வொரு ஆணும் தான் இருப்பதற்குப் பெண்ணுக்குக் கடன்பட்டிருக்கிறார் (11:11, 12). இருந்தபோதிலும், பெண்கள் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும் என்று பவுல் கூறினார்.[6]

நடைமுறைப் பயன்பாடு

இந்த ஆழ்ந்த சிந்தனைகள் நம்மை, நாம் தொடங்கிய கேள்விக்குக் கொண்டுவருகின்றன: தலைகளில் முக்காடுகள் இடுதல் பற்றிய உள்ளூர் வழக்கத்தைக் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாக இருந்ததால் அதையே நாம் செய்தல் அவசியமாக உள்ளதா? குறிப்பாக, பெண்கள் இன்றைய நாட்களில் சபைகூடுகைகளில் ஆராதிக்கும்போது தங்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொண்டாக வேண்டுமா?[7] "இல்லை" என்பதே பதிலாக உள்ளது.

"வெட்கமானால் ..." கலாச்சாரத்தில் எழுதப்படாத சட்டம் என்னவாக உள்ளது? அமெரிக்க நாட்டில் இன்றைய நாட்களில் பெண்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுவதில்லை, ஏனெனில் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்குத் தரப்பட்டிருந்த கட்டளை, அவர்கள் புரிந்துகொண்டிருந்த கலாச்சார ரீதியான எழுதப்படாத சட்டங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ளுதல் என்பது, ஒரு கலாச்சாரம் அதே புரிந்துகொள்ளுதலைக் கொண்டிருக்கும்போது மாத்திரமே கட்டுப்படுத்தும் ஒரு நிபந்தனையாக உள்ளது.

பவுல் பின்வருமாறு எழுதினார்:

> ஜெபம்பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக்கடவள் (11:5, 6).

ஒரு பெண் தனது தலைமுடியைக் கத்தரித்துப் போடுதல் அல்லது தலையைச் சிரைத்துக்கொள்ளுதல் என்பதை ஒப்பிட்டதன் மூலமாக, பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ளாது இருத்தல் எவ்வளவு வெட்கக் கேடானது என்பதைப் பவுல் விவரித்தார். “தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால்” அவள் தனது தலையை முக்காடு இடாமல் தீர்க்கதரிசனம் உரைத்தல் அல்லது ஜெபித்தல் என்பதும் வெட்கக் கேடாக உள்ளது என்று அவர் கூறினார். ஒரு பெண் தனது தலைமுடியைக் கத்தரித்துப் போடுதல் அல்லது தனது தலையைச் சிரைத்துக்கொள்ளுதல் என்பது அவளுக்கு வெட்க கேடாக இருந்தது என்று கொரிந்தியர்கள் ஒப்புக் கொண்ட காரணத்தினால், பவுல் தமது விவாதம், தாம் விரும்பிய செயல்விளைவைக் கொண்டிருக்கும் என்பதை அறிந்திருந்தார். பவுலின் மிகச்சரியான விவாதம், பெண்கள் தங்கள் தலைமுடியைக் கத்தரித்துப் போடுதல் வெட்கக் கேடாக இருக்கும் என்று நம்புகிற மக்களிடத்தில் மாத்திரமே நடைமுறைப் படுவதாக இருக்கிறது.

“உங்களுக்குள்ளே நிதானித்துக்கொள்ளுங்கள்: ...” பவுல், “உங்களுக்குள்ளே நிதானித்துக்கொள்ளுங்கள் ...” என்று எழுதியபோது, அவர் தமது தொடக்ககால வாசகர்களின் கலாச்சார ரீதியானபுரிந்துகொள்ளுதலுக்குத் திரும்பவும் வேண்டுகோள் விடுத்தார். “ஒரு ஆண் நீண்ட முடியைக் கொண்டிருந்தால் அது அவனுக்கு கனவீனமாக உள்ளது என்று இயற்கையேகூட போதிப்பதில்லையா?” (11:13-15அ). ஒரு ஆண் நீண்ட முடியைக் கொண்டிருத்தல் அவனுக்கு கனவீனமாக உள்ளது என்று ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு இடத்திலும் மக்களுக்கு “இயற்கை” போதிக்கிறதா? சில கலாச்சாரங்களில், ஆண்கள் மற்ற கலாச்சாரங்களைக் காட்டிலும் நீண்ட முடியை வளர்க்கின்றனர். ஒரு பெண்ணைப் போன்று ஒரு ஆண் நீண்ட முடியைக் கொண்டிருத்தல் என்பது இயற்கைக்கு மாறானதாக உள்ளது என்று பவுல் வலியுறுத்தினார்.[8] அவரது விவாதம், ஒரு ஆண் ஆணைப் போலவும் ஒரு பெண் பெண்ணைப் போலவும் காணப்பட வேண்டும் என்ற கலாச்சார ரீதியான எதிர்பார்ப்புகளில் அடிப்படையில் அமைந்திருந்தது.

மேலும் கொரிந்து நகரில் இருந்த ஒரு பெண் தனது தலைக்கு முக்காடு இட்டுக்கொள்ளாதிருத்தல் என்பது, அவள் தன் கணவருக்குக் கீழ்ப்படிதலுடன் இருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காண்பித்தது. உதாரணமாக அமெரிக்காவில் இன்றைய நாட்களில் தலைக்கு முக்காடு இட்டுக்கொள்ளுதல் என்பது ஒரு பெண் கீழ்ப்படிதலுடன் இருக்கிறாள் என்று காண்பிக்கிறதா? தலைக்கு முக்காடு இட்டுக்கொள்ளாதிருத்தல் என்பது அவள் தனது கணவருக்குக் கீழ்ப்படிவது இல்லை என்று கருத்துத் தெரிவிக்கிறதா? “இல்லை” என்பதே பதிலாக உள்ளது; ஆனால் இதற்கு சில கலாச்சாரங்களில் “ஆம்” என்பது

பதிலாக இருக்கும். பவுலின் விவாதமானது கலாச்சார ரீதியான எழுதப்படாத சட்டங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது என்பதாலும் கொரிந்து நகரில் பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ளுதல் கொண்டிருந்த அதே அர்த்தத்தை இன்றைய நாட்களில் - பெரும்பான்மையான இடங்கள் - கொண்டிராததாலும், ஜெபிக்கும்போது அல்லது தீர்க்கதரிசனம் உரைக்கும்போது பெண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும் என்ற குறிப்பான நிபந்தனை இனியும் நடைமுறைப் படுவது இல்லை.

கொரிந்தியர்களுக்குத் தரப்பட்ட நிபந்தனைக்குப் பின்னால் உள்ள கொள்கை இன்னமும் உண்மையானதாகவே உள்ளது: பெண்கள் தங்கள் கணவர்களுக்கு இன்னமும் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தில், பெண் தனது கணவருக்குக் கீழ்ப்படிந்திருத்தலைச் சில வழக்கங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன என்றால், அந்த வழக்கங்களைக் கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு கலாச்சாரமானது, பெண்ணானவள் தனது கணவரை மதிப்பதற்கு முகத்திரை ஒன்றை அணிய வேண்டும் என்று கட்டளையிடுகிறது என்றால், அந்த சமூகத்தில் உள்ள கிறிஸ்தவப் பெண் முகத்திரை அணிய வேண்டும்.

இந்தக் கொள்கையானது விவரிவாக்கப்பட முடியும். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, “ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்” என்று கூறப்பட்டது (1 கொரிந்தியர் 16:20அ; ரோமர் 16:16). அந்தக் கட்டளைக்கு நாம் எவ்வாறு கீழ்ப்படிய வேண்டும்? நான் வாழுமிடத்தில் மக்கள் ஒருவர் மற்றவரை முத்தம்கொடுத்து வாழ்த்துவதில்லை; அவர்கள் கைகளைக் குலுக்குவதாலேயே ஒருவர் மற்றவரை மிகவும் அடிக்கடி வாழ்த்துகின்றனர். ஒருவேளை நாம், நமது கலாச்சார ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்து ஒருவர் மற்றவரை வாழ்த்த வேண்டும் என்று கூறமுடியும். ஒரு கலாச்சாரத்தில் அது, நாம் ஒருவர் மற்றவரை பரிசுத்த முத்தம் கொடுத்து வாழ்த்த வேண்டும் என்று அர்த்தப்படலாம்; இன்னொரு கலாச்சாரத்தில் கைக்குலுக்குவதன் மூலம் வாழ்த்த வேண்டும் என்று அர்த்தப்படலாம்; இன்னொரு கலாச்சாரத்தில் கலாச்சார ரீதியாக ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய வாழ்த்துதல் முறையைப் பயன்படுத்துதல் என்று அர்த்தப்படலாம்.

கட்டளை ஒரே மாதிரியானதாகவே உள்ளது, ஆனால் கட்டளையைச் செயல்படுத்துதலின் வழியானது உள்ளூர் பழக்க வழக்கங்களைப் பொறுத்து மாறுபாடுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமது சொந்த கலாச்சாரத்தில் உள்ள எழுதப்படாத சட்டங்களையும் ஒழுகலாறுகளையும் மதிக்க வேண்டும்.

முடிவுரை

நாம் இப்பாடத்தை முடிக்கும் இவ்வேளையில், கிறிஸ்தவர் தமது கலாச்சாரத்துடன் கொண்டுள்ள ஏற்புடைய உறவானது சபைப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க எவ்வாறு உதவ முடியும் என்று கேட்கலாம். சபைக்குழுமத்திற்குள் எழுகின்ற பல பிரச்சனைகள், கிறிஸ்துவுக்கும் கலாச்சாரத்திற்கும் இடையிலான உறவைத் தவறாகப் புரிந்துகொள்வதன் அடிப்படையிலேயே எழுகின்றன என்பது பதிலாக உள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் கலாச்சாரமானது தேவனுடைய இராஜ்யத்துடன் சமானப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற தவறான கருத்தைக் கொண்டிருக்கக் கூடும். சில வேளைகளில் ஊழியக்காரர்கள்

தாங்கள் உள்நுழையும் கலாச்சாரத்தைத் தழுவுவதில் தவறுகின்றனர். கலாச்சார ஒழுகலாறுகளைக் கடைப்பிடிக்கத் தவறுவதால் அவர்கள் மற்றவர்களுக்கு எண்ணமற்ற வகையில் அந்நியப்படுகின்றனர்.

சபைக்குழுமங்கள், புதிய ஏற்பாட்டில் காணப்படும் காலம்கடந்து நிற்கும் கொள்கைகள் மற்றும் அந்தக் கொள்கைகள் முன்வைக்கப்படும் கலாச்சார விவரிப்புகள் ஆகியவற்றை வித்தியாசப் படுத்தாத காரணத்தினால் பிரச்சனைகளைக் கொண்டிருக்கலாம். கீழ்ப்பட்டிருத்தல் என்பது காலம் கடந்து நிற்கும் ஒரு கொள்கையாகும், ஆனால் தலையில் முக்காடிடுதல் என்பது நாம் நிலைத்திருக்கத் தேவையற்ற ஒரு கலாச்சார நிபந்தனையாக உள்ளது. காலம் கடந்து நிற்பது - கிறிஸ்தவ யுகத்தின் முடிவு வரையிலும் ஒழியாது இருப்பதை நோக்கங்கொண்டது - எது மற்றும் முதல் நூற்றாண்டின் சபைக்கு மாத்திரம் நடைமுறைப்பட்டதாக இருந்தது எது என்பவற்றிற்கும் இடையில் வித்தியாசத்தைக் கண்டறிய, சபை நடத்துனர்கள், பிரசங்கியார்கள், போதகர்கள் மற்றும் பிற உறுப்பினர்கள் கற்றுக்கொண்டால், பல பிரச்சனைகள் தவிர்க்கப்படும் அல்லது தீர்த்து வைக்கப்படும். இதன் விளைவாக சபையானது அதிக சமாதானத்தையும் குறைவான போராட்டத்தையும் அனுபவிக்கக் கூடும்.

குறிப்புகள்

[1]1ம் வசனம், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவைப் புசித்தல் பற்றிய பவுலின் கலந்துரையாடலை முடித்து வைக்கிறது. அவர் தமது சுய பிரயோஜனத்தை நாடாமல் "அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு" நாடியதாகக் கூறியபின்பு அவர், "நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று கூடுதலாகக் கூறினார். 2ம் வசனமானது - 11ம் அதிகாரத்தில் மாத்திரமல்ல ஆனால் இந்த நிருபத்தின் எஞ்சிய பகுதி முழுவதிலும் - பின்தொடரும் கலந்துரையாடலுக்கு ஒரு அறிமுகமாகச் செயல்படுகிறது. கொரிந்தியர்கள் பவுலை நினைவில் வைத்து இருப்பதற்காகவும் பவுல் அவர்களுக்கு ஒப்புவித்திருந்த "பாரம்பரியங்களை அவர்கள் உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்ததற்காகவும்" அவர்களை பவுல் புகழ்ந்தார், இது அவர்களின் விசுவாசங்களும் செயல்முறைகளும் அவர் போதித்திருந்தவற்றைப் பொதுவாக அவர்கள் கடைப்பிடித்தனர் என்பதைச் சுட்டிக் காண்பித்தது. இருப்பினும் கொரிந்து நகரில் இருந்த சபை, பவுல் சுட்டிக்காண்பிக்க இருந்தபடி, அவர்களின் ஆராதனை மற்றும் உபதேசம் ஆகியவற்றைக் குறித்துச் சில பிரச்சனைகளைக் கொண்டிருந்தது. [2]மரியான் சோர்ட்ஸ் அவர்கள் "இந்தக்கூற்று தெளிவற்றதாக உள்ளது மற்றும் கோட்பாடுகள் ஏராளமாக உள்ளன" என்று கூறினார். (Marion L. Soards, *1 Corinthians*, New International Biblical Commentary [Peabody, Mass.: Hendrickson Publishers, 1999], 225.) *ஹெரால்டு மேர் அவர்கள் பின்வரும் அர்த்தத்தைக் கருத்தாகத் தெரிவித்தார்: "பெண்ணானவள் ஆராதனையில் தனது தலையைச் சரியாக முக்காடு இட்டுக் கொள்வதில் குறிப்பிட்ட அதிகாரம் செயல்படுதலைக் கொண்டிருக்கிறாள். அவள் அங்கு இருக்கும் (நல்ல) தூதர்களுக்கு மரியாதை காண்பிக்கிறாள்"* (W. Harold Mare, "1 Corinthians," in Frank E. Gaebelein, ed., *The Expositor's Bible Commentary,* vol. 10, *Romans-Galatians* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976], 256). [3]David Lipscomb, *A Commentary on the New Testament Epistles,* vol. 2, *First Corinthians*, ed. J. W. Shepherd (Nashville: Gospel Advocate Co., 1935; reprint, 1960), 167. *[4]ஆராதனையில் (ஆண்கள் மற்றும் பெண்கள்) தலைகளில்*

முக்காடு இட்டுக்கொள்ளுதல் பற்றிய யூத ரோம மற்றும் கிரேக்கப் பழக்கவழக்கங்களைக் கல்வியாளர்கள் விரிவாக ஆராய்ச்சி செய்தனர். கொரிந்து நகரில் இந்த சூழ்நிலைக்கு மிகச்சிறந்த சாட்சியம் இவ்வசனப் பகுதியில் காணப்படுகிறது. [5]*பெண்கள் தங்கள் தலைகளுக்கு முக்காடுகள் இட்டுக்கொள்ள வேண்டும் என்பதை நிரூபிப்பதற்குப் பவுல் நான்கு வகையான விவாதங்களைப் பயன்படுத்தினார் என்று நீல் லைட்ஃபூட் அவர்கள் சுட்டிக்காண்பித்தார்: (1) ஒரு இறையியல் ரீதியான விவாதம் - "பெண்கள் ஆணுக்குப் பின்னால் படைக்கப்பட்ட காரணத்தினால் அவர்கள் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும்"; (2) தூதத்துவ விவாதம் - "பெண்கள் 'தூதர்களினிமித்தம்' முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும்"; (3) சமூகவியல் ரீதியான விவாதம் - "பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும் ஏனெனில் சமூகம் அதையே எதிர்பார்க்கிறது"; மற்றும் (4) மதபோதனை ரீதியான விவாதம் - "சபைகள் எல்லாவற்றிலும் அதுவே வழக்கமாக உள்ளது" (காண்க 11:16).* (Neil R. Lightfoot, "Women, Headdress, Long Hair, Etc. - 1 Corinthians 11:2ff," *Abilene Christian College Lectures* [1975], 138-40.) [6]*இந்தக்கொள்கை புதிய ஏற்பாட்டில் மாறா நிலையுடன் போதிக்கப் பட்டுள்ளது. காண்க - எபேசியர் 5:23, 24; கொலோசெயர் 3:18; 1 பேதுரு 3:1.* [7]*ஒருவேளை, ஆண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொள்ளாமல் இருக்க வேண்டுமா மற்றும் பெண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொள்ள வேண்டுமா என்று கேட்பது இன்னும் மிகச்சரியானதாக இருக்கலாம், எனெனில் இவ்விரு நிபந்தனைகளுமே இவ்வசனப் பகுதியில் காணப்படுகின்றன. பெண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இடாதிருப்பது என்பதைக் காட்டிலும் ஆண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொள்ளுதல் என்பதே கொரிந்து நகரில் உள்ளடங்கிய பிரச்சனையாக இருந்திருக்கலாம் என்று* Richard E. Oster, Jr., *அவர்கள் வலியுறுத்தினார்.* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 260-63.) [8]*இங்கு ஆண்கள் நீண்ட முடியைக் கொண்டிருத்தல் வெட்கக் கேடாக உள்ளது என்பதைப் பற்றிய விவாதமானது, இன்றைய நாட்களில் ஆண்கள் நீண்ட முடியைக் கொண்டிருத்தல் பாவம் நிறைந்ததாக உள்ளது என்று தன்னில் தானே நிரூபிப்பதில்லை.*

12

இரண்டு இராப்போஜனங்களுக்கு இடையில் வித்தியாசப்படுத்துதல் தேவைப்பட்ட ஒரு சபை

(1 கொரிந்தியர் 11:17-34)

ஒரு விரைவான பார்வைக்குப் பின், 1 கொரிந்தியர் 11:17-34 வசனப்பகுதி கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றியது மாத்திரமாகவே உள்ளது என்று நாம் கூறலாம். உண்மையில் இது, கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்பாக வேதாகமத்தில் காணப்படக்கூடிய மிகவும் விபரமான அறிவுறுத்துதல்களைக் கொண்டுள்ளது. கர்த்தருடைய நாளில் கர்த்தருடைய சபையின் ஆராதனையின் மையமாகக் கர்த்தருடைய இராப்போஜனம் இருப்பதால் இந்த அறிவுறுத்துதல்கள் நமக்குத் தேவைப் படுகின்றன. இருப்பினும் இவ்வசனப்பகுதி கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றியதாக மாத்திரம் இருப்பதில்லை. உண்மையில் இது இரு வகையான இராப்போஜனங்களைப் பற்றியதாக உள்ளது, மற்றும் நாம் அவை இரண்டைப் பற்றியுமே கற்றறிவது அவசியமாக உள்ளது.

பவுல் ''உங்களைப் புகழாமல் இதைக்குறித்து உங்களுக்குக் கட்டளைகொடுக்கிறேன்'' என்று உறுதியாக அறிவித்தலைக் கொண்டு தொடங்கினார் (11:17).[1]

சபைக்குழுமத்தின் இராப்போஜனம், அல்லது ஐக்கியவிருந்து

இதன் நடைமுறை

ஐக்கிய விருந்துகள் என்பவை முதல் நூற்றாண்டு சபையின் பண்பாக இருந்தன. எருசலேமில் சபை நிலைநாட்டப்பட்ட பின்பு, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் தங்களை ஐக்கியத்திற்கு ஒப்புக் கொடுத்திருந்தனர்; அவர்கள் “சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்,” “வீடுகள் தோறும்

அப்பம் பிட்டனர்" மற்றும் "ஒருமனப்பட்டவர்களாய் ... போஜனம்பண்ணினர்" (நடபடிகள் 2:42, 44, 46). நடபடிகள் 20ல், வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்தபோது - அதாவது கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க வந்தபோது - அவர்கள் பிரிந்து செல்லும் முன்பு ஒன்றாக உண்டனர் (வசனங்கள் 7-11). பாவத்தில் நிலைநின்ற ஒரு கிறிஸ்தவருடன் சபை ஐக்கியத்தை விலக்கிக் கொண்டபோது, அவருடன் உண்ணாதிருக்கும்படி சபைக்குக் குறிப்பாக அறிவுறுத்தப் பட்டது (1 கொரிந்தியர் 5:11). "இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு," இருந்த பொல்லா மனிதர்களைப் பற்றிக் கிறிஸ்தவர்களுக்கு யூதா எழுதினார் (யூதா 12). தொடக்ககால சபையானது ஐக்கிய விருந்துகளில் அல்லது அன்பின் விருந்துகளில் முறையாகப் பங்கேற்றது பற்றி ஏராளமான சாட்சியங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன. இன்றைய நாட்களில் சபை இதே விஷயத்தைச் செய்கிறது.

இங்கு பவுல், கொரிந்து நகரில் இருந்த சபை இப்படிப்பட்ட விருந்துகளில் பங்கேற்றது என்று சுட்டிக்காண்பித்தார், மற்றும் அந்த நடைமுறையை அவர் அங்கீகரித்ததாகக் காணப்படுகிறது. அதே வேளையில் அவர், இந்த விருந்துகளின்போது சகோதரர்கள் நடந்துகொண்ட முறைபற்றி அவர்களைக் கடிந்துகொண்டார்.

இதன் தவறான பயன்பாடு (11:18-22)

கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் ஒன்றாக உண்டபோது செய்த தவறு என்ன?

முதலாவது, அவர்கள் பிரிவினையை மேம்படுத்திக் கொண்டிருந்தனர். அவர்களின் விருந்துகள் அங்கு நிலவியிருந்த பிரிவினையின் மீது கவனத்தை ஈர்த்தன (11:18, 19). பிரிந்திருந்த அல்லது கருத்து வேற்றுமையில் இருந்த கொரிந்தியர்களுக்கு (கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு), "அன்பின் விருந்து" கூட பிரிவினையை பேணும் மற்றும் அதைக் காட்சிப்படுத்தும் சந்தர்ப்பமாகவே இருந்தது.[2] எவ்வாறு? இதை நாம் யூகிக்க மாத்திரமே முடியும், ஆனால் ஒருவேளை அவர்கள், சபையாராகச் சேர்ந்து உணவருந்தும்போது, தனிப்படுத்தப்பட்ட உணவு மேஜைகளில் அமருதல் அல்லது சபையில் குறிப்பிட்ட தனிநபர்களைத் தங்களுடன் உணவருந்த அனுமதிப்பதற்கு மறுத்து விடுதல் என்ற கருத்தை ஏற்படுத்தி இருக்கலாம்.

இரண்டாவது, அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஐக்கியவிருந்துடன் குழப்பிக் கொண்டிருந்தனர். ஐக்கிய விருந்தைப் பற்றிய இப்படிப்பட்ட கேலியான செயலானது அது "கர்த்தருடைய இராப்போஜனம்" என்று அழைக்கப்படத் தகுதியற்றதாகியது என்பதே விளைவாக இருந்தது. அவர்களுக்குப் பவுல், "நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது, அவனவன் தன்தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான். ஒருவன் வெறியாயிருக்கிறான், இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே" என்று புத்திகூறினார் (11:20). ஐக்கிய விருந்து என்பது சபைக்குழுமத்திற்கு மதிப்புடையதாக இருக்கையில், அது கர்த்தருடைய இராப்போஜனத்திற்குப் பதிலாக வைக்கப்படவும் கூடாது அல்லது அது கர்த்தருடைய இராப்போஜனத்துடன் குழப்பிக்கொள்ளப்படவும் கூடாது.

கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் உணவு உண்ணுதலில் ஒருவர் மற்றவர் குறித்துக் கவலைப்படத் தவறினர் என்பது அன்பின் விருந்தைப் பொறுத்தமட்டிலான *மூன்றாவது, தவறான பயன்பாடாக இருந்தது* (11:21, 22). ஒவ்வொரு நபரும், குடும்பமும் அல்லது குழுவும் தங்கள் சொந்த இராப்போஜனத்தை - அவர்கள் தங்களுக்காகக் கொண்டுவந்திருந்த உணவை - உண்டவேளையில், சிலர் ஏராளமான உணவைக் கொண்டிருந்தனர் மற்றும் பிறர் பசியாக இருந்தனர். செல்வந்தர்களின் ஏராளப் பொருள்களில் இருந்து வறியவர்களுக்கு உணவளித்தல் என்பது இந்த விருந்தின் தோற்றகால நோக்கங்களில் ஒன்றாக இருந்தது,[3] ஆனால் இந்த விருந்து அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை. அதற்குப் பதிலாக இது, உறுப்பினர்களுக்கு இடையில் வேறுபாடுகளை வலியுறுத்தி ஏற்கனவே நிலவிய பிரிவினைகளை வளர்த்தது.

ஐக்கிய விருந்தின் முழுநோக்கத்தைக் கொரிந்தியக் கிறிஸ்தவர்கள் தவறாகப் புரிந்துகொண்டனர் என்பது இந்த விருந்தைப் பற்றிய நான்காவது, தவறான பயன்பாடாக இருந்தது. அது வயிற்றை நிரப்புவதற்கானதாக மாத்திரம் இருந்தது என்று அவர்கள் நினைத்தனர் (11:22). அது அதனுடைய முதன்மை நோக்கமாக இருக்கவில்லை; உலகப்பிரகாரமான உணவுக்கான தேவை என்பது சபைகூடுதல் இல்லாமலேயே கூட, சுலபமாகச் சந்திக்கப்பட முடியும். அந்தக் கருத்தைப் பவுல், "ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன்" என்று கூறியபோது ஏற்படுத்தினார் (11:34அ). ஐக்கியவிருந்து என்பது, அன்பு, சார்ந்திருக்கும் கருத்துணர்வு மற்றும் ஐக்கியம் ஆகியவற்றை விளைவிக்க விருப்பநோக்கங் கொண்டிருந்தது; அது செல்வர்களிடம் இருந்து வறியவர்கள் சங்கடப் படுத்தப்பட்டிருத்தல் இன்றி உதவி பெறுவதற்கான வேளையாக இருக்கும்படி யூகிக்கப் பட்டிருந்தது. இருப்பினும் கொரிந்தியர்கள் ஐக்கியவிருந்தைத் தவறாகப் பயன்படுத்தியமையானது, அது நன்மை செய்வதைக் காட்டிலும் அதிகமாகத் தீமை செய்தது என்பதை அர்த்தப்படுத்தியது.

அதன் பயன்

கொரிந்தியக் கிறிஸ்தவர்களின் தவறுகளில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நான் பிரசங்கித்த ஒரு சபைக்குழுமத்தில், ஒரு மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனைக்குப் பின்பு, ஐக்கியவிருந்திற்காகச் சகோதரர்கள் ஒன்று கூடினர். ஆராதனை ஊழியம் முடிந்த உடனே, சில பெண்கள் கடைசிநேரத் தயாரிப்புகளைச் செய்வார்கள் மற்றும் அதன் பின்பு நாங்கள் உணவை உண்ணத் தொடங்கும்படி கீழ்த்தளத்திற்குச் செல்லும்படி அவர்கள் எங்கள் ஒவ்வொருவரையும் அழைப்பார்கள். நாங்கள் எங்களுக்கு உரிய தட்டுகளில் பரிமாறப்பட்டு உணவு மேஜைகளில் உண்பதற்காக எங்கள் இருக்கைகளை எடுத்துக்கொள்வோம். எங்கள் உணவை உண்டு முடிப்பதற்கு நாங்கள் நேரம் கொண்டிருக்கும் முன்பே, அவர்கள் அந்த உணவறையைச் சுத்தம் செய்யக் கூடும்படிக்கு, எங்களை சீக்கிரம் உண்டு முடிக்கும்படி ஊக்குவிப்பார்கள். உணவிற்கு முன்னும் உணவின் போதும் மற்றவர்களைப் பார்த்துப் பேசுவதற்கும், ஒருவர் மற்றவரை இன்னும் சிறப்பாக அறிந்துகொள்வதற்கும் சிறிதளவு நேரமே அனுமதிக்கப் பட்டது.

இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெற்றுப் பல மாதங்களுக்குப் பின்பு, ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் எங்கள் பாரம்பரிய உணவிற்கு

முன்னர், நான் தொடக்கநிலைக் குறிப்புகள் சிலவற்றைக் கூறினேன். நான், "உங்கள் அவசரம் என்ன?" என்று கேட்டேன். பின்பு நான், இந்த உணவுகளில் உண்மையான நோக்கம் பற்றிப் பேசினேன். அவைகள் உண்டு செல்வதற்காக மாத்திரம் அல்ல, ஆனால் உயர்வான சில நோக்கங்களை நிறைவேற்றுதலை நோக்கங்கொண்டிருந்தன என்று விளக்கம் அளித்தேன். கிறிஸ்துவுக்குள் சகோதரர்கள் சகோதரிகள் என்றவகையில் நாம் உணவைப் பகிர்ந்து கொள்வதற்காகக் கூடிவரும்போது, அந்த உண்மையை நாம் நினைவில் வைக்க வேண்டும். ஐக்கிய விருந்து ஒருமைப்பாட்டைப் பேணுதல், அன்பை மேம்படுத்துதல் மற்றும் வறியவர்களுக்கு உதவுதல் ஆகியவற்றைக் கொண்டிராவிட்டால், நாம் வீட்டிலேயே உண்ணலாம்.

கர்த்தருடைய இராப்போஜனம்[4]

1 கொரிந்தியர் *11:17-34* வசனப் பகுதியானது, ஐக்கிய விருந்தைப் பற்றிய பவுலின் அறிவுறுத்துதல்களைக் கொடுப்பதுடன் கூடுதலாக, கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றியும் போதிக்கிறது. அது என்னவாக உள்ளது மற்றும் அதில் நாம் எவ்வாறு பங்கேற்பது என்பவற்றைப் பற்றிப் பவுல் விளக்கப்படுத்தினார்.

அது என்னவாக உள்ளது? (11:23-26)

நம்முடைய கர்த்தராகிய இயேசு, கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தினார். அதை நாம் இலேசானதாக எடுத்துக்கொள்ளவோ அல்லது அதைப் புறக்கணிக்கவோ துணியாதிருப்போமாக.

இராப்போஜனத்தை ஒரு நினைவுகூரும் விருந்தாக அவர் நமக்குக் கொடுத்தார். இயேசு, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறினார். அப்பம் அவரது சரீரத்தின் நினைவுகூருதலாக உள்ளது, மற்றும் பாத்திரம் நமது பாவங்கள் மன்னிக்கப் படுவதற்காக அவர் சிந்திய இரத்தத்தின் நினைவுகூருதலாக உள்ளது. இந்த ஐக்கிய விருந்தில் நாம் பங்கேற்கும்போது, அவரது மரணத்தின் நினைவாக அதைச் செய்ய வேண்டும் மற்றும் சிலுவையில் அவர் நமக்காகச் செய்தவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இயேசு தமது சரீரத்தின் உறுப்பினர்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் மீட்கப் பட்டிருந்தனர் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவதற்காகக் கர்த்தருடைய இராப்போஜனத்தை நிலைநாட்டினார். எகிப்தில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் சிந்தப்பட்டதால் இஸ்ரவேல் மக்களின் முதற்பேறான பிள்ளைகள் மரணத்தில் இருந்து காக்கப்பட்டிருந்ததை வருடந்தோறும் அவர்களுக்கு பஸ்கா பண்டிகை நினைவூட்டியது போலவே, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம், கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவத்தின் அடிமைத் தனத்தில் இருந்து மீட்கப்பட்டோம் என்பதை ஐக்கிய விருந்தானது நமக்கு நினைவூட்டுகிறது.

கர்த்தருடைய இராப்போஜனம் இராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது என்பதை வலியுறுத்துவதற்காக சபைக்குத் தரப்பட்டது. இயேசு, "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லை" என்று கூறினார் (மத்தேயு *26:29*). சபையில் இராத மக்கள்

இந்த ஐக்கிய விருந்தில் பங்கேற்றால் தீமை எதுவும் செய்யப்படுவதில்லை என்றிருக்கையில், இராஜ்யமாகிய சபையில் உள்ளவர்கள் மாத்திரமே இதில் பங்கேற்கும் சிலாக்கியத்தைக் கொண்டுள்ளனர். அந்த சிலாக்கியத்தை உரிமைகோர விரும்பும் எவரும் சபையின் அங்கமாக வேண்டும்.

கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கேற்றலானது "அவர் வரும்வரையில்" அவரது மரணத்தை அறிவிக்கிறது என்று பவுல் கூறினார் (11:26). பின்பு அவர் நித்தியத்திற்கும் தம்மோடு இருக்கும்படி நம்மை அழைத்துச் செல்வார்.

நாம் இதில் எவ்வாறு பங்கேற்கிறோம்? (11:27-34)

1 கொரிந்தியர் 11:17-34ல் இருந்து நாம், கர்த்தருடைய இராப்போஜனத்தில் எவ்வாறு நாம் பங்கேற்க வேண்டும் என்பதையும் கற்றுக்கொள்கிறோம்.

நாம் இதில் பாத்திரமான வகையில் பங்கேற்க வேண்டும் (11:27). இது, நாம் தகுதியானவர்களாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுவது *இல்லை.* இயேசு செய்த தியாகத்திற்கு எவரொருவரும் தகுதியானவராக இருப்பதில்லை. இது, நாம் பாவமற்றவர்களாக இருக்க வேண்டும் என்றும் அர்த்தப்படுத்துவதில்லை. நாம் பாவமற்றவர்களாக இருக்க வேண்டும் என்றால், எவரொருவரும் இதில் பங்கேற்க முடியாது. வார நாட்களின்போது பாவம் செய்திருப்பவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கக் கூடாது என்று சிலர் நம்புகின்றனர், ஆனால் இந்தக் கண்ணோட்டம் தவறானதாக உள்ளது! பாவத்தினிமித்தம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்காமல் இருப்பது உண்மையில் இன்னொரு பாவமாக உள்ளது. பாவத்தைக் குறித்துக் கவலைப்படும் ஒருவர், அதாவது கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதில் சங்கடம் அடையும் *ஒருவர், பாவத்தைக் குறித்துச் சிலவற்றைச் செய்ய வேண்டும்,* ஆனால் அவர் ஐக்கிய விருந்தைப் புறக்கணிக்கக் கூடாது.

பாத்திரமான வகையில் ஐக்கிய விருந்தில் பங்கேற்பது பற்றி வேத வசனங்கள் குறிப்பான அறிவுறுத்தல்களைத் தருகின்றன.

(1) மற்றவர்கள் அல்ல/மற்றவர்களை அல்ல, ஆனால் நம்மை நாமே "சோதித்தறிய" வேண்டும் (11:28). நம்மை நாமே சோதித்தறிகையில், தேவனுடைய கிருபைக்காக அவருக்குத் துதிசெலுத்தும்படி நாம் அசைக்கப் படுவோம், நமது பாவங்களுக்கு மன்னிப்பை நாடும்படி நாம் ஊக்குவிக்கப் படுவோம் மற்றும் கர்த்தருக்கு நம்மை நாம் மறுபடியும் அர்ப்பணிப்போம்.

கர்த்தருடைய இராப்போஜனம் காலத்தின் ஒவ்வொரு அம்சத்துடனும் தொடர்பு படுகிறது. இது - நாம் இரட்சிக்கப்படும்படி இயேசு சிலுவையில் மரித்ததைக் காண்பதற்கு - ஒரு பின்னோக்கிய பார்வையை உள்ளடக்குகிறது. இது - நாம் நிகழ்காலத்தில் இரத்தத்திற்குத் தகுதியற்றவர்களாக ஆனால் எவ்வாறேனும் இரட்சிக்கப்பட்டவர்களாக இருப்பதை நாமே நம்மைக் கண்ணோக்க - ஒரு உள்ளான பார்வையை கேட்கிறது! இது - கர்த்தர் மீண்டும் வருவார் என்று அறிவித்தலுக்கான - ஒரு முன்னோக்கு பார்வையையும் உள்ளடக்குகிறது! பவுல், "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று எழுதினார் (11:26). கர்த்தருடைய பந்தியைச் சுற்றி நாம் ஒன்றுகூடும்போது, கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகியவை சந்திக்கின்றன.

(2) மேலும் நாம் சரீரத்தைப் பொறுத்த மட்டில், சரீரத்தை "நிதானிக்க" வேண்டியவர்களாக அல்லது "பகுத்தறியக் கூடியவர்களாக" இருக்க வேண்டியுள்ளது (11:29-32). பவுல் "என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" என்று கூறியபோது (11:29) அவர் அர்த்தப்படுத்தியது என்ன? சிலுவையின் மீது கிறிஸ்து தொங்கினார் என்ற வகையில் அவருடைய சரீரத்தைப் பற்றிப் பவுல் குறிப்பிட்டிருக்கலாம் என்ற ஒரு சாத்தியக்கூறு உள்ளது. நமக்காக கிறிஸ்து மரித்தார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். சபை என்ற கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தைப் பற்றிப் பவுல் குறிப்பிட்டு இருக்கலாம் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. அது அர்த்தமாக இருந்தால், நாம் சபையைப் பற்றி நினைக்க வேண்டும் என்று பவுல் கூறினார் என்றாகிறது. கர்த்தருடைய இராப்போஜனம் ஒரு சமூக நடவடிக்கையாக, சபை ஒன்றாகக் கூடிச் செய்யும் ஒரு விஷயமாக உள்ளது. கொரிந்தியர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் மற்றவர்கள் பங்கேற்க வேண்டும் என்று அக்கறையாயிருக்கத் தவறியிருந்தனர் என்று இவ்விடத்தில் பவுல் குறிப்பிட்டு இருக்கலாம்.

(3) நாம் "ஒருவருக்காக ஒருவர் காத்திருக்க" வேண்டும் (11:33, 34). கர்த்தருடைய இராப்போஜனம் பற்றிய பவுலின் கலந்துரையாடலின் முடிவில் அவர், கொரிந்தியர்கள் "போஜனம் பண்ண" கூடிவரும் வேளையில், அவர்கள் ஐக்கிய விருந்தையும் கர்த்தருடைய இராப்போஜனத்தையும் குழப்பிக் கொண்டனர் என்பதைக் கூறத் திரும்பினார். அவர், "ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள். நீங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்றாலும் அல்லது ஐக்கிய விருந்தில் கலந்து கொண்டாலும், மற்றவர்கள் ஆயத்தமாகும் வரையில் அவ்வாறு காத்திருங்கள். மற்றவர்களைக் குறித்து அக்கறையாயிருங்கள்" என்று கூறினார்.

"ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்" என்ற புத்திமதியானது, கர்த்தருடைய இராப்போஜனம் ஒரு ஐக்கிய விருந்தாக - ஒரு பகிர்ந்து கொள்ளுதலாக, ஒரு ஐக்கியமாக - உள்ளது என்ற உண்மையை வலியுறுத்துகிறது. 1 கொரிந்தியர் 10:16 ன்படி, நாம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கும்போது, நாம் கிறிஸ்துவின் உடலிலும் இரத்தத்திலும் பகிர்ந்து கொள்கிறோம். "கர்த்தருடைய போஜனபந்தி" (10:21) என்பது கர்த்தருடன் ஐக்கியமாயிருத்தலை உள்ளடக்குகிறது; அவரது இராப்போஜனத்தில் அவருடன் நாம் பங்கேற்கிறோம் (மத்தேயு 26:29). இருப்பினும் மற்றவர்களுடன் இந்த நினைவுகூரும் தருணத்தைப் பகிர்ந்து கொள்ளும்போது, நாம் அவர்களுடன் விருந்து உண்கிறோம் அல்லது ஐக்கியம் கொண்டிருக்கிறோம்.

பாத்திரமான வகையில் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கத் தவறுதல் என்பது, அதற்குரிய விளைவுகளைக் கொண்டுள்ளது. நாம் ஐக்கிய விருந்தில் பாத்திரமான வகையில் பங்கேற்கவில்லை என்றால், நாம் பல செயல் விளைவுகளை அனுபவிக்கலாம் என்று பவுல் கூறினார்:

- *27ம் வசனத்தின்படி, நாம் "கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும்குறித்துக் குற்றமுள்ளவ"ர்களாக இருக்கிறோம். வேறு*

வார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் சரியான வழியில் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கவில்லை என்றால், நாம் கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைந்த குற்றம் கொண்டவர்களாக இருக்கிறோம்!

- *29ம் வசனத்தின்படி, நாம் "கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியா"மல் இருந்தால், நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்பைக் கொண்டுவருகிறோம்.*
- *30ம் வசனத்தின்படி, சரியான வகையில் நாம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கத் தவறினால், நாம் ஆவிக்குரிய வகையில் "வியாதிப்படுவோம் மற்றும் மரிப்போம்."*
- *31 மற்றும் 32ம் வசனங்களின்படி, நம்மை நாமே சோதித்தறியாது அல்லது சரீரத்தை "நிதானித்து அறியாது" இருந்தால், நாம் கர்த்தரால் நியாயந்தீர்க்கப்பட்டு சிட்சிக்கப்படுவோம். நம்மை நாமே சோதித்தறிதல் அல்லது கர்த்தரால் சோதித்தறியப்படுதல் என்பவையே நமது மாற்றுகளாக உள்ளன!*

முடிவுரை

பவுலின் அறிவுறுத்துதல்கள், இன்றைய நாட்களில் சபைகள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளவும் ஆத்துமாக்களை இரட்சிக்கவும் உதவக்கூடும். பொதுவான இரண்டு கொள்கைகள் நடைமுறைப் படுபவையாக உள்ளன.

"உங்கள் ஐக்கியத்தைப் பயனுள்ளதாக்குங்கள்"

ஐக்கிய வாய்ப்புகள் ஆவிக்குரிய வகையில் பயனுள்ளவை ஆக்கப்படுவதை நாம் நிச்சயப் படுத்திக் கொள்ள வேண்டும். முறையான ஆராதனைக்குப் புறம்பே உறுப்பினர்கள் ஐக்கியத்தை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு சபைகள் வாய்ப்பளிக்க வேண்டும். உதாரணமாக, ஐக்கிய விருந்துகள் அல்லது "பானை - அதிர்ஷ்ட இரவு உணவுகள்" ஆகியவை சபைக்குழுமத்திற்கு நல்லவையாக உள்ளன. ஐக்கியத்திற்கான எந்த சந்தர்ப்பம் பற்றியும் கேட்க வேண்டிய முதன்மைக் கேள்வியாக உள்ளது. "இது வேடிக்கையாக உள்ளதா?" என்பதல்ல. "இது வறியவர்களுக்குப் பலன் அளிக்கிறதா, ஐக்கியத்தை மேம்படுத்துகிறதா, ஆவிக்குரிய வளர்ச்சியை ஊக்குவிக்கிறதா, சகோதர அன்பை அதிகமாக்குகிறதா மற்றும் சபையில் உள்ள வேறுபட்ட குழுக்களிடையே பெரிய புரிந்துகொள்ளுதலைத் தோற்றுவிக்கிறாத?" என்பதே உண்மையான சோதனையாக இருக்க வேண்டும்.

"கர்த்தருடைய இராப்போஜனத்தை அர்த்தம் நிறைந்ததாக்குங்கள்"

கர்த்தருடைய இராப்போஜனத்தை நாம் அர்த்தம் நிறைந்ததாக்க வேண்டும். ஐக்கிய விருந்தில் பங்கேற்பதினால் நாம் ஒரு வெற்றுச் சடங்காச்சாரத்தில்தான் ஈடுபடுகிறோம் என்ற கருத்தைப் பெற்றவர்களாக இருக்கக் கூடும். இவ்வகையான சிந்தனையுடன் நாம், கர்த்தருடைய இராப்போஜனத்தில் என்ன செய்கிறோம் மற்றும் எவ்வாறு செய்கிறோம் என்பது சிறிதளவே வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது என்று யூகிக்கக் கூடும். அந்தக் கண்ணோட்டத்தை, 1 கொரிந்தியர் 11ம் அதிகாரம்

மறுத்துரைக்கிறது. சொல்லப்போனால் நாம், கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கும்போது - நாம் பாடும்போது அல்லது வேதாகமத்தைப் படிக்கும்போது அல்லது கொடுக்கும்போது செய்வது போன்றே - ஒரு கருத்தில் நாம், ஒரு சடங்காச்சாரத்தில்தான் பங்கேற்கிறோம். இருப்பினும் இது அர்த்தமற்ற சடங்காச்சாரமாக இருப்பதில்லை. மாறாக இது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு சடங்காச்சாரமாக உள்ளது, இது கர்த்தர் தாமே நிலைநாட்டியதாக உள்ளது. நாம் இதில் சரியாகப் பங்கேற்கிறோமா இல்லையா என்பது, நாம் ஆவிக்குரிய வகையில் பிழைத்திருக்கிறோமா அல்லது மரித்திருக்கிறோமா என்பதைத் தீர்மானிப்பதாக இருக்கலாம்.

கர்த்தருடைய இராப்போஜனத்தை அர்த்தம் நிறைந்ததாக ஆக்குவதற்கு நாம், வேதவசனங்களின் எல்லைகளுக்குள், சாத்தியமான ஒவ்வொன்றையும் செய்ய வேண்டும். பங்கேற்பவர்கள் தங்களைத் தாங்களே சோதித்து அறியும்படி, சரீரத்தை நிதானித்து அறியும்படி மற்றும் ஐக்கிய விருந்தில் தங்களுடன் பங்கேற்கும் மற்ற உறுப்பினர்களைக் குறித்து அக்கறை கொண்டிருக்கும்படி ஊக்குவிக்கப்பட வேண்டும்.

குறிப்புகள்

[1]*11:17ல் - "உங்களைப் புகழாமல்" (11:22லும் காணப்படுகிற ஒரு கருத்து) என்ற - பவுலின் கூற்று, அவர் 11:2ல் கூறிய - "உங்களைப் புகழுகிறேன்" என்ற - கருத்துக்கு நேர்மாறாக இருப்பதை நோக்கங் கொண்டுள்ளது.* [2]இதற்கு நேர்மாறான வகையில், "அன்பின் விருந்து" என்பது "ஒருமைப்படுத்தும் மற்றும் மேல் எழுப்பப்படும் அனுபவமாக" இருக்கும்படி வடிவமைக்கப் பட்டிருக்க வேண்டும் (Millard J. Berquist, *Studies in First Corinthians* [Nashville: Convention Press, 1960], 85); இதற்குப் பதிலாக கொரிந்து நகரில் இது பிரிவினையையும் ஐக்கியம் இன்மையையும் பேணியது. [3]*கி.பி. 51ம் ஆண்டில் (பவுல் கொரிந்து நகரில் ஒன்றரை ஆண்டு காலம் செலவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றபின் சற்றுக்காலத்தில்) கொரிந்து நகரில் ஒரு பஞ்சம் ஏற்பட்டிருக்கலாம், இது செல்வந்தர்கள் தங்கள் உணவை வறியவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதலை அவசியப் படுத்தியிருந்தது. மற்றும் பவுல் "இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம்" (7:26) என்பதைப் பற்றிப் பேசியபோது அவர் இந்தப் பஞ்சத்தின் விளைவைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கலாம்.* (B. B. Blue, "Love Feast," in *Dictionary of Paul and His Letters,* ed. Gerald F. Hawthorne, Ralph P. Martin, and Daniel G. Reid [Downers Grove, Ill.: InterVarsity Press, 1993], 579.) [4]*11:20ல் பவுல் இந்த நினைவுகூரும் விருந்தை "கர்த்தருடைய இராப்போஜனம்" என்று கூறினார். இது 1 கொரிந்தியர் 10:21ல் "கர்த்தருடைய பந்தி" என்று விவரிக்கப் படுகிறது. இந்த இராப்போஜனத்தில் கிறிஸ்தவர்கள் பங்கேற்கும்போது, அவர்கள் கிறிஸ்துவுடனும் ஒருவர் மற்றவருடனும் உண்ணுகின்றனர் என்பதால் இது "ஐக்கிய விருந்து" என்றும் குறிப்பிடப்பட முடியும். இது "அப்பம் பிட்குதல்" என்றும் கூறப்படுகிறது (நடபடிகள் 2:42; காண்க 1 கொரிந்தியர் 10:16; நடபடிகள் 20:7).*

13

ஆவிக்குரிய வரங்கள் பற்றிய உண்மைகள் தேவைப்பட்ட ஒரு சபை

(1 கொரிந்தியர் 12:1–13:13)

ஆவிக்குரிய வரங்கள் பற்றிய பவுலின் கலந்துரையாடல், 1 கொரிந்தியர் 12ல் தொடங்கி 14ம் அதிகாரம் வரையிலும் தொடருகிறது. "அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறியாதிருக்கிற எனக்கு மனதில்லை" (12:1) என்று கூறுவதன் மூலம் இந்தத் தலைப்பை அப்போஸ்தலர் அறிமுகப்படுத்தினார்.[1] பின்பு அவர், ஆவிக்குரிய இந்த வரங்களைப் பற்றி நீளமாகப் பேசக் கடந்து சென்றார்.

இவ்வசனப் பகுதியில் பவுல் பட்டியலிட்ட ஆவியின் வரங்கள், முதல் நூற்றாண்டு சபையின் பாகமாயிருந்த அற்புத வரங்களாகும், ஆனால் இவைகள் இன்றைய நாட்களின் சபையின் பாகமாக இருப்பதில்லை. இருந்தபோதிலும், இந்த அதிகாரங்களில் இருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும். குறிப்பாக 12 மற்றும் 13 ஆகிய அதிகாரங்கள், ஆவிக்குரிய வரங்கள் பற்றிய முக்கியமான பல உண்மைகளை முன்வைக்கின்றன.

பரிசுத்த ஆவியானவரே அவர்களின் ஆவிக்குரிய வரங்களுக்கு ஆதாரமூலமாக இருந்தார்

எல்லாக் கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுள்ளனர் என்று உறுதிப்படுத்துவதன் மூலம் [இந்தக் கலந்துரையாடலைப்] பவுல் தொடங்கினார்:

> நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே, ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியுமே. ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன் (12:2, 3).

விசுவாசிகளை அவிசுவாசகளிடமிருந்து வித்தியாசப்படுத்துவது எது? கிறிஸ்தவர்கள் இயேசுவை கர்த்தர் என்று அறிக்கையிடுகின்றனர் (ரோமர் 10:9); மற்றவர்கள் இவ்வாறு அறிக்கையிடுவது இல்லை. பரிசுத்த ஆவியானவரால் அன்றி கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட அறிக்கையை இட இயலாது

(வசனம் 3). ஆகையால் கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஒரு கிறிஸ்தவரின் மனவிருப்பத்திற்கு எதிராகப் பரிசுத்த ஆவியானவர் அவரது வாயை மேற்கொண்டு எடுத்து அவரை "இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்" என்று கூறச் செய்வதில்லை. மாறாக, பரிசுத்த ஆவியானவரின் செல்வாக்கின் மூலமாக (பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட வசனத்தைப் பிரசங்கித்தல் மூலமாக), ஒரு நபர் இயேசுவை ஆண்டவர் என்று அறிய வருகிறார், பின்பு அந்த விசுவாசத்தை அவர் அறிக்கை செய்கிறார்.

நாம் கிறிஸ்துவை ஆண்டவர் என்று அறிக்கை செய்வதால் நாம் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டிருக்கிறோம் என்பதே பவுல் எற்படுத்திய கருத்தாக இருந்தது. உண்மையில் எல்லாக் கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுள்ளனர் என்றே புதிய ஏற்பாடு போதிக்கிறது (காண்க நடபடிகள் 2:38; 5:32; 1 கொரிந்தியர் 12:13; கலாத்தியர் 4:6).

எல்லாக் கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுள்ளனர் என்ற கருத்தை ஏற்படுத்திய பின்பு பவுல், கொரிந்தியர்களுக்கு ஆவிக்குரிய வரங்கள் பரிசுத்த ஆவியானவரிடம் இருந்தே வந்தன என்று 12:4-11ல் வலியுறுத்தினார். கொரிந்தியர்களுக்கு அவர்களின் ஆவிக்குரிய வரங்களைப் பரிசுத்த ஆவியானவரே கொடுத்திருந்தார் என்று பவுல் கூறியிருந்தாலும் (12:7-11), அவர் "ஆண்டவர்" - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் இயேசு கிறிஸ்து - மற்றும் "தேவன்" ஆகியோரும் அந்த வரங்களின் ஆதாரமூலமாக இருக்கின்றனர் என்ற வகையிலும் குறிப்பிட்டார் (12:5, 6).

அற்புத வரங்களைப் பற்றிப் பவுல் கலந்துரையாடுகையில், அவர் கூறியது நமது "வரங்கள்" அல்லது தாலந்துகளுக்கும் உண்மையானதாக உள்ளது. அவைகள் யாவும் தேவனிடத்தில் இருந்து வருகின்றன. நமது திறன்கள் தேவனிடத்தில் இருந்து வருகின்றன, அவைகள் ஈட்டப்பட்டவை அல்ல என்று நாம் உணர்ந்தறிந்த நிலையானது பின்வரும் மூன்று செயல்விளைவுகளைக் கொண்டிருக்க வேண்டும்: (அ) நாம் மேட்டிமை கொள்வதில் இருந்து நம்மைக் காத்தல், (ஆ) சுயநலத்தில் இருந்து நம்மைக் காத்தல் மற்றும் (இ) நாம் செய்யும்படி அவர் வல்லமை அளித்துள்ளது தேவனுக்கு நன்றி கூறக் காரணமாகுதல்.

பரிசுத்த ஆவியானவர் பல்வேறு வரங்களை அளித்தார்

ஆவிக்குரிய வரங்களின் முதல் பட்டியல் 1 கொரிந்தியர் 12:8-10ல் உள்ளது. ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், விசுவாசம், குணமாக்கும் வரங்கள், அற்புதங்களைச் செய்யும் சக்தி, தீர்க்கதரிசனம் உரைத்தல், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதல், பற்பல பாஷைகளைப் பேசுதல், மற்றும் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதல். வரங்களின் இன்னொரு பட்டியலை நாம் 12:27-31ல் காண்கிறோம்.

அவ்வாறே, இன்றைய நாட்களில் சபையில் தேவன் பலருக்கு வெவ்வேறு தாலந்துகளைத் தந்திருக்கிறார். தேவனுடைய பிள்ளைகள் அவரது இராஜ்யத்தில் பயன்படுத்த முடிகிற பல தாலந்துகளை உணர்ந்தறியத் தவறுதல் என்பது சபையில் இன்று மிகப்பெரிய பிரச்சனைகளில் ஒன்றாக உள்ளது. பிரசங்கியார்

என்ற வகையில் இணங்கச் செய்தலின் வரத்தையும் மூப்பர் என்ற வகையில் நடத்துவத்துவத்தின் வரத்தையும் ஒருவர் பயன்படுத்த முடியும். இருப்பினும், இராஜ்யத்தில் - குழாய் அமைப்பு அல்லது மின் இணைப்புப் பணிசெய்தல், சமையல் செய்தல் அல்லது தைத்தல், கவனித்தல் மற்றும் ஊக்குவித்தல் போன்ற - வரங்களும் பயன்படுத்தப்பட முடியும். நமது திறன்கள்யாவும் தேவனுடைய ஊழியத்தில் பயன்படுத்தப் படுவதற்காக அவரால் தரப்பட்டுள்ளன.

இந்த வரங்கள் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பொதுவான நன்மைக்காகத் தரப்பட்டன

பவுல், "ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது" [a spiritual gift] என்று கூறினார் (12:7). சபை ஆசீர்வதிக்கப்படக் கூடும்படிக்குத் தேவன் தாலந்துகளைத் தருகிறார். நமது திறன்கள் நமது சுய மேம்பாட்டிற்காக மாத்திரம் பயன்படுத்தப்படக் கூடாது, ஆனால் "பொதுவான நன்மைக்காக" பயன் படுத்தப் படவேண்டும்.

இன்றைய நாட்களில் நமது தாலந்துகள் "பொதுவான நன்மையை" எவ்வாறு மேம்படுத்துகின்றன? உடலின் பொதுவான ஆரோக்கியத்தை பௌதீக உடலின் உறுப்புகள் மேம்படுத்தும் அதே வழியிலேயே. பவுல் பின்வருமாறு எழுதினார்:

> எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு,[2] எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்[3] (12:12, 13).

மனித உடல் ஒன்றாகவே உள்ளது - ஆனால் அது பல உறுப்புகளைக் கொண்டுள்ளது, மற்றும் அவை ஒவ்வொன்றும் தனது சொந்தப் பணியைக் கொண்டுள்ளது. அவ்வாறே கிறிஸ்துவின் சரீரமும் ஒன்றே, ஆனால் பல உறுப்பினர்களைக் கொண்டுள்ளது, அவர்கள் ஒவ்வொருவரும் தமது சொந்தப் பணியைக் கொண்டுள்ளனர். கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் எவ்வாறு தேவைப்படுகிறோம் என்பதைப் பற்றி நாம் மிகச்சரியாக அறிந்திருக்க வேண்டும். பௌதீக உடலானது ஒரு உறுப்பு இல்லாதநிலையில் (எடுத்துக் காட்டாக, ஒரு கையை இழந்த பின்பு) பணிசெய்வதில் சிரமம் கொண்டுள்ளது என்றால், கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள உறுப்பினர்களில் ஒருவர் தமக்குத் தேவன் கொடுத்துள்ள திறனைப் பயன்படுத்தாது இருந்தால், அந்த சரீரம் [சபை] எவ்வாறு மலர்ந்து செழிக்க முடியும்?

ஒவ்வொரு வரமும் முக்கியமானதாக, பயன்நிறைந்ததாக, மற்றும் அத்தியாவசியமானதாக இருந்தது

சரீரத்தின் விவரிப்பு 12:14-24ல் விரிவாக்கப் பட்டுள்ளது. 15 முதல் 19 வரையிலான வசனங்களில், கொரிந்தியர்கள் தங்கள் வரங்களைப் பயனற்றதாக்கக் கூடாது என்று பவுல் போதித்தார். சிலர், "சகோதரர் ஜான் கொண்டுள்ள வரத்தை நான் பெற்றிருப்பதில்லை என்ற காரணத்தினால், நான் விளைவற்றவனாக இருக்கிறேன். நான் மதிப்பற்றவன் என்று என்னைப் பற்றி மக்கள் நினைக்கின்றனர். ஆகையால் நான் எனது தாலந்தைப் பயன்படுத்த மாட்டேன்" என்று கூறினர் என்பது தெளிவு. செயல்விளைவில், "எல்லாரும் எல்லா வரங்களையும் பெற்றிருக்க முடியாது" என்பதே பவுலின் பதிலுரையாக உள்ளது.

பின்பு 20 முதல் 24 வரையில் உள்ள வசனங்களில் பவுல், எவரொருவரின் வரத்தையும் மற்ற சகோதரர்கள் பழித்துரைக்கலாகாது என்று போதித்தார். கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களில் சிலர், தாங்கள் மேன்மையான வரங்களைக் கொண்டிருந்ததாக நினைத்து, மற்றவர்கள் கொண்டிருந்த வரங்கள் கீழானவை என்பது போல அவர்களைக் கீழ்மையாகக் கண்ணோக்கினர் என்பது தெளிவு. அவர்களின் எண்ணப்போக்குகள், "நீங்கள் எங்களுக்குத் தேவையில்லை" என்று மறைமுகமாக உணர்த்தின. மனித உடலைப் பயன்படுத்தி இன்னும் இரண்டு விவரிப்புகளைக் கொண்டு பவுல் பதில் உரைத்தார்.

முதலாவது அவர், "பலவீனமான" அல்லது "கனத்தில் குறைந்த" பாகங்களே அதிக அவசியமானவைகளாக உள்ளன மற்றும் அவைகள் மாபெரும் கனத்துடன் நடத்தப் படுகின்றன (12:22-25) என்று கூறினார். அடுத்ததாக அவர், சரீரத்தின் உறுப்புகள் ஒன்று மற்றொன்றை "உணரும்" வகையில் மிகவும் நெருக்கமாக உறவுபட்டுள்ளன என்று கூறினார் "ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும்கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும்கூடச் சந்தோஷப்படும்" (12:26). மனித உடலைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்போம்: யாரேனும் ஒருவருடைய கணுக்காலில் சுளுக்கு ஏற்பட்டு இருந்தால், அவரது முழு உடலுமே பாதிக்கப்படுகிறது. உடலின் ஒவ்வொரு உறுப்பும் அந்தப் புண்படுதலுக்கு ஏற்பத் தன்னைச் சரிசெய்து கொள்கிறது; ஒவ்வொரு உறுப்பும் பாதிக்கப்பட்ட உறுப்பிற்காக "உணர்வை" அடைகிறது.

கிறிஸ்துவின் ஒரே சரீரத்தின் உறுப்பு என்ற வகையில் நாம், நமது சொந்த வரங்களில் அகம் மகிழ்ந்து அந்த சரீரத்தின் நன்மைக்காகத் தேவனுடைய ஊழியத்தில் அந்த வரங்களைப் பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். மற்றவர்கள் பெற்றுள்ள வரங்களிலும் - அவற்றை நாம் நமது சொந்த வரங்களைக் காட்டிலும் உயர்வானவைகளாக அல்லது தாழ்வானவைகளாக, எவ்வாறு கருதினாலும் - நாம் அகம் மகிழ வேண்டும் மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகள் தாங்கள் பெற்றுக்கொண்ட வரம் எதுவாயிருப்பினும் அவற்றை சபையின் நன்மைக்காகப் பயன்படுத்தும்படி அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

அவர்கள் பெற்றிருந்த வரங்கள் அவர்களை ஒருமைப்படுத்துவதற்காக இருந்தன மற்றும் அவர்களைப் பிரிப்பதற்காக அல்ல

மனித உடல் பற்றிய தமது உதாரணத்தைப் பவுல், 12:25, 26ல் தொடர்ந்தார். உடலில் பல்வகைத் திறன்களுடன், அதன் ஐக்கியம் என்பதே மற்ற வசனங்களில் திறவுகோல் ஆய்வுக்கருத்தாக உள்ளது:

> எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு ... (12:12, 13அ; மேலும் காண்க 12:20).

கொரிந்தியர்கள் பிரிவினைக்கு ஆளாக இருந்தனர். இந்தப் பிரச்சனையானது, ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய அவர்களின் எண்ணப்போக்கைப் பாதித்தது; அவர்கள் எந்த வரம் மிகவும் முக்கியமானது என்பதைப் பற்றிப் பிரிவினை கொண்டிருந்தனர் மற்றும் சில வரங்கள் அவசியமற்று இருந்தன என்ற தவறான எண்ணப்போக்கைக் கொண்டிருந்தனர். நாமும்கூட சபையில் நமது பணிப்பொறுப்புகள் பற்றிய கருத்துக்களில் பிரிவினை கொண்டிருக்கக் கூடும். யார் பெரிய வரம் கொண்டுள்ளார் என்பது பற்றி நாம் விவாதிக்கக் கூடும். “யார் மிகச்சிறப்பாகப் பாடலை வழிநடத்துகிறார்?” அல்லது “யார் மிகவும் செயல் விளைவுள்ள போதகராக இருக்கிறார்?” என்பது போன்ற கேள்விகள் நம்மைப் பிரிக்கக் கூடும். சிலர், “எனது வரங்கள் உணர்ந்தறியப்பட்டு பயன்படுத்தப் படாவிட்டால், நான் சபையை விட்டு வெளியேறி விடுவேன்” என்று கூறலாம்.

கொரிந்தியர்கள் உதாரணத்தைப் பின்பற்றுவதை நாம் தவிர்க்க வேண்டும் என்பது தெளிவு. செயல்படும் மனித உடல் ஒன்றை நாம் கற்பனையில் சித்தரித்துக் கொள்வோம், அதன் ஒவ்வொரு உறுப்பும் ஒரே நோக்கத்தை நிறைவேற்ற ஒத்துழைக்கின்றன, மற்றும் சபை செயல்பட உதவுவதும் இவ்வாறே உள்ளது.

மனித உடலின் உறுப்புகள் ஒன்றிணைந்து செயல்படுகின்றன

ஒரு ஓட்டப் பந்தயத்தில் ஓடுபவரைக் கவனித்தல் என்பது ஒரு நல்ல விவரிப்பாக உள்ளது. அவரது கால்களும் அவரது பாதங்களும் இந்தச் செயலில் முக்கியமானவையாக உள்ளன என்பது தெளிவு - ஆனால் அதுவே எல்லாமும் ஆகி விடுவதில்லை! அவரது சமான நிலையைக் காத்துக்கொள்ள அவரது கைகள் வீசுகின்றன, அவரது இருதயம் வேகமாகத் துடிக்கிறது மற்றும் அவரது நுரையீரல்கள் கடினமாக வேலை செய்கின்றன. மற்றும் அவரது மூளை இச்செயலில் ஈடுபட வில்லை என்றால் - அவரது கால்கள், பாதங்கள், கைகள், இருதயம் மற்றும் நுரையீரல் ஆகியவற்றிற்கு அவைகள் என்ன செய்ய வேண்டும் என்று கூறவில்லை என்றால் - அவர் ஓட இயலாதவராக இருப்பார். அவர் ஓடுதலைச் சாத்தியமாக்குவதில், உண்மையில் அவரது உடலின் ஒவ்வொரு பகுதியும் ஈடுபடுகின்றன.

கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் உறுப்பினர்கள் ஒன்றுகூடி ஊழியம் செய்கின்றனர்

அவ்வாறே, முழு சரீரத்தின் உதவியின்றி சபையில் எந்த நன்மையும் நிறைவேற்றப் படமுடியாது. பல உறுப்பினர்கள் தங்கள் திறன்களை சபையின் நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும். ஒரு ஞாயிற்றுக்கிழமை காலைப்பொழுதில் ஒரு இளைஞர் ஞானஸ்நானம் பெறுகிறபோது, தேவன் அந்த விளைச்சலைக் கொடுப்பதை நாம் காண முடியும். இருப்பினும் மனிதக் கண்ணோக்கக் கருத்தில் இருந்து பார்க்கையில், அந்த நபரின் ஆத்துமாவை இரட்சிப்பதில் பங்கேற்றுள்ள உழைப்பாளர்கள் யார்? ஒருவேளை பிரசங்கியார் சுவிசேஷ செய்தியை முன்வைத்து அந்த நபர் இயேசுவினிடத்தில் வரும்படியான இயேசுவின் அழைப்பை அளித்த வகையில் அவரது இருதயத்தைத் தொட்டிருக்கலாம். கிறிஸ்து, இரட்சிப்பு மற்றும் பரலோகம் ஆகியவற்றைப் பற்றி சபைக்குழுமத்தைப் பாடலில் வழிநடத்தியவர் அந்த இளைஞரின் தீர்மானத்தில் பங்கு பெற்றிருக்கலாம். அவருக்கு முன்பாகக் கிறிஸ்தவ வாழ்வை நடத்திய அவரது நண்பர்களில் சிலர், அவர் கிறிஸ்தவராக விரும்புவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். வேதாகம வகுப்புகளிலும் ஆராதனை ஊழியங்களிலும் நட்புறவையும் ஏற்றுக்கொள்ளுதலையும் அவர் அனுபவித்தாரா? சபைக்குழுமத்தில் உள்ள யாரேனும் தனிப்பட்ட வகையில் அவருக்குப் போதித்து சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும்படி அவரை ஊக்குவித்தாரா? சபைக் கட்டிடம் நேர்த்தியாக இருக்கும்படி பாதுகாத்தவர்கள், இளைஞர் ஐக்கியங்களைத் திட்டமிட்டவர்கள் அல்லது கைப்பிரதிகள் கிடைக்கும்படி செய்தவர்கள் அவரது தீர்மானத்தில் ஒரு பங்குப் பணியைக் கொண்டிருக்கச் சாத்தியம் உள்ளது. ஒருவர் தேவனுடைய பிள்ளையாகும்போது, அது கிறிஸ்துவின் ஊழியத்தில் பல கிறிஸ்தவர்கள் தங்கள் திறன்களைப் பயன்படுத்தியதால் ஏற்படச் சாத்தியம் இருக்கலாம்.

அவர்களின் ஆவிக்குரிய வரங்கள் அன்பைப் போன்று அவ்வளவு முக்கியமானவையாக இருக்கவில்லை

12ம் அதிகாரத்தின் முடிவில் நாம் "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்று வாசிக்கிறோம் (12:31ஆ). "இன்னும் அதிக மேன்மையான வழி" என்பது 13ம் அதிகாரத்தில் பவுல் விவரித்த அன்பின் வழியாக உள்ளது.

அன்பு என்பது நீடித்து இருப்பதால் மிகவும் மேன்மையானதாக உள்ளது

அன்பின் வழி மிகவும் மேன்மையானதாக இருப்பது ஏன்? ஏனென்றால் பவுல் கூறிய ஆவிக்குரிய வரங்கள் பகுதியானவையாகவும் பூரணமற்றவையாகவும் கடந்து செல்பவையாகவும் இருந்தன (13:8-10). அவைகள் சபையின் பிள்ளைப் பிராயம் போன்றவையாக இருந்தன; சபையானது பக்குவம் அடைந்தபோது அல்லது முழுமையாக வளர்ச்சி பெற்றபோது, அதற்கு அவைகள் இனியும் தேவைப்பட மாட்டாது (13:10, 11). சபையின் முழுப்பக்குவம் எப்போது வர இருந்தது? தேவனுடைய சித்தம் பற்றிய வெளிப்படுத்துதல் முழுமையானபோது - அதாவது புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்பட்ட போது - முழுப்பக்குவம் வர இருந்தது. பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்கள் முதல் நூற்றாண்டு சபைக்குத்

தேவைப்பட்டிருந்தன; ஆனால் சபையானது பக்குவம் அடைந்தபோது அல்லது நிறைவடைந்த போது, அற்புத வரங்கள் இல்லாது ஒழிந்தன. அந்த வரங்களுக்கு நேர் எதிராக, அன்பு என்பது காலத்தின் முடிவு வரையிலும் தொடரும் (13:13).

அன்பில் உள்ளடங்கியுள்ளவற்றின் காரணமாக அது மிகவும் மேன்மையானதாக இருக்கிறது

இன்னொரு காரணத்தினால் அன்பு என்பது மிகவும் மேன்மையான வழியாக உள்ளது. கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த ஆவிக்குரிய வரங்கள் அவர்களைப் பிரித்து வைத்தன; இதற்கு நேர்மாறாக, அன்பு என்பது அவர்களை ஒன்றிணைக்க முடியும். கொரிந்து நகரில் இருந்த சீஷர்கள் 4 முதல் 8 வரையிலான வசனங்களில் விவரிக்கப் பட்டுள்ளபடி அன்பைப் பற்றிக் கற்றுக்கொள்வது அவசியமாக இருந்தது. அவர்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டி இருந்தது:

ஒருவர் மற்றவரிடம் சாந்தமாகவும்
ஒருவர் மற்றவரிடம் தயவாகவும் இருக்க வேண்டும்;
ஒருவர் மற்றவரிடம் வரங்கள் பற்றி பொறாமைப்படுவதை நிறுத்த வேண்டும்;
ஒருவர் சொந்த வரங்கள் பற்றி இறுமாப்புக் கொள்வதை நிறுத்த வேண்டும்;
ஒருவர் மற்றவரைக் கண்ணியத்துடன் நடத்த வேண்டும்; சுயநலமற்று இருக்க வேண்டும்;
ஒருவர் மற்றவரிடம் சினமடைவதைத் தவிர்க்க வேண்டும்;
ஒருவர் மற்றவரைத் தாங்க வேண்டும் மற்றும் தங்கள் சகோதரர் யாவராலும் செய்யப்படும் நன்மையில் சந்தோஷப்பட வேண்டும்,

இந்த வழியில் அவர்கள் ஒருவர் மற்றவர்மீது அன்புகூர்ந்தால், ஆவிக்குரிய வரங்கள் குறித்து அவர்கள் கொண்டிருந்த பிரச்சனைகள் மறைந்து போகும்.

அன்பு இல்லாமல் செய்யப்படும் எந்த ஒரு செயலும் எந்த மதிப்பையும் கொண்டிருப்பதில்லை என்று கூறியதன் மூலம் பவுல் அன்பின் மதிப்பை வலியுறுத்தினார். அன்பு இல்லையேல், பல மொழிகளில் பேசுதல் மதிப்பு எதையும் கொண்டிருப்பதில்லை, அன்பு இல்லையேல் தீர்க்கதரிசன வரங்களும் புரிந்துகொள்ளும் மற்றும் அறிவின் வரங்களும் மற்றும் விசுவாச வரமும் பயனற்றவையாக இருக்கும். அன்பை இழந்து செய்யப்படும் உபகாரமும் கூட அர்த்தமற்றதாகவே இருக்கும் (13:1-3).

பவுல் பேசிக்கொண்டிருந்த இந்த அன்பு என்பது என்னவாக இருந்தது? அது agape என்ற அன்பாக உள்ளது - இந்த அன்பு மற்றவருக்கு மிகச்சிறந்தவற்றையே விருப்பம் கொள்கிறது மற்றும் அன்புகூரப்பட்டவர்களுக்கு இது மிகச்சிறந்ததைச் செய்கிறது. அடிப்படையில் அன்பு என்பது மற்ற மக்களை சரியாக நடத்துதலாக உள்ளது. தாலந்து பெற்ற, வேதபக்தியுள்ள, உபகார சிந்தையுள்ள மனிதர் அன்புடன் நடந்துகொள்ளாவிட்டால் - எடுத்துக்காட்டாக அவர் மற்றவர்களுக்கு உதவி செய்கையில் பொறுமையாக, தயவாக மற்றும் சுயநலமற்று இல்லாவிட்டால் - அவர் ஒன்றுமில்லை.

மற்றவர்களை நாம் அன்புடன் நடத்தாவிட்டால் நமது "வரங்கள்" அல்லது தாலந்துகள் அர்த்தமற்றவையாக உள்ளன

அற்புத வரங்கள் கொண்டிராத நமக்கு இங்குள்ள செய்தி என்ன? கொரிந்தியர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தரப்பட்ட அதே பாடத்தை நாமும் கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவர் - திறமையாகப் பேசக்கூடிய, அழகாகப் பாடக்கூடிய அல்லது பெருந்தன்மையுடன் கொடுக்கக் கூடிய என்பது போன்ற - எத்தனை தாலந்துகள் கொண்டிருந்தாலும், அவர் அன்பு கொண்டிராது இருந்தால், அவரது திறன்கள் தேவனை மகிமைப்படுத்துவதில்லை அல்லது சபையைக் கட்டி எழுப்புவது இல்லை. அவர் மற்றவர்களை நடத்துதலில் தயவு, பொறுமை மற்றும் சுயநலமின்மை ஆகியவற்றைக் கொண்டிராதிருந்தால், அவரது திறன்கள் யாவையும் அர்த்தமற்றவையாக உள்ளன. இன்றைய நாட்களில் நமது தாலந்துகளைக் கொண்டிருத்தலும் பயன்படுத்துதலும், நம்மீது நாம் அன்புகூருவது போன்று நமது அயலாரையும் அன்புகூருதல் போன்று அவ்வளவு முக்கியமானவையாக இருப்பதில்லை.

முடிவுரை

இவ்வசனப்பகுதி கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுலின் அறிவுறுத்துதல் என்பதாக மாத்திரம் இருப்பதில்லை. இது இன்றைய நாட்களில் நமக்கு - ஒட்டு மொத்தமாக சபைக்கு மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் - செய்தியைக் கொண்டுள்ளது.

சபை நடத்துனர்கள், உறுப்பினர்களின் திறன்களைக் கண்டறிந்து ஒவ்வொரு உறுப்பினரையும் ஊழியம் செய்ய வைக்க முயற்சி செய்ய வேண்டும் என்பது சபைக்கான செய்தியாக உள்ளது. கிறிஸ்தவர்களில், சபைக்குழுமத்தின் "பொதுவான நன்மைக்காக" சரீரத்தில் (சபையில்) தங்கள் தாலந்துகளைப் பயன்படுத்துவதில் பணி மும்முரமாக இருப்பவர்கள் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருக்கச் சாத்தியம் உள்ளது. செயல் துடிப்புள்ள, ஊழியம் செய்யும் உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்கள்மீது முறையிடுதல் சாத்தியமில்லை. உறுப்பினர்களை ஊழியத்தில் ஈடுபடுத்தும் சபைக்குழுமங்கள் ஒரு சில பிரச்சனைகளையே கொண்டிருக்கும் மற்றும் அது வளருவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

தனிநபரான கிறிஸ்தவருக்கு, நாம் ஒவ்வொருவரும் வரம் அல்லது தாலந்தைக் கொண்டிருக்கிறோம் என்பதே செய்தியாக உள்ளது. ஒவ்வொரு உறுப்பினரும் தமது சொந்தத் தாலந்துகளைக் கண்டறிந்து அவற்றை தேவனுடைய மகிமைக்காகவும் சபை வளர உதவியாகவும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்புகள்

[1]"அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து" என்ற பவுலின் வார்த்தைகள், அவருக்குக் கொரிந்தியர்கள் எழுதியிருந்த கேள்விகளின் பாடக்கருத்துக்களில் ஒன்றாக இருந்தது என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது (காண்க 1 கொரிந்தியர் 7:1). ஒருவேளை அவர்கள் அவரிடத்தில், எந்த வரம் மிகச்சிறப்பானது என்பது பற்றிய விவாதத்தைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கலாம்.

"வரங்கள்" என்பதற்கான (*charismata என்ற*) *கிரேக்க வார்த்தை "கிருபை"* (*charis*) *என்ற வார்த்தையுடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. Charismata* "charismatic" *என்ற வார்த்தையில் இருந்துதான்* "charismatic" *என்ற ஆங்கில வார்த்தை தரவழைக்கப் பட்டுள்ளது.* [2]NRSV*வேதாகமம் மற்றும் சில பதிப்புகள் ஆகியவை, "ஒரே ஆவிக்குள்ளாக நாம் யாவரும் ஞானஸ்நானம் பெற்றோம். ..." என்ற மொழிபெயர்ப்பைத் தருகின்றன. இவற்றின் அர்த்தத்தில் சிறிதளவே வேறுபாடு உள்ளது அல்லது வேறுபாடே இருப்பதில்லை.* [3]*இவ்வசனப்பகுதி, சரீரத்தின் ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுவதுடன், ஒரே சரீரம் அல்லது சபைதான் உள்ளது என்றும் காண்பிக்கிறது (எபேசியர் 1:22, 23; கொலோசேயர் 1:18); ஞானஸ்நானம் நம்மை அந்த ஒரே சரீரத்திற்குள் அல்லது சபைக்குள் வைக்கிறது; மற்றும் ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியானவர் செயல்பட உள்ளடங்குகிறார் (யோவான் 3:5; தீத்து 3:5 ஆகியவற்றை ஒப்பிடவும்). சிலருடைய நம்பிக்கைக்கு நேரெதிராக, பவுல் இவ்விடத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை அல்ல, ஆனால் எல்லா மக்களையும் கிறிஸ்துவுக்குள் வைக்கும் "ஒரே ஞானஸ்நானத்தை" (எபேசியர் 4:5) பற்றிக் குறிப்பிட்டார்.* (Jimmy Allen, *Survey of First Corinthians* [Searcy, Ark.: By the Author, 1975], 154-55.)

1 கொரிந்தியர் 12ல் உள்ள ஆவிக்குரிய வரங்கள்

வேதபாடப் பகுதி: 1 கொரிந்தியர் 12:8-10, 28.

1 கொரிந்தியர் 12:8-10 மற்றும் 12:28 ஆகிய வசனப் பகுதிகளில் காணப்படும் ஆவிக்குரிய வரங்களின் இரண்டு பட்டியல்கள், அனேகமாக முடிவானவைகளாக இருத்தலை, நோக்கங் கொள்ளாது இருக்கலாம். எபேசியர் 4:11 மற்றும் ரோமர் 12:6-8 (மேலும் காண்க 1 பேதுரு 4:10, 11 மற்றும் மாற்கு 16:17, 18) ஆகியவற்றில் வரங்களின் மற்ற பட்டியல்கள் காணப்படுகின்றன. முதல் பட்டியலில், பிறமொழிகளில் பேசுதல் தொடர்பான வரங்கள் கடைசியில் உள்ளன என்பதைத் தவிர, வரங்கள் கூறப்பட்டுள்ள வரிசை முறைமை முக்கியமற்றதாகக் காணப்படுகிறது. கொரிந்தியர்கள் பிறமொழிகளில் பேசுதலை எல்லாவற்றிற்கும் மேலானதாக மதித்திருந்ததாகக் காணப்படுவதால், இது கவனிக்கத் தக்கதாக உள்ளது. இரண்டாவது பட்டியலில், வரிசை முறைமைக்குப் பவுலினால் சில முக்கியத்துவம் இணைக்கப்பட்டது; ஆனால் மீண்டும், பிறமொழிகளில் பேசுதல் பற்றிய வரங்கள் பட்டியலின் கடைசியில் இடப்பட்டுள்ளன என்பது தனிக்கவனத்திற்கு உரியதாக உள்ளது.[1]

இந்த வரங்கள் உள்ளடக்கியிருந்தது என்ன? பல்வேறு வரங்களில் உள்ளடங்கியிருந்த திறன்கள் ஒன்றின் மேல் ஒன்று கவிந்துள்ளதாகத் தோன்றுகிறது (உதாரணமாக, தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம் பெற்றிருந்தவர் அற்புத அறிவின் வரத்தையும் கொண்டிருந்திருக்க வேண்டும்). இருந்த போதிலும் தனித்தனி வரங்கள் என்னவாக இருந்தன என்பது பற்றிய சில ஆலோசனைகள் உதவிநிறைந்தவையாக இருக்கலாம்.

1 கொரிந்தியர் 12:8-10ல் ஆவிக்குரிய ஒன்பது வரங்கள் பட்டியல் இடப்பட்டுள்ளன:

1. *ஞானத்தைப் போதிக்கும் வசனம்* (''ஞானத்தை உச்சரித்தல்"; NRSV) - "கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் உள்ள தேவனுடைய ஞானத்தின் செய்தியை விளக்கி உரைக்கும் திறன்."[2]
2. *அறிவை உணர்த்தும் வசனம்* ("அறிவின் செய்தி"; NIV) - கிறிஸ்தவருக்கு அற்புதமாகக் கொடுக்கப்பட்டு பின்பு அவர் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டியதாக இருந்த தகவல் (காண்க 1 கொரிந்தியர் 14:6).[3]
3. *விசுவாசம்* - அற்புத விசுவாசம், ஒருவரை இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை நிகழ்த்தக் கூடியவராக்கிய வகையிலான விசுவாசம் (மத்தேயு 17:20; 1 கொரிந்தியர் 13:2).
4. *குணமாக்கும் வரங்கள்*[4] - பல்வேறு வியாதிகளைக் குணமாக்கும் வல்லமை.
5. *அற்புதங்களைச் செய்யும் சக்தி*[5] ("அற்புத வல்லமைகள்"; NIV) - இயேசு செய்தது போன்று, குணமாக்குதலுக்கு அப்பால் பல்வேறு வகையான அற்புதங்களை நிகழ்த்தக் கூடிய வல்லமை (காண்க மாற்கு 16:17, 18).[6]
6. *தீர்க்கதரிசனம் உரைத்தல்* - ஏவுதலினால் தேவனுக்காகப் பேசுதல், எதிர்காலத்தைப் பற்றி முன்னுரைத்தல் அல்லது மற்றவர்களுக்குத்

தேவனுடைய செய்தியை எடுத்துரைத்தல்.

7. *ஆவிகளைப் பகுத்தறிதல்* ("ஆவிகளுக்கு இடையில் வித்தியாசப் படுத்தல்"; NIV) - தேவனுக்காகப் பேசுவதாக உரிமை கோருபவர் உண்மையைக் கூறினாரா இல்லையா என்று அறியும் திறன்.
8. *பற்பல பாஷைகளைப் பேசுதல்* - நடபடிகள் 2ல், ஒருவர் தாம் கற்றிராத மற்றும் அறிந்திருப்பதாக எதிர்பார்க்கப்பட்டிராத ஒரு மொழியில் பேசும் திறன் என்பதாக உள்ளது.
9. *பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதல்* - வேறொருவரால் பேசப்பட்ட மொழியை விளக்கி உரைப்பதற்குப் பெற்றுக்கொண்ட அற்புத திறன், இதில் விளக்கம் அளிப்பவர் தாம் விளக்கம் அளிக்கும் மொழியை இயல்பாக அறிந்திருக்க மாட்டார் என்ற கருத்து மறைமுகமாக உள்ளது.

இத்துடன் கூடுதலாக, 12:28ல் ஆவிக்குரிய எட்டு வரங்கள் அல்லது பணிகள் பட்டியல் இடப்பட்டுள்ளன:

1. *அப்போஸ்தலர்கள்* - இது அனேகமாக, தோற்றகால பன்னிருவர் அத்துடன் கூடுதலாக பல வரங்களைப் பெற்றிருந்து தொடக்ககால சபையில் விசேஷித்த பணிப்பொறுப்பைச் செயல்படுத்திய பவுல் ஆகியோராக இருக்கலாம்.
2. *தீர்க்கதரிசிகள்* - தேவனிடத்தில் இருந்து பேசியவர்கள்; 1 கொரிந்தியர் 14:22ன் படி, விசுவாசிகளுக்கு தேவனுடைய வார்த்தையை எடுத்துரைப்பதே அவர்களின் விசேஷித்த பணிப்பொறுப்பாக இருந்தது.
3. *போதகர்கள்* - "அறிவுறுத்துதலைக் கொடுக்கும் வரம்,"[7] விசேஷமாக சபைக்குப் போதிக்கும் வரம் (காண்க எபேசியர் 4:11; யாக்கோபு 3:1).
4. *அற்புதங்கள்* ("வல்லமையான செயல்கள்"; NRSV) - "*அற்புதங்கள்* நிகழ்த்தும் வல்லமை" (12:10; NLT).
5. *குணமாக்கும் வரங்கள்* - மக்களை அற்புத விதமாகக் குணமாக்கும் வல்லமை.
6. *ஊழியங்கள்* - "தேவையில் இருப்பவர்களுக்கு உதவும் பொதுவான பணி";[8] "ஏழைகள், அனாதைகள், விதவைகள் மற்றும் அந்நியர் ஆகியோருக்கு உற்ற வேளையில் உதவுதல் என்பதைக் கடமையாகக் கொண்ட மக்கள்."[9] இது ரோமர் 12:7ல் ஊழிய வரம் என்பதற்கு ஒத்ததாக உள்ளது என்பது நிச்சயம்.
7. *ஆளுகைகள்* ("நடத்துவத்தின் வடிவங்கள்"; NRSV) - "நடத்துதலை" செய்பவர் கொண்டிருக்க வேண்டிய திறன் ("ஆளுகைகள்"; ரோமர் 12:8; WEB). தனித்தனி சபைக்குழுமங்களை நடத்திய மூப்பர்கள் இந்த வரத்தைக் கொண்டிருந்தனர் என்பதில் சந்தேகம் இல்லை.
8. *மொழிகளில் பேசுதல்* - மொழிகளை கற்றுக் கொள்ளாமலேயே அவற்றில் பேசுதல் அல்லது அவற்றில் விளக்கம் அளித்தல்.

இந்தப் பட்டியலில் பவுல் பின்வருபவற்றை வலியுறுத்தினார்: (1) வரங்களின் தோற்றுவாய், இவையாவும் தேவனிடத்தில் இருந்து வந்தன; (2) வரங்களின் பரவலான பல்வகைத்தன்மை; மற்றும் (3) வரங்களில் சிலவற்றின் சார்பளவு முக்கியத்துவம் - அல்லது குறைந்த பட்சம், மொழிகளில் பேசுதல் என்ற வரத்தின் முக்கியமற்ற தன்மை.

குறிப்புகள்:

[1]Leon Morris, *The First Epistle of Paul to the Corinthians,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 178. [2]W. Harold Mare, "1 Corinthians," in Frank E. Gaebelein, ed., *The Expositor's Bible Commentary,* vol. 10, *Romans-Galatians* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 262. [3]Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary (Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 296. [4]*"குணமாக்குதல்கள்" என்பது மூலத்தில் பன்மையில் இருப்பதால், "பல்வேறு வகையான வியாதிகள் மற்றும் நோய்களைக் குணமாக்குதல்கள் இருந்தன" என்று பவுல் அர்த்தப்படுத்தி இருக்கலாம்.* (Morris, 171.) [5]*"அற்புதங்கள்"* (*dunameoēn*), *என்ற வார்த்தை* (*dunamis*, *"வல்லமை"; காண்க ரோமர் 1:16*) *என்பதுடன் தொடர்புடையதாக உள்ளது.* [6]Morris, 171-72. [7]R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's First and Second Epistles to the Corinthians* (N.p.: Lutheran Book Concern, 1937; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1963), 539. [8]Morris, 179. [9]William Barclay, *The Letters to the Corinthians,* The Daily Study Bible, 2d ed. (Edinburgh: St. Andrews Press, 1954; reprint, Philadelphia: Westminster Press, 1956), 129.

14

சபைகூடுதலில் ஒழுங்குமுறை தேவைப்பட்ட ஒரு சபை

[1 கொரிந்தியர் 14:1-40]

1 கொரிந்தியர் 12-14ல் பவுல், ஆவிக்குரிய வரங்களைப் பற்றி - பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்களைப் பற்றி - கலந்துரையாடினார். அவற்றின் பயன்பாடுகள் மற்றும் தவறான பயன்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி அவர் விளக்கங்களை ஏற்படுத்தினார்.

12ம் அதிகாரத்தில் அவர், சரீரத்தின் வெவ்வேறு உறுப்புகள் [உறுப்பினர்கள்] ஆவிக்குரிய வெவ்வேறு வரங்களைக் கொண்டிருந்தனர் மற்றும் எவரொருவரும் மற்றவரைக் காட்டிலும் அதிகம் முக்கியத்துவமானவர் அல்ல என்ற கருத்தைப் பராமரித்தார். அதற்குப் பதிலாக, எல்லாரும் (உயர்ந்ததாகக் காணப்பட்ட வரங்கள் மற்றும் தாழ்ந்ததாகக் காணப்பட்ட வரங்கள் கொண்டிருந்த அனைவரும் உட்பட) சரீரமாகிய சபையின் பணிக்கு சமமான வகையில் அத்தியாவசியமானவர்களாக இருந்தனர். 13ம் அதிகாரத்தில் நடபடிகள், “மிகவும் மேன்மையான வழியை” - அன்பின் வழியை - விவரித்தார். ஆவிக்குரிய வரங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் அன்பு மிகவும் முக்கியமானதாக உள்ளது மற்றும் கொரிந்தியர்கள், ஆவிக்குரிய வரங்களைப் பெற்றுக்கொள்வதைக் காட்டிலும் ஒருவர் மற்றவர் மீது அன்புகூருதல் பற்றி அதிகம் அக்கறையாக இருக்க வேண்டும் என்று அவர்களுக்குப் போதிக்க அவர் முயற்சி செய்தார்.

பின்பு 14ம் அதிகாரத்தில், ஆவிக்குரிய வரங்களில் சில - விசேஷமாக பல மொழிகளில் பேசுதல் மற்றும் தீர்க்கதரிசனம் உரைத்தல் ஆகிய வரங்கள் - சபை கூடுவருதல்களில் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டியவையாக இருந்தன என்பதைக் காண்பிக்கிறார். 23ம் வசனத்தில் பவுல், “ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து ...” என்று கூறினார், மற்றும் 26ம் வசனத்தில் அவர், “நீங்கள் கூடிவந்திருக்கிறபோது” என்று காலங்களைப் பற்றிக் கொரிந்தியர்களுக்கு எழுதினார்.

ஆகையால் நாம், 12ம் அதிகாரம் கிறிஸ்துவின் சரீரத்தில் ஆவிக்குரிய வரங்களின் பணிப்பொறுப்பு பற்றியது, மற்றும் 13ம் அதிகாரம் ஆவிக்குரிய வரங்களின் இரண்டாம் நிலை இடம் பற்றியது; மற்றும் 14ம் அதிகாரம் சபைகூடி வந்திருக்கும்போது ஆவிக்குரிய வரங்களின் பயன்பாடு பற்றியது என்று கூறலாம். ஒருவேளை நாம் - “அதிகம் மேன்மையான வழி” என்ற வகையில் அன்பின் மீது பவுலின் கவனக்குவிப்பும், அன்பைக் காட்டிலும் ஆவிக்குரிய வரங்கள் பெரிதும் தாழ்ந்தவையாக இருந்தன மற்றும் அவை கடந்து போகும் என்ற அவரது விளக்கமும் இருந்தபோதிலும் - அவற்றின் பயன்பாட்டை அவர் தடைசெய்யவில்லை, ஆனால் அதற்கு மாறாக ஊக்குவித்தார் (காண்க 14:1, 12,

39). இருப்பினும் ஒவ்வொரு வரமும் சரியான வழியில் பயன்படுத்தப்படுதல் அவசியம் என்பதே இந்த சகோதரர்களுக்கு அவரது செய்தியாக இருந்தது.

அன்றிருந்த சபை: சபைகூடுகையில் வரங்களின் பயன்பாடு

புரிந்துகொள்ளுதலின் அவசியம் (14:1-19)

முதலில் பவுல், மொழிகளில் பேசும் வரம் என்பது சபைகூடுகைகளின் போது கூறப்படுபவற்றை கூடியிருப்பவர்களால் புரிந்துகொள்ள முடிந்தால் மாத்திரம் பயன்படுத்தப் படவேண்டியதாக இருந்தது என்று கூறினார். பக்தி விருத்தியூட்டுதலுக்குப் புரிந்துகொள்ளுதல் அத்தியாவசியமானதாக உள்ளது. தொகுப்பாகப் பவுல் பின்வரும் கருத்துக்களை ஏற்படுத்தினார்:

1. தீர்க்கதரிசனம் உரைத்தல் என்பது புரிந்துகொள்ளப்படக் கூடியதாக இருந்ததால், அந்த வரம் மொழிகளில் பேசுதலைக் காட்டிலும் மேன்மையானதாக இருந்தது (14:1-5). விளக்கியுரைத்தல் இன்றி கருத்து எதையும் ஏற்படுத்தாத மொழிகள், பேசுபவருக்குப் பயன் அளிக்கலாம்; ஆனால் விளக்கியுரைத்தல் இல்லாத நிலையில் அவைகள் கேட்பவர்களுக்கு அர்த்தம் நிறைந்தவையாக இருப்பது இல்லை. தீர்க்கதரிசனம் என்பது கேட்பவர்களுக்கு எப்போதுமே பயனுள்ளதாக இருக்க முடியும்.[1]

2. மொழிகளில் பேசுதல் என்பது, தீர்க்கதரிசன வரம் அல்லது போதிக்கும் வரம் போன்ற மற்ற வரங்கள் இணைந்திருந்தால் அன்றி, கேட்பவர்களுக்கு மதிப்பு எதையும் கொண்டிருந்தது இல்லை. பவுல், "மேலும், சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நிய பாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?" என்று கேட்டார் (14:6).

3. புல்லாங்குழல், சுரமண்டலம் அல்லது எக்காளம் ஆகியவற்றினால் உண்டாக்கப்பட்ட சத்தங்களினால் விவரிக்கப்பட்டபடி (14:7-9), கூறப்பட்டது என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல் மிகவும் முக்கியமானதாக இருந்தது. மொழிகளில் பேசுதல் ஆவிக்குரிய சத்தியங்களை அறிவிக்கவில்லை என்றால் மதிப்பற்றதாக இருந்தது.

4. கேட்பவர்களுக்கு அந்நியப்பட்ட மொழியில் ஒருவர் பேசினால், அவரது பேச்சு அர்த்தம் அற்றதாக இருந்தது. ஒவ்வொரு பேச்சாளரும் சபைக்குப் பக்தி விருத்தி ஊட்ட வேண்டியிருந்தது (14:10-12).

5. சபைக்குப் பக்திவிருத்தி ஊட்டுவதற்காக, மொழிகளில் பேசுபவர் விளக்கம் தரும் வரத்திற்காக ஜெபிக்க வேண்டியிருந்தது. பின்பு அவர் தமது வார்த்தைகளுக்கு விளக்கம் அளிக்க முடியும், அப்போது சபை பக்திவிருத்தி ஊட்டப்படும் விளைவைக் கொண்டிருக்கும். பின்வரும் அறிவுறுத்துதலைப் பவுல் கொடுத்து அதற்கு விளக்கம் அளித்தார்: "அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என்

கருத்து பயனற்றதாயிருக்கும்" (14:13, 14).

6. ஆராதனையில் ஈடுபட்டிருக்கும் சகோதர சகோதரிகளின் ஆவிகள் மாத்திரமல்ல, ஆனால் அவர்களின் மனங்களும் அதில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது அத்தியாவசியமாக இருந்தது. ஆராதனை வேளையின்போது நடந்த யாவையும் புரிந்துகொள்ளப்பட வேண்டியதாக இருந்தது. பவுல், "இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" என்று தொகுத்துரைத்தார் (14:15).

7. கூறப்பட்டது என்ன என்பதை மற்றவர்கள் அறியமாட்டார்கள், எனவே ஜெபங்களுக்கு "ஆமென்" கூற இயலாதவர்களாக இருப்பார்கள் (14:16, 17) என்பதே, விளக்கம் அளித்தல் இன்றி மொழிகளில் பேசுதல் என்பதன் விளைவாக இருந்தது.

8. புரிந்துகொள்ளுதலின் அவசியம் காரணமாக, அவர் மொழிகளில் தாமே பேச முடிந்திருந்தாலும், சபைகூடுகைகளில் தாம் கூறுவதை மற்றவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் பேசும்படி பவுல் தெரிந்துகொண்டார். அவர், "உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நியபாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்" என்று முடித்தார் (14:18, 19).

முறைப்படியான ஊழியத்திற்கான அவசியம் (14:20-40)

புரிந்துகொள்ளுதலுக்கான அவசியமானது அதிகம் திட்டவட்டமான அறிவுறுத்துதல்களைக் கொடுக்கும்படி பவுலை வழிநடத்திற்று. அடுத்ததாக அவர் முறைப்படியான ஆராதனை ஊழியத்தைக் கொண்டிருத்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

14:20-40 என்ற இந்த அதிகாரத்தின் பகுதியைப் பவுல், பின்பற்ற வேண்டியது என்ன என்பதற்கான காரணத்தைக் கொடுப்பதன் மூலம் தொடங்கினார். கொரிந்தியர்கள் பக்குவமான கிறிஸ்தவர்களாக இருப்பதற்கு (14:20), மொழிகளில் பேசுதல் என்பது அவிசுவாசிகளுக்காகப் பயன்படுத்தும்படி கொடுக்கப்பட்ட வேளையில், தீர்க்கதரிசனம் உரைத்தல் என்பது விசுவாசிகள் பயன் அடைவதை நோக்கங் கொண்டிருந்தது என்பதைப் புரிந்துணர வேண்டியிருந்தது (14:21, 22). விளக்கம் அளித்தல் இன்றி மொழிகளில் பேசுதல் சபைகூடுகையில் பயன்படுத்தப்பட்டது என்றால், குழப்பமே அதன் விளைவாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு காட்சிப்படுத்துதலினால் அவிசுவாசிகள் மனம் ஈர்க்கப்பட மாட்டார்கள். இருப்பினும் சபைகூடுகையில் பயன்படுத்தப்பட்ட தீர்க்கதரிசனம் உரைத்தல் என்பது அவிசுவாசிகளுக்கும் மனம் ஈர்ப்பதாக இருக்கும் (14:23-25).

ஆவிக்குரிய வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் குழப்பத்தைத் தவிர்த்தல் ஆகியவற்றின் அடிப்படையில், பவுல் குறிப்பிட்ட சில விதிகளை அமைத்தார் (14:26-36). முறைமையைப் பாதுகாக்க சபைகூடுகையின் போது சகோதர சகோதரிகள் இந்த அறிவுறுத்துதல்களைப் பின்பற்ற வேண்டி இருந்தது: (1) சபைகூடுகையின்போது இருவர் அல்லது மூவர் மாத்திரம் மொழிகளில் பேச

வேண்டும், மற்றும் அவர்கள் கூறுவது என்ன என்பதை விளக்கம் அளிக்கும் யாரேனும் ஒருவர் சபையில் இருந்தால் மாத்திரமே பேச வேண்டும் (14:26-28). (2) தீர்க்கதரிசனம் உரைப்பவர்கள் இருவர் அல்லது மூவர் மாத்திரம் பேச வேண்டும், இன்னொருவர் பேசிக்கொண்டிருக்கும்போது ஒருவருக்கு வெளிப்படுத்துதல் அருளப்பட்டிருந்தால், பேசுபவர் அமைதியாயிருந்து மற்றவர் தமக்கு வெளிப்படுத்தப்பட்டதை அறிவிக்கும்படி அனுமதிக்க வேண்டும். தீர்க்கதரிசிகள் ஒரு வேளையில் ஒருவர் மாத்திரமே பேச வேண்டும் (14:29-33). (3) சபைகூடுகையில் பெண்கள் அமைதியாயிருக்க வேண்டும் (14:34-36).

இந்த விதிகளைக் கொடுப்பதற்குப் பவுல் தாம் கொண்டிருந்த உரிமையை உறுதிப்படுத்தி முடித்தார் (14:37, 38). மீண்டுமாக அவர், அற்புத ஆவிக்குரிய வரங்கள் மதிப்பற்றவையாக இருந்தன என்று தாம் கூறவில்லை என்பதைக் குறிப்பிட்டார். அதற்கு நேர்மாறாக அவர், "இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்குந் தடைபண்ணாதிருங்கள்" என்று எழுதினார் (14:39). சகோதர சகோதரிகள் அவற்றை விரும்ப வேண்டும், ஆனால் அவற்றைத் தக்க கருத்துநோக்கில் காத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.

கடைசியாக அவர், சபைகூடுகையில் கொரிந்தியர்கள் ஆராதனையை நடத்துவதில் அவர்களை வழிநடத்தக் கூடிய ஒரு கொள்கையைக் கொடுத்தார்: "சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது" (14:40).

1 கொரிந்தியர் 12-14ல் கலந்துரையாடப்பட்ட அற்புத வரங்கள் நமக்குக் கிடைப்பதில்லை. ஆகையால், 14ம் அதிகாரத்தில் பவுல் கூறியவற்றில் அதிகமானவை நமக்கு நேரடியாக நடைமுறைப் படுவதில்லை. இருப்பினும் இங்கு அவரது போதனை மறைமுகமாக நடைமுறைப்படுகிறது. கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் சபைகூடுகைகளில் காண்பிக்க வேண்டிய நடக்கை பற்றி ஆளுகை செய்த அதே கொள்கைகள் நமது சபை கூடுகைகளில் நமது நடக்கைகளையும் ஆளுகை செய்ய வேண்டும். ஆகையால் நாம் சபைகூடிவரும்போது பின்பற்ற வேண்டிய கொள்கைகளுக்காக நாம் இந்த அதிகாரத்தைக் கண்ணோக்க வேண்டியது நியாயமானதாகவே உள்ளது.

இன்றிருக்கும் சபை: சபைகூடுகையில் தேவனைப் பிரியப்படுத்துதல்

முறையாக சபை கூடிவருதலின் அவசியம்

இந்த அதிகாரம் சபைகூடுகையின் உண்மையை உறுதிப்படுத்துகிறது; சபையானது முறையான அடிப்படையில் கூடிவந்தது என்று இது சுட்டிக்காண்பிக்கிறது. உண்மையில் "சபை" என்ற வார்த்தை "சபைகூடுகை" போன்ற சிலவற்றை அர்த்தப்படுத்துகிறது.[2]

இந்த அதிகாரத்தில் நாம், சபைகூடிவருதல் பற்றி அடிக்கடி குறிப்புகளைக் காணுகிறோம்:

- *19ம் வசனத்தில் பவுல், "அப்படியிருந்தும், நான் சபையிலே [சபைகூடுகையில்] ... ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக*

விருப்பமாயிருக்கும்" என்று கூறினார்.

- 23ம் வசனத்தில் அவர், "சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து" என்று கூறினார்.
- 26ம் வசனத்தில் அவர் "நீங்கள் கூடிவந்திருக்கிறபோது" என்ற நிகழ்வைப்பற்றிப் பேசுவதாகக் குறிப்பிட்டார்.
- 28ம் வசனத்தில் அவர், குறிப்பிட்ட சில நிபந்தனைகளின்கீழ், மொழிகளில் பேசுபவர் "சபையிலே [சபைகூடுகையில்]" அமைதியாக இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்.
- 34ம் வசனத்தில் அவர், "சபைகளில்" பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று கூறினார்.
- 35ம் வசனத்தில் "சபையிலே" பெண்கள் பேசுவது அயோக்கியமாயிருக்கும் என்று கூடுதலாகக் கூறினார்.

சபையானது முறையான அடிப்படையில் கூடிவர வேண்டும் என்பதற்கு மற்ற சாட்சியங்கள் வேதவசனங்களிலும் (உதாரணத்திற்கு, நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:2 ஆகிய வசனங்களைக் காணவும்) வரலாற்று ரீதியான ஆதாரமூலங்களிலும் காணப்பட முடியும். புறதெய்வ வணக்கத்தவர்களும் யூதர்களும் ஆகிய இருசாராருமே ஆராதிக்கக் கூடிவந்தனர் என்பதால், முதல் நூற்றாண்டு சபையார் ஆராதிக்கக் கூடாது இருந்திருந்தால் அது விசித்திரமானதாக இருந்திருக்கும்.

ஆகையால் சபை கூடிவந்தது என்று நாம் அறிகிறோம். அந்த உண்மை இன்று நமக்கு அர்த்தப் படுத்துவது என்ன? முதலாவது அது, இன்றைய நாட்களில் கர்த்தரின் சபை கூடிவருதல் அவசியம் என்று சுட்டிக்காண்பிக்கிறது. நாம் முறையாகக் கூடிவருதல் அவசியமாக உள்ளது. அது, சபைகூடி வரும்போது, உறுப்பினர்கள் அந்தக் கூட்டங்களில் தாங்கள் இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அர்த்தப்படுத்துகிறது (எபிரெயர் 10:25). சபைகூடிவரும் ஒவ்வொரு வேளையிலும், நாம் அங்கு இருக்க வேண்டும். நாம், சபையில் உள்ள சக கிறிஸ்தவர்களின் உதவியின்றி, தற்சார்பான கிறிஸ்தவர்களாக - கிறிஸ்து கட்டளையிட்டபடி வாழ நமக்கு நாமே முயற்சி செய்யும் கிறிஸ்தவர்களாக - இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புவதில்லை.

குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றுதலின் அவசியம்

14ம் அதிகாரம், சபை கூடுகைகளின் நோக்கத்தையும் - அவற்றைக் கொண்டிருக்க வேண்டியதன் காரணங்கள் மற்றும் அவை நிறைவேற்ற நோக்கங் கொண்டுள்ளவை என்ன என்பதையும் - நமக்குப் போதிக்கிறது. இந்த சபைகூடுகைகளின் நோக்கத்தை நாம் நெருங்கிக் கவனிப்பது அவசியமாக உள்ளது, ஏனெனில் நமது சபைகூடுகைகள், சபை மற்றும் தேவனை ஆராதித்தல் என்பவற்றிற்கானதாக மாத்திரம் இருக்க வேண்டும் என்று சிலர் நம்புகின்றனர். அவர்கள், முதல் நூற்றாண்டு சபையை, பக்தி விருத்தி ஊட்டுதல் மற்றும் ஆராதனை ஆகியவற்றுடன் இணைவு படுத்துகின்றனர், ஆனால் அந்த சபைகளில் எதுவும் புறம்பே இருப்பவர்களைச் சென்று அடைதலை இலக்காகக் கொண்டிருக்கவில்லை என்று உரிமைகோருகின்றனர்.

தேவனை ஆராதித்தல் என்பது எப்போதுமே முக்கியமானதாக இருந்துள்ளது

என்பது நிச்சயம், ஆனால் அது ஒன்று மாத்திரமே முதல் நூற்றாண்டு சபையின் சபைகூடுகைகளின் முழுநோக்கமாக இருக்கவில்லை. உதாரணமாக, 1 கொரிந்தியர் 14ல் குறிப்பிடப்பட்டுள்ள கபைகூடுகையின் வகையானது பல நோக்கங்களைக் கொண்டிருந்தது.

பக்தி விருத்தி ஊட்டுதல். பக்திவிருத்தி ஊட்டுதலில் பவுலின் வலியுறுத்தம் இருந்தது. அவர், "சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது" என்று தெளிவாகக் கூறினார் (14:26ஆ; காண்க 14:3, 4, 5, 12, 17, 19). இருந்தபோதிலும், பக்திவிருத்தி ஊட்டுதல் என்பதுடன் கூடுதலாக, மற்ற நோக்கங்களும் இந்த சபைகூடுகைகளினால் உதவியாற்றப் பட்டிருந்தன.

அவிசுவாசிகளுக்குப் போதித்தல். 23 முதல் 25 வரையுள்ள வசனங்களில் பவுல், சபைகூடுகையில் பிரவேசிக்கக் கூடிய "அவிசுவாசிகள்," அங்கு தாங்கள் அனுபவமாகப் பெறுவதன் மூலம் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ மனம் ஈர்க்கப்படலாம் என்பது பற்றிப் பேசினார். இவ்வசனப் பகுதி, அப்படிப்பட்ட சபைகூடுகைகளில் அவிசுவாசிகள் கலந்துகொண்டனர் என்பதை உறுதிப் படுத்துகிறது. இதன் விளைவாக, அந்த சபைகூடுகைகள் பக்தி விருத்தி ஊட்டுதலுக்கானவையாக மாத்திரம் இருக்கவில்லை. கிறிஸ்தவர்கள் அவிசுவாசிகளுக்கு "பக்திவிருத்தி ஊட்டுவதில்லை"; நாம் அவர்களுக்கு "சுவிசேஷ ஊழியம்" செய்ய முயற்சிக்கிறோம்.[3]

ஆராதனை. 26ம் வசனத்தில் பவுல், சபைகூடுகையில் என்ன நடக்கலாம் என்பதை விவரிக்கையில் அவர், மற்ற விஷயங்களுடன் "உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான்" என்று கூறினார். தேவனைத் துதிப்பதற்காக சங்கீதங்கள் பயன்படுத்தப்பட்டன; அவைகள் தேவனை ஆராதிக்கப் பயன்படுத்தப் பட்டன. அவிசுவாசிகள், தாங்கள் கேள்விப்படுவதன் மூலம் மனம் ஈர்க்கப் படும்போது, அவர்கள் தேவனை ஆராதிப்பார்கள் என்று பவுல் அறிவித்தார் (14:25).

எனவே 1 கொரிந்தியர் 14ம் அதிகாரத்தில் நாம், சபைகூடுகைகளில் தேவன் ஆராதிக்கப்பட்டார், பரிசுத்தவான்கள் பக்திவிருத்தி ஊட்டப்பட்டனர் மற்றும் அவிசுவாசிகள் போதிக்கப்பட்டனர் என்பவற்றிற்கான சாட்சியத்தைக் காணுகிறோம். இந்த சபைகூடுகைகள் கலப்பான இயல்பு கொண்டிருந்தன: (1) இவைகள் விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்குமானவைகளாக இருந்தன. (2) இவைகள் பக்திவிருத்தி ஊட்டுதலுக்கும் சுவிசேஷ ஊழியத்திற்குமானவைகளாக இருந்தன. (3) இவைகள் போதித்தலுக்கும் ஆராதித்தலுக்குமானவைகளாக இருந்தன.

குறிப்பிட்ட விதிகளைப் பின்பற்றுவதற்கான அவசியம்

சபைகூடுகைகளுக்கான சில விதிகளையும் நமது வேதவசனப் பகுதி நமக்குப் போதிக்கிறது. ஆம், விதிகள் இருந்தன! சபைகூடுகைகளின் பலவிபரங்களைத் தேவன் மனிதரின் உசிதநோக்கத்திற்கு விட்டு இருந்தார், ஆனால் சபைகூடிவரும்போது என்ன செய்ய வேண்டும் அல்லது அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை முற்றிலுமாக நாம் நமது சுய முடிவுகளின் பேரில் செய்யக் கூடாது. குறைந்த பட்சம் மூன்று விதிகள் இந்த அதிகாரத்தில் கருத்தாகத் தெரிவிக்கப் பட்டுள்ளன.

1. *புரிந்துகொள்ளுதல் அத்தியாவசியமானதாக உள்ளது.* சபைகூடுகையில் வெளிப்படையாக முன்வைக்கப்படுபவை புரிந்துகொள்ளப்படக் கூடியவையாக

இருக்க வேண்டும் என்பது இந்த அதிகாரத்தில் பவுலின் போதனையில் இருந்து தரவழைக்கப்படக் கூடிய ஒரு விதியாக உள்ளது. பேச்சாளர் ஒருவரின் பேச்சு புரிந்துகொள்ளப்படக் கூடியதாக இராதிருக்கும் பட்சத்தில் (எடுத்துக்காட்டாக, அவர் மொழிபெயர்ப்பாளர் இன்றி அயல் மொழியில் பேசும்படியான சூழ்நிலையில்), அவர் அமைதியாக இருக்க வேண்டும் எனறு பவுல் கூறினார். புரிந்துகொள்ளப்பட முடியாத எந்த ஒரு விஷயமும் கூடிவந்திருப்பவர்களுக்குப் பிரயோஜனமாக இருக்காது. இந்த விதியானது, ஆராதனையை நடத்துபவர்கள் அங்கு கூடிவந்திருக்கும் மக்களுக்குக் கேட்கும்படி பேசுதலையும் ஆராதனை ஊழியத்தில் நடைபெறுவது என்ன என்பதைப் பற்றிய தகவல்களை அளித்தலையும் சபை நடத்துனர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை நிபந்தனையாக்குகிறது. இது, பிரசங்கியார்களும் போதகர்களும் உரக்கப் பேசுதலையும் சபைகூடுகையில் உள்ள ஒவ்வொருவரும் கேட்கப் போதுமான அளவுக்குத் தெளிவாகப் பேசுதலையும் நிபந்தனையாக்குகிறது. பவுலின் போதனை, ஆராதனை ஊழியங்கள் உணர்வுகளை எழுப்புபவையாக இருக்க வேண்டும் என்றாலும், அது மாத்திரமே முழுமையான நோக்கமாக இருக்கலாகாது என்பதையும் மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. தேவனுடைய வசனத்தைப் படிக்கவும் கர்த்தரைத் துதிக்கவும் நாம் கூடிவரும்போது, மனம் - புரிந்துகொள்ளுதல் - என்பதும் அதில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

2. *பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும்.* பெண்கள் அல்ல, ஆனால் ஆண்களே சபைகூடுகைகளில் நடத்துனர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் போதித்தார்.[4] பெண்களுக்கான விதியான "அமைதியாக இருக்க வேண்டும்" என்பது (14:34, 35) இந்த சந்தர்ப்பப் பொருளில் சபைகளுக்கு (நேரடியான அர்த்தத்தில், "சபைகூடுகைகளுக்கு") நடைமுறைப்படுகிறது.[5] இது மற்ற சந்தர்ப்பங்களில் - எடுத்துக்காட்டாக, பிள்ளைகளுக்கு அல்லது பெண்கள் வேதாகம வகுப்பில் அவர்கள் போதித்தல் போன்றவற்றில் - பெண்கள் பேசுதலைத் தடைசெய்வதில்லை.

இவ்வசனப்பகுதியானது, குறிப்பிட்ட நேரங்களில் தீர்க்கதரிசி மற்றும் மொழிகளில் பேசுபவர் ஆகியோர் பேசத் தடைசெய்யும் அதே வகையில் பெண்கள் பேசுதலையும் தடைசெய்கிறது (14:28, 30). சபைகூடிவருதலை நடத்திச் செல்லும் வகையில், ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தும் வகையில் பெண் பேசக்கூடாது.

3. *சபைகூடுகையானது "நல்லொழுக்கமாயும் கிரமமாயும்" நடத்தப்பட வேண்டும்.* ஒவ்வொரு விஷயத்தையும் "நல்லொழுக்கமாயும் கிரமமாயும்" (14:40; "நேர்த்தியாகவும் முறைப்படியும்"; KJV) செய்வதைப் பின்பற்ற வேண்டும் என்பது முதன்மை விதியாக உள்ளது என்பதை இந்த சகோதர சகோதரிகள் அறிய வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

"நல்லொழுக்கமாயும் கிரமமாயும்" என்பது அர்த்தப்படுத்துவது என்ன? நல்லொழுக்கமான சபை கூடுகை என்பதற்கு எதிரானது, குழப்பத்தை - ஆராதனையில் பங்கேற்கும் மக்கள் பைத்தியம் பிடித்தவர்களாக இருந்தனர் என்று புறம்பே இருப்பவர்கள் நம்பக் காரணமாகும் ஒரு சூழ்நிலையை - உள்ளடக்கியதாக இருக்கிறது! (14:23). கொரிந்து நகரில் இருந்த சபையில் "நேர்த்தியும் முறைப்படியும்" என்பது ஒரு வேளையில் ஒருவர் பேசுதலையும் விளக்கம் அளிக்கக் கூடியவர் யாரேனும் இல்லை என்றால் மொழிகளில் பேசாது இருத்தலையும் உள்ளடக்கிற்று. நமது சூழ்நிலையில். நேர்த்தியானதும்

முறைப்படியானதுமான சபைகூடுகைகளைக் கொண்டிருத்தல் என்பது, நமது ஆராதனை குழப்பம் அற்ற வகையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று அர்த்தப்படவேண்டும். நமது சபைகூடுகைகள் நம்மைப் பார்வையிடுபவர்களை சாதகமான வகையில் மனம் ஈர்ப்பதாக, புரிந்துகொள்ளக் கூடிய மற்றும் பக்தி விருத்தி ஊட்டும் வகையிலான ஆராதனை அமைவாக இருக்க வேண்டும்.

இருப்பினும், ஒரு கலாச்சாரத்தில் நேர்த்தியானதும் முறைப்படியானதும் என்று கருதக்கூடிய விஷயமானது இன்னொரு கலாச்சாரத்தில் அவ்வாறு கருதப்படாதிருக்கலாம் என்பதை நாம் உணர்ந்து அறிய வேண்டும். சில சபைகுழுமங்கள் "ஆமென்!" என்று கூறி அல்லது பிரசங்கியார் பிரசங்கிக்கும்போது அவருடன் பேசி, அவரது பிரசங்கித்தலை ஊக்குவிக்கின்றன. இதற்குப் பழக்கமற்ற சபைகுழுமங்கள் இதை முறையற்றது என்ற வகையில் கண்ணோக்கலாம். இருப்பினும் இது பழக்கமாக உள்ள அந்த சபைகளுக்கு, இவ்விஷயம் முறையற்றதாகவோ அல்லது குழப்பம் ஊட்டுவதாகவோ இருப்பதில்லை. ஆகையால் நாம், நேர்த்தியானது மற்றும் முறைப்படியானது என்று நாம் செய்துள்ள முடிவுகளை மற்றொரு கலாச்சாரத்தில் உள்ளவர்களுக்கு நிர்ப்பந்தித்தல் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அதே வேளையில், எங்குமுள்ள ஒவ்வொரு சபையும், தனது சொந்தக் கலாச்சாரத்தில், தான் செய்வது தகுதியானதாகவும் நேர்த்தியானதாகவும் முறைப்படியானதாகவும் இருப்பதை நிச்சயப் படுத்திக் கொள்ள வேண்டும். ஏன்? முதலாவது, தகுதியானதும் நேர்த்தியானதும் முறைப்படியானதுமான ஊழியங்களைத் தேவன் விரும்புகிறார். முறைப்படியான ஆராதனை என்பது அவரது இயல்புக்குப் பொருத்தமானதாக உள்ளது, ஏனெனில் அவர் "கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்" (14:33). இரண்டாவது, முறைப்படியான சபைகூடுகைகள் பரிசுத்தவான்களைக் கட்டியெழுப்புவதாகவும் பார்வையாளர்களை மனம் ஈர்ப்பதாகவும் இருக்க அதிக சாத்தியக்கூறு உண்டு. இந்த அதிகாரத்தில் பவுலின் விளக்கங்களின்படி, நமது பார்வையாளர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதைப் பற்றி நாம் அக்கறையாக இருக்க வேண்டும்!

முடிவுரை

நமது சபைகூடுகைகளின் மூலமாக நாம் தேவனைப் பிரியப்படுத்துவது எவ்வாறு? நாம் சபையாகக் கூடிவர வேண்டும் - மற்றும் அது, ஒவ்வொரு கிறிஸ்தவரும் வந்திருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறது. நாம் நமது சபைகூடுகைகளின் மூலமாக ஆவிக்குரிய நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும்: தேவனை ஆராதித்தல் மற்றும்/அல்லது பரிசுத்தவான்களுக்குப் பக்திவிருத்தி ஊட்டுதல் மற்றும்/அல்லது அவிசுவாசிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல். இந்த சபைகூடுகைகளில் நாம் தேவனுடைய நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும், வெளிப்படையான முன்வைத்தல்கள் புரிந்து கொள்ளக் கூடியவைகளாக இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும், சபைகூடுகைகளை ஆண்கள் வழிநடத்திச் செல்ல அனுமதிக்க வேண்டும் மற்றும் சகலத்தையும் "நல்லொழுக்கமாயும் கிரமமாயும்" செய்ய வேண்டும்.

குறிப்புகள்

[1]*“ஆராதனையில் தீர்க்கதரிசனம் உரைத்தலைச் செயல்படுத்துதல் விரும்பத் தக்கதாக உள்ளது, ஏனெனில் அது தனிநபர்களுக்கு மாத்திரமல்ல ஆனால் சபைக்கும் மதிப்புடையதாக உள்ளது”* (James A. Davis, “1-2 Corinthians,” in *Evangelical Commentary on the Bible,* ed. Walter A. Elwell [Grand Rapids, Mich.: Baker Book House, 1989], 979). [2]*Ekklēsia என்பது கிரேக்க வார்த்தையாக உள்ளது.* (W. E. Vine, Merill F. Unger, and William White, Jr., “Assembly,” in *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 42.) [3]*ஹால்லடே அவர்கள், சபைகூடுகையில் அவிசுவாசிகள் அல்லது புறம்பே இருப்பவர்கள் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால், “சபைகூடுகையின் ஊழிய விருப்பநோக்கம் தெளிவாக உள்ளது” என்று கூறினார்* (Holladay, 184). [4]*இவ்வசனப் பகுதியின் தெளிவான போதனையாகத் தோன்றுவதைக் கல்வியாளர்கள்அடிக்கடி புறக்கணித்துள்ளனர். இடையூறு செய்யும் வகையில் கேள்வி கேட்கும் பெண்களுக்கு மாத்திரமே அந்தத் தடை நடைமுறைப்படுகிறது; அல்லது அது மனைவிகளுக்கு மாத்திரம் அல்லது ஒருவேளை தீர்க்கதரிகளின் மனைவிகளுக்கு மாத்திரம் நடைமுறைப்படுகிறது; அல்லது சபைகூடுகையில் குழப்பமான இயல்புக்குப் பங்களிக்கும் வகையில் பேசும் தீர்க்கதரிசினிகளுக்கு மாத்திரம் இது நடைமுறைப்படுகிறது* (Holladay, 190)*; அல்லது இது விதிவிலக்குகள் இல்லாத ஒரு பொதுவான விதியாக உள்ளது* (J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* [Cincinnati, Ohio: Standard Publishing Foundation, n.d.], 143) *என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இருப்பினும் இங்கு பவுலின் போதனையானது 1 தீமோத்தேயு 2:11, 12ல் காணப்படும் அவரது போதனைக்குச் சீர்பொருத்தமாக இருப்பதால் - மற்றும் சில காரணங்களினால் இந்தக் கட்டுப்பாடு இன்றைய நாட்களின் சபையையும் கட்டுப்படுத்துகிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.* [5]*இந்த கருத்தில் விளக்கவுரையாளர்கள் பொதுவாகக் கருத்து ஒருமைப்படுகின்றனர்.*

15

உயிர்த்தெழுதல் பற்றிய உறுதிப்பாடு தேவைப்பட்ட ஒரு சபை

(1 கொரிந்தியர் 15:1-58)

நவீனத்திற்குப் பிந்திய நமது உலகத்தில், முற்றானவை எதுவும் இல்லை - நிச்சயமான, கேள்வி கேட்கப்பட முடியாத சத்தியங்கள் எதுவும் இல்லை - என்று பலர் நம்புகின்றனர். இப்படிப்பட்ட ஒரு எண்ணப்போக்கிற்கு சபை பதில் செயல் எவ்வாறு செய்ய வேண்டும்? உபதேசத்தை நாம் நீர்த்துப்போகச் செய்ய வேண்டுமா? அவிசுவாசிகள் ஏற்றுக்கொள்ள விரும்புகிறவற்றை மாத்திரம் போதித்து, அவர்களுடன் நாம் சமரசம் செய்து கொள்ள வேண்டுமா? மற்றவர்கள் நம்புவதில்லை என்று நாம் அறிந்துள்ள உபதேசங்களை வெளிப்படையாக அறிவித்தலை நாம் தவிர்க்க வேண்டுமா?

இதேபோன்ற ஒரு கேள்வியைப் பவுல், 1 கொரிந்தியர் நிருபத்தை எழுதிய போது எதிர்கொண்டார். கொரிந்து நகரில் இருந்தவர்களில் சிலர், மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றிச் சந்தேகப்பட்டனர்.[1] பவுல், யாரேனும் சிலரை விட்டுப் பிரிய வேண்டியிருக்கலாம் என்பதற்காக அந்தக் கேள்வியைத் தவிர்க்கவில்லை அல்லது உயிர்த்தெழுதலின் உபதேசத்தை அவர் சமரசம் செய்யவும் இல்லை. மாறாக அவர், ஒரு நாளில் கிறிஸ்தவர்கள் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்பதை மறுத்தவர்களின் விவாதங்களை அவர் மறுத்துரைத்து, அதை (உயிர்த்தெழுதலை) அறிவித்து அதைத் தற்காத்தார். அவர் தமது நிலப்பாட்டிற்காக அமைதியாகவும் பகுத்தறிவுடனும் விவாதித்து, கள்ள உபதேசத்தை எதிர்த்து நின்றார். விசுவாசத்தின் விஷயம் ஒன்று உள்ளடங்கும்போது பவுல், சத்தியத்திற்காக உறுதியாக நிலைநின்றார் - மற்றும் நாமும் அதையே செய்ய வேண்டும்! 1 கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில் பவுல், உயிர்த்தெழுதலைப் பற்றிப் போதித்தது என்ன என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், அவர் செய்தது போன்றே நாமும் அந்த சத்தியத்தைத் தற்காக்க வேண்டும் என்பதை நாம் நினைவில் வைப்போமாக.

கொரிந்து நகரில் இருந்த போதகர்களில் சிலர், மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்பவில்லை. பவுல், "கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்?" என்று கேட்டார் (15:12).

இந்தக் கள்ளப் போதகர்கள் யார்? அவர்கள் புறதெய்வ வணக்கத்தவர் அல்ல. அவர்கள் கிறிஸ்தவர்களே. அப்படி இல்லை என்றால், பவுலின்

விவாதங்கள் கருத்தறிவு எதையும் ஏற்படுத்தி இருக்காது. இந்த சகோதரர்கள், மரித்தோரில் இருந்து கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மறுக்கவில்லை, ஆனால் இவர்கள் மனிதர்களின் எதிர்கால உயிர்த்தெழுதலின் கருத்தைப் புறக்கணித்தனர். இவர்கள் மரணத்திற்குப் பின்பு ஆவிக்கு ஒரு வகையிலான வாழ்வு இருக்கும் என்பதை நம்பி இருக்கலாம், ஆனால் சரீரத்தின் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

உயிர்த்தெழுதலின் அவசியம் மற்றும் இயல்பு ஆகியவற்றைப் பற்றிய கலந்துரையாடலினால் பவுல் இவர்களின் அவிசுவாசத்தை எதிர்த்து நின்றார்.

உயிர்த்தெழுதலின் அவசியம்

அவர்கள் பெற்றிருந்த சுவிசேஷத்திற்கு ஒரு திறவுகோல் கருத்து

தொடக்கத்தில் பவுல், உயிர்த்தெழுதல் என்பது, கொரிந்து நகரில் தாம் பிரசங்கித்திருந்த சுவிசேஷ செய்தியின் அடிப்படை பாகமாக இருந்தது என்பதை உறுதிப்படுத்தினார் (15:1-11).

உயிர்த்தெழுதல் என்பது, கொரிந்து நகரில் பவுல் பிரசங்கித்திருந்த சுவிசேஷத்தின் திறவுகோல் கருத்தாக இருந்தது, அந்த சுவிசேஷத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைநின்றிருந்தனர் (15:1-5).[2] அந்த சுவிசேஷத்தின் நான்கு முதன்மை உண்மைகளை அவர்களுக்கு அவர் நினைவூட்டினார்.[3] அதாவது, கிறிஸ்து (1) மரித்தார், (2) அடக்கம் பண்ணப்பட்டார், (3) உயிர்த்தெழுந்தார் மற்றும் (4) (பவுல் உட்பட; 15:4, 5) பலருக்குத் தரிசனமானார். இந்த உண்மைகளை விட வேறு எதுவும் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அதிக முக்கியமானதாக இருப்பதில்லை. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் சுவிசேஷ செய்தி பிரசங்கிக்கப்பட்ட போது, கிறிஸ்து மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தார் என்பதைப் பிரசங்கியார் வலியுறுத்தியது தவிர்க்க இயலாததாகவே இருந்தது (காண்க நடபடிகள் 2:32; 13:30; 17:31).

அவர்களின் விசுவாசத்திற்கு ஒரு திறவுகோல் கருத்து

அடுத்ததாகப் பவுல், அத்தியாவசியமான கிறிஸ்தவ நம்பிக்கைகள் பிறவற்றில் உயிர்த்தெழுதலின் செயல்தாக்கத்தைச் சுட்டிக்காண்பித்தார் (15:12-19). கொரிந்து நகரில் இருந்த கள்ளப்போதகர்கள் சரியானவர்களாக இருந்தால் - எதிர்காலத்தில் மரித்தோரின் உயிர்த்தெழுதல் இராது என்றிருந்தால் - கிறிஸ்துவும் உயிர்த்தெழவில்லை, மற்றும் நமது விசுவாசம் வீணானதாயிருக்குமே என்று பவுல் விவாதித்தார் (15:13-19). இந்த கள்ளப் போதகர்கள், கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்தனர் ஆனால் கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழமாட்டார்கள் என்று போதித்தனர். அவர்களுடைய நிலைப்பாட்டின் விளைவைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்படி பவுல் அவர்களை வேண்டிக்கொண்டார். மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் உயிர்த்தெழவில்லை என்றாகிறது. மற்றும், கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால், நமது விசுவாசம் வீணானதாக உள்ளது, ஏனெனில் உயிர்த்தெழுதல் என்பதே கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமாக உள்ளது. அவர் பின்வரும் விவாதங்களைப் பயன்படுத்தினார்:

1. மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும்

எழுந்திருக்கவில்லையே (15:13, 16).

2. கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் [அப்போஸ்தலர்களின்] பிரசங்கமும் விருதா (15:14, 15).
3. உயிர்த்தெழுதல் என்பது கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையாக இருப்பதால், உயிர்த்தெழுதல் இல்லை என்றால் விசுவாசம் வீணானது (15:14, 17).
4. கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால், கிறிஸ்தவர்கள் இன்னும் பாவத்திலேயே இருப்பார்கள் (15:17).
5. கிறிஸ்தவர்கள் இன்னும் பாவத்திலேயே இருப்பார்கள் என்றால், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் நம்பிக்கை அற்றவர்களாக இருப்பார்கள் (15:18, 19).

கிறிஸ்தவ மார்க்கத்தின் உண்மைத்தன்மை என்பது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்ற உண்மையின்மீதே அடிப்படை கொண்டுள்ளது. உயிர்த்தெழுதல் இல்லை என்றால், கிறிஸ்து உயிர்த்து இருக்க மாட்டார். விஷயம் அவ்வாறு இருந்தால், கிறிஸ்தவர்களாகிய நாம், "எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" (15:19).

அவர்களின் எதிர்பார்ப்பிற்கு ஒரு திறவுகோல் கருத்து

இருப்பினும் பவுல், உயிர்த்தெழுதலின் உண்மை நிலையை உறுதிப்படுத்தச் சென்றார் (15:20-28). உயிர்த்தெழுந்த கிறிஸ்து ''நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்'' என்று பவுல் அறிவித்தார் (15:20). வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், கிறிஸ்து மரித்து மரித்தோரில் இருந்து உயிர்த்து எழுந்தது போன்றே, "நித்திரையடைந்தவர்கள்" (மரித்தவர்கள்) உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

பவுல் தமது நிலைப்பாட்டைப் பலப்படுத்த, இரண்டாம் ஆதாம் என்ற வகை கிறிஸ்துவை விவரிக்கும் ஒரு ஒப்புவமையைப் பயன்படுத்தினார். முதலாம் ஆதாமின் பாவத்தினால் எல்லாரும் மரிக்கிறோம். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால், கிறிஸ்து மறுபடியும் வரும்போது எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவோம் (15:21, 22).[4] கிறிஸ்து "முதற்பலனாக"வும் மரித்தோரில் இருந்து உயிர்த்தவராகவும் இருப்பதால், நாம் உயிர்ப்பிக்கப்படுவோம் என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது. ஆதாமின் நிமித்தம் நாம் மரிப்பது நிச்சயமானது போன்றே, கிறிஸ்துவின் நிமித்தம் நாம் மீண்டும் வாழும்படி உயிர்ப்பிக்கப் படுவோம்.

பின்பு பவுல், ''கடைசியில்'' - இரண்டாம் வருகையில் - கிறிஸ்து இராஜ்யத்தைப் பிதாவிடம் கையளிப்பார் என்று கூறினார். அவரை எதிர்ப்பதற்கு எந்த அதிகாரத்திற்கும் திராணி இராது, ஏனெனில் அவர், மரணம் உட்படத் தமது விரோதிகள் யாவர் மீதும் வெற்றிகொள்வார். அந்த வேளையில், கிறிஸ்து தம்மைத் தாமே பிதாவுக்குக் கீழ்ப்படுத்துவார் (15:24 -28).

அவர்களின் அர்த்தம் நிறைந்த வாழ்விற்கு ஒரு திறவுகோல் கருத்து

பவுலின் அடுத்த விவாதம், மக்களில் சிலர் செய்துகொண்டிருந்ததை அடிப்படையாகக் கொண்டிருந்தது (15:29-34). "உயிர்த்தெழுதல் இல்லை

என்றால், மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெறுதல் அர்த்தமற்றதாக இருக்கும்." சிலர் "மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெற்றனர்" என்பது தெளிவு (15:29). இந்த நடைமுறை எதை உள்ளடக்கி இருந்தது என்று யாரொருவரும் நிச்சயமாக அறிவதில்லை; மற்றும் பவுல் அந்த நடைமுறையை அங்கீகரித்தார் என்று நாம் நம்பும்படி இவ்வசனப் பகுதி கேட்டுக் கொள்வதில்லை. இப்படிப்பட்ட ஒரு செயலில் ஈடுபடுதல் என்பது மரணத்திற்குப் பின்பு ஒரு வாழ்வு உள்ளது என்ற நம்பிக்கையைப் பிரதிபலித்தது என்பது மட்டுமே அவரது கருத்தாக இருந்தது. இதே மக்கள் உயிர்த்தெழுதலை மறுத்தார்கள் என்றால், அவர்களின் செயல்கள் அவர்களின் நம்பிக்கைகளுடன் சீர்பொருத்தம் இல்லாதவைகளாக இருக்கும்.

"உயிர்த்தெழுதல் இல்லை என்றால், கிறிஸ்தவ வாழ்வு அர்த்தமற்றது." பவுல் தமது சொந்த அனுபவத்தைப் பற்றிப் பேசினார் (15:30-32அ). அவர் தொடர்ந்து உபத்திரவப் படுத்தப்பட்டார். உயிர்த்தெழுதல் இல்லை என்றால், தாம் விசுவாசத்துடன் இருந்து உபத்திரவத்தைச் சகித்துக்கொள்ளக் காரணம் எதுவும் இராது என்று பவுல் மறைமுகமாகக் குறிப்பிட்டார். அனேகமாக, கொரிந்தியர்களில் சிலரும் அதேபோன்று உபத்திரவத்தை அனுபவித்திருக்கலாம். கிறிஸ்துவுக்காகப் பாடுபட அவர்கள் கொண்டிருந்த மனவிருப்பம், உயிர்த்தெழுதலில் அவர்களுக்கு இருந்த நம்பிக்கைக்குச் சாட்சியமாக இருந்தது; ஆகையால் உயிர்த்தெழுதலை மறுத்தல் என்பது அவர்களின் செயல்பாடுகளுக்குச் சீர்பொருத்தம் அற்றதாக இருந்தது.

உண்மையில் பவுல், உயிர்த்தெழுதல் இல்லை என்றால், நாம் கிறிஸ்தவராக வாழ்வதற்குக் காரணம் எதையும் கொண்டிருப்பதில்லை என்றே கூறினார். "மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே?" என்று அவர் கூறினார் (15:32ஆ).[5] உயிர்த்தெழுதலை நாம் மறுத்தால், புறதெய்வ வணக்கத்தாரைப் போன்றே நாமும் வாழ்கிறவர்களாக இருக்கிறோம் என்றாகிறது.

"உயிர்த்தெழுதல் உண்டு என்பதால், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்." பவுல் அவ்விடத்தில் தமது கலந்துரையாடலை முடிக்க இயலாதிருந்தார். உயிர்த்தெழுதலை ஒப்புக்கொள்ளும் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், மாறுபட்ட வகையில் வாழ வேண்டும் என்று கூடுதலாகக் கூறப் புவுல் கடமைப் பட்டிருந்தார்: நாம் "ஆகாத சம்பாஷணைகளை" தவிர்த்து (15:33) "தெளிந்தவர்களாயிருக்க" வேண்டும் (15:34அ). கொரிந்து சபையில் இருந்தவர்களில் சிலர் அநீதியாக வாழ்ந்து கொண்டிருந்தனர் மற்றும் அவர்கள் தங்கள் வாழ்வு முறையின் நித்திய விளைவுகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தாக வேண்டும் என்பது உறுதியாயிருந்தது (15:34ஆ).

மரித்தோர் உயிர்த்தெழுதல் பற்றிய பவுலின் கண்ணோட்டத்தின் அவசியத்தைத் தொகுத்து உரைப்பதில் பவுல், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலின் மையமாக உள்ளது என்று கூறினார். இயேசு உயிர்த்தெழுந்த பின் அருளிய தரிசனங்களின் ஆதாரம், நாமும் கூட உயிர்ப்பிக்கப்படுவோம் என்பதை மேலும் நிரூபிக்கிறது. உண்மையில் நாம் உயிர்ப்பிக்கப்பட முடியாது என்றால், நமது விசுவாசம் வீணானதாக இருக்கும், நாம் நம்பிக்கை அற்றவர்களாக இருப்போம் மற்றும் கிறிஸ்தவ ஒழுக்கமும் வைராக்கியமும் பயனற்றவையாக இருக்கும். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்

என்பதால், நாமும் உயிர்ப்பிக்கப் படுவோம்; ஆகையால் நாம் நீதியுள்ள வாழ்க்கை வாழ்வதற்குக் காரணத்தைக் கொண்டிருக்கிறோம்.

உயிர்த்தெழுதலின் இயல்பு

இன்றைய நாட்களில் உயிர்த்தெழுதலை மறுப்பவர்கள், 15:35ல் பவுல் முன்வைத்த கேள்வியைக் கேட்கின்றனர்: "... மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள்? எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்கள்?" அனேகமாக இந்தக் கேள்வி, மத்தேயு 22:23-33ல் இயேசுவிடம் சதுசேயர்கள் கேட்ட கேள்வியின் இயல்பு உடையதாக இருக்கிறது எனலாம். அவர்கள், "ஆகையால், உயிர்த்தெழுதலில் அவ்வேழுபேரில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்? அவர்கள் எல்லாரும் அவளை விவாகம்பண்ணியிருந்தார்களே" என்று ஆச்சரியப்பட்டனர். இயேசுவைக் கேள்வி கேட்டவர்களைப் பொறுத்த மட்டில், பிரச்சனையானது பதில் அளிக்க இயலாததாக இருந்தது; ஆகையால் அவர்கள், உயிர்த்தெழுதலைச் சாத்தியமற்றது என்ற வகையில் கண்ணோக்கினார்.

பவுலின் பதிலை மதிப்பதற்கு நாம், "மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள்? எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்கள்?" என்ற கேள்வியில் யூகிக்கப்பட்ட சிரமங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். மரித்தோர், தாங்கள் மரித்த பின்பு, ஆவிகள் என்ற வகையில் தொடர்ந்து நிலவ முடியுமா இல்லையா என்பது பிரச்சனையாக இருக்கவில்லை; மாறாக பௌதீக உடல்கள் உயிர்ப்பிக்கப்பட முடிவது எவ்வாறு என்பதைப் பற்றிப் புரிந்து கொள்வதில் குறைபாடு என்பதே பிரச்சனையாக இருந்தது.[6] உடலானது கல்லறையில் மண்ணாகிறது என்றால், அந்த உடல் உயிர்ப்பிக்கப்பட முடிவது எவ்வாறு? ஒரு நபர் நெருப்பினால் முற்றிலுமாக எரிக்கப்பட்டுவிட்டால், அப்படிப்பட்ட உடல் மரணத்தில் இருந்து உயிர்ப்பிக்கப்பட முடிவது எவ்வாறு? இவைகளே உடலின் உயிர்த்தெழுதலை மறுத்த மக்களைத் தொந்தரவு செய்த இரகசியப் புதிர்களின் வகைகளாக இருந்தன. அவர்களின் கேள்விகளுக்குப் பதில்கள் இல்லை என்று அவர்கள் நினைத்தனர்; எனவே அவர்கள் உயிர்த்தெழுதலை நம்பவில்லை.

உயிர்ப்பிக்கப்படும் சரீரம் மாறுபட்டிருக்கும்

"உயிர்ப்பிக்கப்படும் சரீரம் மாறுபட்டிருக்கும்" (15:35-49) என்பதே அடிப்படையில் பவுலின் பதிலாக இருந்தது. வெவ்வேறு வகையான உயிர்ப்பொருள்கள் வெவ்வேறு வகையான உடல்களைக் கொண்டுள்ளன என்பதைக் காண்பிக்கப் பவுல் பல விவரிப்புகளைப் பயன்படுத்தினார்.

விதைகள். முதலாவது, அவர் விதைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். ஒரு விதையில் இருந்து தாவரம் ஒன்று வளருவதற்கு முன்னர் அந்த விதை இறந்தாக வேண்டும் (15:36). அவ்வாறே, ஒரு மனிதர் முதலில் மரிக்க வேண்டும் பின்புதான் அவர் மீண்டும் வாழுவார் என்று பவுல் மறைமுகமாகக் குறிப்பிட்டார். ஒரு விதையில் இருந்து வளரும் தாவரம் ஒன்று, விதைக்கப்பட்ட விதையைப் போன்று இருப்பதில்லை (15:37, 38), மற்றும் உயிர்ப்பிக்கப்படும் சரீரம் அடக்கம் பண்ணப்பட்ட சரீரத்தைப் போன்று இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது.

உயிர்வாழும் உயிரிகள். அடுத்ததாகப் பவுல், உயிர்வாழும் உயிரிகளின் உடல்கள் வேறுபடுகின்றன என்று பவுல் குறிப்பிட்டார் (15:39). மரிக்கும்

உடலானது உயிர்ப்பிக்கப்படும் உடலில் இருந்து வேறுபடுகிறது என்று அவர் மீண்டும் விவரித்தார் என்பது உறுதி.

பூமிக்குரிய மற்றும் வானத்திற்குரிய மேனிகள். கடைசியாகப் பவுல், வானத்திற்குரிய மற்றும் பூமிக்குரிய மேனிகளை ஒரு உதாரணமாகப் பயன்படுத்தினார். பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரஙகள் போன்றே மேனிகள் யாவும், ஒன்று மற்றொன்றில் இருந்து வேறுபடுகின்றன (15:40, 41).

அதுபோன்றே ("அப்படியே"; 15:42), பூமிக்குரிய மனித உடல் - மரிக்கும் உடல் - மற்றும் வானத்திற்குரிய உடல் - உயிர்ப்பிக்கப்படும் உடல் - ஆகியவை வேறுபட்டுள்ளன என்று பவுல் மறைமுகமாகக் குறிப்பிட்டார். இவ்விரண்டையும் ஒப்பிடுவதற்கு அவர், 15:42-49ல் விவரிப்புகளின் வரிசைத் தொடர் ஒன்றைப் பயன்படுத்தினார்:

1. முதல் உடல் அழியக்கூடியது; இரண்டாவது அழியாதது (வசனம் 42).
2. முதலாவது, கனவீனமுள்ளதாக விதைக்கப்படுகிறது; இரண்டாவது, மகிமையுள்ளதாக உயிர்ப்பிக்கப் படுகிறது (வசனம் 43அ).
3. முதலாவது, பலவீனமுள்ளதாக விதைக்கப்படுகிறது; இரண்டாவது, பலமுள்ளதாக உயிர்ப்பிக்கப் படுகிறது (வசனம் 43ஆ).
4. முதலாவது, ஜென்மசரீரமாக இருக்கிறது; இரண்டாவது, ஆவிக்குரிய சரீரமாக இருக்கிறது (வசனம் 46).
5. முதலாவது, பூமிக்குரியது; ஆதாமைப் போன்றதாக உள்ளது; இரண்டாவது, வானத்தில் இருந்து வந்த, இரண்டாம் மனிதனை (கிறிஸ்துவை)ப் போன்றதாக உள்ளது (வசனங்கள் 47-49).

உயிர்ப்பிக்கப்படும் உடல் வேறுபட்டதாக இருக்க வேண்டும்

இந்த வேறுபாடுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் மூலம் பவுல், உயிர்த்தெழுதலின் சரீரத்தின் இயல்பைப் பற்றிய தமது விவாதத்தை முடித்து வைத்தார் (15:50-57). வானத்திற்குரிய மேனியானது பூமிக்குரிய மேனியில் இருந்து வேறுபட்டிருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளுதல் ஏன் அவ்வளவு முக்கியமானதாக உள்ளது?

"மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது" (15:50) என்பதால், நாம் மாற்றப்பட்டாக வேண்டும். அழிவுக்குரிய உடலில் இருந்து அழியாமையுள்ள உடலாக மாறுதலின் அவசியம், இரு வழிகளில் ஒன்றில் நடைபெறும் என்பதை பவுல் குறிப்பிட்டார் (15:51ஆ). அழியக்கூடிய தங்கள் உடல்களை ஒப்புக்கொடுத்து, ஏற்கனவே மரித்திருப்பவர்கள், அழிவில்லாத புதிய உடல்களைப் பெறுவார்கள். கிறிஸ்து மறுபடியும் வரும்போது சிலர் உயிருடன் இருப்பார்கள், அவர்களின் உடல்களும் அழியாத உடல்களாக மாற்றப்படும். ஆகையால், எல்லாருமே, அழிவில்லாத மற்றும் அழியக்கூடாத, மாற்றப்பட்ட உடல்களைக் கொண்டிருப்பார்கள் (15:53).

இது நடைபெறும்போது, இனியும் மரணம் இருக்காது! இனியும் பாவம் இருக்காது! இனியும் நியாயப்பிரமாணம் இருக்காது! பின்பு நாம் வெற்றியைப் பெற்றுக்கொண்டவர்களாக இருப்போம் (15:54-57). என்ன ஒரு வெற்றி! மரணம் கடந்து போகும், மற்றும் நாம் இனியும், பௌதீக உடல் கொண்டுள்ளமைக்குத் தொடர்புடைய உடல்ரீதியான பிரச்சனைகளை அனுபவிக்க மாட்டோம். நாம்

கொண்டுள்ள நமபிக்கை எவ்வளவு பெரியது!

பவுலுடைய போதனையின் மறைமுகக் கருத்துக்கள்

பவுல் போதித்தது அல்லது முறைமுகமாகக் குறிப்பிட்டது என்ன? அவர் குறைந்த பட்சம் ஆறு சத்தியங்களை முன்வைத்தார்:

(1) உயிர்ப்பிக்கப்பட்ட பின்பு நாம் கொண்டிருக்கும் உடல், வேறுபட்டதாக இருந்தாலும், அவைகள் உடல்களாகவே இருக்கும்! நாம் உடல்கள் இல்லாத ஆவிகளாக இருக்க மாட்டோம்!

(2) பழைய உடல் மற்றும் புதிய உடல் ஆகியவற்றிற்கு இடையில் தொடர்பு இருக்கும்; நமது புதிய உடல்கள் தனிச்சிறந்த வகையிலும் தனிப்பட்ட வகையிலும் நம்முடையதாக இருக்கும்.

(3) புதிய உடல்கள் மேன்மையானதாக இருக்கும் - அழிவுக்குரியது என்பதற்கு மாறாக அழிவில்லாததாக இருக்கும், சாவுக்கேதுவானது என்பதற்கு மாறாக சாவாமையுள்ளதாக இருக்கும்.

(4) உடலில் மாற்றம் இன்றியமையாததாக உள்ளது; பூமிக்குரிய உடல்களுடன் நாம் வானத்தில் (பரலோகத்தில்) வாழ முடியாது.

(5) இந்த மாற்றத்தை - வாழ்கிற மற்றும் மரித்த - யாவரும் அனுபவிப்போம்.

(6) கிறிஸ்து மறுபடியும் வரும்போது உயிருடன் இருப்பவர்களுக்கு, பௌதீக உடலில் இருந்து ஆவிக்குரிய உடலாக மாறுதல் என்பது அந்த வேளையில் நடக்கும்.

முடிவுரை

உயிர்த்தெழுதல் பற்றிய சத்தியம், நமக்கும் நம் அன்புக்குரியவர்களுக்கும், மரணத்திற்குப் பின்பு உள்ள வாழ்வு பற்றிய ஆறுதலை அளிக்கிறது. புதிய, மேம்படுத்தப்பட்ட ஆவிக்குரிய உடல்களில், நாம் தொடர்ந்து வாழ்வோம், அவர்களும் தொடர்ந்து வாழ்வார்கள். இது அவிசுவாசிகளுக்கு ஒரு அறைகூவலையும் முன்வைக்கிறது. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார், மற்றும் எவரொருவரும் அந்த உண்மையை மறுக்க இயலாது! மற்றும் அவர் உயிர்த்தெழுந்தால், கிறிஸ்துவினால் உறுதிப்படுத்தப் பட்ட மற்ற ஒவ்வொரு உண்மையும், உண்மையாயிருப்பதாகக் காண்பிக்கப் பட்டுள்ளது. ஆகையால் நாம் தைரியமான நம்பிக்கை கொண்டிருக்க முடியும்: நாம் விசுவாசிப்பது யாரை என்று நாம் அறிந்திருக்கிறோம், மற்றும் நாம் அவரது உயிர்த்தெழுதல் மற்றும் நமது உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் தைரியமான நம்பிக்கை கொண்டிருக்கிறோம். நாம் விசுவாசிக்கிறோம்!

15:58ல் பவுல், "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாகவும், அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும இருப்பீர்களாக" என்று கூறி முடித்தார். உயிர்த்தெழுதல் பற்றிய உபதேசம் நாம் நம்ப வேண்டிய விஷயமாக மாத்திரம் இருப்பதில்லை. மாறாக அது, முழு இருதயத்தோடு கர்த்தரைச் சேவிக்கும்படி நம்மை அழைக்கிறது. கிறிஸ்து உயிர்த்து எழுந்தார் என்பதால் - மற்றும் நாமும் உயிர்ப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவுடன் நித்தியத்திற்கும் வாழும்படி புதிய,

சாவாமையுள்ள உடல்கள் நமக்குக் கொடுக்கப்படும் என்பதால் - நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் உறுதிப்பட்டவர்களாக, அசையாதவர்களாக இருக்க வேண்டும். நாம், சத்தியத்தில் இருந்து சாய்ந்து விடக்கூடாது, ஆனால் கர்த்தருடைய ஊழியத்தில் எப்போதும் பெருகிறவர்களாக இருக்க வேண்டும். ஏன்? ஏனென்றால் நமது உழைப்பு வீணாவதில்லை! அது இந்த வாழ்வில் வீணாவதில்லை, மற்றும் விசேஷமாக அது, உயிர்த்தெழுதலின் கண்ணோக்கில் வீணானதாக இருப்பதில்லை.

குறிப்புகள்

[1]*11ம் அதிகாரத்தில் பவுல் கையாண்ட பிரச்சனைகளைப்பற்றித் தாம் அறிந்திருந்தததாகக் கூறுவதைத் தவிர, கொரிந்து நகரில் இருந்த பிரச்சனை பற்றிப் பவுல் அறிந்தது எவ்வாறு என்பதை இந்த நிருபம் வெளிப்படுத்துவதில்லை. ஒருவேளை குலோவேயாளின் வீட்டார் (1:11) அல்லது கொரிந்துவிலிருந்து சென்ற மூன்றுபேர் (16:17) இவைகளைக்குறித்து அவரிடம் கூறியிருக்க வேண்டும்.* [2]*"சுவிசேஷத்தின்"* - the *euangelion, நற்செய்தியின் - முக்கியத்துவம் அதைப் பற்றிப் பவுல் 1 கொரிந்தியர் நிருபத்தில் அடிக்கடி குறிப்பிடுவதன் மூலம் சுட்டிக்காண்பிக்கப்படுகிறது. காண்க 1 கொரிந்தியர் 1:17; 4:15; 9:12; 9:16; 9:23.* [3]*15:1-4 வசனப்பகுதி சுவிசேஷத்தின் மூன்று உண்மைகளை - இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை - முன்வைக்கிறது என்று பிரசங்கியார்கள் வழக்கமாகக் கூறுகின்றனர். இருப்பினும் இவ்வசனப்பகுதியின் இலக்கண வடிவமைப்பு, இதன் விளக்கவுரையாளர் இவ்வரிசையில் தரிசனங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்வதை வேண்டுகிறது, ஏனெனில் இந்த நான்கு உண்மைகளும் ஒரே வகையிலேயே அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.* [4]*ரோமர் 5:12-19ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்.* [5]*வேதாகமத்தின் மற்ற பல வசனப்பகுகளில் இதே போன்ற கருத்து காணப்படுகிறது, காண்க - ஏசாயா 56:12; பிரசங்கி 2:24 (பிரசங்கி 3:12; 5:18; 8:15; 9:7 ஆகியவற்றை ஒப்பிடவும்); லூக்கா 12:19. புறதெய்வ வணக்க எழுத்தாளர்கள் இந்த தத்துவத்தை அடிக்கடி போதித்தனர்.* (William Barclay, *The Letters to the Corinthians*, The Daily Study Bible, 2d ed. [Edinburgh: St. Andrews Press, 1954: reprint, Philadelphia: Westminster Press, 1956], 172-73.) [6]*(மரணத்திற்குப்) பிந்திய வாழ்வில் நம்பிக்கை என்பது புறதெய்வ வணக்கத்தார் மத்தியில் இருந்தது, ஆனால் உடலின் உயிர்த்தெழுதல் என்ற கருத்து கேலிசெய்யப்பட்டது என்று ஆஸ்டர் அவர்கள் குறிப்பிட்டார்.* (Oster, 374-75.)

16

புறம்பே கண்ணோக்குதல் அவசியமாக இருந்த ஒரு சபை

(1 கொரிந்தியர் 16:1–24)

கொரிந்து நகரில் இருந்த இடர்ப்பாட்டிற்கு உட்பட்ட சபைக்குப் பவுல் எழுதிய நிருபத்தை அவர், புத்திமதிகள் மற்றும் வாழ்த்துதல்களின் பல் வகைகளுடன் முடித்தார். வேதாகமத்தின் ஒரு பதிப்பு, 16ம் அதிகாரத்தை "சொந்த விஷயங்கள்" என்ற தலைப்புடன் தொகுத்துரைக்கிறது. இந்தப் பகுதியை, பலவித விளக்கவுரைகள் என்பதைத் தவிர வேறு எவ்விதமாகவும் கண்ணோக்குதல் கடினமாக இருக்கும் வேளையில், கொரிந்து நகரில் இருந்த சபைக்குப் பவுலின் எழுத்துக்கள், இன்றைய நாட்களின் சபைக்கு இன்னமும் பொருந்துகின்றன.

சபைக்குப் பவுல் எழுதிய இந்தக் கடைசி வார்த்தைகளில் அவர், ஐந்து புத்திமதிகளைக் கொடுத்தார்.

"பிற இடங்களில் நடைபெறும் தேவனுடைய ஊழியத்தைப் பற்றி அக்கறையாயிருங்கள்"

பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக்குறித்து[1] நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.[2] நான் வரும்போது உங்கள் உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டுபோகும் படிக்கு, நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் நிருபங்களை கொடுத்து, அவர்களை அனுப்புவேன். நானும் போகத்தக்கதானால், அவர்கள் என்னுடனேகூட வரலாம் நான் மக்கெதோனியா நாட்டின் வழியாய்ப் போகிறபடியால், மக்கெதோனியா நாட்டைக் கடந்தபின்பு உங்களிடத்திற்கு வருவேன்.

நான் எங்கே போனாலும்[3] நீங்கள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு, நான் உங்களிடத்தில் சிலகாலம் தங்கவேண்டியதாயிருக்கும்; ஒருவேளை மழைகாலம் முடியும்வரையும் இருப்பேன். இப்பொழுது வழிப்பிரயாணத்திலே உங்களைக் கண்டுகொள்ளமாட்டேன்; கர்த்தர் உத்தரவுகொடுத்தால் உங்களிடத்தில் வந்து சிலகாலம் தங்கியிருக்கலாமென்று நம்புகிறேன். ஆகிலும் பெந்தெகொஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன்.[4] ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான

கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்.[5]

தீமோத்தேயு உங்களிடத்திற்கு வந்தானேயாகில், அவன் உங்களிடத்தில் பயமில்லாமலிருக்கப் பாருங்கள்; என்னைப்போல அவனும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறானே. ஆனபடியால் ஒருவனும் அவனை அற்பமாய் எண்ணாதிருப்பானாக; சகோதரரோடேகூட அவன் வருகிறதற்கு நான் காத்திருக்கிறபடியால், என்னிடத்தில் வரும்படிக்கு அவனைச் சமாதானத்தோடே வழிவிட்டனுப்புங்கள்.

சகோதரனாகிய அப்பொல்லோவைக் குறித்தோவெனில், சகோதரரோடேகூட உங்களிடத்தில் வரும்படிக்கு அவனை மிகவும் வேண்டிக்கொண்டேன்; ஆகிலும் இப்பொழுது வர அவனுக்கு மனதில்லை; அவனுக்கு நற்சமயம் உண்டாயிருக்கும்போது வருவான் (16:1-12).

சகோதரத்துவ அக்கறை என்பது 1 கொரிந்தியர் 16:1-4ன் தெளிவான ஆய்வுக்கருத்தாக உள்ளது. கொரிந்து நகரில் இருந்த சபை - தங்களிடம் இருந்து மிகத் தொலைவில் இருந்த மற்றும் தங்களில் இருந்து மாறுபட்டிருந்த மக்களான - எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களுக்கு உதவி செய்ததினால் சகோதரத்துவத்தில் செயல்முனைப்பான ஒரு பாகமானது என்றால், அவர்கள் ஒரு மேன்மையான சபையாக இருந்திருக்க வேண்டும். 14:34-36ல் கருத்தாகத் தெரிவிக்கப்பட்ட பெரிதான சகோதரத்துவத்தின் பகுதியாகக் கொரிந்தியர்கள் தங்களை நினைத்துப் பார்த்தல் அவசியமாக இருந்தது. சபைக்குழுமம் தனித்துவத்தின் ஒரு வகையை நடைமுறைப் படுத்தியதாகப் பவுல் மறைமுகமாகக் குறிப்பிட்டார். மற்ற சபைகள் என்ன செய்தன என்பதைக் கருதுவதற்கு அவர்கள் காரணம் எதையும் காணவில்லை; ஆனால் அவர்கள் தங்களின் சிந்திக்கும் வகையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

வசனங்கள் 5 முதல் 12 வரையில், மற்றவர்கள் மீதான அக்கறையின் - விசேஷமாக மற்ற இடங்களில் உள்ள இழந்து போகப்பட்டிருப்பவர்களுக்கான அக்கறையின் - முக்கியத்துவம் காணப் படுகிறது. கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களைப் பவுல் மீண்டும் காண்பதாக 16:5-9ல் கூறினார்; ஆனால் தாம் மற்ற இடங்களில் செய்துகொண்டிருந்த ஊழியமும் முக்கியமானது என்று அவர் வலியுறுத்தினார். கொரிந்தியர்கள், பவுலினால் புறக்கணிக்கப்பட்டதாக உணருவதற்கு மாறாக, அவர் எபேசு நகரில் “திறந்த வாசல் ஒன்றை” கண்டதற்காக அவர்கள் அகம் மகிழ வேண்டும்.

தீமோத்தேயுவும் கர்த்தருக்காக ஊழியம் செய்துகொண்டிருந்தார் என்று, 16:10, 11ல் பவுல் சுட்டிக்காண்பித்தார். சகோதரர்களை அவர் விரைவில் காண்பார்; ஆனால் அவர்களை பார்த்தபின்பு, அவர்கள் அவரை மற்ற இடங்களில் ஊழியம் செய்யக் கூடியவராக்க வேண்டும். இதற்கு நேர்மாறாக, அப்பொல்லோ இந்த வேளையில் கொரிந்து நகரில் ஊழியம் செய்வதற்கு வரக்கூடாதிருந்தது (16:12). அவர் இல்லாமை குறித்து அவர்கள் மனச்சசப்பு அடையக்கூடாது, ஆனால் தாம் மற்ற இடங்களில் ஊழியம் செய்ய வேண்டியிருந்தது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று பவுல் மறைமுகமாகக் குறிப்பிட்டார்.

"திடன் கொண்டவர்களாக மற்றும் அன்புள்ளவர்களாக இருங்கள்"

கொரிந்தியர்கள் மேம்படுத்திக் கொள்ள அவசியமாயிருந்த நான்கு பண்புகளை 13ம் வசனம் பட்டியலிடுகிறது. அவர்கள் விழித்திருக்க வேண்டும், திடன் கொண்டிருக்க வேண்டும், "தைரியமாயிருக்க வேண்டும்" (NLT) மற்றும் பெலம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று அவர்களிடத்தில் பவுல் வேண்டிக்கொண்டார்.[6] NASB வேதாகமத்தில் "எச்சரிக்கையாயிருங்கள்" "விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்." "ஆண்களாகச் செயல்படுங்கள்" மற்றும் "பெலமாயிருங்கள்" என்றுள்ளது. இந்த நான்கு கருத்துக்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாக உள்ளன. கொரிந்தியர்கள் உபதேசம் மற்றும் ஒழுக்கரீதியான விஷயங்கள் பற்றி, தங்கள் விசுவாசத்திற்கு, உள்ளிருந்தும் புறம்பே இருந்தும் வரும் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் தங்கள் சொந்த ஐக்கியத்திற்குள் இருந்த கள்ளப் போதகர்களை எதிர்த்து நிற்க வேண்டியிருந்த அதே வேளையில், பொல்லாத ஒரு நகரத்தின் புறதெய்வ வணக்கச் சூழ்நிலையில் கிறிஸ்தவர்களாக இருக்க முயற்சி செய்யவும் வேண்டியிருந்தது.

இப்படிப்பட்ட எதிர்ப்பு இருந்த காலத்தில் அவர்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது? பெலம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்! அதை அவர்கள் எவ்வாறு செய்ய வேண்டும்? அன்பிலே செய்ய வேண்டும்! (வசனம் 14). அவர்கள் எதைச் செய்தாலும், அதை அவர்கள் அன்பிலே செய்ய வேண்டி இருந்தது. பவுல் தமது கடைசி வார்த்தைகளில், 13ம் அதிகாரத்தின் ஆய்வுக்கருத்தை மறுபடியும் குரல் எழுப்பினார் (காண்க 16:22, 24). கொரிந்தியர்கள், சோதனைகளை எதிர்த்து நிற்பதிலும் தவறை மறுப்பதிலும் பெலம் கொண்டவர்களாக இருக்க வேண்டும், ஆனால் அவர்கள் அதை அன்பான நடக்கையுடன் செய்யவேண்டும்! உள்ளூர் சபையொன்று, பின்வருவதைக் காட்டிலும் மேன்மையான இலக்கு ஒன்றைக் கொண்டிருக்க இயலாது: பலம் உள்ளவர்களாகவும் அன்புள்ளவர்களாகவும் இருத்தல்!

"தேவனுடைய ஊழியர்களைக் கனம்பண்ணுங்கள்"

16:15, 16ல் சில தனிநபர்கள் பெயர்கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளனர். முதலில் பவுல், ஸ்தேவானுடைய வீட்டாரைப் பற்றிப் பேசினார் (காண்க 1:16). இந்தக் குடும்பத்தார், "பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருந்தனர்" (16:15). இப்படிப்பட்ட மக்களுக்கு கொரிந்து நகரில் இருந்த சகோதரர்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது? அவர்கள் "இப்படிப்பட்டவர்களுக்குக் . . . கீழ்ப்படிந்திருக்க வேண்டும்" (16:16). பவுல் அர்த்தப்படுத்தியது என்ன? இந்த சந்தர்ப்பப் பொருளில் அவர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று பவுல் அர்த்தப்படுத்தியிருக்கச் சாத்தியமில்லை.[7] பெரும்பாலும் அவர், சகோதரர்கள் அவர்களை மதிக்க வேண்டும், அவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும், அவர்களைப் பராமரிக்க வேண்டும், அவர்களை ஆதரிக்க வேண்டும், அவர்களின் தேவைகளைச் சந்திக்க வேண்டும் மற்றும் அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றே கூறியிருப்பார்.[8]

அடுத்ததாகப் பவுல், கொரிந்து நகரில் இருந்து தம்மிடத்தில் வந்திருந்த

மற்ற இரண்டு மனிதர்களுடன், ஸ்தேவானை மீண்டும் குறிப்பிட்டார்: பொர்த்துனாத்து, அகாயுக்கு (16:17, 18). அவர்கள் அனேகமாக, கொரிந்து சபை பவுலிடம் கேட்க விரும்பிய கேள்விகள் அடங்கிய கடிதம் ஒன்றை அவருக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். கொரிந்தியர்கள் சார்பாக அவர்கள் செய்திருந்த நல்ல செயலைப் பவுல் அங்கீகரித்தார் மற்றும் சபையார் அவர்களைக் கனம்பண்ண வேண்டும் என்று கூறினார்.

"கிறிஸ்தவர்களை ஒன்றாக 'பிணைக்கும் முடிச்சை' உணர்ந்து அறியுங்கள்"

பவுல், தாம் இருந்த சபைகளின் குழுமங்களில் - ஆசியாவில் இருந்த சபைகளில் - இருந்த வாழ்த்துக்களை, கொரிந்துவில் இருந்த தனியொரு சபைக்கு அளித்தார் (16:19, 20). மேலும் அவர், ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள் என்ற திருமணமான தம்பதியரிடம் இருந்தும், அவர்கள் வீட்டில் கூடிவந்த சபையிடம் இருந்தும் வாழ்த்துக்களை அனுப்பினார்.[9] அடுத்ததாக அவர், தாம் இருந்த இடத்தில் இருந்த "சகோதரர்கள் எல்லார்" சார்பிலும் கொரிந்தியர்களை வாழ்த்தினார். பின்பு அவர், அவர்கள் ஒருவர் மற்றவரை வாழ்த்தும்படி ஒவ்வொருவருக்கும் கூறினார். கடைசியாக அவர், சபைக்கு தமது சொந்த வாழ்த்துக்களை அளித்தார்.

இந்த வாழ்த்துக்கள் எல்லாவற்றின் நோக்கம் என்னவாக இருந்தது? செய்வதற்கு பண்புடையது என்பதால் மாத்திரம் இப்படிப்பட்ட வாழ்த்துக்களைப் பவுல் உள்ளடக்கவில்லை. அதற்குப் பதிலாக, இந்த வாழ்த்துக்களைப் பயன்படுத்தியதன் மூலம் பவுல், எல்லாப் பரிசுத்தவான்களும் ஒன்றாயிருந்தனர் என்று விளக்கப்படுத்தினார். அன்பின் வாழ்த்துக்கள் என்பவை அவர்கள் ஒருமைப்பாட்டை ஒப்புக் கொள்பவையாக, கிறிஸ்தவர்களை "பிணைக்கும் முடிச்சை" உறுதிப்படுத்தினார். எங்கும் உள்ள சபைகள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகப் பிணைக்கப் பட்டுள்ளன.

"கர்த்தருடன் நெருங்கிய உறவை வளர்த்துக் கொள்ளுங்கள்"

பவுல் தமது நிருபத்தை முடிக்கும் வேளையில் கர்த்தருடன் சரியான உறவு கொண்டிருத்தலின் அவசியத்தை மறுபடியும் வலியுறுத்தினார். கர்த்தருக்கு அன்பைக் காட்சிப்படுத்தாதவர்கள் சபிக்கப் பட்டவர்களாக உள்ளனர் (16:22அ). பவுல் இவ்விடத்தில் கள்ளப் போதகர்களைக் குறிப்பிட்டிருக்கலாம். அவ்வாறு இருந்தது என்றால், "கர்த்தர் மீது அன்பு" கூராமல் சபைகளைப் பிய்த்து, கர்த்தருடைய ஊழியத்தில் கனவீனத்தைக் கொண்டுவரும் கள்ளப் போதகர்களுக்கு நாம் பரிவிரக்கம் காண்பிக்கலாகாது என்று, அவரது [பவுலின்] வார்த்தைகள் நமக்குக் கருத்துத் தெரிவிக்கின்றன.

கர்த்தர்மீது அன்புகூராதிருப்பவர்களுக்கு நேர் மாறாக, அவர் மீது பவுல் அன்புகூர்ந்தார். அவர் கர்த்தரின் வருகையை முன்னெதிர்பார்த்திருந்தார்; எனவே அவர், "கர்த்தராகிய இயேசுவே, வாரும்!" என்று அர்த்தப்படும் வகையில் "மாரநாதா" என்று கூறினார் (16:22ஆ). கர்த்தர் மீது அவர் கொண்டிருந்த அன்பினிமித்தம். இயேசுவின் கிருபை கொரிந்தியர்களோடு

இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார் (16:23). தேவனுடைய அன்பை அவர் அறிந்திருந்தபடியால், கிறிஸ்துவுக்குள் இருந்த கொரிந்தியர்கள் மீது தாம் கொண்டிருந்த அன்பைப் பற்றி அவரால் தாராளமாகப்பேச முடிந்தது (16:24).

தொகுப்புரை: "மற்றவர்கள்மீது அன்புகூருங்கள்"

ஒருவேளை, இந்த ஐந்து வேண்டுகோள்களும் "அன்பு" என்ற தலைப்பின்கீழ் உள்ளடக்கப்படக் கூடும். கொரிந்தியர்கள் ஒருவர் மற்றவர்மீது அன்புகூர வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பவுல் ஏற்கனவே வலியுறுத்தி இருந்தார். 16ம் அதிகாரத்தில் அவர், மற்றவர்களிடத்திலும் அவர்களின் அன்பு காண்பிக்கப்பட வேண்டும் என்று கூடுதலாகக் கூறினார். செயல்விளைவில் அவர், "சகோதரத்துவத்தின் மீது அன்புகூருங்கள் மற்றும் இழந்து போகப்பட்டவர்கள் மீது அன்புகூருங்கள். சத்தியத்தின்மீது அன்புகூருங்கள், தேவனுடைய ஊழியக்காரர்கள்மீது அன்புகூருங்கள். கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் சகோதர சகோதரிகள் எங்கிருந்தாலும், அவர்கள்மீது அன்புகூருங்கள். கடைசியாக, எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தர் மீது அன்புகூருங்கள்" என்று கூறினார். பேதுரு "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்று எழுதினார் (1 பேதுரு 4:8) - இடர்ப்பாடுகளுடன் இருந்த ஒரு சபைக்கு, திரளான பிரச்சனைகளுக்கு, அன்பு என்பதே தீர்வாக உள்ளது.

குறிப்புகள்

[1]நிருபத்தின் இப்பகுதி [ஆங்கில வேதாகமத்தில்] "Now concerning" என்று தொடங்குவதால் (7:1, 8:1, மற்றும் 12:1 ஆகியவற்றை ஒப்பிடவும்), காணிக்கை பற்றிக் கொரிந்தியர்கள் பவுலினிடம் கேள்வியொன்றைக் கேட்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. [2]"சேர்த்துவைக்கக்கடவன்" ("தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்"; KJV) என்பது, சில விளக்கவுரையாளர்களுடைய கண்ணோக்கின்படி, பொதுவாகச் சேகரித்தல் என்பதற்கு மாறாக, பணத்தைத் தனிப்பட்ட வகையில் சேகரித்து வைத்தல் என்பதை மறைமுகமாக உணர்த்துவதாக உள்ளது. இருப்பினும் இவ்வசனத்தின் இரண்டு அம்சங்கள், வாரந்தோறும் பொதுவாகப் பணம் சேகரிக்கப்படுதலையே அர்த்தப் படுத்துகின்றன: (1) பணம் சேகரித்தல் என்ற செயலுக்கு, வாரத்தின் ஒரு குறிப்பிட்ட நாளைக் குறிப்பாகக் கூறுதல் என்பது, பொதுவாகச் சேகரித்தலையே அர்த்தப்படுத்துகிறது மற்றும் (2) உண்மையில் ஒவ்வொரு உறுப்பினரும் தம்மிடத்திலேயே பணத்தை சேகரித்து வைத்துக் கொண்டார் என்றால், பவுல் வரும்போது ஒரு பணம் சேகரித்தல் நடைபெற வேண்டும் - அதைத் தவிர்க்கவே பவுல் விரும்பினார். [3]உண்மையில் பவுல், எருசலேமுக்குச் செல்லும் வழியில், கொரிந்து நகரில் கடைசியாக மூன்று மாதங்களைச் செலவிட்டார்; மெக்கதோனியாவில் இருந்து அவர், கொரிந்து நகரம் உட்பட, கிரேக்க நாட்டிற்குச் சென்றார் (நடபடிகள் 20:1-3). மேலும் புறஜாதியாரின் பல சபைகளில் (நடபடிகள் 20:4) இருந்து பிரதி நிதிகள், எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களுக்குக் காணிக்கை எடுத்துக்கொண்டு அவருடன் துணையாகச் சென்றனர். [4]"பெந்தெகொஸ்தே" என்பது யூதர்களின் பிரதான பண்டிகைகள் மூன்றில் ஒன்றாக இருந்தது, இது பஸ்காவுக்கு ஐம்பது நாட்கள் பின்பு ஏப்ரல் முதல் ஜூன் மாதத்திற்குள் ஒரு நாளில் வந்தது. [5]எபேசுவில் பவுல் பெற்றிருந்த வாய்ப்புகள் மற்றும் அவருக்கு விரோதம் செய்தவர்கள் பற்றிய வரலாற்றுப் பூர்வமான விபரங்களுக்கு நடபடிகள் 18-20 அதிகாரங்களில் காணவும். [6]13 மற்றும் 14ம் வசனங்கள்

"நடைமுறை விஷயங்கள் பற்றி, தெளிவானவைகளாக, நேரடியானவைகளாக மற்றும் பெரும்பாலும் நடைமுறைக்கேற்ற அறிவுரையாக . . . உள்ளன" (Marion L. Soards, *1 Corinthians,* New International Biblical Commentary [Peabody, Mass.: Hendrickson Publishers, 1999], 362). [7]*இருந்தபோதிலும் "கீழ்ப்படிந்திருத்தல்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட (hupotassō . . . என்ற) வார்த்தை, சபை உறுப்பினர்கள், நடத்துனர்களுக்குக் கீழாக இருக்க அல்லது கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் மற்றொரு இடத்தில் கூறப்பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாகவே உள்ளது.* [8]*எபேசியர் 5:21ல் கிறிஸ்தவர்களுக்கு "தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" என்று கூறப்பட்டுள்ளது.* [9]*"ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாளையும் கொரிந்தியர்கள் அறிந்திருந்தனர் மற்றும் அவர்கள் எபேசு நகருக்கு வந்திருந்தனர் (நடபடிகள் 18:2-3, 18, 24-27)"* (Craig Keener, *The IVP Bible Background Commentary - New Testament* [Downers Grove, Ill.: InterVarsity Press, 1993], 490).

பிரசங்கம் 1

பிரிவினைகள் வரும்போது

(1 கொரிந்தியர் 1:10-12)

கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், அங்கிருந்த பிரிவினையை முக்கிய பிரச்சனையாக குறிப்பிட்டார் (1:10-12). சபை முழுக்க பரவி உள்ளூர் சபை அனுபவிக்கிற பிற பிரச்சனைகளுக்கும் இதுவே ஆதாரமாக இருந்தபடியால் முதலில் இந்தப் பிரச்சனையைக் குறித்து பேசுகிறார் என்பது நிச்சயம்.

பிரிவினை எனும் சாபம்

ஆரம்பம் முதல் இன்று வரை சபையை பிரிவினை தான் சாபத்துக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது. சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாக, கிறிஸ்து பூமியில் ஊழியம் செய்து கொண்டிருந்த அந்த நாட்களிலேயே, தேவனுடைய ராஜ்யத்தில் இயேவின் சீஷர்களுக்குள் எவன் பெரியவனாயிருப்பான் என்று வாக்குவாதம் செய்தனர் (மத்தேயு 20:20-28). தம்மைப் பின்பற்றி வருவோருக்குள் பிரிவினையாகிய பிரச்சனை இருக்கும் என்பதை முன்னறிந்துதான் இயேசு, கெத்சமனே தோட்டத்தில் தம்மை விசுவாசிப்பவர்கள் எல்லோரும் ஒன்றாயிருக்கும்படி ஜெபம் பண்ணினார் (யோவான் 17:20, 21).

பெந்தெகோஸ்தே நாளில் சபை துவக்கப்பட்ட பின்பு (நடபடிகள் 2), கிறிஸ்துவின் சீஷர்களுக்குள் பிரிவினை விரைவில் வெளிப்படையாகத் தோற்றமளித்தது. குறிப்பிடத்தக்க முதல் பிரிவினையாகிய பிரச்சனை எருசலேமிலிருந்த கிரேக்க யூதமார்க்க கிறிஸ்தவர்களானவர்களுக்கும், வம்சாவளி எபிரேயராகிய யூத மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவர்களானவர்களுக்குமிடையே ஏற்பட்டது (நடபடிகள் 6). அப்போஸ்தலர் நடபடிகளின் கடைசி பத்தொன்பது அதிகாரங்களில் பெரும்பகுதி யூத கிறிஸ்தவர்களும் கிரேக்க கிறிஸ்தவர்களும் எப்படி ஒரே சபையாக இணைந்திருக்க முடியும் என்பதைக் காட்டுகிறது.

சபை தோன்றிய இடமெல்லாம், பிரிவினைகளும் தொடர்ந்தது. ரோமாபுரி சபையில் இருந்த யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையே, குறிப்பாக மாமிசம் புசிக்கிற விஷயத்தில் பிரிவினைகள் உண்டானது தெளிவாய்க் காணுகிறது (ரோமர் 14).[1] பிலிப்பிபட்டணத்து சபை நல்ல ஒரு சபைதான், ஆகிலும் அவர்கள் பிரிவினையுள்ளவர்களாயிருக்கக் கூடாது என்று பவுல் அறிவுறுத்த வேண்டியிருந்தது. "ஏக சிந்தையுள்ளவர்களாக" இருக்க எயோதியாளுக்கும் சிந்திக்கேயாளுக்கும் அவர் புத்தி சொன்னார் (பிலிப்பியர் 2:2; 4:2). கலாத்திய நாட்டுச் சபைக்கு பவுல் தமது நிருபத்தை எழுதினபோது, மாம்சத்தின் கிரியைகளாகிய, "சண்டைகள்," "பிரிவினைகள்," "மார்க்க பேதங்கள்," "பொறாமைகள்" ஆகியவைகளைக் குறித்து எச்சரித்தார் (கலாத்தியர் 5:20, 21).

பிரிவினைகள் என்பது முதல் நூற்றாண்டுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படவில்லை. தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்பவர்களிடம் சண்டைகளும் பிரிவினைகளுமாகிய வாதை வரலாறு முழுவதும் காணப்பட்டது மற்றும் இன்று வரை விசுவாசிகளை தொடர்ந்து பிரித்துக் கொண்டுள்ளது.

கிறிஸ்தவம் இன்று பெரிய பிரிவுகளான- புராட்டஸ்டண்ட், என்றும் கத்தோலிக்கம் என்றும் பிரிந்து காணப்படுகிறது. இந்த பெரிய பிரிவுகளுக்குள் உட்பிரிவுகளாக அல்லது வகைகளாக பிரிந்து காணப்படுகின்றது. உண்மையில் நூற்றுக்கணக்கான கூட்டங்கள் புராட்டஸ்ட்ண்டுகளாகவோ அல்லது கத்தோலிக்கமில்லாத கூட்டங்களாகவோ இருக்கின்றன. எந்த பிரிவு (நாமகரண) கூட்டத்தையும் சாராமல் (குறிப்பிடாமல்) சுயேச்சை ஊழியம் எனும் பெயரில் ஆயிரக்கணக்கான குழுக்கள் மலிந்து கிடக்கின்றன.

இவைகளுக்கப்பால், உள்ளூர் சபைகள் - கொரிந்துவிலிருந்த சபை போன்றவைகள் - சண்டைகளையும், அங்கத்தினர்கள் மனம் புண்படும் அளவுக்கான பிரிவினைகள் ஏற்பட்டு, அவர்கள் சபை ஆராதனையை விட்டுவிடவும், அந்த உள்ளூர் சபையை இரண்டு கூட்டங்களாக பிளவுபடவும் செய்துவிடுகிறது.

கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டிருப்போர் மத்தியில் பிரிவினைகள் இருப்பது ஒரு நல்ல சூழல் அல்ல, ஆனால் அது கிறிஸ்துவின் காரணத்திற்கு ஒரு சாபம். ஏன்? ஏனெனில் அது தேவனுடைய சித்தத்தை முரண்பாடாக்குகிறது. தம்மை விசுவாசிக்கிற யாவரும் ஒன்றாயிருக்கும்படி இயேசு ஜெபித்தார் (யோவான் 17:21), மற்றும் பவுலும் கொரிந்தியர்கள் ஒன்றாயிருக்கும்படி அறிவுறுத்தினார் (1 கொரிந்தியர் 1:10). எண்ணங்களிலும், உபதேசங்களிலும் செயல்களிலும் சபை ஐக்கியப் பட்டிருக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டம் என்று அவர் விளக்கமளிக்கிறார் (எபேசியர் 4:1-16). பிரிவினையானது உலகத்தில் அவிசுவாசத்தை கொண்டுவருவதாக இயேசு குறிப்பிட்டார். "... உலகம் விசுவாசிப்பதற்காக" எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி அவர் ஜெபித்தார் (யோவான் 17:21). ஐக்கியமின்மை ஜனங்களை (தங்கள் ஆத்துமாக்களை) இழந்து போகக் கூடச் செய்யும்.

பிரிவினைக்கான காரணம்

பிரிவினை சாபமாயிருப்பதால், அதை சம்பவிக்க நாம் ஏன் அனுமதிக்க வேண்டும் என ஆச்சரியப்படலாம். சபையில் இருக்கும் மக்கள் ஏன் பிரிந்திருக்கிறார்கள்? சிறந்ததும், எளிமையுமான பதில், "ஏனெனில் அவர்கள் ஜனங்கள்." அதாவது, ஒருவருக்கொருவர் பிரிந்திருக்கும் சுபாவம் பெற்றது மனிதவர்க்கம், ஆனதால் அவர்கள் விழுந்துபோகும் தன்மையுள்ளவர்களும், பாவஞ்செய்யும் போக்கையும் கொண்டவர்கள்.

உண்மையில், மனித வரலாறே பிரிவினைக்குணத்திற்கு இடமளிக்கும் ஒன்று. காயீன் ஆபேலைக் கொலை செய்துவிட்டு, குடும்பத்திலிருந்த மற்றவர்களை விட்டுபிரிந்து போனான். யாக்கோபு மற்றும் ஏசா பிரிந்தார்கள். யோசேப்பின் சகோதரர்கள் அவரை அடிமையாக விற்றுப் போட்டார்கள். எகிப்தியர் இஸ்ரவேலரை அடிமைப்படுத்தினார்கள். மிகப் பெரிய சமய எதிர்ப்பு யாத்திராகமம் 32ம் விரிவாக குறிப்பிடப்படுகிறது. இஸ்ரவேலரில்

அநேகர் பொன்கன்றுக்குட்டியை வணங்கினார்கள்; ஆனால் அவர்களில் சிலராகிய - லேவியர்கள் - விசுவாச எதிர்ப்பிற்கு தலைமை வகித்தவர்களை தண்டிக்கும்படி அழைக்கப் பட்டார்கள். தாவீதின் நாட்களில், அப்சலோம் தனது தகப்பனுடைய இராஜ்யத்தை எடுத்துக்கொள்ளும் பொருட்டு அநேகஜனங்களை தன்வசப்படுத்தினான். சாலொமோனின் மரணத்திற்குப்பிறகு ஒன்றுபட்டிருந்த இராஜ்யம் இரண்டாக பிளவுபட்டது. பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் தேவனுடைய மக்களின் வரவாற்றில், சமுதாய யுத்தங்கள், அமைதியின்மை மற்றும் பிரிவினைகள் நிறைந்ததாக இருந்தது.

தேசீய வரலாற்றிலும் தனி வரலாற்றிலும் ஜனங்கள் பிரிவினைகளை ஏற்படுத்திக் கொள்ளும் தன்மையுடையவர்கள் என்ற முடிவை மீண்டும் வலியுறுத்துகின்றன. தேசங்கள் மற்ற தேசங்களுடன் போரிடுகின்றன, நாடுகள் சமுதாயச்சண்டைகளைச் சந்திக்கின்றன; வித்தியாசப்பட்ட மதம் சார்ந்த துணைக்குழுக்கள், சிலவகுப்பினர் மற்றும் ஜாதியினர் சமாதானத்தோடு ஒன்று சேர்ந்து வாழ மறுக்கின்றனர். அரசியல்கட்சிகள் சொல்லாலும் செயலாலும், சில வேளைகளில் சரீரக்காரியங்களிலும் முரண்படுகின்றனர், உள்பூசல்களினால் சமுதாயங்கள் பிளவுபடுகின்றனர் ஒரே வியாபாரத்தில் பணியாற்றும் மக்கள் சிறு சிறு உட்(பிரிவு) குழுக்களை ஏற்படுத்திக் கொண்டு பேதகங்களோடு சண்டையிடுகின்றனர். பிரிவினைகளாகிய பிரச்சனைகள் உள்ள இடம் நிச்சயமாக சபை மட்டுமல்ல.

ஜனங்கள் பிரிவினை எண்ணம் உடையவர்களாயிருக்க காரணம் என்ன? பேராசை, அளவுக்கு மிஞ்சிய பொருளாசை, பெருமை, பொறாமை, சுயநலம், அறியாமை, மற்றும் பகைமை ஆகியவை உலகில் இருக்கும் பரியந்தம், ஜனங்களின் நட்புறவு முறையில் சாபத்தீடான பிரிவினை இருக்கவே செய்யும். *சபையில் பிரிவினைகள் ஏற்படும்பொழுது, சபைமக்கள் உலகத்தாரைப்போல் நடந்து கொள்கின்றனர்!* கொரிந்துவிலிருந்த சகோதரர்கள் தங்களுடைய உலகப்பிரகாரமான குணாதிசயங்களைவிட வேண்டியவர்களாயிருந்தனர் (குழந்தைத்தனமான நடத்தைகள், 1 கொரிந்தியர் 3:1-3 ஐக்காண்க) "தெய்வீக தன்மையைத்" தரித்துக்கொள்ள வேண்டியவர்களாயிருந்தனர் (2 பேதுரு 1:4).

பிரிவினைக்கான நிவாரணி

சபை பிரிவினைகளைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகவே 1 கொரிந்தியர் நிருபத்தின் பெரும்பகுதி எழுதப்பட்டது. இந்தப் பிரச்சனையைத்தீர்க்க என்ன செய்யக் கூடும்?

முதலாவதாக, மனிதனை அல்ல, கிறிஸ்துவை மட்டும் பின்பற்றவேண்டும். மனிதர்களைப் பின்பற்றுவதே கொரிந்துபட்டணத்து கிறிஸ்தவர்களின் பிரச்சனை (1:12). வெகு அதிகமான (உள்ளூர்) சபைகள் மனிதர்களைப் பற்றுவதினாலேயே பிரிவினைகளைக் கொண்டுள்ளன.

இரண்டாவதாக, கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் பிரசங்கிக்கவேண்டும். கொரிந்துவில் பவுல் அதைத்தான் செய்தார் (2:1-4). தேவஞானத்தை ஏற்றுக்கொள்வது என்பது, ஆவியானவர் ஏவி எழுதிய அவருடைய வசனத்தை ஏற்றுக்கொள்வது (2:12, 13).

மூன்றாவதாக, வளருங்கள்! (3:1-4 ஐ காண்க.) மனிதர்களைப் பின்பற்றி பிரிவினையுடையோராய் நாம் இருக்கும் போது, நாம் ஆவிக்குரிய

குழந்தைகளைப் போல் நடந்து கொள்கிறோம். அப்படிப்பட்ட எண்ணங்கள் மாம்சத்துக்குரியதும் - உலகத்தாரைப் போன்றதுமாகும்.

நான்காவதாக, நமது சச்சரவுகள் நமக்குள்ளாகவே இருக்கட்டும். கொரிந்து சபையிலிருந்த பிரச்சனைகளில், சகோதரர்கள் ஒருவருக்கொருவர் வழக்காடும்படி அநீதிக்காரனிடத்தில் போனதும் ஒன்று (6:1-8). இப்படிச் செய்வதற்குப் பதிலாக வழக்குகளைத் தீர்க்க அவர்களுக்குள் இருக்கிற ஒரு “விவேகி” யினிடத்தில் அவர்கள் கேட்டிருக்கலாம் என்று பவுல் சொன்னார் (6:5). சகோதரனுக்கு விரோதமாக வழக்காடு மன்றத்தை நாடுவதை விட அநியாயத்தை பொறுத்துக் கொள்வது சிறந்தது என்றும் மேலும் குறிப்பிடுகிறார் (6:7). அதே போல நாமும் நமது வழக்குகளை நமக்குள் தீர்த்துக் கொள்ள வேண்டும். நமது முன்னோடிகளை நாம் நம்ப வேண்டும், நம்முடைய சகோதரர்களை நாம் நேசிக்க வேண்டும், நமது சொந்த உரிமைகளையும், சலுகைகளையும் உலகப் பொருள்களையும் விட சபையையும் கிறிஸ்துவின் மகிமையையும் அதிகமாக மதிப்பிட வேண்டும்.

ஐந்தாவதாக, கிறிஸ்தவ சுயாதினத்தை தவறாகப் பயன்படுத்தாதிருங்கள். அதிகாரங்கள் 8-10ல், விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளை புசிக்கிற விஷயங்களின் மீது பவுல் கவனம் செலுத்துகிறார். விக்கிரகமானது ஒன்றுமில்லை என்று சொன்னார்; ஆதலால் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகள் கிறிஸ்தவர்களுக்கு சட்டரீதியான உணவு, ஆயினும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த விஷயத்தில் அறிவு பெற்றவனாக இருப்பதில்லை. விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட மாமிசத்தை உடன் சகோதரன் ஒருவன் உண்ணக் கண்டால் தானும் அப்படிச் செய்ய சோதிக்கப் படக்கூடும்; அப்படிச் செய்யும் போது, அவர்களின் மனச்சாட்சி அவர்களுக்கு இடறலை ஏற்படுத்தும் (1 கொரிந்தியர் 8:7-13). விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசிக்கிற கிறிஸ்தவர்களினிமித்தம் அவர்கள் பாவஞ்செய்ய ஏதுவாகும். இந்த சூழ்நிலையிலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்ன? ஒற்றுமையை காக்க சிலவேளைகளில் நமது உரிமைகளையும் கூடவிட்டுக் கொடுக்க வேண்டிதாயிருக்கலாம். நாம் பவுலைப் போன்ற எண்ணமுடையவர்களாயிருக்க வேண்டும்: 8:13ல் அவர் மாமிசம் புசிப்பது ஒரு சகோதரனுக்கு இடறலாயிருப்பின், என்றைக்கும் தான் மாமிசம் புசியாமலிருப்பார் என்று குறிப்பிடுகிறார்.

ஆறாவதாக, மற்றவர்களுடன் ஐக்கியப்பட்டு ஒன்றாக ஆராதிப்பதை குறித்து நினைத்துப் பாருங்கள். அதிகாரம் 11ல் பவுல் கொரிந்தியருடன் விவாதிக்கும் ஒரு பிரச்சனை ஐக்கியமாக விருந்திலே பங்கேற்பதைப் பற்றியது. ஒருவருக்காகவும் காத்திராமலும், அவரவர் தங்களுக் கென்று கொண்டு வந்த உணவைப் புசித்தனர். அதன் விளைவாக பலர் திருப்தி அடைந்தார்கள், மற்றவர்கள் பசியுடன் இருந்தனர் (11:21). அதிகாரம் 14ல் அந்நிய பாஷை பேசும் வரங்களைப் பயன்படுத்திய விதத்தில் குறிப்பிட்ட குழப்பம் ஆராதனையில் ஏற்பட்டதைக் குறித்து பவுல் போதித்தார். ஆவிக்குரிய வரங்களாகிய அந்நிய பாஷை மற்றும் தீர்க்கதரிசன வரத்தைப் பயன்படுத்துவது குறித்து அவர் போதனை கொடுத்தார். சபை கூடிவரும் போது எல்லாரும் பக்தி விருத்தியடைய வேண்டும் அல்லது கட்டப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். 14:40ல் எல்லாம் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப் படக் கடவது என்று முடிவுரையாகக் குறிப்பிட்டார். நாம் கூடிவரும் போது மற்றவர்களைக் குறித்தும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஏழாவதாக, தேவன் கொடுத்த வரங்களைக் கொண்டு பொறாமை கொள்ளாமலும் சகோதரர்களைத் தாழ்ச்சியாய்ப் பாராமலும் பயன்படுத்த வேண்டும். அதிகாரம் 12ல் கர்த்தர் கொடுத்த ஆவிக்குரிய வரங்களைக் குறித்து கொரிந்து கிறிஸ்தவர்கள் முணுமுணுத்து அமளிபண்ணினர். சிலர் மற்றவர்களுக்கு இருந்த வரங்களைக் குறித்து பொறாமை கொண்டு தங்களுக் கென்று கொடுக்கப்பட்ட வரங்கள் ஒன்றுமில்லை என்றும் கருதினர். சிலர் தங்களுக்கு இருந்த வரங்களைக் குறித்து பெருமை பாராட்டினர், ஆதலால் மற்றவர்களை மட்டமாகப்பார்த்து, அவர்கள் தங்களைக் காட்டிலும் தாழ்வான வரங்களைப் பெற்றிருந்ததைப் போல் பார்த்தனர். ஆவிக்குரிய அனைத்து வரங்களுமே அவசியமானதும் பயனுள்ளதுமாகும் என்று பவுல் குறிப்பிட்டார். இன்று ஒன்றுபட்டிருக்க, சபை அங்கத்தினர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்து (திறமை)களை தேவனுடைய மகிமைக் கென்றும் சபையின் உபயோகத்திற்கென்றும் எவ்வித முறுமுறுப்பும், பொறாமையுமின்றி பயன்படுத்த வேண்டும்.

எட்டாவதாக, அன்பை வலியுறுத்துங்கள். ஆவிக்குரிய வரங்களை பவுல் விவாதித்துக் கொண்டிருக்கையில், இடையில் நிறுத்தி, அன்பே மேன்மையான வரம் என்பதைக் குறிப்பிட்டார் (அதிகாரம் 13). 1 கொரிந்தியரில் விவாதிக்கப்படும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் அன்பே சரியான நிவாரணம் என்று கூறப்பட்டது.

ஒன்பதாவதாக, சுவிசேஷத்திற்கு அடிப்படையாய்க் காணுகிற உபதேசத்தை பிடித்துக் கொள்ளுங்கள். அதிகாரம் 15ல் மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்த உபதேசத்தை பவுல் எழுதினார். ஏனென்றால் சில சபையார் மரித்தோர் உயிர்த்தெழுதலை மறுத்தனர். கொரிந்தியர்கள் சுவிசேஷத்தின் சாராம்சங்களை பற்றிக் கொண்டிருக்க வேண்டியவர்கள். அதேபோல, நமது ஐக்கியத்துக்காக தேவனுடைய வசனத்தின் சாராம்சங்களை எப்போதும் விட்டுவிடக் கூடாது.

பத்தாவதாக, மற்றவர்களுக்கு உதவிசெய்கிற காரியங்களில் எப்பொழுதும் ஒன்றிணைந்து பங்கேற்றுக் கொள்ளுங்கள். அதிகாரம் 16ல், எருசலேமில் இருக்கிற ஏழை பரிசுத்தவான்களுக்கு உதவி செய்ய அவர்கள் எப்படித் தங்களை ஆயத்தப்படுத்த வேண்டும் என்பதை சகோதரர்களுக்கு பவுல் சொன்னார். பவுல் அங்கு வரும் போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு வாரத்தின் முதல்நாள் தோறும் அவர்கள் கொடுக்கும்படி கூறப்பட்டனர் (16:1, 2). இந்த வசனப் பகுதி அவரவர் அங்கம் வகிக்கும் உள்ளூர் சபையைக் குறித்து அக்கரை கொள்வதை மட்டும் குறிப்பிடாமல், அருகிலும் தொலைவிலும் காணப்படும் சகோதர (உள்ளூர்) சபைகளுடன் கொண்டிருக்க வேண்டிய ஐக்கியத்தையும் பேசுகிறது.

முடிவுரை

1 கொரிந்தியரில் பவுல் குறிப்பிடுகிற பிரிவினையாகிய பிரச்சனைகளுக்கான நிவாரணத்தை நாம் எப்படிச் சுருக்கமாகக் காணலாம்? மீட்டமைக்கும் இயக்கம் ஆரம்பக் கட்டத்தில் அடிக்கடி பயன்படுத்திய குறிக்கோளை ஒரு வேளை நாமும் தொடர்ந்து பயன்படுத்தலாம்.

> தேவையானவற்றில், ஐக்கியம்.
> சூழ்நிலைகேற்ற விஷயங்களில், சுயாதீனம்.

எல்லாவற்றிலும், நேசம் (அல்லது அன்பு).

மேற்குறித்த குறிக்கோள்களில் முதலாவது வாக்கியத்தை கைக்கொள்ள, கிறிஸ்தவ விசுவாசத்தின் சிலகருத்துக்களோடு சமரசம் செய்ய இயலாது. ஒரே காரியத்தை விசுவாசிக்கவும் போதிக்கவும் வேண்டும் என்று அவர் கொரிந்தியர்களிடம் விரும்பினார் (1:10). "கிறிஸ்துவையும் அவர் சிலுவையிலறையப்பட்டதையும்" பிரசங்கிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்துகிறார் (2:2). சில கொரிந்து சபையினர் மரித்தோர் உயிர்த்தெழுதலை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும்,அது குறித்த உண்மையான கருத்துக்களை பவுல் வலியுறுத்தினார் (அதிகாரம் 15) இருப்பினும் கூட, ஐக்கியத்தை தேடுவதில் சத்தியத்தை ஒரு போதும் தியாகம் செய்துவிடக் கூடாது. சத்தியத்திற்கென நாம் உறுதியாய் நிற்போமாகில், சத்தியத்தைப் புறக்கணிந்து நம்மை விட்டு போய்விட மனதுள்ளவர்களை- நமது பாரமான இருதயத்தோடு - அவர்களை போக விட வேண்டியதுதான். "பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக" அவசியமான உபதேசக் கோட்பாட்டில் ஒற்றுமை ஏற்படும்போது தான் ஐக்கியம் உருவாகிறது (யூதா 3; எபேசியர் 4:4-6க் காண்க).

பவுல் மேலே குறிப்பிட்ட இரண்டாவது குறிக்கோளின் வாக்கியத்தையும் பரிந்துரைக்கிறார், அவர் கிறிஸ்தவ நடைமுறைக் காரியங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் சுயாதீனம் பற்றி குறிப்பிட்டார். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைப் புசிக்க சுயாதீனம் பெற்றிருந்தனர். இன்று, நமது விசுவாசக் காரியங்களுக்கும் அவைகளை நடைமுறைப் படுத்தும் விஷயங்களுக்கும் உரிய ஒவ்வொரு செயலுக்கும் கர்த்தர் விளக்கமளிக்க வில்லை என்பதை நாம் என்றைக்கும் மறக்கக்கூடாது. சூழ்நிலைக்கேற்ற நிலைமைகளை நாம் அறிவோம்; அந்த வரையறைக்குள், நாம் அல்லது நாம் ஊழியம் செய்யும் சபை முடிவெடுத்துக் கொள்ள சுயாதீனம் பெற்றிருக்கிறோம். இந்தப் பகுதியை பொறுத்த மட்டில், நாம் ஒவ்வொருவரும் அவரவர் பார்வைக் கேற்றவாறு தெரிந்து கொள்ள சுயாதீனத்தை அனுமதிக்க வேண்டும்.

முன் குறிப்பிட்ட குறிக்கோளின் மூன்றாவது வாக்கியத்தை பவுல் தொடங்கிவைப்பதற்காக பவுலுக்கு பாராட்டைத் தெரிவிக்க வேண்டும். "எல்லாவற்றிலும் நேசம் (அல்லது அன்பு)." மற்றெல்லாவற்றிலும் அன்பே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று பவுல் குறிப்பிட்டார் (அதிகாரம் 13).

நாம் ஒற்றுமையாக இருப்பின், பவுலின் சிபாரிசை நாம் ஏற்றுக்கொள்வது அவசியம். முதலாவதாக, நாம் கிறிஸ்தவ மார்க்கத்தின் பெரிய சத்தியத்துடன் ஐக்கியம் கொண்டு, தேவனுடைய வசனத்தில் போதிக்கப்பட்டதுபோல் விசுவாசக் கோட்பாட்டின் அவசியமானவைகளில் ஒன்றிணைந்து உறுதியாய் நிற்க வேண்டும். இரண்டாவதாக, சூழ்நிலைக்கேற்ற விஷயங்களில் எது சரியானதாக நாம் எண்ணுகிறோமோ அதை செயல் படுத்த ஒருவருக்கு ஒருவர் சுயாதீனம் பெற அனுமதிக்கப்பட வேண்டும். வேதம் என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பாகச் சொல்லாத பட்சத்தில் இந்த அனுமதி நமக்கு உண்டு. மூன்றாவதாக, ஒவ்வொரு பகுதிலும் ஒருவருக்கொருவர் நமது அன்பை விளங்கப்பண்ண வேண்டும்! இந்த மூன்று நடைமுறைகளையும் பின்பற்றுவோமாகில், பவுல்

போதித்தபடி, நாம் "எல்லாவற்றிலும் ஒத்துப்போவோம்." நமக்குள் பிரிவினைகள் வராது; நாம் "ஒரே காரியத்தை பேசி ஏகமனதும் ஏக சிந்தையும் உள்ளவர்களாக பூரணமாக சீர்பொருந்தியிருப்போம்" (1:10).

குறிப்புகள்

[1]புத்தகம் முழுவதிலும் யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையேயான உறவுமுறை குறித்து வலியுறுத்தப்படுகிறது.

பிரசங்கம் 2

இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்ட அவர்

[1 கொரிந்தியர் 2:1, 2]

பவுல் கொரிந்துப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்த பொழுது "பலவீனத்தோடும், பயத்தோடும், நடுக்கத்தோடும்" இருந்தார் (1 கொரிந்தியர் 2:3). அவருடைய உணர்வுகள் புரிந்துக் கொள்ளக் கூடியதே. துரோவாவைவிட்டு, மக்கதோனியாவுக்கு கடந்துவந்த பொழுது (16:8-12), சில வெற்றிகளையும், எண்ணிமுடியாத பின்னடைவுகளை கிரேக்கருக்கு[1] பிரசங்கம் பண்ணும்படியான முயற்சிகளில் கண்டார். பிலிப்பியிலே அவர் சிறையிலே அடைக்கப்பட்டு அடிக்கப்பட்டார் (நடபடிகள் 16:22-40), யூதர்களால் தெசலோனிக்கேயாவில் துன்புறுத்தப்பட்டார் (நடபடிகள் 17:5-9) பெரோயாவிலும் (நடபடிகள் 17:13, 14) அப்படியே துன்புறுத்தப்பட்டு, இயேசு கிறிஸ்துவை தேவன் உயிர்த்தெழப் பண்ணினார் என்ற உண்மையை அத்தேனியர்களை ஏற்றுக் கொள்ளச்செய்வதில் சிறிய அளவு வெற்றியைக் கண்டார் (நடபடிகள் 17:31-34). பின்னர் அவர் செல்வச் செழிப்பு மிக்க பட்டணமான கொரிந்துவில் நுழைந்தார் - அது ஒரு வேளை இன்றைய நியூயார்க் பட்டணத்தைப் போன்றது. இந்த வர்த்தகப் பட்டணம் வெகு காலமாக அக்கிரமச் செயல்களுக்கு பேர் பெற்ற பட்டணமாயிருந்தது. பவுல் பயப்பட்டதில் ஆச்சரியமில்லை![2]

அப்படிப்பட்டச் சூழ்நிலைகளில் அவர் என்ன செய்தார்? ஒரு பிரசங்கியாராக, கிறிஸ்துவின் செய்தியோடு கொரிந்தியர்களை அடைய அவர் என்ன திட்டம் பண்ணினார்?

1 கொரிந்தியர் 2:1, 2ல், சொல்லுகிறார்: "சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்."

கொரிந்துவில் மட்டும் தனது ஊழியத்திற்காக பவுல் எடுத்த புதிய தீர்மானமல்ல இது. அவர்எங்குச் சென்றாலும், கூடிவரும் கூட்டத்தார் சிறப்பாகப் புரிந்து கொண்ட அதே செய்தியை எடுத்துக் கொண்டு பிரசங்கித்தார்.[3] மனமாற்றம் பெற்றவுடனே, ஜெப ஆலயங்களில் இயேசுவை அறிவித்து, அவரே தேவனுடைய குமாரன் என்று சொல்லியும் (நடபடிகள் 9:20). அவர் தான் கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்தினார். அவர் பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவிலிருந்த ஜெப ஆலயத்தில் அவர் பிரசங்கித்தபோது, (நடபடிகள் 9:22) கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டதையும் மரித்தோரிலிருந்து அவர் எழுந்ததையும் பிரசங்கித்தார் (நடபடிகள் 13:26-41). தெசலோனிக்கேயில் அவர்

பிரசங்கித்தபோது, "கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும்," அந்த இயேசுவே கிறிஸ்து என்றும் பிரசங்கித்தார் (நடபடிகள் 17:3). மார்ஸ்மேடையில் கிரேக்க தத்துவ ஞானிகளிடம், இயேசு கிறிஸ்துவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று பிரசங்கித்தார் (நடபடிகள் 17:30, 31). ஆகையால், கொரிந்துப் பட்டணத்துக்கு பயணம் பண்ணிப்போய் பெரிய பட்டணமாகிய அங்கிருந்த ஜனங்களை அடைய உபத்திரவங்களைச் சந்தித்தார்; எப்பொழுதும் போல தீர்மானித்தவராய்: கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையே பிரசங்கித்தார்.

நாம் அவரது முன் மாதிரியை பின்பற்ற வேண்டியவர்கள். நாம் எங்கு பிரசங்கித்தாலும், அங்கு கூடிவரும் கூட்டம் எப்படிப் பட்டதாயிருப்பினும், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பற்றியே பிரசங்கிக்கவேண்டும். நான் அநேகமாநிலங்களிலும் அநேக வெளிநாடுகளான - கனடா, ஆஸ்திரேலியா, தைவான், போலந்து, வங்காளதேசம், மற்றும் நியூஸிலாந்து போன்ற நாடுகளில் பிரசங்கித்திருக்கிறேன் - ஆனால் எனதுசெய்தி எப்போதும் பவுலைப் போன்று: "கிறிஸ்து, மற்றும் சிலுவையில் அறையப்பட்ட அவரையே" பிரசங்கிப்பேன்.

கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்

"கிறிஸ்துவை, மற்றும் சிலுவையில் அறையப்பட்ட அவரையே" பிரசங்கிப்பது என்றால் என்ன? முதலில், நாம் கிறிஸ்துவைப் பிரசங்கிக்க வேண்டும்!

அவருடைய ஜீவிய வரலாறைச் சொல்லுங்கள்

கிறிஸ்துவைப் பிரசங்கிப்பது என்பது அவருடைய வாழ்க்கை வரலாறைக் கூறுவது. அவர் கன்னிகையாகிய மரியாளிடத்தில் பிறந்தார் (மத்தேயு 1:18-21) அவர் தனது பன்னிரண்டாவது வயதில் தனது பெற்றோருடன் எருசலேம் சென்றது, தேவாலயத்து மதகுருமார்கள் வியக்கத்தக்க உரையாடியதையும் கூறுங்கள் (லூக்கா 2:41-52). அவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்தில் மரியாளுக்கும் தச்சனாகிய யோசேப்புக்கும் மகனாக வளர்ந்தார்; அவருக்குச் சகோதரர்களும் சகோதரிகளும் இருந்தார்கள், அவர்தாமே தச்சனானார் (மாற்கு 6:3). அவர் ஒரு முழுமனுஷீகமுள்ளவராய் "நம்மைப்போல் எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டார், இருந்தும் பாவமில்லாதவராய் இருந்தார்" (எபிரேயர் 4:15). அவர் மனுஷனாக இருந்தும் பாவமில்லாதவராக வாழ்ந்தார்.

தமது முப்பதாவது வயதில், தமது ஒன்றுவிட்ட சகோதரனாகிய யோவான் ஸ்நானகனிடத்தில் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார் (மத்தேயு 3:13-17). அவர் வனாந்தரத்தில் பிசாசினாலே நாற்பது நாளளவும் சோதிக்கப்பட்டார், ஆகிலும் சோதனையில் விழாமல் அதை மறுதலித்தார் (மத்தேயு 4:1-11). அவர் பன்னிரண்டு மனுஷர்களைத் தமக்கு அப்போஸ்தலராக இருக்கும் பொருட்டு தெரிந்தெடுத்து, தம்மோடே கூட பயணிக்கவும், தம்மிடத்தில் கற்றுக்கொள்ளவும், தமது வார்த்தைகளை மற்றவர்களுக்குப் போய் போதிக்கவும் ஒழுங்கு படுத்தினார் (மத்தேயு 4:18-22; மாற்கு 3:13-19). இயேசு மூன்றாண்டு கால ஊழியத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, வியாதியஸ்தர்களைக் குணமாக்கவும், பிசாசுகளை விரட்டவும், ஜனங்களுக்குப் போதிக்கவும் தமது நேரத்தைச் செலவிட்டார். அவர் திரளான ஜனங்களுக்கும்

தமது சீஷர்களுக்கும் போதித்தார் (மத்தேயு 9:35). கொர்நெலியு வீட்டாரிடத்தில் பேசும்போது இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தை சுருக்கமாகச் சொல்லுவதாவது: "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்"; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார் (நடபடிகள் 10:38).

இயேசு உரிமைகோரிய காரியங்களினிமித்தம் அவர் மீது கோபமுற்ற யூதர்களின் தூண்டுதல் பேரில், ரோமர் வெற்றிகரமாக அவரை கொலைசெய்து, அவர் மரித்ததுடன் இயேசுவின் (பூமிக்குரிய) ஊழியம் முடிவுற்றது. அவருடைய மரணத்தைத் தொடர்ந்து அவர் மகிமையடையவுமான சம்பவங்கள் நிகழ்ந்தன (நடபடிகள் 2:32-36). அவர் பரமேறிச் செல்வதற்கு முன், தமது பிரதானக் கட்டளையில் "புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" என்று சொன்னார் (மத்தேயு 28:19).

அவரது வாழ்க்கை வரலாறை அறிந்து கொள்ளும் போது, நாம் அவரை பின்பற்றும்படியாக உந்தப்படுகிறோம். இரக்கமுள்ள ஒருவரது அழைப்பை ஏற்காமல் ஒருமனிதன் எப்படி புறக்கணிக்க முடியும் (மத்தேயு 11:28-30)? அதோடு கூட "அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லும்படி," உற்சாகப் படுத்த வேண்டும் (1 பேதுரு 2:21).

அவர் தேவனுடைய குமாரனென்றும் மனுக்குலத்தின் இரட்சகர் என்றும் அறிவியுங்கள்

கிறிஸ்துவை பிரசங்கிப்பது அவர் தேவனுடைய குமாரன் என்றும் மனுக்குலத்திற்கான ஒரே ஒரு இரட்சகர் என்றும் அறிவிப்பதையும் கொண்டுள்ளது. அவர் தேவனுடைய குமாரன் என்று சுட்டிக்காட்டும்படி அவரது அற்புதங்கள் அடையாளமாக்கப்பட்டன (யோவான் 20:30, 31). தேவன் தாமே இயேசுவைத் தமது குமாரனென்று அடையாளப் படுத்தினார் (மத்தேயு 3:17; 17:5). பேதுரு அவரை அறிக்கையிட்டு, "ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகியகிறிஸ்து" என்று சொன்னான் (மத்தேயு 16:16), இரட்சிக்கப்பட ஜனங்கள் இயேசுவை கர்த்தர் என்று அறிக்கை செய்ய வேண்டும் (ரோமர் 10:9). இப்படி அநேகர் அறிக்கையிட்டனர் (உதாரணமாக, யோவான் 1:49ஐக் காண்க). இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்று சொல்லி தாம் தெய்வீகமானவர் என உரிமை கொண்டாடினார் (யோவான் 10:33-36; மற்றும் 8:24, 58ஐயும் காண்க). அவருடைய உயிர்த்தெழுதல் அவருடைய தெய்வீகத்திற்கு ஒரு முழுமையான ஆதாரம் (நடபடிகள் 2:32-36; ரோமர் 1:4). இயேசு ஒரு நல்ல மனிதர் என்றும், ஆகிலும் அவர் தெய்வமல்ல என்று கூறும் எந்த ஒரு கண்ணோட்டமும் இயேசு கிறிஸ்துவைக் குறித்துத் திருமறை கூறும் கண்ணோட்டத்தில் வீழ்ச்சியடைந்ததே.

இயேசு கிறிஸ்துவை பிரசங்கிப்பதில், நாமும் கூட அவரே இரட்சகர் மனிதக்குலத்துக்கான ஒரே நம்பிக்கை என்பதை முன் வைக்க வேண்டும். பேதுருவைப் போல நாமும், "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின்கீழெங்கும் அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவுமில்லை" (நடபடிகள் 4:12) என்று சொல்ல வேண்டும். தேவனிடத்தில் போக ஒரே வழி அவர்தான்

என்பதை நாமும் உணர்த்த வேண்டும் (யோவான் 14:6).

அவரை கர்த்தர் என்று முன்வையுங்கள்

இயேசுவை தேவனுடைய குமாரனென்றும் அவர் நம்முடைய இரட்சகர் என்றும் அறிவிப்பதோடு, அவரைக் கர்த்தர் என்றும் நாம் முன்வைத்து பிரசங்கிக்க வேண்டும். "இயேசுவை தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்" என்று (நடபடிகள் 2:36). பேதுரு அறிவித்தார் (ரோமர் 10:9).

"கர்த்தர்" எனும் தலைப்பு எதை ஆலோசனையாகக் கூறுகிறது? இயேசுவின் தெய்வீகத்தைச் சுட்டிக் காட்டுவதற்கு அடுத்து (யோவான் 20:28), "கர்த்தர்" எனும் வார்த்தை இயேசுவின் மாட்சிமையையும், அவருடைய அதிகாரத்தையும், அவரது எஜமானரும் ஆளுகை செய்பவருமாயிருக்கிறார் என்று அது குறிப்பிடுகிறது. "தேவன் தமக்கு" "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் கொடுத்திருப்பதாக" இயேசு சொன்னார் (மத்தேயு 28:18; 7:28, 29யும் காண்க). அவர் தமது இராஜ்யத்தின் இராஜா (யோவான் 28:36, 37) சபைத் தலையாயுமிருக்கிறார். தேவன் "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, ... நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபேசியர் 1:22, 23).

இயேசு தாம் அன்புகூருகிற தமது சரீரமாகிய சபைக்குத் தலையாயிருக்கிறார், அதற்காகவே அவர் மரித்தார் (எபேசியர் 5:25). கிறிஸ்துவை பிரசங்கிக்கிற நாமும் அவருடைய பிரியமான சரீரமாகிய சபையைக் குறித்து பிரசங்கிக்க வேண்டும். மேலும் புதிய ஏற்பாட்டின் மூலமாக, சபைக்கான வழிகாட்டலை கொடுக்கும் படிக்கும் - சபைக்கு அவரே ஆண்டவராக இருக்கத்தக்கதாகவும் சபையின் ஆராதனை, ஆளுகை அமைப்பு, அதன் உபதேசக்கோட்பாடுகள் அனைத்துக்கும் அவருடைய வழிகாட்டலுக்கு இடமளிக்க வேண்டும். கிறிஸ்துவே இரட்சகராக இருக்கிறபடியினாலே, நாம் அவருடைய அதிகாரத்தையும், உபதேசத்தையும் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்; புதிய ஏற்பாடு போதிப்பதை நாம் செய்ய வேண்டும்!

மேலும், சபையின் தனிப்பட்ட அங்கத்தினர்களாய் இருக்கும் நாம், கிறிஸ்துவை நமது வாழ்க்கைக்கும் ஆண்டவராக ஏற்றுக்கொள்ள வேண்டும். "கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற இடத்திலுள்ள மேலானவைகளையே தேடவேண்டும்" (கொலோசெயர் 3:1). கிறிஸ்துவின் சித்தத்திற்கேற்ப வாழ்வதே கிறிஸ்துவின் அதிகாரத்துக்குக் கீழ் வாழ்வதாகும். இன்னொரு வார்த்தையில் சொன்னால், கிறிஸ்துவை கர்த்தர் என்று பிரசங்கிப்பது சபையும் தனிப்பட்ட கிறிஸ்தவர்களும் கர்த்தரான கிறிஸ்து எதைச் செய்ய சொல்லுகிறாரோ அதைப் போதிக்க வேண்டும்.

அவரை வருகிற நியாயாதிபதியாக அறிவியுங்கள்

கிறிஸ்து மறுபடியும் வருகிறார்என்றும், அவர் வரும்போது மனித வர்க்கத்தை நியாயந்தீர்ப்பார் என்றும் நாம் அறிவிக்க வேண்டும். இயேசு பரமேறி பரலோகத்தில் மகிமையடைந்ததுடன் அவரது வரலாறு முடிவடைய வில்லை. அவர் மறுபடியும் வருகிறார் (நடபடிகள் 1:11)! எனவே கிறிஸ்து மறுபடி வருகிறார் என்பதை மறுதலிக்கும் எந்த உபதேசமும், அவருடைய மார்க்கத்துக்கு எதிரான கொள்கை.

இயேசு மறுபடியும் வரும்போது, உலகத்தை நியாயந்தீர்ப்பார் (நடபடிகள் 17:31; மத்தேயு 25:31-46), அப்பொழுது "தேவனை அறியாதவர்களுக்கும், ... சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும்" நீதியுள்ள ஆக்கினையை செலுத்துவார் (2 தெசலோனிக்கேயர் 1:7-9; KJV). கிறிஸ்துவும் இரண்டாம் வருகையும் அவருடைய நியாயாதிபதி ஸ்தானமும் புதிய ஏற்பாட்டின் (ஆரம்ப) நாட்களிலிருந்த பாவிகளுக்கும் பரிசுத்தவான்களுக்கும் பிரசங்கிக்கப் பட்டது. உதாரணமாக, பவுல் பேலிக்ஸினிடத்தில் பேசியபோது, "நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத் தீர்ப்பையுங் குறித்து பேசினான்" (நடபடிகள் 24:25; மற்றும் நடபடிகள் 17:30, 31யும் காண்க). இதன் விளைவாக "பேலிக்ஸ் பயந்தான்." பாவிகள், கிறிஸ்துவின் நியாயஸ்தலத்துக்கு முன்பாக தோன்ற வேண்டியதைக் குறித்து பயப்பட வேண்டும். எப்படியாயினும், விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய வருகையைக் குறித்து பயப்பட வேண்டியதில்லை; அது அவர்களின் இரட்சிப்புக்கான நாள் (எபிரேயர் 9:28)! கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்கள் அவருடைய வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கலாம் (2 தீமோத்தேயு 4:7, 8) இயேசுவே வாரும் என்று நேர்மையாய்ச் சொல்லலாம் (வெளிப்படுத்தின விசேஷம் 22:20; 1 கொரிந்தியர் 16:22 யும் காண்க[4]). இயேசுவை நமது நியாயாதிபதியாக சித்தரித்துக் காட்டாத எந்த வார்த்தையும் முழுமையடையாததும், நடக்காததுமானவை.

கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டதை பிரசங்கித்தல்

பவுல் கொரிந்துவில் கிறிஸ்துவை மட்டும் பிரசங்கிக்காமல் "கிறிஸ்து ... சிலுவையில் அறையப் பட்டதையும்" பிரசங்கித்ததாகக் குறிப்பிடுகிறார். நாம் பவுலை பின்பற்றுகிறவர்களாயிருந்தால், கிறிஸ்துவின் மரணத்தையும் அறிவிக்கிறவர்களாக நாம் இருக்க வேண்டும். "கிறிஸ்து ... சிலுவையில் அறையப் பட்டதை" பிரசங்கிப்பது என்றால் என்ன (1:23)?

சிலுவைச் செய்தியைச் சொல்லுங்கள்

ஆதியிலிருந்தே, கிறிஸ்துவின் மரணத்தின் சிறப்பை அநேகர் புரிந்து கொள்ளவில்லை. அவருடைய மரணத்தினாலேயன்றி, நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்குவேறே எதுவுமில்லை.

பைத்தியமாய்த் தோன்றும் செய்தியல்ல. முதல் நூற்றாண்டில் செய்திகளைக் கேட்டவர்கள் சிலுவையைப் பற்றிய உபதேசத்தை மதியீனமாய்க் கருதினார்கள் (1 கொரிந்தியர் 1:23). சிலுவையில் அறையப்படும் மனுஷன் - நியாயப்பிரமாணத்தின்படி சபிக்கப்பட்டவனாயிருப்பான் என்பதால் - கிறிஸ்துவும் அப்படியே எனும் நினைவில் யூதர்கள் இடறலடைந்தார்கள். சிலுவையில் அறையப் பட்டவரை இரட்சகர் என்று போதிப்பதை பைத்தியமாய்க் கண்டார்கள். சிலுவையைப் பற்றிய உபதேசம் இன்றைய மக்களுக்கும் அறிவுப்பூர்வமானதாய்த் தெரியவில்லை. அவர்கள் ஆச்சரியப்பட்டு, "இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு மரித்த ஒரு மனிதனின் மரணம் எனக்கு என்ன செய்யக் கூடும்" என்றனர்.

எப்படியாயினும், மனிதனின் மனதுக்கு புத்தியீனமாய்த் தோன்றினாலும்,

பவுலுடன் சேர்ந்து நாமும் உறுதியாக சிலுவையைப் பற்றிய உபதேசம் இரட்சிக்கப்படுவோருக்கு பெலனாயிருக்கிறது என்று சொல்லுவோம் *(1 கொரிந்தியர் 1:18).*

இரத்த சாட்சியாய் இறந்துபோன ஒருவரின் செய்தியல்ல. பெயருக்கு விசுவாசம் கொண்டுள்ளவர்களுக்கு (பெயர் கிறிஸ்தவர்களுக்கு) கூட. கிறிஸ்துவின் மரணம் சரியான அர்த்தம் கொடுப்பதில்லை. அவர்கள் சிலுவையை அர்த்த புஷ்டியுடன் பார்க்கலாம், ஆகிலும் அதினுடைய உண்மையான பொருளை அவர்களால் காண இயலவில்லை. *பலிகளின் முழுமையான ஒரு பலியாக பாவமற்ற ஒருவர் தனக்காக பலியாக்கப்பட்டதாக அவர்கள் பார்க்கலாம்.* அப்படி இருந்தாலும் அதற்கும் மேலான ஒரு பொருள் அதற்கு உண்டு. வருஷங்களினூடே நூற்றுக் கணக்கானவர்கள் வித்தியாசப்பட்ட காரணங்களுக்காக மரித்திருக்கிறார்கள். ஒரு உயர்ந்த நோக்கத்திற்காக பாடுபட வேண்டிய மாதிரிக்காக மட்டும் இயேசு மரித்திருப்பாரானால், அவருடைய மரணம் ஒப்புவமையற்றதாக இருக்க முடியாது. இருப்பினும், இயேசுவின் மரணம் வித்தியாசமானதாக இருந்தது!

பாவ-பலி என்ற வகையில் இயேசுவைப்பற்றி ஒரு செய்தி: இயேசு பாவத்துக்காக பாவமில்லாத பலியாக மரித்தார், எனவே - அவருடைய மரணத்தின் மூலமாக - நம்முடைய பாவத்திலிருந்து அவர் நம்மை மீட்க முடியும். நாம் நம்முடைய பாவங்களைச் சுமக்காத படியும், அதனால் ஆக்கினைக்குள்ளாகாதபடியும், அவர் நம்பாவங்களைத் தம்மேல் எடுத்துக் கொண்டார். நாம் பட்டிருக்க வேண்டிய பாடுகளை அவர் பட்டார். வசனங்களின் சாட்சியங்களை சிந்தித்துப் பாருங்கள்:

- யோவான் ஸ்நானகன் இயேசுவை "உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று சொன்னார் (யோவான் 1:29).
- 2 கொரிந்தியர் 5:21ல், "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை [கிறிஸ்துவை] நமக்காக [தேவன்] பாவமாக்கினார்" என்று சொல்லப்படுகிறது.
- கிறிஸ்துவானவர் "வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" என்று பவுல் எழுதினார் (1 கொரிந்தியர் 15:3ஆ).
- எபிரேயர் 9:26, "அப்படியல்ல, அவர் தம்மைத் தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக் காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார்" என்று சொல்லுகிறது.
- 1 பேதுரு 2:24ல் பேதுரு, "நாம் பாவங்ளுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர்தாமே (கிறிஸ்து தாமே) தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" என்று சொன்னார்.
- வெளிப்படுத்தின விசேஷம் 1:5, 6ல், இயேசு கிறிஸ்துவைக் குறித்து யோவான் "உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கும் அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்து நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது இரத்தினாலே நம்முடைய பாவங்களை நம்மைக் கழுவினார்" என்று சொன்னார்.
- வெளிப்படுத்தின விசேஷம் 7:14ல், "... இவர்கள்

மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" என்று மீட்கப்பட்டவர்கள் அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

"சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை" பிரசங்கிப்பது, இயேசுகிறிஸ்து நமது பாவநிவாரணப்பலி என்றும், நமது பாவங்களுக்காக நிவாரணம் அளித்தார் என்றும் பிரசங்கிப்பது: "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களை நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:2; மேலும் 1 யோவான் 4:10; ரோமர் 3:25ஐயும் காண்க).

சிலுவையின் செய்தியை பயன்படுத்துங்கள்

இன்று சிலுவையின் செய்தி எப்படி பயன்படுகிறது? "கிறிஸ்து சிலுவையில்" அறையப்பட்டதை பிரசங்கிப்பது என்பது, "நற்செய்தியை" பிரசங்கிப்பது. சிலுவையின் செய்தி எல்லாருக்குமே நற்செய்தி. உங்களுக்கு இது நல்ல செய்தி ஏனெனில் - கணக்கொப்புவிக்கும் பிராயத்தில் நீங்கள் இருப்பீர்களானால் தனிப்பட்ட முறையில் - நீங்கள் பாவியாயிருக்கிறீர்கள் (ரோமர் 3:23). உங்களுடைய பாவங்களினால், நீங்கள் மரண ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப் பட்டிருக்கிறீர்கள் (ரோமர் 6:23; எபேசியர் 2:1). கிறிஸ்து மரிக்காதிருந்திருப்பாரேயாகில் உங்களுக்கு நம்பிக்கை இல்லாதிருந்திருக்கும். உங்களுக்காக அவர் மரித்தபடியினாலே உங்களுக்கு நம்பிக்கை கொடுக்கப் பட்டிருக்கிறது. உங்களை நீங்களே இரட்சித்துக் கொள்ள - நீங்கள் என்ன செய்திருக்கக் கூடும் - என்பதை கிறிஸ்து உங்களுக்காகச் செய்திருக்கிறார்; நீங்கள் கட்டித் தீர்க்க முடியாத உங்கள் கடனைக் கொண்டிருந்தீர்கள்; தாம் பாத்தியப் படாத கடனுக்காக,[5] நீங்கள் பட வேண்டிய பாடுகளை அவர் பட்டு, உங்களுக்காக அவர் சிலுவையில் மரித்து, அந்தக் கடனை அடைத்தார்கள். அவர் அப்படிச் செய்ததினால், நீங்கள் இரட்சிக்கப் பட்டீர்கள். உங்கள் பாவங்கள் எப்படிப் பட்டதாக இருந்திருப்பினும் சரி, கிறிஸ்துவின் இரத்தத்தினாலே அவைகள் கழுவப்பட முடியும்!

கிறிஸ்துவின் மரணத்தால் அளிக்கப் பட்டுள்ள இரட்சிப்பின் ஈவை ஏற்றுக் கொள்ள நீங்கள் என்ன செய்ய வேண்டும்? "இயேசு உங்களுடைய இருதயங்களில் வரவேண்டும்" என்றோ, அல்லது "இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்ற கட்டளையோ திருமறையில் கொடுக்கப்பட வில்லை. கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப் பட்டதுமான செய்தியை கேட்டு விசுவாசித்தவர்களுக்கு அது சொல்லுவது என்ன? "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (நடபடிகள் 2:38). கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறவர்கள் - இயேசுவை விசுவாசித்து, அவர் தேவனுடைய குமாரன் என்று அவருக்குள் கொண்டிருக்கும் விசுவாசத்தை அறிக்கை செய்து, மனந்திரும்பி, பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றால் - தேவனுடைய கிருபையால் தேவ ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார்!

நீங்கள் இரட்சிக்கப்பட முடியும்! "கிறிஸ்துவும், அவர் சிலுவையில் அறையப்பட்டதுமான செய்தியில் ஊற்றெடுத்து வரும் நற்செய்தி இதுவே"!

முடிவுரை

"கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப் பட்டதுமான" செய்தியை நீங்கள் கேள்விப்பட்ட பிறகு, உங்களுடைய பிரதிபலிப்பு என்ன?முதல் நூற்றாண்டிலிருந்து, இன்றுவரை அநேகருக்கு இந்தச் செய்தி பைத்தியமாய் இருந்ததுபோல, உங்களுக்கும் அது பைத்தியமாய்த் தோன்றுகிறதா? 1 கொரிந்தியர் 1:18 சொல்லுகிறது, "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாய் இருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது." இந்த செய்தியை நீங்கள் விரும்பினால் இந்த செய்தியை பரியாசம் பண்ணலாம், ஆனால் நீங்கள் அதை பைத்தியமாய் காணுகின்ற வரைக்கும், நீங்கள் இரட்சிக்கப் படாமலேயேதான் இருக்கப் போகிறீர்கள். மறுபுறம் பார்த்தால், இந்தச் செய்தியை ஏற்றுக் கொள்பவர்களுக்கு அதை தங்களின் இரட்சிப்புக்கு தேவ பெலனாய்க் காண்பார்கள். நீங்கள் எதை தெரிந்து கொள்வீர்கள்? சிலுவையைப் பற்றிய உபதேசத்தை பைத்தியமாய்க் கண்டு உங்கள் பாவங்களில் இழந்து போனவர்களாய்க் காணப்படுவீர்களா, அல்லது அதை உண்மை எனக் கண்டு இரட்சிக்கப் படுவீர்களா?

குறிப்புகள்

[1]அத்தனே பட்டணத்து மக்களோடு மக்கதோனியர்களையும் "கிரேக்கர்" என்றே இங்கு எடுத்துக் கொள்ளும்படி ஆலோசிக்கிறோம். [2]அவர் பயந்தார் என்பதற்கு ஆதாரமாக கர்த்தர் அவருக்குத் தரிசனத்தில் தோன்றி, "நீ பயப்படாதே" என்று சொன்னதன் மூலம் அறிகிறோம் (நடபடிகள் 18:9). [3]சிலர் அத்தனே பட்டணத்து பேச்சிலே பவுல் கிரேக்கர்களின் நுணுக்கத்தை பயன்படுத்த முயற்சித்துள்ளதாக அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். ஆனால் அதன் விளைவு ஏமாற்றமே. தொடர்ந்து வந்த பின் விளைவாக, அவர் கலைநயத்தோடு பேசுவதை விட்டுவிட்டு, எளிமையாக "கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும்" மட்டுமே பிரசங்கித்தார் என்று சொல்லுகிறார்கள். [4]கிரேக்க (16:22), வசனத்தின்படி "மாரநாதா" (மாரணாதா) என்றால், "வாரும், கர்த்தாவே" அல்லது "கர்த்தாவே வாரும்." [5] This phrasing was adapted from the folk lyrics of "He Paid a Debt," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).

பிரசங்கம் 3

சபையைக் கட்டுதல்

(1 கொரிந்தியர் 3:9-17; 9:19-22)

இந்தப் பாடம் சபையைக் கட்டுவது எப்படி என்பதைப் பற்றியது. ஒரு சபைக் கட்டிடத்தை எப்படி கட்டுவது என்பதைக் குறித்து நாம் விவாதிக்கப் போவதில்லை - ஒரு சபைக் கட்டிடத்தை கட்டுவது என்று யாருக்காகிலும் சொல்லிக் கொடுக்கும் நபர்களில் உலகத்திலே மிகவும் கடைசி நிலையில் தகுதி பெற்ற நபர் நான்! இதற்கப்பால், சபைக்கான கட்டிடத்தை கட்டுவது எப்படி என்று புதிய ஏற்பாடு ஒன்றும் சொல்லுவதில்லை, ஆதலால் பின்வரும் பாடத்தை எந்தக் கட்டுபாட்டிற்கும் உள்ளாகாமல் மகிழ்வுடன் முன் வைக்கிறேன்.

மாறாக, "சபை" எனும் சொல் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப் பட்டிருக்கிறபடி, சபையை எப்படி கட்டுவது என விவாதிப்போம். வசனங்களிலே, "சபை" எனும் வார்த்தை எப்பொழுதும் ஜனக் கூட்டத்தையே சுட்டிக் காட்டுகிறது, ஒரு தடவை கூட இடத்தைச் சுட்டிக் காட்டவில்லை. கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்ட தேவனுடைய ஜனங்கள் தான் (சபை) என்று பொருள் (எபேசியர் 5:25).

நமது வாசகப் பகுதி 1 கொரிந்தியர் 3:9-17, இந்த வசனப்பகுதி சபையைக் கட்டுவதைக் குறித்துப் பேசுகிறது.

பவுல் தன்னையும் அப்பொல்லோவையும் - மற்றும் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்கிற, போதிக்கிற அனைவரையும் - கட்டுமானப் பணியாளர்களாக விவரித்துப் பேசுகிறார். பிரசங்கியார்கள் சபையாகிய தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறார்கள்.

நாம் பவுலின் முன்மாதிரியைப் பின்பற்றி சபையைக் கட்டுவோமாகில், அதை எப்படி நடைமுறைப் படுத்துவது? சரீரப் பிரகாரமான ஒரு கட்டிடத்தை மனதில் கொண்டு, ஒரு கட்டிடத்தைக் கட்ட என்னவெல்லாம் உட்படுத்தப் படுகிறது என்பதை பரிசீலிக்க வேண்டும்.

பலமான ஒரு அஸ்திபாரம்

முதலாவதாக, பலமான ஒரு கட்டிடத்திற்கு, வலிமையான அஸ்திபாரம் தேவை. அஸ்திபாரத்துக்கு என்னவெல்லாம் பயன்படுத்தப்பட வேண்டும்? பவுல், "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவேயல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" என்றார் (1 கொரிந்தியர் 3:11; எபேசியர் 2:20 யும் காண்க). இதைக் காட்டிலும் ஒரு பலமான அஸ்திபாரத்தை நாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது: இயேசு கிறிஸ்து! சபை கிறிஸ்துவின்மேல் கட்டப்பட வேண்டும் (காண்க மத்தேயு 16:13-19)! இயேசு கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தைப் போட, பின்வரும் படிகளை பவுல் பின்பற்றினார்.

1. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையே பிரசங்கம் பண்ணினார் (1 கொரிந்தியர் 2:2). சபை மனித ஞானத்தின் மேல் கட்டப்படாமல், அனைத்து நித்தியத்துக்கும் திட்டமிடப்பட்டு கிறிஸ்து மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட தேவ ஞானத்தின் மேலேயே கட்டப்பட்டது. சபையானது அவருடைய வருகை, அவரது ஜீவிய வரலாறு, அவரது மரணம், அவரது உயிர்த்தெழுதல், அவருடைய கிருபையின் இரட்சிப்பு ஆகியவற்றின்மேல் கட்டப்பட்டது.

2. கிறிஸ்துவின் செய்தியைப் பிரசங்கித்தார். புதிய ஏற்பாட்டுச் செய்தி கிறிஸ்துவினிடத்திலிருந்து வந்தது. முறையான அஸ்திபாரம் போட, நாம் அந்த செய்தியைப் பிரசங்கிக்க வேண்டும். கட்டிடத்தின் இசைவமைப்பை தொடர, ஒரு வரைபடத்திட்டம் - தேவை. புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவின் வசனமே சபையைக் கட்டத் தேவையான வரை படமாக கண்டு பிடிக்கிறோம்.

3. அவர் கிறிஸ்துவின் சபையைப் பற்றிப் போதித்தார். கிறிஸ்துவே சபையில் அன்புகூர்ந்து, அதற்காக மரித்து, சபையை இரட்சித்துக் காப்பதால், ஒருவர் கிறிஸ்துவை உயர்த்தி அவரது சபையை கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. சரியான முறையில் அஸ்திபாரமிட்டு சபையைக் கட்ட, புதிய ஏற்பாடு அவருடைய சபையைக் குறித்துப் போதிப்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"இயேசு கிறிஸ்துவையல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" என்று பவுல் சொல்லும் போது (ஒருவராலும் முடியாது) (3:11), என்று உறுதியிட்டுச் சொல்லவில்லை. ஜனங்கள், வேறே அஸ்திபாரத்தின் மேலும் கட்டக்கூடும் என்பது உண்மையே. சில சபைகள் மனிதனுடைய உபதேசக் கோட்பாடுகள் மேல் கட்டப் பட்டன, சில தனிப்பட்ட சில பெரிய மனிதர்கள்மேல், சில புகழ்பெற்ற ஒரு குறிப்பிடப்பட்ட பிரசங்கியார் மேல் கட்டப்பட்டுள்ளன. எப்படியிருப்பினும், பவுல் சொல்லுவது என்னவெனில், *கிறிஸ்துவல்லாது வேறே எந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டினாலும் தேவனைப் பிரியப் படுத்தாது.* தேவனுக்கு முழுமையாய் கீழ்ப்படியத் தவறுபவர்களைப் பார்த்து, முடிவில் "என்னை விட்டு அகன்று போங்கள்" என்று சொல்லுவார் (மத்தேயு 7:23).

ஒரு திறமை மிகு சிற்பி

இரண்டாவதாக, ஒரு கட்டிட நிர்மாணத் திட்டம் வெற்றிகரமாய் அமைய ஒரு திறமை மிக்க சிற்பி தேவை. ஒருவர் ஒரு கட்டிடத்தைக் கட்ட அனுபவமிக்க தச்சர்களையும், மின் இணைப்பு பணியாளர்களையும், நீரேற்று குழாய் அமைப்பாளர்களையும் பணிக்கு அமர்த்துவார். சபையை பொறுத்த மட்டும் பவுல் ஒரு அனுபவமிக்க கட்டிட நிபுணர். அவர், "எனக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல (திறமை சாலியைப் போல) அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான்" (1 கொரிந்தியர் 3:10அ) என்று எழுதினார். சபையைக் கட்டுவதில் பவுல் முன்மாதிரியாகப் பணி செய்தார். நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாயும் திறமையாகவும் கட்ட வேண்டும்.

நாம் ஏன் திறமையாகக் கட்ட முயல வேண்டும்?

கர்த்தருக்கென்று நாம் எதைச் செய்கிறோம் எப்படிச் செய்கிறோம் என்பதெல்லாம் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை, நாம் "வசனத்தைப் பிரசங்கித்தால்" தேவன் விளையச் செய்வார் என்று அநேகர் நம்புகின்றனர் (1 கொரிந்தியர் 3:5-7; 1 தீமோத்தேயு 4:2 ஐக் காண்க). தேவன் விளையச் செய்கிறார் என்பது உண்மைதான். அதே போல், பெலன் சுவிசேஷத்திலும் (ரோமர் 1:16) சிலுவைப் பற்றிய செய்தியிலும் இருக்கிறது (1 கொரிந்தியர் 1:18), மனிதனிலோ மனிதனுடைய வல்லமையிலோ சாதுரிய ஞானத்திலோ அல்ல. எப்படியாயினும், பவுலும் (மற்ற திருமறை எழுத்தாளர்களும்) கிறிஸ்தவர்கள் சபையை எப்படி கட்டுகிறார்கள், சபை ஊழியத்தை எப்படி செய்கிறார்கள் என்பது வித்தியாசத்தை ஏற்படுத்தும் என்று அறிந்திருந்தார்கள்.

- *இங்கு 3:10ல் தான் புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல் கட்டினதையும், நாம் எப்படி ஜாக்கிரதையாக கட்ட வேண்டும் என்று அவர் நமக்கு சொன்னார்.*
- *கொலோசெயர் 4:6ல், பவுல், "அவனவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயும் இருப்பதாக" என்று கூறினார். மறுபடியும், சுவிசேஷத்தை எப்படி பிரசங்கிக்கிறோம் என்பது முக்கியமானது.*
- *2 தீமோத்தேயு 2:24-26, ன்படி நமக்கு எதிராய்ப் பேசுகிறவர்களிடம் "சாந்தமாய்" உபதேசிக்க வேண்டும்.*
- *1 பேதுரு 3:15ல் நம்மில் ... "இருக்கிற நம்பிக்கையைக்குறித்து விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவேண்டும்," என்று நாம் வாசிக்கிறோம்.*
- *எபேசியர் 4:15 "அன்பினாலே" சத்தியத்தை நாம் பேசவேண்டும் என்று சொல்லுகிறது.*
- *பவுல் தான் பிரசங்கித்த எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக பிரசங்கிக்கவில்லை. அத்தேனே பட்டணத்தில் அவருடைய பிரசங்க அணுகுமுறை (நடபடிகள் 17), பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவில் இருந்த ஜெப ஆலயத்தில் அவருடைய பிரசங்க அணுகுமுறையிலிருந்து வித்தியாசப் பட்டிருந்தது (நடபடிகள் 13).*

இந்த இரண்டு கருத்துக்களையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்: தேவன் விளையச் செய்கிறார், பெலன் சுவிசேஷத்தில் இருக்கிறது. அதே வேளையில் வசனத்தை பரப்புகிற விஷயத்தில் உசிதமான முறைகளை பயன்படுத்துவதை தேவன் எதிர்பார்க்கிறார்; ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தவும், சபையை கட்டியெழுப்பவும் இது தேவை.

திறமையாக நாம் கட்டுவது எப்படி?

திறமையாகக் கட்டுவது எப்படி என்று நமது வாசக வசனப் பகுதியில் பவுல் விவரமாகக் குறிப்பிடவில்லை. பின்னர், 1 கொரிந்தியர் 9:9-22ல், சபையை

ஊக்கமாக கட்ட ஏதுவான போதனையைக் கொடுக்கிறார்.

பவுலின் முறைகள் அவரது கூற்றான “எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும் படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்” என்பதிலிருந்து சுருக்கமாய் அறிந்துகொள்ளப்பட முடியும்.

1. “நான் எல்லாருக்கும் எல்லாமானேன்” (9:22ஆ). பவுல் தனிப்பட்ட ரீதியில் தொடர்பு கொள்ளும் முறையை பேசுகிறார். கிரேக்கர்களையும் யூதர்களையும் திருப்திபடுத்த சுவிசேஷ சத்தியத்துடன் ஒத்துப் போகக் கூடியவராயிராமல், அவர்களுடைய பாவங்களில் இனணந்து போகக் கூடியவராய் இருக்கவில்லை. சுவிசேஷ கொள்கைகள் என்று வந்தபோது, யார் எதிர் பேசினாலும் கவலைப்படாமல் சத்தியத்திற்காக உறுதியாக நின்றார். பேதுருவின் உறுதியற்ற தன்மைக்காகவும் கிறிஸ்தவ தன்மையற்ற செயலுக்காகவும் அவரைக்கூட அவர் கடிந்து கொண்டார் (கலாத்தியர் 2:11-14). புறஜாதிகள் இரட்சிக்கப்பட விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்று சொன்னவர்களை எதிர்த்தார் (நடபடிகள் 15:1, 2; கலாத்தியர் 2:1-5யும் காண்க), கலாத்தியர்கள் சுவிசேஷ சத்தியத்தை விட்டு “வேறொரு சுவிசேஷத்துக்குத்” திரும்பினபடியால் அவர் அவர்களை கண்டனம் பண்ணினார் (கலாத்தியர் 1:6-9). இருந்தபோதிலும், பொதுவுடமை வாழ்வைக் கொண்டிருந்த மக்களைச் சந்தித்தபோது, அவர்கள் புரிந்துகொள்ளத்தக்கதாக சத்தியத்தை முன்வைத்தார்.

அவர், ‘‘யூதருக்கு யூதனைப்போலவும்’’ (9:20அ) ‘‘நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவனைப்போலவுமானேன்’’ (9:20ஆ) என்று சொன்னார். பவுல் தன்னுடைய யூத வம்சாவழியை ஒருபோதும் மறுக்கவில்லை, ஆனால் அடிக்கடி யூதர்களிடத்தில் பேசும்போது மட்டுமே அது குறித்து பேசினார் (நடபடிகள் 22:3; 26:4; 28:17).[1] ஒரு பட்டணத்தில் பிரசங்கிக்கப் போகும் போதெல்லாம் இயன்றவரை ஒரு யூதக் கூட்டத்தை[2] ஜெப ஆலயங்களில் வரச் செய்து அங்கே பிரசங்கித்தார். அப்படிச் செய்ய ஏதுவாக இருக்குமானால், யூத முறைமைகளையும் சில நேரங்களில் அனுசரித்தார்.[3]

அவர், ‘‘நியாயப்பிரமாணம் இல்லாதவனுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப்போலவும் (9:21அ) ஆனேன்’’ என்றும் சொன்னார். பவுல் குறிப்பாக புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டவர் (நடபடிகள் 9:15, 16; 22:21; 26:17, 18; கலாத்தியர் 1:16; 2:1-10). அவர்களிடத்தில் அவர் பிரசங்கித்தபோது, தங்களுடைய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கவகையில் பேசினார். லிக்கவோனியாவிலிருந்த ஜனங்கள் பவுலையும் பர்னபாவையும் தொழுதுகொள்ள முயன்றபோது, பவுல் வீணான தேவர்களை விட்டு விலகும்படியாகவும் ஜீவனுள்ள தேவனையே தொழுதுகொள்ளும்படியாகவும் பவுல் பிரசங்கித்தார் (நடபடிகள் 14:14-18). கூடிவந்திருந்த ஜனங்கள் அதைப் புரிந்துகொள்ள முடிந்தது. பவுல் புறஜாதிகளுடன் நட்புறவாய்ச் செல்லவே விரும்பினார், இதை அவருடைய சொந்த ஜனங்களில் அநேகர் விரும்பவில்லை. உதாரணமாக, பிலிப்பிய சிறைக் காவலனுடைய வீட்டில் அவர் போஜனம் புசித்தார் (நடபடிகள் 16:34). அவர் யூதருடைய ஜெப ஆலயங்களில் மட்டும் பிரசங்கியாமல் புறஜாதிகள் குழுமியிருக்கும் இடங்களான சந்தை வெளிகளிலும், மேடைப் பகுதிகளிலும் (“மார்ஸ் மேடை”), வித்தியா சாலைகளிலும் அவர்களுடைய வீடுகளிலும் -

புறஜாதியாரைக்கண்ட இடங்களிலெல்லாம் போதித்தார் (நடபடிகள் 17:17, 22; 18:7, 8).

தன் செய்தி கேட்கும் கூட்டம் யூதராயினும் புற ஜாதியாராயினும், பவுல் தனது செய்தியின் மையக் கருத்தை பவுல் மாற்றிக் கொள்ளவில்லை. அதே வேளையில், குறிப்பிட்ட கூட்டத்துக்கு ஏற்ப பேசுவதில் தனது அணுகு முறையைக் கொண்டிருந்தார்.

2. "எல்லாருக்கும் எல்லாமானேன் ..." (9:22இ). தனது சுவிசேஷ ஊழியத்தில் பவுல் கையாண்ட இரண்டாவது முறை "எல்லாருக்கும் எல்லாமானேன்" என்பது. தன்னால் இயன்றவரைக்கும் எல்லா வழிகளிலும் எல்லா இடங்களிலும் பிரசங்கிக்கவும் போதிக்கவும் செய்தார், அப்பொழுதெல்லாம் தன்னால் இயன்றவரை கேட்டவர்களுக்கு தனது போதனை முறையை கையாண்டார். அவர் நிருபங்களை எழுதியும், "வெளியரங்கமாக வீடுகள்தோறும்" பிரசங்கித்தார் (நடபடிகள் 20:20). சந்தை வெளிகளிலும், வித்தியாசாலை (பள்ளிக்கூடங்)களிலும், ஜெப ஆலயங்களிலும் பெரிய கூட்ட ஜனங்களுக்கு பிரசங்கித்திருக்கிறார்; தனிப்பட்ட முறையில் வீடுகளிலேயும் போதித்திருக்கிறார். அவர் உபத்திரவப்படுத்தப்பட்ட நேரங்களில் கூட சுவிசேஷத்தை பிரசங்கிக்க கிடைத்த வாய்ப்பை அனுகூலமாக்கிக் கொண்டார் (நடபடிகள் 16:22-33; 26:27; பிலிப்பியர் 1:12, 13).

3. "சிலரை இரட்சிக்கும்படிக்கு" (9:22இ). தனது ஊழியத்தில் பவுல் கையாண்ட மூன்றாவது முறை அவர் செய்த எல்லாமே எப்படியாகிலும் "சிலரை இரட்சிக்கும்படிக்குச்" செய்தார். கிறிஸ்தவர்கள் கர்த்தருக்கென்று ஊழியம் செய்கிறபடியால், அவர்களின் குறிக்கோள் அனைத்தும் ஆத்துமாக்களை இரட்சிப்பதாகவே இருக்க வேண்டும்! பவுலைப்போல - நாமும் - "எல்லாரும்" இரட்சிக்கப் பட வேண்டும் என்று நாம் விரும்பினாலும், "சிலர்" மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள் என்பதை நாம் உணர வேண்டும். பவுலின் வாக்கியங்கள் ஆர்வமளிக்கின்றன: அவர் *"எல்லாருக்கும்" "எல்லாமாகி" "எப்படியாகிலும்" "சிலரை"* இரட்சிப்புக்கு உள்ளாக்க வேண்டும் என்று விரும்பினார். எல்லாரும் இரட்சிக்கப்படுவதை பவுல் விரும்பினாலும், *சிலர்* மாத்திரமே தனது பிரசங்க செய்திக்கு உறுதியளிக்கும் வகையில் கீழ்ப்படிவார்கள் என்பதை அறிந்திருந்தார். அநேகர் செய்தியை ஏற்றுக் கொண்டிருந்தாலும் (நடபடிகள் 18:8 ஐக் காண்க), அநேகர் அதைப் புறக்கணிக்கவும் செய்தனர். இருந்தபோதிலும், தேவன் தனக்குச் செய்யும்படி கொடுத்த பணியை உண்மையோடு பிரசங்கம் பண்ணி நிறைவேற்றா விட்டால் அந்த "சிலரும்" கூட இரட்சிக்கப் படமாட்டார்கள் என்பதை பவுல் அறிந்திருந்தார்.

நாம் பவுலின் மாதிரியை பின்பற்றுகிறோமா? தேவையை நாம் காண வேண்டும், நமது கடமையை உணர வேண்டும் - பவுலைப் போல - ஜனங்கள் இரட்சிக்கப்பட ஏதுவாக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியது நமது பணியாக இருக்கிறது.

இந்த கடமையை நாம் வினயமாக எடுத்துக் கொள்வோமாகில், "இழந்துபோன ஆத்துமாக்களை இரட்சிக்கும்படிக்கு நான் எப்படி சிறப்பான பணியைச் செய்ய முடியும்?" "என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்." சமுதாயத்தில் உள்ள எல்லாருமே சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்,

ஆனால் சிலர் ஏற்றுக் கொள்வர். இருக்கிறவர்களை (இரட்சிப்பு) அடையும்படி நம்மால் ஆன எல்லாவற்றையும் செய்திருக்கிறோமா? இரட்சிக்கப்பட விரும்பும் மேலும் பல மக்களை அணுகி இன்னும் நாம் கையாளாத முறைகளைப் பயன்படுத்தியிருக்கிறோமா? ஒரு உள்ளூர் சபை ஞாயிற்றுக்கிழமை மட்டுமின்றி வாரத்தின் இடைபட்ட நாட்களிலும் சிறுவர்களுக்கு வேதவகுப்பு நடத்த வேண்டும். கிறிஸ்தவர்கள் வானொலி அல்லது தொலைக்காட்சி ஊழியத் திட்டத்தையும், சிறப்பு நிகழ்ச்சிகளையும் - "நண்பர்கள் தினம்," வேனிற் கால வேத வகுப்பு, அல்லது சுவிசேஷ பிரசங்க முகாம்கள் ஆகியவற்றை உள்ளூர் சபைக்கெனத் திட்டமிடலாம்.

சரியான பொருட்கள்

மூன்றாவதாக, பலமான கட்டிடத்தைக் கட்ட நாம் இயன்ற வரை சிறப்பான பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். தரம் தாழ்ந்த பொருட்களைப் பயன்படுத்தி ஒரு கட்டிடச் சிற்பி கட்டுவாரானால், தனது கட்டிடம் வெகு நாட்கள் நிலைத்திருக்குமென்று எதிர்பார்க்க இயலாது. சபையும் நல்ல பொருட்களைக் கொண்டு கட்டப்பட வேண்டும். சபையாகிய தேவனுடைய ஆலயம் கட்டப்படுகிற கட்டிடப் பொருட்களைப் பற்றி பவுல் பேசினார் (3:12-15).

பவுல் இரண்டு வகையான வித்தியாசப்பட்ட கட்டிடப் பொருட்களைப் பற்றி எழுதுகிறார் - விலையேறப்பெற்ற பொருட்கள் (பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள்) சாதாரணப் பொருட்கள் (மரம், புல், வைக்கோல்). பலவகையான பொருட்களாகிய இவைகள் வித்தியாசப்பட்ட வகையான கிறிஸ்தவர்கள், அவைகளை பரிசோதிக்கும் அக்கினி என்பது அக்கினி பரீட்சைகளும், உபத்திரவங்களுமாம். சோதனைகள் வரும்போது அல்லது உபத்திரவங்கள் எழும்பும்போது, சில கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருப்பார்கள். விலையேறப்பட்ட பொருட்களாக இவர்கள் காணப் படுகின்றனர்; அதே சூழ்நிலையில் மற்றவர்கள் விழுந்துபோவார்கள். இவர்கள் சாதாரணப் பொருட்களை அடையாளப்படுத்துகிறார்கள்; அவர்கள் அக்கினியால் "சுட்டெரிக்கப் படுவார்கள்." இப்படி நடந்தாலும் கூட, பிரசங்கியாரோ போதகரோ தனது பிரதிபலனை இழக்கமாட்டார்கள்; போதிப்பவரின் இரட்சிப்பு கற்றுக்கொள்ளும் மாணவரின் தொடர் விசுவாசத்தில் இல்லை.

பவுல் இங்கே சிறப்பான பொருட்களாகப் பார்த்து கட்டிடத்துக்கு தெரிந்தெடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. நாம் எல்லா வகையான ஜனங்களையும் மனமாற்ற முயல வேண்டும். விதைக்கிறவனைப் பற்றிய உவமையில் இயேசு போதித்தவைகளுக்கு ஒப்பாகத்தான் பவுல் போதித்தார். வளமான இடத்தில் மட்டுமே நாம் விதைக்க வேண்டும் என்று இயேசு சொல்லவில்லை; மாறாக, நாம் விதைகளை விதைக்கிறபோது, எல்லா இடங்களிலும் விதைக்கிறோம், நம்மிடத்தில் கேட்கிறவர்கள் வித்தியாசமாய் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். சிலர் மற்றவர்களைக் காட்டிலும் விசுவாசத்தில் தரித்திருப்பார்கள், ஆகிலும் போதிக்கும் சந்தர்ப்பம் நமக்கு இருக்கும் போதே, யாரையும் புறக்கணிக்காமல், எல்லாரையும் அணுகி போதிக்க வேண்டும். நாம் அகன்ற பரந்த நிலங்களிலே விதைகளை விதைக்க வேண்டும்,

நாம் விசுவாசத்தோடு தொடர்ந்து விதைப்போமாகில், சில நல்ல நேர்மையான இருதயங்கள் அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடும்.

பிரதி பலனுக்கான ஒரு எதிர்பார்ப்பு

கட்டிடத் திட்டம் நிறைவேறினவுடனே, கட்டிடச் சிற்பி தனக்கான பிரதிபலனை (கூலியை) எதிர்பார்ப்பார். ஒரு வீட்டை கட்டும்படியாக அவர் அமர்த்தப்படுவாரானால், தனது வேலைக்கான சம்பளத்தைப் பெறுவார். அவர் தனக்கென ஒரு கட்டிடத்தைக் கட்டுவாராகில், தனது திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதற்கான திருப்தி அவருக்கு இருக்கும். அதே போல, சபையைக் கட்டும்படி நாம் ஊழியப் பணி செய்தால், நாம் பிரதிபலனை எதிர்பார்க்கலாம். பவுல்,

> அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான், அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியில் அகப்பட்டு தப்பினதுபோலிருக்கும் என்று சொன்னார் (3:14, 15).

எப்படிப்பட்ட பிரதிபலனை நாம் எதிர்பார்க்கலாம்? சபை ஆவிக்குரிய வகையிலும் எண்ணிக்கையிலும் வளரும்படி எதிர்பார்க்கலாம். பவுலின் மற்றொரு உருவகச் சொல்லை இந்த அதிகாரத்திலிருந்து பயன்படுத்த வேண்டுமானால் விதைகளை நாம் விதைத்த பின் நாம் அறுவடையை எதிர் பார்க்கக் கூடும். நாம் பெறுகிற மற்றொரு பிரதிபலன் - இதுதான் பவுலின் மனதிலும் இருந்திருக்க வேண்டும் - பரலோகத்தில் இருக்கிறது. நமது ஊழியப் பணியினால் பூமியிலே நமக்கு எந்தவிதத்திலும் ஒன்றுமில்லாமல் போனாலும், (நம்மால் மனமாற்றப்பட்டோர் விழுந்து போனாலோ, நாம் ஊழியம் செய்த சபை உதிர்ந்து அல்லது முற்றிலும் அழிந்து போனாலும்), பரலோகத்தில் நமக்காக வைக்கப்பட்ட பலனை நாம் இழந்து போகமாட்டோம்.[4]

முடிவுரை

இவை எல்லாவற்றோடும் கூட, அடுத்த வருவது என்ன என்பதை நாம் கவனிக்க வேண்டும்: "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார், தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது"; நீங்களே அந்த ஆலயம் (3:16, 17). "தேவனுடைய ஆலயத்தைக்" கெடுப்பது என்பது சபையைக் கெடுப்பதாகும். நாம் அநேகமாக இன்னொரு பாடத்தில் தேவனுடைய சபையை உருக்குலைந்து போகப்பண்ணுவது, அல்லது சபையை விழத்தள்ளுவது என்பதை படிப்போம். எப்படியிருப்பினும் நம்முடைய சகோதரர்களில் அநேகருக்கு இப்படிப்பட்ட தலைப்பில் ஒரு பாடம் தேவைப்படாது; அது எப்படி என்று அவர்களுக்கு ஏற்கனவே தெரியும். நாம் இந்தக் கட்டிடம் கட்டும் பணியில் இருக்கிறோமா என்று நிச்சயப் படுத்திக் கொள்வது அவசியம், உருக்குலைத்துப் போடும் காரியத்தில் அல்ல. ஒரு உள்ளூர் சபையை யார் வேண்டுமானாலும் கெடுக்கலாம், ஆனால் ஒரு சபையை

கட்டியெழுப்ப ஒரு புத்தியுள்ள சிற்பாசாரி தேவை. அப்படிப்பட்ட கட்டிட பணியாளர்களாக நாம் இருப்போம்!

குறிப்புகள்

[1]பவுலின் யூத வம்ச வரலாறு குறித்து, பிலிப்பியர் 3:1-7; ரோமர் 9:1-5லிம் காண்க. [2]ரோமர் 1:16, 17ஐ ஒப்பிட்டு, சுவிசேஷம் "முன்பு யூதரிலும்" இரட்சிக்கப்படுவதற்கு தேவ பெலனாயிருக்கிறது என பவுல் சொல்லுவதைக் காண்கிறோம். [3]பவுல் எருசலேமில் இருக்கையில், தன்னோடு கூட இருந்த நான்கு யூத கிறிஸ்தவர்களைச் சேர்த்துக் கொண்டு செய்த பொருத்தனைக்கு இந்த விளக்கம் கொடுக்கப்பட்டதுபோல் காணுகிறது (நடபடிகள் 21:24), பின்பு - அவர்களோடு "சுத்திகரிப்புச் செய்துகொண்டு" - "தேவாலயத்தில் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காகவும் சுத்திகரிப்பின் நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான்" (நடபடிகள் 21:26; நடபடிகள் 18:18-யும் காண்க). [4]இது சம்பவிக்குமானால் நாம் "நஷ்டமடைவோம்," யார் நம்மால் மனமாற்றப்பட்டார்களோ அவர்கள் உலகத்துக்கே திரும்புவார்களேயாகில் நாம் துக்கமடைவோம்.

பிரசங்கம் 4

சபை-பரிசுத்தவான்களின் அமைப்பு [மன்னிக்கப்பட்ட பாவிகள்!]

[1 கொரிந்தியர் 6:9-11]

"சபை என்பது பாவிகளுக்கான மருத்துவமனை, காட்சிக்காக உள்ள அரும் பொருட் காட்சியகம் அல்ல" என்று யாரோ சொன்னார்கள். சபையில் இருக்கும் ஜனங்கள் மனித வர்க்கத்திற்குத் தெரிந்த அனைத்துப் பாவங்களையும் செய்த குற்றத்தையுடையவர்கள். ஒரு பிரசங்கியார் பிரசங்க மேடையில் நிற்கும் போது, அவர் தன் முன் இருக்கும் கூட்டத்தில் விபச்சார வேசித்தனம் செய்தவர்கள், மனைவியைத்தவறாக நடத்தினவனும், குழந்தைகளை கெடுத்தவனும், கொள்ளைக்காரனும் மற்றவர்களை கொலை செய்தவனும், சிறையிலே வைக்கப்பட்டவனும் - இச்சைக்கு அடிமைப்பட்டவனும் பேராசைக்காரனும், பகைமையுள்ளவனும், மற்றும் பெருமைக்காரனுமாயிருந்தவர்களைப் பார்ப்பார்.

சபை பரிபூரணப்பட்ட ஜனங்களின் அமைப்பல்ல; கிறிஸ்துவின் இரத்தத்தால் நீதிமான்களாக்கப்பட்டவர்களின் ஜனங்களால் அமைவு பெற்றது. சபையில் இருக்கும் ஜனங்களுக்கும் சபைக்குப் புறம்பே இருக்கும் ஜனங்களுக்கும் வித்தியாசம் என்னவெனில், சபையில் இருப்பவர்கள் ''பரிசுத்தவான்களும்'' சபைக்குப் புறம்பே இருப்பவர்கள் ''பாவிகள்'' என்றும் பொருளல்ல; எளிமையாகச் சொல்லின் சபைக்குள் இருப்பவர்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்ட பாவிகள், சபைக்குப் புறம்பே இருப்பவர்கள் இரட்சிக்கப்படாத பாவிகள்.

1 கொரிந்தியர் 6:9-11ல் சிறந்த விளக்கம் கொடுக்கப் படுவது போல, சபை அங்கத்தினர்களுக்கும் சபைக்குப் புறம்பே இருக்கும் பாவிகளுக்குமிடையேயான உறவு முறையை வேறே எந்த புதிய ஏற்பாட்டு வசனப் பகுதியும் விளக்கம் அளிப்பதில்லை. மேலே சொன்ன இந்த வசனப் பகுதி சபையைக் குறித்தும் பாவிகளைக் குறித்தும் மூன்று குறிப்பிடத்தக்க உண்மைகளைப் போதிக்கிறது.

சபை பாவிகளின் அமைப்பைக் கொண்டது (6:9-11அ)

கொரிந்து சபைக்கு பவுலின் செய்தி

இந்த சந்தர்ப்பப் பொருளில் பவுல் கொரிந்து சபையார்களை

நீதிமான்களாய் வாழும்படி போதிக்கிறார். உதாரணமாக, ஒருவருக்கொருவர் எதிராக வழக்காடப் போகாமல் இருக்கவும் (1 கொரிந்தியர் 6:1-8) வேசித்தனம் பண்ணாமலிருக்கவும் (1 கொரிந்தியர் 6:15-20) போதிப்பதை உள்ளடக்கியது.

கொரிந்துப் பட்டணத்தில் பொதுவாகக் காணப் படும் பாவங்களை தவிர்க்கும்படி மனதில் சிந்திக்க வைக்க, பவுல் பொதுவாக, குறிப்பிட்ட பாவங்களைச் செய்தவர்கள், "தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை" என்று சொன்னார். "தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது" என்பது பரலோகத்துக்குப் போக முடியாது என்று சொல்வதற்குச் சமமானது (கலாத்தியர் 5:21; 2 பேதுரு 1:11ஐ ஒப்பிடுக).

வசனங்கள் 9, 10ல் பரலோகத்துக்குப் போக விடாமல் தடுக்கிற பத்து பாவங்களை பவுல் பெயரிடுகிறார்.

1. வேசித்தனம் (பாலுறவு ஒழுங்கீனம்; NIV) - பாலுறவு ரீதியான பலவகைப் பாவங்களை உள்ளடக்கிய ஒரு பரந்த சொல்.
2. விக்கிரக ஆராதனை - பொய்யான தேவர்களைத் தொழுது கொள்ளுதல்.
3. விபச்சாரம் - தனது வாழ்க்கைத் துணையல்லாத ஒருவனுடன் பாலியல் உறவு கொள்ளுதல்.
4. பெண் தன்மை கொண்ட ஆண்களுடன் (ஆண் புணர்ச்சி; RSV; ஆண் விபச்சாரம்; NRSV; NIV) - முறையான பாலுறவை மாற்றுதல்.
5. ஓரின சேர்க்கை - (சோதோமிய உறவு முறை; NRSV) - தன்னைப் போன்ற பாலினத்துடன் பாலுறவு வைத்துக் கொள்ளுதல்.
6. திருடுதல் - கொள்ளையடித்தல் அல்லது களவாடுதல், பிறருடைய உடமைகளை எடுத்துக் கொள்ளுதல்.
7. பொருளாசை (பேராசை; RSV). பிறருக்குரியவைகளை அடைய வேண்டுமென்ற வலிமையான ஆசை, மேலும் மேலும் சொத்துக்களைக் குவிக்க வேண்டுமென்ற முடிவுடன் செயல்படுதல். அது "அளவுக்கு மீறிய ஆசை, நேசம், பணமோகம்" எனலாம்.[1]
8. மதுபான வெறி.
9. உதாசினம் (புறங் கூறுதல்; NIV) - மற்றவர்களைக் குறித்து புறம் பேசுதல்.
10. கொள்ளை - வஞ்சித்து மறைமுகமாய் பணம் பிடுங்குதல் (கொள்ளையிடுதல்; RSV).

இந்தப் பாவங்கள் மட்டும் மக்களை பரலோகத்துக்கு புறம்பாக்குவதாக பவுல் கூறுவதாகத் தோன்றவில்லை. மாறாக, இந்த பத்துப் பாவங்களும் மற்ற அனைத்து அநீதிகளுக்கும் முகவர்கள். பொதுவான இந்தப் பாவங்களைச் செய்கிறயாரும் "தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளமாட்டார்கள்."

நமக்கு பவுலின் செய்தி

மேலே குறிப்பிட்ட இந்த வரிசைப் படுத்தப்பட்ட பாவங்களிலிருந்து நாம் என்ன உணர்ந்து கொள்ள வேண்டும்?

1. *வரிசைப் படுத்தப்பட்டுள்ள செயல்கள் யாவும் பாவங்களே.* தேவன்

அவைகளை பாவம் என்று கூறுவதால் அவைகள் பாவங்களே. நாம் திருமறையை நேசிக்கக் கூடியவர்களாயிருந்தால், தேவன் இவைகளைக் குறித்து என்ன எண்ணம் கொண்டிருந்தாரோ அதே எண்ணத்தை நாமும் கொண்டிருக்க வேண்டும்.

குறிப்பாக, ஆண் புணர்ச்சி அல்லது சுய புணர்ச்சியை எடுத்துக் கொள்வோமாகில், சுய புணர்ச்சியை செய்வது ஒரு பாவம் என்பது போல் பேசுவோர் அதை மூடத்தனமான மத வெறியைக் காட்டுகிறது என்று அநேகர் நம்புகின்றனர். ஓரின சேர்க்கையை அவர்கள் வெறும் பாலுணர்வு மனச்சாய்வு அல்லது ஒரு வேறுவழியான வாழ்க்கைமுறை என்று நினைக்க முற்படுகின்றனர். சில சுய புணர்ச்சிகாரர்கள் அந்த நாகரிக வாழ்க்கைக்காகவே "திட்டமிட்டு" செயல்படுகின்றனர் - ஏனெனில் அவர்களின் பொதுவான ஜோடனைகளால் அவர்கள் சுய புணர்ச்சிக் காரர்களாகத்தான் வாழமுடியும், வேறுவகையில் வாழமுடியாது என்கின்றனர். எப்படியிருப்பினும் நாம் திருமறையை விசுவாசிப்போமேயானால் அந்த எண்ணத்தை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

2. *இந்தப் பாவங்களெல்லாம், நித்தியத்திற்கான விளைவுகளைப் பெறுவதில் சமமானது.* சமுதாய, சரீர, தற்காலிக விளைவுகளும், சில பாவங்கள் மற்ற பாவங்களைக் காட்டிலும் மோசமானவை என்ற அடிப்படையில் அமையலாம், ஆகிலும் முழுமையான (ஒட்டு மொத்த) விளைவு என்று வரும் போது, எல்லா பாவங்களுக்கும் சமமானதாகவே உள்ளது. உலகத்திலுள்ள மிகவும் ஒழுங்கங்கெட்ட, மோசமான நடத்தையுள்ள மக்களில் சிலர் - மோசமான நடத்தை என்ற பொருளில் பார்த்தால் வேசித்தனம் செய்வதில் எவ்விதத்தவறையும் காணவில்லை என்கின்றவர்கள் - உதாரணமாக - அவைகளில் சுய புணர்ச்சி மிகவும் மூர்க்கத்தனமானது என்று கருதுகின்றனர். சுய புணர்ச்சிகாரர்களைக் காட்டிலும், வேசித்தனக்காரர்கள் பரலோகத்திற்கு போவார்கள் என்பதற்கான எந்தவித வாய்ப்புகளும் இல்லை.

3. *இந்த பாவங்களின் செயலால் குற்றப்பட்டிருந்தவர்கள், கொரிந்து பட்டணத்து சபையின் அங்கத்தினராயிருந்தனர்.* பவுல் தொடர்ந்து அதிர்ச்சியான வாக்கியமாகிய. "உங்களில் சிலர் இப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள்" என்று குறிப்பிட்டார் (6:11அ). "நீங்களெல்லாரும் அப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள்" என்று கூறவில்லை. கொரிந்து பட்டணத்திலிருந்த எல்லா அங்கத்தினர்களுமே பவுல் வரிசை படுத்தின பாவங்களுக்கு உட்பட்டிருக்க வில்லை.

இருந்த போதிலும், கொரிந்து பட்டணத்து சபை, திருடர்களையும், உதாசினர்களையும், விக்கிரக ஆராதனைக்காரர்களையும், விபச்சாரக்காரர்களையும் சுய புணர்ச்சிக்காரர்களையும் வேறு தரப்பட்ட பாவங்களையும் செய்வோரைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இதை கற்பனை பண்ணிக்கூடப் பார்ப்பது நமக்கு கடினமாகத் தோன்றலாம்!

சில சகோதரர்கள், சபைக்குள்ளாக, நம்மைப்போல, நீதியுள்ள, மதிப்புக்குரிய அங்கத்தினர்களாக இருக்கும் பட்சத்தில் அப்படிப்பட்ட புதிய அங்கத்தினர்களாக வரவேற்பார்கள்! எப்படியிருப்பினும், கர்த்தர் அப்படிப்பட்ட வழியில் செயல் படுவதில்லை. பாவிகளை இரட்சிக்கவே அவர் வந்தார் (லூக்கா 19:10). அவர் ஆயக்காரர்கள் வீட்டிலும் பாவிகளுடைய வீட்டிலும் போஜனம் பண்ணினார் (லூக்கா 15:1, 2). அவர் இழந்து போனோரை நேசிக்கிறார் - இழிவாகக் கருதப்

பட்டவர்களையும், "தேவனுடைய இராஜ்யத்துக்கு தூரமானவர்களாய் இல்லாதவர்களையும்" ஆகிய அனைத்து இழந்து போனோரையும் அவர் நேசிக்கிறார் (மாற்கு 12:34 ஐக் காண்க). இதன் விளைவாக, புதிய ஏற்பாட்டுச் சபையில் ஒவ்வொருவரும் வரவேற்கப்பட்டார்கள் - இதற்கு முன்பாக அவர் எப்படிப்பட்ட பாவியாக வாழ்ந்தார் என்பது பற்றி அக்கரையில்லை!

இந்த ஒப்புமையை ஆராய்வோம்: ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட தன்னை எப்படித் தகுதியுள்ளவராக்கிக் கொள்கிறார்? அவர் வியாதிப்பட்டிருக்கிறார்! அதேபோலத்தான், நமது கர்த்தருடைய சபையில் ஒருவர் நுழையத் தேவையான தகுதி அந்த நபர் ஆவிக்குரிய வியாதிப்பட்டவராயிருக்கிறார்! அவர் ஒரு பாவி! எந்தப் பாவியாயினும் - அவனோ அவளோ செய்த பாவம் எதுவாயிருந்தாலும் - கிறிஸ்துவின் சபைக்குள் வர வரவேற்கப்படுகிறார்கள், இது பாவிகளுக்கான மருத்துவமனை!

சபையிலிருக்கும் பாவிகள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றனர் (6:11ஆ)

கொரிந்து சபையார்களுக்கு பவுலின் செய்தி

"உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்" என்று குறிப்பிட்ட பின், அவர்களின் எண்ணங்களின் தன்மையை உயர்த்தத் தக்கதான பாராட்டுதலையும் பவுல் கூட்டி, "ஆயினும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்," என்று சொன்னார் (வசனம் 11ஆ).

அடிப்படையில், அதே கருத்தை பவுல் மூன்று வழிகளில் குறிப்பிடுகிறார். ஏன்? வலியுறுத்தலுக்காக. ஒரு வேளை பரவசப்படும் ஒரு சிறு பிள்ளை ஒரு விளையாட்டுப் போட்டியில் ஜெயித்து விட்டால், என்ன செய்யுமோ அதையே பவுலும் செய்தார் போலும்; அந்த சிறு பிள்ளை ஆச்சரியத்துடன். "நான் ஜெயித்து விட்டேன்! நான் ஜெயித்து விட்டேன்! நான் ஜெயித்து விட்டேன்!" என்று கூச்சலிடுவான். பவுல் சொல்லுவ தென்னவெனில், "உங்களுடைய முந்தின நிலைமை பயங்கரமாயிருந்தது! இழந்து போனவர்களாயிருந்தீர்கள், ஆனால் இப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்! இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்! இரட்சிக்கப் பட்டிருக்கிறீர்கள்!"

இந்தக் கருத்துத் திரும்ப திரும்பக் கூறப்பட்டாலும், பவுலின் மூன்று வார்த்தைகளின் வெளியீடு உய்த்து உணரத்தக்க மூன்று வித்தியாசப் பட்ட உட்கருத்துக்களையும் அவை கொண்டிருந்தன. "ஆயினும் நீங்கள் கழுவப்பட்டீர்கள்" எனும் பதம் "கிறிஸ்தவர்களின்" பாவங்களுக்கு என்னவாயிற்று என்பதை விளக்கப்படுத்துகிறது. அவர்கள் கழுவப்பட்ட போது அவர்களின் பாவங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டன. இந்த கழுவப்படுதல் விசுவாசத்திற்குப் பின் கொரிந்தியர் ஞானஸ்நானம் பெற்ற போது நிகழ்ந்தது (நடபடிகள் 18:8). "கழுவப்படுதல்" எனும் இந்தக் கருத்து, தண்ணீர் ஞானஸ்நானத்தைச் சுட்டிக் காட்டுகிறதாக அடிக்கடி புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது (நடபடிகள் 22:16; எபேசியர் 5:26; தீத்து 3:5).

"நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்" என்பது தேவனுடைய ஊழியத்திற்கென

"பிரித்தெடுக்கப்பட்டீர்கள்," அல்லது "நீங்கள் தூய்மையாக்கப்பட்டீர்கள்" என்று பொருள் படும். தங்களுடைய பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு, இந்த ஜனங்கள் தேவனுடைய ஊழியத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள்; அவர்கள் "பரிசுத்தவான்களாக" அல்லது "சுத்திகரிக்கப்பட்டவர்களாக" மாறினவர்கள் (1 கொரிந்தியர் 1:2).

"நீங்கள் நீதிமான்களாக்கப் பட்டீர்கள்" என்பது "நீதியுள்ளவர்களாக்கப் பட்டீர்கள்" அல்லது எளிய வார்த்தையில் சொன்னால், "நீங்கள் தேவனிடத்தில் சரியாக்கப்பட்டீர்கள்" என்று பொருள். அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன் அவர்கள் தேவனுக்கு முன் சத்துருக்களாய், அவரது கோபத்துக்கும் மரண தண்டனைக்கும் உட்பட்டவர்களாய் வாழ்ந்தவர்கள். நீதிமான்களாக்கப்பட்டபடியால், அவர்கள் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டவர்கள் மற்றும் தேவனுடைய அங்கீகாரம் பெற்றவர்கள் (ரோமர் 5:1, 10).

திருடரும், விபச்சாரக்காரரும் சுயபுணர்ச்சிக்காரர்களுமாயிருந்த இவர்களிடத்தில் என்னவொரு குறிப்பிடத்தக்க மாற்றம் இடம் பெற்றது! அவர்கள் மறுரூபமாக்கப் பட்டார்கள்; அவர்களுடைய நிலைமை மாற்றம் பெற்றது! இனியும் அவர்கள் இழந்து போனவர்களல்ல; அவர்கள் - கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப் பட்டு, நீதிமான்களாக்கப்பட்டவர்கள் - இரட்சிக்கப்பட்டவர்கள்!

நமக்கு பவுலின் செய்தி

கொரிந்து பட்டணத்து சபையிலிருந்தவர்கள் பாவிகளாயிருந்து சுத்திகரிக்கப்பட்டவர்கள் என்பதால் நாம் களி கூர்ந்து மகிழ்கிறோம் - ஆகிலும் சிலர், "இந்த வசனப் பகுதி இன்று எனக்கு போதிப்பது என்ன?" என்று கேட்கலாம்.

அவர்கள் இரட்சிக்கப்படக் கூடுமானால், நாமும் இரட்சிக்கப்பட முடியும்! நாம் என்ன செய்தோம் என்பதோ, எவ்வளவாய் பாவம் செய்தோம் என்பதோ ஒரு பொருட்டல்ல, நாம் இரட்சிக்கப்படக்கூடும்! கிறிஸ்துவை கொலை செய்தவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட முடிந்தது எனில் (நடபடிகள் 2:23, 36-41), சபையைத் துன்புறுத்தி பிறகு தன்னைத் தானே "முதன்மையான" (KJV), அல்லது பிரதான பாவி என்று உணர்ந்த பவுல் (1 தீமோத்தேயு 1:15) - இரட்சிக்கப்படக்கூடுமானால், திருடரும், விக்கிரக ஆராதனைக்காரர்களும், சுய புணர்ச்சிக்காரரும் கொரிந்து பட்டணத்தில் இரட்சிக்கப்பட்டிருக்கக் கூடுமானால், பிறகு நாமும் கூட இரட்சிக்கப் படக் கூடும்!

அவர்கள் இரட்சிக்கப்பட்டதுபோல நாமும் இரட்சிக்கப்படக் கூடும்! வசனம் 11ல் ஒரு நபர் எப்படி கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப் பட்டு, நீதிமானாக்கப்பட முடியும் என்பதை விளக்கப் படுத்துகிறது: இது "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும் தேவனுடைய ஆவியினாலும்" மட்டுமே சாத்தியமாகும். இந்த பெரிதான ஆசீர்வாதத்தைப் பற்றிக்கொள்ள வேண்டுமானால், இன்றைக்கு ஒருவர் கொரிந்தியர்கள் செய்தது போலவே - முதல் நூற்றாண்டில் சுவிசேஷத்துக்குப் பதில் செயல் செய்தவர்களைப் போலவே - நாமும் செய்ய வேண்டும். அவனோ அவளோ இயேசுவை விசுவாசிக்க வேண்டும் (யோவான் 8:24); பாவத்திலிருந்து மனந்திரும்ப, அல்லது

திரும்ப வேண்டும் (லூக்கா 13:3; நடபடிகள் 17:30); கிறிஸ்துவிலுள்ள தனது விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் (மத்தேயு 10:32; ரோமர் 10:9, 10); பிறகு அவர் தனது பாவ மன்னிப்பிற்கென்று தண்ணீர் முழுக்கப்பட வேண்டும் அல்லது ஞானஸ்நானம் பெற வேண்டும் (நடபடிகள் 2:38; மாற்கு 16:16; 1 பேதுரு 3:21).

தேவனுடைய கிருபையினால் இயேசு கிறிஸ்துவின் சுத்திகரிக்கும் வல்லமை பெற்ற இரத்தத்தின் மூலமாக, கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப் பட்டு நீதிமான்களாக்கப்பட வேண்டிய அவசியத்தில் நீங்கள் இருக்கிறீர்களா? அனனியா சவுலுக்குச் செய்யச் சொன்னதை நீங்களும் செய்யும்படி நானும் உங்களை வலியுறுத்தட்டும்: "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (நடபடிகள் 22:16). நீங்கள் இழந்து போயிருக்கும் நிலையை உணருங்கள், அதை மாற்றத் தீர்மானியுங்கள்.

பாவிகளாயிருந்து சபைக்குள் இருப்பவர்கள் பாவம் செய்யாதிருப்பார்களாக

பாவம் கடந்த காலச் செயலாக இருக்க வேண்டும்

6:11ல் சொல்லப்படுகிற காலத்தைக் கவனியுங்கள்: "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்" (எனது வலியுறுத்தல்). "இருந்தீர்கள்" என்பது கடந்த காலத்தைக் குறிப்பிடும் சொல். இன்னொரு வார்த்தையில் சொன்னால், விபச்சாரக்காரர்கள் இனியும் விபச்சாரம் செய்வதில்லை; விக்கிரகாராதனைக்காரர்கள் இனியும் விக்கிரகங்களை தொழுது கொள்வதில்லை; திருடர்கள் இனியும் திருடுவதில்லை; சுய புணர்ச்சிக்காரர்கள் தங்கள் சுய புணர்ச்சியை விட்டு விட்டார்கள்!

"ஒழுக்கமுள்ளவர்களும்" அல்லது "மரியாதையுள்ளவர்களும்" தான் சபைக்குள் - கிறிஸ்துவின் பாவிகளுக்கான மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு தகுதியுள்ளவர்களல்ல - யார் வேண்டுமானாலும் அனுமதிக்கப்படுவர் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர வேண்டும். பாவிகள் யாராயிருந்தாலும், அவர்கள் என்ன செய்திருந்தாலும், அவர்கள் தேவனுடைய இராஜ்யமாகிய கர்த்தருடைய சபைக்குள், பாதுகாப்பின் மந்தைக்குள் வரவேற்கப்படுகிறார்கள்.

அந்த பாதுகாப்பின் மந்தைக்குள் நுழையும் போது, நாம் மனந்திரும்பவேண்டும். நாம் அந்த பாதுகாப்பான மந்தைக்குள் நிழையும்போது நாம் மனந்திரும்ப வேண்டும் என்பது அதே அளவு முக்கியமான சத்தியமாயிருக்கிறது. அதாவது நாம் - உலகத்திலிருக்கும் போது நடப்பித்துக் கொண்டிருந்த பாவங்களை இனியும் செய்யாதபடிக்கு தீர்மானிக்க வேண்டும் என்பதும் அதே போல முக்கியமானது. என்ன பாவத்தை செய்திருந்தாலும், இனியும் அதைச் செய்யாமல் நிறுத்துவது தான் மனந்திரும்புதல்!

சபை ஒரு உதவி செய்கிற குழுவாக இருக்க வேண்டும்

ஒரு வேளை, சபையை ஒரு மருத்துவமனைக்கு ஒப்பிடுவதற்குப் பதிலாக, அதை ஒரு புனரமைப்பு மையத்திற்கோ, அல்லது பரஸ்பர உதவி குழுவிற்கோ

ஒப்பிடலாம். "பன்னிரண்டு படி குழுக்கள்" போன்ற குடிபழக்கத்தை நிறுத்த உதவும் குழுக்கள் அறிவுரை வழங்குதல், ஊக்கமளித்தல், தங்களுடைய வாழ்வுக்கு பொறுப் பேற்றுக் கொள்வது, போன்றவற்றை, தங்கள் வாழ்வை மாற்றியமைக்க முயற்சிப்போருக்குச் செய்கின்றனர். நாம் எல்லாரும் இந்த உதவும் குழுவில் ஒரு அங்கமாக இருந்து, பொதுவான பிரச்சனைகளை மேற்கொள்ள ஒருவருக்கொருவர் உதவ முயற்சிக்க வேண்டும். நம்மில் எல்லாருக்குமே பலவீனங்கள் உண்டு; நாம் பாவம் செய்ய சோதிக்கப்படுவோம். எப்படியாயினும், நாம் முன்பு செய்து கொண்டிருந்த பாவ வாழ்விற்கு வழுவிப் போகாமல், ஒன்றாகச் சேர்ந்து, நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

சபையின் இந்த எதிர் நோக்கம் பயன்களையும் தேவைகளையும் வலியுறுத்துகிறது. பரஸ்பர உதவிகளை நமக்கு நாமே செய்து கொள்ளும் போது, நம்மிலே யாருமே மற்றொருவரைக் காட்டிலும் மேலானவர் என்ற உணர்வைப் பெற இயலாது. ஒரு கிறிஸ்தவன் பொருளாசையாலோ, பேராசையாலோ போராடிக் கொண்டிருக்கையில், இன்னொருவர் ஒழுங்கீனக் காரியங்களில் போராடலாம். வேறு சிலர் பொய்களையும், அல்லது கோபங்களையும் மேற் கொள்ள முயற்சிக்கலாம். நாம் எல்லாரும் மேலும் மேலும் இயேசுவைப் போலிருக்க முயற்சிக்கிறோம், மாமிச இச்சைகளை வெற்றி கொள்ளவும் தெய்வீக குணத்தை எடுத்துக் கொள்ளவும் முயற்சிக்கிறோம். நாம் எல்லாரும் கிருபையினால் இரட்சிக்கப்பட்ட பாவிகளாயிருக்கிறோம்.

நாம் மெய்யாகவே பழைய மனிதனைக் களைந்து போட்டு, கிறிஸ்தவனாவதற்கு முன்பாக குற்றத்துக்கு ஆளான பாவங்களை விட்டு விட வேண்டும். கிறிஸ்து பாவிகளை ஏற்றுக் கொள்கிறார். ஆனால் அவர் பாவத்தை சகித்து கொள்வதில்லை! தேவனுடைய கோபாக்கினையால் - இரட்சிக்கப்படக்கூடாத அளவுக்கு ஒருவர் பாவம் செய்யக் கூடும் என்று நினைப்பதில் ஆபத்து இருப்பது போலவே - தேவனுடைய கிருபையினால் - ஒருவர் தொடர்ந்து பாவம் செய்தாலும் கிருபை தொடரும், தேவன் எப்போதும் மன்னித்துக் கொண்டே இருப்பார் - என்ற நினைவும் ஆபத்தானது. தேவன் மன்னிப்பார்; ஆனால் நீங்கள் மனந்திரும்பவேண்டும்! மனந்திரும்பதல் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. நாம் பாவத்தை செய்யாமலிருக்க இயன்ற வரை முயற்சித்து தேவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

முடிவுரை

கிறிஸ்துவின் மருத்துவமனையாகிய அவருடைய சபை சம்பந்தப் பட்டக் காரியங்களில் நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? நீங்கள் சபைக்குள் இருக்கிறீர்களா? தாழ்வு மனப் பான்மையினால் நீங்கள் ஒரு வேளை சபையில் அங்கம் வகிக்கத் தாமதித்துக் கொண்டிருக்கலாம்.நீங்கள் மிகவும் பாவம் நிறைந்தவராயும், கிறிஸ்தவனாக வாழக் கூடிய அளவுக்கு நல்லவரல்ல என்றும் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஒரு வேளை சபையில் உங்களுக்கு உரிய வரவேற்பு கிடைக்காது என்று நீங்கள் நம்பிக் கொண்டிருக்கலாம். ஒரு வேளை சபையின் ஆராதனையில் கலந்து கொண்டிருக்கையில், "நான் இந்த இடத்துக்குரியவனல்ல," என்று நினைக்கலாம். அப்படியிருக்குமானால் உங்களுக்காக நான் ஒரு செய்தியை வைத்திருக்கிறேன். சபையிலே உங்களுக்கும் உடமையுண்டு,

சபையில் உங்களுக்கும் உடமை இருக்கிறது என்ற உணர்வைப் பெற வாய்ப்புண்டு. சபைக்குள் நீங்கள் நுழைய கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட வேண்டும்.

நீங்கள் ஒரு வேளை இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தால், எப்பொழுதும் போல் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். இது தான் உண்மையெனில் உங்கள் வாழ்க்கையை முற்றும் எதிரிடையாக திருப்பவேண்டியது அவசியமாயிருக்கிறது. நீங்கள் உங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி (நடபடிகள் 8:22), அதை அறிக்கையிட்டு (1 யோவான் 1:9), பாவமன்னிப்பிற்கென தேவனிடத்தில் ஜெபித்து கிறிஸ்துவினிடத்திற்குத் திரும்ப முடியும் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16). சபை எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருக்க நீங்கள் உதவி செய்யலாம், தேவன் நீங்கள் எப்படியிருக்க வேண்டு மென்று விரும்புகிறாரோ அப்படியிருக்க சபை உதவட்டும்!

குறிப்பு

[1]James Burton Coffman, *Commentary on 1 and 2 Corinthians* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977), 88.

பிரசங்கம் 5

புருஷனுக்கும் மனைவிக்கும் இடையேயான பிரச்சனைகள்

(1 கொரிந்தியர் 7:1-16)

ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொண்ட பிறகு அவர்கள் "மனமகிழ்ச்சியோடு எப்போதும் வாழும்படி" எதிர்பார்க்கப்படுகின்றனர். எப்படியிருப்பினும், ஒவ்வொரு முறையும் மழையுடன் வானவில் வருவது போல, ஒவ்வொரு விவாக அனுபவத்திலும் புருஷனுக்கும் ஸ்திரீக்குமிடையே சச்சரவுகள் வருவது இயல்பு. பூமியிலேயே கணவனுக்கும் மனைவிக்கும் இடையே அதிகபட்ச நெருக்கமான உறவை ஏற்படுத்துவது உறுதியளிக்கப்பட்டாலும், உடனடியாகவோ பின்னதாகவோ, இருவருக்குமிடையே முரண்பாடுகள் இருக்கும். இரண்டுபேர் நெருக்கமாக ஒன்றான வாழ்க்கை வாழும்போது, அவர்களிடையே சில நுணுக்கமான வித்தியாசங்களை கண்டுபிடிப்பார்கள். விவாகரத்துவரை இந்த முரண்பாடுகள் அவர்களை கொண்டு செல்லுமளவுக்கு பெரிதாகிவிடக்கூடும். முரண்பாடுகளை அனுபவிக்கும் தம்பதி, நுகத்திலே இணைக்கப்பட்டவர்களாய் சந்தோஷமில்லாமலேயே நிலைத்திருக்க (கூடிவாழ்ந்து கொண்டிருக்க)லாம்.

தள்ளிவிடுதலை தேவன் வெறுக்கிறார் (மல்கியா 2:16; மத்தேயு 19:3-9). இது முழுமையான தீமை. விவாகரத்து தேவனுடைய திருமணத்திட்டத்துக்கு முரணானதும், விவாகரத்து செய்து கொண்டவர்களுக்கும், பிள்ளைகளுக்கும், குடும்பத்தைச் சார்ந்த மற்றவர்களுக்கும் கடின உணர்வை ஏற்படுத்தக்கூடியது. அது சமுதாயத்தையும் சீரழிக்கும். சில வேளைகளில் திருமண பந்தத்தில் இணைக்கப்பட்ட ஒரு நபரை அவரைக்கடுமையாய் நடத்துகிற அவரது துணையிடமிருந்து பிரிப்பதோ அல்லது விவாகரத்து பெற வைப்பதோ அவசியமாகும். அப்படியொரு சோகநிகழ்ச்சி நடக்கும்போது, விவாகரத்து இரண்டு தீமைகளில் குறைவானது.

ஆகையால், கிறிஸ்தவர்கள் எப்படியாகிலும் தங்களுடைய வாழ்க்கைத் துணையுடன் ஒத்துப் போக ஏதுவாகவும், திருமண பந்தத்தில் நிலைத்திருக்கும்படியாகவும் ஏதாவதொரு பரிசீலனை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள் (மத்தேயு 19:6) கிறிஸ்தவர்களுக்கு விவாகரத்தைத் தெரிந்து கொள்ளும் உரிமையில்லையெனில், பிறகு வேறு என்ன உரிமைகள் உள்ளன?

முரண்பாடுகளை தவிர்ப்பதற்காக செயல்படுதல்

திருமண வாழ்க்கையில், புருஷனுக்கும் மனைவிக்கும் இடையேயான முரண்பாட்டிற்கான சரியான நிவாரணம், அப்படியோரு முரண்பாடு

வராமலேயே காத்து கொள்வது தான். இது முற்றிலும் சாத்தியமில்லையெனினும் சில அடிப்படை வழிகாட்டுதல் உதவிகரமாக இருக்கலாம்.

(1) *சரியான நபரை விவாகம் பண்ணுங்கள்.* ஒரு கிறிஸ்தவன் மற்றொரு விசுவாசமுள்ள (தேவன் விரும்புகிறபடி வாழ முயற்சிக்கிற) ஒரு நல்ல கிறிஸ்தவ பெண்ணையோ வாலிபனையோ விவாகம் பண்ணிகொள்ள வேண்டும். உங்களுடன் சமமான பங்கேற்கக் கூடிய நபரை நீங்கள் விவாகம் பண்ணுவது கூடுதல் உதவியாக இருக்கும். விவாகத்திற்கு முன்பாக ஒருவரின் செயல்பாட்டைக் கொண்டு திருமணத்திற்கு பின்பு இப்படித் தான் இருப்பார் என்று உங்களால் சரியான முறையில் கணிக்க இயலாமல் இருக்கலாம். ஆகிலும் நீங்கள் ஒருவருக்கு அருகில் இருந்து, பழகினால் திருமணத்திற்கு பின்பு இப்படித்தான் இருக்கக் கூடும் எனும் கருத்து உங்களுக்குள் உருவாகக் கூடும்.

(2) *சரியான நபராக மாற வழிதேடுங்கள்.* நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்து ஆவிக்குரிய முறையில் நீங்கள் வளர முயற்சித்துக் கொண்டிருப்பீர்களானால், நீங்கள் சுய நலமற்றவராக, நற்பண்புள்ளவராக, கனிவானவராக, மன்னிக்கும் சுபாவமும் சகிப்புத் தன்மையுடையவருமாக இருப்பீர்கள் (1 கொரிந்தியர் 13:5; எபேசியர் 4:32; கொலோசெயர் 3:13) - கிறிஸ்தவர்கள் கொண்டிருக்க வேண்டிய ஒரு சில குணாதிசயங்களே இங்கு பெயரிடப்பட்டுள்ளன. இரண்டு பேரும் உண்மையான கிறிஸ்தவராயிருக்க இயன்ற அளவு பிரயாசப்படுவார்களானால், அவர்களிடையே மிக வினயமான முரண்பாடுகள் மிகக் குறைவாகவே இருக்கக் கூடும்.

(3) *உங்கள் இல்லத்தை கிறிஸ்து மையம் வகிக்கக் கூடிய இல்லமாக மாற்றுங்கள்.* உங்கள் இல்லம் கிறிஸ்து கனப்படும் இடமாக இருக்கவேண்டும். திருமறையை தினசரி வாசித்து, ஒன்றாக பாடி குடும்பமாக ஜெபியுங்கள். குடும்பமாக சேர்ந்து தொழுகைக்குச் செல்லுங்கள். ஒன்றாக நல்லதைச் செய்யுங்கள். இந்த முன்னுரிமைகளோடு வாழுவீர்களானால், அப்பொழுது உங்கள் இல்லம் பாதுகாப்பு உள்ளதாயும், யுத்த பூமிக்குப் பதிலாக அன்பின் புகலிடமாகவும் விளங்கும்.

முரண்பாடுகளை சரிசெய்யத்தக்கதாக கிறிஸ்தவ வழியில் பிரயாசப்படுங்கள்

மிகச் சிறப்பான விவாகங்களில் கூட புருஷனுக்கும் மனைவிக்குமிடையே முரண்பாடுகள் ஏற்படுவது ஏன்? வித்தியாசப்பட்ட அநேகக் காரணங்களில் சிலவற்றை பின்வரும் காரியங்களால் அறிவோம்.

(1) *தனித்தன்மை வித்தியாசம்* - எல்லாவற்றையும் சாதகமாகக் காணும் ஒருவர் எல்லாவற்றையும் பாதகமாக்க காணும் ஒருவரை மணமுடித்திருக்கலாம்; ஒரு செலவாளி சேமிக்கும் குணமுடைய ஒருவரை மணமுடித்திருக்கலாம்.

(2) *அடிப்படை (ஆண் - பெண்) பால் வித்தியாசம்.* ஆணும் பெண்ணும் தன்மைகளில் வித்தியாசமுள்ளவர்களாயிருப்பார்கள், பிறவிக்குணங்களில் ஒத்துப்போகாத தன்மைகளால் முரண்பாடுகள் ஏற்படலாம்.

(3) *கருத்து வேறுபாடுகள்.* குறிப்பிட்ட சூழ்நிலையில் என்ன செய்வது, எப்படி செயல்படுத்துவது என்கிற விஷயத்தில் ஒரு நல்ல விசுவாசமுள்ள கிறிஸ்தவன் கூட ஒத்துப் போகும் தன்மையற்றவராகி விடுவார்.

(4) *மனித பெலவீனம்.* நாம் சுயநலமற்றவர்களாயும், தாழ்மையுள்ளவர்களாயும் இருக்க விரும்பினாலும், நேரம் வரும்பொழுது சுயநலமுள்ளவர்களாயும், பெருமையுள்ளவர்களாயும் மாறிவிடுவோம். அப்படி நடக்கும் போது, தனது வாழ்க்கைத் துணையுடன் முரண்படுவார்.

முரண்பாடுகளைச் சரிசெய்ய என்ன செய்ய வேண்டும்? இதோ சில அடிப்படை ஆலோசனைகள்:

1. ஜெபத்திலே தேவனிடத்தில் போங்கள், அவருடைய வசனத்திலிருந்து ஞானத்தைத் தேடுங்கள்.
2. பிரச்சனையின் தன்மையை அளவிடுங்கள்.
3. உங்களைக் குறித்தும் ஏற்பட்ட முரண்பாட்டில் உங்களுக்கு இருக்கும் பங்கையும் பரிசோதியுங்கள்.
4. பிரச்சனையைத் தீர்க்கிற விஷயத்தைத் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்காதீர்கள்.
5. எச்சரிக்கையாக பேச்சுத் தொடர்பு கொள்ளுங்கள்.
6. கவனமாகக் கேட்டறியுங்கள்.
7. பரஸ்பர ஏற்புடையத் தீர்ப்பைத் தேடுங்கள்.
8. கிறிஸ்தவர்கள் தாழ்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதை மனதில் வையுங்கள் (எபேசியர் 5:21;).
9. தேவைப்பட்டால் சூழ்நிலையை ஏற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள்.

உதவிகர*மாயிராத* அணுகுமுறைகளில் ஒன்று, புருஷன் "வீட்டுத்தலைவனாக" ஆளுகை செய்யும் தன் உரிமையைக் கேட்டு பெற முயற்சிப்பது. புருஷன் தன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் மனைவியானவள் அவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று திருமறை போதித்தாலும் (எபேசியர் 5:22-24), கிறிஸ்து தமது சபையில் அன்புகூருவது போல புருஷனும் தன் மனைவியினிடத்தில் அன்புகூர வேண்டும் என்றும் அது போதிக்கிறது (எபேசியர் 5:25; வசனம் 28யும் காண்க). முரண்பாடுகள் ஏற்படும் பொழுதெல்லாம், புருஷனும் மனைவியும் பங்குதாரர்கள் போல் பிரச்சனையை அணுக வேண்டும் - "சம அதிகாரமுள்ள" பங்குதாரர்களாக அல்ல, கிறிஸ்தவப் பங்காளிகளாக.

முடிவுரை

விவாகரத்து (தள்ளிவிடுதலைக்) குறித்து இயேசுவினிடத்தில் கேட்கப்பட்ட போது, "ஆதலால் தேவன் இணைத்ததை, மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்" என்றார் (மத்தேயு 19:6) நாமும் கூட திருமண பந்தத்தைக் காத்துக் கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டும்; நம்மிலே மணமானவர்கள் நமது திருமண வாழ்க்கை சிறக்கப் பிரயாசப்படுவோமாக. இன்னும் விவாகமாகாதவர்கள், தங்களுடைய வாழ்வின் மீதி நாட்களெல்லாம் வாழ வேண்டிய நபர்களை அதிகமான கவனத்துடன் தேர்ந்தெடுத்து விவாகம் பண்ண வேண்டும். திருமணக் காரியங்களில், நாம் செய்கிற யாவும் சொல்லுகிற யாவும் கர்த்தருடைய நாமத்தை மகிமைப் படுத்துவதாக இருக்கட்டும்.

பிரசங்கம் 6

சோதனையைப் பற்றிய சத்தியம்

(1 கொரிந்தியர் 10:13)

1 கொரிந்தியர் 10:13ல் நாம், "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" என்று வாசிக்கிறோம்.

சோதனையைப் பற்றிப் பல பொய்கள் நம்பப்படுகின்றன. வேதாகமத்தில் போதிக்கப் பட்டுள்ளபடி இந்தப் பாடக்கருத்தைப் பற்றி சத்தியத்தைப் புரிந்துகொள்வதற்கு நாம் முயற்சி மேற்கொண்டால், நாம் அந்தப்பொய்களை வெளியாக்க முடியும்.

"சோதனை" என்பதைப் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன என்பதை ஆழ்ந்து சிந்திப்பதற்கு முன் நாம், அவ்வார்த்தையை விளக்கப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. "சோதனை" என்பது கிரேக்க மொழியில் peirazō ...[1] என்பதாக உள்ளது. Peirasmos என்பது "சோதனை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள பெயர்ச்சொல்லாக உள்ளது. "சோதனை ஒன்றிற்கு வைத்தல்" என்பது "பரீட்சை பார்த்து" என்ற வார்த்தையின் அடிப்படை அர்த்தமாக உள்ளது. W. E. வைன் அவர்கள் இவ்வினைச்சொல்லிற்குப் பின்வரும் விளக்கத்தைக் கொடுத்தார்: "(1) சோதிக்க, முயற்சிக்க ...; (2) சோதித்துப் பார்க்க, முயற்சித்தல், நிரூபித்தல்."[2]

புதிய ஏற்பாட்டில் இந்த கிரேக்க வார்த்தை, இரண்டு முதன்மை வழிகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது: "பண்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை வெளிப்படுத்தல் மற்றும் தூண்டுதல்" என்பதைத் தமது நோக்கமாகக் கொண்ட சோதனைகளுக்கு மற்றும் "பொல்லாங்கிற்கு கவர்ந்து தூண்டப்படுதல்கள்" என்ற வகையில் புரிந்துகொள்ளப் படக்கூடிய சோதனைக்கு.[3] மத்தேயு 16:1ல் (மற்றும் இது போன்ற வசனப் பகுதிகளில்) இவ்வார்த்தை, இயேசுவைப் பரிசேயர்கள் சோதித்துப் பார்த்தலுக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது; 2 கொரிந்தியர் 13:5ல் கிறிஸ்தவர்கள் தங்களையே சோதித்துப் பார்த்துக்கொள்ளும்படி கூறப்பட்டுள்ளனர்; மற்றும் யோவான் 6:6ல்வசனப்பகுதி, இயேசு பிலிப்புவை சோதித்தார் என்று கூறுகிறது.[4] சோதிக்கப்படுதல் அல்லது சோதனைகளின்போது கிறிஸ்தவர்கள் உண்மையாக நிலைத்திருந்தால், அவைகள் பயனுள்ள செயல்விளைவைக் கொண்டிருக்க முடியும். நாம், "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில்

அகப்படும்போது, ... அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" மற்றும் "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" என்று வாசிக்கிறோம் (யாக்கோபு 1:2, 12).

இருப்பினும், யாக்கோபு 1:14, 15ல் உள்ளது போன்று, சோதனைகள் "பொல்லாங்கிற்கு கவர்ந்து இழுக்கப்படுதல்" என்பதையும் உள்ளடக்கி இருக்க முடியும்: "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்." புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப் படும்போது இவ்வார்த்தை, பாவம் செய்யும்படி சோதிக்கப்படுதலை அடிக்கடி குறிப்பிடுகிறது. அதுவே நம்மைக் கவலையடையச் செய்யும் அர்த்தமாக உள்ளது. சோதிக்கப்படுதல் பற்றி வேதாகமம் போதிப்பதற்கு நேர் எதிராக, மக்கள் சில வேளைகளில் நம்பும் பொய்களைப் பற்றி நேரெதிராக ஒப்பிட நாம் விரும்புகிறோம்.

பொய் #1

பொய்: "பாவம் செய்யும்படி தேவன் உங்களைச் சோதிக்கிறார்."

சத்தியம்: பாவம் செய்யும்படி தேவன் நம்மைச் சோதிப்பதில்லை, ஆனால் சோதிக்கப்படும்படி அவர் நம்மை அனுமதிக்கிறார்.

தேவன் நம்மைச் சோதிக்கிறார் என்பது சோதிக்கப்படுதல் பற்றிய முதல் பொய்யாக உள்ளது. யாக்கோபு 1:13, "சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல" என்று கூறுகிறது.

தேவன் மக்களைச் சோதிப்பதில்லை என்று இவ்வசனப்பகுதி நமக்குத் தெளிவாகப் போதிக்கிறது.[5] சோதிக்கப்படுதல் பற்றித் தேவன் எதையேனும் செய்கிறாரா? ஆம், அவர் செய்கிறார், ஏனெனில் நாம் சோதிக்கப்படும்படி தேவன் அனுமதிக்கிறார் என்றும் வேதாகமம் போதிக்கிறது. ஆதாமும் ஏவாளும் சோதிக்கப்படுவதற்கு அவர் அனுமதித்தார், மற்றும் யோபுவைச் சோதிக்கும்படி சாத்தானுக்கு அவர் அனுமதி அளித்தார். நமது திராணிக்கு மேலாகச் சோதிக்கப்படுவதற்கு அவர் அனுமதிப்பதில்லை (1 கொரிந்தியர் 10:13) என்று பவுல் எழுதியபோது, நாம் சோதிக்கப்படுவதற்கு தேவன் அனுமதிக்கிறார் என்று அவர் சுட்டிக்காண்பித்தார்.

வேறுபாடு என்னவாக உள்ளது? இதை விவரிப்பதற்கு நாம், போதைப் பொருள்களை உபயோகப்படுத்தக் கூடாது என்பதைப் போதிப்பதற்குத் தங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்படும் பெற்றோர்களைப் பற்றிக் கற்பனை செய்து பார்க்கலாம். பிள்ளைகளை அவர்களின் அறைகளில் பூட்டி வைத்து அவர்களுக்கு போதைப் பொருள்களைத் தருகிறவர்கள் அல்லது விற்கிறவர்களுடன் அவர்கள் தொடர்புகொள்ள ஒருபோதும்

அனுமதியாதிருத்தல் என்பது, தீங்கிழைக்கும் போதைப் பொருட்களை அவர்கள் பயன்படுத்துவதைத் தடுக்கும் ஒரு வழியாக உள்ளது. இருப்பினும் பெற்றோர்கள் அவ்வாறு என்றென்றுமே செய்ய முடியுமா? இல்லையே. பிள்ளைகள் வளருகின்றனர் மற்றும் அவர்கள் புறம்பான உலகத்தை - அவர்கள் சோதிக்கப்படக்கூடிய ஒரு உலகத்தை - எதிர்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். பெற்றோர்கள், போதைப் பொருள்களைப் பயன்படுத்தும்படியான சோதனையைத் தங்கள் பிள்ளைகள் எதிர்கொள்ளும்போது, அவர்கள் சரியான தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்தப் போதிய அளவு போதித்துள்ளதாக நம்பிக்கை வைக்கின்றனர். இருப்பினும் பிள்ளை தவறான முடிவை ஏற்படுத்தினால் அது பெற்றோரின் தவறாக இருக்க வேண்டும் என்ற அவசியம் உள்ளதா? ஒரு கருத்தில், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சோதிக்கப்படும்படி அனுமதித்தனர், ஆனால் அவர்கள் அந்தப் பிள்ளைகளைச் சோதிக்கவில்லை என்பது உறுதி! அவ்வாறே தேவன் நம்மை, தவறான தேர்வு செய்தல்களில் இருந்து காப்பதற்காக எல்லாவற்றையும் செய்கிறார். நமது சொந்த முடிவுகளை மேற்கொள்ள நமக்குச் சுயாதீனம் அளித்தலில் அவர், நாம் சோதிக்கப்படும்படி அனுமதிக்கிறார்; ஆனால் அவரே நம்மை சோதிப்பதில்லை. தேர்ந்துகொள்ளுதல் மற்றும் சோதனைகள் ஆகியவற்றை நாம் எதிர்கொள்ள அனுமதிப்பதில், அவர் நமது சொந்த சுயாதீனத்தில் அவர்மீது அன்புகூரவும் அவருக்குக் கீழ்ப்படியவும் சிலாக்கியத்தை நமக்குத் தருகிறார்.

பொய் #2

பொய்: "பிசாசானவன் உங்களைப் பாவம் செய்ய வைக்கிறான்."

சத்தியம்: பிசாசானவன் நம்மைச் சோதிக்கிறான், ஆனால் நாம் பாவம் செய்யும்படி அவன் நம்மைக் கட்டாயப்படுத்த முடியாது

நாம் யாவருமே இந்தப் பொய்யைக் கேள்விப்பட்டிருக்கிறோம் - மற்றும் நமக்கு நாமே பின்வருமாறு நாம் கூறியிருக்கலாம்: "பிசாசானவன் என்னை அதைச் செய்யவைத்தான்!" இந்தக் கூற்று ஒரு நல்ல சாக்குப்போக்கை ஏற்படுத்துகிறது, ஆனால் இது உண்மையல்ல.

பிசாசானவன் நம்மைச் சோதிக்கிறான் என்பது உண்மையே. வேதாகமத்தில் பிசாசானவன், சோதனைக்காரன் என்று சித்தரிக்கப் பட்டுள்ளான் (மத்தேயு 4:3). அவன் ஏதேன் தோட்டத்தில் ஆதாமையும் ஏவாளையும் சோதித்தான் (ஆதியாகமம் 3); அவன் யோபுவைச் சோதித்தான் (யோபு 1; 2); அவன் இயேசுவைச் சோதித்தான் (மத்தேயு 4:1-11); மற்றும் அவன், பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப் பொய்கூறும்படி அனனியாவையும் சப்பீராளையும் சோதித்தான் (நடபடிகள் 5:3). அவன் "சோதனைக்காரன்" என்றும் (1 தெசலோனிக்கேயர் 3:5) "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" என்றும் (1 பேதுரு 5:8) அழைக்கப் படுகிறான்.[6]

இருப்பினும் பிசாசானவன், நாம் செய்ய விரும்பாதவற்றைச் செய்யும்படியாக்க முடியாது. யோபுவின் வரலாறு, சாத்தான் மீது தேவன்

வரையறை வைக்கிறார் என்பதை விவரிக்கிறது, இதன் விளைவாக அவன் நாம் பாவம் செய்யும்படி கட்டாயப்படுத்த முடியாது. "பிசாசானவன் என்னை அதைச் செய்ய வைத்தான்" என்பது ஒரு பொய்யாக உள்ளது - இது தவறு என்று நாம் அறிந்துள்ளவற்றை நாம் செய்யும்போது நாம் தப்பிக்க முயற்சி செய்வதற்காகக் கூறும் சாக்குப்போக்காக உள்ளது - என்பதை நாம் காண்பது அவசியமாக உள்ளது.

பொய் #3

பொய்: "ஒருக்காலும் சோதிக்கப்படாதபடி நீங்கள் மிகவும் நல்லவராக இருக்க முடியும்."

சத்தியம்: எல்லாரும் சோதிக்கப்படுகிறோம், மற்றும் எவரொருவரும் தாம் சோதிக்கப்படாத அளவுக்கு மிகவும் நல்லவராக இருக்க இயலாது. ஆவிக்குரிய வகையில் பக்குவம் அடைந்தவர்கள், மற்றவர்களைப் போன்று, அடிக்கடி சோதனைக்கு இடம் கொடுத்துவிட மாட்டார்கள்.

ஒருவர் அல்லது ஒருத்தி எவ்வளவு நல்லவராக இருந்தாலும், ஒவ்வொரு நபரும் சோதிக்கப்படச் சாத்தியக்கூறு உள்ளது என்பதை நாம் அறிய வேண்டும். அப்போஸ்தலரான பவுல் சோதிக்கப்பட முடிந்திருந்தது (காண்க - 1 கொரிந்தியர் 9:26, 27). "உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகிறவனுமாயிருந்தான்" என்று விவரிக்கப்பட்டிருந்த யோபு (யோபு 1:1) சோதிக்கப்பட முடிந்திருந்தது. தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமாயிருந்த மனிதரான தாவீது சோதிக்கப்பட முடிந்திருந்தது. தேவனுடைய சாயலாக படைக்கப்பட்டிருந்த ஆதாமும் ஏவாளும் சோதிக்கப்பட முடிந்திருந்தது தேவனுடைய குமாரனான இயேசு கிறிஸ்துவும்கூட சோதிக்கப்பட முடிந்திருந்தது (மத்தேயு 4:1-11; எபிரெயர் 2:17, 18; 4:14-16). இயேசு சோதிக்கப்பட முடிந்திருந்தது என்றால், எவரொருவரும் - அவர் எவ்வளவு நல்லவராக இருக்க முயற்சி செய்திருந்தாலும் - சோதிக்கப்பட முடியும்.

சோதிக்கப்படுதலில் இருந்து நம்மைக் காப்பாற்றக்கூடிய அளவுக்கு நாம் ஆவிக்குரிய வகையில் பக்குவ நிலையை அடைந்துள்ளதாக நினைக்கத் தொடங்கும்போது, நாம் அதைப்பற்றி மறுபடியும் சிந்தித்தல் அவசியமாக உள்ளது. 1 கொரிந்தியர் 10:12ல் உள்ள எச்சரிக்கையை நாம் நினைவில் வைக்க வேண்டும். "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்."

நாம் கிறிஸ்துவுக்குள் பக்குவம் அடைகையில், சோதனையை அதிகம் அதிகமாக எதிர்த்து நிற்பவர்கள் ஆக வேண்டும். இயேசு செய்தது போன்று சோதனைக்காரனுக்கு "இல்லை" என்று கூறக் கூடியவர்களாக இருத்தலினால், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றக்கூடிய திறன் என்பது கிறிஸ்தவ பக்குவத்தின் அடையாளமாக உள்ளது. "ஒரு பக்குவம் அடைந்த கிறிஸ்தவர் பாவம் அற்றவராக இருப்பதில்லை, ஆனால் ஒரு பக்குவம் அடைந்த கிறிஸ்தவர் குறைவாகப் பாவம் செய்வார்" என்று நாம் கூறலாம்.[7]

பொய் #4

பொய்: "நீங்கள் சோதிக்கப் படும்போது - அதாவது, நீங்கள் தவறைச் செய்ய விரும்பும்போது - அது பாவமாக உள்ளது."

சத்தியம்: சோதிக்கப்படுதல் பாவமாக இருப்பதில்லை, ஆனால் சோதிக்கப்படுதல் பாவம் செய்வதற்கு வழிநடத்துகிறது.

சோதிக்கப்படுதல் என்பது சிலவிஷயங்களைச் செய்ய விரும்புதலாக உள்ளது; ஆகையால், பாவம் செய்யச் சோதிக்கப்படுதல் என்பது பாவம் செய்ய விரும்புதலாக உள்ளது. யாரேனும் ஒருவரிடம் கோபம் கொள்ளுதல் அல்லது ஒரு பெண்ணை இச்சித்தல் என்பது பாவம் நிறைந்ததாக உள்ளது என்று இயேசு கூறியதால் (மத்தேயு 5:22, 28), சோதிக்கப்படுதல் - தவறைச் செய்ய விரும்புதல் - என்பது பாவம் நிறைந்ததாக உள்ளது என்று நாம் முடிவு செய்யலாம். இருப்பினும் யாக்கோபு 1:14, 15ம் வசனங்கள், "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" என்று கூறுகின்றன. சோதிக்கப்படுதல் எவ்வாறு நடக்கிறது? மற்றும் அது எங்கே வழிநடத்துகிறது?

1. *பாவம் செய்வதற்கான வாய்ப்பு ஒன்று உள்ளது. பிசாசானவன் அந்த வாய்ப்பை அளிக்கிறான் மற்றும்/அல்லது அந்த வாய்ப்பை அனுகூலப்படுத்திக் கொள்வதால் நாம் எவ்வாறு பயன் அடைவோம் என்று அவன் கருத்துத் தெரிவிக்கிறான். தேவனால் நியமிக்கப்பட்ட எல்லைக்குள் சாத்தான் செயல்படுகிறான் (1 கொரிந்தியர் 10:13), ஆனால் நாம் தனிப்பட்ட வகையில் விரும்புபவற்றை அளிப்பதன் மூலம் நம்மைச் சோதிப்பது எவ்வாறு என்பதை அவன் அறிந்திருக்கிறான்.*
2. *சாத்தானால் அளிக்கப்படும் புறம்பான வாய்ப்பானது உள்ளான விருப்பம் - தவறு செய்தல் என்பது அளிப்பதாகத் தோன்றும் பயனைக் கொண்டிருக்கும் விருப்பம் - ஒன்றைச் சந்திக்கிறது.*
3. *தவறு செய்வதினால் பயனைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை நமது விருப்பம் சந்திக்கும் போது, தவறு செய்வதற்கான ஒரு மனச்சாய்வு உண்டாக்கப் படுகிறது; நாம் செய்யக்கூடாதவற்றைச் செய்ய விரும்புகிறோம். அந்த விருப்பமே சோதிக்கப்படுதலாக உள்ளது.*
4. *பின்பு நாம் நமது மனச்சாய்வின்படி செயல்படுவதா இல்லையா என தேர்வு செய்தலை, தப்பிக்கொள்ளும்படியான தேவனுடைய வழிக்கு ஒப்புக்கொடுத்தல் அல்லது அதைக் கண்ணோக்குதலைக் கொண்டிருக்கிறோம் (காண்க - 1 கொரிந்தியர் 10:13).*
5. *நாம் சோதிக்கப்படுதலுக்கு இடம் கொடுத்தால் - நாம் செய்ய விரும்புபவற்றைச் செய்தால் - நாம் பாவம் செய்கிறோம். நாம் சோதிக்கப்படுதலை எதிர்த்து நின்றால் மற்றும் நமது மனச்சாய்வைப் பின்பற்ற மறுத்தால், அப்போது நாம் பாவம் செய்வதில்லை.*
6. *தவறானதைச் செய்தலினால் நாம் சோதிக்கப்படுதலுக்கு இடம்*

கொடுத்தால், மரணம் - ஆவிக்குரிய மரணம் - தேவனிடத்தில் இருந்து பிரிதல் விளைவாகிறது. பாவம் செய்வதில் நாம் விடாப்பிடியாக நிலைத்திருந்தால். நித்திய மரணம் பின்தொடரும்.

யாக்கோபு 1:14, 15 வசனங்களில் உள்ள வரிசைமுறை, குறிப்பிடத்தக்கதாக உள்ளது: ஒருவர் "தமது சுய இச்சையினால் இழுக்கப்பட்டிருக்க" மற்றும் "எடுத்துச்செல்லப் பட்டிருக்க" மற்றும் பாவம் செய்ய முடிவெடுக்க முடியும். பின்பு பாவமானது, பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும். *விருப்பம் என்பது பாவமாக இருப்பதில்லை* என்பது முக்கியமான உண்மையாக உள்ளது.[8] *ஆகையால், சோதிக்கப்படுதல் பாவமாக இருப்பதில்லை.* சிலவற்றைச் செய்ய விரும்புதல் என்பது மாத்திரமே தன்னில்தானே பாவமாயிருப்பதில்லை. சோதிக்கப்படுதல் பாவமாக இருப்பதில்லை; சோதிக்கப்படுதலுக்கு இடம் கொடுப்பது பாவமாக இருக்கிறது! அதே வேளையில், சோதனையைப் பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், ஏனெனில் சோதிக்கப்படுதல் - நமது விருப்பங்களினால் தூண்டப்படுதல் - பாவம் செய்ய வழிநடத்துகிறது, மற்றும் பாவம் மரணத்தை உண்டாக்குகிறது!

பொய் #5

பொய்: "உங்களைப் போன்று மற்ற மக்கள் ஒருக்காலும் சோதிக்கப்பட்டு இருப்பதில்லை."

சத்தியம்: ஒவ்வொரு நபரும் தனிப்பட்டவராக இருக்கிறார், ஆனால் ஒவ்வொரு நபருமே சோதிக்கப் படுதலின் அதே வகைகளை அனுபவிக்கிறார்.

அனேகமாக நாம் எல்லாருமே, ஒரு வேளையில் அல்லது மற்ற வேளையில், நாம் சோதிக்கப் பட்டிருப்பது போன்று வேறு எவருமே சோதிக்கப் பட்டிருக்க முடியாது என்ற தவறான கருத்தை நம்பி இருக்கலாம். அப்படி இருந்தால் நாம் பவுலின் வார்த்தையை மறுபடியும் கேள்விப்படுதல் அவசியமாக உள்ளது: "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை" (1 கொரிந்தியர் 10:13அ).

நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்டவர்களாக இருக்கையில், நாம் யாவருமே ஒரே வகையான சோதித்தல்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆதாம் மற்றும் ஏவாள் மற்றும் இயேசு ஆகியோரைப் போன்றே, நாம் யாவரும் "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகியவற்றினால்" (1 யோவான் 2:16) சோதிக்கப்படுகிறோம்.[9] எபிரெயருக்கு எழுதிய நிருபம் இயேசு "*எல்லாவிதத்திலும் நம்மைப்போல்* சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார்" (எபிரெயர் 4:15; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்று உண்மையில் நமக்கு உறுதி அளிக்கிறது. எவரொருவரும், சோதனைக்குச் சரணடைவதற்கு, "வேறு எவரும் ஒருக்காலும் அனுபவித்திராத வகையில் நான் சோதிக்கப்பட்டேன்" என்று சாக்குப்போக்கு கூற முடியாது.[10]

பொய் #6

பொய்: "சோதிக்கப்படுதல் மிகவும் பலமானதாக இருக்கும்போது, அதை எதிர்த்து நிற்பதற்கான வழி எதும் உங்களுக்கு இருப்பதில்லை."

சத்தியம்: கிறிஸ்தவர்கள் சோதிக்கப்படும்போது அவர்களுக்குத் தேவன் உதவுவார், ஆனால் அவர் அளிக்கும் தப்பிக்கொள்ளும்படியான போக்கைக் கிறிஸ்தவர்கள் தேட வேண்டும்.

பலர் தங்களின் பாவம் செய்தலை, சோதிக்கப்படுதலானது தங்களால் எதிர்த்து நிற்கக்கூடாத அளவுக்கு மிகவும் பலமானதாக இருந்தது என்று உரிமைகோருவதன் மூலம் சாக்குப்போக்குக் கூறச் சாய்கின்றனர். இருப்பினும் இந்தக் கருத்தை 1 கொரிந்தியர் 10:13ல் பவுல் மறுத்துரைத்தார்: "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்."

சோதிக்கப்படுதல் என்பது எதிர்த்து நிற்கக் கூடாத அளவுக்கு மிகவும் பலமானதாக உள்ளதா? இருக்கலாம், ஆனால் ஒரு உண்மை தவிர - அந்த உண்மை தேவன் என்பதாகவே உள்ளது - இது அவ்வாறு இருக்கலாம்! சோதிக்கப்படும் வேளைகளில் அவர் நமக்கு உதவவில்லை என்றால், நாம் சோதனையை எதிர்த்து நிற்கவும் நீதியுள்ள வாழ்வை நடத்தவும் வாய்ப்பு எதையும் கொண்டிருக்க மாட்டோம்.

இருப்பினும், தேவன் நமது பக்கத்தில் இருக்கிறார் மற்றும் நாம் சோதிக்கப்படுதலை வெற்றி கொள்ள அவர் நமக்கு உதவுவார்! நாம் "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல். தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்று தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கூறினார் (மத்தேயு 6:13அ). நாம் சோதிக்கப்படுதலை எதிர்கொள்ளும்போது, நம்மால் எதிர்த்து நிற்கக்கூடும் திறனுக்கு அப்பால் நாம் சோதிக்கப்படுதலைத் தேவன் அனுமதிக்க மாட்டார் என்ற உறுதிப்பாட்டைப் பற்றிக்கொண்டவர்களாக, தப்பிக்கொள்ளும்படியான அவரது வழியைக் கண்ணோக்க வேண்டும்.

நம்மால் சகித்துக்கொள்ள முடிவதற்கு அப்பால் நாம் சோதிக்கப்படுவதற்குத் தேவன் அனுமதிக்க மாட்டார் என்ற உண்மைக்கு, யோபு ஒரு நல்ல உதாரணமாக இருக்கிறார். யோபுவைச் சோதிக்கும்படி சாத்தானுக்குத் தேவன் அனுமதி அளித்தார், ஆனால் அவன் சற்றுதூரம் செல்ல மாத்திரமே அவர் அனுமதித்தார். யோபு எதிர்த்து நிற்கக் கூடும் திறனுக்கு அப்பால் அவரைச் சோதிப்பதற்குத் தேவன் அனுமதிக்கவில்லை. நாம் சோதிக்கப்படும்போது தேவன் நமக்குத் தருகிற அளிப்புகளின் இரண்டாவது வகையை,யோசேப்பின் வரலாறு விவரிக்கிறது. தேவன் யோசேப்புக்குத் தப்பிக்கொள்ளும்படியான ஒரு வழியை அளித்தார்: போத்திபாரின் மனைவி அவரை விபசாரம் செய்ய வற்புறுத்தியபோது, திறந்த கதவும் ஓடுவதற்குக் கால்களும் அவருக்கு அளிக்கப்

பட்டிருந்தன (ஆதியாகமம் 39:11-18).

தப்பிக்கொள்ளும்படியான ஒரு போக்கைத் தேவன் எப்போதுமே அளிக்கையில், அதில் இருந்து அனுகூலம் அடையும்படிக்குத் தேவன் நம்மை ஒருக்காலும் கட்டாயப்படுத்துவதில்லை. பாவத்தைத் தவிர்ப்பதற்கான ஒரு வழியை அவர் நமக்கு அளிக்கிறார், ஆனால் முடிவெடுத்தலை நம்மிடத்தில் விட்டு விடுகிறார். மிகப்பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள், பாவத்தை விட்டு ஓடுவதற்கு மாறாக அதை வரவேற்கின்றனர். அவர்கள் தாங்கள் சோதிக்கப்படும் இடங்களுக்குச் செல்கின்றனர், அவர்கள் தங்களை மேலும் சோதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும்படி தங்களைச் சோதிக்கும் மக்களுடன் செல்கின்றனர். சோதிக்கப்படுதலில் இருந்து தப்பி ஓடுவதற்குப் பதிலாக சோதிக்கப்படுதலை நாம் வரவேற்றால், "எங்களைச் சோதனைக்குட்பண்ணாமல்" என்று நாம் ஜெபிக்கும்போது, நாம் மாய்மாலக்காரர்களாக இருப்பதில்லையா?

எந்த வகையிலும், கிறிஸ்தவர்கள் "சோதனை மிகவும் பலமாக இருந்தது; அதை என்னால் எதிர்த்து நிற்கக் கூடாதிருந்தது" என்று கூறுவதன் மூலம் தங்கள் பாவங்களுக்குச் சாக்குப்போக்குக் கூற முடியாது.

பொய் #7

பொய்: "நீங்கள் மன்னிக்கப்படக்கூடாத அளவுக்கு சோதனைக்கு இடம் கொடுத்து பாவம் செய்துள்ளீர்கள்."

சத்தியம்: ஒருவர் அந்த பாவத்தில் இருந்து மனந்திரும்பி மன்னிப்பைத் தேடினால், தேவன் எந்தப் பாவத்தையும் மன்னிக்க முடியும் மற்றும் மன்னிப்பார்.

சோதிக்கப்படுதலுக்கு நாம் ஒருமுறை "ஆம்" என்று சம்மதம் தெரிவித்து பாவத்தில் ஆழ்ந்து போன உடன், நமது வாழ்வின் எஞ்சிய பகுதி முழுவதிலும் நாம் அந்த நிலையால் தாக்கப்பட்டு இருக்கிறோம், நாம் செய்துள்ள பயங்கரமான பாவங்களினிமித்தம் தேவன் நம்மை ஏற்றுகொள்ள மாட்டார் என்று நாம் நம்ப வேண்டும் என்று சாத்தான் விரும்புகிறான். ஆனால் சத்தியம் வேறுவிதமாக உள்ளது. தேவன் நம்மீது அன்புகூருகிறார் மற்றும் நாம் செய்துள்ள எந்தப் பாவத்தையும் மன்னிக்கப் போதுமான அளவுக்கு அவரது கிருபை பெரிதாக உள்ளது. தாவீது செய்த விபசாரம் மற்றும் கொலை ஆகியவற்றைத் தேவன் மன்னித்தார், மற்றும் அவர் பேதுரு இயேசுவை மறுதலித்ததை மன்னித்தார். உண்மையில் தேவன், கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தவர்களுக்கு மன்னிப்பை விரிவாக்கினார். அவர் நம்மையும் மன்னிக்க முடியும்!

முடிவுரை

இனியும் நாம் சாத்தானுடைய பொய்களை நம்பக்கூடாது! நீங்கள் சோதனைக்கு இடம் கொடுத்து, பாவம் செய்திருந்தால், தேவன் உங்களை மன்னிக்க முடியும். பாவத்தில் இருந்து கிறிஸ்துவினிடத்திற்குத் திரும்புங்கள்!

குறிப்புகள்

[1]10:9ல் "பரீட்சைபார்த்து" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள வார்த்தை ekpeirazō. என்பதாக உள்ளது. [2]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testment Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 116. [3]Alex R. G. Deasley, "Temptation, Test," *Baker Theological Dictionary of the Bible* (Grand Rapids, Mich.: Baker Books, 2000), 762. *[4]இவ்வசனப் பகுதிகள் யாவற்றிலும் மூலமொழியில் (peirazō என்ற) வார்த்தையின் வடிவம் உள்ளது. "சோதித்தல்" மற்றும் "பரீட்சித்தல்" ஆகியவற்றிற்கு நடபடிகள் 9:26; 26:21ல் அதே வினைச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. [5]இவ்வசனப் பகுதிக்கும், தேவன் மக்களைச் சோதிக்கிறார் என்று கூறும் மற்ற வசனப்பகுதிகளுக்கும் இடையில் உள்ளதாகத் தோன்றும் நேரெதிர்க்கருத்தைச் சிலர் சுட்டிக்காண்பிக்கின்றனர். எடுத்துக்காட்டாக,* KJV *வேதாகமத்தின்படி தேவன் ஆபிரகாமைச் சோதித்தார் (ஆதியாகமம் 22:1). இப்படிப்பட்ட வசனப்பகுதிகளில் இவ்வார்த்தை, பாவம் செய்யும்படி தூண்டுகிறார் என்ற கருத்திற்கு மாறாக, "பரீட்சிக்கிறார்" என்ற கருத்திலேயே இவ்வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதே மிகச் சிறந்த விளக்கமாக உள்ளது. பாவம் செய்யும்படி எவரொருவரையும் தேவன் தூண்டுவதில்லை. [6]சோதனைக்காரன், எதிராளி அல்லது வஞ்சிக்கிறவன் என்ற வகையில் சாத்தானைப் பற்றிப் பேசும் வசனப்பகுதிகளுக்கு, 2 கொரிந்தியர் 2:11 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 2:10; 12:9 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும். [7]இந்தக் கூற்று, அர்க்கன்சாஸ் மாகாணத்தின் ஜட்சோனியாவின் கிறிஸ்துவின் சபையில் கிளென் பேஸ் அவர்கள் பிரசங்கித்த பிரசங்கத்தில் இருந்து தழுவப்பட்டது,* n.d. *[8]மத்தேயு 5:28ல் உள்ள "இச்சை" (epithumeō) என்பது விபசாரம் செய்வதற்கான கணநேர இச்சையை மாத்திரம் குறிப்பதாக இருக்கக்கூடாது. ஒருவேளை அது, உண்மையில் சூழ்நிலைகள் அனுமதித்தால் விபசாரம் செய்ய வழிநடத்துகிறதான, பெண் ஒருத்தியை இச்சையுடன் தொடர்ந்து, பலமாக நோக்கும் செயலை அர்த்தப்படுத்தலாம். [9]ஒவ்வொரு யுகத்திலும் சோதிக்கப்படுதல் மற்றும் பாவங்கள் ஆகியவற்றின் ஒன்றுபோன்ற தன்மையானது, 1 கொரிந்தியர் 10:1-12ல் பாவம் பற்றிப் பவுல் கொரிந்தியர்களை எச்சரித்த வேளையில் அவர் இஸ்ரவேல் மக்களின் பாவங்களை ஒப்பிட்டதன் மூலமாகவும் கருத்தாகத் தெரிவிக்கப்படுகிறது. [10]"சோதனைக்குச் சரணடைதல் என்பது ஒருக்காலும் தவிர்க்க இயலாததாக இருப்பதில்லை. இருளின் வல்லமைகள் மீது கிறிஸ்துவின் வெற்றியானது (மத்தேயு 12:28-29; கொலோசெயர் 1:13), அவருக்குள் ஒருமைப் பட்டிருப்பவர்களுக்கு தப்பிக்கொள்ளும்படியான போக்கு எப்போதுமே உள்ளது என்று அர்த்தப்படுகிறது (1 கொரிந்தியர் 10:13)"* (Deasley, *762).*

பிரசங்கம் 7

தேவன் மற்றும் விக்கிரக ஆராதனை

(1 கொரிந்தியர் 10:14-22)

சக கிறிஸ்தவர்களுக்கோ அல்லது புறம்பே உள்ளவர்களுக்கோ ஆவிக்குரிய வகையில் தீங்கு எதுவும் செய்யப்படாத வரையில், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்ணுதல் என்பது கொரிந்திய சகோதரர்களுக்கு ஏற்படையதாக இருந்தது என்று அவர்களுக்குப் பவுல் முன்னதாகக் கூறியிருந்தார்.[1] இருப்பினும் 10:14-22ல் கிறிஸ்தவர்கள் கடந்து செல்லக் கூடாததாக இருந்த கோடு ஒன்றை அப்போஸ்தலர் வரைந்தார். அவர்கள் புறதெய்வ வணக்க மத நடவடிக்கைகளில் பங்கேற்கக் கூடாதிருந்தது (10:14-22).

இப்படிப்பட்ட ஒரு செய்தியானது இன்றைய நாட்களில், பெருமளவு விக்கிரக ஆராதனைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துள்ள நமது உலகத்திற்கு மிகவும் பொருத்தமானதாக உள்ளது. வேதாகமத்தின் கர்த்தராகிய தேவனைத் தவிர மற்ற கடவுள்கள், ஆவிகள் அல்லது வல்லமைகளுக்குப் பலர் பயபக்தி செலுத்துகின்றனர்.

விக்கிரக ஆராதனை பற்றிய வேதாகமத்தின் போதனை

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் விக்கிரக ஆராதனை என்பது தடைசெய்யப்பட்ட ஒரு ஆய்வுக்கருத்தாக உள்ளது. விக்கிரக ஆராதனை பற்றி வேதாகமம் குறிப்பாகக் கூறுவது என்ன?

விக்கிரக ஆராதனை என்பது தேவனால் சகிக்கக் கூடாததாக உள்ளது

இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன், "உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்று கூறினார் (யாத்திராகமம் 20:2, 3). இது அவரது பத்துக்கட்டளைகளின் முதல் கட்டளையாக இருந்தது. தேவனுடைய மக்கள், வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட நாட்டிற்குள் பிரவேசிப்பதற்குச் சற்று முன்னர், மோசேயின் மூலமாகத் தேவன் பின்வருமாறு கூறினார்:

> *உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனை செய்து, அவருடைய நாமத்தைக்கொண்டே ஆணையிடுவாயாக. உன் தேவனாகிய கர்த்தருடைய கோபம் உன்மேல் மூண்டு, உன்னைப் பூமியில் வைக்காமல் அழித்துப்போடாதபடிக்கு, உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின்*

தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக. உன் நடுவிலிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறாரே (உபாகமம் 6:13-15).[2]

விக்கிரக ஆராதனையைத் தடைசெய்தல் என்பது, விக்கிரகங்களை உண்டாக்குதல் மற்றும் அவற்றை ஆராதித்தல் ஆகியவற்றைத் தடை செய்தலை உள்ளடக்கியது. இது பத்துக்கட்டளைகளில் இரண்டாவது கட்டளையாக இருந்தது (யாத்திராகமம் 20:4-6). இஸ்ரவேல் மக்கள், மற்ற தேவர்களின் பெயர்களை முதலாய்க் குறிப்பிடக்கூடாதிருந்தது (யாத்திராகமம் 23:13). மந்திரவாதம் மற்றும் பில்லிசூனியத்தின் பிற வடிவங்களைத் தடைசெய்த ஆணைகளுடன் விக்கிரக ஆராதனையைத் தடை செய்யும் கட்டளை நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது (லேவியராகமம் 19:26ஆ, 31; 20:6; உபாகமம் 18:9-14).[3]

தனிநபர்கள் (யாத்திராகமம் 22:20) மற்றும் மக்களினம் (உபாகமம் 6:14, 15; காண்க 1 இராஜாக்கள் 9:6-9) ஆகிய இரு தரப்பினருக்கும், மரணம் என்பதே விக்கிரக ஆராதனைக்குத் தண்டனையாக இருந்தது. மற்ற தேவர்களை ஆராதிக்கும்படி இஸ்ரவேல் மக்கள் சோதிக்கப்படாதிருக்கும்படி. அவர்கள் நாட்டை வெற்றி கொள்ளும் போது, கானானில் இருந்த மக்களினங்களை அழிக்க வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது (யாத்திராகமம் 23:23, 24). உண்மையில் இஸ்ரவேல் மக்கள், நாட்டில் இருந்த மக்களை முற்றிலுமாகத் துரத்தத் தவறிய காரணத்தால், அவர்கள் விக்கிரக ஆராதனைக்காரர்கள் ஆயினர் மற்றும் அவர்களின் சொந்த நாடு கடைசியில் அழிக்கப்பட்டது (2 இராஜாக்கள் 17:7-18). அவர்களின் சூழ்நிலையை ஒரு எழுத்தாளர் பின்வருமாறு நன்கு விவரித்தார்: "விக்கிரக ஆராதனையை அழித்தல் அல்லது அதினால் அழிக்கப்படுதல் என்பதே வேதவசனத்தின் கருத்தாக இருந்தது."[4]

புதிய ஏற்பாட்டில் நமக்கு, ஒரே "ஒரு தேவன்" தாம் இருக்கிறார் (எபேசியர் 4:6) - அதாவது "உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லை" (1 கொரிந்தியர் 8:4ஆ) - என்று நினைவூட்டப் பட்டுள்ளது.[5] *முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஏவுதல் பெற்ற சுவிசேஷ ஊழியர்கள் "நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, ... ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று" மக்களிடத்தில் வேண்டிக் கேட்டுக்கொண்டனர் (நடபடிகள் 14:15; காண்க 17:22-31). புறஜாதிக் கிறிஸ்தவர்கள் விக்கிரக ஆராதனையில் இருந்து வெளியே வந்திருந்தனர். உதாரணமாக, தெசலோனிக்கேயர்கள், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, "விக்கிரகங்களைவிட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பி" இருந்தனர் (1 தெசலோனிக்கேயர் 1:9ஆ; மேலும் காண்க 1 கொரிந்தியர் 12:2). இதன் விளைவாக அவர்கள் விக்கிரக ஆராதனையைக் குறித்து இனி செய்வதற்கு ஒன்றும் கொண்டிருக்கவில்லை என்று கூறப்பட்டனர்; அவர்கள் "விக்கிரகாராதனைக்கு விலகி ஓட" வேண்டியிருந்தனர் (1 கொரிந்தியர் 10:14; மேலும் காண்க 1 யோவான் 5:21; 1 பேதுரு 4:3)*[6] *மற்றும் அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாதவர்கள் மத்தியில் விக்கிரக ஆராதனைக்காரர்கள் இருந்தனர் என்று எச்சரிக்கப்பட்டனர் (1 கொரிந்தியர் 6:9; காண்க கலாத்தியர் 5:19-21).*

சபையில், ஒழுக்கவீனமான மற்றும் பொருளாசையுடைய உறுப்பினர்கள் மற்றும் எதிர்த்து நிற்கும், மதுபானம் பண்ணும் மற்றும் மோசடிக்காரர்களாயிருக்கும் கிறிஸ்தவர்களுடன் (1 கொரிந்தியர் 5:11), விக்கிரக ஆராதனைக்காரர்களும் சபையின் ஒழுங்கு நடவடிக்கைக்குக் கீழாயிருந்தனர். விக்கிரக ஆராதனையில் விடாப்பிடியாக இருப்பவர்களின் - அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அறியப்பட்டிருந்தாலும் இல்லை என்றாலும் அவர்களின் - நிறைவான அடைவிடம் "இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்பதாகவே இருக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 21:8). தேவனைச் சேவிக்க, அவருக்கு கீழ்ப்படிய மற்றும் நித்தியத்திற்கும் இரட்சிக்கப் பட்டிருக்க விரும்புகிறவர்கள், வேதாகமத்தின் ஒரே தேவனான, வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராக இருக்கும் தேவனைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் ஒப்புக்கொள்ளவோ அல்லது ஆராதிக்கவோ மறுப்பவர்களாக இருக்க வேண்டும்!

விக்கிரக ஆராதனை என்பது தேவனை ஆராதிப்பதுடன் ஒத்திசையாததாக உள்ளது

விக்கிரக ஆராதனை என்பது ஆண்டவராகிய தேவனை ஆராதிப்பதுடன் ஒத்திசையாததாக உள்ளது என்று வேதாகமம் போதிக்கிறது. பவுல் "நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய (விக்கிரகங்களினுடைய) போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே" என்று கூறியபோது (1 கொரிந்தியர் 10:21ஆ), இந்தக் கருத்தையே மிகச் சரியாக ஏற்படுத்தினார். தேவனை ஆராதிப்பதாக அறிவித்துக்கொண்டே ஒருவர் மேலும் மற்ற கடவுளை ஆராதிப்பதன் மூலம் அவரை (தேவனை) பிரியப்படுத்த முடியாது என்று அவர் அர்த்தப்படுத்தினார்.[7]

அந்தக் கருத்து வேதாகமரீதியான முதன்மை ஆய்வுக்கருத்தாக உள்ளது. தேவன் எரிச்சல் உள்ள தேவனாக இருக்கிறார் (உபாகமம் 5:9அ); அவர் போட்டியாளர் எவரையும் சகித்துக் கொள்வதில்லை. "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" (யாத்திராகமம் 20:3) என்பது, மற்ற தேவர்களைச் சேவிப்பதற்காக நாம் அவரைப் புறக்கணித்து விடக்கூடாது என்று மாத்திரமல்ல, ஆனால் அவருடன் கூடுதலாக அல்லது அவருடன் சேர்த்து நாம் எந்தக் கடவுள்களையும் கொண்டிருக்கக் கூடாது என்றும் அர்த்தப்படுத்துகிறது.

தேவனுடன் சேர்த்து நாம் வேறு கடவுள்களை ஆராதிப்பதைத் தேவன் அங்கீகரிப்பது இல்லை என்ற உண்மையானது எப்போதுமே தேவனுடைய மக்களால் மறக்கப்படக் கூடியதாக உள்ளது. பழைய ஏற்பாட்டின் காலங்களில் இஸ்ரவேல் மக்கள், கர்த்தருக்குள் தங்கள் விசுவாசத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு அதற்குப் பதிலாக மற்ற கடவுள்களை ஆராதிக்கவில்லை. மாறாக அவர்கள், கர்த்தராகிய தேவனை தாங்கள் ஆராதிப்பதில், மற்ற கடவுள்களையும் கூட்டிக்கொள்ளச் சாய்ந்தனர். எடுத்துக்காட்டாக, "ஆசாரியர்கள் பாகலுக்கும் [ஒரு பொய்த்தேவன்] யாவேக்கும் [கர்த்தராகிய தேவன்] பலிகளைச் செலுத்தினர் மற்றும் தேவாலயத்திலேயே விக்கிரகங்கள் நிலைநாட்டப்பட்டன (2 நாளாகமம் 15:16; எரேமியா 32:34; எசேக்கியேல் 8:5-11)."[8]

இன்றைய நாட்களில், கிறிஸ்தவர்களும்கூட தேவனை வெளிப்படையாகப்

புறக்கணித்து தங்கள் பற்றுறுதியை மற்ற கடவுள்களிடத்திற்கு மாற்றுதல் என்பது காணப்படாததாக உள்ளது; ஆனால் பலர் அவரை ஆராதிப்பதுடன் கூடுதலாக மற்ற கடவுள்களையும் சேவிக்கின்றனர். கிறிஸ்தவர்கள் தேவனுடன் மம்மோனை (அல்லது பணத்தை) ஆராதிக்கச் சாய்கின்றனர், இது அவரது கட்டளைக்குக் கீழ்ப்படியாமையாக உள்ளது. ஆப்பிரிக்கா கண்டத்தில் பல ஆண்டுகள் ஊழியம் செய்த அனுபவம் கொண்டுள்ள வென்டெல் புரூம் அவர்களின் கூற்றுப்படி, ஆப்பிரிக்காவில் உள்ள சில சபைகள் பொதுவான ஒரு பிரச்சனையைக் கொண்டுள்ளன. ஒரு பேட்டியில் அவர் பின்வருமாறு கூறினார்:

> பழைய கடவுள்கள் பாதாள அறைக்குச் சென்றுள்ளனர் என்பதே ஆப்பிரிக்காவில் நடந்துள்ளது, அதன் மூலம் அவர்கள் சபையில் உண்மையுள்ள உறுப்பினர்களாகத் தோற்றம் தருகின்றனர், ஆனால் சுகவீனம் அல்லது பேரழிவு ஏற்படும் காலத்தில், அவர்கள் பழைய தேவர்களிடம் விரைவாகத் திரும்பி விடுகின்றனர். பல கிறிஸ்தவர்கள், (விக்கிரக ஆராதனைக்காரர்கள் ஒன்றுகூடி ஆராதிக்கும்) கிராம "வேண்டுதல் வீடுகளுக்கு" செல்கின்றனர். பல கிறிஸ்தவர்கள் இந்த வேண்டுதல் வீடுகளிலும் உறுப்பினர்களாக இருந்துகொண்டு இந்தவீடுகளில் பலிகளைச் செலுத்துகின்றனர்.[9]

ஆப்பிரிக்காவில் நீண்ட காலம் ஊழியராக உள்ள இன்னொரு சகோதரரான ஹென்றி ஹஃபோர்டு அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> பேரிடர் தாக்கினால் கிறிஸ்தவர், அடிப்படைகள் யாவையும் மூடும்படி சோதிக்கப்படுகிறார். தேவனிடத்தில் ஜெபித்தல் வேலை செய்வதில்லை என்று காணப்படுகிறபோது அவர் ஷாமான் (ஜூ-ஜூ குரு அல்லது வேறு எப்பெயரையும் கொண்டுள்ள) ஒருவரைப் பார்க்கக் கூடும் அல்லது "வேண்டுதல் வீடு" ஒன்றிற்குச் சென்று, தம்மை சபித்தது எது என்று கண்டறிந்து பலிசெலுத்தும் செயலைத் தொடங்கி, உச்சாடனங்களைப் பயன்படுத்தி அல்லது வேறு ஏதாவது செயல் செய்து, அந்த சாபத்தை நீக்க ஆவிகளுடன் செயல்படக்கூடும். கிறிஸ்துவின் சபையில் உறுப்பினர்களாக இருப்பவர்கள், இந்த வழியில் செல்வது தவறு என்று அறிந்துள்ளனர், ஆனால் அவர்கள் பாரம்பரிய வழிகளுக்கு இணங்கிப் போகும்படி குடும்ப உறுப்பினர்களோ அல்லது மனைவி வழி உறவினர்களோ அடிக்கடி அவர்கள் மீது பெரிய அளவில் வலியுறுத்தம் செய்கின்றனர். இதில் நாம் புரிந்துகொள்ளக் கடினமான பயம் என்ற வடிவம் பெரிதும் செயல்படுகிறது ... இஸ்ரவேல் மக்கள் நாட்டின் ஆவிகளையும் யெகோவா தேவனையும் ஆராதித்து வந்தது போன்று, இங்கு விசேஷமாக கிராமிய சூழ்நிலையில் மாபெரும் வகையில் சோதிக்கப்படுதல் உள்ளது. கிறிஸ்தவர்கள் வேண்டுதல் வீடுகளுக்கு அல்லது ஆவிகளைச் சமாதானப்படுத்தும் பாரம்பரிய இடங்களுக்குக் கள்ளத்தனமாகச் செல்கின்றனர்.[10]

தேவன் ஒருபகுதியான பற்றுறுதியை ஏற்றுக்கொள்வதில்லை. அவர் எரிச்சல் உள்ள தேவனாக இருக்கிறார் மற்றும் தம்மைப் பின்பற்றுபவர்களை அவர் வேறு எந்தக் கடவுளோடும் பகிர்ந்துகொள்ள மாட்டார். அவரது

மக்கள் தங்களின் எல்லாவற்றுடனும் அவரை சேவிக்க வேண்டும். தேவனுடைய மக்களுக்கு அவரது வார்த்தைகளை மோசே எடுத்துச் சொல்லுகையில் அவர், "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் *முழு* இருதயத்தோடும், உன் *முழு* ஆத்துமாவோடும், உன் *முழுப்* பலத்தோடும் அன்புகூருவாயாக" என்று கூறினார் (உபாகமம் 6:4, 5; என்னால் வலியுறுத்தப் படுகிறது).[11] புறதெய்வ வணக்கத்தில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவர்கள், அந்த நடைமுறைகள் கிறிஸ்தவத்துடன் இணக்கமாக இருப்பதில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்! கிறிஸ்தவராக இருக்க விரும்பும் எவரொருவரும், விக்கிரக ஆராதனை நடைமுறைகளுடன் உள்ள தமது முந்திய தொடர்புகள் யாவற்றையும் முற்றிலுமாகத் துறக்க வேண்டும்.

விக்கிரகங்கள் தேவனுடன் ஒப்பிட இயலாதவைகளாக உள்ளன

விக்கிரகங்கள் தேவனுடன் ஒப்பிடப்பட முடியாதவைகளாக உள்ளன என்று வேதாகமம் போதிக்கிறது. விக்கிரகங்கள் ஆராதிக்கத் தகுதியானவை அல்ல என்பதை இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் காண்பித்தனர். அதுபோன்றே பவுல், அவைகள் உண்மையில் "ஒரு பொருளல்ல" என்று கூறினார் (1 கொரிந்தியர் 10:19): அவைகள் உண்மையான இருப்பையும் உயிரையும் கொண்டிருப்பதில்லை; அவைகள் வல்லமையற்றவைகளாக உள்ளன.

உண்மையான ஒரே தேவனுக்கும் விக்கிரகங்களுக்கும் இடையிலான நேரெதிர் ஒப்பீடு, கர்மேல் மலையில் எலியாவுக்கும் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கும் இடையில் நடந்த போட்டியில் தெளிவாக விவரிக்கப் பட்டது. பாகாலின் தீர்க்கதரிசிகள் பலமணி நேரமாகத் தங்கள் கடவுளைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தனர், அவர்கள் உரக்கச் சத்தமிட்டு, பலிபீடத்தைச் சுற்றிக் குதித்துக் கொண்டிருந்தனர், மற்றும் தங்கள் தேவனுடைய கவனத்தைப் பெறுவதற்காகத் தங்களைக் கீறிக்கொண்டிருந்தனர் - ஆனால் பதில் எதுவும் வராதிருந்தது. "ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை" (1 இராஜாக்கள் 18:26-29). இதற்கு நேர்மாறாக, எலியாவின் ஜெபம் ஏறெடுக்கப்பட்ட உடனே, கர்த்தர் வல்லமை நிறைந்த வகையில் பதில் அளித்தார் (1 இராஜாக்கள் 18:36-38). பாகாலின் வல்லமையின்மைக்கும் தேவனுடைய வல்லமைக்கும் இது என்ன ஒரு செயல்விளக்கமாக உள்ளது! மக்கள் "கர்த்தரே தெய்வம்" "கர்த்தரே தெய்வம்" என்று கதறினர் (1 இராஜாக்கள் 18:39). தேவன் உயிருள்ளவராக இருக்கிறார்; அவரால் கேட்க முடியும் மற்றும் அவர் வல்லமை நிறைந்தவராக இருக்கிறார். பொய்த்தேவர்கள் கேட்க முடியாது அல்லது பதில் அளிக்க முடியாது ஏனெனில் அவைகள் வல்லமை கொண்டிருப்பது இல்லை. அவைகள் உண்மையான இருப்பைக் கொண்டிருப்பதில்லை.

வேதாகம எழுத்தாளர்கள் இந்த முடிவுடன் ஒத்துப்போகின்றனர். விக்கிரகங்கள் "பொய்யே, அவைகளில் சுவாசம் இல்லை ...," "அழியும்" (எரேமியா 51:17, 18; காண்க 10:14, 15); அவைகள் "ஜீவனில்லாதவைகள்" (சங்கீதம் 106:28); அவைகள் தங்கள் சொந்த மக்களை விடுவிக்க இயலாதவைகள் (2 நாளாகமம் 25:15; மேலும் காண்க எரேமியா 11:12ஆ); அவைகளால் பேசவோ, காணவோ, கேட்கவோ, நுகரவோ, உணரவோ, நடக்கவோ அல்லது ஒலியை ஏற்படுத்தவோ முடியாது (சங்கீதம்

115:4-8). உண்மையில் அவைகள் தீமையோ அல்லது நன்மையோ செய்ய முடியாது (எரேமியா 10:5).

மனிதன் உட்பட எல்லாவற்றையும் தேவன் உண்டாக்கினார் (ஆதியாகமம் 1), ஆனால் விக்கிரகங்கள் மனிதனால் உண்டாக்கப்பட்டன என்பது, தேவனுக்கும் விக்கிரகங்களுக்கும் இடையில் உள்ள மாபெரும் வேறுபாடாக உள்ளது. இந்த வேறுபாட்டை வலியுறுத்திய ஏசாயா, ஒரு விக்கிரகத்தை உண்டாக்குவதற்குத் தொழிலாளிகள் செய்யும் வேலையை விபரமாக விவரித்தார். பின்பு அந்த விக்கிரகத்தை உண்டாக்கியவர், தாமே உண்டாக்கிய அதற்கு முன்னால் பணிந்து வணங்கி அதை ஆராதிக்கிறார் என்பது முரண்பாடானதாக உள்ளது! (காண்க ஏசாயா 44:9-20; மேலும் காண்க 40:19, 20; எரேமியா 10:1-16; ஆபகூக் 2:18-20.)

விக்கிரகத்தை ஆராதித்தல் தவறானதாக இருப்பது மட்டுமின்றி, அது மூடத்தனமானதாகவும் உள்ளது. மரத்தால் அல்லது கல்லால் ஆன விக்கிரகங்களைப் பணிந்துகொள்ளும் அல்லது ஆவிகளின் அல்லது முன்னோர்களின் உதவியை நாடும் மக்கள் அறைகூவல் விடுக்கப்பட வேண்டும். அவர்களிடத்தில் நாம், "உங்கள் கடவுள் உங்களுக்கு உதவக்கூடும் என்று உண்மையிலேயே நீங்கள் நினைக்கிறீர்களா? உங்கள் கடவுள் உங்களை உண்மையிலேயே நலமாக்க முடியுமா? உண்மையில் அது எதையாவது செய்ய முடியுமா?" என்று கேட்கலாம். வானத்தையும் பூமியையும் படைத்த, நித்தியத்திற்கும் ஜீவனுள்ளவரான மற்றும் மனித குலத்திற்கு உதவி செய்கிற தேவனைப் பற்றி அவர்கள் கற்றறிவது அவசியமாக உள்ளது.

விக்கிரக ஆராதனை பற்றிய ரீதியான போதனைகளின் வெளிச்சத்தில், அதற்குக் கிறிஸ்தவர் எவ்வாறு மறுசெயல் செய்ய வேண்டும்? கிறிஸ்து விக்கிரக ஆராதனைக்கு எதிரானவராக இருப்பதால், கிறிஸ்தவர்களும் அதற்கு எதிரானவர்களாக இருக்க வேண்டும். தீர்க்கதரிசிகளைப் போல, கிறிஸ்தவர்களும் விக்கிரக ஆராதனைக்கு எதிரான ஒரு யுத்தத்தில் ஈடுபட வேண்டும். விக்கிரக ஆராதனை நடத்தையைச் சகித்துக் கொள்வதற்குப் பதிலாக நாம், நீதியுள்ள நடத்தையின் எல்லைக்குள் - சபைக்குள் - விக்கிரக ஆராதனையின் செல்வாக்கை மிதித்துப் போடுவதற்கு நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.[12] பழங்காலங்களில் தேவனுடைய மக்கள் விக்கிரக ஆராதனையின் காரணமாக அழிக்கப்பட்டனர். இன்றைய நாட்களில் விக்கிரக ஆராதனைக்கு சபையின் பதில்செயலானது அது (சபை) உயிருடன் இருக்கிறதா அல்லது மரித்து இருக்கிறதா என்பதைத் தீர்மானிப்பதாக இருக்கலாம். புரூம் அவர்களின் கூற்றுப்படி, "பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்களுக்கு விக்கிரக ஆராதனை என்பது சாவுக்கேதுவான பிரச்சனையாக இருந்தது மற்றும் இன்றைய நாட்களில் ஆப்பிரிக்க நாட்டில் உள்ள சபைகளுக்கும் அது அவ்வாறே இருக்க முடியும்."[13]

விக்கிரகங்களை விட்டு உண்மையான தேவனிடத்திற்குத் திரும்புதல்

மற்ற கடவுள்களை ஆராதிப்பதில் தங்கள் வாழ்வைச் செலவிட்டு இருப்பவர்களுக்கு, கிறிஸ்துவின் அழைப்பு விரிவாக்கப் பட்டுள்ளது. முதல் நூற்றாண்டில் தெசலோனிக்கேயில் இருந்தவர்கள், விக்கிரகங்களை

விட்டுத் தேவனிடத்திற்குத் திரும்பியது போன்றே ஒவ்வொரு யுகத்திலும் விக்கிரக ஆராதனைக்காரர்கள் தேவனிடத்தில் திரும்பியுள்ளனர் (1 தெசலோனிக்கேயர் 1:9). விக்கிரக ஆராதனைக்காரர்கள் கிறிஸ்துவினிடத்தில் திரும்ப வேண்டியது ஏன்?

தேவனுடைய இயல்பு

தேவனுடைய இயல்பு என்பது, பொய்த்தேவர்களை விட்டு உண்மையான ஆண்டவரிடத்திற்கு திரும்ப வேண்டியதற்கான ஒரு காரணமாக உள்ளது. கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும் தேவன், விக்கிரக ஆராதனைக்காரர்களால் ஆராதிக்கப்படும் தேவர்களைக் காட்டிலும் மிகவும் மேன்மையானவராக இருக்கிறார். இந்தத் தேவர்கள் ஏறுமாறானவர்களாகவும் நம்பகமற்றவர்களாகவும் இருக்கின்றனர் என்று மிகச்சிறப்பாக விவரிக்கப்படுகின்றனர். அவர்களின் நடவடிக்கைகள் மனித குலத்திற்கு தீங்கு விளைவிப்பதாகவும் வேண்டு மென்றே துன்பம் இழைப்பதாகவும் உள்ளன என்று சித்தரிக்கப் பட்டுள்ளது மிகமோசமானதாகும். இவைகள் மனிதர்களுக்குச் செய்யும் பொல்லாங்கு, விசேஷ பலிசெலுத்துதல் மற்றும் சடங்காச்சாரங்கள் ஆகியவற்றைக் கொண்டு தடுத்து நிறுத்தப்படுவதாக யூகிக்கப்படுகிறது. உண்மையில் இவைகள் வல்லமையற்றவைகளாக இருக்கின்றன. இவைகளை நம்புபவர்களுக்கு உண்மையில் இவைகள் உதவி செய்யவோ அல்லது தீங்கு இழைக்கவோ இயலாது.

இதற்கு நேர்மாறாக, தேவனுடைய இயல்பை நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக:

- *அவர் நித்தியமானவராகவும் என்றைக்கும் மாறாதவராகவும் இருக்கிறார்* (சங்கீதம் 102:25-27). அவர் சீர்பொருத்தமானவராகவும் சார்ந்திருக்கத் தகுதியானவராகவும் இருக்கிறார். "தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்" (1 கொரிந்தியர் 10:13).
- *அவர் சர்வ வல்லமை நிறைந்தவராக இருக்கிறார்* (எரேமியா 32:17; எபேசியர் 3:20). அவர் இந்த உலகத்தையும் இதில் உள்ள எல்லாவற்றையும் படைத்தவராக இருக்கிறார் (நடபடிகள் 14:15).
- *அவர் கருணையுள்ளவராக இருக்கிறார்.* இதை நாம் எவ்வாறு அறிகிறோம்? வேதாகமம் அவ்வாறு நமக்குக் கூறுகிறது. "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவான் 4:8). உண்மையான ஒரே தேவனுடைய உபகாரத்தன்மையுள்ள இயல்பிற்கு இந்த வார்த்தையே சாட்சியைக் கொண்டுள்ளது (நடபடிகள் 14:17).
- *அவர் எப்போதும் கிடைக்கக் கூடியவராக இருக்கிறார்* (நடபடிகள் 17:27, 28). தேவன் கட்டளையிட்டுள்ளபடி நாம் அவரை அணுகினால், விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதைப் பற்றி நாம் ஒருக்காலும் கவலைப்படத் தேவையிருக்காது. தேவன் இருக்கிறார், அவர் கேட்கிறார் மற்றும் அவர் தமது வார்த்தையின்படியும் தமது சித்தத்தின்படியும் சீர்பொருத்தமாக செயல்படுகிறார், நம்மைக் குறித்து அவரது செயல்பாடுகள் எப்போதுமே அன்பின் அடிப்படையில் அமைந்துள்ளன.

கிறிஸ்துவின் நபர்த்துவம்

விக்கிரக ஆராதனையைக் கைவிட்டு தேவனிடத்தில் திரும்புவதற்கான இன்னொரு காரணம், இயேசு கிறிஸ்துவின் நபர்த்துவத்தில் காணப்படுகிறது. இந்த அண்டத்தை உண்டாக்கிய தேவன் தமது குமாரனை அனுப்பியதன் மூலம் தம்மைப் பற்றி அறியச் செய்துள்ளார் என்பதால், அவரைப் பற்றி கிறிஸ்தவர்கள் அறிகின்றனர். மாம்சத்தில் தேவனாக இயேசு வந்தார் (யோவான் 1:1, 14; 14:9; காண்க மத்தேயு 1:23). அவர் பாவமற்ற வாழ்வு ஒன்றை நடத்தி தமது அற்புதங்களில் தமது வல்லமையை வெளிப்படுத்தினார். அவர் தமது ஞானம் மற்றும் அறிவு ஆகியவற்றின் மூலம் பிதாவைப் பிரதிபலித்தார் மற்றும் அவர் தமது அன்பு மற்றும் இரக்கம் மற்றும் பரிவிரக்கம் ஆகியவற்றை ஒவ்வொருவருக்கும் செயல்விளக்கப் படுத்தினார். மக்கள் இரட்சிக்கப்படும்படிக்கு அவர், சிலுவையில் மரிக்கும் அளவுக்குக் கூடப் பாடுபட மனவிருப்பம் கொண்டிருந்தார். அவரது உயிர்த்தெழுதல் அவரது தெய்வீகத்தை நிரூபித்தது, மற்றும் அவர் இந்த உலகத்தை நியாயந்தீர்க்க மறுபடியும் திரும்பிவரும் தமது இரண்டாம் வருகையையும் வாக்களித்தார். வேறு எந்த மத அமைப்பிலும், மனிதக்குலத்தின் மீட்பராக இயேசுவைப் போன்று நெடுங்காலத் தொடர்புடைய எந்த விஷயமும் இருப்பதில்லை. இப்படிப்பட்ட ஒரு நபரை ஒவ்வொருவரும் பின்பற்ற விரும்புவார் என்பது நிச்சயம்!

கிறிஸ்தவத்தின் ஆசீர்வாதங்கள்

விக்கிரக ஆராதனைக்குரிய கடவுள்களைக் கைவிட்டுவிட்டு இயேசுவைப் பற்றிய சுவிசேஷச் செய்திக்குக் கீழ்ப்படிய வேண்டியதற்கான மூன்றாவது காரணம், கிறிஸ்தவராக இருப்பதன் ஆசீர்வாதங்களுடன் தெடார்புடையதாக உள்ளது.

பரிசுத்தம் உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளது. நாம் ஒரு பரிசுத்த வாழ்வை வாழும்படி கிறிஸ்து நம்மை அழைத்துள்ள காரணத்தினால் நாம் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம். கிறிஸ்தவராகும் ஒருவர் அநீதியான வாழ்வைத் தொடர்ந்து வாழ முடியாது. தேவன் பரிசுத்தராக இருப்பது போன்றே அவரது மக்களும் பரிசுத்தவான்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அவர் தமது மக்களை அழைக்கிறார் (1 பேதுரு 1:15). கிறிஸ்தவர் புதிதாகப் பிறந்துள்ளார் (யோவான் 3:3, 5; 1 பேதுரு 1:22, 23) மற்றும் அவர் ஒரு புதிய ஜீவனை அனுபவிக்கிறார் (ரோமர் 6:3, 4). அவர் பழைய பாவ மனிதனைப் புறம்பே தள்ளிவிட்டு பரிசுத்தத்தில் நடக்கத் தொடங்குகிறார் (ரோமர் 6:11-13). பழைய வழிகள் இனியும் பொருத்தமானவையாக இருப்பதில்லை.

பரிசுத்தத்திற்கான இந்த அழைத்தல், விக்கிரக ஆராதனைக்கார மார்க்கங்களில் அறியப்படாததாக உள்ளது. பொய்த்தேவர்களும் ஆவிகளும் தாங்களே நீதியுள்ளவைகளாக காணப்படுவதில்லை, அவைகள் நீதியுள்ள நடத்தையை வேண்டுவதும் இல்லை. உண்மையில், படைத்தவரை புறக்கணித்துவிட்டு படைக்கப்பட்டவற்றை ஆராதித்தல் என்பது மாபெரும் மற்றும் மாபெரும் பாவம் நிறைந்த தன்மையை விளைவிக்கிறது (ரோமர் 1:18-32). மக்கள் உயர்வான தர அளவையில் வாழ வேண்டும் என்று கிறிஸ்தவம் கேட்டுக்கொள்ளுவதால், அது ஒருவரின் வாழ்வில் கூடுதல் சுமையைச் சுமக்கிறது - அதாவது கிறிஸ்தவமானது ஒரு நபரின் தனிப்பட்ட

சந்தோஷத்தைக் கூட்டுவதற்கு மாறாக குறைக்கவே செய்கிறது - என்று சிலர் நினைக்கலாம். இதற்கு நேர்மாறாக, பாவம் நிறைந்த வாழ்வை வாழுதல் என்பது துன்பத்தையும் மரணத்தையும் கொண்டுவருகிறது என்பதை, ஆயிரக் கணக்கானவர்களின் வாழ்வு செயல்விளக்கப் படுத்தியுள்ளது (ரோமர் 6:23), அதே வேளையில் தூய வாழ்வை வாழுதல் என்பது எல்லாவற்றிலும் மிகுந்த சந்தோஷமான மிகவும் பூரணப்பட்ட வாழ்வாக உள்ளது[14] (யோவான் 10:10). நீதியுடன் வாழ நாடும் கிறிஸ்தவர் "எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கிறார்" (1 தெசலோனிக்கேயர் 5:16).

பயம் ஒழிக்கப்படுகிறது. கிறிஸ்தவர்களாகிய நமது வாழ்வில் இருந்து பயத்தைக் கிறிஸ்து ஒழிக்கிறார் என்பதால் நாம் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம் (யோவான் 14:27; 1 யோவான் 4:18). பொய்த்தேவர்களுக்குப் பயப்பட நாம் எந்தக் காரணத்தையும் கொண்டிருக்கவில்லை, அப்படி ஒன்று நிலைத்திருக்கவில்லை என்று அறிந்திருக்கிறோம் மற்றும் கிறிஸ்து இந்த அண்டத்தில் நிலவக்கூடிய எந்த ஆவியைக் காட்டிலும் அதிகம் வல்லமை நிறைந்தவராக இருக்கிறார். நாம் மனிதர்களைக் குறித்தோ (எபிரெயர் 13:6) அல்லது இந்த உலகத்தில் உள்ள வேறு எதைக்குறித்தோ (ரோமர் 8:35-39) பயப்பட தேவையில்லை, மற்றும் நாம் மரணத்தைப் பற்றியஅச்சம் கொண்டிருப்பதில்லை (பிலிப்பியர் 1:21; 1 கொரிந்தியர் 15:54-57). உண்மையில் நாம் "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டால்" (பிரசங்கி 12:13), நாம் வேறு எதைக்குறித்தும் பயப்படத் தேவையில்லை.

மன்னிப்பு பெறப்படுகிறது. நாம் கிறிஸ்தவராகும்போது நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்பதால் நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம். என்றென்றைக்கும் நாம் இயேசுவுடன் இருக்கும்படி இல்லம் செல்லுதலை நாம் முன்னெதிர் நோக்க முடியும்; ஒவ்வொருவரும் பாவியாக இருக்கிறார்; சிலவேளைகளில் நாம் யாவரும் தவறு செய்கிறோம். ஒருநாளில் இயேசு திரும்ப வந்து நாம் இந்த மாம்சத்தில் செய்துள்ள யாவற்றிற்கும் கணக்கு ஒப்புவிக்கும்படி நம்மை அழைப்பார். நமது பாவங்கள் மன்னிக்கப் படாதிருந்தால், நாம் நரகத்திற்குச் செல்லும்படி ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவோம். இருப்பினும் நியாயத்தீர்ப்பின் நாளில் நமது பாவங்களின் காரணமாக நாம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, நமது பாவங்கள் மன்னிக்கப்பட முடியும், அவைகள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட முடியும்.

அது எவ்வாறு நடக்கக் கூடும்? அது தேவனுடைய கிருபையின் மூலமாகவும் (எபேசியர் 2:8, 9) கிறிஸ்து சிந்திய இரத்தத்தின் வல்லமையின் மூலமாகவும் (எபேசியர் 1:7) நடைபெறுகிறது. கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து (யோவான் 8:24); நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பி (லூக்கா 13:3; நடபடிகள் 17:30); நமது விசுவாசத்தை அறிக்கையிட்டு (ரோமர் 10:10; மத்தேயு 10:32) மற்றும் பாவமன்னிப்பிற்காக கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று (நடபடிகள் 2:38; 22:16), விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் நாம் கிறிஸ்துவினிடம் திரும்பும்போது இது நடைபெறுகிறது.

இதைச் செய்யுங்கள், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். பின்பு நீங்கள் ஒரு கிறிஸ்தவ வாழ்வை வாழும் சிலாக்கியம் கொண்டிருப்பீர்கள். நீங்கள் விசுவாசத்துடன் இருக்கப் பிரயாசப்படும் வரையிலும் இயேசுவின் இரத்தம் உங்கள் பாவங்களில் இருந்து உங்களைத் தொடர்ந்து சுத்திகரிக்கும்

(1 யோவான் 1:7). நீங்கள் பயமின்றியும் பரலோகத்தின் நம்பிக்கையுடனும் வாழ முடியும்! இந்த உரிமை கோருதலை விக்கிரகங்கள் - அவைகள் உருவங்களாக அல்லது ஆவிகளாக அல்லது முன்னோர்களாக இருக்கலாம் - ஏற்படுத்த முடியாது!

முடிவுரை

நாம் மரத்தினால் அல்லது கல்லினால் செய்யப்பட்ட விக்கிரகங்களை ஆராதிப்பதில்லை அல்லது நமது முன்னோர்களுக்கு மேலான வணக்கம் செலுத்தவில்லை அல்லது ஆவிகளுக்குக் கொடைகள் அளிப்பதில்லை என்பதால், நாம் விக்கிரக ஆராதனையினால் குற்றப்பட்டிருப்பது இல்லை என்று நாம் நினைக்கலாம். இருப்பினும் நாம், தேவனுக்கு முன்பாக வேறு எதையாவது முக்கியமானதாக வைத்தால், அது நமது கடவுளாகி விடுகிறது.

குறிப்புகள்

[1]விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்பதற்குக் கிறிஸ்தவர்களை அனுமதித்த கொள்கை, மத ஊழியங்கள் உள்ளடங்காத வரையில் மற்றும் எவரொருவரும் - கிறிஸ்தவர்கள் அல்லது புறம்பே உள்ளவர்கள் - ஆவிக்குரிய வகையில் தீங்கிழைக்கப்படாத வரையில், விக்கிரக ஆராதனையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் பங்கேற்க நம்மையும் அனுமதிக்கிறது. இந்தக் கொள்கை, மாதங்கள் மற்றும் வாரத்தின் நாட்கள் ஆகியவற்றின் பெயர்களில் பல, புறதெய்வ வணக்கக் கடவுள்களின் பெயர்களைக் கொண்டு தோன்றியிருந்தாலும், அவற்றைப் பயன்படுத்தக் கிறிஸ்தவர்களை அனுமதிக்கிறது. மற்றும் இது விக்கிரக ஆராதனை நம்பிக்கைகளில் முதலாவதாக வேரூன்றியிருந்த ஆனால் மற்ற கடவுள்கள் மற்றும் ஆவிகளுடன் உள்ள தொடர்பு நீண்ட நாட்களுக்கு முன்பே மறக்கப் பட்டதாக உள்ள (விடுமுறைகளைக் கொண்டாடுதல் போன்ற) பொதுவான பல வழக்கங்களில் ஈடுபடுதலைக் கிறிஸ்தவர்களுக்கு அனுமதிக்கிறது. [2]இவ்வசனப் பகுதி, மத்தேயு 4:10ல் இயேசுவினால் மேற்கோள் காண்பிக்கப்பட்டது (மேலும் காண்க - யாத்திராகமம் 23:24அ). விக்கிரகங்களை உண்டாக்குதல் அல்லது அவற்றை ஆராதித்தல் ஆகியவற்றைத் தடை செய்யும் மற்ற பிரமாணங்களுக்கு, பின்வரும் வசனப் பகுதிகளைக் காணவும்: யாத்திராகமம் 34:17; லேவியராகமம் 19:4; 26:1; உபாகமம் 4:15-19, 25, 26; 11:16, 17, 28; 16:21, 22; 27:15; 30:17, 18. [3]மந்திரவாதத்தைச் செயல்படுத்தியவர்கள் அல்லது கள்ளத்தீர்க்கதரிசனம் கொடுத்தவர்கள் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டனர் (யாத்திராகமம் 22:18; லேவியராகமம் 20:27; உபாகமம் 13:5). [4]Robert D. Spender, “Idol, Idolatry,” in *Baker’s Theological Dictionary of the Bible,* ed. Walter A. Elwell (Grand Rapids, Mich.: Baker Books, 2000), 364. *[5]“வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம்” என்று பவுல் விளக்கப்படுத்தச் சென்றார் (1 கொரிந்தியர் 8:5, 6அ). “விக்கிரகமானது ஒன்றுமில்லை” என்று கூறியதில் அவர், விக்கிரகங்கள் உயிருள்ளவை அல்ல என்று தெளிவாக அர்த்தப் படுத்தினார். தேவனைப் போன்று அவைகள் ஜீவனுள்ளவையாக இருப்பதில்லை. [6]தேவனை மாத்திரம் ஆராதிக்க வேண்டும் என்பதை இயேசு உறுதிப்படுத்திய இடமான மத்தேயு*

4:10ஐயும் காணவும். [7]*"தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது" என்ற இயேசுவின் கருத்தை (மத்தேயு 6:24) ஒப்பிட்டுப் பார்க்கவும்.* [8]Spender, *364. தேவாலயத்தில் பொய்த்தேவர்களுக்குப் பலிபீடங்கள் கட்டப்பட்டது குறித்து, 2 இராஜாக்கள் 21:3-5ஐயும் காணவும். இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை சேவிப்பதாக வெளிவேடம் இட்டுக்கொண்டு இருந்த அதே வேளையில் விக்கிரக ஆராதனை நடவடிக்கைகளுக்கும் தங்களை ஒப்புக்கொடுத்திருந்த நிகழ்வு பல வசனங்களில் சுட்டிக்காண்பிக்கப் பட்டுள்ளது. (எடுத்துக்காட்டாக, ஏசாயா 57:6; 65:11; எரேமியா 7:17, 18; 19:13; 32:29; 44:17, 19, 25; எசேக்கியேல் 20:28-31 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்.)* [9]Wendell Broom, interview by Coy Roper in Abilene, Texas, 26 April 2006. *இந்தக் கிறிஸ்தவர்களில் சிலர், கிறிஸ்தவமே உண்மையான மார்க்கமாக உள்ளது என்று தாங்கள் நம்புவதாக உரிமைகோருகின்றனர் - ஆனால் முன்னோர்களின் கடவுள்கள் மற்றும் ஆவிகள் உண்மையான வல்லமை கொண்டுள்ளன என்ற விஷயத்தில் அவர்கள் தேவனுக்குச் செலுத்துவது போன்றே அவற்றிற்கும் கவனம் செலுத்தத் தொடருகின்றனர்.* [10]Henry Huffard, personal e-mail to Coy Roper, 6 March 2006.

[11]*மத்தேயு 6:24; 12:30; 22:37 ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கவும்.* [12]*"கர்மேல் மலையின்மீது விக்கிரகங்களுக்கு எதிராக எலியா போராடியது போன்றே சபைக்குள்ளும் போராடினர். தேவனுடைய தீர்க்கதரிசிகள் விக்கிரகங்களுக்கு சகிப்புத்தன்மை கொண்டிருந்ததில்லை" என்பதால், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனப் புத்தகங்களில் இருந்து அதிகம் போதித்தல் என்பது, சபைக்குள் விக்கிரக ஆராதனை என்ற பிரச்சனைக்கு ஒரு தீர்வாக இருக்கும் என்று* Broom *அவர்கள் கூறினார்.* [13]Ibid. [14]*எடுத்துக்காட்டாக, ஒருக்காலும் விபசாரம் செய்யாமல் ஒருவர் தமது கணவருக்கு அல்லது மனைவிக்குத் தம்மை முழுமையாகக் கொடுத்தல் என்பது, ஒழுக்கவீனமான வாழ்வு நடையைக் காட்டிலும் அதிகம் முழுமைப் படுவதாக உள்ளது.*

பிரசங்கம் 8

கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசு நிலைநாட்டுதல்:

"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது"

[1 கொரிந்தியர் 11:23-26; காண்க லூக்கா 22:19]

எடி குளோர்

வேறு எந்த மனிதரும் எந்த காலத்திலும் அலங்கரிக்கப் பட்டுள்ளதைக் காட்டிலும் மாறுபட்ட வகையில் இயேசு அலங்கரிக்கப் பட்டார். நமது பாவங்களுக்கான அவரது பலியை அளிப்பதற்கான ஆயத்தத்தில், அவர் மரணத்திற்கு ஏதுவான சவுக்கினால் தமது முதுகின் குறுக்கே அடிகளைப் பெற்றார். நமது இரட்சிப்பிற்கான அவரது வீரத்துவமான செயலுக்கு, நன்றி நிறைந்த இருதயங்களின் பாராட்டுரைகளுக்குப் பதிலாக, காட்டுமிராண்டித் தனமான கும்பலின் ஏளனமே தரப்பட்டது. இராஜரீகத்தின் உயர்ந்த ஆடைகளுக்குப் பதிலாக அவர், சிகப்பு அங்கியால் அலங்கரிக்கப்பட்டார். அவர் முடிசூட்டப்படுதலில் முட்களால் ஆன கிரீடம் அடங்கியிருந்தது மற்றும் ஒரு நாணல் தட்டை தான் அவரது செங்கோலாக இருந்தது. அவரது அரசத்துவம் இழிவுபடுத்தப் பட்டது மற்றும் அவரது கைகளிலும் பாதங்களிலும் பதியப்பட்ட ஆணிகளின் தழும்புகளே அவரது வீரத்தின் அடையாளமாக இருந்தன. கடைசித் தொடுகை என்ற வகையில் அவர், ரோமப்போர்வீரன் ஒருவனால் தமது விலாப்பகுதியில் ஆழமாகக் குத்தப்படுதலைப் பெற்றுக்கொண்டார்.

நீதிக்காக இயேசு தண்டிக்கப்பட்டது போன்று எவரொருவரும் எந்தக் காலத்திலும் தண்டிக்கப் பட்டதில்லை, மற்றும் அவரது பலி நிகழ்வித்த நித்திய நன்மையைப் போன்று வேறெந்தப் பலியும் எந்தக் காலத்திலும் விளைவித்தது இல்லை. மேல்வீட்டில் நமது கர்த்தரின் "இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்ற குறுகிய அறிவித்தலானது, தமிழ் மொழியில் ஐந்தே ஐந்து வார்த்தைகளில் அவரது மரணம் பற்றிய முதன்மையான சத்தியங்களை எடுத்துரைத்து முடிக்கிறது. இது ஆங்கில வேதாகமத்தில் "This is My body which is given for you," *என்று ஒன்பது வார்த்தைகள் கொண்ட வாக்கியமாக உள்ளது இதன் அடிப்படையில் இந்த வார்த்தைகளின் அர்த்தத்தை நாம் உய்த்துணர முயற்சி செய்வோமாக.*

"This is My body." இந்த வார்த்தைகளில் நாம் அவரது திரு அவதாரத்தைக் காணுகிறோம். "திரு அவதாரம்" என்ற இந்த வார்த்தை, ஏதேனும் ஒரு பொருளுக்கு மாம்சத்தை அணிவித்தல் - ஒரு சரீரத்தை அல்லது

பௌதீக வடிவத்தை - கொடுத்தல் என்று மாத்திரமே அர்த்தப்படுகிறது. ஒவ்வொரு கட்டிடமும் யாரோ ஒரு கட்டிடக் கலைஞரின் கனவினுடைய அவதாரமாக உள்ளது. இயேசு கிறிஸ்துவின் திரு அவதாரம் என்பது, தேவனுடைய குமாரனுக்கு ஒரு சரீரம் உடுத்துவிக்கப்பட்டதை அர்த்தப் படுத்துகிறது. "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1:14).

இயேசுவின் பிறப்பும் சிலுவையில் அறையப்படுதலும் விடுவிக்க இயலாதபடி ஒன்றாகப் பிணைக்கப் பட்டுள்ளன. குமாரனாகிய தேவன் தமது பிறப்பில் தமக்கு ஒரு உடலை எடுத்துக் கொண்டார். அவர் தமது மரணத்தில், தமது உடல் சிலுவையில் ஆணிகளால் அறையப்படுகையில் அதை நமக்காகக் கையளித்தார். "ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்" என்றார் (எபிரெயர் 10:5). திரு அவதாரம் இல்லாதிருந்தால், சிலுவையில் அறையப்படுதல் இருந்திருக்க முடியாது.

"Which is given" என்ற வார்த்தைகளில் நாம், அவரது தியாகத்தைக் காணுகிறோம். "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:2).

மாபெரும் தியாகங்களின் மூலமாக மாத்திரமே உலகத்திற்கு மாபெரும் ஆசீர்வாதங்கள் தரப்பட முடியும். பூமியில் பெரும்பான்மையான மக்கள் "சுய - பாதுகாப்பு" கொள்கையில் வாழுகின்றனர், ஆனால் தகுதியான இலக்குகளைத் தங்கள் தனிப்பட்ட அனுகூலங்களுக்கு முன்னதாக மனவிருப்பத்துடன் வைக்கும் மனிதர்களால் தான் இந்த உலகத்திற்கு மாபெரும் பங்களிப்புகள் தரப்பட்டுள்ளன. தமது பணத்தைத் தேவனுக்குக் கொடுக்கும் மனிதர், "இதோ என் செல்வம் இங்கு உள்ளது. இதை நான் உமக்கு அளிக்கிறேன்" என்று கூறமுடியும். ஊழியக் களத்திற்குச் செல்லும் தங்கள் மகனை அல்லது மகளை ஆசீர்வதிக்கும் பெற்றோர், "உமக்கு எங்கள் குடும்பத்தில் இருந்து நாங்கள் அளிக்கும் பங்கு இதுவே" என்று கூற முடியும். இராஜ்யத்தில் பிரயாசப்பட்டு இளைப்படைந்த ஊழியக்காரர் ஒவ்வொருவரும், அவரது அல்லது அவளது பலவீனமான உடலைக் கண்ணோக்கும்போது, "இதுவே நான் உமக்கு அளிக்கும் உடலாகும்" என்றுகூற முடியும்.

இருப்பினும் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது எல்லாக் காலத்திலும் ஏற்படுத்தப்பட்ட ஒரு உண்மையான பலியாக இருக்கிறது. நமது உலகத்தை அவர் கண்ணோக்குகையில், "இது உங்களுக்காகப்பிட்கப்பட்ட என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்று அவரால் கூற முடியும். தேவனுடைய குமாரனால் சிலுவையில் ஏற்படுத்தப்பட்ட தியாகத்தைத் தவிர வேறு எந்த தியாகத்தினாலும் இரட்சிப்பு இல்லை. "அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்திசெய்ய மாட்டாதே" (எபிரெயர் 10:4).

"For you" என்ற வார்த்தைகளில் நாம், கிறிஸ்துவின் பாவநிவாரணச் செயலைக் காணுகிறோம். இயேசுவின் மரணம் என்னைக் குறித்து அக்கறைப் படுகிறது என்பதே அவரது மரணத்தைப் பற்றிய ஆச்சரியம்

நிறைந்த சத்தியமாக உள்ளது. ஜூலியஸ் சீஸரின் மரணம் என்னைக் குறித்து அக்கறைப் படுவதில்லை. அவர் ஒரு வன்முறையான மரணத்தைப் பெற்றார், ஆனால் அவர் எனக்காக மரிக்கவில்லை. இராயனின் மரணம் என்னைக் குறித்து அக்கறைப்படவில்லை. அவர் வன்முறையில் மரித்தார், ஆனால் அவர் எனக்காக மரிக்கவில்லை. ஆராய்ச்சியாளரான ராபர்ட் ஸ்காட் என்பவரின் மரணம் என்னைக்குறித்து அக்கறைப்படவில்லை. அவர் ஆர்க்டிக் பகுதியில் தைரியமாகப் பயணம் செய்ததற்கு ஒரு விலையைச் செலுத்தினார், ஆனால் அவர் எனது பாவத்திற்கான விலையைச் செலுத்தவில்லை. புறதெய்வ வணக்கம் நிறைந்த உலகத்தில் தைரியமாக சுவிசேஷத்தைப் பிரசங்கித்த காரணத்தினால் பவுல் ஒரு வேதசாட்சியாக மரித்தார்; ஆனால் அவர் எனக்காக அல்ல கிறிஸ்துவின் நிமித்தமாகவே மரித்தார். இயேசு ஒரு வீரராகவோ அல்லது வேதசாட்சியாகவோ அல்ல, ஆனால் எனக்காக ஒரு பலி என்ற வகையில் மரித்தார். "அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" (கலாத்தியர் 1:4). "For you" என்ற வார்த்தையை நாம் புரிந்து கொள்ளாவிட்டால், சிலுவையின் தனிசிறப்பை நாம் புரிந்து கொள்வதில்லை என்றே அர்த்தமாகிறது.

நாம் ஒன்றுகூடியிருக்கும்படி ஒரு அறைக்குள் யாரேனும் ஒருவர் அவசரமாகப் புகுந்து, "நமது நகரின் வங்கியில் பெரிய தொகை ஒன்று இடப்பட்டுள்ளது" என்று கூறினால் நாம் மனம் ஈர்க்கப்படுவதில்லை. இவ்வகையான வைப்புத்தொகைகள் வங்கியின் வழக்கமான வேலைகளாக உள்ளன என்பது நிச்சயம். இருப்பினும் நம்மிடத்தில் யாரேனும் ஒருவர் வந்து, "நமது நகரின் வங்கியில் உங்களுக்காக ஒரு பெரிய தொகை இடப்பட்டுள்ளது" என்று கூறினால் நாம் மனம் ஈர்க்கப்படுவோம். "உங்களுக்காக" என்ற வார்த்தையே இவ்விரு அறிவிப்புகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடாகும்.

மேல்வீட்டில் இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கூறிய பின்வரும் வார்த்தைகளில், கிறிஸ்தவத்தின் புதிர் காணக்கிடக்கிறது: "இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது." இயேசுவின் மரணம் அர்த்தப் படுத்துவது என்ன என்பதை இந்த ஐந்து வார்த்தைகள் என்றென்றைக்கும் நமக்கு நினைவூட்டும்.

ஆர்வம் கொண்ட கும்பல், ஆவிக்குரிய மதிப்பீடுகளைப் பற்றிய உணர்வில்லாத நிலையில், "அவர் மரித்தார்" என்று கூறியது. மூப்பர்கள் இதைக் கூறினர். பிலாத்து இதைக் கூறினார். சிலுவையில் அறையப்பட்டதை மேற்பார்வையிட்ட நூற்றுக்கு அதிபதி இதைக் கூறினார். சதுசேயர்கள் இதைக் கூறினர். பரிசேயர்கள் இதைக் கூறினர். காய்பா இதைக் கூறினார். இயேசு தங்கள் மீட்பராக இருப்பார் என்று நம்பியிருந்த மக்கள் இதைக் கூறினர். தூரத்தில் அவரைப் பின்சென்ற பெண்கள் இதைக் கூறினர். அவரில் ஏமாற்றம் அடைந்த மற்றும் தங்களில் ஏமாற்றம் அடைந்த சீஷர்கள் இதைக் கூறினர். "அவர் மரித்தார்" என்ற வார்த்தையில் எந்த நபரும் நினைத்துப் பார்க்கக் கூடிய மாபெரும் சிந்தனைகள் அடங்கியுள்ளன என்பதைப் பற்றி, இயேசுவின் மரணத்தின்போது எவரொருவரும் சிறிதளவே உணர்ந்து அறிந்தனர்: தேவனுடைய குமாரனின் திரு அவதாரம், அவரது பலி மற்றும் பாவங்களுக்கு அவர் செய்த பரிகாரம்.

பிரசங்கம் 9

கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசு நிலைநாட்டுதல்:

"இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது"

[1 கொரிந்தியர் 11:23-26; காண்க மத்தேயு 26:27, 28; லூக்கா 22:20]

எடி குளோர்

இயேசு தமது சீஷர்களுடன் பஸ்கா உணவை உண்டபின்பு, அவர்களுடன் தாம் கடைபிடிக்க விரும்பிய இன்னொரு இராப்போஜனத்தை நோக்கி அவர்களின் கவனத்தைத் திருப்பினார். அவர் அப்பத்தை - பஸ்கா உணவின் பாகமாயிருந்த புளிப்பில்லாத அப்பத்தை - எடுத்து அதில் அவர்கள் ஒவ்வொருவரும் பங்கேற்கும்படி கேட்டுக்கொண்டார். அதை அவர் ஆசீர்வதித்தபின், அவர்களிடத்தில் அவர், "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்று கூறினார் (லூக்கா 22:19). அவரது ஒருசில வார்த்தைகள் அவரது பூமிக்குரிய வாழ்வினூடே கடந்து சென்று அவரது தியாகமான மரணத்தில் முடிவடைந்து, அவரது திரு அவதாரம், சிலுவையில் அறையப்படுதல் மற்றும் அணுகிக்கொண்டிருந்த அவரது மரணத்தின் பதிலீட்டு இயல்பு ஆகியவற்றை விசேஷமாக முக்கியத்துவப் படுத்தின.

இதைத் தொடர்ந்து இயேசு, திராட்சரசம் நிறைந்த கிண்ணத்தை எடுத்து, அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவரும் அதில் பானம்பண்ண வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதற்கு நன்றி செலுத்தியபின் அவர், "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று கூறினார் (மத்தேயு 26:28).

நமது மீட்பர் உருவக மொழிநடையைப் பயன்படுத்தினார் என்பதைக் காட்சியமைவு தானே வலியுறுத்திற்று. அப்பம் உண்மையிலேயே அவரது உடலாகவோ அல்லது பாத்திரம் அவரது உண்மையான இரத்தத்தைக் கொண்டிருக்கவோ முடியாதிருந்தது; ஏனெனில் அவர் தம்மைப் பின்பற்றியவர்களுடன் அங்கு இருந்தார் மற்றும் அவரே அவர்களுக்கு அப்பத்தையும் பாத்திரத்தையும் முன்வைத்துக் கொண்டிருந்தார். அவர் தாம் விரைவில் மரிக்கவிருந்த மரணத்தை நினைவுகூரும் வகையில் ஒரு நினைவுகூரும்

இராப்போஜனத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

மேல்வீட்டில் அப்போஸ்தலர்கள் இந்த இராப்போஜனத்தை முதன்முதலாகக் கடைப்பிடிக்கையில், அவர்கள் அதன் தனிச்சிறப்பு பற்றிய தக்கவகையிலான புரிந்துகொள்ளுதலுடன் அதில் பங்கேற்பதற்குப் போராடினர். நடக்கப் போகிறவைகளின் முழு அர்த்தத்தையும் அவர்கள் அறியாதிருந்தனர். அவர்களுக்கு இயேசுவின் மரணம் பற்றிய சில விஷயங்கள் தெரிந்திருந்தன, ஏனெனில் இயேசுவே அதைப்பற்றி அவர்களுக்கு அடிக்கடி கூறியிருந்தார் (மத்தேயு 16:21; மாற்கு 8:31); ஆனால் அவர்களுக்கு இயேசு கூறியிருந்தவற்றை அவர்கள் கொஞ்சமே புரிந்து கொண்டு இருந்தனர். பிற்பாடு அவர்கள், நாம் செய்வது போன்று, அவரது கூற்றுக்களைப் பின்னோக்கிப் பார்ப்பார்கள் மற்றும் அவரது வார்த்தைகள் கொண்டுவரும் ஆழமான அர்த்தத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பார்கள்.

அவரது கூற்றுக்களை நாம் திரும்பவும் பார்ப்போம். அவர் தமது இரத்தத்தைப் பற்றிப் பேசிய இந்த வார்த்தைகள் எவ்வளவு நம்பிக்கையும் உற்சாகமும் ஊட்டுவதாக இருந்தன! “நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது” (மத்தேயு 26:27ஆ, 28). அவரது புத்திமதியின் ஒவ்வொரு சொற்றொடரும் கவனத்துடன் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டும்.

“இதிலே பானம் பண்ணுங்கள் ... இது ... என்னுடைய இரத்தமாயிருக்கிறது.” இங்கு நாம், அவரது தியாகத்தின் *ஆழத்தைக்* காணுகிறோம். அவர் ஒப்புக்கொடுத்த பலியானது அவரது வாழ்வு முழுவதையும் கேட்டது. இயேசு, தமது பலியின் முழுமைத்தன்மையை “என்னுடைய இரத்தமாயிருக்கிறது” என்ற வார்த்தைகளில் தொகுத்துரைத்தார், ஏனெனில் இரத்தம் என்பது ஜீவனுக்கு ஒப்பானதாக உள்ளது. இயேசு தமது இரத்தத்தை ஊற்றியபோது, அவர் தமது ஜீவனை ஊற்றினார். பழங்காலத்திய இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன், “மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே” என்று கூறினார் (லேவியராகமம் 17:11).

“இதிலே பானம்பண்ணுங்கள் ... இது ... உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.” இங்கு நாம், அவரது தியாகத்தின் நீளத்தைக் காண்கிறோம். “உடன்படிக்கை” என்ற வார்த்தை, இரட்சிப்பிற்காகத் தேவனிடத்திற்கு வரும் எல்லாரோடும், தேவன் நிலைநாட்டிய கட்டுப்படுத்தும் ஒப்பந்தத்தைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. அவரது தியாகத்தின் நீடிய தன்மையானது, அவரது இரத்தத்தினால் செல்லுபடியாக்கப்பட்ட உடன்படிக்கையில் காணப்படுகிறது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வருமாறு கூறினார்:

> கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைக்களுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும்

> உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். ... ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார் (எபிரெயர் 9:11-15).

இயேசுவின் மரணமானது, உலகத்தின் கடைசி யுகமான கிறிஸ்தவ யுகம் முழுவதிலும், உடன்படிக்கையின் வடிவில் இரட்சிப்பின் வழியை அளிக்கும்.

"இதிலே பானம்பண்ணுங்கள் ... இது ... அநேகருக்காகச் சிந்தப்படுகிற ... என்னுடைய இரத்தமாயிருக்கிறது." இங்கு நாம், அவரது தியாகத்தின் *அகலத்தைக்* காணுகிறோம். இயேசுவின் இரத்தம் பூமியில் உள்ள எல்லா மக்களையும் சென்று அடையும். இந்த அளவீடானது இயேசு எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதை நமக்குக் கூறுகிறது: "என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்" (எபிரெயர் 2:9). சுவிசேஷத்தின் செய்தியை ஏற்றுக்கொண்டு இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டுள்ள ஒவ்வொருவருக்காகவும் அவர் மரிப்பார். பூமியின் மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது, ஒருசிலர் மாத்திரமே ஒரு இடத்தில் அல்லது ஒருவேளையில் கீழ்ப்படியலாம் என்றிருக்கையில், இரட்சிக்கப்பட்டவர்கள் காலத்தினூடே உலகம் முழுவதிலும் இரட்சிக்கப்பட்ட "பலருடன்" உள்ளடங்குவார்கள்.

"இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற ... என்னுடைய இரத்தமாயிருக்கிறது." இங்கு நாம் அவரது தியாகத்தின் உயரத்தைக் காணுகிறோம். நமது பாவங்களை நீக்குவதற்காக, நமது மீறுதல்களுக்கு நிவாரண பலியாக இருப்பதற்காக இயேசு மரித்தார். இயேசுவின் மூலமாகத் தேவனிடத்திற்கு வருபவர்களுக்கு அவர் [தேவன்], "நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" என்று கூறினார் (எபிரெயர் 8:12). மோசேயின் பிரமாணத்தினுடைய மிருகபலிகள் தொடர்ந்து மற்றும் திரும்பத் திரும்பச் செலுத்தப்பட்டன. எபிரெயர் 10:11-13 வசனப்பகுதி பின்வருமாறு கூறுகிறது:

> அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான். இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார்.

நமது கர்த்தருடைய மரணம் செயல்விளைவான பூரணத்தன்மையும்

நித்தியத்துவமும் உடையதாயிருந்தது.

மேல்வீட்டில் இயேசுவின் வார்த்தைகள் எளியவையாக, சுட்டிக்காண்பித்தவையாக மற்றும் ஒருசில வார்த்தைகளாக இருந்தன, ஆனால் அவைகள், நாம் அவரது இராப்போஜனத்தில் பங்கேற்கும் போது நமது தியானத்தை வசீகரிக்கும் மீட்பின் சிந்தனைகளின் பரவலான எல்லையை எடுத்துரைத்து முடிக்கின்றன. "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத்தேயு 26:28). இங்கு, இயேசு தமது மரணத்தின் மூலம் கொண்டுவந்த மாபெரும் மற்றும் மகிமையுள்ள இரட்சிப்பின் ஆழமும், நீளமும், அகலமும், உயரமும், சுருக்கமான மற்றும் உருவகமான நடையில் காணக்கிடக்கிறது.

பிரசங்கம் 10

சபைகூடுகையில் பெண்கள் பேசுதல் பற்றிய விஷயம் என்ன?

[1 கொரிந்தியர் 14:34, 35]

1 கொரிந்தியர் நிருபத்தில் 14:34, 35 வசனப்பகுதியைக் காட்டிலும் அதிகம் விவாதத்திற்கு உரியது வேறு எதுவும் இல்லை என்றே நாம் கூறலாம். இவ்வசனப்பகுதி பின்வருமாறு கூறுகிறது:

> *சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ளவிரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே.*

சபையில் பெண்கள் அமைதலாக இருக்க வேண்டும் என்று பவுல் கூறினார். இந்த சட்டம், கிறிஸ்தவத்தை அறிக்கையிடும் மதக்குழுக்களினால் பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு இருக்கையில், சமீபத்திய ஆண்டுகளில் அதிகம் அதிகமான குழுக்கள் இந்தப் போதனையைப் புறக்கணிக்கின்றன. சில சபைகளில் பெண்கள் ஊழியர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

பெண்களைப் பிரசங்கியார்களாகப் பயன்படுத்துவதன் மூலம் 1 கொரிந்தியர் 14:34, 35ல் உள்ள அறிவுறுத்துதல்களை இப்போது புறக்கணிக்கும் குழுக்கள், இவ்வசனப் பகுதிக்குப் பல்வேறு வழிகளில் விளக்கம் அளிக்கின்றன. வேதாகமத்தின் அதிகாரத்தை மதிக்காதவர்கள், பெண்கள் மீது வேதாகமம் வைக்கும் கட்டுப்பாட்டைப் புறக்கணிப்பதில், இடர்ப்பாடு எதையும் கொண்டிருப்பதில்லை. மற்றவர்கள் வேதாகமத்தை நம்புகின்றனர், ஆனால் பெண்கள் [சபையில்] அமைதலாக இருக்க வேண்டும் என்ற விதியை, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் சபை இருந்த பகுதியின் கலாச்சாரத்தினுடைய பிரதிபலிப்பாக மாத்திரம் கண்ணோக்குகின்றனர். காலங்கள் மாறியிருப்பதால், இந்த சட்டம் இனியும் நடைமுறைப் படுவதில்லை என்று அவர்கள் நினைக்கின்றனர். சிலவேளைகளில் அவர்கள், "ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்" (ரோமர் 16:16அ) என்ற வசனப்பகுதியை இதற்கு இணையானதாகச் சுட்டிக்காண்பிக்கின்றனர். இன்றைய நாட்களில் பல இடங்களில், முத்தமிடுதல் என்பது வழக்கமான வாழ்த்துதலாக இனியும்

இருப்பதில்லை என்பதால், புதிய ஏற்பாட்டில் தரப்பட்டுள்ளபடி மிகச்சரியாக நாம் இந்த அறிவுறுத்துதலைப் பின்பற்றுவதில்லை.

இவ்வசனப்பகுதியின் போதனையைப் புறக்கணிப்பவர்களுக்கு, பெண்களின் சமத்துவத்தில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பதால் [சபையில்] பெண்கள் அமைதலாக இருக்க வேண்டும் என்ற கருத்து விருப்பமற்றதாக உள்ளது. ஆண்களைப் போன்றே சமமாக பெண்கள் பணம் ஈட்டும் - பெண்கள் மருத்துவர்களாக, வழக்குரைஞர்களாக, பெரிய நிறுவனங்களின் முதன்மை நிர்வாகிகளாக மற்றும் நாடுகளின் தலைவர்களாக இருக்கும் - இந்த யுகத்தில் பெண்களுக்கு பிரசங்கிப்பதற்கான உரிமை மறுக்கப்படுதலை நம்ப இயலாததாக அவர்கள் காணுகின்றனர். அவர்களின் கண்ணோக்கில், சபை என்பது, பெண்கள் ஆண்களுக்குச் சமானமாக இன்னும் மதிக்கப்படாத ஒரு இடமாக உள்ளது.

பெண்கள் மீது புதிய ஏற்பாடு விதிக்கும் கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ளத் தொடரும் மக்கள் கூட, இந்த விஷயத்தில் முழுமையாகக் கருத்து ஒருமைப்படுவதில்லை. பெண்கள் "அமைதலாக இருக்க" வேண்டும் என்று பவுல் கூறியபோது, அவர் எதை அர்த்தப்படுத்தினார்? பெண்கள் பாடலாமா? வேதாகம வகுப்புகளுக்கு இந்த சட்டம் நடைமுறைப் படுகிறதா? விவாதத்திற்கு உரிய இவ்வசனப் பகுதியைப் பற்றிய சில கேள்விகளுக்குப் பதில் அளிக்க முயற்சி செய்வதற்கு நாம் விரும்புகிறோம்.

யார்?

1 கொரிந்தியர் 14:34, 35 வசனப்பகுதி யாரைப்பற்றிப் பேசுகிறது? இவ்வசனம் "பெண்கள்" அமைதியாக இருக்க வேண்டும் என்று மாத்திரம் கூறுகிறது. இந்தப் பெண்கள் யாராக இருந்தனர்?

மனைவிகள். "மனைவிகளை" இவ்வசனப்பகுதி "பெண்கள்" என்று குறிப்பிடுவதாகச் சிலர் நம்புகின்றனர். உண்மையில் *gunē* ... என்ற ஒரே கிரேக்க வார்த்தைகள் "பெண்" என்றும் "மனைவி" என்றும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இதன் மொழிபெயர்ப்பு சந்தர்ப்பப் பொருளினால் தீர்மானிக்கப் படுகிறது. இவ்வசனப்பகுதி தீர்க்கதரிசிகளின் மனைவிகளைப் பற்றிப் பேசுகிறது என்று சிலர் கூறுகின்றனர், அவர்கள் தங்கள் கணவர்கள் தீர்க்கதரிசனம் உரைக்கும்போது அவர்களை இடை மறிப்பதற்குப் பதிலாக அமைதியாக இருக்க வேண்டும் என்று இவ்வசனப்பகுதி கூறுவதாக அவர்கள் நினைக்கின்றனர்.

அனேகமாகப் பவுல், "தீர்க்கதரிசிகளின் மனைவிகளை" இவ்விடத்தில் குறிப்பிட்டு இருக்க மாட்டார். இவ்வசனப்பகுதியில் எந்த ஒரு ஆங்கிலப்பதிப்பிலும் "மனைவிகள்" என்ற வார்த்தை இருப்பதில்லை. மற்றும் இவ்வசனப்பகுதியானது "*அவர்களின்* பெண்கள்" என்றல்ல ஆனால் அதற்கு *மாறாக* "பெண்கள்" என்றே பேசுகிறது (வசனம் 34; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மற்றும், தீர்க்கதரிசிகளின் மனைவிகள் மாத்திரம் கட்டுப்படுத்தப் பட்டிருக்க வேண்டியது ஏன்? அப்படிப்பட்ட இடைமறித்தலினால் அவர்கள் மாத்திரமே குற்றப்பட்டு இருப்பார்கள் என்பது சாத்தியமற்றதாகும்.

எல்லாப் பெண்களும். "பெண்கள்" என்பது சபையில் உள்ள எல்லாப் பெண்களையும் அர்த்தப் படுத்துகிறது என்பது மிகவும் பொதுவான கண்ணோட்டமாக உள்ளது. "நியாயப்பிரமாணம்" (வசனம் 34ஆ) பற்றிய

பவுலின் குறிப்பின் உலகளாவிய பயன்பாடு மற்றும் சபையில் பெண்ணுடைய பேச்சின் வெட்கக் கேடு (வசனம் 35ஆ) ஆகியவை இந்தக் கண்ணோட்டத்திற்குச் சாதகமாக உள்ளன, இவ்வசனம் 1 தீமோத்தேயு 2:11, 12 ஐப் போன்றதாகவே செயல்படுகிறது.

பெண் தீர்க்கதரிசிகள். பவுல் பெண் தீர்க்கதரிசிகளிடத்தில் இதைக் கூறியிருக்கலாம் என்ற மூன்றாவது சாத்தியக்கூறு ஒன்றுள்ளது.[1] அவர் 31 மற்றும் 32 ஆகிய வசனங்களில், தீர்க்கதரிசனம் உரைத்தல் பற்றிப் பேசினார்; மற்றும் அவர் 34ம் வசனத்தில், "பெண்கள்" - ஒருவேளை இது "பெண் தீர்க்கதரிசிகள்" என்று அர்த்தப்படுத்தி இருக்கலாம்[2] - சபையில் அமைதியாக இருக்க வேண்டும் என்று கூறியபோது, அதே பொதுவான தலைப்பு பற்றிய தமது கலந்துரையாடலைத் தொடர்ந்ததாகத் தோன்றுகிறது.[3] பெண் தீர்க்கதரிசிகள் சபையில் அமைதியாக இருக்க வேண்டும் என்று அவர்களுக்குப் பவுலின் அறிவுறுத்துதல் ஏற்படுத்தப் பட்டிருந்தது என்றால், மற்ற பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று அது எவ்வளவு அதிகமாகப் போதிப்பதாக இருக்க வேண்டும்?

எங்கு?

அப்படியானால், பெண்கள் எங்கு அல்லது எந்த சூழ்நிலைகளில் அமைதியாக இருக்க வேண்டும்? அவர்கள் "சபைகளில்" அமைதியாக இருக்க வேண்டும் என்று பவுல் கூறினார். "சபை" என்பதற்கான (*ekklēsia* என்ற) வார்த்தை உலகளாவிய வகையில் கிறிஸ்துவின் சரீரத்தை அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடிவரும் தேவனுடைய மக்களின் சபைக் குழுமத்தைக் குறிப்பிட்ட முடியும். இத்துடன் கூடுதலாக, இது ஆராதனைக்கு கூடிவரும் சபையை - "சபைகூடுகையை" - அர்த்தப்படுத்த முடியும்.[4] 14ம் அதிகாரம் முழுவதிலும், சபையானது முறைப்படி கூடிவந்துள்ள காலத்திற்கான அறிவுறுத்துதல் மீதே வலியுறுத்தம் உள்ளது.

வசனம் 4 - "தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்."
வசனம் 5 - "சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு."
வசனம் 12 - "சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள்."
வசனம் 19 - "நான் சபையிலே அந்நியபாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும்."
வசனம் 23 - "சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து."
வசனம் 26 - "நீங்கள் கூடிவந்திருக்கிறபோது."
வசனம் 28 - "சபையிலே பேசாமல்."
வசனம் 34 - "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்."
வசனம் 35 - "ஸ்திரீகளில் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே."

14:34, 35ம் வசனங்களில் "சபைகளில்" மற்றும் "சபையில்" என்ற சொற்றொடர்கள் பரிசுத்தவான்களின் "சபைகூடுகைகளை" குறிப்பிடுகிறது என்பது நிச்சயம்.[5]

14:34, 35ம் வசனங்கள், "சபை கூடுகைகளில்" பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டால், சபை கூடிவருவதாக கருதப்படுவது

எப்போது? எடுத்துக்காட்டாக, வயது வந்தவர்களுக்கான வேதாகம வகுப்பு ஒன்றில், "ஆராதனை ஊழியம்" தொடர இருக்கும் அதே இடத்தில், சபை உறுப்பினர்களில் ஏறக்குறைய எல்லாரும் கலந்துகொள்ளும்போது, "ஆராதனை ஊழியத்தில்" பேசத் தடைசெய்யப்படும் பெண்கள் வேதாகம வகுப்பின்போது பேச அனுமதிக்கப்படுகின்றனரா?

இந்தக் கேள்விக்குக் சுருக்கமான பதில் பின்வருமாறு: "சபை கூடிவந்துள்ளது - மற்றும் பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும் - சபைகூடி வந்துள்ளபோது என்று அது கூறும்போது, நடைமுறைப்பட வேண்டும்." அந்தக் கருத்து வினோதமானதாகக் காணப்படக் கூடாது. எந்த ஒரு நிறுவனமும் தனது முறைப்படியான கூட்டங்கள் எப்போது தொடங்குகின்றன மற்றும் முடிகின்றன என்பதைக் கூறுவதற்கு உரிமை கொண்டுள்ளது. அதன் தலைவர் "கூட்டம் முறைப்படி தொடங்குகிறது" என்று கூறும்போது, அவர் "கூட்டம் நிறுத்திவைக்கப்படுகிறது" என்று கூறும்வரையிலும், கண்டிப்பான முறைமைகள் கடைப்பிடிக்கப்பட்டு கவனநிறைவான சபை செயல்முறை பின்பற்றப்பட வேண்டும். அனேகமாக ஒரு வேளையில் ஒரு நபர்தாம் பேச அனுமதிக்கப்படுவார். இருப்பினும் கூட்டத்திற்கு முன்னும் பின்னும், உரையாடலின் பொதுவான [முறைசாராத] பேச்சு ஒன்று இருக்கலாம், அதில் சிறு சிறு குழுக்களாக ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருப்பார்கள். முன்னும் பின்னும் நடப்பது என்ன என்பதைப் பற்றி எவர் ஒருவரும் அக்கறை கொள்வதில்லை; கூட்டத்தை நடத்துவதற்கான ஒழுங்குமுறைவிதிகள் என்பவை, நிறுவனத்தின் தலைவர்களால் அறிவிக்கப்பட்டபடி, கூட்டம் உண்மையில் நடைபெறும்போது மாத்திரம் கடைப்பிடிக்கப்படுகின்றன. அதுபோன்றே, சபைகூட்டங்கள் அல்லது சபைகூடுகைகளின் நடக்கை பற்றிய "சட்டங்கள்" என்பவை சபைக்குழுமத்தின் நடத்துனர்களால் கூறிப்பிடப்பட்டபடி கூட்டங்கள் நடைபெறும்போது மாத்திரமே நடைமுறைப்படுகின்றன.

சபையின் வாழ்வில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு உதாரணத்தை நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக. ஒரு உறுப்பினருடைய வீட்டில் பல குடும்பங்கள் ஒன்றுகூடுவதை நாம் சித்தரித்துக் கொள்ள முடியும். அவர்கள் "சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது" என்ற பொதுவான கொள்கையினால் தாங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக நம்புகின்றனர் (காண்க 14:40). ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆராதனைக்குக் குடும்பங்கள் வந்துசேர்கையில், வீட்டின் உரிமையாளர், எல்லாருக்கும் காஃபி தருகிறார், உறுப்பினர்கள் வட்டமாக அமர்ந்து, அல்லது நின்றுகொண்டு பொதுவாக வாரத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றனர்; பல உரையாடல்கள் நடந்தன, பலர் ஒரே வேளையில் பேசுகின்றனர்; ஒழுங்குமுறையைக் காப்பதற்கான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. கடைசியாக, இறுதிக் குடும்பம் வந்து சேர்கிறது, அங்குள்ள மனிதர்களில் ஒருவர், "நல்லது, இப்போது தொடங்கும் நேரமாயிற்று" என்று கூறுகிறார். அப்போது மக்கள் தங்கள் காஃபி டம்ளர்களைக் கீழே வைக்கின்றனர். ஒவ்வொருவரும் பேசுவதை நிறுத்திவிட்டு, அமர்ந்திருந்து, நடத்துனரை எதிர்பார்ப்புடன் கண்ணோக்குகின்றனர். அவர், "இந்தக் காலை வேளையில் நான் பாடலில் வழிநடத்துவேன், ஜான் கர்த்தருடைய பந்தியை கொடுப்பார் மற்றும் சாமுவேல் செய்தியைப் பிரசங்கிப்பார்" என்று கூறுகிறார். ஆராதனை நடைபெறுகிறது மற்றும் நிறைவில் அது ஒரு ஜெபத்துடன் முடிகிறது.

ஜெபத்திற்குப் பின்பு, மக்கள் மறுபடியும் பேசத் தொடங்குகின்றனர். அவர்கள் எழுந்து சுற்றிலும் சென்று வருகின்றனர், கிறிஸ்தவர்கள் ஒன்றாக உண்பதற்குத் தயாராகுகையில் கட்டுப்படுத்தப்பட்ட வகையிலான குழப்பம் ஒன்றும் அங்குள்ளது.

இந்தக்காட்சியில், சபையானது ஒழுங்கும் கிரமுமான முறையில் விஷயங்களைச் செய்யக் கீழ்ப்படிவதற்கு கடமைப்பட்டது எப்போது? அது உண்மையான ஆராதனை ஊழியம் தொடங்கிய வேளையிலிருந்து - சபை நடத்துனர்களால் சபையின் சார்பாக முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்ட வேளையிலிருந்து - என்பது தெளிவு, மீண்டுமாக ஆராதனை முடிந்தபின், சபையின் சார்பாக முடிவுசெய்யப்பட்டு சபையின் நடத்துனர்களில் ஒருவரால் அறிவிக்கப்படும் வேளையிலிருந்து என்பது தெளிவு. இவ்வாறாக, எல்லா நடவடிக்கைகளும் நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் செய்யப்படும் கால வேளையின் தொடக்கம் மற்றும் முடிவு ஆகியவற்றை சபையே முடிவுசெய்தது.

இதுபோன்றே கூட்டம் தொடங்குவது மற்றும் முடிவது எப்போது என்பதை, சபை - குறிப்பாக, சபையில் உள்ள ஒரு நடத்துனர் அல்லது நடத்துனர்களின் குழு - முடிவு செய்ய வேண்டும். அந்த வேளைகளுக்கு இடையில் பெண்கள் அமைதி காக்க வேண்டும்.

என்ன?

பெண்கள் மீது வசனப்பகுதி விதிக்கும் கட்டுப்பாடு என்ன? அவர்கள் மிகச்சரியாக எதைச் செய்ய வேண்டும் அல்லது எதைச் செய்யக் கூடாது?

34ம் வசனம், அவர்கள் "அமைதியாயிருக்க" வேண்டும் என்று கூறுகிறது. பவுல் அர்த்தப்படுத்தியது என்ன? ஒன்றாகக் கூடிப் பேசும் அல்லது இடை மறிக்கும் கேள்விகளைக் கேட்கும் பெண்கள் ஆராதனை ஊழியங்களைத் தொந்தரவு செய்தனர் என்பது ஒரு கண்ணோட்டமாகும்.[6] இந்தக் கண்ணோட்டம் சில தகுதிகளைக் கொண்டிருக்கையில், "நல்லொழுக்கமும் கிரமுமான முறையில்" ஆராதனை ஊழியங்களை நடத்துவதற்கான கட்டளையானது (14:40) இப்படிப்பட்ட நடத்தையை ஏற்கனவே தடைசெய்வதாக இருக்கும். ஆகையால் இன்னொரு விளக்கம் அனேகமாகத் தேவை என்று காணப்படுகிறது.

பவுல் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை நாம் புரிந்துகொள்வதற்கு உதவுவதற்காக, ஏழு வசனங்களில் இதே வார்த்தை மூன்று முறைகள் பயன்படுத்தப் பட்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். விளக்கம் அளிப்பவர் இல்லையென்றால், பாஷைகளில் பேசுபவர் "அமைதியாயிருக்க" வேண்டும் (வசனம் 28); வேறொரு தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்துதல் தரப்பட்டதென்றால், ஏற்கனவே தீர்க்கதரிசனம் கூறுபவர் "அமைதியாயிருக்க" வேண்டும் என்று கூறப்பட்டது (வசனம் 33); மற்றும் பெண்கள் (அல்லது பெண் தீர்க்கதரிசிகள்) "அமைதியாயிருக்க" வேண்டும் என்று கூறப்பட்டது (வசனம் 34). தீர்க்கதரிசிகள் மற்றும் பாஷைகளில் பேசுபவர்கள் செய்ய வேண்டியிருந்ததைப் பெண்கள் செய்ய வேண்டும் என்று பவுல் கூறினார்: அதாவது ஆராதனை ஊழியத்தின்போது பேசாது இருக்க வேண்டும்.[7] இந்தத் தடையை, நவீனகாலச் சொற்றொடரில் இடுவதென்றால், சபையின் முறையான கூடுகைகளில் அவர்கள் பிரசங்கிக்க அல்லது போதிக்கக் கூடாது.

அவர்கள் முற்றிலும் அமைதியாயிருக்க வேண்டுமா? "அமைதியாயிருத்தல்"

என்பதற்கான வினைச் சொல்லானது அவர்கள் ஒலி எழுப்புவதைக்கூடத் தடை செய்கிறதா? அது அவ்வாறே செய்கிறது என்று சிலர் விவாதிக்கின்றனர், ஆனாலும் சந்தர்ப்பப்பொருளானது இந்தக் கண்ணோட்டத்தை ஆதரிப்பதில்லை மற்றும் வினைச்சொல்லின் அர்த்தம் இதை நிர்ப்பந்திப்பது இல்லை. கிரேக்க வினைச்சொல்லான *sigaō* என்பது, "ஒன்றும் கூறாதிருத்தல், அமைதி காத்தல், பேசாதிருத்தல்"; "பேசுதலை நிறுத்துதல், அமைதியாயிருத்தல்" என்று விளக்கப்படுகிறது.[8]

Sigaō என்பது "முற்றிலுமான" அமைதி பற்றிப் பேச அவசியமில்லை என்ற உண்மையானது, நடபடிகள் 21 மற்றும் 22 அதிகாரங்களில் அதன் பயன்பாட்டில் இருந்து தெளிவாகிறது. நடபடிகள் 21:40ஆ வசனப்பகுதி, "பவுல் படிகளின்மேல் நின்று, ஜனங்களைப்பார்த்து கையமர்த்தினான்; மிகுந்த அமைதலுண்டாயிற்று, அப்பொழுது அவன் எபிரெயு பாஷையிலே பேசத் தொடங்கினான்" என்று கூறுகிறது. பின்பு நடபடிகள் 22:2ம் வசனம், "அவன் எபிரெயு பாஷையிலே தங்களுடனே பேசுகிறதை அவர்கள் கேட்டபொழுது, அதிக அமைதலாயிருந்தார்கள் என்று கூடுதலாகக் கூறுகிறது. ஒரு பேரமைதி (*sigaō* என்பதன் பெயர்ச்சொல் வடிவமான *sigēs*) கூட்டத்தில் ஏற்பட்ட பின்னரும்கூட, கூட்டம் "அதிக அமைதல்" ஆவதற்கு இன்னமும் சாத்தியக்கூறு இருந்தது. இவ்வார்த்தை "முற்றான அமைதி" என்று அர்த்தப்பட அவசியமில்லை என்பது தெளிவாகிறது.[9]

ஏன்?

பெண்கள்மீது இந்தக் கட்டுப்பாட்டை பவுல் வைத்தது ஏன்? பெண்கள் சபைகூடுகையில் பேசுதலை அவர் தடைசெய்ததற்கு, அவர் பெண்களை வெறுப்பவராக இருந்தார் என்பதோ அல்லது ஆண்களைவிடப் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றோ அல்லது எதையும் செய்ய இயலாதவர்கள் என்றோ அவர் நினைத்தார் என்பது காரணமல்ல.

பின்பு ஏன் பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும்? ஆங்கில மொழியில் இவ்வசனப்பகுதியில் "ஏனென்றால்" (*gar*) என்று அர்த்தப்படும் இரண்டு "for" கள் அடங்கியுள்ளன. இந்தச் சொற்றொடர்களால் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களுடன் கூடுதலாக சந்தர்ப்பப் பொருளில் இன்னொரு காரணமும் மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ளது.

<u>*கீழ்ப்படிதலுடன் இருப்பதற்கு.*</u> முதல் "for" அல்லது "ஏனென்றால்" சொற்றொடரில் (வசனம் 34), பெண்கள், "பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது" என்பதால் அவர்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று பவுல் கூறினார். ஒரு பொதுவான விதி உள்ளது என்பதே கருத்தாகக் காணப்படுகிறது: பெண்கள் பேச அனுமதிக்கப் பட்டிருப்பது இல்லை, ஆனால் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும்.[10] ஒரு பெண் (பெண் தீர்க்கதரிசிகூட) சபையில் பேசினால், அவள் அமைதியாக இருக்க வேண்டும் என்ற விதியை மீறுகிறாள்.

34ஆ வசனப்பகுதியில் உள்ள "வேதம்" என்பது, பெண்கள் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று உரைக்கும் பழைய ஏற்பாட்டைக் குறிக்கிறது. இந்த அறிவுறுத்துதல் வேதவாக்கியங்களில், படைப்பு மற்றும் வீழ்ச்சி பற்றிய விபரங்களில் முன்னதாகவே தரப்பட்டிருந்தது.[11] (ஒரு சில விதிவிலக்குகள் தவிர)

எப்போதும் ஆண்களுக்குத் தரப்பட்டுள்ள ஆவிக்குரிய நடத்துவத்துவத்தின் பொறுப்பில், கீழ்ப்படிதல் என்பதே பெண்களின் பணிப்பொறுப்பாக உள்ளது என்று பழைய ஏற்பாடு குறிப்பாக உணர்த்துகிறது.

அயோக்கியமானதைத் தவிர்ப்பதற்கு. கேள்விகள் கேட்காமல்கூட இருக்க வேண்டும் என்ற அளவிற்குப் பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்பதற்கு, பெண்கள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்கும் ("shameful"; NRSV) என்பது இரண்டாவது காரணமாக உள்ளது. 35ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள *aischron* என்ற வார்த்தை 1 கொரிந்தியர் 11:6லும் காணப்படுகிறது: "தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு *வெட்கமானால்* (disgraceful; NASB) முக்காடிட்டுக் கொண்டிருக்கக்கடவள்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). [தமிழ் வேதாகமத்தில் 1 கொரிந்தியர் 14:35ல் இவ்வார்த்தை "அயோக்கியம்" என்றும் 1 கொரிந்தியர் 11:6ல் "வெட்கம்" என்றும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதைக் கவனிக்கவும்.] இது, கொரிந்து நகரில் கலாச்சாரச் சூழ்நிலையில், பேசுபவர்கள் பெண்களாக இருந்தால் சபைக்கு அது வெட்கக் கேடாக இருக்கும் என்று கருத்துத் தெரிவிக்கிறது.[12] உண்மையில் யூத சபைக்கூடுகைகளில் பெண்கள் பேச அனுமதிக்கப்படவில்லை, மற்றும் குறைந்தபட்சம் சில ரோமானியர்கள், பொது இடத்தில் பேசும் பெண்கள் பற்றி எதிர்மறைக் கண்ணோட்டங்களை வெளிப்படுத்தினர்.[13]

இதைச் சிந்தையில் கொண்டவர்களாக நாம், பெண்கள் அமைதியாக இருத்தல் என்பது *செய்வதற்குச் சரியான விஷயமாக தேவனுடைய கண்களில் உள்ளது* என்பதாலும் *அது செய்வதற்குச் சரியான விஷயமாக மனிதருடைய கண்களில் உள்ளது* என்பதாலும், அவர்கள் அவ்வாறு இருக்க வேண்டும் என்பதே பவுலின் முதல் இரண்டு விவாதங்களாக இருந்தன என்று கூறலாம்.

சபைகளின் உலகளாவிய நடைமுறையைப் பின்பற்றுதல். பெண்கள் சபைகூடுகைகளில் அமைதியாக இருக்க வேண்டும் என்பதற்கான மூன்றாவது காரணம், இந்தக் கட்டளைக்கு முன்னும் பின்னும் வருகிற வசனங்களினால் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 34ம் வசனத்திற்கு முன்னதாக நாம், "பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது" என்று வாசிக்கிறோம். இந்த வார்த்தைகள் இதற்கு முன்புள்ள ("தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார்" என்ற) வாக்கியத்திற்கு உரியதா அல்லது அதற்கு பின்புள்ள ("சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை") என்ற வாக்கியத்திற்கு உரியதா என்பதில் கல்வியாளர்கள் கருத்து வேறுபடுகின்றனர்.[14] பிந்திய கண்ணோட்டம் மிகவும் சரியானது என்றால், பவுல் முந்தியதில் இருந்து விவாதம் செய்தார் என்றாகிறது: சபைக்குழுமங்கள் எல்லாவற்றிலும் பெண்கள் அமைதியாக இருந்தனர்; ஆகையால் கொரிந்து நகரில் கூடிய சபையிலும் அவர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

33ஆ வசனப்பகுதியில் விஷயம் இவ்வாறு இருந்தாலும் இல்லையென்றாலும், கொரிந்தியர்கள் தங்களுக்குப் போதிக்கப்பட்டவற்றில் இருந்து மாறுபட்ட வகையில் விஷயங்களைச் செய்வதற்குத் தாங்கள் உரிமை கொண்டுள்ளதாக அவர்கள் நினைத்திருந்தமைக்காக, 36ம் வசனத்தில், பவுல் அவர்களைக் கடிந்து கொண்டவராகக் காணப்படுகிறார். "தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது?" "அது உங்களிடத்திற்கு மாத்திரமா வந்தது?" என்று பவுல்

கேட்டார். “இல்லை” என்பதே எதிர்பார்க்கப்பட்ட பதிலாக இருந்து. இந்த அம்சத்தில், மற்ற சபைகளின் நடைமுறையைக் கருதாமல் கொரிந்தியர்கள் தங்கள் சொந்த வழிகளில் செல்வதற்கு உரிமை கொண்டிருக்கவில்லை.[15] சபைகூடுகைகளில் பெண்கள் பேசாதிருக்க வேண்டும் - இது கீழ்ப்படிதலைத் தேவன் கேட்கிறார் என்பதால் மாத்திரமல்ல, மற்றும் ஆராதனையில் ஒரு பெண் வழிநடத்துதல் என்பதை அயோக்கியமானதாக மனிதர்கள் கருதினர் என்பதால் மாத்திரமல்ல, ஆனால் முதல் நூற்றாண்டு சபையில் ஆராதனையில் ஆண் வழிநடத்துதல் என்பது நிலைநாட்டப்பட்ட வடிவமைப்பாக இருந்தது என்பதாலும், அவர்கள் [பெண்கள்] பேசாதிருக்க வேண்டும்.

எப்போது? (எதுவரைக்கும்?)

இந்தத் தடை எதுவரைக்கும் நீடித்திருக்க வேண்டும்? இவ்வசனப் பகுதியில் காணப்படுகிற, பெண்கள் மீதான தடை என்பது இன்றைய சபைக்கு நடைமுறைப்படுத்தக் கூடியதாக உள்ளதா?[16]

பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையானது இன்றைய நாட்களில் சபையைக் கட்டுப்படுத்துகிறதா இல்லையா என்பது பற்றி, கல்வியாளர்கள் விவாதித்துள்ளனர். பின்வரும் காரணங்களில் ஒன்று அல்லது அதிகமானவற்றிற்காக, இது கட்டுப்படுத்துவது இல்லை என்று பலர் கூறுகின்றனர்:

(1) “இவ்வசனப் பகுதியைப் பவுல் எழுதவில்லை, எனவே இது ஏவுதல் பெற்ற கட்டளை என்று நினைக்கப்பட முடியாது.”

(2) “கொரிந்து நகரில் இருந்த சூழ்நிலையானது ஒரு குறிப்பிட்ட பிரச்சனையை உள்ளடக்கியது (பெண்கள் ஒன்றுகூடிப் பேசியதன் மூலம் சபையைத் தொந்தரவு செய்தனர்) இது இன்றைய நாட்களில் சபைகள் எதிர்கொள்ளாத பிரச்சனையாகும்.”[17]

(3) “பெண்கள் பேசுதல் என்பது அப்போது இருந்த சமூகத்தில் அயோக்கியமானதாகக் காணப்பட்டிருக்கும் என்ற உண்மையால் சுட்டிக்காட்டப்பட்ட வகையில், இந்தப் பிரச்சனை கலாச்சார ரீதியான மறைகருத்துக்களைக் கொண்டுள்ள வேளையில், இதே விஷயம் இன்றைய நாட்களில் அயோக்கியமானதாகக் காணப்படாது.”[18]

(4) “கட்டுப்பாடு அற்புத வரங்களையும் அற்புத வரங்கள் செயல்படுத்தப்பட்ட கூட்டங்களையும் உள்ளடக்கிற்று; இன்றைய நாட்களில் அற்புத வரங்கள் இல்லை என்பதால், இந்தக் கட்டுப்பாடு நடைமுறைப்படுவதில்லை.”[19]

(5) “சபையில் பெண்களுக்கு விதிமுறைப்படியான கொள்கை என்பது கலாத்தியர் 3:28ல் உரைக்கப்பட்டுள்ளது (‘ஆணென்றும் பெண்ணென்றுமில்லை’), மற்றும் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியானது மேலோங்கியுள்ள இந்த சட்டத்தின் வெளிச்சத்தில் விளக்கம் அளிக்கப்பட வேண்டும்.[20] ஆகையால், 1 கொரிந்தியர் 14:34, 35 வசனப்பகுதி, பயன்படுத்தாமல் விடப்பட வேண்டியதான, முதல் நூற்றாண்டு சபையின் கலாச்சாரப் பாரம்பரியத்தின் பகுதியாக உள்ளது.”

இந்த விவாதங்களில் பெரும்பான்மையானவை சிறிதளவே மதிப்புடையவைகளாக உள்ளன. ஏவுதல் பெற்ற புத்தகம் என்ற வகையில்

புதிய ஏற்பாட்டை நாம் ஏற்றுக்கொள்கிறோம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலேயே 1 கொரிந்தியர் நிருபத்தையும் பெண்கள் பேசுதல் மீது கவனம் குவிக்கும் 2:11-14 வசனப்பகுதியுள்ள 1 தீமோத்தேயு நிருபத்தையும் பவுல் எழுதினார் என்று நாம் நம்புகிறோம். ஆகையால் புதிய ஏற்பாட்டின் வசனப்பகுதியை கனவீனப்படுத்தும் எந்த விவாதத்தையும் நாம் மறுக்கிறோம்.

மற்றும், சபையில் பெண்கள் பேசுதலுக்கு எதிரான தடையானது காலத்தின் முடிவு வரையிலும் நிலைத்திருக்கும்படியான நோக்கங் கொண்டது என்று நம்புவதற்கு நாம் நல்ல காரணங்களைக் கொண்டுள்ளோம்:

(1) *நிபந்தனையானது உலகளாவிய ஒரு கட்டளையாக இருந்தது.* கொரிந்து சபையில் கூறப்பட்ட கட்டுப்பாடு அந்த இடத்திற்கு மாத்திரமல்ல அல்லது ஆவிக்குரிய வரங்களைச் செயல்படுத்தும் நோக்கத்திற்காக சபைகளுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல. மாறாக அது "சபைகளெல்லாவற்றிலேயும்" நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கட்டுப்பாடாக இருந்தது (14:33).[21]

(2) *இது காலம் கடந்த கொள்கையின் அடிப்படையிலானதாக இருந்தது.* ("சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை" என்ற) "பொதுவான விதி"க்கான காரணம் அன்று உண்மையாக இருந்தது மற்றும் அது இன்றைய நாட்களிலும் உண்மையானதாகவே நிலைத்துள்ளது. பெண்கள் "அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது" (14:34) என்பது காலமற்ற காரணமாக உள்ளது. இது இவ்வாறு இருப்பதால், இரண்டாவது காரணம் ("அயோக்கியமாயிருக்குமே" ["தகுதியற்றதாக உள்ளது"; NIV] - ஒவ்வொரு காலம் மற்றும் ஒவ்வொரு இடத்திலும் நடைமுறைப்படுகிறதா இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல.

(3) *புதிய ஏற்பாட்டில் இது சீர்பொருத்தமானதாகக் காணப்பட்டுள்ளது.* இந்தக் கட்டுப்பாடு நிலைத்திருத்தலை நோக்கங்கொண்டது என்பதை, இந்தப் பாடக்கருத்தின் மீது வேதாகம போதனையின் சீர்பொருத்தம் சுட்டிக்காட்டுகிறது, "ஆவிக்குரிய வகையில் ஆண் வழிநடத்துதல்" என்பதன் மீது நாம் வேதாகம வலியுறுத்தம் ஒன்றைக் காண்பது மட்டுமின்றி, பெண்கள் பேசுதல் பற்றி குறிப்பாகக் கவனம் செலுத்தும், 1 கொரிந்தியர் 14:34, 35 மற்றும் 1 தீமோத்தேயு 2:11-14 என்ற இரு வசனப்பகுதிகளையும் நாம் காண்கிறோம். இவ்விரு வசனப்பகுதிகளும் ஏறக்குறைய இணைவசனப் பகுதிகளாக உள்ளன. சபையின் கூடுகைகளில் பெண்கள் நடத்துதலைப் புதிய ஏற்பாடு சீர்பொருத்தமாக மற்றும் சீராகத் தடைசெய்கிறது.

சபையில் பெண்கள் அமைதலாயிருக்க வேண்டும் என்ற கட்டளையானது புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற காலமற்ற கொள்கையின் அடிப்படையிலான ஒரு உலகளாவிய கட்டளையாக இருந்தது. ஆகையால் நாம், இந்தக் கட்டளையானது புதிய உடன்படிக்கையின் யுகம் முழுவதிலும் சபையினால் கடைப்பிடிக்கப்படுதலை நோக்கங்கொண்டது என்று முடிவு செய்ய வேண்டும்.

முடிவுரை

பெண்களைப் பிரசங்கியார்களாக நாம் கொண்டிருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம் அல்ல. அப்படியென்றால் அது, பெண்கள்

பயனற்றவர்கள் அல்லது ஆண்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்கள் என்று அர்த்தப்படுத்துகிறதா? அவர்களுக்காகவும் கிறிஸ்து மரித்திருக்கையில் மற்றும் ஆண்களைப் போன்றே அதே அடிப்படையில் அவர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் (கலாத்தியர் 3:28) என்று அவர் விரும்புகையில், அவர்கள் எப்படி தாழ்ந்தவர்களாக இருக்க முடியும்? அவர்கள் மாறுபட்ட பணிப்பொறுப்பைக் கொண்டுள்ளனர், ஆனால் அது அவர்கள் தாழ்ந்த பணிப்பொறுப்பைக் கொண்டுள்ளனர் என்று அர்த்தப்படுவதில்லை. அவர்கள் பயனற்றவர்களா? சபையில் தேவனை மகிமைப்படுத்த, மற்ற மக்களுக்கு உதவிசெய்ய மற்றும் ஆத்துமாக்களை இரட்சிக்க, பெண்கள் செய்துள்ள மற்றும் செய்யக்கூடிய ஐம்பது அல்லது அதற்கும் மேலான விஷயங்களை நாம் சுலபமாகப் பட்டியலிட முடியும். இல்லத்திலும் சபையிலும் கிறிஸ்தவப் பெண்மீது நடத்தும் பொறுப்பில் வரையரைகளை வேதாகமம் வைத்துள்ளது. அதற்கு அப்பால், ஒரு கிறிஸ்தவப் பெண்மணி கிறிஸ்தவ ஆண் செய்யக்கூடிய எந்த ஒரு விஷயத்திலும் சாதனை செய்ய முடியும்!

குறிப்புகள்

[1]F. W. Grosheide, *Commentary on the First Epistle to the Corinthians,* The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 341, and Eldred Echols, *The Most Excellent Way - Overcoming Chronic Issues that Divide the Church* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1994), 169, 178-79 *ஆகியோர் இந்த நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ள விளக்கவுரையாளர்கள் மத்தியில் இருக்கின்றனர். இந்தப்பகுதி பெண்கள் தீர்க்கதரிசனம் கூறுவதைப்பற்றி அல்ல, பெண்கள் பாஷையில்பேசுவதைப்பற்றி இருக்கக்கூடும் என்ற கண்ணோட்டம்* James Burton Coffman, *Commentary on 1 and 2 Corinthians* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977), 240-41 *விளக்கவுரையில் கொடுக்கப்பட்டுள்ளது.* [2]*தொடக்ககால சபையில் பெண் தீர்க்கதரிசிகள் இருந்தனர் என்பது பல வசனப்பகுதிகளில் இருந்து தெளிவாகிறது. (காண்க நடபடிகள் 21:9; 1 கொரிந்தியர் 11:5.)* [3]*பெண் தீர்க்கதரிசிகள் இவ்விடத்தில் அர்த்தப்படுத்தப்பட்டிருந்தனர் என்றால், இவ்வசனப் பகுதி சிந்தனை ஓட்டத்தை இடைமறிப்பதில்லை - இது இவ்வசனப் பகுதியில் காரல் ஹாலடே யூகித்த ஒரு பிரச்சனையாகும்.* (Carl Holladay, *The First Letter of Paul to the Corinthians*, The Living Word Commentary [Austin, Tex.: Sweet Publishing Co., 1979; reprint, Abilene, Tex.: A.C.U. Press, 1984], 188.) *ஒருவேளை பவுல், "பெண்கள்" என்பது "பெண் உதவிக்காரர்களை" அர்த்தப்படுத்தி இருக்கக் கூடிய வகையில் 1 தீமோத்தேயு 3:11ல் செய்ததைப் போன்ற சிலவற்றை இங்கு செய்திருக்கலாம்.* [4]*"சபை கூடிவருதல்" என்பது ekklēsia என்பதின் ஒரு விளக்கமாக உள்ளது.* (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 4th ed., rev. and aug. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 240.) [5]*"இது சபைகூடுகைக்கான குறிப்பைக் கொண்டுள்ளது மற்றும் இது எல்லாச் சூழ்நிலைகளிலும் பெண்கள் போதிப்பதைத் தடைசெய்வதில்லை"* (Raymond C. Kelcy, *First Corinthians,* The Living Word [Austin, Tex: R. B. Sweet Co., 1967], 68). On this virtually all commentators agree. Echols said, "A prophetess could lead public prayer or teach anywhere but in the assembled church" (Echols, 178-79). [6]Kevin Quast, *Reading the Corinthian Correspondence - An Introduction* (New York: Paulist Press, 1994),

86; Carroll D. Osburn, "The Interpretation of 1 Cor. 14:34-35," in *Essays on Women in Earliest Christianity,* ed. Carroll D. Osburn (Joplin, Mo.: College Press, 1995), 1:234. [7]*இங்கு "பெண் தீர்க்கதரிசிகள்" அர்த்தப்படுத்தப்பட்டனர் என்றால், அந்தப் பெண் தீர்க்கதரிசிகள் மற்ற இடங்களில் தங்கள் வரங்களைச் செயல்படுத்தலாம் என்றாகிறது, ஆனால் சபைகூடுதலில் உரத்துப் பேசக்கூடாது. இவ்வசனப்பகுதி, முறையான சபைகூடுகைகளில் பிரசங்கித்தல் அல்லது போதித்தலில் இருந்து பெண்களைத் தடைசெய்வதாகப் பல விளக்கவுரையாளர்கள் காண்கின்றனர். உதாரணமாக, இந்தக் கண்ணோட்டம்* Archibald Robertson and Alfred Plummer, *A Critical and Exegetical Commentary on the First Epistle of St Paul to the Corinthians,* The International Critical Commentary, 2d ed. (Edinburgh: T. & T. Clark, 1914), 324 *என்ற புத்தகத்தில் முன்வைக்கப் பட்டுள்ளது.* [8]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 922. *அமைதி காத்தல் என்பதல்ல; ஆனால் அமைதியாகுதல் அல்லது அமைதியாகக் கீழிருத்தல் என்பதே (sigaō) "என்ற சொல்லின் வேர் அர்த்தமாக உள்ளது ... இது ஆரவாரமான அல்லது இடைமறித்தலான பேச்சை அடக்குதல் என்று அர்த்தப்படுகிறது"* (Echols, 170). [9]*எனவே இது, சபைக்குழுமத்தின் பாடுதலில் இணைந்து கொள்வதில் இருந்து பெண்களைத் தடை செய்யாது.* [10]*விளக்கவுரையாளர்கள், "பெண்களின் கீழ்ப்படிதல்" என்பது பெண்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது என்று அடிக்கடி சுட்டிக்காண்பிக்கின்றனர்.* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 355-56; Coffman, 241.)

[11]*பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள், ஆதியாகமம் 3:16ஐ (கணவர் தமது மனைவிமீது ஆளுகை செய்யும்படியான தேவனுடைய கட்டளையை) பெண்கள் கீழ்ப்படிந்திராத போது மீறப்படும் விதியின் பாகமாகக் குறிப்பிடுகின்றனர். இவ்விடத்தில் ஆதியாகமம் 1:26, 27 மற்றும் 2:21-23ன் படைப்பு பற்றிய எடுத்துரைப்புகளைப் பற்றிப் பவுல் நினைத்திருக்க அதிகம் வாய்ப்பு உள்ளது என்று புரூஸ் அவர்கள் சுட்டிக்காண்பித்தார்.* (F. F. Bruce, *1 and 2 Corinthians,* The New Century Bible Commentary [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971], 136.) [12]*"அறிவுறுத்துபவர்களின் பணிப்பொறுப்பைப் பெண்கள் தங்களுக்கு எடுத்துக் கொள்ளுதல் என்பது பெரும்பான்மையான மக்களின் கண்களில் கிறிஸ்தவத்தைக் கனவீனப்படுத்துதலாக இருந்திருக்கும். கலாச்சாரங்களைப் பின்பற்றும்படி அவர்களுக்குப் பவுல் அழைப்பு விடுக்கிறார்"* (Leon Morris, *The First Epistle of Paul to the Corinthians,* The Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973], 201). [13]Osburn, 231. *இருப்பினும், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த உலகத்தில் பெண்கள் பற்றிய பல்வேறு எண்ணப்போக்குகளைக் கண்டறிதல் சாத்தியமாக இருந்தது என்று சுட்டிக்காண்பித்த ஆஸ்டர் அவர்கள், "கிரேக்க - ரோமானியப் பழங்காலத்தின் எல்லாத் தகவலும் அளிக்கப்பட்ட ஒரு சித்தரிப்பை" கொண்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது என்று எச்சரித்தார்.* (Oster, 358-59.) [14]NASB*வேதாகமம் [மற்றும் தமிழ் வேதாகமம்], "பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது" என்பதை முந்திய சொற்றொடருடன் தொடர்பு படுத்துகிறது;* NRSV*மற்றும்* NIV *வேதாகமங்கள் இதை [இதற்குப்] பிந்திய சொற்றொடருடன் தொடர்பு படுத்துகின்றன.* [15]*இதேபோன்ற கூற்றுக்களைப் பவுல், 1 கொரிந்தியர் 7:17 ("எல்லாச் சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன்") மற்றும் 1 கொரிந்தியர் 11:16 ("எங்களுக்கும், தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கில்லை")*

ஆகியவற்றில் ஏற்படுத்தினார். இதைப்போன்ற, ஆனால் தெளிவாக உள்ளடங்காத ஒரு கருத்து *16:1ல்* காணப்படுகிறது: "நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள்." [16]இது தொடர்ந்து பொருத்தமாகும் நிலை பற்றி விளக்கவுரையாளர்கள் கருத்து வேறுபடுகின்றனர். இது தொடர்ந்து செயல் விளைவில் இருக்கத் தொடர வேண்டிய முற்றான கட்டளையாக உள்ளது என்பதில் பலர் மனநிறைவு அடைந்துள்ளனர். (R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's First and Second Epistles to the Corinthians* [N.p.: Lutheran Book Concern, 1937; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1963], 616; Grosheide, 341-42; David Lipscomb, *A Commentary on the New Testament Epistles*, vol. 2, *First Corinthians,* ed. J. W. Shepherd [Nashville: Gospel Advocate Co., 1935; reprint, 1984], 216-17; W. Harold Mare, "1 Corinthians," in *The Expositor's Bible Commentary,* vol. 10, *Romans-Galatians* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976], 276.) இதற்கு நேர்மாறாக, *1 கொரிந்தியர் 14:34, 35,* சபைக்கான "உலகளாவிய சட்டம்" அல்ல என்ற கண்ணோட்டத்தை காஃமன் கொடுத்தார். (Coffman, 242-45.) [17]ஆஸ்டர் அவர்கள் பின்வரும் கண்ணோட்டத்தைத் தழுவினார்: " 'அமைதி' மற்றும் 'பேச அனுமதிக்கப்படவில்லை' என்ற நிபந்தனைகள் சந்தர்ப்பப்பொருளில் ஆனதாகவும் இந்தப் பெண்கள் பேசுதலுக்கு எதிராகச் சீர்பொருத்தமாகத் தடைசெய்வதாகவும் மாத்திரம் இருந்திருக்க முடியும் ... இது அவர்கள் *1 கொரிந்தியர் 14:34-35ன்* கொள்கைகள் மற்றும் வரைமுறைகள் ஆகியவற்றை மீறிய வரைக்கும் மாத்திரமே அமலில் இருக்கிறது எனலாம்" (Oster, 355). [18]William Barclay, *The Letters to the Corinthians,* The Daily Study Bible, 2d ed. (Edinburgh: St. Andrews Press, 1954; reprint, Philadelphia: Westminster Press, 1956), 151-52. [19]C. R. Nichol, *God's Woman* (Clifton, Tex.: Nichol Publishing Co., 1938), 140; Randy Mayeux, "An 'Old Look' at Women in the Church," *Firm Foundation* 92 (2 December 1975): 761. [20]Kathy J. Pulley, "Women in the Church in Recent Discussion," in *Essays on Women in Earliest Christianity,* ed. Carroll D. Osburn (Joplin, Mo.: College Press, 1995), 1:12. என்ற புத்தகத்தில் அவர்களின் கூற்றுப்படி, இது பெண்களின் பணிப்பொறுப்பு குறித்து "சரிநிகர்" ("சம உரிமைகள்") நிலைப்பாட்டிற்கு அடிப்படையாக உள்ளது.

[21]"சபைகளெல்லாவற்றிலேயும் ..." என்ற முன்னுரைக் கூற்று, "எல்லா சபைகளுக்கும் அப்போஸ்தலிக்க அதிகாரத்தை அமுல்படுத்தியிருந்த" கட்டளையைச் சுட்டிக்காண்பிக்கிறது என்று ஹார்வி போர்ட்டர், அவர்கள் கூறினார் (Harvey Porter, "Woman's Work in the Church: Scriptural Limitations," *Abilene Christian College Lectures* [1972], 205).

பிரசங்கம் 11

[அந்நிய] மொழிகளில் பேசுதல் பற்றிய விஷயம் என்ன?

(1 கொரிந்தியர் 14)

1 கொரிந்தியர் 14ம் அதிகாரத்தில், அற்புத வரங்களின் பயன்பாடு தொடர்பான பெருமளவு சந்தர்ப்பப் பொருளுக்குள் பவுல் - அந்நிய மொழிகளில் பேசுதல் என்ற - பரிசுத்த ஆவியானவரின் குறிப்பிட்ட வரம் ஒன்றைப் பயன்படுத்துதலில் உள்ள பிரச்சனைகள் மீது கவனம் குவித்தார்.

இன்றைய நாட்களில் கிறிஸ்தவக் குழுவினரில் சிலர் அந்நிய மொழிகளில் பேசுவதாக உரிமை கோருகின்றனர். இந்த நடைமுறை (நமது வசனப்பகுதியில் உள்ளபடி *glōssa* "மொழிகள்" என்பதில் இருந்து வருகிற) "glossolalia" என்று அழைக்கப்படுகிறது. 1970களில் இருந்து, மொழிகளில் பேசுதல் மற்றும் குணமாக்குதல் போன்ற பிற அற்புத வரங்களின் மீது புதுப்பிக்கப்பட்ட வலியுறுத்தம் ஒன்று இருந்து வருகிறது. "தெய்வீக எழுப்புதல் இயக்கம்"[1] ஒன்று எழும்பி, பிரதான நாமகரணக் கூட்டங்கள் பலவற்றைப் பாதித்துள்ளது. உண்மையில் தெய்வீக எழுப்புதல் இயக்கம், கிறிஸ்தவத்தின் "மூன்றாவது அலை" என்று அழைக்கப்பட்டுள்ளது. (கத்தோலிக்கம் "முதலாவது அலையாகவும்" புரொட்டஸ்டன்டு இயக்கம் "இரண்டாவது அலையாகவும்" இருந்தது.) கிறிஸ்தவத்தில் இவ்வளவு பிரபலமாகும் எந்த விஷயத்தையும், அது வேதவசனத்தின் படியானதா என்று நாம் ஆராய்வது அவசியமாக உள்ளது.

தெய்வீக எழுப்புதல் குழுக்களில் உறுப்பினர்களாவதற்காக, சிலர் கர்த்தருடைய சபையைக்கூட விட்டுச் சென்றுள்ளனர். கிறிஸ்துவின் சபை மிகவும் "பகுத்தறிவதாக" உள்ளது என்பது அவர்களின் கண்ணோட்டமாக இருக்கிறது. ஆவியானவருடைய வரங்களை மறுப்பதன் மூலம் சபையானது, கிறிஸ்தவ மார்க்கத்தை செத்துப் போனதாக்கவும், இருதயம், ஆத்துமா, உணர்வு அல்லது பற்றார்வம் எதுவுமற்ற சட்டப்பூர்வ முறைமையாக்கவும் அனுமதித்துள்ளது என்று அவர்கள் நினைக்கின்றனர். மேலும் அவர்கள், சபையானது புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை மீளக்கட்டுவதாக உரிமைகோரிக் கொண்டாலும், முதல் நூற்றாண்டு சபையின் வாழ்வில் மிகவும் அதிகமான பாகமாக இருந்த சிலவற்றை அது [கிறிஸ்துவின் சபை] புறக்கணித்துள்ளது என்றும் நம்புகின்றனர்.

அவர்கள் கூறுவது சரிதானா? அந்நிய மொழிகளில் பேசுதல் பற்றிய சத்தியங்களைக் கற்றுக் கொள்வதற்கு நாம், வேதவசனங்களை ஜாக்கிரதையாகப் படித்தல் அவசியமாக உள்ளது.

உண்மைகள் யாவை?

முன்பே கற்றிராத [அந்நிய] மொழிகளில் பேசுதல் முதல் நூற்றாண்டில் நடைமுறையில் இருந்தது

[அந்நிய] மொழிகளில் பேசுதல் என்பது முதல் நூற்றாண்டு சபையில் நடைமுறையில் இருந்தது என்பது நிச்சயம். பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள், ஆவியானவர் "தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே" (நடபடிகள் 2:4; KJV) அந்நிய மொழிகளில் பேசினர். பேதுரு, கொர்நேலியுவுக்கும் அவரது வீட்டாருக்கும் பிரசங்கித்த பின்பு, அவர்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு, அவர்கள் மீது பரிசுத்த ஆவியாவர் இறங்கி வந்தார் மற்றும் அவர்கள் [அந்நிய] மொழிகளில் பேசினர் (நடபடிகள் 10). பவுல் எபேசு நகருக்குச் சென்றபோது, அங்கு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்திருந்த சீஷர்கள் சிலரை அவர் கண்டார். வேத வசனத்தின்படி அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற போது, அவர்கள் [அந்நிய] மொழிகளில் பேசினர் (நடபடிகள் 19). [அந்நிய] மொழிகளில் பேசுதலின் வரம் 1 கொரிந்தியர் நிருபத்தில் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்விளைவாக, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் குறைந்த பட்சம் சில கிறிஸ்தவர்களாவது அந்நிய மொழிகளில் பேசினர் என்பதில் சந்தேகம் இல்லை.

இன்றைய நாட்களில் செயல்படுத்தப்படும் "[அந்நிய] மொழிகளில் பேசுவதாக" கூறப்படும் விஷயம்

அதுபோன்றே, இன்றைய நாட்களில் "அந்நிய மொழிகளில்" பேசுவதாக உரிமைகோரப்பட்டு செயல்படுத்தப்படும் விஷயம் ஆவிக்குரிய வகையில் பயன்நிறைந்ததாக அதைச் செய்பவர்களால் கூறப்படுகிறது. [அந்நிய] மொழிகளில் பேசுபவர்கள் இந்தப் பயிற்சியில் ஈடுபடும்போது, உணர்வுப் பூர்வமான எழுச்சி நிலை அல்லது ஆவிக்குரிய வகையில் எழுச்சி நிலையை உணருகின்றனர் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் இந்த அனுபவத்தின் காரணமாக, தாங்கள் தேவனிடம் மிகநெருக்கமாக இருப்பதாக உணரலாம். அவர்கள் உணர்ந்துள்ளது பயனற்றதாக உள்ளது என்று அந்த தனி நபர்களிடம் கூறுவதோ அல்லது அவர்கள் அனுபவித்துள்ளதாக நம்புபவற்றின்மீது விவாதம் செய்வதோ நமது வேலையல்ல; இருப்பினும் அவர்களுடன் நாம் வேதாகம ரீதியான உண்மைகளைப் படிக்க முடியும்.

இவ்வேளையில் இன்றைய நாட்களில் [அந்நிய] மொழிகளில் பேசுதல் பற்றிய இரண்டு அடிப்படைக் கேள்விகளை ஆய்வு செய்வதே நமது அணுகுமுறையாக இருக்கும்.

அந்தக் கேள்விகள் யாவை?

இன்றைய நாட்களில் "[அந்நிய] மொழிகளில் பேசுதல்" என்பது முதல் நூற்றாண்டு சபையில் செயல்படுத்தப்பட்ட அதே வரமா?

கற்றறியாத அந்நிய மொழிகள் அல்ல. இன்றைய நாட்களில் [அந்நிய] மொழிகளில் பேசுபவர்கள், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் செய்யப்பட்ட அதே செயலைச் செய்வதில்லை. [அந்நிய] மொழிகளில்

பேசும் வரம்பெற்றிருந்த முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள், அறியப்பட்ட மொழிகளில் பேசினர். உண்மையில் “மொழி” என்ற வார்த்தை ஒரு “பாஷையை” அர்த்தப்படுத்தவே பயன்பட்டது. நடபடிகள் 2:4ம் வசனம், அப்போஸ்தலர்கள் “ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்” என்று கூறுகிறது. 6ம் வசனத்தின்படி, கூட்டத்தில் இருந்த மக்கள், “தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்.” பலவகை பாஷைகளைப் பேசக்கூடிய மக்கள் அந்தக் கூட்டத்தில் இருந்தனர் (வசனங்கள் 9-11). பேசினவர்கள் கலிலேயர்களாக இருந்தபோதிலும், கூட்டத்தில் இருந்த ஒவ்வொரு நபரும் “அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே” அவர்கள் பேசியதைக் கண்டு அதிசயித்தனர் (2:7, 8).[2]

பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் பிரசங்கித்ததைக் கேட்டவர்களால் புரிந்து கொள்ளப்பட்ட மொழிகளில் அவர்கள் [அப்போஸ்தலர்கள்] பேசினர் என்பதில் நாம் சந்தேகப்பட முடியாது.[3] அந்த மற்ற பாஷைகளில் அவர்கள் பேசுவதற்கான திறமை அற்புதம் என்பதாக இருந்தது, ஏனெனில் அவர்கள் அந்த வட்டார பாஷைகளை ஒருக்காலும் படித்து அறிந்திருந்ததில்லை மற்றும் அவற்றை அவர்கள் அறிந்திருக்கும்படி எதிர்பார்க்க இயலாதிருந்தது. இதற்கு நேர்மாறாக இன்றைய நாட்களில், பாஷைகளில் பேசுதல் என்பது அர்த்தமற்ற வார்த்தைகளைப் பிதற்றுதலாக உள்ளது. சட்டப்படி, பாஷைகளில் பேசுபவர்கள் அறியப்பட்ட மனித பாஷைகளில் பேசுவதாகக்கூட உரிமை கோருவதில்லை.

பாஷைகளில் பேசுவதாக நம்புகிறவர்கள், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் செய்யப்பட்டதையே தாங்களும் *செய்வதாக* உரிமை கோருகின்றனர். மொழிகளில் பேசுதல் என்பது அறியப்பட்ட மொழிகளில் பேசுதலை உள்ளடக்குவதில்லை என்று நிரூபிக்க அவர்கள் 1 கொரிந்தியர் 14ஐப் பயன்படுத்துகின்றனர். உண்மையில் அந்த அதிகாரத்தில் பல வசனங்கள், மொழிகளில் பேசுதல் என்பது பேசுபவருக்கோ அல்லது கேட்பவருக்கோ தெரிந்திராத மொழிகளில் பேசுதலை உள்ளடக்குவதாகக் காணப்படுகிறது:

> ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான் (14:2).
>
> அந்நியபாஷையில் பேசுகிறவன், தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான் (14:4).
>
> என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி. என் கருத்து பயனற்றதாயிருக்கும் (14:14).
>
> ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா? (14:23).

இந்த அதிகாரத்தின் மேற்கண்ட வசனங்கள் மற்றும் பிற வசனங்களில் இருந்து இரண்டு உண்மைகள் தெளிவாகின்றன: (1) சில கிறிஸ்தவர்கள் பேசிய மொழிகள் - குறைந்த பட்சம் அவர்களால் - அறியப்படாதவைகளாக இருந்தன, ஏனெனில் வியாக்கியானம் பண்ணுதல் என்ற வரமானது மொழிகளில் பேசுதலின் வரத்தில் இருந்து வித்தியாசப் பட்டிருந்தது (14:13). ஒருவர் மொழிகளில் பேசும்போது, அவர் தாம் பேசுவது என்ன என்று அறிந்திருக்க அவசியம் இல்லை. (2) ஒரு நபர் அந்நிய மொழியில் பேசும்போது, தாம் பேசுவது இன்னதென்று அவர் புரிந்து கொள்ளாமல் இருந்தாலும், அந்த வரத்தை அவர் தனிப்பட்ட வகையில் செயல்படுத்தும்போது அவர் தனிப்பட்ட வகையில் பயன் அடைந்தார் (14:4).

மொழிகளில் பேசிய கொரிந்தியர்கள், அறியப்பட்ட மனித மொழிகளைத் தவிர மற்ற சிலவற்றை பயன்படுத்தினர் என்று இவ்வசனங்கள் கருத்துத் தெரிவிக்கையில், அவர்கள் செயல்படுத்திய வரமானது நடபடிகள் 2ல் விவரிக்கப்பட்ட அதே வரமாக இருந்தது என்று நாம் யூகித்தாலும், இவை [இவ்வசனங்கள்] கருத்தை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக ஒரு நபர் ஜெர்மன் மொழியை ஒருக்காலும் படித்திராமல் இருந்தாலும், ஜெர்மன் மொழியைப் பேசும் வரம் அவருக்கு அளிக்கப்பட்டு. ஜெர்மானியர்கள் இராத ஒரு சபைகூடுகையில் அதை அவர் பேசினால், அவர் தாம் பக்திவிருத்தி அடைந்ததாக உணரலாம். பேசுபவரின் வார்த்தைகளைத் தேவன் புரிந்துகொள்வார் என்பது உறுதி, எனவே அவர் தேவனிடம் பேசுவார். இருப்பினும், அந்த சூழ்நிலைகளில் அவர் பேசுவதில் இருந்து வேறு எவரும் பயனடைய மாட்டார். மற்றும், சபையின் வெவ்வேறு உறுப்பினர்கள் - அவர்கள் தங்களுக்கும் தங்கள் உரையைக் கேட்பவர்களுக்கும் தெரிந்திராத - வெவ்வேறு மனித மொழிகளில் பேசக்கூடும் என்றால் மற்றும் அவர்கள் எல்லாரும் ஒரே வேளையில் அவ்வாறு பேசினார்கள் என்றால், பார்வையாளராக வரும் ஒருவர், அவர்கள் எல்லாரும் பைத்தியம் பிடித்தவர்கள் என்று நினைப்பாரே!

அவிசுவாசிகளுக்குப் போதிப்பதற்காக அல்ல. *இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுதலை முதல் நூற்றாண்டு வரத்துடன் ஒப்பிடுதலில், தொடக்ககால சபையில் இருந்த இந்த அற்புதமான திறமையானது அவிசுவாசிகளை மனமாற்றுதலை நோக்கங் கொண்டிருந்தது என்பது முக்கியமான தீர்மானிக்கும் காரணியாக உள்ளது. 1 கொரிந்தியர் 14:22ம் வசனம், "அப்படியிருக்க, அந்நியபாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது; தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது" என்று கூறுகிறது. பிதற்றலாகப் பேசுதல் என்பது ஏற்கனவே விசுவாசிகளாக இருப்பவர்களுக்கு மன எழுச்சி ஊட்டுவதாக அல்லது பக்திவிருத்தி ஊட்டுவதாக இருந்தாலும், அது அவிசுவாசிகளுக்குப் போதிப்பதாக இருக்க முடியாது. இதற்கு நேர்மாறாக, படித்திராமல் இன்னொரு மொழியில் பேசும் திறன் என்பது அவிசுவாசிகளின் மனம் ஈர்ப்பதாக மாத்திரம் இருப்பதில்லை; ஆனால் மாறுபட்ட பின்னணிகளில் இருந்து வந்த மக்களிடத்தில் கிறிஸ்தவர்கள் செய்தித்தொடர்பு கொள்ளச் செய்ததினால் அது சுவிசேஷ ஊழியத்தை முன்னோக்கி எடுத்துச்செல்லவும் செய்தது (நடபடிகள் 2:4-12). 1 கொரிந்தியர் 14ஐ நாம் நடபடிகள் 2ன் வெளிச்சத்தில் விளக்கப்படுத்த வேண்டும்*

மற்றும் பிரசங்கித்தலில் உதவும்படி, கொரிந்தியர்களில் சிலருக்குத் தேவன் கொடுத்திருந்த, மொழிகளில் பேசும் வரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்று யூகிக்க வேண்டும்.

அதே வழியில் நடைமுறைப்படுத்தப்பட வில்லை. இத்துடன் கூடுதலாக, இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுபவர்கள் தங்கள் வரங்களை, முதல் நூற்றாண்டில் அவை பயன்படுத்தப்பட்டது போன்று (அல்லது அவை பயன்படுத்தப்பட வேண்டியது போன்றாவது) பயன்படுத்துவது இல்லை. மொழிகளில் பேசியவர்கள் அந்த வரத்தைக் தக்க வகையில் பயன்படுத்தவில்லை என்பதே, 1 கொரிந்தியர் 14ஐ எழுதுவதில் பவுலின் கவலையாக இருந்தது. இதன் விளைவாக அவர், அந்த வரம் எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றிக் குறிப்பான அறிவுரைத்துதல்களைக் கொடுத்தார். மொழிகளில் பேசுபவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பின்வரும் விதிகளைப் பவுல் அமைத்தார்:

1. *சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது* (14:5, 12, 17, 19, 26). அந்த நிபந்தனை இன்னொன்றிற்கு வழிநடத்துகிறது: கூறப்பட்ட ஒவ்வொரு விஷயமும் கேட்பவர்களுக்குக் கருத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டியிருந்தது. பக்திவிருத்தி ஊட்டுதலுக்கு புரிந்து கொள்ளுதல் தேவைப்படுகிறது. இன்றைய நாட்களில் மார்க்கரீதியான சபைகூடுகைகளில் மொழிகளில் பேசுதல் பக்திவிருத்தி ஊட்டுகிறதா? மொழிகளில் பேசுதல் என்பது ஒருவேளை மன எழுச்சி ஊட்டுவதாக அல்லது உணர்வுப்பூர்வமானதாயிருக்கலாம், ஆனால் அது பக்திவிருத்தி ஊட்டுகிறதா? கூறப்பட்டதில் அர்த்தம் நிறைந்தது எதுவும் இல்லை என்றால், அதை பக்திவிருத்தி ஊட்டுவதாகப் பவுல் கருதமாட்டார்.
2. *சபைகூடுகையில் ஒரு நேரத்தில், இருவர் அல்லது மூவர், ஒருவர் பின் ஒருவராக மொழிகளில் பேசலாம், அதுவும் வியாக்கியானம் அளிப்பவர் இருந்தால் மாத்திரமே அவ்வாறு பேசலாம்* (14:27, 28). இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுவதாக உரிமைகோருபவர்கள் இந்த அறிவுறுத்துதல்களைப் பின்பற்றுகின்றனரா? குறிப்பாக “அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், [மொழிகளில் பேசபவர்] சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்” என்ற பவுலின் வார்த்தைகள் (14:28அ) கீழ்ப்படியப்படுவதைக் காட்டிலும் அதிகமாக அடிக்கடி புறக்கணிக்கப்படுகின்றன. மொழிகளில் பேசுவதை விளக்கப்படுத்துவதற்கு சபைகூடுகையில் யாரும் இல்லை என்றால், எவரொருவரும் மொழிகளில் பேசக்கூடாது என்பதே விதியாக உள்ளது.
3. *சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்* (14:34, 35). இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுதல் நடைமுறைப்படும் சபைகளில் பெரும்பான்மையானவற்றில், பெண்கள் மொழிகளில் பேசுகின்றனர் அல்லது வேறு வகையில் சபைகூடுகைகளை வழிநடத்துகின்றனர்.
4. *சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது* (14:40). மக்கள் மொழிகளில் பேசும்போது, அவர்களின் ஆராதனை ஊழியங்கள்

முறையானதற்கு மாறாக குழப்பமானதாகத் தோன்றுகிறது.

இன்றைய நாட்களில் "glossolalia" வை நடைமுறைப்படுத்துகிறவர்கள், மொழிகளில் பேசுவதற்கு வேதவசனங்களில் தரப்பட்டுள்ள அறிவுறுத்துதல்களைப் பொதுவாகப் பின்பற்றுவதில்லை.

சமமாக மதிக்கப்படுவதில்லை. புதிய ஏற்பாட்டில் மொழிகளில் பேசுவதற்கும் இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுவதற்கு இடையிலான மாபெரும் வேறுபாடு என்பது, வரத்தின்மீது வைக்கப்படும் மதிப்புடன் தொடர்புபடுகிறது. மொழிகளில் பேசுதல் என்பது வரங்களில் மிகச்சிறந்ததாக இருக்கவில்லை (இது மிகச்சிறந்தது என்று கொரிந்தியர் நினைத்தனர் என்பது உறுதி) ஆனால் இது வரங்களில் மிகச்சிறிதானதாக இருந்தது என்று கொரிந்தியர்களுக்குக் காண்பித்தல் என்பதே, 1 கொரிந்தியர் 14ல் பவுலின் இலக்காக இருந்தது. மொழிகளில் பேசுதல் என்பது தன்னில்தானே சபைக்கு பக்திவிருத்தி ஊட்ட இயலாதிருந்தது. இதற்கு நேர்மாறாக, இன்றைய நாட்களில் பாஷைகளில் பேசுகிறவர்கள் மத்தியில், சிலவேளைகளில் அந்த வரமானது உண்மைக் கிறிஸ்தவரின் அடையாளமாக நினைக்கப்படுகிறது. எழுப்புதல் கூட்டத்தில் இருந்துகொண்டு, மொழிகளில் பேசாதவரான உறுப்பினர் ஒருவர், ஆவிக்குரிய தன்மையில் குறைவுபடுவதாக நினைக்கப்படுகிறார். இந்தக் கண்ணோட்டத்தை, மொழிகளில் பேசுதல் பற்றிய பவுலின் கருத்தில் இருந்து ஒரு பெரிய வேறுபாடு பிரித்து வைக்கிறது.

இன்றைய நாட்களில் "மொழிகளில் பேசுதல்" என்பது தேவனுடைய வல்லமையினால் நடைமுறைப்படுகிறதா?

இரண்டாவதாக, இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுதல் என்பது தேவனுடைய வல்லமையால் நடைபெறுகிறதா இல்லையா என்று நாம் கேட்க வேண்டும்.

மொழிகளில் பேசுதல் என்ற புதிய ஏற்பாட்டின் வரம் போன்றது அல்ல. இன்றைய நாட்களில் "மொழிகளில் பேசுதல்" என்று அங்கீகரிக்கப்படுபவற்றில் அதிகமானவை, வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் மொழிகளில் பேசுதல் கொண்டிருந்த பண்புகளைப் பெற்றிருப்பது இல்லை, இன்றைய நாட்களில் இந்தச் செயலில் ஈடுபடுபவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் அதைச் செய்கின்றனரா என்பது சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது. இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுதலுக்குத் தேவன் ஆதாரமூலமாக இருப்பார் என்றால், அது புதிய ஏற்பாட்டில் மொழிகளில் பேசுதலில் இருந்து வேறுபடக்கூடாது.

இன்றைய நாட்களில் மற்ற அற்புதங்களுடன் நடப்பதில்லை. மற்றும் இன்றைய நாட்களில் தேவனுடைய வல்லமையினால் மொழிகளில் பேசுதல் பற்றி நாம் சந்தேகப்பட வேண்டும், ஏனெனில் மொழிகளில் பேசுதல் என்பது ஒரு மொத்தத்தின் பகுதியாக - முதல் நூற்றாண்டில் பரிசுத்த ஆவியானவரால் நடப்பிக்கப்பட்ட வரங்களின் பல்வேறு வகைகளில் ஒரு பகுதியாக - இருந்தது. இன்றைய நாட்களில் அப்படிப்பட்ட அற்புதங்கள் எதுவும் நடைபெறுவதில்லை. தேவன் முதல் நூற்றாண்டில் சிலரை மொழிகளில் பேசச் செய்தது போன்று இன்றும் பேசச் செய்வார் என்றால், அவர் அன்று சிலருக்கு மரித்தோரை உயிர்ப்பிக்க வல்லமை கொடுத்தது போன்று இன்றும் கொடுக்க வேண்டுமே (காண்க நடபடிகள் 9:36-43). அவர் மரித்தோரை உயிர்ப்பிப்பது இல்லை

என்றால், மக்கள் அந்நிய மொழிகளில் பேசவும் அவர் காரணமாவதில்லை.

இப்படிப்பட்ட வரங்கள் ஒழிந்து போகும் காலம் வரும் என்று 1 கொரிந்தியர் 13ல் பவுல் போதித்தார். குறிப்பாக அவர், "அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்" என்று கூறினார் (13:8). அது எப்போது நடக்கும்? "நிறைவானது" (*teleios*) வரும்போது முதல் நூற்றாண்டின் அற்புத வரங்கள் ஒழிந்து போகும் என்று பவுல் கூறினார் (13:10). "நிறைவானது" என்பது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பதில்லை, ஏனெனில் இவ்வார்த்தை பொதுப்பாலாக உள்ளது. பவுல் "நிறைவான விஷயத்தை" பற்றிப் பேசினார். அப்படியென்றால் அது என்ன? சந்தர்ப்பப் பொருளுடன் வைத்துப் பார்க்கும்போது, பவுல் சபையின் பக்குவத்தன்மை பற்றிப் பேசினார். சபையானது பக்குவம் அடையும்போது, அற்புத வரங்கள் ஒழிந்து போகும். தேவனுடைய வெளிப்படுத்துதல் நிறைவடைந்து சபை பூரண வளர்ச்சி பெற்றுக்கொண்ட வேளையில் - [அந்நிய] மொழிகளில் பேசுதல் உட்பட - அற்புத வரங்கள் இனியும் அவசியமாயிருப்பதில்லை. ஆகையால் அவைகள் ஒழிந்து போயின.

மக்கள் தேவனுடைய வல்லமையினால் அந்நிய மொழியில் பேசுவதில்லை என்றால், அந்தச் செயலுக்குப் பின்னால் இருப்பது என்ன? அந்நிய மொழியில் பேசுதல் என்பது உயர்ந்த உணர்வு நிலைக் குழுச் சூழ்நிலையில் இருக்கும்போது மக்கள் ஈடுபடும் கற்றறிந்த நடக்கையாக உள்ளது. அவர்கள் அந்த செயல்மூலமாக, ஆவிக்குரிய பலன்களையும் சமூக அங்கீகாரத்தையும் ஆதாயமாகப் பெறுவதாக நினைக்கின்றனர். அவர்கள் அந்நிய மொழியில் பேசும்போது, அவ்வாறு செய்வதற்கு தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள சக்திகளினால் தாங்கள் இயக்கப்படுவதாக உணரலாம்; ஆனால் அது, தேவன் அவர்களை ஏவுகிறார் என்பதை நிரூபிப்பதில்லை. வரலாறு முழுவதிலும் மக்கள், தங்கள் கடவுள்களால் அசைக்கப்பட்டதாக உணரும் காரணத்தினால், பகுத்தறிவற்ற நடக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்த அனுபவங்கள், அவர்களின் நடக்கைக்குப் பின்னால் கர்த்தராகிய தேவன் இருந்தார் என்று நிரூபிக்காதது போலவே, அந்நிய மொழிகளில் பேசுபவரின் ஆவிக்குரிய பரவசநிலை, அவர் தேவனுடைய வல்லமையினால் பேசியுள்ளார் என்று நிரூபிப்பதில்லை.

நாம் "அந்நிய மொழிகளில்" பேசினால் அது ஏற்படுத்தும் வேறுபாடு என்ன?

இன்னமும் ஒருவர், "இன்றைய நாட்களில் நாம் அந்நிய மொழிகளில் பேசினால் அது பொருட்படுத்தப்படுமா? அது தவறானதா அல்லது துன்பம் நிறைந்ததா?" என்று கேட்கலாம். உண்மையில், அந்நிய மொழிகளில் பேசுவதை செயல்படுத்தும் ஒரு நபர் அல்லது சபை, பல காரணங்களினால் தவறாயிருக்கலாம். (1) அவர்கள் அப்படிப்பட்ட ஒரு அனுபவத்தின்மீது வேதவசன ரீதியற்ற மதிப்பை வைக்கலாம். அந்நிய மொழிகளில் பேசுவதைப் பவுல் கீழ்மைப்படுத்தி இருக்கையில், அவர்கள் அதை மேலாக்கியிருக்கலாம். (2) அந்த செயலில் அவர்கள் தேவனுடைய விதிகளைப் பின்பற்றாமல் இருக்கலாம், இதன் விளைவாக அவர்களின் ஆராதனை ஊழியங்கள் குழப்பமானவையாகவும் பக்திவிருத்தி அற்றவையாகவும் ஆகலாம். (3) ஒருவேளை அந்நிய மொழிகளில் பேசுபவர்கள்

வழக்கமாக, அந்த அனுபவத்தைப் பற்றிய தங்கள் உணர்வுகளே மார்க்கத்தில் தங்கள்மீது நிறைவான அதிகாரம் கொண்டதாகும்படி செய்கின்றனர் - அது மிகவும் அபாயகரமான நிலைப்பாடாக உள்ளது.

முடிவுரை

வேதாகமம் போதிப்பது என்ன என்பதற்குச் சாட்சியங்களை ஆராய்ந்து பார்ப்பதும் அதை ஏற்றுக்கொள்ளத் தீர்மானிப்பதுமே மனச்சாட்சியுள்ள கிறிஸ்தவர் செய்யக்கூடிய மிகச்சிறந்த செயலாக உள்ளது. அந்நிய மொழிகளில் பேசுதல் தேவனிடத்தில் இருந்து வருகிறது மற்றும் அது எல்லா யுகங்களிலும் சபையில் இருப்பதை நோக்கங் கொண்டுள்ளது என்றால், அதை (நம்மால் முடிந்தது என்றால்) நாம் செயல்படுத்தலாம்! அந்நிய மொழிகளில் பேசுதல் தேவனிடத்தில் இருந்து வரவில்லை மற்றும் அது காலத்தின் முடிவு வரையிலும் கிறிஸ்தவர்களுக்கானதாக இருப்பதில்லை என்றால், நாம் அதை செயல்படுத்தாமல் இருப்போமாக!

நாம் அந்நிய மொழிகளில் பேசுவதில்லை என்றால், அது நமது மார்க்கம் மரித்துப்போகும் மற்றும் மந்தமாகும் என்று அர்த்தப்படுத்துகிறதா? இல்லவே இல்லை. கர்த்தருடைய சபையில் உபதேசம் மற்றும் ஆராதனைக்கு வேதாகமத்தில் காணப்படும் வடிவமைப்பு நமது ஆவிகளை எழுப்பி நமது ஆத்துமாக்களுக்கு வலிவூட்ட வேண்டும். தேவனை ஆராதிப்பதும் சேவிப்பதும் நமது வாழ்வில் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் கொண்டுவர வேண்டும் மற்றும் அது சில வேளைகளில் தேவனை மகிழ்வுடன் துதிப்பதில் நாம் உற்சாகம் கொள்ளக் காரணமாக வேண்டும். உயிருள்ள, உயிர்த்துடிப்பு உள்ள ஆவிக்குரிய விசுவாசத்தை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு நாம் அந்நிய மொழிகளில் பேசுதலை நம்பியிருக்கவோ அல்லது அதை நடைமுறைப்படுத்தவோ தேவையில்லை.

குறிப்புகள்

[1]*Charismata* என்பது - 12:4ல் உள்ளது போன்று "வரங்கள்" என்பதற்கான வார்த்தையாக உள்ளது. [2]இந்த மக்கள் வித்தியாசப்பட்ட இடங்களில் இருந்து வந்திருந்தாலும், அவர்கள் ஒருவர் மற்றவருடன் உரையாட முடிந்தது. அந்த நாட்களில் உலகளாவிய மொழியாக இருந்த கிரேக்க மொழியில் உரையாடினர் என்பதில் சந்தேகம் இல்லை, மற்றும் அவர்கள் தாங்கள் உரையாடிய மொழியில் இருந்து தங்கள் சொந்த மொழிகளை வேறுபடுத்திக் கண்டனர். அதுபோன்றே, இன்றைய நாட்களில் மக்களின் பலர் ஒரு தாய்மொழியை அல்லது ஒரு வட்டார வழக்கு மொழியைக் கொண்டுள்ளனர், ஆனால் அவர்கள் ஆங்கிலம் போன்ற பரவலாக அறியப்பட்ட மொழியையும் பேசுகின்றனர். [3]பேசுதலிலா அல்லது கேட்டதிலா, எதில் அற்புதம் இருந்தது என்பது பற்றி வேதாகம மாணவர்கள் விவாதம் செய்துள்ளனர். அப்போஸ்தலர்கள் மற்ற மொழிகளில் பேசினார்களா அல்லது சொந்த மொழிகளில் கேட்கும்படி தேவன் செய்தாரா? இதற்கு வேதவசனம் தன்னிலேயே பதில் அளிக்கிறது: அவர்கள் "வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" (அல்லது "மொழிகளில்"; நடபடிகள் 2:4; CEV). கேட்குதலில் அல்ல ஆனால் பேசுதலிலேயே அற்புதம் இருந்தது.

பிரசங்கம் 12

கொடுத்தலுக்கு தேவனுடைய முழுநிறைவான முன்மாதிரி

(1 கொரிந்தியர் 16:1, 2)

கிறிஸ்தவம் என்பது கொடுத்தலின் மார்க்கமாக உள்ளது. இது தேவனுடைய கொடை ஒன்றுடன் தொடங்கியது: "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). தேவனிடத்தில் இருந்து இரட்சிப்பை நாம் ஒரு கொடையாகப் பெற்றுள்ளோம் (எபேசியர் 2:8, 9; ரோமர் 6:23). கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறோம்; இயேசு, "வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று கூறினார் (நடபடிகள் 20:35). கொடுப்பவர்கள் என்ற வகையில் நாம், மற்றவர்களுக்கு உதவ வேண்டும் - நமது அயலகத்தவர்களுக்கும் நமது நண்பர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவ வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேவனுக்குக் கொடுப்பவர்களாக இருப்பதும் அவசியமாக உள்ளது.

தேவனுடைய மக்கள் எப்போதுமே அவருக்குக் கொடுத்துள்ளனர். ஆபிரகாம் யுத்தத்தில் பற்றிக் கொண்டு வந்த எல்லாவற்றிலும், தேவனுடைய ஆசாரியரான மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் கொடுத்தார் (ஆதியாகமம் 14:18, 20; காண்க எபிரெயர் 7:4). மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ், இஸ்ரவேல் மக்கள் தசமபாகம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டனர். இத்துடன் கூடுதலாக அவர்கள் தங்கள் மனவிருப்பத்தின்படி காணிக்கைகளும் பலிகளும் தரும்படி எதிர்பார்க்கப்பட்டனர், உதாரணமாக, ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டுவதற்கு அவர்கள் மனவிருப்பத்தின்படி தாராளமாகக் காணிக்கைகளைக் கொடுத்தனர் (யாத்திராகமம் 35:29; 36:4-7). தேவனுடைய மக்களை கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுக்கத் தவறியபோது, அவர்கள் தேவனுடைய தீர்க்கதரிசிகளால் கடிந்துகொள்ளப்பட்டனர் (மல்கியா 3:8, 9). இயேசு பிறந்தபோது, ஞானிகள் விலையுயர்ந்த பரிசுகளைக் கொண்டு வந்தனர் (மத்தேயு 2:11). இயேசுவின் ஊழியத்தின்போது சிலருடைய அபரிமிதமான கொடைகளினால் அவரும் அவரது சீஷர்களும் மனம் ஈர்க்கப்பட்டனர் (யோவான் 12:1-8). தொடக்ககால சபை தனது தாராளமான கொடுத்தலினால் அறியப்பட்டிருந்தது (நடபடிகள் 4:34, 35; 2 கொரிந்தியர் 8:1-5). ஆகையால், கிறிஸ்தவர்களாக வாழ்பவர்கள் தேவனிடத்தில் இருந்து ஆசீர்வாதங்களைப் பெறுபவர்களாக மாத்திரம் அல்ல, ஆனால் தேவனுக்குக் கொடுப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர்.

தேவனுக்கு நாம் எவ்வாறு கொடுக்க வேண்டும்? நமது கொடுத்தலை ஆளுகை

செய்ய வேண்டிய கொள்கைகள் வேதாகமத்தின் பல இடங்களில் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன; ஆனால் 1 கொரிந்தியர் 16:1, 2ல், கர்த்தருக்கும் அவரது சபைக்கும் கொடுப்பதற்கான ஒரு முன்மாதிரியை நாம் காண்கிறோம். அவ்வசனப்பகுதியை "கொடுத்தலுக்கு தேவனுடைய முழுநிறைவான முன்மாதிரி" என்ற வகையில் ஆழ்ந்து சிந்திக்க நாம் விரும்புகிறோம்.[1]

தேவனுக்குக் கொடுக்கையிலும் சபையின் நிதி சார்ந்த நடவடிக்கைகளிலும் நாம் பின்பற்றுவதற்குத் தேவன் ஒரு மாதிரியைக் கொடுத்தார். அந்த முன்மாதிரி என்னவாக உள்ளது மற்றும் என்னவாக இருப்பதில்லை என்பதை நாம் சுருக்கமாகத் தொகுத்துரைக்க முடியும்.

சபையின் நடவடிக்கைகளுக்கு நிதிபெறுதலுக்கான தேவனுடைய முழுநிறைவான முன்மாதிரி என்பது, பிங்கோ விளையாட்டுகள் நடத்துதலாகவோ அல்லது சபையில் கடைகள் வைப்பதாகவோ அல்லது பணத்திற்காக வர்த்தகர்களிடத்தில் இரந்து கேட்பதாகவோ அல்லது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதலாகவோ *இருப்பதில்லை.* இதை நாம் எவ்வாறு அறிகிறோம்? புதிய ஏற்பாட்டு சபையில் தேவைகள் எழுந்தபோது, அவர்கள் சபையின் உறுப்பினர்களுடைய மனப்பூர்வமான காணிக்கைகளைக் கொண்டு அவற்றைச் சந்தித்தனர்.

கொடுத்தலினால் தேவைகளைச் சந்தித்தல் என்பதே சபை நடவடிக்கைகளுக்கு அதன் உறுப்பினர்கள் நிதிபெறுதலுக்கான முழுநிறைவான *முன்மாதிரியாக இருக்கிறது.* சேமித்தல் மற்றும் பிறருக்கு உதவுதல் குறித்து சபையின் உறுப்பினர்களை அதன் நடத்துனர்கள் ஊக்குவிக்க வேண்டும். பின்பு அவர்கள் அந்த ஊக்குவித்தல்களை மிகவும் ஏற்புடைய செயல்களை நோக்கித் திருப்பி, சரியான முறையில் உறுப்பினர்கள் கொடுக்கும்படி அவர்களை வழிநடத்த வேண்டும். ஊக்குவித்தல்கள் முக்கியமானவையாக உள்ளன, ஆனால் ஏற்புடைய செயல்களும் அதே போன்று முக்கியமானவையாக உள்ளன. நாம் சரியான ஆவியில் செயல்பட வேண்டும், ஆனால் சரியான செயல்களையும் நாம் செய்ய வேண்டும்.

கொடுத்தல் பற்றி நாம் செய்வதற்குச் சரியான செயல் எது? இன்றைய நாட்களில் நாம் பின்பற்றுவதற்கென்று தேவன் நோக்கம் கொண்டுள்ள, கொடுத்தலுக்கான முன்மாதிரியை 1 கொரிந்தியர் 16:1, 2 வசனப்பகுதி கருத்தாகத் தெரிவிக்கிறது.

முழுநிறைவான நோக்கம்[2]

பவுல், கொடுத்தல் பற்றிய தமது கலந்துரையாடலை, "*பரிசுத்தவான்களுக்காகச்* சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக்குறித்து" என்று கூறித் தொடங்கினார் (16:1; என்னால் வலியுறுத்தப்படுகிறது).[3] அந்தச் சொற்றொடர், "ஏன் கொடுக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்கிறது.

பொருளாதாரரீதியாக ஆசீர்வதிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பது கொடுத்தலுக்குக் கொரிந்தியர்களின் நோக்கமாக இருக்கவில்லை. குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பவர்கள் குறிப்பிட்ட தொகையை ஆசீர்வாதமாகப் பெறுவார்கள் என்று இவ்வசனப்பகுதி - அல்லது வேதாகமத்தின் வேறு எந்த வசனப்பகுதியும் - வாக்களிப்பதில்லை. அப்படியென்றால் கொரிந்தியர்கள் கொடுக்க வேண்டியிருந்தது ஏன்? ஏனென்றால்

எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களுக்கு உதவி தேவைப்பட்டது.[4]

இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் கொடுக்க வேண்டியது ஏன்? (1) ஏனென்றால் தேவன் நமக்குக் கொடுத்துள்ளார், மற்றும் நாம் பதிலாக அவருக்குக் கொடுக்க விரும்ப வேண்டும் (2 கொரிந்தியர் 8:9; 9:15). நாம் அவர்மீது அன்புகூர்ந்தால், அவர் மகிமைப்படும்படி நாம் கொடுக்க விரும்புவோம். (2) ஏனென்றால், கொரிந்துவில் இருந்த சபையின் விஷயத்தின்படி, நாம் கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். கொடுக்கும்படி அவர் நமக்குக் கட்டளையிட்டுள்ளார், மற்றும் அவருக்குக் கீழ்ப்படிய நாம் விரும்புகிறோம். மற்றும், நாம் கொடுக்கும்படி தேவன் விரும்புகிறார் என்பது, கொடுத்தல் என்பது நமக்கு நல்லது என்று மறைமுகமாக உணர்த்துகிறது. (3) ஏனென்றால், தேவைகள் சந்திக்கப்பட வேண்டும். சபை என்ற வகையில் சட்டபூர்வமாக சபை செய்யக்கூடிய எந்த விஷயமும் நிறைவேற்றப் படுவதற்குக் கிறிஸ்தவர்கள் கொடுக்க முடியும். நமது கொடுத்தல் என்பது, சபையானது தேவனைத் தக்க வகையில் ஆராதிக்க, உறுப்பினர்களைக் கட்டி எழுப்ப, துன்புற்றவர்களுக்கு உதவிசெய்ய மற்றும் சொந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் சுவிசேஷத்தைப் பரப்ப, வழிமுறையை அளிக்கிறது. கர்த்தருடைய நாளில் நாம் கொடுக்கும்போது, நிதிச் செலவைச் சந்திக்க மாத்திரம் நாம் கொடுப்பதில்லை. நாம் ஒன்றுகூடி ஆராதிப்பதை, ஆதரவற்றவர்களுக்கு உதவுவதை மற்றும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைச் சாத்தியமாக்குவதற்கு நாம் கொடுக்கிறோம்!

முழுநிறைவான காலம்

கொரிந்தியர்கள் "வாரத்தின் முதல்நாள்தோறும்" கொடுக்க வேண்டும் என்று பவுல் கூறினார். பவுல் இந்த வார்த்தைகளைக் கொண்டு, "நாம் எப்போது கொடுக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதில் அளித்தார்.[5]

நாம் ஏன் வாரத்தின் முதல் நாளில் கொடுக்க வேண்டும்? அந்த நாளில் - கர்த்தருடைய நாளில் - கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதற்காகக் கிறிஸ்தவர்கள் கூடிவந்த காரணத்தினால், இந்த நாள் தேர்ந்துகொள்ளப்பட்டது என்பது தெளிவு (நடபடிகள் 20:7; காண்க - வெளிப்படுத்தின விசேஷம் 1:10). முறைப்படி செய்தல் என்பது திறவுகோல் குறிப்பாக உள்ளது. கிறிஸ்தவர்கள் எப்போதாவது அல்லது விசேஷித்த வகையில் பணம் சேர்க்குதலின்போது என்பதற்கு மாறாக, ஒவ்வொரு வாரந்தோறும் கொடுக்க வேண்டும்.

வாரந்தோறும் கொடுத்தல் என்பது, கொடுத்தலுக்கான மிகச்சிறந்த திட்டமாகக் கிறிஸ்தவர்களுக்கு உள்ளது, ஏனெனில் இது சபையானது தனது வழக்கமான செலவுகளுக்குச் செலுத்த பணம் கொண்டிருப்பதை உறுதி செய்கிறது. அதேவேளையில் இது, தனிநபர்கள் பொருளாசையில் இருந்து தங்களைக் காத்துக்கொள்வதற்கு உதவுகிறது. முறையான அடிப்படையில் முதலில் நமது பணத்தில் இருந்து ஒரு பகுதியைக் கொடுத்தால், நாம் பணத்தை நம்முடையது என்று கருதும் வாய்ப்பு குறைகிறது. நாம், முறையாகக் கொடுத்தால் தாராளமாகக் கொடுத்தல் என்பதும் சுலபமாகிறது.

முறையாகக் கொடுத்தலைப் பற்றி மனச்சாட்சியில் உணர்வுடைய ஒருவர், தாம் வெளியே சென்றிருக்கும்போது கூட தமது உள்ளூர் சபைக்குழுமத்திற்கு முறையாகக் கொடுப்பார். நாம் வீட்டை விட்டு வெளியே இருக்கும்போது கூட நமது வாடகையைச் செலுத்தும்படி எதிர்பார்க்கப் படுகிறோம்.

நாம் வெளியே சென்றிருக்கும்போது கூட சபைக்குக் கொடுப்பதற்கும் அதேபோன்று கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம், இதற்கு நாம் பணத்தை [ஆராதிக்கச் செல்லும் நமது உறவினரிடத்தில்] தந்து செல்லலாம் அல்லது நாம் திரும்பி வரும்போது அதிகமாகக் கொடுக்கலாம். நாம் வெளியே இருக்கும்போதுகூட, சபையின் ஊழியமும் செலவுகளும் தொடருவதாலும், நாம் அந்த சபைக்குழுமத்தின் பாகமாக இருப்பதாலும், எல்லா வேளையிலும் - நாம் வெளியே செல்ல வேண்டியிருக்கும் வேளையிலும் -அந்த செலவுகளைச் சந்திப்பதற்கு நாம் உதவ வேண்டும்.

முழுநிறைவான மக்கள்

பவுல், "*அவனவன்* . . . எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" என்று கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). இங்கு அவர், "யார் கொடுக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதில் அளித்தார்.

எல்லாரும் உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம். எல்லாரும் கீழ்ப்படிய வேண்டும். எல்லாருமே முதலாவது இராஜ்யத்தைத் தேட வேண்டும் (மத்தேயு 6:33). சரீரத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், சரீரத்திற்குச் சிலவற்றைப் பங்களிக்கின்றனர். கொடுத்தலுக்கான நிபந்தனையானது, வருமானம் ஈட்டும் ஒவ்வொருவருக்கும் நடைமுறைப்படுகிறது. இது, செல்வந்தர்கள் மற்றும் ஏழைகள், திருமணம் ஆனவர்கள் மற்றும் திருமணம் ஆகாதவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள், இளைஞர்கள் மற்றும் முதியவர்கள், பெற்றோர்கள் மட்டுமல்ல ஆனால் அவர்களின் பிள்ளைகளில் கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் ஆகியோருக்கும் நடைமுறைப்படுகிறது.

கொடுக்க இயலாத அளவுக்கு ஒருவர் ஏழையாக இருக்க முடியுமா? ஒருவர் வருமானம் பெற்றிருக்கவில்லை என்றால் அவர் அல்லது அவள் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுவதில்லை. வேறுவகையில் கூறுவதென்றால், ஒருவர் - ஏழை விதவை (மாற்கு 12:41-44) மற்றும் மெக்கெதோனியாவில் இருந்த ஏழை மக்கள் (2 கொரிந்தியர் 8:1-5) செயல்விளக்கப்படுத்தியது போன்று - கொடுப்பதற்கு மிகவும் ஏழையாக இருக்க முடியாது. உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள ஏழை மக்களுக்கு இந்த உண்மை பொருத்தமானதாக உள்ளது. வருமானம் உள்ள எந்த ஒரு கிறிஸ்தவரும் கொடுக்க வேண்டும்.

முழுநிறைவான இடம்

அடுத்ததாகப் பவுல், "எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" என்று எழுதினார். இந்தக் கட்டளையானது, சபையின் பொதுப்பொக்கிஷத்திலே சேர்ப்பதற்காகக் கிறிஸ்தவர்கள் தங்களின் பணத்திலிருந்து ஒரு தொகையை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. இது, நாம் சபைக்குக் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடுவதன் மூலம், "எங்கே நாம் கொடுக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்கிறது.

சிலர் இந்த முடிவுபற்றிச் சந்தேகம் கொள்கின்றனர். பவுல் வரும்போது ஒன்றுகூட்டப்படும்படி, ஒவ்வொரு உறுப்பினரும் தனது பணத்தைச் சேர்த்து வைக்க வேண்டும் என்று அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டதாக அவர்கள் நம்புகின்றனர். ஒவ்வொரு நபரும் தனது சொந்தப் பணத்தில் இருந்து

ஒரு பகுதியைத் தன் வீட்டிலேயே சேர்த்து வைக்க வேண்டும் என்று மாத்திரம், இந்தக் கட்டளை கேட்டுக் கொண்டது என்றால், அவர் ஒரு குறிப்பிட்ட நாளைக் குறிப்பிடுவது ஏன்?

சபைக்குத் தேவன் நியமித்துள்ள ஊழியத்தை, சபை செய்யக்கூடும்படிக்கு, சபைக்குக் கொடுக்க வேண்டும் என்பதே கடமைப்பாடாக உள்ளது: அது இழந்து போனவர்களை இரட்சித்தல், அவர்களை இரட்சிக்கப் பட்டவர்களாகக் காத்துக்கொள்ளுதல் மற்றும் தேவையில் இருக்கும் மக்களுக்கு உதவுதல் ஆகியவைகளே. வாரத்தின் முதல்நாளில் நாம் சபைக்குக் கொடுக்கும்போது, நாம் கர்த்தருக்குக் கொடுக்கிறோம். நாம் தேவனுடைய இராஜ்யமாகிய சபையை முதலாவதாக வைக்கிறோம்.

இந்தக் கேட்டுக்கொள்ளுதல், மற்ற வேளைகளில் மற்ற நோக்கங்களுக்காக நாம் கொடுப்பதைத் தடைசெய்வதில்லை, ஆனால் கர்த்தருடைய நாளில் காணிக்கை கொடுத்தல் என்பது சபையை ஆதரிக்க அங்கீகரிக்கப்பட்ட முறையாக உள்ளது என்று இது சுட்டிக்காண்பிக்கிறது. கிறிஸ்தவர்கள் இதற்கு அப்பாலும் கொடுக்கலாம் என்றிருக்கையில், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் சபைக்குக் கொடுத்தல் என்பது நமது முதல் பொறுப்பாக உள்ளது. கிறிஸ்துவும் அவரது சபையும் பிரிக்கப்பட இயலாதவர்களாக உள்ளனர்; ஆகையால், சபைக்குக் கொடுத்தல் என்பது கிறிஸ்துவுக்குக் கொடுத்தலாகவே உள்ளது.

முழுநிறைவான விகிதம்

கிறிஸ்தவர்கள் "தன்தன் வரவுக்குத் தக்கதாக" கொடுக்க வேண்டும். இந்த உள் வாக்கியத்தில் பவுல், "நாம் எவ்வளவு கொடுக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதில் அளித்தார்.

நமக்கு மீதமானவைகளில் இருந்தோ அல்லது நாம் ஒன்றுமே இல்லாதிருக்கிறோம் என்ற வகையிலோ அல்ல, ஆனால் நமது வரவுக்குத் தக்கதாக நாம் கொடுக்க வேண்டும் என்று இந்தக் கட்டளை கருத்துத் தெரிவிக்கிறது. அந்தச் செய்தி நமக்குத் தேவைப்படுகிறது. நமது உடை உடுத்துதலைக் கொண்டு நமது சபை உறுப்பினர்களின் நிதிநிலையை முடிவுசெய்ய ஒருவர் முடிவு செய்வார் என்றால், நாம் எல்லாருமே செல்வந்தர்களாக இருக்கிறோம் என்று அவர் யூகிக்கலாம். இருப்பினும், காணிக்கையின் அடிப்படையில் உறுப்பினர்களின் நிதிநிலையை யூகிக்க அவர் முயற்சி செய்தால், அவர் என்ன முடிவுசெய்வார்? நாம் மிகவும் தேவையில் இருக்கிறோம் என்றா? நமது கொடுத்தல், நமக்கு வருமானம் உள்ளது என்பதைப் பிரதிபலிக்க வேண்டும்.

மேலும் பவுலின் வார்த்தைகள், சபை நமக்கு விதிப்பதன்படியோ அல்லது பிரமாணத்தினால் முடிவுசெய்யப்பட்ட எந்த விகிதாச்சாரத்தின்படியோ அல்ல, ஆனால் நமது வருமானத்திற்குத் தக்க விகிதத்தில் கொடுக்க வேண்டும் என்பதையும் கருத்தாகத் தெரிவிக்கிறது. நாம் பழைய ஏற்பாட்டின்கீழ் வாழ்வதில்லை, நாம் 10 சதவிகிதம் தரவேண்டும் என்று கோருகிற பிரமாணத்தின்கீழ் இருப்பதில்லை. இருந்தபோதிலும், நமது வருமானத்தில் எவ்வளவு பகுதி அல்லது எவ்வளவு சதவிகிதம் கொடுக்கிறோம் என்பதைப் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். மெக் லெய்ட்டன் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

பிரமாணத்தில் நமக்காக ஏற்படுத்தப்பட்ட எந்த ஒரு திட்டவட்டமான சதவிகிதத்தின் அடிப்படையில் அல்ல, ஆனால் அன்பின் பிரமாணத்தினால் கணக்கிடப்பட்டு, நம்மால் ஏற்படுத்தப்பட்ட குறிப்பிட்ட சதவிகிதத்தின் அடிப்படையிலேயே புதிய பிரமாணம் உள்ளது.

எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதில் நாம் கனப்படுத்தப்படுகிறோம். இந்தப் பொறுப்பைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! தேவன் நம்மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! இந்த சுயாதீனம் என்பது பொருளாசைக்கு ஒரு மூடலாகிவிடாதபடி நாம் எச்சரிக்கையாக இருப்போமாக. (1 பேதுரு 2:16.)[6]

கிறிஸ்தவர்கள் தமது வருமானத்தில் எத்தனை சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று வேதாகமம் குறிப்பிடாது இருக்கையில், தேவனிடத்தில் இருந்து நாம் பெற்றுள்ளவை பற்றி, தேவன் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது என்ன என்பதைப் பற்றி மற்றும் நம்மால் என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். பின்பு அதே அளவு சமமான தீவிரத்தன்மையுடன் நாம், தேவனுக்குக் கொடுக்கத் திட்டமிடுவது என்ன என்பது பற்றி ஒரு உறுதிப்பாட்டை நாம் மேற்கொள்ள வேண்டும்.

ஒரு கிறிஸ்தவர், "தேவனிடத்தில் களவாடக்" கூடாது. இது பல வழிகளில் நடைபெறக்கூடும். (1) கடந்த ஆண்டு ஊதியத்தை கருத்தில் கொண்டு சபைக்கு நாம் காணிக்கை கொடுத்தால், விகிதாச்சாரக் கொள்கையை நாம் மீறுகிறோம். நமது தற்போதய வருமானத்தின் அடிப்படையில் நாம் கொடுக்க வேண்டும். (2) ஆராதனை ஊழியங்களுக்கு நாம் வராதிருப்பதால், கொடுக்கத் தவறுகிறபோது, தேவனுக்கு நாம் கொடுக்க வேண்டிய விஷயத்தில் அவரை நாம் ஏமாற்றுகிறவர்களாக இருக்கிறோம். அவரது செலவில் நாம் ஆதாயம் அடையக் கூடாது. (3) ஒரு வீட்டில் இருவரும் வேலை செய்கிறபோது, குடும்பத்தில் அதிக வருமானம் உள்ளது; அது அவர்களின் கொடுத்தலை அதிகப் படுத்த வேண்டும். (4) நமது திறனுக்குத் தக்காற்போன்று கொடுக்காமல் நாம் ஒரு பகுதியைக் கொடுக்கலாம். நாம் 20 சதவிகிதத்தை சபைக்குக் கொடுக்க முடியும்போது, 1 சதவிகிதத்தைக் கொடுக்கக் கூடாது. பல சபைகளில், சுமார் 10 சதவிகித உறுப்பினர்கள் காணிக்கையில் 90 சதவிகிதம் கொடுக்கின்றனர் - மற்றும் அவர்கள் சபைக்குழுமத்தில் மிகவும் செல்வந்தர்களாக இராதிருக்கலாம். சராசரிக் கிறிஸ்தவர் ஒருவர் அவரது அல்லது அவளது வருமானத்தில் 4 சதவிகிதம் கொடுக்கிறார் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. அது போதுமானதா? முறையாகவும் விகிதாச்சாரத்தின்படியும், ஆனால் மிகவும் கொஞ்சமாகக் கொடுக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

"ஒரு முறை ஒரு இளைஞர் தமது தந்தையை அணுகி, எனக்கு நீங்கள் கொஞ்சம் பணம் கொடுக்க முடியுமா? என்று கேட்டார். அதற்கு அவர், சரி, எவ்வளவு கொஞ்சமாக நான் உனக்குத் தரமுடியும்?" என்று பதில் கேள்வி கேட்டார். சிலவேளைகளில் நாம், இவ்வாறே கர்த்தருக்குக் கொடுக்கிறோம்.

முடிவுரை

கிறிஸ்தவம் என்பது கொடுத்தலின் மார்க்கமாக உள்ளது. அந்த அம்சத்தில்

நமது கர்த்தரின் மார்க்கம், நவீன மதிப்பீடுகளுடன் முரண்படுகிறது. பெரும்பான்மையான மனிதர்கள், பெற்றுக்கொள்வதையே தங்கள் முதன்மை இலக்காகக் கொண்டுள்ளனர். மார்க்கக் குழுவினரில் சிலர், நாம் தாராளமாகக் கொடுத்தால் தேவன் பொருளாதார வகையில் நம்மை ஆசீர்வதிப்பார் என்று உரிமை கோருகின்றனர். இப்படிப்பட்ட வாக்குறுகி வேதாகமத்தில் அடங்கியிருப்பதில்லை என்றாலும், தேவன் கட்டளையிட்டுள்ளபடி நாம் கொடுத்தால், நாம் வளம் அடைகிறோம்.

பெற்றுக்கொள்ளுதல் என்பது கொடுத்தலுக்கான நமது நோக்கமாக இருக்கக் கூடாது. மாறாக, தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக, அவருக்கு நமது நன்றியுணர்வைக் காண்பிப்பதற்காக, மற்றும் நன்மை செய்வதற்காக, நாம் கொடுக்க வேண்டும். நமது கொடுத்தலின் விளைவாக நாம் கொடுத்தலுக்கு எந்த ஒரு பெற்றுக்கொள்ளும் சிந்தனை எதுவும் இன்றி, தேவனுக்குக் கீழ்ப்படிதலினால் பலனை எதிர்பார்த்து, நாம் கொடுக்க வேண்டும்.

குறிப்புகள்

[1]*இந்தப் பாடத்திற்கான தலைப்பு, மேக் லெய்ட்டன் அவர்களின் "This Grace Also" என்ற புத்தகத்தின் ஒரு பாடத்தில் இருந்து தழுவப்பட்டுள்ளது* (Dallas: Christian Publishing Co., 1964), 41-55. *அவரது பாடத்தில் தரப்பட்டுள்ள முதன்மைக் கருத்துக்கள் பின்வருமாறு: "முழுநிறைவான காலம்," "முழுநிறைவான மக்கள்," "முழுநிறைவான இடம்," "முழுநிறைவான அளித்தல்," "முழுநிறைவான நோக்கம்" (2 கொரிந்தியர் 9:7), "முழுநிறைவான பாகம்" மற்றும் "முழுநிறைவான செயல்முடித்தல்" (2 கொரிந்தியர் 9:7; 9:5; 8:12).* [2]*பணம் சேகரித்தலுக்குப் பின்னால் உள்ள குறிப்பிட்ட கொள்கைகள், வேதவசனப் பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளன: "நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு" - சுயாதீனமாக, வற்புறுத்துதல் இன்றி; "உங்களில் அவனவன்" - முற்றாக அல்லது முழுமையாக; "வாரத்தின் முதல்நாள்தோறும்" - முறையாக; "தன்தன் வரவுக்குத் தக்கதாக" - சரியான விகிதத்தில்; "எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" - முறைப்படி.* (Adapted from C. H. Talbert, *Reading Corinthians: A Literary and Theological Commentary on 1 and 2 Corinthians* [New York: Crossroad, 1987], 105.) [3]*இவ்வசனம் மற்றும் பிறவசனப்பகுதிகளின் தொடக்கத்திற்கு இடையில் உள்ள ஒருமைப்பாடு, கொரிந்தியர்களால் பவுலினிடத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுடன் (1 கொரிந்தியர் 7:1; 7:25; 8:1; 12:1) தெளிவாகத் தொடர்புடையது என்பது, இந்த பணம் சேகரித்தல் பற்றி கொரிந்துவில் இருந்த சபையார் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தனர் என்று கருத்துத் தெரிவிக்கலாம்.* [4]*இந்தப் பணம் சேகரித்தல் பற்றி 2 கொரிந்தியர் 8; 9ம் அதிகாரங்களிலும் பேசப்படுகிறது. சகோதரத்துவத்தில் ஒருமைப்பாட்டை ஊக்குவித்தல் என்பதே, எருசலேமில் இருந்த யூதத்துவ சபைக்குக் கொடுக்கும்படி புறஜாதியாரில் உண்டான இந்த சபைகளை ஊக்குவித்ததற்குப் பவுலின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. இருப்பினும் 1 கொரிந்தியர் 16ல் அவரது வேண்டுகோள், எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களின் தேவையின் அடிப்படையிலானதாக உள்ளது. அத்துடன் கூடுதலாக, பவுல் வரும்போது விசேஷமாகப் பணம் சேர்க்குதல் இராதபடிக்கு, வாரந்தோறும் காணிக்கை செலுத்துதல் என்பது நோக்கமாக இருந்திருக்க வேண்டும் என்று கூறப்பட முடியும்; அவர், "நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் ... எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" என்று கூறினார்.*

[5]*1 கொரிந்தியர் 16:1, 2 வசனப்பகுதி, ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் சபையானது பணம் சேகரிக்க வேண்டும் என்று கேட்கிறதா இல்லையா என்று மக்களில் சிலர் கேள்வி கேட்கின்றனர்.* [6]Layton, 51.

பிரசங்கம் 13

இன்றைய நாட்களின் சபைக்குத் தேவனுடைய அறிவுறுத்தல்கள்

(1 கொரிந்தியர் 16:1-24)

1 கொரிந்தியர் 16ம் அதிகாரத்தில் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் கொடுத்த அறிவுறுத்துதல்களை - மற்றவர்களைப் பற்றி அக்கறையாக இருத்தல், பலமுள்ளவர்களாகவும் அன்புள்ளவர்களாகவும் இருத்தல், தேவனுடைய ஊழியக்காரர்களைக் கனம்பண்ணுதல், எல்லாக் கிறிஸ்தவர்களையும் ஒன்றாகக் கட்டுகிற முடிச்சை உணர்ந்தறிந்து அதைப் பேணுதல் மற்றும் கர்த்தரை மிகமேன்மையாக அன்புகூருதல் ஆகியவற்றை - நாம் பின்பற்றுவது அவசியமாக உள்ளது. இருப்பினும், தேவனுடைய மக்களின் சபைக்குழுமம் ஒவ்வொன்றையும் தனக்கு அப்பால் கண்ணோக்கும்படிக்கு - புறம்பே கண்ணோக்கி, கர்த்தருடைய ஊழியத்தை இன்னும் சிறப்பாகச் செய்ய என்ன செய்யக்கூடும் என்பதைக் கண்ணோக்கும்படிக்கு - புத்திகூறும் பவுலின் வார்த்தைகளை அனுமதித்தல் என்பது மிகச்சிறப்பான நடைமுறைப் பயன்பாடாக இருக்கலாம்.

கொரிந்து சபைக்கு எழுதிய இந்த நிருபத்தை முடிக்கும் வேளையில் பவுலின் விருப்பநோக்கம் அதுவாகவே இருந்தது. அவர்களின் பிரச்சனைகளை, அவர் வெகுவிரிவாகக் கையாண்டார், சகோதரத்துவத்திற்கு அல்லது சபையின் உலகளாவிய ஊழியத்திற்கு அவர் ஒருசில குறிப்புகளை ஏற்படுத்தினார். நிருபத்தின் முடிவுப் பகுதியை அவர் அடைந்தவேளையில், தூரத்தில் இருந்த பரிசுத்தவான்களின் தேவைகளுக்கான உபகாரம் பற்றி, மற்ற இடங்களில் ஊழியம் செய்யும் பிரசங்கியார்கள் பற்றி மற்றும் எங்குமுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களையும் சகோதரத்துவத்தில் இணைக்கும் அன்பைப்பற்றி அவர் பேசினார். ஒருவேளை அவர், "உங்கள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் நாடுகிறவேளையில், கொரிந்து நகருக்கு அப்பால் உள்ள இடங்களில் இருக்கும் மற்றவர்களின் தேவைகளை நீங்கள் மறந்து விடாதீர்கள்!" என்று கூறியிருக்கலாம். "உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்! உலகத்தின் பலபகுதிகளில் சபை நிலவுகிறது! மற்ற இடங்களில் உள்ள மக்களுக்குத் தேவைகள் உள்ளன! ஒவ்வொரு நாட்டிலும் இழந்து போகப்பட்டவர்கள், இழந்து போகப்பட்டவர்களாகவே இருக்கின்றனர்!" என்பதே அவரது செய்தியாக இருந்தது.

மற்ற மக்களின் தேவைகளைக் குறித்து அவர்கள் அக்கறை கொள்ளும்படி

கேட்டுக்கொண்டதில் பவுல், கொரிந்திய கிறிஸ்தவர்கள் தங்களின் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வதில் உதவினார். சுயமையம் கொண்ட மக்கள் சந்தோஷம் இல்லாது இருக்கச் சாத்திக்கூறு உள்ளது. மக்கள் மனச்சோர்வு அடைந்திருக்கும்போது, சிலவேளைகளில் அவர்களுக்கு, "உங்களைப் பற்றி அதிகமாக நினைப்பதை நிறுத்துங்கள்! [நீங்கள்] உதவிசெய்ய யாரையாவது கண்டறியுங்கள்" என்று கூறுதல் அவசியமாயிருக்கிறது. இந்த அறிவுரையை எடுத்துக் கொள்பவர்கள் அனேகமாக, தங்கள் சொந்தப் பிரச்சனைகள் மறைந்து போவதை அல்லது குறைந்து போவதைக் கண்டறிவார்கள். நம்மை மறத்தல் மற்றும் பிறருக்கு உதவுதல் ஆகியவற்றின் மூலமாக நாம், சந்தோஷத்தைக் கண்டறிய அதிக சாத்தியக்கூறு உள்ளது. கொரிந்து நகரில் இருந்த சபையார், அருகிலோ அல்லது தொலைவிலோ இருந்த மற்றவர்களை ஆசீர்வதிக்க அதிகமாகச் செய்வார்கள் என்றால், அவர்கள் தங்களுக்குப் பிரச்சனைகள் இருந்தாலும், அதிக ஆரோக்கியமானவர்களாகவும் அதிகம் வெற்றிபெறுபவர்களாகவும் இருக்கச் சாத்தியக்கூறு இருந்ததென்று பவுல் அறிந்திருந்தார்.

எனவே, 1 கொரிந்தியர் 16ல் இருந்து நாம், பின்வரும் செய்தியை அறிதல் அவசியமாக உள்ளது: ஒவ்வொரு சபையும் தனது உள்ளூர் சமூகத்திற்குப் புறம்பே கர்த்தருடைய ஊழியம் பற்றி அக்கறை கொள்வது அவசியமாகிறது!

"சகோதரத்துவத்தை அன்புகூருங்கள்"

தனிநபரான ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமக்குதாமே வாழுதல் என்பது தேவனுடைய விருப்பமாக இருக்கவில்லை; பிறர்மீது அன்புகூரவும் நாம் அன்புகூரப்படவும் முடிவதான ஒரு சபைக்குழுமத்தில் நாம் ஒவ்வொருவரும் அங்கம் வகிக்க வேண்டும் என்றே அவர் விரும்புகிறார். நமது சகோதர சகோதரிகளை நாம் ஊக்குவிக்கக் கூடியதும் அவர்களால் நாம் ஊக்குவிக்கப்படக் கூடியதுமான சரீரத்தில் நாம் அங்கம் வகிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவ்வாறே தேவன், கர்த்தருடைய சபையின் சபைக்குழுமம் ஒவ்வொன்றும் சுய ஆளுகை உடையதாக - தன்னாட்சி அமைப்பு உடையதாக - இருக்க வேண்டும் ஆனால் அது தனிமைப்பட்டதாக இருக்கக் கூடாது என்று திட்டமிட்டார். கர்த்தர் தமது சபையின் சபைக்குழுமம் ஒவ்வொன்றும், சகோதரத்துவத்தின் அங்கமாக இருப்பதை உணர்ந்தறிய வேண்டும் என்று விரும்புகிறார், மற்றும் நாம் "சகோதரரிடத்தில் அன்புகூரவேண்டும்" என்று அவர்விரும்புகிறார் (1 பேதுரு 2:17).

கொரிந்து நகரில் இருந்த சபை தனது சொந்த வழியில் சென்று, மற்ற எந்த சபைக்குழுமத்தைப் பற்றியும் அக்கறையின்றி தனது சொந்த சட்டங்களை ஏற்படுத்திச் செல்லச் சாய்ந்திருந்தது என்பது உறுதி. எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களுக்காகப் பணம் சேகரித்தல் என்பது, புறஜாதியாரில் உண்டான சபைகளை ஒன்றுகூட்டிக் கொண்டுவருதலுக்கும் புறஜாதியார் மற்றும் யூதத்துவ சபைக்குழுமங்களுக்கும் இடையில் பந்தங்களை பிணைப்பதற்குமான விருப்ப நோக்கத்தைக் கொண்டிருக்கலாம். எருசலேமுக்கு கொரிந்தியரின் நன்கொடை மற்றும் பிற சபைகளால் அவர்களுக்குக் கூறப்பட்ட வாழ்த்துக்கள் ஆகியவை, அவர்கள் [எருசலேம் சபையார்], தாங்கள் ஒரு மாபெரும் சகோதரத்துவத்தின் அங்கமாக இருந்த உண்மையைப் பற்றிய விழிப்புணர்வை

அவர்களுக்கு ஏற்படுத்தி இருக்க வேண்டும். அந்த சகோதரத்துவத்தின் மீது அன்புகூர வேண்டும் என்று அவர்களைப் பவுல் உற்சாகப்படுத்தினார்.[1]

இன்றைய நாட்களில் சில சபைக்குழுமங்கள், தனிமைத்துவத்தின் முரட்டுத்தனமான வகை ஒன்றை நடைமுறைப் படுத்துவதாக இருக்கலாம். மற்ற சபைக்குழுமங்கள் என்ன செய்கின்றன என்பதைக் குறித்து அவர்கள் ஒன்றும் அறியாமல் அதைப் பற்றிய அக்கறையில்லாமல் இருக்கின்றனர். அவ்வகையான எண்ணப்போக்கை நாம் தவிர்ப்போமாக. மாபெரும் சகோதரத்துவம் ஒன்றின் அங்கமாக நாம் இருப்பதையும், அந்த சகோதரத்துவத்தை அன்புகூரும் பொறுப்பு நமக்கு இருப்பதையும், நாம் நினைவுகூரத் தவறும் அளவுக்கு, நமது சொந்த நடவடிக்கைகளினால் நாம் மூடப்பட்டு விடாதிருப்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்வோமாக. கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளை அன்புகூருவதற்கு, அவர்களை நாம் அறிந்திருக்க வேண்டும். மற்ற சபைக்குழுமங்கள் என்ன செய்கின்றன என்பது பற்றிய தகவல்களை நாம் அறிந்திருக்க வேண்டும். உலகம் முழுவதிலும் உள்ள நமது சகோதர சபைக்குழுமங்களை ஊக்குவிக்க நம்மால் இயன்ற அளவுக்கு சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

"உபகார சிந்தை கொண்டவர்களாக இருங்கள்"

தனிநபர் என்ற வகையிலும் (சபை என்ற வகையில்) ஒன்றிணைந்த வகையிலும் கிறிஸ்தவர்கள் நன்மை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். நமது சொந்தக் குடும்பத்திலும் நமது சமூகங்களிலும் உதவிசெய்ய வேண்டிய தேவைகளை குறித்து அக்கறை மேற்கொள்ள வேண்டும் என்று நம்மிடத்தில் கர்த்தர் எதிர்பார்க்கிறார். உண்மையில் நாம், "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் ... நன்மைசெய்யக்கடவோம்" (கலாத்தியர் 6:10) - இதை தனித்தனிக் கிறிஸ்தவர்கள் என்ற வகையிலும் சபை என்ற வகையிலும் நாம் செய்ய வேண்டும்.

நமது சொந்த இடத்தில் இருப்பவர்களின் - சபை உறுப்பினர்கள் அல்லது தேவையில் உள்ள பிறமக்களின் - தேவைகளை நாம் சந்தித்துக் கொண்டிருந்தாலும், புறம்பே கண்ணோக்குதல் மற்றும் பிற நாடுகளில் உள்ள மக்களின் தேவைகளைக் காணுதல் என்ற நமது பொறுப்பில் இருந்து நாம் விடுவிக்கப் பட்டிருப்பதில்லை. கொரிந்து நகரில் இருந்த சபையார், தாங்கள் ஒருக்காலும் நேரில் சந்தித்திராதவர்களும் பல நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் இருந்தவர்களுமான பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்ளப் பட்டனர்.

தொலைதூர நாடுகளில் உள்ள ஆதரவற்றவர்களைப் பற்றி மக்கள் அக்கறை கொள்கின்றனரா? அவர்களுக்கு நிதி ஆதரவு தருவதன் மூலம் அவர்களுக்கு உதவுதல் என்பது சரியானதாகவே உள்ளது. உலகின் பிறபகுதிகளில் பிள்ளைகள் பசியாக இருக்கின்றனரா? அவர்களுக்கு உணவளிக்கவும் அந்த ஊழியத்தில் நாம் உதவும்படி அவர்களுக்கு உதவி அளிப்பதும் சரியானதாகவே உள்ளது. சூறாவளிக் காற்றுகள், பூமியதிர்ச்சிகள், சுனாமிகள் மற்றும் எரிமலைக் குமுறல்கள் போன்ற துன்பங்கள், உயிர்களைச் சிதைத்து, மக்களை இடம்மாற்றி, வீடற்றநிலைக்குக் காரணமாகி, துன்பத்தையும் மரணத்தையும் கொண்டு வந்துள்ளனவா? அந்தத் துன்பங்களை அகற்றுவதற்கு நாம் உதவக்கூடும் என்றால், நாம் அவ்வாறு செய்ய

வேண்டும்! நமது சொந்த அயலகத்தில் யாரும் பசியுடனோ புண்பட்டோ இல்லை என்றாலும், உபகார ஊழியம் செய்வதில் ஈடுபடும் பொறுப்பில் இருந்து நாம் விடுவிக்கப் பட்டிருப்பதில்லை.

"இழந்து போனவர்களைத் தேடுதல் மற்றும் இரட்சித்தல்"

கொரிந்து நகரில் இருந்த சபை, எருசலேமில் இருந்த ஏழைப் பரிசுத்தவான்களுக்கு உதவக்கூடும்படி பணத்தைச் சேகரிப்பதைப் பவுல் விரும்பியதைக் காட்டிலும் அதிகமாக, கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் சுயநலமாக இருப்பதை அவர் விரும்பவில்லை. அவர் எபேசு நகரில் நல்ல வாய்ப்புக்களைக் கொண்டிருந்ததற்காகவும் வேறிடத்தில் பிரசங்கிப்பதில் அப்பெல்லொ தீவிரமாக இருந்ததற்காகவும், அவர்கள் அகம் மகிழும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

அவ்வாறே, நமது சொந்த இடத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்ற நல்ல வேலையை நாம் செய்துகொண்டிருப்பதாக நம்பினாலும், அதுமாத்திரமே தேவன் நம்மிடத்தில் கேட்கும் விஷயமாக உள்ளது என்று நினைப்பதில் நாம் திருப்தி அடைந்து விடக்கூடாது. நமது குடும்பம் நம் அயலகத்தார் மற்றும் நண்பர்களில் சிலர் இரட்சிப்பு அடையாதிருக்கலாம், மற்றும் விஷயம் இப்படி இருக்கையில் நாம் இயேசுவின் நற்செய்தியைக் கூறுவதில் ஒருக்காலும் இளைப்படையக் கூடாது. மற்றும் உலகம் முழுவதிலும் கூறப்படாத பல லட்சக்கணக்கானோர், சத்தியமின்றி இருளில் உள்ளனர். சுவிசேஷத்தைக் கொண்டு அவர்களை அடைவதற்கான நமது முயற்சிகளில் நாம் ஓய்ந்திருக்கக் கூடாது.

பல சபைக்குழுமங்கள், அண்மையில் உள்ளவர்களுக்கு வசனத்தைப் பிரசங்கிக்கும் பொறுப்பு உள்ளது போன்று செயல்படுகின்றன, ஆனால் "நீங்கள் உலகமெங்கும் போய்" என்ற பொறுப்பை அவர்கள் கொண்டிருப்பதில்லை (மாற்கு 16:15). நாம் அதுபோன்று இருக்கிறோமா?

தொகுப்புரை: "சபையாரே! புறம்பே கண்ணோக்குங்கள்!"

சபையானது புறம்பே கண்ணோக்கத் தொடங்கினால், விளைவுகள் என்னவாக இருக்கும்? மற்ற இடங்களில் உள்ள மக்கள் உலகரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் ஆசீர்வதிக்கப் படுவார்கள், மற்றும் நாம் நமது பிதாவைப் போன்று ஆகிறோம் என்று அறிவதில் நாம் திருப்தி கொள்வோம். மக்கள் எப்படிக் காணப்பட்டாலும் அல்லது அவர்கள் எங்கு வாழ்ந்தாலும், தேவன் எல்லா மக்களையும் நேசிக்கிறார். மற்ற இடங்களில் உள்ள மக்களுக்கு நாம் அன்பைச் செயல்விளக்கப் படுத்துகையில், நாம் அதிகமாக தேவனைப் போன்றவர்கள் ஆவோம். எல்லா மக்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்றே அவர் விரும்புகிறார்.

புறம்பே கண்ணோக்குதலை மேம்படுத்திக் கொள்ளுதல் என்பது சபைக்குழுமத்திற்குள் இருக்கும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் உதவும். தம்மைப்பற்றி மாத்திரம் அக்கறை கொண்டுள்ள தனிநபர், சந்தோஷம்

இல்லாதவராகவும் ஆரோக்கியம் இல்லாதவராகவும் இருக்கிறார். அதுபோன்றே, தன்னைப் பற்றி மாத்திரம் அக்கறை கொள்ளும் ஒரு சபையானது ஆவிக்குரிய வகையில் வியாதிப்பட்டதாக உள்ளது; அதன் உறுப்பினர்கள் சந்தோஷம் இல்லாதவர்களாகவும் ஆவிக்குரிய வகையில் ஆரோக்கியம் இல்லாதவர்களாகவும் இருக்கச் சாத்தியம் உள்ளது.

இருப்பினும், ஒரு சபையானது தனது கவனக்குவிப்பை, உள்ளான போராட்டங்கள் மீதிருந்து தனது கவனக்குவிப்பை, உலகமுழுவதற்குமான ஊழியங்களுக்கு மாற்றும் என்றால் சபையைப் பிரிப்பதாகக் காணப்படும் அந்தப் பிரச்சனைகள் அவர்களின் உண்மையான கண்ணோக்கில், சார்பளவில் முக்கியமற்றவையாகவும் சுலபமாகத் தீர்க்கப்படக் கூடியவையாகவும் காணப்படும். புறம்பே கண்ணோக்கும் ஒரு சபையானது, அதன் உறுப்பினர்கள் நிறைவான வாழ்வைக் காண்பதிலும் சந்தோஷம் மற்றும் ஆவிக்குரிய ஆரோக்கியம் ஆகியவற்றை அனுபவிப்பதிலும் ஒரு வளரும் சபையாக இருக்க அதிகமான சாத்தியக்கூறு உள்ளது.

குறிப்பு

[1]வில்லியம் பார்க்ளே அவர்களின் விளக்கம் ஏற்புடையதாக உள்ளது: "[எருசலேமில் இருந்த ஏழைகளுக்குப் பணம் சேகரித்த] சபையின் ஒருமைப்பாட்டைச் செயல்விளக்கப்படுத்தும் ஒரு வழியாக இருந்தது. சிதறியிருந்த கிறிஸ்தவர்கள். தாங்கள் … சபையின் உறுப்பினர்கள் என்பதையும், சபையின் ஒவ்வொரு உறுப்பினரும், எஞ்சியிருந்தவர்களுக்குக் கடைமைப்பட்டும் பொறுப்பானவர்களாயும் இருந்தனர் என்பதையும் அவர்களுக்குப் போதிக்கும் வழியாக இருந்தது" (William Barclay, *The Letters to the Corinthians,* The Daily Study Bible, 2d ed. [Edinburgh: St. Andrews Press, 1954; reprint, Philadelphia: Westminster Press, 1956], 181).